24
441

THE

# RAKSHANYA YÂTHRIKUM:

A

## TAMIL POETICAL WORK,

BASED ON THE STORY

OF

## THE PILGRIM'S PROGRESS

OF

JOHN BUNYAN.

179/2008

Acch. No: 162441
No. of Pages: 534

BY

H. A. KRISHNA PILLAI,

*PALAMCOTTAH.*

19.9.08

**First Edition, 1,000 Copies.**

MADRAS:

THE CHRISTIAN LITERATURE SOCIETY.

S. P. C. K. PRESS, VEPERY.

1894.

*(Copyright Registered.)*

# இரக்ஷணிய யாத்திரிகம்.

இது

பாளையங்கோட்டை

H. A. கிருஷ்ணபிள்ளையால்

இயற்றப்பட்டது.

முதலாம் பதிப்பு.

சென்னபட்டணம்:
இந்திய கல்வி அபிவிர்த்தி சங்கத்தாரால்
இ. க. அ. சங்கத்தாரது அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

௧௮௯௪.
1894

162441

O111,3 KBJ,P
M94

# PREFACE.

IT is an acknowledged fact that the Tamil Christian Church is sadly deficient in vernacular literature of a really high-class order. Many of the works at present in existence are mere translations,—and for the most part very literal ones,—of popular English books. Moreover they are written in a style which, while it is intelligible to the ordinary reader, possesses no pretensions to literary merit and does not attract the attention of the more thoughtful and intelligent section of the Tamil community. The author of the book before us has, therefore, at the cost of much time and pains, laboured to produce something which shall be really worthy, from a literary point of view, of "the glorious Gospel of the blessed God." The devout and intelligent reader must judge for himself as to the measure of success which has been achieved.

A few remarks are necessary, by way of introduction, in order to elucidate the object and nature of the poem which is now, for the first time, placed before the public.

1. **The author's object.**—As its title implies, the work in question is based, as regards its general plan and structure, on John Bunyan's immortal allegory, "The Pilgrim's Progress". The aim of the author has been to adopt the plan of that inimitable story, but so to clothe it in new and elegant attire as to present it to us in a really Tamil guise. Those who are acquainted with Tamil poetical compositions and the laws which govern them will be aware that there are certain features, in respect of arrangement and illustration, which are considered indispensable. These fea-

tures will be found to have been faithfully preserved, except where the observance of them would have been inconsistent with the higher laws of Christian truth and purity. The result of our author's labours, spread over a period of no less than 14 years, is a beautiful classic poem, comprised in 5 books, which are divided into 47 sections or cantos and contain in all about 4000 stanzas.

2. **Points of contrast with Hindu poems.**—While our author has followed, wherever possible, the accepted laws relating to Tamil poems, it will readily be seen that certain points of difference present themselves, arising, for the most part, from the grand requirements of the Gospel. For example, those impure metaphors and questionable similes which defile the pages of so many Hindu books are conspicuous by their absence here. There is a like omission of that tendency to gross exaggeration and of that puerile fondness for the wonderful and the incredible which form so striking a feature in the famous Indian epics. The mind of the reader is directed here, throughout, to "things that are true, honest, pure, lovely, and of good report." Attention is also directed to the fact that the author has sought to avoid ambiguity both in style and language. Whereas many Hindu poets labour to obscure their real meaning in difficult and ambiguous stanzas, our author, on the contrary, has stated his intention most clearly in the preface and has written in a style which, while it is distinctly good and classical, will yet be easily intelligible to those who have anything like a fair knowledge of the Tamil language. It ought to be added that the present work differs from the standard Tamil classical poems in the free use it makes of Sanskrit words. The traditional usage of Tamil poetry is to avoid an admixture of foreign words; but, in these days, Sanskrit has so completely permeated the Tamil language and its rich and mellifluous words are in such repute that our author has felt fully justified in adopting an independent course in the matter.



3. **Features deserving special notice.**—Though adopting the main framework of the "Pilgrim's Progress", it will be found that the poem before us is original in many particulars. Every opportunity has been seized, consistently with the continuity of the story, for the introduction of fine passages which clearly enunciate the distinctive truths of the Gospel, as contrasted with the tenets of Hinduism. The existence of a future state,—the true doctrine as to heaven and hell,—the teaching of the Bible as to sin and righteousness,—the consequences attending merit and demerit both in this world and the next,—the Gospel plan whereby Divine justice and mercy meet together in perfect harmony,—the advantages of connexion with the Church of Christ and the bright reality of the 'communion of saints',—the spiritual exercises of Christianity in contrast with the ceremonial observances of Hinduism,—'the means of grace afforded us here and the hope of glory hereafter',—all these themes and topics are finely treated by the author. Quite a number of model sermonettes and exhortations are interspersed throughout the poem. It should be specially noticed also that those attributes which are so highly extolled by the Tamil moral poets (e.g. patience) are here held up to view, so to speak, in the light of the Gospel and transfigured by the glory which falls on them from the face of Jesus Christ. The careful reader will hardly fail to recognise, also, a wealth of illustration and quotation taken both from the inspired pages of Holy Scripture and also from standard Tamil works.

The thanks of all who love the Tamil language, and especially of those who wish to see a vernacular Christian literature worthy of the name, are due to Dr. Murdoch and the Christian Literature Society for their kindness in publishing the book before us. They have never yet published a Tamil book more deserving of patronage and support. I would specially commend this book to all Principals of Mission Colleges and Schools as a class-book to be

studied and as a vehicle for conveying to the minds of Hindu students the great verities of the Gospel in a form which cannot fail to attract and interest. Having read the whole of it myself carefully, and derived much pleasure and benefit therefrom, I can the more readily recommend it warmly to the notice of others, in the earnest hope that God will bless the author's effort and use it to glorify His Holy Name.

PALAMCOTTAH,
*March 31st, 1894.*

T. WALKER,
*Missionary, C. M. S.*

# முகவுரை.

திரியேக தெய்வத்தின் திருவருட் பிரசாதமே பல ஹேதுக்களைக் கொண்டு என்னுள்ளத்தில் ஆன்ம ஈடேற்றத்தின்மேல் அவாவையும், கவலையையு மூட்டி,

"இருதலைக் கொள்ளி யுற்ற வெறும்பென வேகு மார்க்கம்
ஒருதலை யானுங் காணா துணங்கிய"

என்னை என் குடும்பத்தோடு இரக்ஷணிய பெருமானாகிய ஸ்ரீ கிறிஸ்து பகவானுடைய திருவடிக்குக் கொத்தடிமையாகத் தடுத்தாட்கொண்டது; இம்மட்டுந் துணை நின்று ஈடேற்ற வழியில் நடத்தி வருகின்றது. அதுவே இரக்ஷாபெருமானின் திவ்விய காருண்யச் செயல்களை எப்போதுஞ் சிந்திக்கவும், செந்தமிழ்க் கவிமாலை சாற்றி அவரது திருவடிகளைத் துதிக்கவும் வேண்டு மென்கிற வாஞ்சையையும், என் மனசிலழுந்திய இரக்ஷணிய சத்தியத்தை என் சுதேசிகளான

"முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்கவி கட்கு"

ப்பணிவாய் வற்புறுத்திக் காட்ட வேண்டுமென்ற விருப்பத்தையும், என்னகத்தூன்றி, மேன்மேலாக வளர்த்து வந்தது. ஆதலின், இரக்ஷணிய வேதத்தின் உத்தர பாகமாகிய சுவிசேஷ சத்தியத்தையும், அங்கிலேய பக்த சிரேஷ்டரொருவர் இங்கிலிஷ் பாஷையில் வாசக ரூபமாக, அதி யுசிதமாக, வெகு விநயமாக, வரைந்து தந்த "பில்கிரிம்ஸ் புரோகிரஸ்" என்ற கிரந்தமொன்று அநேக பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கி வருமாறு தமிழிலு மொழிபெயர்க்கப்பட்டு வெகு காலமாய் இந்நாட்டிற் பயன்பட்டு வருகிற "மோக்ஷப் பிரயாணம்" என்ற புஸ்தகத்தி லடங்கிய அருமையான பொருளையும், அதன் கருத்தையுந் தழுவித் தேவ கிருபையை முன்னிட்டு இரக்ஷணிய யாத்திரிகம் என்ற இந்தக் காவியத்தைச் செய்யுட் பாவாக இயற்றத் துணிந்தேன்.

2. திருவருட் பலத்தால் என் உத்தியோக விஷயத்திற் செலவிட்ட நேரம் போக மீந்த நேரங்களிலும், விசேஷமாய் வியாதிப்பட்டிருந்த இராக் காலங்களிலும் உழைத்து இந்த நூலைச் செய்து முடிக்க அருகனானேன். ஆரம்பந் தொடங்கி உத்தேசம் ஆயிரஞ் செய்யுள் முடியுமட்டாக (ப்பின்னே யெனக்கு ஜீவன் கிடைத்தபோதிலும்) இந்த நூலைப் பூரணமாய்ப் பாடி முடிப்பேனென்ற நம்பிக்கை கிஞ்சித்துமில்லாதிருந்தது. ஆனபோதிலும், அப்போதப்போது பாடி முடிந்தவற்றில், பாளையங்கோட்டையில் மாஸந்தோறும் பிரசுரமாகிற "நற்போதகம்" என்னும் பத்திரிகையில், கொஞ்சங் கொஞ்சம் அச்சிடுவித்து வந்ததினால், அம்மட்டில் வித்வான்களான சில சிநேகிதர் வாசித்துப் பார்த்துத் 'தமிழ் நாட்டில் இது பிரயோஜனப்படக் கூடியது; இளக்கரியாது பாடி முடிக்கவே வேண்டும்' என்று பலவாறாய் வற்புறுத்திச் சொல்லி வந்ததினாலும், எனக்குள் ஆதிதொடுத்துள்ள பிரீதி வரவரக் கதித்து வந்ததினாலும், காலங் குறுகாது நீடித்ததினாலும், சும்மா வீண் காலம் போக்குவதில் இஷ்டமில்லாததினாலும், இது வைதீக காலக்ஷேபமாக வாய்த்ததினாலும், மனசில் ஊக்கமுண்டாகித் தொடர்ச்சியாய் விடாப்பிடியாய் முழு பலத்தோடு முயற்சித்து வந்தேனெனினும், ஆண்டாண்டு நேர்ந்த பல விக்கினங்கள் இடையூறுகளால் தடுக்கலுற்று இடைக்கிடை சிறிது காலம் ஒரு செய்யுளாவது எழுதவும் வாய்க்காமற் கழிந்து போனதுமுண்டு. ஆயினும், தேவாநுக்கிரகம் முற்றுப்பெறச் செய்தது. கடவுளுக்கே ஸ்தோத்திரம்.

3. 'இரக்ஷணிய யாத்திரிகம்' என்ற தென்னையெனில்,—ஆன்மஈடேற்றத்தை விரும்பியோருடைய உள்ளத்து அப்பேறு லபிக்குமட்டாக வைதீக மார்க்கத்து நிகழும் சிந்தா யாத்திரையின் ஆதியோடந்தமான சம்பவங்களின் விர்த்தாந்தத்தை விளக்கிக் காட்டுகிற நூல் என்பதேயாம். அஃது எவ்வாறெனில், அதன் பொழிப்பு வருமாறு:—

அநாதிநித்திய ஸ்வயம்புவாய், அகண்ட பரிபூரண வஸ்துவாய், அனந்த கல்யாண குண சகிதராய்ச், சகலலோக துரந்தராய், வீற்றிருக்கின்ற திரியேக தெய்வமாகிய கடவுள்வேந்தன், பூமண்டலத்தைச் சிருஷ்டித்து, அதில் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபித்துப்,



பிரஜைகளுக்கு விதிநிஷேதங்களை ஏற்படுத்திச், சகல நன்மைகளையும் பிரதிதினமும் அருளிச்செய்து, செங்கோல் செலுத்தி, அரசாண்டு வருகிறாரென்பதையும்,—பூர்வந் தொடுத்து, ராஜ துரோகியாய், ராஜ்ய விரோதியாய், ஏற்பட்ட பைசாஸத் தலைவன், இவ்வுலகத்துப் பூர்வகுடிகளாகிய மனுப் பிரதமரையும், அவர் வழிப்பட்ட சகல சந்ததி பாரம்பரைகளையும், வஞ்சித்து, மருட்டித், துர்ப்போதனை செய்து, பரலோக ராஜரீகப் பிரமாணங்களை மீறும்படியேவி, உலக சிற்றின்பங்களை யூட்டித், தன்னுடைய அரசாட்சியை ஸ்தாபித்தானென்பதையும்,—இச்சம்பவத்தைப் பரலோகத்தரசன் அறிந்த மாத்திரமே, பசாசடிப்பட்ட தம்முடைய பிரஜைகளை மீட்கக் கருதி, ஆரம்ப காலத்திற் 'கிரியை யுடம்படிக்கை' என்ற பூர்வ பிரமாணத்தைச் சித்தஞ் செய்து, தம்முடைய பரமராஜ்யக் குடிகளாய் மனந்திரும்பி அதை யடையத்தக்கதாகத் தாம் ஏற்படுத்திய பூர்வ பாதையைப் பற்றிக் கொள்வோருக்கு இன்ன பிரகாரம் அவர்கள் மீறுதல்களெல்லாம் மன்னிக்கப்படுமென்றும், 'நித்திய பேரின்பம்' அருளப்படுமென்றும், விளம்பரப்படுத்திப், பூர்வ ஏற்பாட்டை ஸ்தாபகஞ் செய்தாரென்பதையும்,—பின்பு தக்க காலத்தில் தம்முடைய குமாரனாகிய இளவரசனை நிலவுலகத்தில் விடுத்து, அவர் மூலமாய்க் 'கிருபை யுடம்படிக்கை'யை விளம்பரப்படுத்திப், பசாசையும் மனந்திரும்பி வராத அவன் சைநியங்களையும் ஜெயித்து, உலகத்திற் பிரதமத்தில் விதித்த சுதர்ம்மத்தை நிலைப்படுத்திப், பூர்வ ராஜபாதையைப் புதுக்கி, அவ்வழி பிடித்துப் பரலோக யாத்திரை செய்ய வருவோருக்குக் கடைசிமட்டுந் துணை நின்று, நித்திய பேரின்ப ராஜ்யத்தை யடைவிக்கிறாரென்பதையும்,—ஆதிபூர்வந் தொடங்கி ராஜபாதை பிடித்துப் பிரயாணஞ்செய்து பரம ராஜ்யத்தை யடைந்தவர்களில் முக்கியமான ராஜபக்தர் இன்னின்னார், அவருடைய விர்த்தாந்த மிதுவிது வென்பதையும்,—ஏகதேச வுருவகமாய்ப் புலப்படுத்தி, இரக்ஷணிய சிந்தா யாத்திரையினுடைய விசேஷ தருமங்கள் இத்தகையன வென்று உலகத்துக்குத் தெளிவாய்த் தெரிவிக்கும் பொருட்டுத் திருச்சபையிலுள்ளார் அவரவரே தனித்தனி செய்துவருஞ் சிந்தா யாத்திரையை யல்ல, பொதுவில் உலகஞானி யாவானொருவன்மேற் சாட்டி, அவன் பரம காருணியராகிய திரியேக கடவுளரசனின் பேரருளின் மாட்சியால்

தன்னையும் தன்னுடைய அகோர பாவத்தின் நிர்ப்பந்த நிலைமையையும் அதனிமித்தந் தனக்கு வரவிருக்கிற அதிபயங்கரமான முடிவையுமுணர்ந்து, மலங்கிக், கலங்கி, மயங்கித், தியங்கி, ஆன்ம ரக்ஷைக்கு நான் இனி யென்ன செய்வேனெனக் கவன்று, பரிதபிக்கச்சே, இகபர சர்வார்த்த சாதனமாகத் தனக்குக் கிடைக்கப்பெற்ற இரக்ஷணிய சுருதியைக் கருத்தோடு வாசித்தும், குருமுன்னிலையிற் கேட்டும், இரக்ஷணிய மூர்த்தியாகிய ஸ்ரீ கிறிஸ்து பகவான் ஒருவரே பாவ விநாசரென்றும், அவரது பிராயச்சித்த மகத்தான புண்ணியமே தனக்குக் கதியென்றும், அவரைப் பற்றும் அன்பின் கிரியை செய்கிற தீர்க்க விசுவாசமே இரக்ஷிப்புக்கு ஹேதுவென்றும் அறிந்து, சிந்தை தெளிந்து, சர்வ பரித்தியாகஞ் செய்து, பரம குருவின் திருவடிகளுக்கு ஷிரத்தையோடு தொழும்பு பூண்டு, பிரதிக்ஞை பண்ணி, ஞானதீக்ஷை பெற்றுக், கிறிஸ்தவனான பிறகு, பரிசுத்தாவியின் அநுக்கிரகத்தையடைந்து, ஜெப தப விரத சீலனாய், இயன்றமட்டும் சன்மார்க்க நெறி பிசகாது நடந்து, பாவமன்னிப்பையும் உலகந் தரக்கூடாத தேவ சமாதானத்தையு மடைந்து, சித்த சாஞ்சல்யரகிதனாய் ஸத்விநய பயபக்தியுடன் காலங் கழித்து வருகையில் அவனுக்கு இடைக்கிடையுண்டுபட்ட பலஹீனமும், சோதனையும், அவற்றா லுண்டுபட்ட தீமையும், நேர்ந்த பல தீங்கும், இதனிமித்தம் அவனுக்குள் ளுண்டான பச்சாத்தாபங்களும், ஆண்டாண்டு கிடைத்த தேவ ஒத்தாசைகளும், அது கொண்டடைந்த விசுவாச உரமும், நன்றியறிந்த அவனது அன்பின் கிரியைகளும், கடைசியில் வயோதிகனாகித் தேகவியோகமடையுஞ் சந்தர்ப்பம், அவனுக்குள் ளுண்டான கலக்கங்களும், அப்பொழுது பக்தவத்சலராகிய ஸ்ரீ கிறிஸ்து பெருமான் பிரசன்னராகித், தமது ஐங்காயத் திருக்கோலக் காட்சி யளித்து, அஞ்சேல் அஞ்சேலென்று திருவாய் மலர்ந்து, அன்பின் திருக்கரம் நீட்டி, ஆவலோடு பற்றிப் பிடித்து, ஆதரவு புரிந்து, தமது சரணாரவிந்தத்தை யடைவித்தருளிய சமயம், கிறிஸ்தவனடைந்த பரமானந்தமு மாகிய இத்யாதி புனித விஷயங்களை யாத்திராரூடமாக இயற்றிய சொப்பன பாவனா சரிதமாம்.

4. இந்த நூல்—

"பெருங்காப் பியமே காப்பிய மென்றாங்
கிரண்டா யியலும் பொருட்டொடர் நிலையே"

என்ற பிரமாணப்படி அமைக்கப்பட்ட பெருங்காப்பியமாம்.



ஆயின், அதற்குரிய அங்கங்கள் யாவு மொருங்கே யமைந்துள்ளனவாவெனில், அப்படியன்று. இரக்ஷணிய சமயக் கொள்கைக்கு அடாததும் அநாவசியகமானதுமான சில அங்கங்களையும், அநுசிதமான புனைந்துரைகளையுந் தவிர்த்து, உத்கிருஷ்டமுள்ள

'தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்'
'நாற்பொருட் பயக்கு நடைநெறித் தாகி'

என்ற இத்யாதி புனித அங்கங்க ளெல்லாவற்றையுந் தழுவி இயற்றப்பட்டது.

"கூறிய வுறுப்பிற் சிலகுறைந் தியலினும்
வேறுபா டின்றென விளம்பினர் புலவர்"

என்பதனாற் பெருங்காப்பியமே யாமென்க. இந்நூலின் செய்யுள் நடை பெரும்பாலும் ஸ்ரீமத் கம்பராமாயணச் செய்யுள் நடையையும், அதன் போக்கையும் அநுசரித்தே இயன்றமாத்திரம், அமைக்கப்பட்டது. ஏனெனில், கம்பராமாயணமொன்றே கற்றோரெவரும் வியந்து, புகழ்ந்து, மெச்சத் தக்கது.

"கம்ப நாடன் கவிதையைப் போற் கற்றோர்க் கிதயங் களியாதே"

என்பது உண்மைமொழி யன்றோ? அல்லாமல்—

"முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னே போற்போற்று வம்"

என்றவண்ணம் கம்பர், திருவள்ளுவ நாயனார் முதலிய சில மகாகவிகளின் கருத்தும், பொருளும், சிறுசிறு சொற்றொடர்களும், இந்நூலகத்து அரதந கசிதம் போலப் பொருந்தப் பதிக்கப்பட்டன. அவைகள் இடைக்கிடை மிளிரக் காணலாம்.

5. இது பொருட்டொடர்நிலைச் செய்யுளாயினும், அந்தச் சரித்திர சாரத்தையொட்டி, இடமிடந்தோறும், கிறிஸ்து சமயத்துக்கே ஸ்வாதந்திரியமானவும், அதிதுல்யமானவும் சன்மார்க்கப் பிரமாணங்கள்,—தேவ சித்தத்துக்கு அமைதலாகிய பொறுமை முதலிய சுகுணங்கள்,—நீதிபிரக்க சமாசம் முதலிய சில முக்கியமான உபதேசங்கள்,—விதிநிஷேதங்கள்,—பாவ புண்ணிய விவரணங்கள்,—மோக்ஷ நரக நிலைவரங்கள்,—தர்மாதர்ம விசேஷங்கள்,—இம்மை மறுமைப் பலாபலங்கள்,—சாதுசங்கக் கூட்டுறவின் பிரயோஜனங்கள்,—உபநியாசங்கள்,—ஆன்னிகங்கள்,—பக்திமார்க்க உபகரணங்கள்,—துன்

மார்க்கப் பிரதி பலன்கள்,—முதலிய சத்விஷயங்களே இதில் யாண்டுந் தெளிவாய்ப் புலப்படத் தக்கது.

6. இந்நூல் வாசிக்கிறவர்கள் மனதைச் சன்மார்க்கத்தில் முயற்சிப்படுத்துவது; தேவபயத்தில் வளர்க்கத் தக்கது; துப்புரவான போதனையுள்ளது. இயல்புக்கு விரோதமான அபார கற்பனைகளேனும், அபத்தாபாசங்களை யுள்ளிட்ட வர்ணனைகளேனும், இந்நூலில் யாண்டுங் கிட்டாது. கிரமமான கற்பனாலங்காரங்களும், உதாகரித்துப் பேசத்தக்க சமயோசிதங்களும் படிப்பனைகளு முள்ளது என்பதை நடுநிலை விலகாது வாசிப்போ ரெவரும் மறுக்கார்.

இந்நூல் முழுக்கவும் ஏகதேசம் 3,800 கவிகளுள்ளன. அவற்றுள், யமகம், திரிபு, சிலேஷை, மடக்கு முதலிய கவிகள் எல்லாம் 21. அவற்றிற்குப் புஸ்தகத்தின் கடைசியில் தெளிவாய்ப் பொருளெழுதி யிருக்கிறது. உலகத்துக்குப் பெரும்பாலும் பிரயோஜனகரமாயிருக்கவேண்டு மென்பதை யுத்தேசித்தே கூடியவரை இயற்சொற்களைக் கொண்டும், எவரும் முன்பின் சம்பந்தத்தைக் கவனித்துத் தெளிவாய்ப் பொருளறிந்து கொள்ளத்தக்க திரிசொற்களைக் கொண்டும், தாத்கால வழக்கத்தை அனுசரித்து இடைக்கிடை சாமான்யமான வடசொற்களைக் கொண்டும், இயற்றப்பட்டிருக்கிறது.

7. 'தெளிந்த வாசகநடையுள்ள புஸ்தகங்கள் போலச் செய்யுளிலமைந்த நூல்கள் சுலபமாய்ப் பொருள் விளங்கக் கூடிய வல்ல; ஆதலின், அவற்றால் அதிகப் பிரயோஜன மிராது' என்று தாத்காலத்தில் இங்கிலிஷ் பாண்டித்யமுள்ள சிலர் ஆக்ஷேபிக்கவுங் கூடும். அப்படியல்ல, தெளிந்த வாசகம்போலவே சிறந்த செய்யுளும் அதனதன் ஸ்தானத்தில் சிறப்புந் தகுதியுமுடைத்தாம். எப்படியெனில், சாஸ்திரம், சரித்திரம், சமாசாரம் முதலிய அறிவு விர்த்திக் குரிய விஷயங்கள் தெளிந்த வாசகநடையி லிருப்பது சிறப்பும், அவசியமுமாம். வாசக மெவ்வளவு தெளிவுள்ளதாயினும், சிறந்த செய்யுட் போலக் கேட்போருள்ளத்தைக் கவரவும், மனதைப் பரவசமாக்கவும், எப்போதுஞ் சிந்தையை விட்டகலாமல் அதிற் பதிந்து நீடித்த பயனை விளைவிக்கவும், போதுமான சக்தியுடையதல்ல. ஆதலால், எக்காலத்து மறவாமல், மனசில் வைத்து உயிரினும் அருமையாய்ப் பாதுகாத்துப் பேணவேண்டிய பக்தி, உணர்ச்சி, ஒழுக்க முதலிய



வற்றிற்குரிய விஷயங்கள் சிறந்த செய்யுளில் அமைந்திருப்பது சிறப்புந் தகுதியு மாத்திரமல்ல, பிரயோஜனமு மிகுதியே. தமிழ்ப் பாஷையின் நூல்களைக் கற்றறிந்த சகலரும் இதற்குச் சாக்ஷி பகருவார்கள். ஆதலால், இப்பிரபந்தம் செய்யுளி லிருப்பது பக்தி விர்த்திக்கும், நல்லொழுக்கத்திற்கும் அதிக அநுகூலமென்பது நிராக்ஷேபமாயிருக்கிறது.

தமிழ்ப் பிரதேசத்தில் 'ஜீவக சிந்தாமணி'முதலிய பஞ்ச காவியங்களும், 'திருக்குறள்'முதலிய நீதிநூல்களும், 'கம்பராமாயணம்' முதலிய இதிகாசங்களும், 'தேவாரம்', 'திருவாய்மொழி' முதலிய திவ்விய பிரபந்தங்களு மெல்லாம் எவருந் தெளிவாய்ப் பொருளறிந்து கொள்ளத்தக்க நூல்களா? அவைகளெல்லாம் உலகத்தில் எவ்வளவு காலமாக நிலைபெற்று, யாவராலும் அபிமானிக்கப்பட்டு, வழங்கிவருகின்றன! பிரயோஜனப்படாமலா போயிற்று? கற்றுவல்ல சான்றோர் எக்காலத்து முளராகப் பொருள் விரித்துரைக்கின்றனர். மற்றையோர் கேட்டு மகிழ்கின்றனர். எக்காலத்தும், யாண்டும், இவ்விருதாத்தாரு முளர். அல்லாமல், இங்கிலிஷ் பாஷையிலுள்ள வாசக நூல்களெல்லாம் எவரும் தாமாய்ப் பொருளறிந்து கொள்ளத் தக்க நூல்கள்தானா? வித்தியாசாலைகளிற் படித்துத் தேறுகிற சிறுவர் போகட்டும். B. A. பரீக்ஷை கொடுத்த கல்விமான்களாவது M. A. பரீக்ஷைக்குக் குறிப்பிட்ட பாடங்களைத் தாமாய்ப் படித்துக்கொள்ளக் கூடாதா? பிறருதவியை நாடுவதென்னை? வாசக கிரந்தந்தானே, கிறிஸ்துவேத புஸ்தகம்; யாவரும் பொருளறிந்து கொள்ளத்தக்க விதமாய்த் தெளிவான வாசகநடையில்தானே யமைந்திருக்கிறது; அதற்கேன் வியாக்கியானம் வேண்டும்? "பட்லர்ஸ் அனலஜி" என்ற வாசகப் புஸ்தகம் எத்தகையதென்று அறிவீர்களே. அதுவும் பிரயோஜனமற்ற நூல்தானா? தாமாய்க் கற்றறிகிற கல்வியறிவிலும், தம்மினுங் கற்றுவல்ல சான்றோராற் கேட்டறிகிற கேள்வியறிவுதான் சிலாக்கியமுடையது. அதுவே சந்தேக விபரீதமில்லாத மெய்யறிவு. ஆதலாற்றான்—

"கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை"

என்றுந் திருக்குறள் விளம்புகின்றது. உண்மை யிதுவாதலில், எல்லா

நூலும் எல்லாருக்கும் பொருள் விளங்குமாறு அமைந்திருக்க வேண்
டுமென்கிற கொள்கை தவறு—

“எல்லார்க்கு நன்று யிருப்பதில்லை யாதொன்றும்
எல்லார்க்கும் பொல்லாத தில்”

என்பது பெரியோருடைய கொள்கை.

இங்கிலிஷ் பாஷையைக் கற்கும் அநேகர் தமிழ் சுய பாஷை
யானதால் அது தானே வரத்தக்கது, பிரயாசப்பட்டுப் படிக்க வேண்
டியதில்லை என்கிற எண்ணத்தினாலும், படித்தாலும் தாத்காலத்திற்
பயனில்லை யென்கிற வெறுப்பினாலும், கற்க வேண்டிய காலத்தில்
தமிழ் இலக்கியங்களில் ஒன்றையாவது கற்றுக்கொள்ளக் கவலைப்
படாமல் மெத்த அசட்டை செய்து விட்டுவிட்டு, அப்புறம் ஏதோ
ஒரு காலத்தில் சமயம் நேரிடும்போது தமிழ்ச் செய்யுட்களில் இரண்
டொன்றை மட்டும் வாசித்துப் பார்த்து, அது தங்களுக்கு விளங்கா
மையி னிமித்தம் பிரயோஜன மில்லையென் றெறிந்துவிடுகிறார்கள்.
இது தமிழ்ச் செய்யுளின் குற்றமல்ல. இங்கிலிஷ் இலக்கியத்தில்
தேறுவதற்குச் செல்லுங் காலத்திலும், படும் பிரயாசத்திலும், பத்தி
லொருபாகமாவது தமிழ் இலக்கியத்திற்கு உபயோகப்படுத்தி, அதன்
பேரிற் குறை சொல்வார்களானால், அது ஒருவேளை நியாயமாயிருக்
கும். அப்படிக்கின்றித், தமிழில் ஒரு நூலையாவது ஒரு வருஷ
மாவது தீரத் தெளியச் செவ்வையாய்ப் படியாமல். எடுத்த செய்யுள்
தனக்கு விளங்கவில்லை யென்று குறை சொல்வது சரியல்ல. கூர்
மைப் புத்தியுடைய எவராவது இரண்டு வருஷம் தமிழ் இலக்கியங்
களிற் பழகுவாரானால் எடுத்த காவியத்துக்கு அர்த்தஞ் சொல்ல
அருகராவார் என்பது யாவரும் அநுபவமா யறியக்கூடிய விஷயமே.
அந்நிய பாஷைக்காரருங்கூடத், தங்களுக்குப் போதுமான ஆசை
யிருக்கும் விஷயத்தில், அதிசுலபமாய்த் தமிழ் நூல்களிற் பாண்டித்
திய மடைந்திருக்கிறார்கள். ஆதலால், தமிழ் இலக்கியத்திற் சற்றுப்
பிரியமுள்ளவர்களுக்கு ‘இரக்ஷணிய யாத்திரிகம்’ என்னும் இந்நூல்
வெகு சுலபமாய் விளங்கக் கூடியதேயன்றிக் கஷ்டமாயிருக்கிற
தென்று கைவிடக் கூடிய நூல் அன்று.

8. நற்போதகத்திற் பிரசித்தப்படுத்தியிருந்த செய்யுட்களை வாசி
த்துப் பார்த்து வந்த அநேகர் நூல் முற்றுப்பெற்ற தென்றறிந்து இந்



தப் பிரபந்த முழுதும் அச்சிடுவிக்க வேண்டுமென்று விரும்பிக்
கேட்டுக் கொண்டதினால், அச்சிடுஞ் செலவுக்குப் போதுமான பிர
திகள் முந்திக் கையொப்பமாகிறதா வென்றறிந்து, அதன்மேல் அச்
சிடுவிக்கும் நோக்கமாக, மாதிரிக்குச் சில பாடல்களைக் காட்டிச்
சென்ற 91-ம் ௵ நவம்பர் மாஸத்தில் பிராஸ்பெக்டஸ் ஒன்று அச்சி
டுவித்துக் குருமார், வித்துவான்கள், கல்விமான்கள் பலருக்கும்
அனுப்பியிருந்தேன். நானூறு பிரதிக்கு அதிகமாகக் கையொப்பம்
கிடைத்தது. அத்தோடு அவரவரே தங்கள் தங்கள் விருப்பத்தையும்
வெளியிட்டார்கள்.

பிராஸ்பெக்டஸை யனுப்பி யதன் மூலமாய்க் கிடைத்த
கையொப்பத்தை ஆதாரவாக்கி இந்நூலை யச்சிடுவிக்க முயன்று
கொண்டிருக்கையில், நான் வசிக்கிற திருநெல்வேலி நாட்டுக் கிறி
ஸ்து சபைக்குப் பிராதானிக்கமுள்ள ரெவரென்று டி. உவாக்கர்
(Rev. T. Walker, M.A.) என்ற குருத்துவர் தமிழில் நல்ல தேர்ச்சி
யுடையாராதலின், இந்நூலை எப்படியும் சீக்கிரத்தில் பிரசுரமாக்கிப்
பயன்படச் செய்யவேண்டுமென்று விரும்பி, என்னுடைய செலவில்
அச்சிடுவதைப் பார்க்கிலும் ஓர் சங்கத்தார் மூலமாய் அப்படிச்
செய்தால் புஸ்தகத்தின் விலை மெத்தச் சஹாயமாகவும், அதனால்
வெகு சுலபமாக நூல் பல இடங்களிலும் பரம்பவும், கூடியதென்று
உத்தேசித்து, டாக்டர் மர்டாக் (Dr. Murdoch) அவர்களோடு பேசி
முதற் பதிப்பு மட்டும் அவர்கள் செலவில் அச்சிடுவித்து உபயோகப்
படுத்திக் கொள்ளும்படி ஏற்பாடு செய்து என்னிடஞ் சொன்னதின்
பேரில், அதற்கு இணங்கிப் பிரதியை அவர்களுக்கு அனுப்பினேன்.
எவ்வாற்றானும், புஸ்தகம் பூரணமாய் அச்சிட்டு முடிய என் கண்கள்
கண்டது. இது விஷயத்திற் கிடைத்த தேவ இரக்கம் பெரிது.

இந்த நூல் தமிழ் நாட்டுக்குப் பிரயோஜனமுள்ள தென்று கண்டு
அச்சிட்டுப் பிரசித்தப்படுத்த முயன்று, தக்கவாறு உதவி புரிந்து,
வெளிப்படுத்திய ரெவரென்று டி. உவாக்கர் என்கிற குரு தீக்ஷதருக்
கும், வைதீகப் பிரவர்த்தகரான டாக்டர் மர்டாக் துரைக்கும்
நன்றியறிந்த வந்தனம் சொல்லுகிறேன்.

அரும்பத அகராதியில் சில முக்கியமான பதங்கள் விடுபட்டுப்
போயினவென்று பின்னர்த் தெரியவந்தது. இரண்டாம் பதிப்புக்

காலத்தில் இந்தப் பதிப்பில் விடுபட்ட அரும்பதங்களையும், திருத்தாது தவறிநின்ற பிழைகளையுந் திருத்திச் சேர்த்து அச்சிடுவிக்கக் கூடியபட்டிருக்கிறேன்.

இவ்வாறு, இரக்ஷணிய புண்ணியம் தமிழ்நாட்டில் வெளியாக, அற்பக் கருவியாக என்னை யுருப்படுத்தித் தொடங்கிய வேலையை முற்றுப்பெறச் செய்த தன்னிகரில்லாப் பாட்டுடைத் தலைவனாகிய ஸ்ரீ கிறிஸ்து பகவானுடைய உபய சாணாரவிந்தங்களுக்கு அனந்த ஸ்தோத்திரம்.

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்."

"காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே."

பாளையங்கோட்டை, மேமீ 1உ 1894. } H. A. கிருஷ்ணபிள்ளை.

## படல அட்டவணை.


| | பெயர். | பக்கம். | கவி. | தேவாரம். |
|---|---|---|---|---|
| | பாயிரம்.... .... .... .... .... .... | 1 | 16 | |
| | பதிகம் .... .... .... .... .... | 3 | 3 | |
| | **1–வது. ஆதி பருவம்.** | | | |
| 1 | வரலாற்றுப் படலம் .... .... .... .... | 4 | 10 | |
| 2 | மெய்யுணர்ச்சிப் படலம்.... .... .... | 6 | 48 | |
| 3 | குரு தரிசனப் படலம் .. .... .... .... | 12 | 15 | |
| 4 | பரமராஜ்யப் படலம் .... .... .... | 14 | 66 | |
| 5 | அரசியற் படலம் .... .... .... .... | 23 | 14 | |
| 6 | சிருஷ்டிப் படலம்.. .... .... .... | 25 | 19 | |
| 7 | ராஜதுரோகப் படலம்.. .... .... .... | 28 | 16 | |
| 8 | பூர்வபாதைப் படலம் .... .... .... | 30 | 39 | |
| 9 | சுவிசேஷமார்க்கப் படலம் .... .... .... | 35 | 174 | |
| 10 | யாத்திராரம்பப் படலம் .... .... .... | 60 | 32 | |
| 11 | அவநம்பிக்கைப் படலம் .... .... .... | 64 | 50 | |
| 12 | லெளகீகப் படலம்.. .... .... .... | 70 | 86 | |
| 13 | கடைதிறப்புப் படலம்.. .... .... .... | 81 | 56 | |
| 14 | வியாக்கியானி யரமனைப் படலம் .... | 87 | 210 | |
| 15 | சுமைநீங்கு படலம் .... .... .... .... | 114 | 32 | 11 |
| 16 | துயிலுணர்த்து படலம் .... .... .... | 119 | 26 | |
| 17 | அமார்க்கப் படலம் .... .... .... .... | 123 | 41 | |
| 18 | ஜீவபுஷ்கரிணிப் படலம் .. .... .... | 128 | 43 | 10 |
| 19 | உபாதிமலைப் படலம்.... .... .... .... | 135 | 120 | 10 |
| | ஆதி பருவம் கவி. | | 1116 | 31 |
| | **2–வது. குமார பருவம்.** | | | |
| 1 | சம்பாஷணைப் படலம் .... .... .... | 153 | 112 | |
| 2 | இரக்ஷணிய சரிதப் படலம்.... .... .... | 167 | 495 | |
| 3 | விசிராந்திப் படலம் .... .... .... | 230 | 21 | 23 |
| 4 | காட்சிப் படலம் .... .... .... .... | 236 | 86 | |
| | குமார பருவம் கவி. | | 714 | 23 |
| | **3–வது. நிதான பருவம்.** | | | |
| 1 | வனம்புகு படலம் .... .... .... .... | 247 | 13 | |
| 2 | அழிம்பன் றேல்விப் படலம்.... .... | 249 | 109 | |
| 3 | மரணச்சூழ விறுத்த படலம்.... .... .... | 263 | 79 | |
| 4 | நிதானி நட்புப் படலம்.... .... .... | 273 | 96 | |

| | பெயர். | பக்கம். | கவி. | தேவாரம். |
|---|---|---|---|---|
| 5 | அலப்பனை வளைந்த படலம்.... .... .... | 285 | 101 | |
| 6 | ஞானாசிரியனைக் கண்ணுற்ற படலம் .... | 298 | 32 | |
| 7 | மாயாபுரிப் படலம் .... .... .... .... | 302 | 93 | |
| 8 | நகர்புகு படலம் .... .... .... .... | 314 | 47 | |
| 9 | இரக்ஷணிய நவநீதப் படலம் .. .... .... | 320 | 100 | |
| 10 | சிறைப்படு படலம்.. .... .... .... | 332 | 58 | 10 |
| 11 | நிதானி கதிகூடு படலம் .... .... .... | 342 | 75 | |
| | நிதான பருவம் கவி. | | 803 | 10 |
| | 4-வது. ஆரணிய பருவம். | | | |
| 1 | நம்பிக்கை நன்னெறி பிடித்த படலம் .... | 351 | 31 | |
| 2 | கிறிஸ்தவன் கதிவழி கூடிய படலம் .... | 355 | 80 | |
| 3 | சுரங்கப் படலம் .... .... .... .... | 365 | 26 | |
| 4 | விடாதகண்டப் படலம் .... .... .... | 368 | 175 | 12 |
| 5 | ஆனந்த சைலப் படலம் .... .... .... | 392 | 100 | |
| 6 | விசுவாச விளக்கப் படலம் .... .... .... | 404 | 60 | |
| 7 | கார்வண்ணப் படலம் .... .... .... | 412 | 31 | |
| 8 | சோகபூமிப் படலம் .... .... .... .... | 416 | 90 | |
| 9 | அறிவீன வர்ச்சிதப் படலம் .... .... | 427 | 114 | |
| 10 | நிலைகேடனாதியர் விவரணப் படலம் .... | 442 | 32 | |
| | ஆரணிய பருவம் கவி. | | 739 | 12 |
| | 5-வது. இரக்ஷணிய பருவம். | | | |
| 1 | தர்மக்ஷேத்திரப் படலம் .... .... .... | 447 | 86 | |
| 2 | இகபரசந்திப் படலம்.... .... .... .... | 458 | 54 | 48 |
| 3 | சுவர்க்காரோகணப் படலம் .... .... | 470 | 110 | |
| | முடிவுரைத் தேவாரம்.... .... .... .... | 484 | | 20 |
| | இரக்ஷணிய பருவம் கவி. | | 250 | 68 |
| | மொத்தம் கவி. | | 3622 | 144 |
| | சில கவிகளுக்கு அர்த்தம்.... .... .... | 487 | | |
| | அரும்பத அகராதி .... .... .... .... | 495 | | |
| | பிழை திருத்தம் .... .... .... .... | 513 | | |




# இரக்ஷணிய யாத்திரிகம்.

## சிறப்புப் பாயிரம்.

### கடவுள் வாழ்த்து.

பூதபௌ திகங்க ளாய புவனகோ சரங்கட் கெல்லாம்
ஆதியாய் முதுமூ லத்துக் கநாதியா யகண்டா கார
ஜோதியாய் விளங்கி நிற்குந் தூயனை தந்ய வாழ்வைக்
காதலாய்ப் பாவி நாளுங் கருத்தினுள் ளிருத்தி வாழ்வாம். 1

ஒன்றிலே மூன்றாய் மூன்று மொன்றதா யுலப்பி லாதாய்
நின்றுல கனைத்துந் தூய நினைவுமாத் திரையிற் றந்து
நன்றென வுவந்தி ரக்ஷை நல்குமெய்ஞ் ஞானா னந்தக்
குன்றினை யகத்துத் தாங்கிச் சிந்தனை கூடி வாழ்வாம். 2

### வேறு.

மூல காரண முதற்பொரு ளெவற்றிற்கு மும்மைக்
கால மாதியீ றிகந்துள வநாதியங் கடவுள்
கோல மாமறை குணிப்பருங் குணங்குறி யமைந்த
சீல நாயகன் றிருவருட் பாவுதுந் தினமே. 3

### வேறு.

ஆதி மெய்த்திரு வாக்கொளி யாய்வருங்
காதன் மைந்தனைத் தந்து கருணையாற்
பூத லத்துக் கிரக்ஷை புதுக்கிய
தாதை பாதந் தலைக்கணி யாக்குவாம். 4

### வேறு.

கன்னி பாலனாய்க் காசினி தனிலவ தரித்து
மன்னு ஜீவகோ டிகளெலாம் வான்கதி மருவத்
தன்னு யிர்ப்பரித் தியாகமுஞ் சிலுவையிற் றந்த
என்னு பாசனா மூர்த்தியை யஞ்சலித் திடுவாம். 5

### வேறு.

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட
ஞானமு நன்மையு நனிசி றந்திட
ஊனமும் பாவமு மொழியத் தோன்றிய
தீனர க்ஷகன்பதஞ் சிந்தித் தேத்துவாம். 6

### வேறு.

சுருதியொளி யகந்திகழ்த்தி யஞ்ஞான திமிரமறத்
துரந்தெஞ் ஞான்றும்
ஒருதனிர க்ஷணியவழித் துணையாகி யடியோமை
யுய்யக் கொண்டு
கருதியநற் கருமமெலாங் கைகூடப் பெருங்கருணைக்
கடைக்கண் ணோக்கந்
தருதிரியே கத்தொருநல் லாவிதிரு வடிக்கமலந்
தலைமேற் கொள்வாம். 7

### வேறு.

பத்த பாலனஞ் செய்திருள் பாறிட
வித்த கச்சுடர் வீசி விளங்கிடும்
மெய்த்தி ருச்சபை மெய்த்திருத் தொண்டரைச்
சித்த மீது திகழ்த்தி விளம்புவாம். 8

### காரணம்.

பூவரு மெய்ம்மறைத் துணிபின் பொற்புறழ்
ஜீவர க்ஷணியயாத் திரிகச் செம்பொருள்
பாவரு செந்தமிழ்ப் பனுவ லாக்குவான்
ஆவலிற் றுணிந்தன னருட் டுணைக்கொடே. 9

### வேறு.

என்னனைய பாவியரிந் நிலவுலகில் யாண்டுமில
ரெனினு நாயேன்
தன்னையொரு பொருளாகத் தடுத்தாண்ட கிறிஸ்தியேசு
சாமி செய்ய
பொன்னனைய திருவடிக்குச் செந்தமிழ்மா லிகையொன்று
புனைவா னெண்ணித்
துன்னுநவ ரக்ஷணிய யாத்திரிக மலரெடுத்துத்
தொடுக்க லுற்றேன். 10



### வழி, எல்லை.

வித்தக கிறிஸ்து வேத விழுத்தகு பொருளை யாய்ந்து
நித்திய ஜீவ மார்க்க நிண்ணயம் பிடித்த தேவ
பத்தனும் பனியன் மேனாட் பாவனு சரித மாகச்
சத்தியந் திகழ்த்தி யுய்த்த தகைமையே தகைமை யாமால். 11

ஆக்கிய பாஷைக் கன்றி யவனியிற் பலபா ஷைக்கும்
பாக்கியம் பயந்த தென்னப் பாசுரஞ் சமைந்த தாக
மேக்குயர் காத லாலவ் வித்தக சரிதஞ் சொல்வான்
ஊக்கினன் றமிழில் யானு முசிதமாண் பொருளை யுள்ளி. 12

ஒண்டமிழ் வலவர் வாக்கி னுரங்கொண்டிவ் வுலக காதை
எண்டிசை புகழ நிற்கு மிரக்ஷண்ய வேத போதங்
கொண்டபே ராற்ற லாலே கூறுமிப் பனுவ லென்றுந்
தெண்டிரை வளாகத் தோங்கித் திகழ்வதற் கென்கொ லையம். 13

### நுதலியபொருள்.

வெற்று நேரப்போக் காய்ப்புகல் விநோதமு மன்று
புற்ற ராவிடம் பொதிந்தசெப் பெனக்கவி புனைந்து
சிற்றின் பத்திறந் திருத்திய காதையு மன்று
மற்றி தாத்தும ரக்ஷணை வழங்குமோர் மருந்தாம். 14

### நூற்பயன்.

தீவினை ஜலதிவீழ்ந் தழியும் ஜீவரை
வீவிலாக் கதிக்கரை வீடு சேர்க்குமோர்
தாவரு புண்ணியத் தனி மரக்கலம்
ஜீவர க்ஷணியயாத் திரிகந் தேர்மினே. 15

### யாப்பு.

முதிர்க டுத்தழை நுகர்ந்திடு மொட்டையின் மூர்க்கர்
கதிவ ழுக்கிய பாழ்ங்கதை கற்றுநாட் கழிப்பர்
புதிய தேனுக ரளியெனப் புனிதர் யாத்திரிகம்
மதிந லந்தரு மமிழ்தெனப் புசித்துள மகிழ்வர். 16

சிறப்புப் பாயிரம் முற்றிற்று.

---

## பதிகம்.

கண்ணியர க்ஷணியயாத் திரிக மென்னக்
கழறுகின்ற காவியத்தின் பொருள டக்கம்
நண்ணியதன் வரலாறு மெய்யு ணர்ச்சி
நலத்தகுரு தரிசனமா பரம ராஜ்யம்

புண்ணியவேர் தியல்சிருஷ்டி ராஜ த்ரோகம்
பூர்வவழி சுவிசேஷ புனித மார்க்கம்
எண்ணியரு ணெறிபிடித்த லவாம் பிக்கை
யிலெளகீகங் கடைதிறப்பு மறைவி ளக்கம்.

அருஞ்சுமைநீங் கியபேறு துயினு ணர்த்த
லமார்க்கவியல் புஷ்கரிணி யுபாதி யோங்கல்
விரும்புசம்பா ஷணையிரக்ஷை விளைந்த வாறு
விசிராந்தி காட்சிவன மழிம்பன் றோல்வி
நெருங்குமா ணச்சூழல் நிதானி நட்பு
நெறியிலலப் பனைவனாதல் குருவை நோ்தல்
மருங்குமா யாநகரி நகருட் போதல்
மானவர க்ஷணைவகுத்தல் சிறைக்குள் ளாதல்.

நற்றவனி தானிகதி நன்னம் பிக்கை
நல்வழிவே தியன்மீட்சி பொற்சு ரங்கம்
செற்றமுறு விடாதகண்டச் சிறையா னந்தச்
சிகரிவிசு வாசவியல் திமிர வண்ணன்
குற்றமிகு சோகநில மறிவீ னற்குக்
கூறுமுறை நிலைகேடன் றரும க்ஷேத்ரம்
முற்றுமிக பாசந்தி சுவர்க்கப் பேறு
முறைவைப்பா நிகழ்படல நாற்பத் தேழே.

பதிகம் முற்றிற்று.

---

## முதலாவது: ஆதிபருவம்.

### வரலாற்றுப் படலம்.

உலகம் யாவும் புரந்தரு ளுன்னதர்
அலகில் ஜோதி யருட்கட லாரணத்
திலகு மெய்த்திரி யேகர் பதத்துணை
குலவி யென்னெஞ் சிடங்குடி கொண்டவே.

மைக்க டற்புவிக் கெத்துணை வான்கதிர்
தக்க தத்துணைச் சால்புடைத் துத்தம
மெய்க் கிறிஸ்தவ வேதியர் தாங்குழீஇத்
தொக்க தாயமெய்த் தூய திருச்சபை.



மலையுற் றோங்கு சுடரினிவ் வையகத்
தலையுற் றுன்ம விரக்ஷை தயங்கிடக்
கலையுற் றோங்கு கதிர்மதி யிற்சபை
நிலையுற் றோங்கிப் பெருகி நிலாவுமே. 3

சென்னி தேவ குமாரன் திருச்சபைக்
கிந்நி லத்திருத் தொண்டரெல் லாமுடல்
அன்ன வாப்பரி சுத்த வயிக்கியம்
மன்னி நின்று வளர்க்குந் தருமமே. 4

வேறு.

சத்தி யந்தரு மம்பொறை தயவுகண் ணோட்டம்
சித்த சுத்திமெய்ப் பத்தியென் றித்தகு சீல
வித்த கந்திகழ் சாதுக்க ளுளரெனும் விரகால்
இத்த ராதல முளதில ரெனிலில தாமால். 5

பண்டு நோவையுங் குடும்பமுங் கலம்புகப் பரவை
மண்ட லத்தைவாய் மடுத்ததே மயலறு சான்றுக்
கண்டு கேட்டறிந் தின்னமு முய்வழி கருதித்
தொண்டு பட்டிடா ருலகரி தென்கொலோ துணிவே. 6

இனைய தன்மைய சாதுசங் கத்தருக் கென்றும்
முனைவ ஸீந்தருள் சுருதியே முத்திசா தனமாம்
அனைய நூல்வழிப் படர்தலே யான்மர க்ஷணிய
நினைவு கொண்டுடன் சிந்தையாத் திரைசெயு நீர்மை. 7

ஆப வித்தகு சிந்தையாத் திரைபெரி தாற்றி
நாயகன் கிறிஸ் தியேசுவுக் கன்புசெய் நண்பன்
தூய ஜீவிய நடைகடைப் பிடித்தவோர் சுகிர்தன்
மாயி ரும்புவி மயக்கறு மாண்புடை ஞானி. 8

எம்பி ரான்றிருச் சித்தமே யெனதுபாக் கியமென்
றும்பர் நாயகன் பணிபுரிந் தொழுகுமவ் வுரவோன்
இம்ப ரோர்சிறை யிருந்துழி யோகநித் திரையில்
தம்பி ரானருள் சமைத்தது தரிசன மொன்றை.

தன்ன கத்துளே தோன்றிய தரிசனந் தரணி
மன்னு யிர்க்கிர க்ஷணைவழி மாயினை வகுக்கும்
என்ன வுன்னித்தன் னினத்தருக் கெழுதுபா சுரமாப்
பன்னு வேன்வெளிப் படையிலென் றாக்கினன் பகர்வான். 10

வரலாற்றுப் படலம் முற்றிற்று.

## மெய்யுணர்ச்சிப் படலம்.

வஞ்சமே பயில் ப்ரபஞ்ச வனத்திலே நெடுநா ளாகச்
சஞ்சரித் திடும்போ தாண்டோர் தடமலைச் சாரல் வைகி
நெஞ்சுளே நிமலன் பாத நிறுவிநித் திரிக்குங் காலை
விஞ்சியோர் கனவு கண்ட விதந்தனைப் பகரு வேனே. 1

வண்டினம் பயிலச் செய்ய மலர்முகை யவிழ்ந்து செந்தேன்
ஒண்டுளி பிலிற்றி யெங்கு முறுமணங் கமழ வோங்குந்
தண்டலைப் பரப்பி னூடே தனித்தொரு மனித னிற்கக்
கண்டனன் கனவி லன்னோ னிலையிது கழறுங் காலை. 2

வாடிய முகத்தன் சென்னி வணக்கியோன் மலங்கி வார்நீர்
ஓடிய விழியன் கந்தை யுடையின னொருங்கு பாவங்
கூடிய சும்மை தாங்கிக் கூனுறு முதுகன் பல்கால்
வீடிய னெறியை நாடும் விருப்பினன் வெருண்ட நெஞ்சன். 3

ஐயுறு புத்த கத்தைக் கருத்துற விரித்து நோக்கி
மெய்யுற நடுங்கி விம்மி வேதனை பொறுக்க லாற்றா
தையகோ வையகோ வென் றலறிநெட் டுயிர்த்தி யாது
செய்யுறு கரும மென்று திகைத்துநின் றயரு நீரான். 4

இருதலைக் கொள்ளி யுற்ற வெறும்பென வேகு மார்க்கம்
ஒருதலை யானுங் காணா துணங்கியோ னுலவை யுற்ற
சருகெனச் சுழல்வன் யாண்டுந் தரிக்கிலன் மேலுங் கீழுங்
கருதிநோக் கிடுவ னுள்ளங் கசந்தழு திடுவன் மன்னோ. 5

ஈங்கிவ னிவ்வா றாக விருந்துயர்க் கிறுதி காணான்
ஆங்கொரு நெறியைக் கூடி யடவிநீத் தகத்தை யண்மித்
தாங்கரி தாகி நின்ற தற்பரி பவங்க ளெல்லாம்
பூங்குழன் மனைம கார்க்குப் புகன்றிடா துளத்துக் காத்தான். 6

அயலுறு நிழலைப் போக்க லாவதோ வகத்துள் ளோங்கி
உயவொரு புகலின் றென்னா வுறுத்திநின் றுடற்று கின்ற
துயர்பிற ரறியா வண்ணந் துடைத்திட முயன்றான் வாளா
வியனகத் தியன்மு கத்து விளங்குமென் றுணரான் போலும். 7

விள்ளரும் ஜீவ சாக்ஷி விளைத்திடு முபாதிச் சும்மை
தள்ளரு நீர்மைத் தாகச் சமழ்த்தலாற் பரிந்தில் லானை
எள்ளரு மகானைக் கூவி யினிதரு கிருத்தி யென்றன்
உள்ளுயி ரனையீ ருற்ற தோன்றியா னுரைக்கக் கேண்மின். 8



பரிபவ மொருங்கு கூடித் திரண்டவோர் பாரச் சும்மை
வெரிநுறீஇ யமிழ்த்த வாற்றேன் மிகமெலிந் தயர்ந்தேன் மேலும்
எரிதரு தேவ கோப விருங்கனன் மாரி பெய்து
விரிதிரை யுலகும் யாமும் வெந்தழிந் தொழிவே மன்றோ. 9

இத்திற நிகழு மென்றற் கெட்டுணை யைய மில்லை
எத்திறந் தப்பி யுய்து மென்பது மறியே னின்னே
நித்திய ஜீவ மார்க்க நெறியறிந் தோடே மாயிற்
சத்திய நரகத் தீயிற் சாவது சரத மாதோ. 10

ஈசனார் கோபத் தாலே யெரிந்துநீ றாகு மிந்த
நாசதே சத்தை விட்டு நடப்பதே கரும மன்றேல்
மோசம்வந் தடையும் பின்னர் முயல்வது விருதா வென்று
பேசினான் பலகாற் றன்னைப் பிணித்தபே ரன்பி னாலே. 11

இன்னண நிகழும் வேலை யினத்தவர் பலருங் கூடி
என்னவோ பித்த மேலிட் டிவையெலாம் பிதற்று கின்றாய்
உன்னது தலைசாய்த் தின்னே யுறங்குதி புலரி தோன்று
முன்னரே சுகமுண் டாகு மென்றின மொழிந்து போனார். 12

என்னுறு வருத்தந் தேரா திகழ்ந்துரை யாடு கின்ற
இன்னர்புன் மதிதா னென்னென் றிரங்கிநித் திரைசற் றின்றிப்
பன்னருந் துயர முற்றான் பகலிலும் பதின் மடங்காக்
கன்னலோ ருகம தாகக் கழிந்தன வவற்குக் கங்குல். 13

கனையிருட் பிழம்பை நூறிக் கதிரவன் குணபாற் றோன்ற
வினைசுமந் தலறி யுள்ள மெலியுமாத் துமவி சாரி
மனைவயிற் குறுகி யுய்யு மதியிலா நிருவி சாரர்
அனையவ னாத்ம சோக மதிகரித் ததனைக் கண்டார். 14

கண்டன ருண்மை தேரார் கவல்கின்றா ரல்லர் வேரி
உண்டுவா யுழறு வார்போ லுணர்வின்றி யுரைக்க லுற்ற
மிண்டருக் கிரங்கி நேரு மெய்ம்மையைத் தெரித்தல் நன்றென்
றண்டர்நா யகனை யுள்ளி யாத்தும விசாரி சொல்வான். 15

திருவருண் மலிந்து செங்கோல் செலுத்தியிச் சகத்தை முற்றும்
ஒருகுடை நிழற்கீ ழாக்கி யுவந்துகாத் தளிக்கும் வேந்தன்
மருவுதங் குடைநி ழற்கீழ் வாழுமன் னுயிர்கட் கெல்லாம்
தருபிர மாணம் பத்தாந் தனித்தனி சாற்றக் கேண்மின். 16

நம்மையே வணங்கல் வேண்டு நமக்கிணை யாக வேறோ
பொம்மையைப் புனைந்து தாழ்ந்து போற்றிடா திருங்கள் வீணே
நம்மது நாமஞ் செப்பி ஞசமே வருந்தப் பாது
செம்மைசே ரோய்வு நாளைச் சிந்தையாற் றாய்மை செய்மின். 17

நலத்தொடு தந்தை தாயை நனியுப சரித்தல் நன்றாம்
கொலைத்திறந் துரிச்சை நீசங் களவுபொய்க் கூற்றென் றாய
புலைத்தொழில் புரிய லாகா புறத்தவன் பொருள்யா தொன்றை
அலைத்தப கரிக்க வெண்ணா மாசையை யடர்த்தல் வேண்டும். 18

என்றிவை சிலையிற் றீட்டி யெம்மனோர் காத்து நல்கி
நன்றுநீ ரடைய வேண்டி னயந்தருட் டியுமிப் பத்தில்
ஒன்றுமீ றிடினு மந்தோ வொருங்குதீச் சிறைக்குள் ளாவீர்
இன்றுமீட் பென்று சொன்னா ரிறையவன் யானுங் கேட்டேன். 19

புவனமன் னுயிர்க ளிந்தப் பொதுவிதிப் பிரமா ணத்தை
அவமதித் தொழுகுங் காலை யவரவ ரகத்து வாழுந்
தவலரும் ஜீவ சாக்ஷி தடுப்பனத் தடையை மீறிற்
குவலயா திபனுக் கெல்லாங் கூறிமுன் னிற்பன் மாதோ. 20

ஆதலாற் பரம ராஜ னருடச விதிகைக் கொண்டு
மேதகு ஜீவ சாக்ஷி விரோதமின் றாக வோம்பித்
தீதொரீஇ நன்மை செய்து செம்முறை திறம்ப லின்றிக்
கோதறு நெறியி னிற்றல் குடிகடங் கடமை யாமால். 21

நாமு நாம் வசிக்கு மிந்த நாசதே சத்து ளாரும்
கோமுறை வழுவாத் தூய கொற்றவன் றனைப்போற் றாமல்
தீமுறை துணிந்து செய்யும் ஜெகப்புலை யனுக்காட் பட்டுச்
சாமுறை துணிந்து நின்று சருவசண் டாள ரானோம். 22

நீணிலத் தவர்ந கைக்க நினைப்பின்றி யிறைவன் பேணா
வீணிலே யுழறி யந்தோ வீணற்குள் வீண ரானேம்
மாணுறு மோய்வு நாளை மதியாது மதியுங் கெட்டேம்
பேணினோ மிலைப்பெற் றோரைப் பேயரிற் பேயர் யாமே. 23

நன்மைசெய் தோமு மில்லை நன்மைசெய் வதற்குத் தக்க
தன்மையு நமக்கு ளில்லை சார்வதா நன்றி கெட்ட
புன்மையுங் களவுஞ் சூதும் பொறாமையும் புரட்டும் பொய்யும்
வன்மமும் பகையு முள்ளே மறத்தொழில் பயின்று வாழ்வேம். 24



நமபா மாக வைத்த நலனுறு பொருளைப் பேணி
இம்பரு தியஞ்செய் யாம லிருநிலம் புதைத்து வைத்தேம்
அம்பர லோக ராஜ னனுகிரங் கணக்கை யாயில்
வம்பரில் வம்ப ரென்று மாதண்டம் விதிப்ப ரன்றோ. 25

அச்சுத னாய வேந்த னருளினா லுபக ரிக்கும்
உச்சித மான வாழ்வை யுவக்கிலே முலர்ந்த வென்பை
நச்சியிங் குழலு நாய்போ லலமிலா நாச தேசக்
குச்சித வாழ்வை நச்சிக் கொண்டலை கின்றேம் யாமே. 26

வென்றிசே ராசன் றந்த விதிவிலக் கெவையு மீறிக்
கன்றிய மனத்த ராகிக் காமியச் சுவையை நாடிச்
சென்றனங் கடிந்து கூறும் ஜீவசா க்ஷியையுந் தேய்த்துக்
கொன்றுளே யடக்கி வைத்தேங் கொடுமையிங் கிதில்வே றுண்டோ. 27

மருங்கெரி கதுவத் தூங்கு மாசுண முணரா தாங்கு
நெருங்கிய வரசன் சீற்ற நெருப்பினா னாச தேசம்
ஒருங்கவிந் தொழியுங் கால முற்றதை யுணரே மாகி
நருங்குடற் போக மொன்றே நச்சிநாட் கழித்தல் நன்றோ. 28

நந்துநான் யாரே னிங்கு நாடினே னலமே நல்கி
இந்தமட் டெனைப்பு ரந்தாற் கென்கடன் யாவென் செய்தேன்
வந்திடுங் கதியென் னென்று மாவிசா ரஞ்செய் யாது
சிந்தையற் றுழலு மாந்தர் ஜென்மமும் ஜென்ம மாமோ. 29

காட்சியாற் கருத்தாற் காணுங் காசினிப் பொருள்கள் யார
தாட்சிமற் றவர்க்குச் சொந்த மாயகா ரணமே தம்மான்
மாட்சிசால் குணமெவ் வாறு வந்திடுங் கதியென் னென்று
சூழ்ச்சியற் றிருக்கு மாந்தர் சுமையன்றோ நிலத்துக் கம்மா. 30

தன்னைத்தன் னிலையை மேலாந் தலைவனை யவன்சித் தத்தை
முன்னைத்தா னறிந்து பின்னர் முறையறிந் தொழுகல் வேண்டும்
பின்னைத்தா னறிது மென்றல் பெரும்பிழை பெரிது மோசம்
என்னத்தான் கவலு கின்றேன் யாருநீர் கவலு கில்லீர். 31

வித்தக வரசன் றந்த விளம்பரத் தொனிகேட் டின்னும்
இத்தலத் திருந்து நாச மெய்துத லிளிதன் றென்று
சுத்தசத் தியமு மக்குச் சொல்லிவற் புறுத்து மென்னைப்
பித்தனென் றிகழ்கின் றீர்நும் பேதைமை பெரிது மாதோ. 32

இழவுவந் திடுமென் றேங்கி யினைம்ப திருபா னாண்டு
கிழமுனி பகர்ந்த நீதி கேட்டுண ராத மூடப்
பழவுல கத்தை மேனாட் பயோததிப் பரப்பு மேலிட்
டழவழ வமிழ்த்திக் கொன்ற வற்புத மறிகி லீரோ. 33

தீதோடு நின்றீ ரின்னே திரும்புமின் வேந்தன் சீற்றம்
போதோடிங் கெழும்பு மென்ற புங்கவ னுரையைத் தள்ளி
வாதாடு மூடர் போன்ற வயங்கனன் மாரி சிந்திச்
சோதோமைச் சுடுகா டாக்கித் தொலைத்தமை தோன்றா தென்னே. 34

அடல்கெழு மிறைசீற் றத்தா லகோரவா தைகளெ ழும்பிப்
படருறீஇ யெகிப்து நாடு பட்டபா டுணரீர் கொல்லோ
மிடனுடைப் பார்வோன் றானுஞ் சேனையும் விரைந்து கிட்டிக்
கடலிடைக் குளித்த மாற்றங் கதையெனக் கருதி னீரோ. 35

வருமுன்னர்க் காவா தார்க்கு வாழ்க்கையெத் துணைய வேனும்
எரிமுன்ன ருற்ற வைத்தூ றெனக்கெடு மென்ப ரின்னல்
பொருமுன்னர் விலகி யோடிப் புகலிட மாய கோமான்
திருமுன்ன ரடையி னித்ய ஜீவனை யடைதல் திண்ணம். 36

ஈண்டுநா னுரைத்த மாற்றம் யாவுமிப் புத்த கத்த
தாண்டகை யருளி னூலே யடுத்ததென் கரத்து முன்னம்
காண்டகு மிதனை நீவிர் கருத்துற வாசித் துய்மின்
வேண்டுமேற் றருவல் ராஜ விளம்பரம் வெறுத்தி டாதீர். 37

ஆவது கருது வீரே லனைக்கண முந்தா ழாது
தீவா விருந்த நாச தேசத்தை யொருவி யின்னே
ஜீவனே யென்று கூவித் தீவரித் தோடல் வேண்டும்
சாவது துணிந்தீ ராயிற் றங்குமித் தேயத் தென்றான். 38

இந்தவா றுரைத்த வெல்லா மிருஞ்சிலை மீது தாக்கும்
பந்தென லாய தன்றிப் பாமரர் பழுது மல்குஞ்
சிந்தையு ணிலையா தாகச் சினந்தவ மதிக்க லுற்றார்
பந்தமே கொளுத்தி னாலும் பயனுண்டோ குருடர்க் கம்மா. 39

என்னைப்போற் பரம ஞானி யில்லையென் றெமை யிகழ்ந்த
உன்னைப்போற் பித்த னிந்த வுலகத்தி லில்லை யென்பார்
பொன்னைத்தான் மாத ரைத்தான் பூவைத்தான் புறக்க ணித்தாற்
பின்னைத்தா னெய்து மின்பம் பிறிதுண்டோ பேசு கென்பார். 40



பதறிவாய் குழறி நீசொல் பழங்கதை தனைமுன் சில்லோர்
கதறினார் தெருக்க டோறுங் கதித்தெழுந் துருத்தி யாங்கள்
சிதறிட வடித்தோ மென்பார் செவிகொடா திவன்வீண் பேச்சை 41
உதறிவிட் டேகு வோநம் முறையுளை நாடி யென்பார்.

ஜீவசா க்ஷியனைக் கொன்று சேமித்தோ மென்று நம்மேல்
தாவரும் பழியைச் சாட்டித் தனைச்சுத்த னாகக் காட்டும்
பாவகா ரியைப்போல் யாரே பாதக ரென்பார் மேலைத்
தீவரும் வருமென் றெம்மைத் திகைப்பிப்பா னிவனே வென்பார். 42

சேய்கொண்ட மனையா ளுற்ற சினேகனை வெறுப்பா னேதோ
பேய்கொண்டா னென்ப ரேது பிறிதிலை பித்த மிக்கு
நோய்கொண்ட கோல மென்பார் நுனித்திடு மதியற் றின்ன 43
வாய்கொண்ட மட்டும் பேசி வாயடி யடித்தார் மன்னோ.

கண்ணிணை கலுழி காலக் கணவனுக் குளம ருட்சி
நண்ணிய தினியென் செய்கோ நானெனக் கவன்று ணைந்தாள்.
நுண்ணறி வுடைய நீரார் நூலொடு பழகித் தோராப் 44
பெண்ணறி வென்ப தெல்லாம் பேதைமை யுடைத்தா மன்றே.

பொற்றொடி யி[illegible] றாறும் புறக்கணித் தகந்தை பேசி
உற்றவ ரிகழ்ந்த வாறு முண[illegible]த் துமவி சாரி
எற்றிவர் தன்மை யந்தோ வென்னினிச் செய்வ லென்று 45
சற்றுநின் றேகாந் தத்திற் றம்பிரான் றிருமுன் கிட்டி.

சருவலோ கத்தை யாளுந் தயாபரா தமியேற் சூழ்ந்த
நிருவிசா ரிகள்சன் மார்க்க நெறியறி யாது செய்யும்
பொருவரும் பிழைக ளெல்லாம் பொறுத்தருள் புரியுந் தூய 46
திருவுள மிரங்கி யென்று ஜெபித்தனன் சிந்தை யொன்றி.

அறங்கிளர் பரலோ கத்துக் கரசனைப் பரவிப் போந்து
புறங்கிளர் வெளியு லாவிப் புத்தகச் சுருளை நாடி
இறங்கிய முகத்த னாகி யென்செய்வே னிரக்ஷைக் கென்று
கறங்கெனச் சுழலு நெஞ்சன் கவன்றனன் கலக்க முற்றான். 47

தேசநா சத்தை [illegible]ணிற் றுகிற்படும் பிணித்து நின்ற
பா[illegible]யின் மிக்க பாரத்தா லழுந்தும் யாரே
[illegible]னே னுய்யு மாறு நெறிதெரித் திடுவ ரென்னும்
மாசறு முயிரைக் கூவி வாய்திறந் தாற்று மாதோ. 48

மெய்யுணர்ச்சிப் படலம் முற்றிற்று.

## குருதரிசனப் படலம்.

வித்தக வாத்தும விசாரி யிவ்வணம்
தத்துற லடைந்துயிர் தன்னை நாடியிங்
கெய்த்திடு முடலென வினைந்து சில்பகல்
மத்தரிற் கழித்தன னுண்டொர் வைகல்வாய். 1

தண்ணளி தயங்கிய முகத்துத் தாமரைக்
கண்ணிணை மல்கிய கருணை காட்டிட
உண்ணிறை யன்புமிக் கொழுகிற் றென்னவே
வண்ணவான் மொழிச்சுவை யமிர்து வார்ந்துக. 2

எண்ணருந் துயர்க்கெலா மிறுதி காட்டுமெய்ப்
புண்ணிய முருக்கொடு பொலிந்தி லங்கிய
வண்ணமென் றுணர்வுளார் மனங்க ளிப்புற
நண்ணின னிருஞ்சுவி சேஷ நாமத்தன். 3

உருகிமெய் விசாரியை யுற்று நோக்கிநின்
றருகணைந் தியாரைநீ யவலிக் கின்றனை
பெருகுமித் துயருனக் குற்ற பெற்றியென்
கிருகலில் சிந்தையாய் செப்பு கென்றனன். 4

ஐயகேள் நாசதே சத்த னுங்கமர்
வெய்யரில் வெய்யன்யான் வெகுளித் தீவிழுந்
தொய்யென விவணெலா மொருங்க விந்தபின்
மெய்யுற வருநடுத் தீர்வை வேந்தனால். 5

ஆயிடைக் கருணைவேந் தாணை மீறிய
தீயரைத் தீச்சிறைப் படுத்தல் திண்ணமென்
றேயுமிச் சுருதிநூ லியம்பு கின்றதை
ஆயவித் துயர்க்கட லமிழ்ந்தி னேனரோ. 6

நன்றிகொன் றிறைவனை மறந்து நாடொறும்
புன்றொழில் புரிந்துவீண் பொழுது போக்கிய
வன்றலைப் புலையனான் மருவு தண்டனைக்
கின்றுநின் றிரங்குவ தய[illegible] தாய்கொலோ. 7

சாகவு மனமிலைத் தண்டனைக் கெதிர்
போகவுந் துணிவிலைப் புறத்து ளாரைப்போல்
ஏகவும் புகலிலை யீடு செய்யவோர்
பாகமும் பலமிலைப் பதைக்கின் றேனென்றான். 8



அஞ்சுவி சேஷநீ யறைந்த யாவையும்
வஞ்சமின் றுண்மையே மருவு [illegible]
எஞ்சுறு வேதனை யினை[illegible] கண்டுமேன்
அஞ்சுதி சா[illegible]மைதி கூறெனா. 9

ஜென்மநாட் டொடங்கியான் செய்த தீவினை
என்முது குளுக்குற விறுத்ததாற் புலைக்
கன்மிகள் குழுமுதீக் கடற்கி டங்கிடை
அம்மையி லமிழ்த்துமென் றஞ்சு கின்றனன். 10

பலகலை கற்றுணர் பரம யோகியிவ்
வுலகமன் னவரெமை யொறுத்தற் கஞ்சுதும்
நிலவுல கியாவையு நிறுத்த நீதிமன்
அலகறு தண்டனைக் கஞ்சிடேங் கொலோ. 11

இனையசிந் தனையென திதயத் தூன்றலால்
வனைபொலன் கழலினாய் வருந்து வேனென
அனையவை யறிந்தடுத் தவர்க்கு நன்மையே
நினைசுவி சேஷனு நிகழ்த்து வானரோ. 12

நன்றுநன் றுன்னிலை நாச தேசத்து.
நின்றுநின் றித்துணை தாழ்த்த னீதியோ
பொன்றிடர் வருமுனம் புகலி டம்பெறச்
சென்றிடா திவணுழல் சிந்தை யென்னென்றான். 13

உய்வழி யிதுவிதென் றுழறும் பல்வழி
பொய்வழி யவ்வழி போகுவே னலன்
தெய்வநா யகன்றிரு நகர்க்குச் செல்வழி
எவ்வழி யவ்வழி யின்னுந் தேர்கிலேன். 14

ஆதியான் றிருநக ரடுக்கும் ஜீவநற்
பாதைநீ யறிதியேற் பகர்தி யாலென
வேதியர் குரவனை வினவி னனவன்
ஓதுவல் கேட்டியென் றுரைத்தன் மேயினான். 15

குருதரிசனப் படலம் முற்றிற்று.

## பரமராஜ்யப் படலம்.

### திருநாட்டுச் சிறப்பு.

உன்னத பரலோ கத்தி லொருதனிச் செங்கோ லோச்சி
மன்னர சாட்சி செய்யு மகத்துவ கடவுள் வேந்தன்
பன்னரும் புனித நீதி பரமகா ருணியம் பூத்த
சன்னிதி மகிமைச் செல்வந் தழைப்பது திருநா டென்றும். 1

அருண்முகில் கிளம்பி யன்பி னூர்கலி யமுத மொண்டு
திருமலி தருநா ஷண்ய திவ்விய சிகரி மேபார்த்துப்
பொருவருங் கருணை மாரி பொழிந்தபுண் ணியமா நீத்தம்
ஒருமுக மாகி ஜீவ கங்கையா யுலாய தன்றே. 2

சேணுற நிவந்த மேருச் சிகரிநின் றிழிந்து மண்ணோர்
காணரும் புனித ஜீவ கற்பக மலனா யேந்தி
மாணுறு பரம ஞான மணியணிக் குவைவ ரன்றி
நீணிலஞ் செழிப்புற் றுய்ய நீத்தமாய்ப் பரந்த மாதோ. 3

முத்தலைச் சிகரி நின்று முளைத்தவிச் சீவ கங்கை
வித்தக விமல ஞான போனகம் விளைவித் தூட்டிப்
பித்தளை யுலகைத் தூய்மை பிறங்குபொன் னுலக மாக்கி
உத்தமந் திகழ்த்துஞ் சீர்சா லொழுக்குடைத் தின்று மென்றும். 4

ஒருநெறித் தாகித் தூய்தா யுள்ளுறத் தெளிந்து பாவத்
தருவன முறித்துச் சாடித் தருமச்செஞ் சாலி நீடப்
பெருவளம் படுத்து நித்ய பேரின்ப ஜலதி கூடும்
திருவுடைத் தாத லாலித் தீர்த்திகை சுருதி போலும். 5

தண்ணளி மருவி யான்ம தாரகத் துருவம் வாய்ந்து
விண்ணிழி புதுமை காட்டி விதிவரம் பொழுக்கம் பூண்டு
கண்ணகன் ஞால முய்யக் கனிந்துயி ரளித்துக் காத்துப்
புண்ணியன் கிருபை யேயாய்ப் பொலிந்தது ஜீவ வாரி. 6

மானிட ஜீவ தோட மலினத்தைக் கழுவித் தூய
போனக மாகித் தாகம் போக்குபா னமுமா யென்றும்
ஞானஜீ வனைவ ளர்த்து நற்கதிப் பயன்றந் துய்க்கும்
மாநுவேல் குருதி போலு மானத ஜீவ கங்கை. 7

வீற்றுவீற் றாகிச் சென்றை வகைநிலு வேறு பாட்டை
மாற்றிநன் மருத வைப்பா வளம்படுத் தறத்தை யோம்பி
ஏற்றமுந் தாழ்வு மின்றி யெங்குமோர் சமமா யீண்டும்
ஆற்றல்சால் கடவுள் வேந்த னாணையைப் பொருவும் வாரி.



அற்புத ஜீவ [illegible]
துற்பவித் தூழி யூழி யுலவிநின் றொடுங்கித் தோன்றும்
பற்பல பேத மாய பகிரண்ட கோடி யெல்லாம்
பொற்புற மிதப்ப வேயாம் புற்புத சாலம் போன்றே. 9

நிறைவளம் படுக்குந் தூய நித்திய ஜீவ கங்கை
துறைதொறும் பிரிந்து போந்து தொடுகுள மடுத்த டாகம்
குறைவற நிரப்பி யுண்மை குலவுநீண் மருத வைப்பின்
கறைதுடைத் திதய மென்னுங் கழனிபுக் கிளாந்த தன்றே. 10

நீர்வளங் கண்டு கோமா னிலவளம் படுக்கு மாக்கள்
ஏர்வளம் பெறத்தி ருத்தி யிறைவனை வழுத்தி யேத்திச்
சீர்வளந் தருநல் வித்துத் தெளித்துநீர் பாய்ச்சி நாளும்
பார்வளம் பெறச்செஞ் சாலிப் பயிர்வளம் படுப்பர் மன்னோ. 11

இருவகைப் பவத்தூ றோங்கி யிருண்டபே ரடவி முற்றும்
கருவறச் சுருதி யென்னுங் கட்கங்கொண் டெறிந்து போக்கித்
திருவளர் புனித நித்ய ஜீவநீர்க் கால்கொண் டுய்த்துப்
பொருவரு மருத வைப்பாப் புதுவல்பண் படுத்து வாரும். 12

ஏர்விசு வாச மாக வெருதவா வூக்க மாகச்
சேர்நுகங் கடப்பா டாகச் செறிவடஞ் சிந்தை யாகக்
கூர்நுதிக் கொழுவெம் பெம்மான் றிருமொழிக் கூற தாகப்
பாரற வுழுது செய்கா லாக்கிமெய்ப் பணிசெய் வாரும். 13

குளங்களை பேணி ஜீவ நீர்குறிக் கொண்டுய்ப் பாரும்
வளங்கெழு மருத வைப்பா வறுநிலந் திருத்து வாரும்
விளங்குவித் தொளிரக் கண்டு மேலுற வளர்க்கின் றாரும்
இளங்களை கட்டு நீர்கால் யாத்தினி தோம்பு வாரும். 14

பழநறை பருகிச் சிந்தை பரவச ராகிச் செய்ய
மழகளி றனைய மள்ளர் வரன்முறை சுருதி கூட்டிக்
கொழுநிழல் வைகிக் கோமான் குணங்குறி விதந்து பேசி
எழுமிடற் றிசையிற் பாடி யிதயநெக் குருகு வாரும். 15

மேவருந் திருநா டெங்கும் வித்தக வுழவர் வேலை
ஓவற விசுவா சத்தி னெண்கருப் பொதிந்து முற்றிக்
காவல னருளால் ஜீவ மணிக்கதிர் கனலி யீன்று
தாவில்பே ரின்ப போகம் விளைப்பது தருமச் சாலி. 16

எண்படு மிதய மென்னைச் [illegible]
பழுத் தூன்று சத்யப் பைங்கழைக் கரும்பு பல்கிக்
கண்படைத் தோங்கி யுய்த்த நறுஞ்சுவை கனிந்த பாகின்
விண்படு போகந் துய்ப்பார் வேதியர் குழுக்கண் மாதோ. 17

வீறுகொள் மதுரச் செந்தேன் விளைக்குமுந் திரிகை வாய்ந்த
தாறுகள் பிதிர்ந்து சிந்தித் தலைத்தலை பெருகி யோடுஞ்
சோல்புக் களைத லாலே தெளித்தசித் திரப்பூம் பண்ணை
நாறுகள் குலவி யோங்கி வளர்வுறு நலத்த நாளும். 18

புண்ணிய நதிதீ ரத்துப் பொருவரு மருத வைப்பில்
நண்ணிய பயிர்வ ருக்கந் தருக்குலம் பிறவு நல்கும்
எண்ணரும் பயனை யீட்டி யிறைவனைப் பாவித் துய்த்துக்
கண்ணகன் றிருநா டெங்குங் கடிவிழாக் கொள்ளு மன்றே. 19

ஜீவநீர்த் தடங்க டோறுஞ் செழும்புனல் குடைவோ ரீட்டம்
தாவருங் கழனி தோறுந் தருமச்செஞ் சாலி யீட்டம்
பூவலர் பொய்கை தோறும் புதுமதுத் திவலை யீட்டம்
மீவரு மெழிலி தோறும் வேந்தனோர் கருணை யீட்டம். 20

வேறு.

முத்தி நாட்டெழின் முயங்கக் காட்டலில்
நித்ய ஜீவநீர் நிலைய கன்றிடா
துத்த மக்குலத் தோதிமக் குழாம்
பத்தி செய்தவப் பள்ளி போலுமால். 21

மாக மீதுநேர் கருணை மாரிபெய்
மேகங் கண்டுகண் டுவந்து வித்தகத்
தோகை மாமயி லகவுஞ் சூழல்வாய்
நாக மாயுமே நாக மாயுமே. 22

ஆத பன்கதி ரலருங் காலையில்
மாதர் வாண்முக வாரி சங்களும்
சீத வாவியின் செய்ய பங்கயப்
போத லர்ந்திடும் போத லர்ந்திடும். 23

இன்ன லுற்றவர்க் கிரங்கி யாண்டுமெய்
நன்னர் வாசக நவிற்றி யாதரித்
துன்ன ருங்குணத் துதவி செய்திடும்
அந்த லாரெலா மந்த லார்களே. 24



மாரி சங்களை மாத வத்தரும்
நாரி சங்கமு நண்ணி யங்கிரு
பாரி சங்களும் படியுங் கான்முக
வாரி சங்குலாம் வாரி சங்கமே. 25

மரும லிந்தபூம் பொழிலின் மைந்தர்தாம்
திரும லிந்தமங் கையர்சி றாரொடும்
நிரும லாதிபன் பணிசெய் நித்திய
கருமஞ் சாலுமே கருமஞ் சாலுமே. 26

மூசு பைம்புயன் முயங்கு சோலைவாய்
ஆசி யம்பனி யலருந் தண்டலை
காசில் ஜீவபுஷ் கரிணி யாடுவார்
தேசு மல்கெழிற் றேகங் கூடுவார். 27

துன்று காவகச் சூழ லெங்கணும்
மன்ற லார்ந்ததண் மலர்ப்பொ தும்பரும்
தென்றல் வந்துவந் துலவுஞ் செவ்வியாற்
பொன்று வாரெலா மடைவர் புத்துயிர். 28

நாட ருந்திரு நாட்டு வைபவம்
ஊட றிந்தறிந் தும்ப ரின்னிசை
பாடு வார்முழு துணரம் பாலரோ
வாடு மானிடம் வகுப்ப தெங்ஙனம். 29

திருநகரச் சிறப்பு.

நித்தியமாய்ப் பூரணமாய் நின்மலமா யானந்த
நிலையமாகிச்
சத்தியஞா னந்தருமந் தயைசாந்தம் பரிசுத்தஞ்
சர்வசக்தி
இத்தகைய வனந்தகலி யாணகுணத் திறைமகிமை
யிலங்குந்தானம்
முத்திநக ரெனத்திகழ்த்தி முதியதிரு வருட்சுருதி
மொழியுமன்றே. 30

வாக்குமன மெட்டாத பரமசுகா னந்தபத
மகத்துவத்தின்
ஆக்கமெடுத் துரைப்பவரா ரறிபவரா ராருமில
ராயபோழ்துங்

காக்கைமனை பிறையென்று காட்டுதல்போ லருள்வேதங்
காட்டுங்கூற்றை
மீக்கிளரு மாசையினு லொருசேரத் திரட்டியிங்கு
விளம்புகின்றும். 31

முத்திநகர் பரமபதந் திருநாடு திருநகர
மோக்ஷம்வீடு
நித்தியவா னந்தபத நித்தியஜீ வக்கழக
நிகிலமூலம்
உத்தமமங் களஸ்தான முன்னதமண் டலம்பரமா
காயத்துச்சி
சத்யமன்றம் புனிதமன்றம் தேவால யம்பரம
சந்நிதானம். 32

உச்சிதபட் டணம்பதவி யூர்த்தகதி பொன்னகர
மும்பர்நாடு
சச்சிதா னந்தபுரி தருமபுரி யடைக்கலபட்
டணஞ்சாம்ப்ராஜ்யம்
முச்சிகரி திகழ்சீயோன் முதுகுன்ற மும்முரச
முழங்குமுன்றில்
அச்சுதவேந் தாசிருக்கை திருக்குமரா லயம்பரிசுத்
தாவிமன்றம். 33

புண்ணியமா நகரினைய பொற்புறமூந் திருநாமம்
பொருந்திநிற்கும்
நண்ணரிய திருநகர்க்கு நாற்றிசையும் புடைவளைந்து
மேலுங்கீழும்
அண்ணலரா சாணைவழி யநாதிநிய மனமாக
வகண்டமாய
கண்ணகன்ற பெருவெளியே கடியரணுச் சூழ்ந்ததுதி
காந்தங்காறும். 34

கதிகூட்டி யெமைப்புரப்பான் காதலனை யுவந்தளித்த
கருணைவள்ளல்
அதிபாரி சுத்தமெனு மழற்பிழம்பு பரந்துதிரண்
டவியாதோங்கி
எதிரேறு பகைதுமிய வெரிவீசி நீருக்கி
யிலங்குஜோதிக்
கதிரேற் விளங்கிநிற்கு மகழிசூழ் தழலரணங்
கடிநகர்க்கே. 35



ஓராழி தனையுருட்டி யுலகமெலாங் காத்தளிக்கு
மும்பர்நாட்டுச்
சீராழிப் படையாசன் றீர்க்காலோ சனையறிவே
செறிந்துமல்கும்
போராழிக் கிடங்காகி மதில்வளைந்து புறங்கிடக்கும்
பெற்றியோரில்
காராழி யெனத்திரண்டு வரும்பகைக்குக் கதியதோ
கதிமற்றன்றே. 36

சீராற்றுந் திருநகர்க்குச் சிறப்பாற்று மரணாகித்
திறலுமாற்றிக்
கூராற்றும் படைக்கலயந் திரப்பொறிகள் பலகுழுமிக்
கொற்றமுற்றி
ஏராற்று மகிலாண்ட கோடியெலாந் தூசியென
வியங்கலாற்றும்
போராற்ற லுடையபிரான் பெருந்தகைமை யெனப்பிறங்கும்
பெருந்துருக்கம். 37

திமிரமற வருமிரவி யொளிமழுங்கச் சுடரெறிக்குஞ்
செம்பொனிஞ்சி
சமரகித திரியேக சருவலோ காதிபதி
சருவசக்தி
அமரருல கமுமறியா ததன்மகிமை பெருமைகளை
யறிவமென்னில்
தமரநீர்க் கடலாழ நரிவால்கொண் டளந்தறியச்
சமைவதொக்கும். 38

புரக்கவருந் திருக்கருணைப் புத்தமுத கடமாம்பொன்
னகர்க்குநீதி
இரக்கசம ரசமாய திருக்கடைக்கோ புரவாயி
லெழில்கொண்டோங்கி
வரக்குருதிக் கறைதோய்ந்த வொருசிலுவை மணித்துவச
மலர்க்கைகாட்டி
நாக்குலத்தீர் வம்மினென விளிப்பதுபோன் றலங்குவன
நாலுதிக்கும். 39

சூரியர்க ளொருகோடி தொக்குதித்த பரிசென்னச்
சுடருஞ்செம்பொன்
எரியங்கு புனிததிரு மாளிகைமற் றிதுவோ
க்ஷணியமுன்றில்

சீரியங்கு பரலோகத் திளவரசன் வீற்றிருக்குந்
தெய்வவீடு
தேரிவிதே நமர்குழுமி நித்தியஜீ வானந்தந்
தேக்குமன்றம். 40

மருள்பழுத்த நரஜென்ம மாயவிடா யறத்தொலைத்து
மறுமையாக்கி
அருள்பழுத்த குமரேசன் றிருமுகமண் டலச்சேவை
யமுதையூட்டித்
தெருள்பழுத்துத் திகழ்நித்ய ஜீவமணி மௌலியைநஞ்
சென்னிசூட்டிப்
பொருள்பழுத்த பெருஞ்செல்வத் தெமையிருத்தி வைக்குமிந்தப்
புனிதவீடு. 41

எண்ணரிய பரலோகத் திளவரசன் பெருஞ்சீர்த்தி
யீட்டமென்கோ
தண்ணளியன் பருளிரக்கந் தயையாதிக் குறையுளென்கோ
தரணிக்கீட்டும்
புண்ணியமாம் ரக்ஷணியம் படிவமெடுத் துயர்ந்தோங்கு
புதுமைத்தென்கோ
பண்ணவர்வாழ்த் தொலிமடுத்து நித்தியபே ரின்பநிறை
பரமவீட்டை. 42

## வேறு.

வானர மியந்திகழ் மதில்வ லைத்தவக்
கோனக ரெங்கணுங் குலவு ஜோதிய
பானுவின் குழுக்களைப் பத்தி செய்தென
மேனிலை மாளிகை விதம்பல் கோடியே. 43

மின்னையும் வெயிலையும் விரவி மேதகு
பொன்னினு மணியினும் புனைந்த வோவெனப்
பன்னிற மாடங்கள் பந்தி பந்தியா
உன்னதத் திமைப்பன வுலப்பில் கோடியே. 44

வயின்றொறுஞ் சந்நிதி மகிமை வாய்ந்தெழில்
குயின்றுபன் மணிக்குலக் குவையி னுக்கிய
வியன்றட மாளிகைத் தலங்கள் விட்புலம்
பயின்றொளி கிளைப்பன பற்பல் கோடியே. 45



புண்ணிய நவமணி பொருத்திப் பொற்புறு
தண்ணளிக் குருதியன் பளைந்த சாந்தினே
மண்ணுல கருக்கென வகுத்த ரக்ஷணை
கண்ணிய மாடங்கள் கவினுங் கோடியே. 46

கோனருள் பணிகுறிக் கொண்டு ஞற்றிவாழ்
ஊனமில் லாவிகட் குரிமை பூண்டுயர்
வானுல கெழென வகுத்துக் காட்டிய
மேனிலைக் கோபுரம் விவித கோடியே. 47

சொல்லரு முத்திமா நகருஞ் சூழ்ந்துள
எல்லையும் வான்சுட ரியங்கு கிற்கில
மல்லல்கூர் தம்பிரான் மகிமை யின்சுடர்
புல்லிநின் றவிரொளிப் பிரபை போர்க்குமால். 48

ஜீவமா ளிகைத்திரு முன்றிற் றேங்கிய
ஜீவநீர் நிலைபெருக் கெடுத்துத் திவ்விய
ஜீவமா நகரத்தைச் செழிப்பித் தூடுநீஇ
ஜீவகோ டிகளுய ஜெகத்திற் பல்குமால். 49

ஜீவபுஷ் கரிணியின் றீரத் தோங்கிய
ஜீவகற் பகமெனுந் தெய்வ மாத்தரு
ஜீவநா யகனருள் பழுத்த செவ்வியில்
ஜீவமாக் கனித்திரள் செறிந்து மல்குமே. 50

மானத வாவியிற் படிந்து மாட்சிசால்
ஆனிக கருமங்க ளாற்றி யாண்டகை
தூநறு மலர்ச்சரண் டொழுது தைவிக
போனக நுகருவர் புலவர் தாங்குழீஇ. 51

ஆண்டகை யருள்வழி யாவி யின்கணம்
வேண்டுரு வெடுப்பர்செய் வினைவ சத்தராய்க்
காண்டகு முலகிடைக் கரந்து வைகுவர்
சேண்டலத் தியங்குவர் செவ்விக் கேற்பவே. 52

அணிகிளர் திருநகர்க் கரச னாணையிற்
பணிமுறை புரிகுவர் பணிசெய் யாவிகள்
தணிவில்பே ருவகையைச் சாற்று மங்கவர்
திணிசுட ரிரவியிற் றிகழும் வாண்முகம். 53

மும்முர சொலியருண் மழைமு ழக்கொலி
மம்மரில் வான்கணம் வழுத்து பேரொலி
செம்மல்சீர் புனைந்துரை திவலி யாழொலி
கைம்மிகுத் திசைபடுங் ககன மெங்கணும். 54

நன்மைசால் திருநகர் நந்த னத்தலர்
தன்மமுங் கருணையுந் தயையன் பாதிசற்
கன்மமு நறுங்கடி கமழ்ந்து லப்புறுப்
பொன்மலர்க் குவைகளாப் பொதுளு மெங்கணும். 55

சிறையுடைத் தூதர்தஞ் சேனை யின்குழாம்
முறைமுறை யகிலத்து முடுகி முத்திநாட்
டிறைதிரு வுளக்குறிப் பினிதி னுய்த்தது
குறைவற முடித்துமீண் டடுப்பர் கோநகர். 56

தேவவுத் தரங்கொடு திகந்தத் தேகுவர்
மூவுல கங்களு மிமைப்பின் முந்துவர்
தாவிவிண் படர்குவர் சமுகத் தெய்துவர்
வேவறி சதுரராம் விபுத வொற்றரே. 57

கல்விமு வுலகையுங் கழங்கென் றூட்டவும்
ஒல்லைவான் சுடர்களை யூதி யோட்டவும்
வல்லவான் சேனைகள் வாம்பில் கோடிகள்
தொல்லையங் ககனமா ளிகைதொக் குள்ளன. 58

மேலைநா ளிளவர சுயர்த்த வெல்கொடிக்
கோலினின் றுலகர்க்குக் குருதிச் சான்றுரை
ஞாலமீத் திகழ்த்திய நலங்கொ ளும்ஜெய
சீலசங் கத்தொனி திகந்த முட்டுமே. 59

வேறு.

துன்பம் யாதுமின் றுகத் தூய்தவர்
பொன்பொ லிந்தவப் புரவ லன்கழற்
கன்பு செய்துசெய் தழிவி லாதபே
ரின்ப மெய்திவாழ்ந் திருப்ப ரென்றுமே. 60

பகலி ராவெனும் பகலி லாதவப்
புகரில் வானநாட் டரசின் பொற்புறு
மகிமை யொண்கதிர் வனையு மாடையா
நகர வாணர்க்கு நலம்ப யக்குமே. 61



முத்தி மாநகர் முழுதுந் தம்பிரான்
சித்தம் யாதது செய்து நிற்பதே
நித்தி யானந்த நிகரில் வாழ்வெனுப்
பத்தி செய்யுமாற் பரம சிந்தையாய். 62

அரசர் தம்பிரா னம்பொற் சேவடி
வாச ரோருகம் வழுத்தி யேத்திமும்
முரச றுவிழா வணிகொண் முன்றில்வாய்
விரசு வாரன வரதம் விண்ணவர். 63

வேறு.

அற்புத ஜீவ கங்கை யாடுவ ரமர ராவார்
பொற்புறு ராஜ சேவை பொருந்துவர் புனித ராவார்
கற்பக நிழலிற் றங்கிக் களிப்பர்வான் கணங்க ளாவார்
தற்பரன் றொழும்பு செய்வர் தகைபெறு முத்த ராவார். 64

இறைபர லோக ராஜ்யத் தெழினல மெதிர்வோர்க் கென்றும்
பொறிபல வனந்த மாகப் புலனெலாம் புதுமைத் தாக
அறிதொறும் பரமா னந்த வதிசயக் காட்சி யெய்தி
முறைமுறை துதித்துப் போற்றிப் புகழுவர் முனைவன் சீர்த்தி. 65

அத்தனா ரருளி னாக்க மரசிளங் குமரன் காட்சி
வித்தகப் புனித வாவி விழுத்தகு சுமேதந் தூய
முத்திவீட் டறவோர் நட்பு முறைவழாத் தோத்ர கீதம்
இத்தகு பேறே யன்றோ வீறில்பே ரின்ப செல்வம். 66

பரமராஜ்யப்படலம் முற்றிற்று.

## அரசியற்படலம்.

பன்னற்கரி தாயப வித்திர ஞான செல்வம்
மன்னிப்பொலி யுந்திரு மாநகர் மன்னர் மன்னன்
இன்னற்படு பாதல நின்றெடுத் தெம்மை மீட்பான்
நன்னர்க்கும ரேசனை நல்குமெய்ஞ் ஞான மூர்த்தி. 1

இல்லாமையி லேவெளி வான்முகட் டெண்ணி றந்த
பல்லாயிர கோடிய வாம்பகி ரண்ட கோளம்
எல்லாம்படைத் தொண்விதி காட்டியி யங்கு வித்த
சொல்லாற்றன்மி கும்பர லோகது ரந்த ரேசன். 2

மங்காதப ரஞ்சுடர் வாக்குரு வாய மைந்தன்
பொங்கோதவைப் பும்புரை யற்றகல் வானு மெங்கும்
செங்கோல்பிடித் தத்தனி யாழிசெ லுத்த நாளும்
தங்காவலை யுய்த்தர சாட்சிசெய் சார்வ பௌமன். 3

ஆனாதந லந்திகழ் தைவிக வாக்கு மேசன்
சேனாபதி யாகிய நப்பகை செற்று நெஞ்சில்
மேனாடு ரக்ஷணை வித்திவி ளைப்ப நாளும்
வானாடுபோற் றத்திறை கொள்ளும கேச வள்ளல். 4

அந்தக்கர ணங்களும் வாக்கு மகண்ட லோகத்
தெந்தச்செய லும்பிச காதிய லாத போதே
முந்துற்றறிந் துமுறை செய்யும்வ ரம்பில் ஞான
விந்தைப்பெரு மான்விபு தாதியன் வேந்தர் வேந்தன். 5

புனிதந்திரு மேனிமு கந்திகழ் புண்ணி யங்கண்
தனிதந்தரு போரு ளம்புயஞ் சர்வ சக்தி
நனிதுற்றுமெய்ஞ் ஞானமு யிர்ப்புநீ தாச னத்தில்
இனிதுற்றுல காட்சிசெய் ராஜவி ராஜ னுக்கே. 6

வல்லார்புக ழும்புகழ்ச் சிக்கும நீதன் வானத்
தெல்லார்துதி தோத்திர வெல்லையி கந்து நின்ற
நல்லான்கணிப் பில்கரு ணைக்கடல் தோற்ற நாசம்
இல்லாதவ நாதிசு யம்புல கெங்கு முள்ளான். 7

பெருமைத்திட ரேறிய பிச்சுறு பேய்க்க ணத்தை
நிருமித்தசி றைத்தலை யுய்த்தக னீணி லத்தில்
இருமைக்குந லந்தரு பிரக்ஷணை யீட்டி வைத்த
கருமத்துணை யாயத யோர்ச்சித சக்க ரேசன். 8

வென்றூழிந டத்திய றம்படு விண்ணு மண்ணும்
ஒன்றாகவி ரிந்தக விந்துயர்ந் தோங்கி யும்பர்
நின்றாதர முற்றிய தண்ணளி நீடு மொற்றைக்
குன்றாதகொற் றக்குடை வெண்மதி மேனி ழுற்ற. 9

திருகார்வினை சிந்திமெய்ந் நூன்முறை செய்யு நீதி
இருகூர்திகழ் பட்டய மின்விசித் திட்ட தென்ன
ஒருபாற்சுடர் விட்டொளி ரக்கிரு பாச னத்தின்
இருபாலருள் வெள்ளமெ ழுந்தல கெங்கு மல்க. 10



பொதிரேறவி சும்புநி றைந்தபுத் தேளி ராவார்
அதிபாரிசுத் தபரி சுத்தரென் றார்ப்ப ரிக்க
துதிதோத்திர கீதம லிந்திசை துன்னி யோங்கப்
பதிதோறண வும்மறை வாணர்பல் லாண்டு கூற. 11

எங்குந்தொகு பூதச ராசரத் தீட்ட மாதி
சங்கற்பவி கற்பமி லாதியல் சார்ந்து நின்று
துங்கப்பிர மாணவ ரம்பகச் சூழல் புக்குக்
கங்குற்பொழு துந்தவ றாநடை காட்டி யேத்த. 12

முரசங்கறங் கச்சுர மண்டல முந்து கீதப்
பிரசம்பொழி யத்திரு முன்றரு மம்பி றங்கப்
பரசங்கமல் கிப்பணி செய்துப ராவி நிற்ப
அருகாசனத் திற்கும ரேசன மர்ந்தி ருப்ப. 13

கண்ணோட்டமல் குகவி ஞர்கரு ணால யத்தின்
உண்ணாட்டுநீ தியொடு போரு ளொத்து லாவ
மண்ணாட்டவர் வாழ்த்தொலி யஞ்செவி வாய்ம டுப்ப
விண்ணாட்டர சன்றிருச் சந்நிதி வீறு மென்றும். 14

அரசியற்படலம் முற்றிற்று.

## சிருஷ்டிப்படலம்.

வாக்கினுக் கதீத மான மகிமையின் வனப்பு வாய்ந்த
மேக்குயர் பாலோ கத்திவ் வித்தக வாசன் றம்மோர்
நோக்கும ரனுக்கென் றிந்தக் குவலயம் புதுக்கிச் செங்கோல்
ஆக்குவான் சித்தஞ் செய்த வநாதிநின் ணயமொன் றுண்டால். 1

கருத்துறு கரும முற்றக் கருதியோர் வாக்கி னாலே
உருத்திகழ் குவல யத்தை யோராறு திவசத் துள்ளே
திருத்தித்தங் குடைக்கீ ழாக்கித் தெய்விக குமாரற் கீந்தார்
வருத்தமிங் கெவனோ வெல்லாம் வல்லசித் தருக்கு மாதோ. 2

மலைகடல் ககன நாடு மதிகதிர் புனல்யா றோடை
நிலைமடு வாவி சோலை நிலவொளி மழைபல் பண்டம்
தொலைவிலாப் பயிர்வ ருக்கந் தொக்கபல் வளங்க ளெல்லாங்
கலைமதி மாந்தர்க் கென்றே கையளித் தனர்நங் கர்த்தன். 3

பகுத்துணர் வறிவு ஞானம் பரிசுத்த மகத்துப் பாக்யம்
உகுக்கரு மனச்சான் றின்ன வுவந்தினி தளித்து நஞ்சொற்
செகுத்திடா திருமி னென்று ஜீவவாக் கருளித் தேவ
மகத்துவ வாசன வைத்தார் மாந்தரைப் புதிய வைப்பில். 4

முன்னவ னாதா மென்ற முதன்மனு மகனை நோக்கி
இந்நிலத் துரிமை யெல்லா மீந்தன மெங்கோ லின்கீழ்
மன்னவ னாகி நீயே மனுமுறை வழுவா வண்ணம்
நன்னராண் டிருத்தி யுள்ள நலமெலாந் துய்த்தீண் டென்றார். 5

உன்னத வரசன் சொற்ற வுத்தரஞ் சிரமேற் கொண்டு
மன்னவன் மிருத்தி கேய னத்தினி யெனும்பூ மாதைத்
தன்னொரு மனைவி யாக்கித் தழுவிவீற் றிருந்தா னன்றே
பன்னரும் ஜீவ வர்க்கம் பணிபுரிந் தேத்த மன்னோ. 6

சேத்திரம் புனித மாகச் சிந்தையும் வாக்குந் தேவ
தோத்திர மாகச் செய்கை சுகிர்தமே யாகத் தூய
பாத்திர மாகத் தேகம் படுபயன் றமதே யாகக்
காத்தொறு முலவி யுண்டு களித்துநாட் கழிப்பர் மாதோ. 7

ஒழுக்கமே கலன்க ளாக வுடைபரி சுத்த மாக
இழுக்கறு கரும மேனிக் கிடுநறுஞ் சாந்த மாகப்
பழுக்குமன் பத்தி யன்ன பானமாப் பகல்க ளெல்லாம்
வழுக்கறு மாபிற் போக்கி மாதவம் புரிவர் நாளும். 8

புத்திராஜ் ஜியத்தி னாகி பூருவ குடிக ளாய
உத்தம ராசன் சித்த முவந்தினி தடங்கி நாளும்
மித்திர ராகித் தூய விதிவிலக் கோம்பிப் பிள்ளைப்
பத்தியாய் வழிபா டாற்றிப் பவித்திர நெறியி னிற்பார். 9

சரமெலாம் விகற்பொன் றின்றித் தத்தமி லுறவு கொண்டு
நரமனோ கரமாய்க் கிட்டி நன்குகுற் றேவல் செய்யும்
தாமுறு புற்பூண் டாதி தருக்குலம் பயன்றந் தோங்கும்
பரவுல கிதுவென் றுள்ளப் பாரெலாம் புனித மல்கும். 10

பாபமே யில்லை பாவ பயங்கர மில்லை தேவ
சாபமு மில்லை சாவுஞ் சஞ்சலத் தொடர்பு மில்லை
கோபமும் பகையு மில்லை குணதோஷ மில்லை மிக்க
ஆவலு மில்லை பூரு வாச்சிர மத்தார்க் கம்மா. 11



அரசனைச் சிந்தை யுள்ளி யநுதினங் காலை மாலை
வரசரோ ருகப்பொற் பாதம் வழுத்துவர் வணங்கி யேத்தித்
திரைசெறி கடல்சூழ் வைப்பின் சீர்மைகண் டதிச யித்து
விரசுவர் விண்ணோர் தம்பால் வித்தகம் பயில்வர் மாந்தர். 12

பூதலப் பொருள்க ளெல்லாம் பொதுவன்றிச் சொந்த மில்லை
ஆதலிற் கொள்வா ரில்லர் கொடுப்பவ ராரு மில்லர்
போதர நிறைவே யன்றிப் புகலவோர் குறையு மில்லை
ஊதிய நயநஷ் டங்க ளொருவர்க்கு மொன்று மில்லை. 13

பிணிமூப்புச் சாக்கா டென்னப் பேச்சினு மறியார் தம்மைத்
தணிவரும் வருத்தந் துன்பஞ் சஞ்சலித் தழுபுன் கண்ணீர்
புணர்வதோ வென்று மின்றாய்ப் பொறிபுலன் புனித மாமெய்
உணர்வொடு பத்தி செய்வா ரும்பரும் வியக்க மாதோ. 14

அச்சுதா னந்த ராகி யகிலலோ கமும்பு ரக்கும்
சச்சிதா னந்த வேந்தன் றமைக்கிட்டித் தமைக்கேட் பிக்கும்
உச்சித மதுர வாக்கைச் செவிக்கமு தாக வுண்டு
நிச்சலும் பரவிப் போந்து நிலவுவர் பணிமேற் கொண்டு. 15

பைங்கழை நிறுவி மேலாய்ப் படர்தருச் சினைபொ ருத்தி
துங்கமட் சுவரா யாக்கித் துணர்த்தபூங் கொடியால் வேய்ந்து
பொங்கரிற் புதுமை யாகப் புனைந்தசித் திரப்பூ மன்றில்
அங்கண்வா னகங்கொண் டாட வறங்குடி புகுத்தி வாழ்வார். 16

வருந்திமெய் சலியார் வேலை வரன்முறை செய்து செய்து
திருந்துவர் சுனைகான் யாறு சிந்துநீர் வாவி யாடி
அருந்துவர் கந்த மூல பலங்களை யமரர் நாட்டின்
விருந்தெதிர் கொண்டு போற்றிப் பூசனை விருப்பிற் செய்வார். 17

கண்கவர் வனப்பி னாய காட்சிகண் டதிச யிப்பர்
பண்கவர் மிதுன கீதப் பாட்டொலி செவிம டுப்பர்
விண்கவ ருலகைத் தந்த விந்தையை வியந்து பேசி
எண்கவ ரரசைப் போற்றி யிறைஞ்சிவாழ்த் தெடுப்பர் மன்னோ. 18

மருமலி துணர்ப்பூஞ் சோலை மாநிலக் கிழவர் தம்மைப்
பருவர லணுகு றாமே பாலிக்குங் கருணைத் தாய்போல்
கருவிழிக் கிமைபோ லன்பிற் கங்குலும் பகலுங் காத்துத்
திருவருட் கடவுள் வேந்தன் ஜெகதலம் புரக்குங் காலை. 19

சிருஷ்டிப்படலம் முற்றிற்று.

## இராஜ துரோகப்படலம்.

நித்திய ராஜ ரீக நிலவுவா னகத்தி லென்றும்
பத்தியாய்ப் பணிசெய் துற்ற பண்ணவர் குழாத்து ணின்றும்
சத்துரு வாகிக் கீழே தள்ளுண்டு கிடந்த பேயால்
மித்திர பேத மென்னும் வினையிடை முளைத்த தந்தோ. 1

விள்ளரு மரச னீதி விலக்கலால் மலபா தாலத்
தள்ளுண்டு கிடந்த பேயி னதிபதி யழிம்ப னென்னுங்
கள்ளனுள் ளழன்று சீறிக் காசினி ககன வட்டத்
துள்ளுறு மாபை யோர்ந்தங் குசாவின னுருவ மாறி. 2

கண்டன னென்ப மன்னோ கருணையங் கடல்வ ளாகத்
தொண்டிறல் படைத்த கோமா னொருதனித் திகிரி யுய்த்த
மண்டலப் பரப்பைச் சூழ்ந்த வாரிதிப் பெருக்கை வார்ந்த
தண்டலைப் பொழிலைப் பாயுந் தடநதி வளத்தை யெல்லாம். 3

இடந்தொறுஞ் சென்று நோக்கி யிப்பெரும் போகந் துய்ப்பான்
மடங்கலே றனையார் தம்மை வஞ்சத்தா லடர்த்திவ் வையம்
அடங்கலு மடிப்ப டுத்தி யாசியல் புரிவ லென்னு
விடங்கிள ராவிற் புக்கான் மேதையா ரிருந்த சூழல். 4

பேயகம் புகுந்த போதே பிரபஞ்ச மென்னு நாமம்
ஆயது சமயந் தேடி யரிவையை மதிம ருட்டி
நாயகன் றனையு மந்த நாரியைக் கொண்டே மாற்றிச்
சேயுய ரிறைவ னாணை செகுக்கவுஞ் செய்தான் பாவி. 5

தன்னையே கெடுத்தான் முன்னந் தற்பெரு மையினா லந்தோ
பின்னையும் பொறாமை யாலே பிறரையுங் கெடுத்தான் வாளா
மன்னுயிர்த் தொகுதி கும்பி மலக்கிடங் களைய வைத்தான்
என்னையீ தென்னை யென்கே னிருநிலத் திறுத்த கேட்டை. 6

தன்னொரு மகவைத் தந்த தற்பர னன்பு வாழி
பொன்னுல கிழிந்து வந்த புண்ணியம் வாழி வாழி
மன்னுயிர் புரக்க வந்த மனுமகன் சரணம் வாழி
என்னையிந் நிலைபா லிக்கு மெம்பிரான் கிருபை வாழி. 7

கற்பனை கடந்த போதே கற்பனை கடந்து நின்ற
தற்பர னீதி பொங்கித் தழலெழச் சினவி நீட
அற்புத கருணை பொங்கி யாரழ லவிக்க நாடப்
பொற்புறு குமர னோர்ந்து நடுவராய்ப் புகல லுற்றார். 8



மற்றிம்மா னிடங்க ளெந்தாய் வஞ்சக வலகை யேய்த்த
சொற்றலை நின்று ராஜ துரோகியா யினரவ் வெல்லாக்
குற்றமுந் தண்டம் யாவுங் குறிக்கொண்டுத் தரிப்பல் யானே
நற்றச விதிகைக் கொண்டிங் கீட்டுவல் நலங்கொ ணீதி. 9

நின்னைய மிதனை யோர்ந்து நிறையபா தலத்துக் கேகும்
மன்னுல கனைமன் னித்து ரக்ஷணை வழங்கிக் காத்துத்
தன்னளி புரிக யானே தராதலத் திழிந்தங் கீட்டும்
புண்ணிய பலத்தா லீதென் பொருத்தனை யாகு மைய. 10

குருதியைக் கொடுத்து ஜீவ கோடியை மீட்ப லென்ன
ஒருதிருக் குமா னன்பி னுரைதிருச் செவியிற் சாரக்
கருதருங் கடவுள் வேந்தன் கருணையாற் கருணை மைந்தன்
திருவுள மாக வென்று செப்பிமற் றிதனைச் செய்தார். 11

வானகத் தரசன் றம்போல் வையகத் தரசு செய்வான்
தானென வுதித்த மைந்தன் றனைத்தனி மௌலிசூட்டி
ஞானமுத் திரையு நல்கி நனிதவ வுயர்த்தி வைத்தார்
மானிடம் புரந்து பேயின் வன்றலை சிதைக்க வென்றே. 12

சற்பனைப் பேச்சை நம்பிச் சதிவழி புகுந்து மக்காள்
கற்பிள வொத்தீ ரந்தோ கடுகிய மாண வாற்றின்
வற்புறு திரையின் மூழ்கி மாண்டொ லழிவீ ரென்றார்
தற்பத மிழந்த மாந்தர் தலையிழி சிகையே யன்றோ. 13

சாமித்து ரோகஞ் செய்யத் தகுங்கரு விதனை மண்ணில்
சேமித்து நம்மோர் மைந்தன் றிருவடித் தொழும்பு பட்டு
நேமித்த நெறியைப் பற்றி நித்திய ஜீவ நாட்டைக்
காமித்து வம்மின் றூழ்க்கிற் கைவரு மோச நாசம். 14

மித்திர நலத்தை வீசி விதிவிலக் கெறிந் தெமக்குச்
சத்துரு வாகி னீர்நுந் தரிப்பினி நாச தேசம்
நித்திய ஜீவ நாட்டி னெறிகடைப் பிடியீ ராயில்
அத்தலங் கோபத் தீயி லவிவது சரத மென்னு. 15

சாதனம் விளங்கத் தீட்டித் தரணியிற் காலந் தோறும்
மேதகை யவரைக் கொண்டு விளம்பரப் படுத்தச் செய்தார்
நீதியா யகண்டா கார நிறைந்தபே ரருளா யென்றும்
பேதியா நிருவி காரப் பெருந்தகை பரம ராஜன். 16

இராஜ துரோகப்படலம் முற்றிற்று.

## பூர்வ பாதைப்படலம்.

புனித சேத்திரத் தமர்ந்துள பூருவ குடிகள்
கனிதந் தாக்கிய தீவினை யாமெனக் கலித்து
மனித மாட்சியை வரைந்தல கைக்குண மருவி
நனிதி ரிந்தனர் விலங்கென நாசதே சத்தில். 1

ஐந்தெ னும்பொறி புலனந்தக் கரணமாத் துயஞ்சேர்ந்
திந்த மானிடப் பிறப்புமெந் நலங்களு மியைந்தும்
பந்த மாங்கனி யாலந்த நலமெலாம் பறிபோய்த்
தொந்த மாம்பெருங் கேட்டொடு மரணமுஞ் சூழ்ந்த. 2

உறைக லந்துதீஞ் சுவையபா லொருங்கறக் கெடல்போல்
முறையி னீங்கிய கனிச்சுவை யுலகெலா முயங்கிக்
கறையி னுக்கிவெம் மரணத்தின் கரையறு துன்பச்
சிறையி னுய்த்தது ஜென்மசஞ் சிதத்தொடு செறிந்து. 3

பாவ காரியர் திசைதொறுங் குழுமினர் பரம்பி
ஈவி ரக்கமி லிராக்ஷத ரெனப்பெய ரெடுத்துத்
தீவி னைக்குநட் பாளராய்ச் செருமினர்க் குள்ளுந்
தேவ புத்திர ராயினர் சிலரருட் செயலால். 4

சேற்றிற் றாமரை முளைத்தெனச் சிப்பியி னின்று
தோற்று வெண்டர ளம்மெனத் தொடுநிலக் கரியில்
ஆற்றல் சாலொளி வைரம்வந் தெனவுவ ரளற்றில்
ஊற்றின் னீர்சுரந் தெனவவட் டோன்றின ராவோர். 5

மூன்றொன் றாகிய முதலர சாட்சியின் முறையை
ஆன்ற வுண்மையைத் தருமத்தை யவனிக்கு விளக்கிச்
சான்று ரைத்துவா னகர்வழி சமைத்திட ஜகத்தில்
தோன்றிற் றுலொரு திருச்சபை துலங்குவெண் பிறைபோல். 6

ஆலம் வித்தினி லங்குரித் தறுகில்வே ரூன்றிக்
கோலி யெங்கணுந் தண்ணிழல் கொளுவிவிண் குலவிச்
சால வெவ்விடாய் தணித்துமேன் மேலுறத் தழைத்து
வேலை ஞாலத்தைப் போர்த்தது திருச்சபை விருக்கம். 7

இருள றுத்தொளி பரப்பியுள் ளகழ்புற மெங்கும்
பொருள்வி ளக்கிமோ சம்புகா வகைபுறங் காத்து
மருள கற்றிநூல் வழிதெரித் தென்றும்வா டாது
தெருள ளித்தொளி கிளைத்தது திருச்சபைத் தீபம். 8



சத்தி யந்திக ழித்தரு திருச்சபைத் தலைவர்
நித்தி யானந்த ராஜ்ஜிய நிருமல வரசன்
புத்தி ரோத்தம புண்ணியர் புநருத் தத்து
மத்தி யஸ்தராய் நடுப்புரி மானுவே லாமால். 9

பாவ மல்கிய நாசதே சத்துவெம் பரப்பில்
ஜீவ ரக்ஷணை விரும்பியோர் திவ்விய நகர்க்குப்
போவ தாகிய பூருவ பாதையைப் புனையத்
தேவ வுத்தரம் பெற்றனர் திருச்சபைக் குரவர். 10

மேலை நாண்முதல் மேசியா திருவவ தாரக்
கால மட்டுமங் கங்குதோன் றியநமர் கருதிச்
சால நேர்பிடித் திறைதிரு வுளப்படி சமைத்து
வேலை ஞாலத்து விளக்கிய பாதையை விரிக்கில். 11

ஒற்றை யேவழி யோடித் தடமுடைத் தும்பர்க்
கொற்ற வன்றிரு நகர்செலக் குறித்தது கோணல்
அற்ற நேர்வழி யயலடி பிசகுமி னந்தோ
துற்று காரிருட் சூழலுய்த் திடுமிது துணிபே. 12

திருத்த குங்கடை வாயிலின் செவ்விசேர் முகப்பில்
விருத்த சேதனக் குறியுடைத் தாங்கதை விடுக்கில்
கருத்தன் மாளிகைத் தலந்தொறும் பலிகளுங் கணிப்பில்
பொருத்த னைப்பொருட் குவைகளும் வயின்றொறும் பொலிவ. 13

ஆய வவ்வழிப் போக்கருக் குரியவா சாரம்
மேய பல்வகைச் சடங்குகள் விரதங்கள் முதலா
ஏய வன்பெருஞ் சுமைசுமத் திடுவதங் கிளைக்கிற்
காயுந் தண்டனைப் படுத்துவ தின்றுகண் ணோட்டம். 14

ஐய னெங்கிறிஸ் தியேசுவின் முன்னடை யாளச்
செய்ய சோரியும் பற்பல பொருள்களுந் தெருளக்
கைபு னைந்தமை யிடைக்கிடை கவினவக் காட்சி
துய்ய நூல்வழிப் போக்கருக் ககமகிழ் தொகுக்கும். 15

இரவி லக்கினித் தூணமுண் டெற்சுடு வெயிற்குப்
பரவி நின்றுமே கந்தரு நிழலுண்டு பசிக்கில்
தரமன் னாவுண்டு தாகிக்கி னீர்தரத் தக்க
உர்வு கோலுண்டு நம்பிரான் றயையென்று முண்டால். 16

இனைய நூல்வழிப் போக்கருக் கிகபரத் திறையாம்
முனைவன் றூதையிற் கடிந்துதாய் முறையையிற் றுங்கித்
தனைய ராயவழி நடத்தியா ளிந்தனர் சாவின்
பினைய ளித்தனர் தம்பதத் துளபெரும பேறு. 17

அண்ணல் வானகத் தரசனா திச்சபை யடியார்
விண்ணி னுக்கிய விளம்பரத் தொனிசெவி மடுத்துக்
கண்ணில் பேய்க்கணத் தலைமகன் கையகன் றோடிப்
புண்ணி யன்றனிக் கோற்குடி யாயினர் பொருந்தி. 18

முந்து தந்தைதாய் தம்பிரான் விதியினை முரணி
நொந்து ளங்கசந் தழுதிந்தப் பாதையை நுதலிப்
பந்த பாசங்க ளறவெறிந் திரக்ஷகற் பழிச்சிச்
சிந்த னுதித தேவர்கோன் றிருநக ரடைந்தார். 19

பண்டிந் நூனெறி பற்றியா பேலெனப் பகருந்
தொண்டன் யெய்ப்பொரு ளுணர்ந்துதூப் பலிமுறை தூவி
எண்ட ருங்குரு திக்கரி யாயுயி ரினிதீந்
தண்டர் கோன்பத மடைந்தனன் பாருல கறிய. 20

எஞ்சு றுவிசு வாசியே னொக்குயாத் திரையில்
அஞ்ச லென்றடுத் திராப்பக லவனொடிவ் வழியிற்
சஞ்ச ரித்தனர் தம்பிரான் சாவுமின் றுகச்
செஞ்செ வேகொடு போயினர் திருநகர்க் கவனை. 21

பாதை பற்றிநின் றுலகருக் குணர்த்திய பழுதில்
நீதி மான்பண்டு நிமிர்பிர ளயத்தைமேற் கொண்டு
வேத ராஜ்ஜிய தருமத்தை வியனிலத் தூன்றிக்
காத லித்தவா னடைந்தனன் மரணத்தைக் கடந்து. 22

செல்லென் றுண்டகை திகழ்த்திய செம்மொழி செவியிற்
புல்ல வக்கணத் தூருற வுரிமையைப் போக்கி
நல்ல நூனெறி கடைப்பிடித் தெமரெலா நயக்கும்
மல்லல் கூர்விசு வாசியின் யாத்திரை வகுக்கில். 23

தம்பி ரானுரை தலைக்கொடு தரணிசெல் மார்க்க
வெம்பு தீவிடப் பார்தலை வெரீஇயிரிந் தோடி
உம்பர் நூனெறித் திருக்கடை வாயில்புக் குட்போய்ச்
செய்பு னற்பலி யங்கங்கு திருத்தினன் செய்யோன் 24



புரவு நூனெறிக் கிடையிடை புண்ணியம் பொதிந்து
விரவு முற்குறி வயின்றொறு மிளிர்வன கண்டு
கரவி லாதமெய் யுரவிசு வாசமுட் கவினிப்
பாவி யேகினான் பசைப்புல மிடைந்தவோர் படுகர். 25

அருளி னாலெதிர்த் தலகையின் சேனையை யடர்த்து
மருளி மாக்களோ ணாவணா வெங்கிட மடக்கி
இருள றுத்தொளிர் சுடரென விகல்கடந் தபிராம்
பொருள்ப டைத்தொரு தனதனாய் நெறிக்கொடு போனான். 26

சோலை மாநிலந் துருவிநூ னெறியினைத் தொடர்ந்து
மேலை யோர்விதி விலக்கநுட் டித்துவிண் ணாடிப்
பாலை நீத்துவந் தடைந்தனன் சோதனைப் பரப்பை
வேலை சூழுல கேத்துமோர் மெய்விசு வாசி. 27

பெரிய நாயகன் றிருவுளப் படியொரு பேறும்
அரிய மைந்தனை மகப்பலி யூட்டிட லெங்கு
சுரிகை யோங்கலுந் துணித்திடா யுன்விசு வாசந்
தெரியச் செய்தன மெனவிண்ணிற் சிறந்ததோர் திருச்சொல். 28

தீர்க்க மெய்விசு வாசத்தின் செயலெலாந் தெரிந்தும்
பார்த்தி வற்குமெய்ப் பத்திசெய் பரிசினைப் பார்த்தும்
ஆர்த்தி யிற்பல வாசிகள் வழங்கியங் கவனை
ஊர்த்த லோகத்திற் புகுத்தின ருன்னதத் தரசன். 29

பூர்வ பாதையைத் துலக்கிவை திகமுறை புதுக்கி
ஆர்வ மிக்குநன் னெறிப்படு வோர்சுமக் கரிய
தீர்வ ருஞ்சுமை யேற்றிய திருவிதிக் கிழவன்
சீர்வ லந்திகழ் யாத்திரை வரன்முறை தெரிக்கில். 30

நாச தேசத்து ராஜ்ஜிய பாரத்தை நச்சான்
ஈசன் மார்க்கத்தன் னினத்தொடு நல்குர வெய்தித்
தேச நாசத்துக் ககறலே நலனெனத் தெரிந்தான்
ஆசி லாத்திருக் கடைபுகூஉ வறநெறி பிடித்தான். 31

பேயின் மக்கள்பின் றொடர்ந்திடச் செங்கடல் பிளந்து
வாயி டும்படி கோல்கொடு மடித்தனன் மருங்கைக்
காயும் வெம்மணற் சுரத்திடைத் தவிப்பறக் கடத்தி
நாய கன்வழி நடத்தினன் நாற்பது வருடம். 32

வழிம றித்தெதிர்த் தடர்த்தமர் மலைந்தமன் னரையும்
கழிபெ ரும்படைத் திரளையுங் கட்டறுத் தோட்டி
பழிப டாமற்றன் னினத்தரைத் தினம்பரி பாலித்
தெழுது நூல்வலான் கடைப்பிடித் தேகின னென்ப. 33

ஜீவ நாளெலாந் திவ்விய நகர்செலும் பாதைக்
காவ தாகிய திருப்பணி விடைபுரிந் தமையத்
தாவில் நல்லறச் சாலைமண் டபஞ்சுமை தாங்கி
பாவ நாசசங் கேதங்க ளமைத்தனன் பனவன். 34

காண்டி கான்மிதிப் பாயலை கவின்கொள்கா னானை
ஈண்டென் றூண்டகை யுரைத்தலின் மலைமிசை யேறி
மாண்ட லஞ்செறி வளனெலாங் கண்டுள மகிழ்ந்து
சேண்ட லத்திறை திருநக ரடைந்தனன் றீர்க்கன். 35

வஞ்சப் பேயொடு மலைந்தம ராடியு மறிந்த
சஞ்ச லப்பொருப் புச்சிமீ தேறியுந் தணவா
வெஞ்சு ரத்துவீழ்ந் தழன்றும்வெந் நிடாதுமுன் னிட்டுத்
துஞ்சு காறுஞ்சென் றுயர்பத மடைந்தனன் ஜோபு. 36

தாவி தென்றெரு தாணிபன் றனிவழி புகுந்தங்
கோவ வில்பெருந் துன்புழந் தொண்ணிலை தவறிக்
காவ லன்பெருங் கருணையால் நெறிகடைப் பிடித்து
வீவி லாப்பதத் தெய்தினன் சுரர்கணம் வியக்க. 37

உத்த மோத்தமன் சாமுவே லொண்டவன் ஜீவன்
முத்த ராமெலி யாவெலி சாவெனு முனிவர்
சித்த னைசயா வாதிய தீர்க்கரோர் மூவர்
வித்த கஞ்செறி தானியே லோசியா மீகா. 38

ஆய வித்தகு குரவரு மவர்வழி பிடித்த
தூய ரும்பண்டு பூருவ பாதையைத் துலக்கிப்
பேய டர்ந்தவிப் பிரபஞ்ச மாயத்தைப் பிளந்து
காய நீத்துயர் கதியர சாட்சியைக் கலந்தார். 39

பூர்வபாதைப் படலம் முற்றிற்று.



## சுவிசேஷமார்க்கப் படலம்.

தொன்று தொட்டுள திருச்சபைக் குரவருந் துகடீர்
நன்றி கொண்முது தீர்க்கரு நலத்தகு வாணாள்
சென்று போயினர் வருதிறன் றெரிப்பவ ரில்லர்
நின்று போயின வற்புதங் களுநில வுலகில். 1

பூர்வ பாதையை லௌகிகப் பெரும்புதர் புதைப்பத்
தீர்வ ருங்கொடு விலங்குகள் தீவிடப் பாந்தள்
பேர்வு றுதவ னுறைதலிற் பிறங்குத லின்றித்
தூர்வ தென்றுகண் டாரண ருளந்துளக் குற்றார். 2

தீர்க்க மெய்விசு வாசிகள் தீர்க்கர்சொற் றெருண்டோர்
பார்க்கி ரக்ஷணை யீட்டவும் பார்த்திவன் மருமான்
மார்க்க மிங்கிதைப் புதுக்கவும் வருவர்மற் றென்னா
கார்க்கு லம்வரக் காண்குறுப் பயிரினுட் கரிவார். 3

வள்ள லாரிளங் கோமகன் வரும்பதி தெரிக்கும்
வெள்ளி யொன்றுள தென்றதை விரும்பினர் நாடி
நள்ளி யோர்சில ரடியுறை நல்லன தெரிந்து
தெள்ளி தோர்ந்தெதிர்ந் திருந்தனர் பூருவ திசையில். 4

முத்தி நாட்டர சாதிக்க முறைநனி யுவந்த
பத்த ரேமெனச் செருக்கிய பனவர்மெய் வாழ்வை
நத்தி யன்றிக வாழ்வடை வாமென நம்பிப்
புத்தி ரன்வரு கைக்கெதிர் நோக்கினர் புரத்தில். 5

மீத லத்தின வரசனைக் காண்குறும் விரகால்
தீது துற்றிய குணத்தருஞ் சிந்தையுற் றிருப்பச்
சாது மார்க்கத்தர் யாவருந் தம்பிரான் வருகை
காத லித்தனர் விடிவெதிர் கமலமே போல. 6

கனித ரும்பழ நறைபொழி வளந்திகழ் கானான்
புனித வைப்பினிற் புரவல னொருதிருப் புதல்வன்
மனித தேகத்தில் வருவர்மெய்ம் மனந்திருப் புகவென்
றினிது கூவினன் றீர்க்கர்சொல் லெடுத்தொரு தூதன். 7

கூறு கட்டியந் திசைதிசை செவிப்புலங் குறுகத்
தூற டர்ந்தகா னகந்துரீஇத் தூதனை யடுத்துச்
சீறு தீவிடப் பாந்தள்கை திருகியூ தேயர்
பேறு நாடினர் மனந்திருப் பினர்நெறி பிடித்தே. 8

உம்பர் நோக்கிய மெய்த்திருத் தொண்டருள் ளுவப்பும்
இம்பர் நூனெறி புதையத்தூ றடர்ந்தெழு மியல்பும்
கும்பி பாகத்தி னதிபதி மறக்கொடுங் கோனும்
அம்ப ராதிபன் றிருவுளத் தெட்டிய வம்மா. 9

மனுதி தத்துவா தீதரா மகத்துவ வேந்தன்
அநாதி நின்னயப் படிதிருக் குமாரனுள் ளன்பால்
தனுதி ருங்குவ லயத்தினுக் கிரக்ஷணை சமைப்பல்
எனுது யிர்ப்பலி யீந்தென வேம்பலோ டெழுந்தார். 10

வான்மு யங்குபே ரின்பசம் பத்துயர் மகிமை
கோன்மு யங்கிய தைவிக தாளைத்தனங் கொற்றம்
மேன்மு யங்கிய வரும்பதம் யாவையும் விடுத்தார்
ஊன்மு யங்கிய வுடலுவந் தெடுத்துல குறுவார். 11

ஆவன் மிக்கதம் மொருசுத னரசவை யகன்று
போவ தும்மவர் புரிவதும் பொறுப்பதும் பலியாய்
வீவ துந்திரு வுளத்துணர்ந் தவனிக்கு விடுத்த
தேவ நீதியின் புனிதத்தை யாவரே தெரிப்பார். 12

கலக மிட்டல கைத்தொழும் பாயறங் கைவிட்
டுலகை நச்சியிங் குழல்நர கிடத்துக் குயிர்நீங்
திலகு வான்பத மேற்றவந் திறத்தநம் மீசன்
அலகில் பேரன்பி னளக்களா யளந்தறி பவர்யார். 13

உன்ன தாதிப னொருசுத னுவரிநீ ருலகப்
புன்ன ரங்களைப் புரப்பலென் றேன்றுபோம் புதுமை
என்ன வென்னவென் றுயிரக் காலெடுத் தேத்திப்
பன்ன ருந்துதி பகர்ந்தனர் வான்கணம் பழிச்சி. 14

ஆழ்ந்த ஜீவநீர் நதிப்பெருக் கதோமுக மாகித்
தாழ்ந்த பூதலப் படுகரிற் பாய்ந்ததுந் தழைத்துக்
காழ்ந்த நித்திய ஜீவகற் பகச்சினை ககனம்
போழ்ந்து பாருறப் பணிந்தது மெத்தனை புதுமை. 15.

வேறு.

மையார்கலி புடைசூழ்புவி வளைதீவினை யிருளும்
பொய்யாரணப் புலையார்திமி ரமுந்தீவிடம் பொதிந்த
பையாடர வின்சீறுவெம் படமுஞ்சிதை வெய்த
மெய்யாரணச் சுடர்யாளிட விதயாம்பரம் விளங்க. 16



தருமந்தலை யெடுக்கப்புட வியிற்சத்தியந் தழைக்க
அருமந்தமெய்ச் சுருதித்தொனி யவனித்தலை சிறப்ப
ஒருமந்தையின் மறியாயருள் ளுவந்தேத்திசை யோங்கத்
திருமந்திர முறைவாழ்த்தொலி ஜெயபேரிகை கறங்க. 17

கள்ளம்புரி யலகைக்கிறை கைக[illegible]ல விலக்க
உள்ளம்பறை யறையத்திகி ழுற்றுருயிர் [illegible]க்கங்
கொள்ளக்கரி முகங்குப்புறக் கொடுந்தீவினை குலைய
அள்ளிக்கதிர் வீசுஞ்சுட ரருணோதய மிதென. 18

வானோமகி தலமோசுடர் மதியோவயங் கொளிர்வான்
மீனோவிரி கடலோமழை முகிலோவொரு விதியில்
ஆனாநெறி யமைத்தாக்கிய வகிலாண்டவச் சுதனோர்
ஊனுடிய திருமேனிகொண் டுதித்தாருல குவப்ப. 19

மறையார்த்தது மறையோதிய வரம்பார்த்தது ஞானத்
துறையார்த்தது சன்மார்க்கமெய்த் துணிபார்த்தது சுகிர்த
நிறையார்த்தது நலமார்த்தது நிலையாயர க்ஷணிய
முறையார்த்தது கதியாக்கமிம் முதுமாநிலத் துறவே. 20

அந்தோவறக் கொடுந்தீவினைக் கிலக்காகிய வவனி
வெந்தீடழி நரகம்புக விடுகிற்கில னென்னு
நந்தாதிரும் புலைமல்கிய நடலைப்பிர பஞ்சத்
தெந்தாயர சிளங்கோமக னிறுத்தாரிது வென்கொல். 21

துன்பம்படு துயர்நிந்தனை சுடுசொல்வசை யாதி
தன்பங்குறத் தளராதொரு தலையாப்பிறர் தம்மைப்
பொன்போற்பொதிந் தவரின்னுயிர் புரந்தாதரம் புரிவர்
அன்பின்றலை நின்றோர்செயு மாண்டன்மையி தன்றோ. 22

வேறு.

நீமுக னுய்த்தவெஞ் சிறைக்குள் ளாயயர்
பாமரத் தூறடர் படுகர் வைப்பிது
கோமகன் சேவடிப் பதுமங் கோத்தலிற்
பூமுக மெனப்பெயர் பொலிந்த தாமரோ. 23

பேயடிப் படுத்திய பிரபுஞ் சத்துருக்
காயது குடித்தன மமரர் நாட்டென
நாயக னிறுத்தமை குறித்து நண்பொடு
கூயினர் திசைதிசை குறிக்கொண் டாரணர். 24

ஆண்டகை வானநாட் டரசன் மைந்தனைக்
காண்டொறுங் காண்டொறுங் களிப்புக் கைம்மிகத்
தேண்டிரா க்ஷணைபுரி திருக்கு மாரனென்
றீண்டினர் புனிதசேத் திரத்தி லெங்குமே. 25

உத்தம நூனெறி யுவந்த தொண்டர்பால்
நித்திய ராஜ்ஜிய நிருப னின்மல
புத்திர னெனவிசு வாசம் பூண்டுமெய்ப்
பத்திசெய் தடித்துணை பாவி நின்றனர். 26

தீர்த்தனென் றற்புதச் செயலுந் தெய்விக
வார்த்தையு முரைசெய மருண்ட மாந்தரும்
பார்த்தலை யிறுத்தவோர் பரம சற்குரு
மூர்த்தமென் றருள்பெற முடுகிக் கிட்டினார். 27

ஆயிடை யருள்விழி பரப்பி யாண்டகை
மாயிரு ஞாலத்து மாந்தர் சீர்மையும்
பேயர சாணைகை நடக்கும் பெற்றியும்
நாயகக் கதிவழி நடப்பி லாமையும். 28

மெய்ப்படு தொண்டர்மின் மினியிற் றோன்றலும்
பொய்ப்படு வேடத்தர் பொலிந்தி லங்கலும்
செய்ப்படு களைமிகத் தேம்பு சாலியை
ஒப்பநின் றுத்தம ரொடுங்கிப் போதலும். 29

தூயதஞ் சபைச்சுடர் தூண்டி டாதொளி
தேயுறு சீர்மையுந் தீமை மல்கலும்
மீயுறு ஞானத்தை வெறுத்த கந்தொறும்
மாயவஞ் ஞானத்தை வளர்க்கும் பான்மையும். 30

திருவுளத் துணர்ந்துநெட் டுயிர்த்துச் சிந்தைநைந்
திருவிழி புனல்கொள விரங்கி யெந்தையார்
பொருவருந் திருவருட் புணர்ப்பின் வையகப்
பருவரல் துடைப்பலிப் பருவத் தேயெனா. 31

வித்தக திருச்சபை முறைமைய மேற்கொண்ட
அத்தலை யோரச ரீரி யார்வநம்
புத்திர னிவருனை போற்றி யுய்ம்மினென்
றித்தகை வாக்கெழ வெவருங் கேட்டனர். 32



மித்தையை வேரற வீசி மெய்ப்பிடித்
துத்தம திருப்பணி யுஞற்றத் தக்கமெய்ப்
பத்தர்பன் னிருவரைத் தெரிந்து பாங்குறச்
சித்தஞ்செய் பணியெலாஞ் செயலிற் காட்டுவார். 33

நித்திய ஜீவராஜ் ஜியத்து நேர்வழி
இத்தகு வனவென வியற்றிக் காட்டுமச்
சத்தியக் குறிபிடித் தவர்க்குச் சாமிபம்
அத்தகு ராஜ்ஜிய மாமென் றாண்டகை. 34

கண்டகங் கடுப்புத ரடர்ந்த கான்வழி
கண்டகங் கடுப்புறக் களைந்து வேரறக்
கண்டகங் கொடுதடிந் தனர்வன் கண்டகன்
கண்டகஞ் சிதைத்தசெங் கமலப் பாதனார். 35

ஒப்புர வாக்கிநூ லொழுங்கி னேருறச்
செப்பனிட் டருளியாத் திரிகர் செவ்வழி
தப்பிடி லதோகதி சார்வ ரென்றயல்
குப்புறு திருகவர் குயிற்ற வுன்னியே. 36

அத்தியை யடுக்கிமென் றசைசெஞ் சோரியென்
றித்தகு சாந்துகொண் டிசைத்துப் பத்திசெய்
பித்தியீ டேற்றமென் பெயர்பு னைந்துதம்
முத்தினை குயிற்றினர் முறைமை யாலரோ. 37

இடந்தொறு மிடந்தொறு மோர்கொண் மாளிகை
மடம்பல சத்திர மாபி ணுக்குவித்
தடங்கலும் பணிபுரி யறவர் தம்மையும்
உடப்படி வாங்கியூ ழியத்தி லுய்த்தனர். 38

வழிவிடா யாற்றிவான் வழிவந் தோருக்கென்
மொழிவழி போனக முறையி னூட்டுமின்
அழிவுறு விருந்தி யளித்தும் யாண்டுநீர்
பழிவராக் காமின்மற் றெனவும் பன்னினார். 39

தெள்ளிய நூல்வழிக் கிடையிற் சென்றுசேர்
கள்ளமார்க் கங்களைத் தெரியக் காட்டுகை
ஒள்ளிய தம்பநட் டுண்மை யாத்திரி
எள்ளுறாப் பொன்னெழுத் திலங்கத் தீட்டினார். 40

மறைவியாக் கியானமா ளிகையில் வைதிக
முறையறி வுறுத்தமுற் படுபல் காட்சிகள்
துறைதொறு மமைத்தவை விளக்கிச் சொல்லவோர்
நிறைமொழிக் குரவனை நிருமித் தாரரோ. 41

இவ்வுல குக்கெதி ரிடுக்க வாயில்சேர்
செவ்விய நெறிப்படு திருமு கப்பினில்
ஔவியப் பகைஞரு மவிக்கொ ணாதவோர்
திவ்விய வொளிக்குறி திகழ்த்தி வைத்தனர். 42

மாரணப் படுகரின் மாயச் சந்தையின்
பாரிடச் சூழலின் மோசப் பாங்கரிற்
கோரணி முயங்குறிற் குறிக்கொண் டொல்லையெம்
ஆரண ருடனமர்ந் தருடும் யாமென்றார். 43

மாசில்சீர் மாண்சுவி சேஷ மார்க்கத்தை
ஆசற விளக்கிப்பின் னலகை யீட்டிய
பாசறைப் படைஞரைப் பரிவிற் பார்த்தருள்
நேசமோ டழைத்திவை நிகழ்த்தன் மேயினார். 44

பண்ணவர் குழுமிய பரம ராஜ்ஜியம்
கண்ணிய பெருவளங் கைக்குள் ளாயதால்
எண்ணமென் னிடர்க்கடல் வளாகத் தேக்குறும்
மண்ணுளீர் தாழ்ப்பதென் மனந்தி ரும்புமின். 45

வித்தகந் தயைபொறை விநயந் தண்ணளி
சத்தியம் புனிதமெய்த் தருமம் பத்தியென்
றித்தகு சீலர்நட் பினிதி னாற்றிநீர்
உத்தம வழித்துணை யாக்கொண் டோடுமின். 46

ஆவியி லெளியவ ரடைவர் வான்கதி
மேவருந் துயருறின் மேவு மாறுதல்
தாவருஞ் சாந்தருக் குலகந் தம்வசம்
ஈவிரக் கம்முளார்க் கிரக்கங் கிட்டுமால். 47

நீதியைப் பசித்தவர் நிறையுந் தேக்குவர்
ஏதமில் தூயர்கண் டடைவ ரீசனை
பேதமற் றைக்கியம் பிறங்கச் செய்குநர்
காதலர் கடவுள்வேந் தருக்குக் காண்மினே.



நீக்கமி னீதியி னிமித்தந் துன்புறில்
மேக்குயர் வானநாட் டின்ப மேவுவார்
மீக்கிளந் தவரெலாம் விபுத நாட்டுள
பாக்கிய மடைந்துயும் பவித்தி ரான்மிகள். 49

வேறு.

அம்ப ராதிப னும்பிதா வவாரு ணன்மை
இம்பர் நல்லர்பொல் லாருக்கு மியைவன கண்டீர்
தம்பி ரானென நீயிருஞ் சற்குணந் தழுவி
வெம்பு தீமைக்கு நன்மையே விருப்பொடு விளைமின். 50

ஈர நீருல கத்தினுக் குப்பென வியைவீர்
சோர் விட்டிடா துலகளைத் தூயநல் லொழுக்கால்
சார மேற்றுமி னன்றெனிற் றள்ளுண்டு மிதிபட்
டாரும் வையகத் தவமதிப் படைவிரீ தறிமின். 51

உலகி னுக்கொளி நீயிரும் முத்தம கிரியை
இலகு மென்னிலங் கவரகத் திருளிரிந் தோடும்
விலகி வில்விடு மொளியையுள் ளடக்கிமேன் மூடில்
அலக றுஞ்சுட ராற்பயன் பிறிதுள வாங்கொல். 52

கொலைசெய் யற்கவென் றுரைத்தகற் பனையுண்மை குணிக்கில்
புலைசெய் கோபமு மிகழ்ச்சியும் பிறர்நெஞ்சு புண்பட்
டுலைய மீப்படிற் கொலையுமா மாதலி னுடையார்
நிலைமை யாமெரி நரகபா தலமென நினைமின். 53

விபச ரித்திடா யென்பது விதியதை விரிக்கில்
தபசி யேனுமற் றொருத்திபா லிச்சையுட் டரிக்கில்
அபச ரித்தனு மாக்கினை யடைந்தன னவனை
உபச ரிப்பதும் நரகபா தலமென வுணர்மின். 54

உள்ள தையுள தென்றுரை யாடுமி னிலதை
யில்லை யென்னில தேயென விதனின்மேற் பட்ட
கள்ள வாசகம் யாவையுங் கருதருந் தீங்கென்
றெள்ளு மின்சுவி சேஷமார்க் கத்தியல் பிதுவே. 55

திருகை ஞாலத்துப் புகழ்பெறச் செயுந்தரு மத்தில்
வருகை யொன்றிலை மறுமையிற் புகழ்பதி யாதிங்
கொருகை செய்வதை மறுகையுற் றறிகிலா துனற்றில்
பெருக மாண்பய னளிப்பர்நம் பிதாவுள மகிழ்ந்தே. 56

துறைதொ றும்புகழ் நச்சிவீண் மொழிகளைத் தொகுத்துப்
பறைய றைந்தெனப் புரிஜெபம் பயன்படா தென்றும்
அறையி லந்தரங் கத்திலே சந்நிதி யடுத்துக்
குறையி ரந்துமன் றாடுமி னருள்வர்நங் கோமான். 57

செறுத்து மக்குமற் றவர்செயுந் தீமையைச் சிந்தை
நிறுத்தி டாதுமன் னிப்பிரேல் நீர்செய்தீ மைகளும்
பொறுத்து மக்குமன் னித்தருள் புரிவர்பூ தலமுற்
றொறுத்தி டற்கதி காரியா முன்னதத் தாசன். 58

உரிய மாநிதி துறுமிடத் துறுமும திதயம்
அரிய வானிதித் திரட்கரு வூலத்தை யாக்கித்
துரிய பூமியிற் றொகுமினோ பூச்சியுந் துருவும்
திரியுஞ் சோரரு மில்லையப் புனிதசேத் திரத்தில். 59

ஒருவ னூழிய மிரண்டிய மாநருக் குனாற்றில்
ஒருவ னட்பொரு வன்பகை யாமுல கியற்கை
ஒருவு மின்னல கூழிய மூர்த்தநாட் டரசன்
ஒருவர்க் கேயினி தூழியஞ் செய்மினுள் ளுவந்து. 60

வித்தி டாபயிர் விளைத்திடா விளைந்தவை சேர்த்து
வைத்தி டாவொரு களஞ்சியத் தெனினும்வான் பறவைக்
கத்த னார்பரிந் தெத்தனை யாவுண வளித்து
நித்த மும்பரி பாலனஞ் செயுமரு ணினைமின். 61

கான மல்குபூ மலர்க்குலங் கவின்பெறு காட்சி
ஞான நாயகன் றொழிலலால் நவிலமற் றில்லை
மேன லம்பெறு சாலமோன் வேந்துமவ் விதத்தில்
தான ணிந்துடை தரித்தில னலிந்த ஜகத்தில். 62

சொன்ன மற்றிவை துணிந்துநீர் யாமெதைத் துய்த்தும்
இந்நி லத்தெதை யுடுத்துமென் றேக்குறு திருமின்
பொன்னி லத்தா சன்பிதா வாதலிற் புதல்வீர்
நன்ன லத்தவூ ணுடைதெரிந் தளிப்பர்நா ளாளும். 63

அழிவி லாப்பர லோகவாழ் வொன்றையே யவாவி
ஒழிவி லாதுளங் கவலுமின் முயலுமி னுண்மை
வழிவி டாதுநே ரோடுமின் மற்றவை யெல்லாம்
பழிப டாதுமக் கருளுவ ருன்னத பரமன். 64



உற்று நோக்கியுன் கண்ணுறு முத்திர மொழித்த
பிற்றை யந்நியன் கட்டுரும் பெடுத்தெறி பெற்றி
தெற்றென் றோர்வையீ தன்றிநீ பிறர்பிழை தெரிந்துன்
குற்ற முள்ளுறப் புதைத்திடல் கொடியமா மாயம். 65

எந்த நீதியிற் பிறர்குற்றங் கண்டுதீர்ப் பிடுதிர்
அந்த நீதியி னுங்குற்றங் கண்டுதீர்ப் படைவீர்
எந்த வாறெந்த நாழியிற் பிறர்க்களந் திடுதிர்
அந்த வாறளக் கப்படு முமக்குமென் றறிமின். 66

அரிய நித்திலக் கோவைநீர் பன்றிமீ தணியில்
தெரிகி லாதத னருமையைச் சீரழித் திடுமால்
உரிய மாண்பரி சுத்தவூண் குக்கல்முன் னுய்த்துச்
சொரிய கிற்பினு மன்னவா மென்பது துணிமின். 67

கேட்டுந் தேடியுந் தட்டியுஞ் சிந்தனை கிடைப்பர்
நாட்டு மானிட ராதலின் நம்பனை யடுத்துக்
கேட்டுந் தேடியுந் தட்டியு முயன்றிடிற் கிடையா
வீட்டு வாழ்வுகை யுறுமிது சாதமாம் வினாமின். 68

தீங்கு மல்குநீர் சிறுவர்க்கு நல்லன தெரிந்து
பாங்கி னல்குதிர் மன்பொதுத் தந்தையாம் பரமன்
ஏங்கி நின்றும்மன் றாடுமுங் களுக்குள மிரங்கி
ஓங்கு நன்னல மளிப்பரென் பதற்கைய முளகொல். 69

மற்றை யோருமக் குச்செய மனக்கொள்வ தெதுகொல்
அற்ற தேபிறர்க் காக்குநல் லறமென வறிமின்
இற்றி தேநியா யப்பிர மாணமு மேனோர்
சொற்ற பௌஷிக தரிசனங் களுமுண்மை துணியில். 70

ஜீவ பாதையி னிடுக்குறு திருக்கடை சேர்ந்துட்
போவ ரோர்சிலர் பாதையும் புகலரு நெருக்கம்
பாவ மல்கிய பெருவழி கேட்டினுட் படுத்தும்
ஆவ லோடதில் நடப்பவ ரும்பல வனந்தம். 71

ஆட்டுத் தோல்பொதிந் தாருயிர் கவருங்கோ ணாயின்
வீட்டுப் பாதைமற் றீதிதென் றவனிக்கு விளக்கிக்
காட்டிக் கைப்பொருள் கவர்ந்திடு கள்ளப்போ தகர்வாய்க்
கேட்டுக் குட்படா தகலுமின் கிரியையாற் றெளிந்து. 72

வாயி னுலெலினைக் கருத்தனே யென்றுபேர் வழுத்தி
ஆயி ரந்தரங் கூவினு மாவதென் னகில
நாய கன்சித்த மறிந்தந்த நடைகடைப் பிடிப்போன்
தூய ராஜ்ஜிய பேரின்பந் துய்ப்பவ னறிமின். 73

## வேறு.

நமரங் காளிங்கு சொற்றவை நம்பிரான்
விமல சித்தவி ளம்பர மாதலில்
சமர பூமித ணந்திந்நெ றிப்படீஇ
அமரர் நாடடை யத்தகு மாய்மினே. 74

மற்றிவ் வாய்மைம னக்கொடு வானெறி
பற்றி யேகுப வனெவன் பாறைமேல்
கொற்றி வானிட்டு வீடுகு யிற்றிய
குற்ற மற்றவி வேகிகு ணித்திடில். 75

சண்ட மாருதம் வன்மையிற் றாக்கியும்
கொண்டல் மின்னியி டித்துக்கு முறியும்
மண்டு வெள்ளம நிந்தற மோதியும்
விண்டி டிந்துவி ழாதந்த மேனிலை. 76

உளம்ப டப்பகுத் தோதிய வுன்னத
விளம்ப ரத்தைவெ றுத்தவன் வெண்மணற்
களம்ப டுத்தவிற் கட்டழி மென்றுணு
வளம்ப டுத்தம தியிலி போலுமால். 77

இத்தி றத்தன வேகசர் வேசுரன்
சித்த மென்றுதி ருத்தகத் தெள்ளிதின்
வித்த கக்கனி வாயிதழ் விண்டனர்
சுத்த மெய்ச்சுவி சேஷவுத் துங்கரே. 78

சிரு றுங்கதி சேர்வழி யீதென
நேரி லேயுப தேச நிகழ்த்திமேல்
ஓரும் பற்பலு வமைகொ டுண்மையைத்
தேரு மாறுதெ ரிக்கலுற் றாரரோ. 79

## வேறு.

மன்பதைகாள் கிருஷிகன்வெள் ளாண்மைசெயத் தகும்பருவம்
வாய்த்ததென்று
நன்புலத்து வித்திடுங்கால் வழியருகும் பார்நிலத்தும்
நவைத்துறெஞ்சாக்



கொன்புலத்துஞ் சிதறுண்ட சிற்சிலவித் ததாருகு
குளித்தவற்றைப்
புன்பறவை விரைந்தணுகிப் பொறுக்கிநுகர்ந் தனவிதனைப் 80
புந்திசெய்மின்.

பார்நிலத்துப் புதைந்தவித்தங் குரித்தெனினும் வேரூன்றப்
பசுமண்ணின்றிக்
கூர்வெயிலிற் றீந்துகரிந் தனமுட்டு றக்கிடையிற்
குளித்தவித்து
நேர்வளர்ந்து நெருக்குண்டு பயன்படா தொழியநன்செய்
நிலத்தவோங்கிச்
சீர்பெறநன் மணிமுற்றி யொன்றுநா றாயபயன் 81
றிகழ்த்திற்றோர்மின்.

மற்றொருவன் மறுக்களைந்து நல்வித்துப் புலந்தெளித்து
மறையவாங்கே
உற்றொருவ னள்ளிரவிற் களைவித்திக் காந்தேக
வுபயவித்தும்
தெற்றெனவங் குரித்தோங்கத் தெரிந்தெஜமான் மற்றிவற்றைச்
சேதியாதீர்
முற்றவிடுங் கொய்பருவத் தெறிந்தெரிவா யிடுதுமென 82
மொழிந்தான்றேரில்.

வித்துபவன் யான்புலமு முலகாகும் வித்துபர
ராஜ்ஜியத்தின்
புத்திரராங் களைதேரிற் பொல்லாங்கன் புதல்வரதைப்
புலங்கொண்டுய்த்த
சத்துருவும் பைசாச மறுப்புலக முடிவரிவோர்
தாவில்தூதர்
[illegible]ல்வா ரெரியுணப 83
ருண்மையோர்மின்.

நுண்ணியவோர் கடுகுவிதை நிலத்தூன்றி முளைத்தோங்கி
நோன்றுளூன்றி
விண்ணிலவு புள்ளுறையுந் தருவாகு மென்றுநம்மான்
விதந்ததாயில்
நண்ணரிய பரலோக ராஜ்ஜியமு மொருவனுள
நண்ணிநிற்பின்
எண்ணரிய மனுக்குலங்க ளீடேறு நெறித்தாகு 84
மிதயத்தூன்றி.

புளித்தசிறு திரண்மாவா லறப்பிசைந்த மாமுழுதும்
புளிப்பாமென்று
தெளித்தவுரைப் பொருடெரியி லோடதியாற் பாலுறையுஞ்
சீர்மையென்ன
அளித்ததிரு வருள்பெற்ற வவனலவ் வருட்சார
மயலார்க்கெய்தி
ஒளித்தலைவான் கதிபெறுபக் குவமடைவ ருண்மைவெளி
யுய்த்ததாமால். 85

வைத்தநிதித் திரள்கண்டோன் மறைத்துரிமை யாவும்விற்று
வழங்கியேனும்
அத்தகுன் னிலங்கொள்வ னருவிலைநித் திலங்கண்டோ
னவ்வாறுகக்
கைத்தலத்த பொருள்வீசிக் கவர்வனென்ற திருவசனக்
கருத்தையோரில்
உத்தமராஜ் ஜியம்விழைந்தோ னெல்லைவழிப் படுவனல
கொருங்குவர்த்தே. 86

முன்னீர்புக் குலவுசல சாங்களைத்தன் னகடுமுட்ட
முகந்துவாரிச்
சென்னீர்மை வலைபோலுந் திவ்வியராஜ் ஜியம்வலையிற்
சேர்த்தவற்றுள்
நன்னீர்மை யுளதெரிந்து நவைபோக்கு மாறுலக
நாளாந்தத்தில்
துன்னீரர் தமையெரியிட் டறவோரைத் துரியநிலை
தொகுப்பார்தூதர். 87

தன்கடனைத் தனக்கிரங்கித் தாணிபன்மன் னித்தபெருந்
தகையோராத
வன்கணனறன [illegible]
வலித்துபற்றி
என்கடனை யிறுவென்று னிறைவனறிந் தவனையிருஞ்
சிறையிலிட்டான்
நன்குபிறர் பிழைசமிக்கில் நம்பனுநும் பிழைசமிப்பர்
நலத்தையாய்மின். 88

முந்திரித்தோட் டத்துதயந் தொடங்கியொத்து வேலைசெய்த
முறையினோர்க்கும்
நந்துபதி னொன்றாய மணிமட்டும் வந்துபணி
நாடியோர்க்கும்



வந்ததிபன் முழுக்கூலி வழங்கலுமுன் னவர்திருகி
வாதுசெய்யத்
தந்தனன்சொற் படிகூலி யென்னுடைய தெனதிஷ்டஞ்
சரிபோமென்றான். 89

முழுக்காத லுடையீரா யிப்பொருளைக் கருத்திருத்தி
முனைவன்சித்த
ஒழுக்காறு கடைப்பிடித்துக் கிடைத்ததுவே போதுமென
வுவந்துநாளும்
அழுக்காறு புறம்போக்கி வழிபடிற்பிந் தினருமுந்தி
யமலராஜ்யம்
இழுக்காது சென்றடைவர் முந்தினர்பிந் தினராவ
ரிதயத்தோர்மின். 90

தந்தையிது செய்யென்னச் செய்யேனென் றுடன்மறுத்த
தனயன்பின்னர்ச்
சிந்தைநொந்து செய்தனன்மற் றொருதனயன் செய்வலென்றுஞ்
செய்யானிந்த
மைந்தரில்யார் நல்லனெனில் தந்தைசொன்ன வாறுசெய்த
மகனேயென்பீர்
நந்தருமெய்ப் பொருடெரிப்ப லொத்திருந்துஞ் செய்யாது
நடிப்பீர்கேண்மோ. 91

சொல்லாலுஞ் செயலாலுந் துட்டராய்த் திரிந்திராஜத்
துரோகியாய
அல்லாரே விளம்பரங்கேட் டுளந்திரும்பி யூர்த்தநெறி
யடுப்பாரானார்
நல்லார்போ லகத்திருந்தும் நன்றிகெட்டுப் பிரபஞ்ச
நடலைநச்சும்
பொல்லீரே யெல்லீரு மென்றினிநீர் விசுவசிப்பீர்
புந்திசெய்மின். 92

மிக்கசம்பத் தொருதலைவன் செழித்தோங்கு முந்திரிகை
வியன்புலத்தைத்
தக்கபொறுப் புப்பேசி யொருசிலர்பால் விடுத்தேகச்
சதிசெயன்னார்
பக்குவகா லத்துரிமை பெறவந்தோர் தமைக்கொன்றும்
பழிக்கஞ்சாமல்
உக்கிரமாய்த் தலைவனொரு புதல்வனையுங் கொலைசெய்தா
ருதிரஞ்சிந்தி. 93

இப்பெரிய பாதகருக் கெப்பெரிய தண்டனைதா
னிடத்தகாதென்
றெப்புணர்க்கின் றீருணர்மின் பரலோக ராஜ்யமினி
யும்பானின்றும்
அப்புறமாய்த் தனக்குரிய நற்கனியைத் தருவோர்பா
லடையுமென்றார்
செப்பரிய திரியேக சர்வேசன் றரவந்த
தேவமைந்தன். 94

திருந்தியசெங் கோலரசன் றன்மகற்குக் கலியாணஞ்
செய்தகாலை
பொருந்தினர்க்கு விருந்தமைத்து நுகருவிப்பா னழைத்துவரப்
போக்கினோரை
வருந்தவடித் துயிர்க்கொலையும் வகுத்தனர்மன் னவன்றேர்ந்தம்
மறவர்தம்மைப்
பருந்தினுக்கு விருந்தூட்டி யெரிகொளுவி யூரையும்பாழ்
படுத்தான்சீறி. 95

அனையனுழை யனையேவி யாண்டாண்டு திரிவோரை
யழைத்துவந்து
வரைவின்றி யாவருக்கும் மங்களவத் திரநல்கி
மகிழ்ந்தூட்டுங்கால்
நிரையூடங் கொருவனுக்குத் தானளித்த துகிலில்லா
நெறியையாய்ந்து
வினைவிலிருட் சிறையுய்த்தான் பலரழைக்கச் சிலர்தெரிந்த
விதத்தையோர்மின். 96

அரும்பரம ராஜ்ஜியத்துக் கழைக்கப்பட் டவரெல்லா
மருசரல்லர்
விரும்பியுளந் திரும்பிநெறி விலகாது முன்சென்று
விபுதநாட்டுப்
பெருந்தகைக்குப் பிணக்கின்றி வழிபடுவோ ரெவரவரே
பெருமான்சித்தந்
தெரிந்துகொளப் பட்டவர்மற் றவருலகிற் சிலராவர்
தெரியுங்காலை. 97

அதிபதியா மணவாளன் கலியாண மணவறையை
யடுக்குங்காலத்
தெதிர்கொள்வான் காத்திருந்த பத்துக்கன் னியரிலைவ
ரெண்ணெயில்லா



மதியிலிகள் கண்டுயில மதியுடையார் தீவத்தி
மரபினேந்தி
விதிமுறையே வரவெதிர்ந்துட் புகுந்தனர்மற் றையர்வெளியே
விடுபட்டாரால். 98

மற்றிந்தப் பொருள்தெரியில் வானரச னடுத்தீர்வை
வழங்குங்காலந்
தெற்றெனநீ ரறியகிலீர் மதியிலர்போல் விசுவாசத்
தீபம்போக்கி
முற்றுலக மயல்கொண்டு துயிலாதீர் விழித்திருமின்
மோசம்போகீர்
இற்றிதுகாண் பொருளென்ன விளவரசாங் குமரேச
னியம்பிப்பின்னும். 99

திருவளர்க்கு மொருதனிகன் மறுதேசம் போய்வரற்குச்
சிந்தையுற்று
மருவியதன் றிரவியத்தைக் காரியஸ்தர் வசமாக
மரபினீந்திப்
பெருநிதியை யாதாயப் படுத்திவைமி னெனப்பணித்துப்
பெயர்ந்துபோனான்
வருமவதி தனில்வந்தான் காரியஸ்த ரிடங்கணக்கு
வாங்குங்காலை. 100

ஐயவிரு வேம்பொருளை யொன்றிரட்டி யாக்கினமென்
றளித்துநிற்ப
மெய்யரிவ ரெனக்கண்டு மேம்படுத்தி மற்றவனை
விளித்தியாதென்னச்
செய்யில்விதை யாதறுக்கத் தேடும்யஜ மானனெனத்
தெரிந்துதந்த
நொய்யநிதி புதைத்துவைத்தேன் மற்றிதனைக் கொள்கவென்று
நுவன்றானாக. 101

தன்பொருளைப் புதைத்துநஷ்டப் படுத்தியவிச் சழக்கனைக்கா
றளைந்துநீவிர்
துன்பமிகு மிருட்சிறையி னுய்க்கவென்று னுழையனையச்
சோம்பியீந்த
மன்பொருளை யுள்ளவற்கு வழங்கினான் பொன்வணிகன்
மாபீதாக
என்பொருள்மற் றெனிலுள்ளோர்க் கிவரிலோர்க் குள்ளதுமின்
றென்றாரீசன். 102

மெய்யறிவு மெய்ஞ்ஞான மிகுசெல்வஞ் சொல்வன்மை
மேம்பாடாதி
வையகத்தி லவரவர்க்கு வானாச னருளளிக்கும்
வரமாமன்றோ
உய்யுநெறி யுபயோகித் தூழியஞ்செய் திடல்கடமை
யுபேக்ஷிப்போரைப்
பொய்யிகந்து வருநடுநா ளிருட்பிழம்பு புகுவிக்கும்
புந்திசெய்மின். 103

வேறு.

நானிலங் காணி பூமி நன்குறு பயிராய் முற்றி
மேனியு மதிக மாக விளைந்தன தொகுத்துத் தோன்றுந்
தானியக் குவையைக் கண்டு தகவிலாப் புத்தி யீனன்
கோனருள் குறியா னாகித் தன்னுளே குணிக்க லுற்றான். 104

தக்கமே னிலைச்சே ரின்றாற் றானிய வருக்கஞ் சேர்த்து
வைக்கவென் றெண்ண மிட்டான் வல்லையே களஞ்சி யத்தை
இக்குவ லயம் வியக்க வியற்றியென் சம்பத் தெல்லாந்
தொக்குவைத் தநேக காலந் துய்த்துவாழ்ந் திருப்ப னென்னா. 105

முன்னிலை யுணரான் பின்னே முடுகிடு மறுமை யோரான்
தன்னையு மறந்தா னாகித் தடந்துயில் கொள்ளுங் காலை
முன்னவ னின்றிராவே முடியுமுன் வாழ்நா ளென்னில்
உன்னிரு நிதியம் பேதா யாரதா முரைத்தி யென்றார். 106

ஆகலாற் பரம ராஜ னருட்டிர வியத்தைப் பெற்று
தீதெலா மகல நோற்பிற் சிந்தனை பிறிதொன் றில்லை
ஈதெலாஞ் சோர விட்டிவ் விகபோக நச்சி வாணாட்
போதெலாங் கழிய நிற்கும் புல்லியர் கதியி சாய்மின். 107

ஒருபொழு தேனும் வாழ்வ தறிகிலா ருலக மாந்தர்
கருதுப கோடி யல்ல பலவென்று கருத்திற் காட்டுந்
திருவரு ளுரையு மெண்ணார் சிற்றின்பப் படுக ராழ்ந்து
பொருவரும் வாணாள் வீணே போக்குதல் புலமைத் தாங்கொல். 108

ஒருவனோர் திராக்ஷத் தோட்டத் தூன்றின னத்தி யொன்றை
பெருமா மான போதுங் கனிகொடாப் பெற்றி நோக்கித்
திருவனிந் நிலங்கெ டுக்குந் தருவிதைச் சிதைத்தி யென்னாப்
பொருவருந் தோட்டப் பாது காவலன் புரிவிற் கூறும். 109



ஆண்டகா யின்னு மோராண் டளவும்யான் சுற்றிக் கொத்தி
வேண்டுர மிட்டுத் தக்க விதம்பல பருவஞ் செய்துங்
காண்டகு கனிகொ டாதேற் கட்டளை யிட்ட வாறு
கீண்டெறிந் திடுவ னென்று கிளந்தனன் றெளிந்து கொண்மின். 110

ஒருவனன் புடைய தந்தைக் கோரிரு புதல்வ ருள்ளார்
இருவரி லிளையா னைய வென்னொரு பாக மெற்குத்
தருகவென் றிரந்து கேட்பத் தந்தைதன் னுரிமை யாவும்
நிருவிகற் பாகப் பங்கிட் டுதவின னேர்மை யாக. 111

கைப்பொருள் கண்டான் றந்தை கரைந்தசொற் பொருளைக் காணான்
மெய்ப்பொரு ளறியா னுள்ளம் விழைந்தசிற் றின்ப மாயப்
பொய்ப்பொரு ணச்சி யோடிப் புறம்புபோய்த் தந்தை யீந்த
அப்பொரு ளிழந்தா னந்தோ வசதியா யினன்சின் னாளில். 112

அங்கொரு குடும்பி தன்னை யடுத்தவன் பன்றி மேய்த்துத்
திங்களோ ரிரண்டு மூன்று செல்லவத் தேச மெங்கும்
வெங்கொடும் பஞ்ச நேர்ந்து வெதுப்பிரும் பசிக்காற் றானாய்
நுங்கினான் பன்றிக் கூட்டு நொறுங்குகுற் றமித்த விட்டை. 113

குற்றமித் தவிடுங் கிட்டாக் கொடும்பஞ்ச மதிக ரிக்கச்
சற்றுளந் தெளிந்தா னாகிச் சஞ்சலித் தழுதென் றந்தைக்
குற்றவூ ழியர நேக ருண்டுதேக் கெறிய யானோர்
துற்றுண வின்றி யாவி சோர்குவ விதென்றாற் புத்தி. 114

புகலொன்று மில்லே னென்னாப் புந்தியில் பிழையை யுள்ளி
மிகவுள முடைந்து நைந்தான் மெய்ம்மனஸ் தாபங் கொண்டான்
தகவுடைத் தாதை பக்கற் சார்குவ னேற்றான் பெற்ற
மகனெனப் பரிவ ரல்லான் மறுத்திடா ரெனத்தே றுற்றான். 115

ஒல்லையே யெழுந்தான் றந்தை யுத்தம குணமுன் னீர்க்க
அல்லல்செய் பசியின் னுந்த வடுத்தன னறிந்து தந்தை
வல்லைவந் தணைத்து முத்தி மகிழ்ந்தனன் மகவா சைக்கோர்
எல்லையு முளவோ மைந்த னெத்தனை பிழைசெய் தாலும். 116

எந்தையே யெந்தை யேயென் றேங்கிநெட் டுயிர்த்துக் கண்ணீர்
சிந்திநொந் துமக்கு முன்னுந் தெய்வத்துக் கெதிரு மாகப்
புந்தியற் றளவில் பாவம் புரிந்தன னினியா னுன்றன்
மைந்தனென் றுரைக்கத் தானு மபாத்திரன் மதியொன் றில்லேன். 117

ஐயமன் னிக்கச் சித்த மாயின்மற் றளிய னேன்யான்
உய்யுமா றருளி நம்பா வூழியத் தொருவ னாக்கி
வையகத் திருத்து கென்று வாய்திறந் தாற்றி நிற்ப
நையலென் றருளிற் கூட்டிச் சென்றன னகத்துள் நண்பால். 118

மகனிவன் மரித்தா னின்னே மறுத்துயிர் பெற்றா னாகத்
தகவுடை விருந்தெ மர்க்குச் சமைக்கெனப் பணித்து மைந்தற்
குகவையின் வஸ்தி ராதி யுடுத்தருங் கலமும் பூட்டிப்
புகாறு மகிழ்கொண் டாடி யிருந்தனன் புதல்வ னோடும். 119

ஆயிடைச் சேட்டன் வந்தா னகக்களி யாட்டுக் கண்டான்
மேயதென் னெனவினாவி யறிந்தனன் வெகுண்டு நின்றான்
நேயமார் தந்தை நோந்து நின்னொரு கனிட்டன் மாண்டு
போயவன் பிழைத்து வந்த புதுமையின் களியி தென்றான். 120

மைந்தநீ யென்னோ டுள்ளாய் வாழ்வெனக் குள்ள யாவுஞ்
சொந்தமற் றுனக்கே யன்றோ சோதரன் மதியற் றேகி
நொந்துவந் தணைந்தான் மீண்டு நுண்மதி யுடையை நீயுன்
சிந்தனை திருகல் நன்றோ சேர்ந்துடன் களித்தி யென்றான். 121

வானநாட் டதிபன் றந்தை வான்வழி விடுத்தோர் புத்தி
ஈனராங் குமர ராவ ரிருஞ்சுவி சேஷ மார்க்கர்
ஆனவர் சேட்ட ராவ ரகக்களிப் படையு நீரார்
மோனராஜ் ஜியத்த ராவர் முறைதெரிந் துணர்ந்து கொண்மின். 122

ஒருபெருஞ் செல்வன் பீதாம் பரவுடை யுடுத்தி வாழுந்
திருவினன் ராஜ போகஞ் சிறிதெனச் செருக்கும் போகி
அருவிலை பெறுபல் பண்டத் தறுசுவை யமைந்த வுண்டி
பெருவயி றாரத் துய்த்துப் பேணுவான் மறுமை பேணான். 123

அங்கவ னணிகொள் மாடத் தலர்கடை துச்சி லாகத்
தங்கினா னொரு மாங்கு தணந்தெறி மிச்சில் நச்சிச்
சங்கட நுகரு மேழைத் தரித்திர னங்க முற்றும்
வெங்கொடும் பருக்கண் மிக்கு வேதனை யுழக்கு நீரான். 124

இன்பெலாந் தூர மாக விரங்கலுந் தவிப்பு நீங்காத்
துன்பமுஞ் சொரிகண் ணீருந் தொடர்பறாத் துணைநட் பாக
முன்புறு நாய்க ணக்கி முறைப்பணி புரிவோ ராக
என்பக ருதுமவ் வேழை யிலாசரு விடுக்கட் பாட்டை. 125



வறுமையும் பிணியும் யாண்டும் வருத்தவே ழைனைப் போக்கும்
பொறுமையுஞ் சகிப்புஞ் சிந்தை பூத்தினி தமைய வத்தைத்
தெறும்மருந் தாகக் கொண்டு ஜெகத்துநாட் கழித்த பிற்றை
மறுமையி விராஜ போக மலிந்தசந் நிதிபுக் குய்ந்தான். 126

பெருமித வாழ்க்கை யுள்ள பேதையச் செல்வன் பொன்றி
எரிமலி கும்பி வாழ்க்கை யெய்தினன் கண்ணை திட்டுத்
திருமலி ராஜ போகந் தெவிட்டிலா சருவைக் கண்டான்
பொருவிறன் மதியீ னத்தை நினைந்திவை புகல லுற்றான். 127

வேறு.

மெய்யா ரணமும் விசுவா சிகடம்
பொய்யா வுரையும் பொருள்செய் திலனாற்
பையா டரவப் பணிவெவ் விடமுண்
டையோ வழலா டமிழ்வே னனியேன். 128

பாசத் தளையும் படுசெல் வமுநீள்
மோசப் படுபுன் மதியும் முடுகி
நாசப் பரவை நடுவுய்த் தவினி
நீசக் கனனீந் துவதெந் நெறியான். 129

சாகாப் புழுவுந் தணவாத் தழலுங்
கூகூ வெனவொந் தலறுங் குரலும்
ஏகா வெனைவிட் டினியோ ரிறையும்
போகா வுயிர்பொன் றுவதென் றினியே. 130

ஞாலத் தொருசில் பகனன் றில்வினை
ஆலத் தைநுகர்ந் தெனதா ருயிரைக்
காலச் சுழல்சக் கரமீர்ந் திடுபா
தாலக் கடல்வீழ்ந் துதவிப் புறுவேன். 131

பெருமைத் திடரே றியபித் தனென
கருமத் தைநினைந் துநகோ ளபதித்
தருமத் துரைநீ திதமத் திரளை
நிருமித் ததெனக் கெனிகழ்த் துவதே. 132

அகல்வா னாச னருள்கோ மகனைப்
புகல்புக் குயவோர் பொழுதுண் டுகொலோ
பகலே யெனிநிக் குவைபா ருளகொண்
டுகவா யருணா ழிகையொன் றுயவே. 133

அருளே துமிலே னகலே னுமைவிட்
டிருளே நரகே யெனையெத் தனையாய்
மருளூ ழிசெறுத் துவருத் திடினும்
பொருள்யா துயிர்போக் கிடவல் லுதிரோ. 134

நல்லார் மதியு நவைதீர் மறையின்
எல்லா மதியு மிதயக் கரிதிங்
கில்லா மதியு மிகந்திங் கிறுத்தாய்
பொல்லா மதியே புகலென் மதியே. 135

ஆண்டுண் டுசுகித் தனையன் புளைபோல்
மாண்டன் றொடொழிந் தனையாங் கொன்மதி
கீண்டித் தலைகீ ழுறமே லெழுவான்
ஈண்டொன் றுளைப்பா யலையெங் குளைநீ. 136

சொன்னாய் பலதுன் மதிதொல் புவியிற்
பின்னா வருபே ரிடரா ழிகிலே
உன்னா துனுளாத் தலையோ டிவிழுந்
கின்னா ளெரியுண் பலிதென் கதியே. 137

கள்ளத் தைவிடுத் துளகட் டுளைகொண்
டுள்ளக் கரியே சிலகா லமுளைத்
தெள்ளப் படுபா வியெனைக் கைவிடுத்
தள்ளற் படுபா தலத்தாழ்த் தினையே. 138

உலகா சைபுகட் டியுலா சநெறி
விலகா துமருட் டிமின்னார் வலையிற்
பலகா லும்விழுத் தினைபா ரிடநீ
அலகா யுனவஞ் சமறிந் திலனே. 139

அளவில் சுகபோ கமளித் தெனுடன்
இளவா யுளெலா றுகர்ந்தின் றிவ்வுலக்
களவாழ் வுமளித் தனைகை தவமார்
உளமே யெனைவிட் டொழிவா யலையே. 140

பொன்னா டுபுகப் பொழுதின் றுலகின்
றின்னே விடியா விருண்மூ டியதால்
என்னோ மனனே யெனையுங் கெடுத்தாய்
அன்னோ வினியென் செயலா வதுவே. 141



வானா ளிறுமுன் வளநா டடையுங்
கோனா நெறிகூ டலையே கொடியாய்
நானா ளும்வினைத் தலைநச் சுவினை
கானாய் விழைவுற் றதுகா ரிருளே. 142

ஞாலத் தொருநன் றினடைப் பிணமாய்க்
காலத் தையிகந் துகடைப் படுமிம்
மூலத் தளறா டுமுயங் கியவென்
சீலத் திறன்செவ் விதுசெவ் விதரோ. 143

வேறு.

என்றிவ் வாறுநொந் திடர்நிரம் பிருட்கடன் முயங்கிப்
பொன்று பேறுமற் றேனென வெக்குறீஇப் புனித
மன்றி லங்குலா சருவைபு மகப்பலி யமைந்த
வென்றி யாபிர காமையும் விழிக்கெதிர் கண்டான். 144

கண்டு பன்முறை கூவின னளியன்கை தவத்தால்
மண்டு காரிருட் குழலுற் றனன்படு வாதைக்
குண்டு கொன்முடி வாற்றுகிற் கிலனுயிர்க் கிறுதி
தண்ட லில்பெருங் காதலிற் றேடுவன் றமியேன். 145

சாவு மின்றுமோர் கணந்தொறும் வேதனை தழைப்ப
நோவு மல்கிவெய் துயிர்துடித் துயங்குவ னோலென்
வீவின் றாகிய வுயர்பதம் பெறுதவம் விளைத்தோய்
பாவி யான்புகல் விண்ணப்பம் பரிந்துகேட் டருடி. 146

ஐய நீயனே னுக்குளி ரத்தரு மளவில்
கையி னோர்விரற் கடைநுனி கங்கையிற் றோய்த்துத்
துய்ய லாசரு விவண்டர விடுத்தருள் சுரத்தி
மெய்ய தாகிய சுகிர்தமுண் டெனக்கென விண்டான். 147

மைந்த கேட்டியுன் னற்பயன் வையகத் தடைந்தாய்
அந்த வாறுதன் றீப்பய னுகர்ந்தன னிங்கே
இந்த லாசரு வீண்டிர க்ஷணியவீ டிசைந்தான்
னொந்து தீப்பய னுகர்தியீண் டித்திற நுணித்தி. 148

நன்மை வித்தியோர் நற்பயன் றுய்ப்பது நயந்து
தின்மை வித்தியோர் தீப்பய னுகர்வதுந் தேரில்
தன்ம வித்தக தைவிக சருவலோ கேசன்
கன்ம நாடியங் கவரவர்க் கூட்டிடுங் கணக்காம். 149

ஈசன் சித்தமே சாதன மெம்மனோர் செயற்குப்
பேச வேறிலை யன்றியிப் பெரும்பிள வுருவி
நாச வல்லிருட் சூழலை நாடுவ தெங்ஙன்
ஆசை யற்கவென் றுரைத்தன னறவனா பிரகாம். 150

இரவெ னக்கினி விடிவதின் றெனினுமென் கிளைஞர்
உரவு நீணிலத் துளர்சிலர் மெய்யுணர் வொருவி
வரவ டுப்பினு மடுக்குமிச் சூழலை மாயிற்
புரவு ணர்த்தலா சனையவண் போக்குக வென்றாய். 151

செய்த குற்றமு நீதியும் வருநடுத் தீர்ப்பும்
உய்தி றத்தநூல் வழியுமற் றீதிதென் றுலகில்
கைதி கழ்த்துநெல் வியிற்றினங் காட்டுமோ சேயும்
மெய்தி கழ்த்துபஃ றீர்க்கரு முளரென்றி மேலோய். 152

தக்க தாயினு மரித்தவர் மீண்டுபோய்த் தாணி
புக்கு றைத்திடு புதுமைகண் டோம்புவர் புவியின்
மக்கண் மற்றையர் சொற்கொளா தெள்ளுதன் மாபென்
றொக்க லுக்குளம் பரிந்துமன் றுடினா னாரறி. 153

துன்று காரிருட் சூழலான் சொற்றவை கேட்டு
வென்றி கூரர சன்றிரு விளம்பரம் விளம்பும்
நன்று ளாருரைக் குணர்வுறார் நம்புவார் கொல்லோ
பொன்றி யோருரைக் கேகென வருந்தவன் போனான். 154

தீக்கொ டுஞ்சிறை புகுந்தவர் தீவினைப் பயன்மேல்
ஊக்கி நின்றுதன் பூட்டுபோ துணர்ந்துளந் திரும்பிக்
கூக்கு ரற்படுப் பினும்பய னென்னைகொல் கொண்ட
ஆக்கை வீழுமுன் னறப்பயன் கூட்டிடா தவமே. 155

கூற்று வைகலுங் கோடியா ஜீவரைக் கொள்ளை
ஆற்றி நுங்குவ தறிந்துமெய் யாக்கத்தைக் கருதார்
தோற்று தீவிட வைம்புல நுகர்ச்சியைத் துய்த்து
மாற்ற ருஞ்சிறை மறிவரீ தென்கொலோ மடமை. 156

அருளின் செல்வமே செல்வத்துட் செல்வமற் றதனைத்
தெருளுஞ் செல்வரே யுன்னத நித்திய செல்வர்
பொருளின் செல்வரீத் திளையவா மற்றவை போற்றி
மருளும் பூரியர்க் குறுவது நித்திய வறுமை. 157



உலக செல்வத்து மயங்கிமெய் யூர்த்தறா னெறியை
விலகு றுத்தருட் செல்வரா டுறந்தனை விரகோ
டலகில் போரு ளாண்டகை யவனிக்கன் றளித்த
இலகு வான்மதி யிருஞ்சுட ரகந்திகழ்த் திடுவாம். 158

வேறு.

இவ்வண்ண மிரக்ஷணிய நெறிபுகுக்கி வானுறவோங்
கிதயக் குன்றில்
மெய்வண்ண வற்புதமாந் திருவிளக்கில் விசுவாசச்
சுடரை யேற்றி
உய்வண்ணஞ் சமைத்திடுவா னுளங்கொண்டு குமரேச
னுலகோ ருக்குக்
கைவண்ண மருள்வண்ணங் காட்டும்வண்ணஞ் சொல்வண்ணங்
காட்டுங் கொல்லோ. 159

திருநோக்காற் றிருவாக்காற் றிருக்கரத்தாற் றிருவருளாற்
றீண்டிக் கிட்டி
ஒருவரிய பிணிபிறவிக் குருடுசெவி டூமைமுட
முதிரப் பாடு
வெருவருபேய்க் கோரணிசித் தப்பிரமை திமிர்வாத
வியாதி யாதி
பருவரலுற் றோர்க்கருளி யிகபரநன் மையையளித்தார்
பரமன் மைந்தன். 160

தொண்டரிடு முறைபாட்டி னறிதுயினின் றெழுந்தருளோர்
சுருதிச் சொல்லின்
மண்டலஞ்சூழ் வாரிதியின் கொந்தளிப்புங் கடுஞ்சூறை
மாரு தத்தின்
மூண்டுபடு நிலைப்பிறழ்வு மொருங்கமைய வொல்லையுல
குவந்த தம்மா
அண்டபகி ரண்டமெலா மமைத்ததிரு வாக்கினுக்கீ
தரிதாங் கொல்லோ. 161

மன்றலிலா வொருசிறுமி யமங்கலையி னொருசிறுவன்
வாணாண் முற்றிப்
பொன்றியபின் னுடலீமம் புகுமுன்னர்த் தாய்தந்தை
புரப்பான் வேண்டச்
சென்றிரங்கிப் போனவுயிர் திரும்பியுய வருள்புரிந்த
செயலை நோக்கி
நின்றவருங் கேட்டவரும் வானாட்டு நெறிபிடித்து
நிகழ்வ தானார். 162

மாண்டுபிரே தக்குழியி லொருநாலு வைகலுடன்
மறிந்து மாவி
ஈண்டொருவி மறுமையிற்புக் கினிதுறைந்து மிறைமகிமை
யிகங்கண் டேத்தக்
காண்டகைய சுவிசேஷ கதிமார்க்க நலங்கவினக்
கருணை வாக்கின்
மீண்டுயிர்பெற் றெழுந்ததிரு வடிதொழுதா னொருதொண்டன்
வெளிப்பட் டைய. 163

ஒக்கலெலா மற்றிவரே யுன்னதநாட் டிளவரச
னொருங்கு பேயின்
சிக்கறுத்துச் சிறைமீட்டு ஜீவகோ டியைப்புரப்பான்
ஜெகத்து வந்த
சக்கரவீ சுரன்மைந்த னெனவிசுவா சம்பூண்டு
சரணம் போற்றி
அக்கணமே வானரசற் காட்பட்டா ரொருசிறிது
மைய மின்றி. 164

தூயசேத் திரத்திலெங்கு மித்தகைய வற்புதத்தின்
றொனிபோய் முட்டப்
பேயரசாட் சியையொருவிப் பிரபஞ்ச மயக்கறுத்துப்
பின்முன் னுக
நாயகனைத் தரிசித்து நற்கதிமார்க் கத்தூன்றி
நடைப்பட் டார்பல்
ஆயிரவ ரருணனொளிக் கெதிரூன்றி நிற்பதுகொல்
லந்த காரம். 165

எள்ளரிய விளம்பரமு மிகபரசா தனநடையு
மெதிரி லீண்டும்
விள்ளருமற் புதச்செயலுங் கண்டுகேட் டுளந்திரும்பும்
விந்தை யோர்ந்து
வள்ளலருட் செயற்கிடைந்தவ் வலகைப்பா சறையூன்றும்
வைரி யாய
கள்ளவே டக்குரவ வொன்னரே சதிபுரியுங்
கருத்துட் கொண்டார். 166

பகைப்புலத்தார் சதிவினையும் பூரமசுத னரும்பாடும்
பகையைச் சிந்தி
ஜெகப்புலையன் சிரஞ்சிதைத்த ஜெயப்பாடும் பரலோகத்
திருவோ லக்கத்



தகைப்புலவ ரெடுத்தேத்துந் தந்தைகளி கூருதலும்
பிறவு மெல்லா
வகைப்பாடு மாண்டாண்டு கேட்டறிதி வழிக்கிடையில்
மைந்த வென்றான். 167

## வேறு.

வித்தகக் கதிவழி புதுக்கி மேலைநாள்
நித்திய திரித்துவ நிரும லாதிபன்
புத்திரன் றருமிது புரவு நூனெறி
சித்தசஞ் சலமினித் தீர்தி யாலெனு. 168

மக்களை மனைவியை மனையைக் காதல்கூர்
ஒக்கலை யுரிமையை யுவக்குந் தேசத்தை
இக்கணம் விடுத்தியா னியம்பு தேயத்திற்
புக்குவாழ்ந் திருத்திநீ போதி யாலெனு. 169

எழுதிய தோற்சுரு ளெடுத்து நண்பநீ
பழுதிலா மொழியிது பார்த்தி யோவென
உழுவலன் பொடுமன முவந்து நோக்கியீண்
டெழுவல்யான் செல்வழி யாதிங் கென்றனன். 170

ஆங்குறு பெருவழிக் கப்பு றத்தொரு
பாங்குறு வாயிலைப் பார்த்தி யல்லையேல்
ஓங்கிருஞ் சுடரொளி யொன்று காண்டிமற்
றீங்கிது குறிக்கொளீஇ யேகற் பாலையால். 171

எட்டிநீ நடந்துசென் றிடுக்க வாயிலைக்
கிட்டியுன் கரங்கொடு கிளர்க பாடத்தைத்
தட்டுதி யுனக்கறி தக்க யாவையும்
உட்டெளி வுறவவ னுரைக்க லாகுமால். 172

என்னுரை யனுத்துணை யிகப்பை யாயினும்
மன்னர்கோன் வளநகர் மருவு வாயலை
பன்னுறு கவர்வழி பலவுண் டாங்கவை
உன்னரு நரகபா தலத்தி லுய்க்குமால். 173

நெறிபிச காதிடை நின்றி டாதொளிக்
குறிபிடித் தேகெனக் கோதி லன்பொடு
செறியுநல் லாசிகள் செப்பி னுனவந்
தறிவனு மஞ்சலித் தகன்று போயினன். 174

சுவிசேஷமார்க்கப் படலம் முற்றிற்று.

## யாத்திராரம்பப் படலம்.

இடுக்குறு வாயில்சென் றெய்தி டாமுனம்
தடுக்கருந் தடையயற் சாரு மோவென
நடுக்குறு மாயினு நாயினே னைக்கை
விடுக்குமோ விறையென வெருட்சி நீங்கினான். 1

கண்ணிலா னிருவிழி காணப் பெற்றபோல்
மண்ணக விருள்கெட வயங்கு மாச்சுடர்
நண்ணிட மறிந்துள மகிழ்ந்து நாட்டம்வைத்
தெண்ணமற் றின்றியே விரைவி னேகினான். 2

போவது கண்டெமைத் துறந்து போதல்நன்
காவதோ திரும்புகென் றுருகு லத்துடன்
கூவினர் மனைமகார் குறிக்கொ ளாதவன்
ஜீவனே ஜீவனே யென்னச் சென்றனன். 3

மூண்டெரி வளைந்திட முடுகி யிற்புறந்
தாண்டிவீழ்ந் தாருயிர் தப்பி நின்றுபின்
வேண்டுவ முயலுவா ரலது வெண்மையால்
மாண்டழிந் தொழிவரோ மனைம காரொடும். 4

பற்றியாங் கொணர்வமென் றிருவர் பன்னிப்போய்
உற்றனர் விரைந்துசென் றுவந்து வேதியன்
கொற்றவன் றிருநகர் குறித்த கொள்கையோ
மற்றுநுங் கருத்தெது வழுத்து வீரென்றான். 5

இன்றுநீ மனந்துணிந் தெமைவிட் டேகிடில்
ஒன்றிடும் பெருந்துய ருண்மை யாதலால்
சென்றிடே லெம்முடன் றிரும்பு வாயெனில்
நன்றுனக் காம்பெரு நமர்க்கு நல்லையால். 6

அரும்பெறன் மக்களை யாவி யென்றனை
விரும்பிய மனைவியை வெறுத்திட் டேகுதல்
கரும்புவேம் பாயதோர் கணக்குப் போலுமால்
இரும்பிய னெஞ்சினா யிதுநன் காவதோ. 7

இத்தலத் துரிமையா வையுமி கந்துசென்
றத்தலத் தழிவில்பே றடைவ னென்றியால்
கைத்தலத் தரும்பொருள் கழிய வீசிடும்
பித்தரோ தனக்கொடி பிறங்க வாழுவார். 8



என்றுவன் னெஞ்சனீ தியம்பக் கேட்டலும்
நன்றுநன் றுன்னுரை நாச தேசத்தில்
நின்றுயி ரழிந்தெரி நிரையஞ் சேரவோ
இன்றெனைக் கூவுதி திரும்பென் றேழைநீ. 9

சீலமு மொழுக்கமுந் திறம்பு தேசத்தின்
சாலமு மாயமுந் தழுவி யின்னுமென்
காலமும் ஜீவனுங் கவிழ்ப்ப னேகொலாம்
ஆலமென் றறிந்தபி னருந்து வாரெவர். 10

நிலைநிலா தழிவது நிரையத் துய்ப்பது
கலைவலார் வெறுப்பது களங்க மிக்கது
மலைவுறு துன்பநோய் மலியப் பெற்றது
புலையுல கத்தநு போக சாரமே. 11

குறைவுறா நித்தியங் குலவத் தக்கது
கறையுறா நலத்தது கருதொ ணாதது
நிறைவது வாடிடு நீர்மைத் தன்றுகாண்
இறைபர லோகபே ரின்ப பாக்கியம். 12

ஆழியான் பேருல கணுகு மின்பத்துக்
கூழியிவ் வுலகிருந் துறுக ணின்றியே
வாழினு மிஃதனு மட்டொப் பாகுமோ
பாழிலே யுழலுதி பயனை யோர்க்கிலாய். 13

மகத்துவ மாயபே ரின்ப வாழ்வினை
அகத்திடை மதிப்பவ ரலகி லாதுவந்
திகத்துறு பாடெலா நொய்தென் றெள்ளுவர்
ஜெகத்தையே மதிப்பவர் சிந்தை மாழ்குவர். 14

புற்புத வுடற்சுக போக நச்சியே
பிற்படு குழியில்வீழ்ந் தழிவர் பேதையர்
முற்படு துயரினை முருக்கி நித்திய
சிற்பர சுகநிலை யடைவர் செவ்வியோர். 15

களைகணு வுலகெலாங் காக்கு மெம்பிரான்
கிளையலால் நலந்தருங் கிளையெற் கில்லையால்
வளையுமிக் குழுவெனை மயற்குள் ளாக்கிடுந்
தளையலாற் கிளையெனச் சாற்ற லொல்லுமோ. 16

மேழிகைப் பிடித்தனன் விடுக்கி லெனினி
நாழியொன் றாயினு நாச தேசத்துத்
தாழிலே னுன்கெடு மதியைச் சார்ந்துநின்
றாழிநா யகனுரை கடக்க வொண்ணுமோ. 17

மற்றினி யுரைப்பதென் வன்னெஞ் சோயிவன்
சொற்றவை மெய்யெனத் துணிதி யேலெற்பின்
பற்றிவான் பாகதிப் பயன்றாய் யின்றெனில்
நிற்றியே னில்லென நிகழ்த்தி னானரோ. 18

கேட்டுவன் னெஞ்சனீ தமையுங் கேவல
நாட்டுவாழ் வுவந்தனை நடத்தி நீயெனா
மீட்டியாம் போதுமென் னெஞ்ச வேதியன்
கூட்டுற வினியொலா தென்று கூறினான். 19

ஓதுமெய்ச் சுருதிநூ லுரைக்கு நீதியும்
தீதுநா மியற்றிய திறனு மேல்வரும்
மாதுயர்க் ககன்றுயும் மார்க்க மாவதுங்
காதலாய்த் தெரித்திடு மிவனைக் காய்தியோ. 20

வேதிய னிங்ஙனம் விதந்த வாய்மையுங்
கோதறு செய்கையுங் குணமு மொத்தலால்
தீதல விவன்வழிச் சேற லென்றியான்
போதர விசைந்துளம் பொருந்தி னேனென்றான். 21

உற்றமென் னெஞ்சகை யுறவ ருந்திட
வெற்றுமிக் குத்துதல் விழுமி தன்றுகாண்
சுற்றமுங் காதலுந் துனியின் மூழ்கநீ
பெற்றிடு பயனொரு பெற்றித் தாகுமோ. 22

என்னதுன் மதியுனக் கியைந்த தீங்கிவன்
உன்னரும் பைத்திய முனக்கு நேர்ந்ததோ
சொன்னவத் திருநகர் துன்னி னாரெவர்
பன்னுசொப் பனப்பொருள் பலிக்கு மேகொலாம். 23

ஓடிட மருந்தயின் றுறங்கி வீழ்தல்போல்
நாடியிங் கிவற்றர நவின்று வந்தினே
கோடிய மனத்தின னோடு கூடிநீ
கெடுறத் துணிந்தனை கிளக்க லாவதென். 24



மன்வழி மரபுளார் வகுத்துக் காட்டிய
முன்வழி யிகப்பது முறைமை யன்றினி
உன்வழிச் சேறியேற் சேறி யொள்ளிய
என்வழி யேகுவன் யானென் றேகினான். 25

ஏகுவன் னெஞ்சனுக் கிரங்கி யெம்பிநீ
போகலை யெம்முடன் பொருந்து வாயெனிற்
சாகலை நித்திய சாம்பி ராஜ்ஜிய
போகபூ மியினலம் பொருந்து வாயென்றான். 26

பன்முறை வேதியன் பரிந்து கூவவும்
நன்முறை யறிகிலா னாச தேசத்துச்
சென்முறை துணிந்தனன் ஜீவன் மல்கிய
சொன்முறை நிற்பரோ கேடு சூழ்ந்துளார். 27

கல்லென வுரத்தவன் னெஞ்சன் கங்குலை
எல்லெனக் கூறியாங் கீறில் துன்பத்தைச்
சொல்லருஞ் சுகமெனத் துணிந்து போதல்கண்
டொல்லைமென் னெஞ்சனீ துசாவு வானரோ. 28

உத்தம தோழநீ யுவந்து பேசிய
முத்திமா நகர்க்கொரு முதல்வ னாக்கிய
அத்தகு பாதைநீ யறிதி யோவஃ
தெத்திசை யேகுது மெழுக வென்றனன். 29

துணைவநோக் காயிடைத் தோன்று கின்றவோர்
இணையறு சுடாரு கிடுக்க வாயிலை
அணையின்மற் றவையவ னறிய லாகுமத்
திணிசுடர் குறிக்கொடு செல்ல வேண்டுமால். 30

பொருவருந் திருவருட் புணர்ப்பி னாலியாம்
இருவரு முடன்செல விசைந்து நின்றனம்
வெருவர வின்றிமேல் விரைந்து செல்வதே
கருமமிப் பெருவெளி கடத்து மென்றனன். 31

வஞ்சமில் வேதியன் வகுத்தல் கேட்டுமென்
னெஞ்சனு மொருப்படீஇ நெறியைப் பற்றினான்
எஞ்சுறு திருவரும் விரைவி னேகினார்
பஞ்சர நீத்தபைங் கிளியின் பான்மையார். 32

யாத்திராரம்பப் படலம் முற்றிற்று.

## அவநம்பிக்கைப் படலம்.

இன்ன தன்மைய ரிருவரும் பெருவெளி யிசைந்து
மன்னிவ் வோரடித் தடத்தைவிட் டயற்புறம் வழுவில்
துன்னு மின்னலென் றஞ்சின ராய்ச்சுவி சேஷன்
சொன்ன சொற்குறி கடைபிடித் தேகினர் துணிந்து. 1

ஆய காலைமென் னெஞ்சனிங் காளையுங் காணேம்
தூய வேதிய நாஞ்செலத் துணிந்தகா ரியமென்
போயி னிக்குடி புகுமிடம் யாதவண் புகுவோர்க்
கேயு நற்சுகா னந்தமென் னியம்புதி யென்றான். 2

நன்று நின்வினா வுத்தரஞ் சுருதியே நவிலும்
அன்றி யெம்மனோர் வாக்கினுக் கதீதமா மையம்
ஒன்றி டாதுகேட் டுய்த்துணர்ந் திடுகவீ துண்மை
என்று புத்தகச் சுருள்படித் திவையிவை யியம்பும். 3

ஜீவ ரக்ஷையை நாடிநாஞ் சென்றுசே ரிடந்தான்
ஓவ வில்பர லோகராஜ் ஜியமஃ தற்றால்
மேவ ரும்பர மானந்த சுகநிலை மேவும்
தாவி னித்திய ஜீவனைப் பெறுவதுஞ் சரதம். 4

துன்ப வாழியின் மூழ்கிவெந் துயரெலாந் துடைத்து
மன்ப தைக்கழி யாப்பதம் வழங்கிய வரதன்
அன்பு மல்கிய ஜீவமா நதித்துறை யாடிப்
பொன்பொ லிந்தசெஞ் சேவடிக் கற்பகம் புகுவாம். 5

விழுத்த குங்கதி ரொளிதிவள் வெண்டுகில் புனைந்து
வழுத்து தற்கரு மகிமையொண் மௌலியைச் சூடிப்
பழுத்த பத்தியிற் பரவச ராகிநம் பரனைத்
தொழுத்த குஞ்சர கணங்களோ டடியிணை தொழுவாம். 6

புனித ராகிய புங்கவர் புரையில்புத் தேளிர்
நனிதி ருப்பணி விடைபுரி தூதர்நம் பனுக்காய்த்
துனிசு மந்துயிர் விடுத்தவான் கதிபெற்ற சூரர்
இனிதி னேத்துபல் லாண்டிசை செவிமடுத் திடுவாம். 7

ஜீவ தாருவின் செழுங்கனித் தீஞ்சுவை யமிர்த
தேவ போனக மாரவுண் டானந்தந் தேக்கி
ஓவி லன்பொடு துதிபகர்ந் துவந்தினி திருப்பாம்
பாவ சங்கடம் யாவையு நம்முழை படரா. 8



இல்லை நோய்பசி தாகமா தியதுய ரென்றும்
இல்லை முப்பிணிக யான்வரு முபாதிக ளென்றும்
இல்லை வேதனை யுற்றழு கண்கணீ ரென்றும்
இல்லை யோர்குறை யெம்பிரா னிராஜ்ஜியத் தென்றும். 9

வாக்கி னான்மனத் தாலளப் பரிதிம்மாண் கதியிற்
போக்கு வித்தெமைப் புரப்பது புரவலன் புதல்வன்
ஆக்கு புண்ணிய மதற்கெமைப் பக்குவப் படுத்திக்
காக்க வல்லதிங் காழிவேந் தாவியின் கருணை. 10

இன்ன தோர்ந்தருள் வாக்கினை மதித்திள வாசன்
தன்னை மெய்விசு வாசத்தி னாற்றன தாக்கிப்
பின்ன மற்றநல் லாவியின் பேருள் பேணி
நன்னெ றிப்படி யிறுவரை நணுகு மப்பேறு. 11

சுருதி நூல்படித் திவ்வணங் கிறிஸ்தவன் சொல்லக்
கருதி யாங்குமென் னெஞ்சனும் வியந்துளங் களித்துப்
பெரிது நம்வழி தாழ்ப்பது பிழைவிரைந் தோடி
வருதி யென்றலும் வேதியன் றன்னிலை வகுப்பான். 12

ஒன்று கேட்டிமென் னெஞ்சவென் னுற்பவந் தொடங்கி
நின்ற வல்வினை யீட்டிய தீவினை நெருங்கித்
துன்றி யென்முது குளுக்குற நிமிருமத் துனியாற்
பின்று கின்றன னீயது பெறுகிலா யென்றான். 13

இத்தி றத்தசம் பாஷணை யியைந்திரு வோரும்
மித்தி ரத்துவ மாகின ராய்வெட்ட வெளியின்
மத்தி யிற்செலும் போதொரு மருங்குசே றளையிற்
சித்த சாஞ்சலி யத்தினால் விழுந்தனர் திகைத்து. 14

திகைத்து வீழ்ந்துதத் தளித்துடன் முழுவதுஞ் சேறாய்
அகைத்து ழுக்கிநின் றடிபெயர்த் திடவொணா தழுந்தி
உகைத்தென் செய்வலென் றுளற்றிய பெரும்பிழை யுன்னி
மிகைத்த சிந்தையான் வேதியன் வெருண்டுள மெலிந்தான். 15

இனைய னாகமென் னெஞ்சனுஞ் சிறுபொழு தினைந்து
புனையு நன்மொழி புகன்றெனைத் தெருட்டிய புலவோய்
எனைய துன்னிலை யிறங்கிடு துறையினீத் தென்றாற்
பினையு றுங்கதி விதந்துரை யாடவும் பெறுமோ. 16

இன்னு மெத்தனை யவதியோ துன்பமோ விடுக்கண்
என்ன வோவுயிர்ச் சேதம்வந் தியையினு மியையும்
அன்ன தாதலில் ஜீவனோ டகன்றியா னகத்தைத்
துன்னி யின்னலற் றிருப்பதே நலனெனத் துணிந்தேன். 17

நித்தி யானந்த ராஜ்ஜிய நெறிகடைப் பிடித்துப்
பத்தி யானது பழுத்துளை போலநீ பகர்ந்த
முத்தி மாநல முளைநில முழுமையுங் கடந்து
தத்தி யேறியக் கரைப்படிற் பெற்றனை தக்கோய். 18

என்று கூறிய வமைதியின் மறைந்துட னியைந்து
நின்ற காமமோ கிதன்பிர பஞ்சனன் னெறியைத்
தொன்று தொட்டறத் துடைத்திட முயல்கின்ற தூர்த்தன்
ஒன்றி மூவருங் குதுகலித் தோடிவந் துற்றார். 19

உற்ற டைந்துமென் னெஞ்சனுக் குவப்புரை பேசிப்
பற்றி யீர்த்தனர் பிடர்பிடித் துந்தினர் பழுது
துற்று சிந்தையி னானுமங் கவரொடு தொடர்ந்து
நற்றி றங்கெடு நாசதே சத்தைநண் ணினனால். 20

கோது துற்றிய நிலையிலாக் குச்சித வாழ்வைக்
காத லித்துநித் தியசுக வாழ்வினைக் கசந்தான்
ஏதங் கொண்டுநல் லாதியம் போகவிட் டிடுமிப்
பேதைக் கெங்ஙனம் வாய்க்குங்கொல் போருட் பெற்றி. 21

நிருவி சாரத்தை யடைதலு நெறிநிலா மாக்கள்
பெருவி சாரியைப் பின்றொடர்ந் தேகிய பித்தன்
வருவி சாரத்தை யறிகுதும் யாமென வல்லே
தெருவி சாலத்தை யடைத்தனர் வயின்றொறுந் திரண்டு. 22

மீண்ட காரியம் வினவிநன் றெனச்சிலர் வியந்தார்
மாண்ட போதினும் வசையரு தெனச்சிலர் வைதார்
ஆண்ட வஸ்தையுண் டென்றுகண் டச்சமுற் றவலித்
தீண்ட ணைந்தனன் கோழையென் றார்சில ரிகழ்ந்து. 23

முட்டிப் பின்குனி மூடனென் றார்சிலர் முனிந்து
திட்டிப் போயினர் சிலர்சிலர் தீண்டலி ரிவனைக்
கிட்டிப் பேசினுங் கேடென்றார் சிலர்சிலர் கெழுமி
மட்டிக் காயிரஞ் சொலினுநன் மதிவரா தென்றார். 24



மறங்கு லாவிய மனத்தின ரின்னணம் வருத்தப்
புறங்கு லைத்திட வூசலா டுளத்தொடும் போனான்
இறங்கு சென்னிய னாகிமென் னெஞ்சனாண் டிப்பால்
அறங்கு லாவிய வேதியற் குற்றதை யறைவாம். 25

மயல ளற்றில்வீழ்ந் துழல்பவன் மருவுதன் பலத்து
கியலு மட்டுமக் கரைப்பட முயன்றுமெய் தரிதாய்ச்
செயலொ ழிந்தியான் றிருமினுந் தேசநா சத்தில்
அயலு ளாரொடு மவிவனே யென்றறி வழிந்தான். 26

சேற்று நீணிலங் கடந்துநன் னெறிக்கரை சேர
ஆற்ற லின்றிநின் றாகுலித் தவசமுற றருகே
தோற்று மிச்சுடர் வாயிலைத் துன்னியா னுய்ய
மாற்ற ருந்துணை வாய்க்குமோ வீண்டென மலைந்தான். 27

ஆய காலைநஞ் சுண்டவர்க் காருயி ரளிக்குஞ்
சேய நன்மருந் தெதிர்ந்தெனத் தேம்பிநின் றழுசேய்க்
காயெ திர்ந்தென வஞ்சலென் றாங்குவந் தடுத்தான்
நேய மிக்கச ஹாயனென் றுரைபெறு நெடியோன். 28

கிட்டி வந்துநின் றெம்பிநீ கெடுநொதி யிதனுட்
பட்டு யங்குவ தென்னைநம் பார்த்திவ னருளால்
இட்ட கற்களி லூன்றிநின் றிக்கரை யேறு
தட்ட திக்கையும் பார்ப்பதென் னவமதி யென்றான். 29

ஐய கேள்சுவி சேஷக னாருயிர்க் காணூந்
தெய்வ வாயில்புக் குய்தியென் றுரைத்தனன் றெருண்டு
மெய்யொ ளிக்குறி பிடித்தியான் விரைந்துவந் தளற்றில்
வெய்ய தீவினை முன்னின்று வெருட்டலில் வீழ்ந்தேன். 30

கண்ணி ருண்டுளங் கலங்கலாற் கதித்திடுஞ் சுமையால்
அண்ணல் வாக்கினி லமைந்தவஞ் சிலைதெரி யாமல்
எண்ண மிட்டுழல் கின்றன னிவணென விசைத்தான்
நிண்ண யங்கடைப் பிடித்துநல் வழிப்பட்ட நிவர்த்தன். 31

சொற்ற தோர்ந்தருட் சஹாயனுந் துரிசறு முனைக்கல்
இற்றி தீதெனக் காட்டியாண் டுன்றிநின் றென்கை
பற்று கென்றுதன் கரங்கொடு பற்றியீர்த் தாங்கொள்
நற்ற னைக்கனே நிறுவிமற் றவற்கிவை நவில்வான். 32

நல்ல நூனெறி யாமிது வாயிலை நாடிச்
செல்ல யற்புறம் விலகிடிற் றீங்குறல் திண்ணம்
புல்ல ரோடுறை யாடிவீண் பொழுதுபோக் காதி
ஒல்லை யேகென விடைகொடுத் தேவின னுவந்து. 33

ஓங்கு மாநகருஞ் செஞ்சுடர் முன்பனி சிதறி
நீங்கு மாறுசு ரேந்திர னருளிய நெறியும்
ஓங்கு மன்பொடு சஹாயன்வந் துதவிய வுரித்தும்
வீங்கு காதலோ டுன்னிவே தியனிவை விளம்பும். 34

அரவு மேலான தேளையை மீட்டென வகாதத்
தூரவ ளற்றின்னின் றெனைக்கலா யேற்றிய தோன்றல்
கரவி லாதுனைப் பழிச்சுவ தலதுகைம் மாறென்
றுரவு நீணிலத் துண்டுகொல் யானுனக் குதவ. 35

பன்ன ரும்பல பாதகம் பயின்றபா மரனும்
என்னை யுன்னவெம் மாத்திர மெம்பிரா னுளத்தில்
அன்ன தாகநின் னரியபே ருதவியெற் கமைத்த
மன்னி ரும்பெருங் கருணைக்கு முளகொலோ வரம்பு. 36

பற்றி யாதுமின் றுகவும் பரிந்துமெய் யன்போ
டுற்று நேர்ந்தவர்க் குயிரளித் தாயினு முதவி
முற்றி யாதரம் புரிவரான் முன்னவ னருளைக்
கற்று வல்லசான் றோரெனக் கேட்டுனைக் கண்டேன். 37

என்று பன்முறை யனறியை வியந்தின வியம்பித்
தன்று ணைக்கரங் குவித்துவந் தனம்பல சாற்றி
முன்ற னுங்கடை வாயிலை நோக்கினன் முடுகிச்
சென்ற னன்னொரு தமியனாய் வேதியர் திலகன். 38

நிகழ்ந்த சம்பவம் யாவுங்கை நெல்லியங் கனியிற்
றிகழ்ந்த வவ்வயிற் சஹாயனை நோக்கியான் றிருமி
அகழ்ந்து வைத்தவர் யாவரிந் நொதிக்கிடங் கரசன்
இகழ்ந்த தென்னையோ செவ்விதாக் காமலிவ் வழியை. 39

பாம ராஜ்ஜிய நாடியோர் படர்நொதி யிதனுள்
உரமி லாதுவீழ்ந் துயங்கவிட் டிருப்பதென் னுரிமை
தாமி லாதுயர் மகிபதி யருட்கிது தகுமோ
வாம ஞேகர தெரித்தியென் றுரைத்தனன் வணங்கி. 40



நம்பி சொல்லுவல் கேட்டிமற் றிதன்றிற நலஞ்சேர்
தம்பி ரானொடு மாறுகொண் டிடுமொரு சழக்கன்
வெம்பி மானிடக் குழுக்களை நன்னெறி விலக்கிக்
கும்பி பாகத்திற் குடிபுகுத் துவதவன் கொள்கை. 41

சேற்று நீணில மாமிது செய்ததீ வினையைத்
தோற்று விப்பது பானருள் மறைத்திரு டொகுத்து
மாற்ற ருந்திகில் விளைப்பது வன்றுயர் குழுமி
வீற்றி ருப்பது நொதிப்பது வெறுமனஸ் தாபம். 42

வஞ்ச நெஞ்செனு வாழ்ந்தது மருவுமூ வாசை
விஞ்சி ஞாலெனப் பாந்தது வெவ்வினைத் திரள்போற்
செஞ்ச வேசெறிந் துளதுபொய் வேதியர் செயலில்
எஞ்சு றுததுர்ந் நாற்றமிக் கதுபுற மெங்கும். 43

கானி லைத்துநின் றோவிடக் கவிழ்ந்தவஞ் சிரத்தை
மேனி மிர்த்தவொட் டாதமிழ்த் துவதிதை விறல்கொள்
ஆனி துற்றிய வழிம்பனு மலகைமுன் னகழ்ந்தான்
நானி லத்தவ நம்பிக்கை யெனப்படு நாமம். 44

செப்ப னிட்டிட முடிவதன் றுகலிற் சேற்றுக்
கெப்பு றத்தினு மிடைக்கிடை யிருஞ்சிலை நிறுவி
ஒப்ப மிட்டனர் கருணைமன் னதுபிடித் துந்தித்
தப்பி யிக்கரைப் படுகிலார்க் குய்விலை தக்கோய். 45

தேம லர்த்தொடை நரபதி யொருவன்முன் றியங்கிக்
காம மோகித னெனுமொரு கள்வனாற் கவிழ்ந்திங்
கேம மின்றியே தத்தளித் திடருழந் திணைந்தான்
மீம கீபதி நிறுவிய சிலைபற்றி மீண்டான். 46

மீண்டி ருங்கரை யேறியுய்ந் தவர்சிலர் மீளா
தியாண்டு நீங்கரி தாகிவெவ் விடருழந் தேங்கி
ஆண்ட நாயக னருட்டுணை பற்றிடா தவமே
மாண்டு போனவர் வாரிதி மணலினும் பலரால். 47

மண்ணி லாரண நூனெறி மயக்கற விளக்கி
விண்ணி லாரருள் ஞானசூ ரியனொளி வீசக்
கண்ணி லாரென மருண்டுளைப் படுவது கருதில்
அண்ண லார்பிழை யன்றிவ ரறிமட மாமால். 48

மன்ன னேவலில் வருபிர யாணிகள் வழுவி
இன்ன லெய்திடா திராஜபா தையினிரு மருப்கும்
முன்ன ராக்கிய பித்தியுண் டிவ்வகை மோசந்
துன்னு றாதுசெந் நெறிக்கடை வாயிலைத் துன்னில். 49

இன்ன வாறெனக் கிதமுற வெழின்முக மலர்ந்து
நன்னர் வாசக நவிற்றிய சஹாயற்கு நன்றி
பன்னி யஞ்சலி வரன்முறை பணிவுட னல்கிச்
சொன்ன வேதிய னிலையினை நாடுவான் றுணிந்தேன். 50

அவநம்பிக்கைப் படலம் முற்றிற்று.

## லௌகீகப் படலம்.

ஓதக்கடல் சூழுல கத்தையு வர்த்து நின்ற
மேதக்கநீர் மைவிறல் வேதியன் வேத நுண்ணூற்
போதக்கதி கொண்டொளி வாயில்பொ ருந்த நோக்கி
சோதக்கசும் மையொடு போயினன் சிந்தை நொந்தே. 1

அவ்வேலையிச் சாபுர மென்னவ டுத்தி ருக்கும்
வெவ்வூரிடை நின்றுலௌ கீகன்வி னாந்து கிட்டி
ஒவ்வாதக டுஞ்சுமை தாங்கியை யொப்ப னைவாய்
எவ்வூர்செல வெண்ணுதி நண்பவி யம்பு கென்றான். 2

மோகாதுர னாகிய றத்துறை முற்று நீத்த
ஆகாமிய னானென்ன ருஞ்சுமை யாற்று கில்லேன்
வாகாயசெ ழுஞ்சுவி சேடன்மெய் வாக்கை நம்பி
ஏகாதிப னின்னருள் பெற்றிட வேகு கின்றேன். 3

முன்னானதி ருக்கடை வாயிலை முற்றி லைய
பின்னாகவ றிந்திடு வாய்வரு பெற்றி யாவும்
என்னாவுரை தந்தெனை யேவின னென்றிவ் வெல்லாஞ்
சொன்னானது கேட்டுலௌ கீகனுஞ் சொல்ல லுற்றான். 4

பொருளூற்றறி யாதபுன் மாக்கள்பு கன்ற சொல்லான்
மருளூற்றுரி மைத்திறன் யாவும்வ னாந்து வீசி
இருளூற்றிடர் துற்றிய பாழ்நெறி யேகி னாயென்
றருளூற்றநந் நாட்டவர் பேசவ றிந்த துண்டே. 5



மெய்தானெனி னுஞ்சுவி சேடன்வி ளம்பு மார்க்கத்
தெய்தாரெவ ரீங்கடு மோசமோ டெண்ணி றுன்பம்
வெய்தாம்பசி தாகம்வி ரோதமி குத்த தாலே
நொய்தாகநி னைந்துது ணிந்தனை நோக்கு கில்லாய். 6

இருளுண்டிட ருண்டுப சாசுசெய் யின்ன லுண்டு
வெருளுண்டிக லுண்டுபல் விக்கின முண்டு தட்ட
நருளுண்டரி யேறுவி டங்கொள்பன் னாக முண்டு
மருளுண்டுதி யங்கவ ரும்பல மார்க்க முண்டே. 7

துன்பாருளை தோய்ந்தனை யாதலிற் றோழ நீயவ்
வன்பாடணு மாத்திர மென்னம னக்கொ ளின்னும்
முன்பாகவொவ் வோர்துயர் மேருவின் மும்மை யாக
உன்பாலடை யுங்கணிப் பில்லன வுண்மை யோர்தி. 8

இன்னோரன பாடுகள் நேர்ந்தனை யெய்ந்த போதில்
என்னோபுரி கிற்றியெ னின்னுளா யெண்ணி யெண்ணி
அன்னோவென நின்றழு தேங்குவ தன்றி நண்ப
முன்னோர்ந்துவ ருந்துயர் நீங்கமு யன்றி டின்னே. 9

அந்தோகெடு வாயுன்ன கத்துண்மு ளைத்து வீங்குஞ்
சந்தாபவி காரம லாற்சமழ்க் கின்ற பாரம்
எந்தோபுக றீவினை தீவினை யென்று னையுஞ்
சிந்தாகுல நீங்குதி யேற்சுமை தீரு மாதோ. 10

கோட்டாள்முயல் கீண்டது மேனிகு ளித்த காயப்
பாட்டாலினை யுற்றன னென்றுப ணித்தல் போலாந்
தீட்டாகிய தீவினைச் சும்மைசி தைக்க வாற்ற
மாட்டாதுழல் வேனென நீசொலு மாற்ற மன்னோ. 11

மறக்கத்தகு மாறெவ னீங்கரும் வன்ப ரத்தை
உறக்கத்தும்வ ருத்துமென் றாலிஃ தொன்று கேணீ
துறக்கத்தைநி கர்த்தது நற்றவர் தொக்க தாண்டு
சிறக்கத்தகு மூர்தரு மாபுரி சேய தன்றால். 12

பன்மாண்புறு மப்பதி சென்னெறி பற்றி யேகி
இன்மாண்பன றக்கிழ வோனென வேத்த நின்ற
நன்மாண்பனுக் கிற்றிவை யாவுந விற்றி லன்னோன்
சொன்மாண்பினி னின்சுமை யொல்லைதொ லைப்ப னன்றே. 13

உன்போன்மரு ளுற்றுழன் றார்பல ருய்யும் வண்ணம்
வன்பாரம கற்றினன் மற்றிதின் வண்மை யுண்டே
இன்பாலடி சிற்கலம் வீசியி ரந்து நிற்கும்
புன்பான்மையி தியாண்டுபெ டைத்தனை புந்தி யில்லாய். 14

ஈண்டேகடி தேகியி ருஞ்சுமை யின்னல் போக்கி
ஆண்டேகுடி புக்குனை யாருயி ராக வன்பு
பூண்டாதர முற்றபொ லன்கொடி யோடு வாழ்தி
மாண்டாயெனி னும்வசை யன்றிசை யன்றி மாதோ. 15

பெருமாநிதி யும்முயர் கல்வியும் பெற்றி சேர்நற்
கருமாதியும் வண்புக ழுங்கவி னிப்பொ லிந்த
தருமாபுரி யைப்பொரு மென்றுத ராத லத்தே
ஒருமாநக ரையுரைப் பாரெவ ருண்மை தேரில். 16

நன்றென்னின லங்கிளர் நல்லற நண்ணி யுய்தி
அன்றென்னில்வி னைச்சுமை யோடிட ராழி நீந்திச்
சென்றந்நகர் துன்னரி தாலது தேர்தி யென்றான்
நின்றான்னிவி சாரிதி கைத்தன னெஞ்சம் வேறாய். 17

நல்லானிவன் வாய்மொழி யாவையு நன்மை போலாம்
ஓல்லாவினை தாங்கியிந் நூனெறி யோடி யுய்ய
வல்லானதி யாயது ரந்தான் மாடு சேரில்
எல்லாநல மாமென வெண்ணிமற் றீதி சைப்பான். 18

வழுக்குற்றநி லத்தொரு கோனனி வாய்த்த தென்ன
ஒழுக்குற்றநின் வாயுரை யீண்டெனக் குற்ற தைய
அழுக்குற்றம னத்துய ரச்சுமை யாற்று கிற்பான்
இழுக்குற்றவெ னக்குரை யிற்புறம் யாண்டை யென்றான். 19

விலங்காதிவ ழிக்கொடு சென்றவ்வி லங்க லுற்றால்
இலங்காரெழின் மாநகர் தோன்றுமங் கெய்தி வாயில்
அலங்காரநீ தியற வற்றெழும் பாகு சிந்தை
மலங்காதிந லம்பெறு வாயென வாழ்த்தி விட்டான். 20

தற்புத்தியும் போய்ச்சுவி சேஷன்முன் சாற்று முண்மைச்
சொற்புத்தியும் போயிலௌ கீகன்மன் றாண்டி விட்ட
துற்புத்தியி னீர்மையை வேதியன் சூழ்ச்சி யற்று
நற்புத்தியென் னுமருண் டேகின னன்மை யோரான். 21



நற்றாபத னெம்முயிர் நாயகன் நல்ல நீதி
பற்றாதொரு பத்துவி தித்துணை பற்றி முத்தி
உற்றாருயிர் பெற்றுல வாநல முண்ணு மென்றல்
கற்றாண்டமு விக்கட னீந்தல்க டக்கு மாதோ. 22

விண்ணாடடை யுந்நெறி யோடுமி ளிர்ந்து தோன்றிக்
கண்ணாடுக வின்சுட ருங்கரு தாது போக்கி
மண்ணாடுத டத்தொரு சார்மலைச் சார லூடு
புண்ணாடிய நெஞ்சொடு வேதியன் போயி னானே. 23

வேறு.

வாழிய வானுற நிமிர்ந்த மாண்பது
பாழியங் குவடொரு பத்து மிக்கது
தாழிரும் பொறைநனி சமழ்த்த லாற்றினா
ஆழிசூழ் புவிமுது காற்றொ ணாதது. 24

கருமுகிற் கணம்புடை கஞலுங் காட்சிய
தருமின முழக்கமிக் குரறுங் கோட்பது.
நிருமலன் றிருக்கர நீதிப் பட்டயம்
பொருமொளி மின்குழாம் பொலியும் பொற்பது. 25

துப்புறழ் முடித்தலை கவிந்த தோற்றத்த
தெப்புறத் தினுநனி யிருந்தை யாரழற்
குப்பையை யிறைப்பது குலவு நீணெறி
தப்பிடி லதோகதித் தலத்தி லுய்ப்பது. 26

தன்னுறு வழிப்புகூஉத் தவறி னோர்தமை
முன்னுறு மிருட்சிறைப் படுக்கு மொய்ம்பது
மன்னுறு வழிகடைப் பிடித்த யாந்தர்க்கும்
பன்னுறு திகில்பல விளைக்கும் பண்பது. 27

வசையற விளங்கிய மாட்சித் தாயினும்
பசையறப் புலர்ந்தது பரவை மாநிலத்
திசையுற விவ்வழி யேகு வோர்தலை
மிசையுறக் கவிழ்ந்திடுங் குடுமி மேலது. 28

துன்னரு நெறியது துணுக்க முள்ளது
பன்னருந் தாரதது பனிந்தி ரத்தது
மன்னொரு சுதனலான் மநுக்கள் யாரையுந்
தன்னடிப் படுக்குறுந் தகைமை சான்றது. 29

அதிபதி கனன்றுவந் தருளி மேலைநாள்
விதிகிடே தங்களை விதிக்கப் பெற்றது
கதியையு நரகையுங் காட்டு கிற்பது
முதியசீ னாயென மொழிபெ யர்த்தது. 30

இம்மலைச் சாரலை யெதிர்ந்து வேதியன்
அம்மவி தென்னென வகந்தி கைத்தனன்
விம்மின னுயிர்த்தனன் வெருண்டு நின்றனன்
மும்மடங் காயது முதுகின் சும்மையும். 31

ஓம்புகென் றுணர்த்திய வொளியை நீத்திவண்
கூம்பிறு கலமெனக் குலைந்து யங்கினான்
தேம்பிநின் றழுதனன் றெருமந் தான்மலைப்
பாம்பின்வாய்த் தேரையிற் பரியும் பான்மையான். 32

மலைமிசைக் குவடிடிந் துருண்டு வல்லையே
தலைமிசை விழுந்திடுந் தப்பி யுய்வழி
இலைபிறி தினியென வினைவுற் றேங்கினான்
அலைமிசை தருதுரும் பனைய நீர்மையான். 33

மாற்றடி பெயர்க்கவு மனந்து டித்தனன்
வீற்றுவீற் றருகனல் வெதுப்ப மாழ்கினன்
கூற்றிது வாமெனக் குறுகி னானுயிர்
ஆற்றலோய்ந் தறிவிழந் தலமந் தானரோ. 34

ஆயிடை முன்னிவற் ககந்தெ ருட்டிய
நேயமார் தருசுவி சேட னோர்ந்துநீ
தூயமெய் யொளிதிகழ் சுருதி நூனெறி
மேயிடா திகந்ததென் விளம்பு வாயென்றான். 35

கண்டனன் கருணையி னுருவைக் கண்களால்
உண்டனன் செவிவழி யுரைச்சஞ் சீவியைப்
பண்டைநல் லுணர்வுவந் தணுகப் பாங்குறுங்
கொண்டலை யிருகரங் குவித்தி றைஞ்சியே. 36

நொதியிடை விழுந்துயங் கியது நண்ணிய
மதியுடைச் சஹாயன்வந் ததவு மாட்சியும்
எதிரிலௌ கீகன்வந் திசைத்த மாற்றமுஞ்
சதிவழி புகுந்ததுஞ் சமையச் சாற்றிமேல். 37



புரவல னருண்மொழி புகட்ட வல்லவோர்
குரவமெய் யறிவினைக் கொளுத்தி யேகென
வரவிடுத் தாய்கதி மார்க்கத் தேயெனை
உரவுநீ ணிலத்தெவ ருனையொப் பாவரே. 38

நின்னுரை கடைப்பிடி யாது நீசனேன்
இன்னலுக் கிடைந்திவ ணிறுத்த வென்பிழை
தன்னையுஞ் சமித்தெனைத் தாங்குன் கையடை
இன்னருள் சுரத்தியென் றினிதி னேத்தினான். 39

வேதிய னின்னணம் விளம்ப வித்தகன்
பாதகம் பாதகம் பார மார்த்திக
வேதநன் னூனெறி விழைந்தி டாதொரு
காதக னுரைவழிக் கவிழ்தல் காண்டியால். 40

எவ்வமில் பரமாஜ் ஜியத்தை யெய்துமுன்
தெவ்வள விலாதுனைச் சேர்த றிண்ணமால்
இவ்வள வினின்மலைந் திடைந்து பின்னிடில்
அவ்வள வையுமெதிர்த் தடர்ப்பை யேகொலாம். 41

பொய்யுரை யாதநம் புரவ லன்றிரு
மெய்யுரை மனக்கொளீஇ விசுவ சித்திடா
தையுறு மனர்த்தமே யாதி மூலமன்
செய்யுறு தீவினைக் கென்பர் சீரியோர். 42

கோதிலா மெய்விசு வாசங் கொண்டுநன்
நீதிமா னாவன் பிழைப்ப னீத்திடும்
பேதைபால் யானிரேன் பிரிய மாயெனும்
ஆதிநா யகனுரை யறிந்து கோடியால். 43

சருவலோ காதிபன் சாற்று மாற்றமும்
திருவரு ளடைந்துயு நெறியுந் தீர்ந்துநீ
பெருவழி பிடித்தனை பேதுற் றுதலில்
ஒருவருங் கேடுனக் குறுவ துண்மையால். 44

இன்னவா றுரைத்தசொல் லேதில் வேதியன்
தன்னிரு செவித்தொளை புகுந்து தைத்திட
மின்னுரு மேற்றினை வெருவிப் புற்றுறை
பன்னகம் பதைத்தெனப் பதைத்து வீழ்ந்தனன். 45

ஜென்மசஞ் சிதவிடந் தீண்டி மாண்டநிங்
கென்மதி யிரக்ஷணைக் கினியென் செய்குவேன்
முன்மய வளற்றிடை முழுகி யும்மினும்
நன்மதி படைத்திலே னாச மெய்தவோ. 46

போகமார் பிரபஞ்ச மயலின் மூழ்கிலௌ
கீகமார்க் கத்திலே கெடுவ லோவெனாச்
சோக முற் றுளங்கசந் தழுதா துக்கவெஞ்
சாகரத் தழுந்தினன் றரிப்பொன் றின்றியே. 47

அவ்வயிற் குரவனு மருளி நிற்கொரு
கௌசலையின் றுருக கருணை யெம்பிரான்
எவ்வெங்கப் பாவமுஞ் சமிப்ப ரேழைநீ
செவ்விசு வாசத்திற் றிடங்கொள் வாயென்றான். 48

உற்றவிம் மொழிவழி யுயிர்வந் துற்றெனச்
சற்றுளந் தெளிந்துநம் மிறைவன் றன்னருட்
பெற்றியை நினைந்தியான் பிழைக்கு மாறினி
இற்றென நவிற்றுகென் றிறைஞ்சி நின்றனன். 49

இங்கிவன் பரிவுறு நிலையு மின்னலுஞ்
சங்கையின் றகநன் குணர்ந்து தாபத
புங்கவன் வேதிய பொருந்தக் கேளெனாப்
பங்கமின் மதிசில பகரு வானரோ. 50

இந்நெறிப் படுத்துனை யெய்த்த லௌகிகன்
தன்னையான் முன்னரே யறிவன் சற்பனை
மன்னுமிச் சாபுர வாசி நன்னெறி
துன்னியோர்க் கவமதி புகலுஞ் சூழ்ச்சியான். 51

சாலமே மிகுதரு மாபு ரிக்குவந்
தாலயம் புகுந்துமெய் யடிய ராமெனக்
காலையு மாலையும் பரவு கைதவன்
ஞாலமீ திசையலா னட்ட மொன்றிலான். 52

மீயுற வேதியர் வேடந் தோன்றிடும்
வாயுற மறைத்திரு வசனம் வந்திடும்
வீயுறு வறுவகை விகார மும்மலந்
தீயுறு மனத்திடைச் செறிந்து நிற்குமால். 53



இத்திறத் தவன்மதிக் கிசைந்து நண்பநீ
முத்திமார்க் கத்தினை யொருவி முற்றுநஞ்
சத்திய வாசக ருரையைத் தள்ளிய
தெத்திறப் பாதக மிதயத் தோர்தியால். 54

எந்தைநா மத்தினா லென்னி மித்தமாய்த்
தந்தையைத் தாயைத்தம் மனையைத் தாம்பெறு
மைந்தரை யுடன்பிறந் தவரை மற்றினிச்
சொந்தமாம் ஜீவனைத் துறந்தி டாவிடில். 55

தன்னொரு சிலுவையைத் தாங்கித் தாங்குமென்
பின்னொரு வாநெறி பிடித்தி டாவிடில்
என்னொரு சீடனென் றியைபு றானெனு
மன்னொரு மகனுரை மனத்துக் கோடியால். 56

வளமலி யெகிப்துமா நிதிய வைப்பினைக்
களமலி குப்பைபோற் கழிய வீசிநம்
இளவர சுயர்த்திய சிலுவை யேய்ந்தபோழ்
துளமலி காதலோ டுவக்க வேண்டுமால். 57

இருண்டவன் மனத்துலௌ கீக னின்சொலான்
மருண்டுசீ யோன்மலை மார்க்க நின்றிழிந்
துருண்டனை பாதலத் துய்க்கு மிந்நெறி
தெருண்டிதை விடுத்தியேற் பிழைத்தி சீரியோய். 58

நல்லறக் கிழவனோ ரடிமை நல்கிய
கல்விய னெஞ்சினன் காதன் மக்களோ
டல்லல்கூ ரிருஞ்சிறை யகத்து ளானவற்
கொல்லுமோ பவச்சுமை யுனக்கொ ழிக்கவே. 59

கற்பனா தீதாங் ககன வேந்தன்முன்
சற்பிர மாணத்தைத் தழுவி நின்றவன்
பொற்புறு நீதிமா னான புங்கவன்
எற்படு முலகிடை யாண்டு மில்லையால். 60

முன்னரே விதிவிலக் கிகந்து முன்னருந்
துன்னெறி யொழுகியோர் தூய ராவரோ
நன்னெறிப் படினும்பின் நன்கு மூழ்கினும்
பொன்னிறம் வாயசம் புணரு மேகொலாம். 61

கள்ளஞா னியரிவர் கழறும் வார்த்தையில்
எள்ளள வும்பய னிலைமற் றென்மொழி
உள்ளவா றென்பதற் குயர்ந்த வானமும்
பள்ளநீ ருலகமும் பகருஞ் சான்றரோ. 62

சான்றென மொழிந்திடு தருணங் தம்பிரான்
தோன்றியிங் குரைத்தகற் பனைகள் சோர்வற
ஊன்றிநின் றொழுகியீண் டுய்வல் யானென
ஏன்றவன் சாபமே யெய்தி மாள்குவன். 63

என்றிடி யேறென விசைத்த வாசகந்
துன்றிய கொழுங்கனற் சுவாலை மீக்கொள்வெங்
குன்றினின் றெழுந்துளங் குலையும் வேதியன்
தன்றுணைச் செவிவழி புகுந்து தாக்கிற்றால். 64

தாக்கலுஞ் சாவலாற் றனக்கு வேறினிப்
போக்கிலை புறத்தொரு புகலு மின்றெனா
வாக்கொடு மனந்தடு மாறி வாய்வெரீஇ
மீக்கிள ருயிர்ப்பொடும் விளம்பு வானரோ. 65

வேறு.

வஞ்ச லௌகிக வாய்மொழி யாங்கொடு
நஞ்ச நுங்கிம யங்கியெ னன்மதி
துஞ்சி யாருயிர் சோர்குவ னாலினி
உய்ஞ்சி ருக்கவொ ருமருந் துண்டுகொல். 66

ஈசன் கோபமெ ரிக்குமென் றேழையேன்
நாச தேசந்து றந்தது நன்மனைப்
பாசம் வீசிய பான்மையு மித்தனை
மோச மெய்திமு ழங்கனன் மூழ்கவோ. 67

மேதை யற்றவி வேகம்பி குத்தவோர்
பேதை யென்னிற்பி றரிலை பெட்புறும்
ஊதி யத்தையொ ரீஇயுல வாப்பெருஞ்
சேத மெற்கெனக் கொண்டதி றத்தினே. 68

பாதை விட்டுநம் பார்த்திவ னாணையைப்
பேதை நீபிழைத் தாய்பெருங் குற்றமென்
றோதி யென்னையு வர்க்குமு ளக்கரி
வாதை கொண்டுயிர் வாழ்வதெவ் வாறினி. 69



தம்பி ரானருட் சார்வினைச் சார்ந்துய்வான்
நம்பி வந்துக டைத்தலை நண்ணுமுன்
வம்பு துற்றிய வார்த்தைக்கி ணங்கியே
கொம்பி ழந்தகு ரங்கென லாயினேன். 70

மச்சை யென்புவ ழும்புகொ ழுந்தசைத்
துச்சி னச்சியு வக்குந்து ரிச்சையைச்
சிச்சி யென்றுவர்க் காதுதி யங்குமென்
கொச்சைத் துன்மதி யேகொடுங் கூற்றன்றோ. 71

ஈச னேசமோ ரெட்டுணை யும்மிலேன்
நாச தேசசு கத்தினை நாடுவேன்
நீச னேனென்னி கழ்த்துவ தீண்டெனாக்
கூசிக் கூசியி னையன கூறுவான். 72

ஐய னேயென்ன ருட்குரு வேபுகல்
மெய்யி கந்தும ருண்டுவி ழுந்துபின்
பொய்யின் மூழ்கிப்பு லைக்குடி லோம்புவேற்
குய்யு மாறினிச் செய்வதொன் றுண்டுகொல். 73

பரவை யென்னப்ப ரந்துப ருப்பத
நிரைக ளென்னநி மிர்ந்தது நீள்கடற்
கரைம ணற்கும திகங்க ணக்கியான்
தரையி லீட்டிய பாவச மூஹமே. 74

ஆவி நாயக னாணையை மீறிய
பாவி யேற்கொரு பாங்கரும் போக்கிலை
ஜீவ வாயிலைச் சென்றுநின் றோலிடிற்
போவென் றெள்ளிப்பு றந்துரப் பார்கொலோ. 75

வள்ள லார்பிழை மன்னிக்க வேதிரு
உள்ள மென்னவு ளைத்தனை யாயினும்
விள்ள ரும்பெரும் பாவம்வி ளைத்தவிக்
கள்ள ரிற்கள்ள னுக்கருள் காட்டுமோ. 76

உன்ன ருஞ்சுமை யோடுமோ ரோசனை
முன்னர் நாறுமு டைத்தொழு நோயொடும்
பன்ன ரும்பரி சுத்தநம் பார்த்திவன்
சந்நி திக்குமுன் னிற்கத்த குவதோ. 77

உள்ளு டைந்துரு கிக்கவன் மருண்கணீர்
துள்ளி கொள்ளத்து டித்திவை வேதியன்
விள்ள லுஞ்சுவி சேடன்வி ருப்பொடுங்
கள்ள மின்றெனக் கட்டுரை கூறுவான். 78

தம்பி கேட்டிநீ சத்திய வாசகர்
இம்ப ரீட்டிய பாதையி கந்ததும்
நம்பி மற்றொரு மார்க்கந யந்ததுங்
கும்பி பாகங்கு டிகொளும் பாதகம். 79

பாப முற்றிய பாதகர் மெய்ம்மனத்
தாப முற்றித்த விப்புறு வாரெனிற்
சாப வெஞ்சிறை யிற்றளை வாரலர்
கோப முள்ளவ ரல்லர்கு ணக்கடல். 80

நீதி யாதிபர் நிண்ணயர் தம்மொழி
பேதி யார்நம்பி ரானெனப் பேசியும்
மாத யாபர வள்ளலெ னுமறை
ஓது சீர்த்தியு முண்மையென் றோர்தியால். 81

எண்ண ருங்குணத் தெம்பெரு மான்சுதன்
புண்ணி யந்திகழ் யாக்கைபொ றுத்திவண்
நண்ணி நல்லற நாட்டிய ஞான்றுசொல்
வண்ண வாசக மற்றதுங் கேட்டியால். 82

வருந்திப் பாரஞ்சு மக்குமக் காண்மனந்
திருந்தி யென்வயிற் சேருமின் சேருமின்
பொருந்து நஞ்சுமை போக்கிவி டாயகன்
றிருந்து வாழ்வி னிதரு ளீவன்யான். 83

என்ற வித்திரு வாக்குல கம்மெலாம்
பொன்று மாயினும் வானிடைப் போதரீஇ
நின்ற ஜோதிநி லையற்று வீழினுங்
குன்றி டாதுன்னு ளத்திது கொள்கென. 84

மற்று மின்னநல் வாக்குவ குத்துரைத்
துற்று நோக்கியொ ளிர்கடை வாயிலை
முற்றி நின்றுமு றையிடு வாயெனிற்
குற்றம் யாவும்பொ றுப்பர்நங் கொற்றவன். 85



போதி யென்றுபு கன்றுநல் லாசிகள்
ஓதி னன்சுவி சேடனுக் குள்ளுவந்
தேதில் வேதிய னும்மிது நன்றெனக்
காத லோடுகு வித்தனன் கைம்மலர். 86

லௌகீகப்படலம் முற்றிற்று.

## கடைதிறப்புப் படலம்.

நள்ளுண் டாகுந லம்மஃ தன்றெனில்
எள்ளுண் டாகுமி ழிபுலை யன்னெனத்
தள்ளுண் டாகுந்த யாபதி சித்தமென்
றுள்ளுண் டாயவொ ருக்கமோ டேகினன். 1

குன்று காலும்வெஞ் சாபக்கொ ழுங்கனல்
முன்றி னின்றுமு டுகிச்சு ரஞ்செலீஇ
வன்றொ டர்ப்படு மான்விடு பட்டெனச்
சென்று கூடினன் முன்விடு செந்நெறி. 2

ஊன்ம னத்திரு ளோடத்து ரந்திடும்
ஆன்ம ஞானத்த விரொளி நாடியக்
கான கத்தெவை யுங்கரு தாதுபோய்
வானு றுங்கடை வாயிலை நண்ணினன். 3

இடுக்க வாயிலெ திர்ந்தது னுட்புக
அடுக்கு மோவெனக் காசையை வேறப்
படுக்கு நர்க்கும்ப ருமித்த நூலத்தை
ஒடுக்கு நர்க்கும லாலென வுள்ளினன். 4

உருக்கு மாரு ளோங்கிய வேந்தனோர்
திருக்கு மாரனைச் சிந்தையு ளேதரித்
திருக்கு மாரண ரேயிக லியாவையும்
ஒருக்கு மாற்றலை ரொல்லும வர்க்கரோ. 5

திருடர் வஞ்சகர் காமிகள் செல்வமார்
குருடர் மற்றொரு ரிமையைக் கொள்ளைகொண்
முருடர் கோபிகண் மூர்க்கர்கு தர்க்கராம்
புருடர்க் கீண்டுபு கலரி தாகுமால். 6

என்று சிந்தித்த ருருற வேழைகாள்
நின்று தட்டுமி னீங்கிடு நீள்கத
வென்று பித்தியெ ழிலுறத் தீட்டிய
மன்றல் வாசகங் கண்டும னக்கொளா. 7

திட்டி னைவத்தனர் தேவர்பி ரானென
உட்டெ ளிந்துணர் வொன்றியொ டுங்கியே
கிட்டி யாங்குகி ளர்பொற்க பாடத்தைத்
தட்டி னானின்றி னையன சாற்றியே. 8

வேறு.

மாய வுலக மயக்கறுத்து வளையாக் கிருபை தந்தளித்த
தூய பெருமான் றிருவடிக்குத் தொழும்பன் கபாடந் திறமினோ. 9

ஆசா பாசக் கொடுஞ்சுழலி லகப்பட் டுலைந்தே னருளனுக
நாச தேசந் துறந்துவந்தே னடியேன் கபாடந் திறமினோ. 10

உள்ளந் திருப்பிக் குணப்படுமி னுய்வீ ரென்ன வுவந்துரைத்த
வள்ளல் திருவாக் கதுகேட்டு வந்தேன் கபாடந் திறமினோ. 11

கல்லேன் சுருதி நலம்புரியக் கருதேன் பாவங் கசந்திடேன் [12
பொல்லே னெனினும் வந்தடைந்தேன் போகேன் கபாடந் திறமினோ.

ஆருக் கொடிய பசிதாக மடங்கத் தணிய வருளளிக்கும்
மாருக் கருணை வரதன்பால் வந்தேன் கபாடந் திறமினோ. 13

வேறு.

பாவ மீறிவளர் காடு தூற்றியலை பட்ட ழுங்கியயர் பாவியான்
ஜீவ மாநதியி னீர ருந்தவதி தேட்ட முண்டுகடை திறமினோ. 14

நீதி யாதிபர்சி னந்த ஹிக்குநெறி நின்று தப்பியினெ றிப்படஇ
மாத யாபரன டித்தொ ழும்புசெய வந்த பாவிகடை திறமினோ. 15

சேரு மாகொடிய தீவி னைத்திரள்சு மந்தி ளைத்தளிகொள் ஜீவநற்
றரு நீழலிலொ துங்கி யுய்யவரு தமியன் யான்கதவு திறமினோ. 16

கொடிய ரிற்கொடிய புலைய ரிற்புலைய னாயி னுங்குமர நாயகன்
அடிய ருக்கடிய னாக வந்திவ ணடைந்த னன்கதவு திறமினோ. 17

நிருப னீதியினி லத்தி ழிந்துபலி நேர்ந்தி ரக்ஷயரு ணேமியாஞ்
சருவ லோகசர ணியனை நம்பிவரு தமியன் யான்கதவு திறமினோ. 18



வேறு.

இன்னவித மாகவுரை யாடியெழி லாரும்
வன்னமணி வாயில்செறி மான்கதவு தட்டி
உன்னிநனி யோலமிட வுள்ளுருகி யுள்ளா
மன்னுகடை காவலன்ம ருங்குறவ ணைந்தே. 19

எஞ்சலிலு ணர்ச்சிபரி தாபமித யத்தில்
விஞ்சவுள மற்றதிவன் வாய்மொழிவி ளக்கும்
வஞ்சமில னுமெனம னக்கொளம தித்தே
அஞ்சலென வொல்லையின ருட்கடைதி றந்தான். 20

வாயில்திற வுண்டிடம லர்ந்தவன சம்போல்
நேயன்வத னந்திகழ நேயமொடு நோக்கி
ஆயெனவெ திர்ந்தனையெ னையவிவண் வெய்ய
தீயன்வர வொல்வதுகொல் யாதுனது சித்தம். 21

என்றுவின வக்கடுகி யீண்டுவரு கென்ன
முன்றிலி னகத்துறவி ழுந்துமுறை யாகப்
பொன்றிணிக டைத்தலைய டைத்துநனி பூட்டிப்
பின்றையிது கேளெனவி யப்பினொடு பேசும். 22

நெருக்குறுமிவ் வாயில்புக நேடிவரு வோனை
வெருக்கொளவெ ருட்டிவிசி கம்பலவி டுத்தே
முருக்குமல கைக்கிறைவன் மொய்ம்பினொடு தங்குந்
துருக்கமிது னுக்கருகு தோன்றுவது காண்டி. 23

இங்கபய மிட்டகுரல் யாதெனவெ திர்ந்தே
அங்கவன்வெ குண்டுனைய டர்த்துயிர ழித்து
நுங்குவனெ னக்கருதி நொய்தினிலி ழுத்தேன்
சங்கையற வுன்னிலைத னைப்புகறி யென்றான். 24

நேசனுரை கேட்டுளந டுங்கியிவ னோர்ந்த
மோசமக லத்துணைபு ரிந்தசெயன் முன்னிப்
பேசரிய பேரருள்பி றங்குமினை யாய
ஈசனைவ ழுத்தியிதி யம்புவன்வி சாரி. 25

வெய்யவல கைக்கெனைநி லக்கியுயிர் வீயா
துய்யவிவ னுய்த்தவுத விக்குதவி யுண்டோ
ஐயவுத வாதொருவ ராற்றுமுத விக்கு
வையகமும் வானகமு மாற்றலரி தாமால். 26

ஆதலின ருங்குரவ நிற்குதவு கைம்மா
றேதுமிலை நிற்கிரியை யாவுமறி தக்க
மாதகைய வேந்தனருண் மல்கிடுமு னக்கென்
றோதியளி யேனிலையு ணைப்பலினி யென்னா. 27

விளம்பா மடுத்ததும்வெ ருண்டுமனை மக்கட்
குளம்படவு ரைத்ததுமொ ரீஇமதிம யங்கித்
தளம்பியது மாங்குசுவி சேஷனுரை தந்து
வளம்பெறவி டுத்ததுமிவ் வாயிலுறு கென்று. 28

பெருஞ்சுமையொ டேவழிபி டித்ததுமென் னெஞ்சன்
விரும்பியுடன் வந்துநொதி வீழ்ந்துளம்வெ ரீஇப்பின்
திரும்பியது மன்றுதவி செய்துகரை யேற்றி
உரம்பயில்ச ஹாயன்விவ ரித்ததுமு ணர்ந்தே. 29

உவப்பொடுவெ ரும்பொழுது லோகவிவ காரி
அவப்பயனெ னக்குறுகி யாரணிய முய்க்க
நிவப்புறுகி ரித்தலைநெ ருங்கியது நேர்ந்த
தவப்பயனெ னச்சுருதி தந்தமுனி வந்தே. 30

மீண்டுவழி பற்றெனவெ குண்டுமதி சொல்லித்
தூண்டியினி மற்றவைது லங்கவொளி துன்னுங்
காண்டகுக டைத்தலைக ழித்தறிதி யென்ன
ஈண்டியது மிவ்வெனவெ டுத்தினிதி யம்பி. 31

பின்னிடுமென் னெஞ்சனிலை பேசுவதெ வன்கொல்
மன்னுசுவி சேஷகன்ம றுத்தெதிர்வ ரானேல்
என்னிலைவி ளைந்துகெடு மெங்குரவ வெல்லாம்
உன்னதவ ருட்டுணையி னுற்றநல மென்றான். 32

ஆத்துமவி சாரிவர லாறினிது கேட்டே
மாத்தகைய வேந்தனைவ ழுத்தியுண்ம கிழ்ச்சி
பூத்தினைய சொன்மதிபு கட்டிடுவ தானான்
காத்துவழி காட்டுகடை காவலன வற்கே. 33

மீக்குலவு முத்திநக ரத்திறைவன் மேனாட்
கோக்குமர னைப்பலிகொ டுத்துநமை வேண்டி
வாக்குமன மெட்டரிய மாபரசு கத்தை
ஆக்கினர தன்னருமை யார்புகல வல்லார். 34



இத்தகைய சிற்சுகமி யைந்திடவி ழைந்தோர்
பித்துலகை நச்சுறுபி ராந்தியைவி டுத்தே
செத்தொழியு மாறிழியு டற்குவரு சேதம்
எத்துணைய வாயினுமொ ரெட்டுணையு மென்னார். 35

உகப்புறுபெ ருங்கிளையொ டேயுரிமை யுள்ள
இகப்பயனெ வற்றையுமி கந்திறைவ னுக்கே
அகப்பலிகொ டுத்தனன தன்றியொரு பேறும்
மகப்பலிகொ டுக்கவும றுத்திலனோர் வள்ளல். 36

இந்நிலம்வி யந்திடுமெ கிப்திறைமை பூண்ட
மன்னுரிமை யாவையும னக்கொளவ னைந்தாண்
டின்னலுறு தன்கிளையொ டெண்ணில்பல துன்பும்
பன்னரிய நிந்தையுமு ழந்தனனோர் பத்தன். 37

துங்கவுல காதியர்து ணைப்பதம லாலென்
அங்கமரி யப்பெறினு மாவியுகு மேனும்
எங்கனவி லும்பிறவி றைஞ்சுகில னென்னாச்
சிங்கமுறு வெங்குகைமு டங்கினனோர் தீர்க்கன். 38

இந்தனம டுக்கியவி ருங்கொடிய சூளைக்
கொந்தழன்ம டுத்தவிறை கோபமென மூண்டு
வெந்தெரிய வத்தழலில் வீசியெறி போதுஞ்
சிந்தனைக லங்கிலர்தி டங்கொளுமுச் சித்தர். 39

அல்லியன்ம னத்தினர மார்க்கவெறி கொண்டு
வல்லியமெ னக்குழுமி வன்கன்மழை சிந்திக்
கொல்லியம லைந்துமொரு கோட்டமில னாகி
நல்லியன்மொ ழிந்துயிர்வி டுத்தனனோர் நம்பன். 40

நாடுநகர் காடுகட லாறுபல நண்ணி
நீடுபல மோசமடி நிந்தையெறி காவற்
கூடமெனு மாகொடிய கூறரிய சாவின்
பாடுபல பட்டனனோர் பத்திவயி ராக்யன். 41

அம்புவியு வந்தலைய கந்தையர்கு ரைத்த
வம்புமொழி யைப்புரியு பாதியைம திக்கா
தும்பர்மகி மைத்திறமு வந்துயிர்வி டுத்தார்
செம்பொருள்தெ ரித்தகுரு தேசிகர்ஜெ கத்தில். 42

கல்லெறிக டுஞ்சிறைக சப்புமொழி கட்கம்
நல்குரவு வாரடியில் நைந்துயிர்ந டுங்கப்
புல்லரிய கான்புதர்பொ ருப்புமுழை புல்லி
எல்லையில்க டுந்துயர மெய்தினா நேகர். 43

இன்னவித மாகவிசு வாசிகளி கத்தில்
பன்னரிய பாடுபல பட்டனர்ப ரத்தே
மன்னுமகி மைக்கெனவ தைந்துயிர்ம டிந்தார்
இந்நிலமி சைக்குருதி யேகரியி யம்பும். 44

மற்றிதனை யற்பமும திந்திலன்மென் னெஞ்சன்
முற்றுலக சாலவள றாடுமுழு குற்றுன்
துற்றுமோர்ந றுங்கனியெ னச்சுவைவி ழைந்தே
பற்றியெரி யுஞ்சுடர்வி ழும்பலப தங்கம். 45

மிச்சின்மிசை லௌகிகவி காரமுறு குக்கல்
சிச்சியென வோடுமது தேர்கிலைதி கைத்திட்
டச்சுறுகு ழைப்பைநனி யஞ்சினைய மார்க்கப்
பிச்சரென வேகினைபி றங்கல்வழி பேணி. 46

அந்நெறிபி டித்துயிர விந்தவ ரநேகர்
செந்நெறிக திந்தசிம யஞ்சிதறு தீயால்
தொன்னெறிவி ளக்குசுவி சேஷநெறி தூய
இந்நெறிவி டுத்தவரீ டேறும்வகை யின்றால். 47

வெவ்வியக ராவயிறு புக்கியுயிர் மீண்ட
செவ்வியினை யொத்திவணி றுத்தனைசி ருழைக்
கௌவியலை பூசைமுறை காண்டியது போலுந்
தைவிகம காகிருபை தாங்குவது நம்மை. 48

ஆதலின ருந்துணைவ வாற்றரிய சும்மை
சோதனைய லக்கணிடர் துற்றியடு போதும்
ஆதிமுதல் வன்றிருவ ருட்டுணைய வாவி
மேதகைய ஜீவநெறி விட்டுவில கேலே. 49

என்றினைய வாறுசொலி யெம்பியிது மார்க்கம்
வென்றியா சன்பணிவி திப்படிபி தாக்கள்
நன்றியுறி தீர்க்கருயிர் நல்குநமி ளங்கோ
பின்றையடி யாரிவர்பு குக்கினர்பி றங்க. 50



நேர்வழிநெ ருக்கவழி நின்மலந கர்க்குச்
சேர்வழிதி கைப்பில்வழி ஜீவவழி சீர்சால்
ஓர்வழியி தன்றியிலை யுண்மைவழி கும்பிப்
பேர்வழிய துற்றலைபி ராந்தரும நேகர். 51

இக்குறிம னக்கொடினி யேகுகென வுள்ளம்
நெக்குருகு [illegible]னெடு வேதியனி கழ்த்துந்
தக்கநெறி சார்வலைய தாக்கரிய [illegible]
பொக்கணம்வி ழுத்திலது புண்ணியமு னகம[illegible]. 52

வேறுநினை வில்லைவெரிந் மீதறவு மேன்மேல்
ஏறுசுமை யான்மிகவி ளைத்தனனெ னக்கோர்
ஆறுதலு மில்லையினி யஞ்சலென நின்போல்
தேறுதல்செய் வாருமெதிர் வார்கொல்தெரி யேனால். 53

யாதினியி யற்றுவலி ரக்ஷைபெற வென்று
ஓதலும்ம லங்கலையி ருங்குருசு யர்த்த
மாதலம டுக்கினுன வன்சுமடு வல்லே
போதரும லாதொருவர் போக்கமுடி யாதால். 54

இப்பகல்க ழிந்திடுமுன் னிந்நெறியி னோர்சார்
மெய்ப்பொருள்வி ளக்குபவன் வீடெதிர்வை யங்குற்
றப்பனுவ லாளனொடை மர்ந்துவின வுங்கால்
எப்பரிசு நன்குறவி சைப்பனியல் பென்று. 55

சோகமற நன்மொழிதொ குத்தினைய கூறி
ஏகுகென வாசிவிடை யீந்தனன்வி சாரி
ஓகையொடு மஞ்சலியொ ழுக்கமுறை நல்கி
மாகநக ராதிபனை வாழ்த்திவழி போனான். 56

கடைதிறப்புப் படலம் முற்றிற்று.

## வியாக்கியானி யரமனைப் படலம்.

இந்தவா றுயவன் னேகுமவ் [illegible]மைமதியில்
உந்துகல் [illegible] னான்மிதின் றீர்க்கவும்
பந்தமார் தீவினைப் பகுதியின் னீரகவுந்
சிந்தைநொந் தினையன செப்புவா னாயினான். 1

ஜென்மமார் கருவிலே வினைவிடந் தீண்டலால்
நன்மனோ தத்துவ நாசமா யினவெலாந்
தின்மையே செயவருந் திறனுளேன் சிறியவோர்
நன்மையே னுஞ்செயத் திறனிலே னவையினேன். 2

நான்பிறந் ததுமுயிர்ச் சுமையினோ னலியவோ
கான்பிறங் கலினுறுஞ் சதம்வி[illegible]பாதகளில்
ஊன்பிறங் கு[illegible]வளர்க் அழலுவே னுணர்விலேன்
[illegible]பிறந் தேன்கொலா மேழையிவ் வுலகினே. 3

அன்னையா யப்பனா யன்றுதொட் டின்றுமட்
டென்னையன் பொடுபுரந் தென்றுநன் றேதருந்
தன்னையே நிகர்வதோர் தம்பிரான் றனைமறந்
தென்னையே முப்பகைக் கீடழிந் தினைகுவேன். 4

கனிதருந் தருமெனக் கவனுநங் கருணைமன்
இனிதரும் பாதவித் தருவெறிந் திடுகென
முனிதரும் பொழுதினே முடுகுமேன் முடுகுவெந்
துனிதருங் கனல்சுடத் துடிதுடித் தயர்வலோ. 5

ஓரணுத் துணையுநல் லுணர்விலே னுலகுசெய்
கோரணிக் குளமுடைந் திடையுமோர் கோழையான்
ஆரணத் துறைபடிந் தயர்வுயிர்த் திலனினி
மாரணக் கடல்குளித் தயர்வனோ மதியிலேன். 6

அண்டர்நா யகனையே யவமதித் தலகையின்
தொண்டனாய்ச் செய்ததீ வினையெலாந் துன்னிமுன்
கொண்டவின் றிரளெனக் குழுமிநின் றூறுமாற்
கண்டிலே னேடியான் புகுதவோர் காவிடம். 7

உரவுநீ ருததிசூ ழுலகெலா முய்யநம்
புரவலன் புதல்வனைப் புனிதநீ தியிலிவண்
வரவிடுத் தமையறிந் தினுமெனோ மடமையான்
பாவிநின் றருள்பெறுப் பாவமென் பாவமே. 8

எப்பெரும் பத[illegible]ந் திதயநொந் தேங்கிவந்
தப்பனே பிழைபொறுத் த[illegible]யென் றடையிலோர்
ஒப்பரும் புத[illegible]க குருகிமன் னிப்பமென்
றப்பருஞ் சுருதிதந் திறைமறந் திடுவரோ. 9



ஆற்றருஞ் சுமையினோ டல்லல்பல் லிக்கினங்
கூற்றெனக் குமுறிநின் றுயிர்தெறக் குறுகினும்
ஏற்றுமுன் னிடுவதே கருமமிங் கேழையேற்
கூற்றமாங் கடவுள்வேந் தொருபெருங் கருணையே. 10

என்னவின் னனபல வின்னல்கொண் டிடையிடைத்
துன்னுநல் லுணர்வொடே சுமைசுமந் தலசியும்
முன்னவன் றிருவருட் டுணைமையான் முன்செலீஇச்
சொன்னவப் பனவன்வீ டணுகினான் றூருசிலான். 11

மற்றிதே போதுமால் வாயில்கா வலன்விதப்
புற்றமெய்க் குரவன்வா முறையுளோன் றுவகைபூத்
தற்றமென் னெனவினா யகநுழைந் தவனுறு
நற்றவக் கிழவனைக் குறுகினா னவிலுவான். 12

உள்ளவோர் கடவுள்வேந் துலகயாத் திரிகனேன்
வள்ளனின் மொழியினான் மறைபுலப் படும்வழி
தெள்ளிதி னுணர்வையங் கேதெனச் செப்பினான்
கள்ளமில் வாயில்கா வலனெனக் கழறினான். 13

கேட்டனு மறைவியாக் கியானிநீ கேவல
நாட்டுயாத் திரிகனோ நன்றுநின் வரவெனா
வீட்டுளங் கங்குறும் வியபா வனையெலாங்
[illegible]ட்டுவான் வேதியன் கைபிடித் தேகினான். 14

வேறு.

வண்ணவக் கடிமனை மருங்க ரங்கணைந்
தெண்ணருங் குணத்தபா வனையி னைந்தவோர்
புண்ணிய வுருக்கவின் பொலியத் தீட்டிய
கண்ணடிப் படிவத்தை யவற்குக் காட்டியே. 15

இத்தகைப் படிவமற் றெம்மை யாளுடை
வித்தக நிருமல விபுத வேந்தனின்
சித்[illegible] சித்தமென் றுவக்குந் தேசிகன்
உத்தம சாயலென் றுணர்ந்து கோடியால். 16

வான்முக நோக்கிய பயிரின் மன்னுநங்
கோன்முக வின்னருள் குறித்த தோற்றமாம்
ஊன்முக நயனங்க ளும்பர் நோக்குதல்
நான்முக மதிவலாய் நுணித்துக் காண்டியால். 17

மெய்யுறுத் தியதெனச் சிவந்த மெல்லிதழ்
கையுறு புத்தகங் கவினுங் காட்சியீண்
டையுறு முலகருக் கான்ம போதகஞ்
செய்யுறு மார்க்கமென் றறிதி செவ்வியோய். 18

தூயவோ வியப்புறந் துதைந்த வல்லிருள்
நாயகன் பதவியை நயந்திம் மாதவன்
மாயவிப் பிரபஞ்ச வாழ்க்கை யாவையுஞ்
சீயெனப் புறக்கணித் தமைதெ ரிக்குமால். 19

சென்னிமீ துறவொரு ஜீவ மாமணி
துன்னிய சுடர்விரி மௌலி தோன்றுதல்
பொன்னில வுலகினிற் பொருந்து சிற்சுக
நன்னிலை மகிமையென் றறிதி நம்பிநீ. 20

ஆயிர மாயிர மரும கப்பெறீஇ
மாயிரு ஞாலத்து வளர்த்து மன்னர்கோன்
சேயுயர் நகர்செலத் தெருட்டி யுய்த்தவித்
தூயவன் சுகிர்தம்யான் சொலுந்த ரத்தவோ. 21

திசைமயக் கறுத்துமெய் வழிதெ ரித்திடும்
வசையறு குரவனிம் மான லாற்புவி
மிசையொரு வனுமிலை விரிந்த காரிருள்
பசையறப் புலருமோ பரிதிக் க[illegible]. 22

என்றதன் பொருள்விரித் தியம்பி யென்றுமீந்
நன்றிகொண் மாதிரி நயந்து கொள்கெனாச்
சென்றன னவனொடுஞ் சீர்சி தைந்தெழில்
குன்றிவெவ் வியற்றுகள் குழுமு மண்டபம். 23

மாசறத் துடையென வொருவன் வந்துநின்
றாசற விளக்குவ மோக மாத்துகள்
மூசியங் கெழும்பலின் மூசச லடைக்கிடத்
தேசிக னறும்புனல் தெளிநங் காயென. 24

மங்குலேம் பாலுவா மதிமு கந்திகழ்
பங்கஜ லோசனம் பவள வாய்தளிர்
அங்கலுழ் மேனியோ ரணங்கு தூயநீர்
எங்கணுஞ் சிதறிநன் கியற்றி னாரோ. 25



கண்டனன் யாதிது காட்சி யின்பொருள்
ஒண்டவக் கிழவவெற் குரைத்தி யாலென
விண்டனன் வேதியன் விளம்பன் மேயினான்
பண்டரு மறைப்பொரு டெரிக்கும் பண்ணவன். 26

தோற்றுமண் டபமிது சுரர்கு லாதிபன்
வீற்றிருப் பதற்கென விரும்பி மேலைநாள்
மாற்றருஞ் சிறப்பினா லமைக்க வந்துபேய்க்
காற்றகம் புகுதலிற் கவின ழிந்ததால். 27

தீனர க்ஷகன்றரு சுருதித் தெய்வத
ஞானசா ரத்தினா னலம்பெ றுதூநங்
கோனுடம் படிக்கையைக் குலைத்த கொள்கைசான்
மானவ விருதய மாமிம் மண்டபம். 28

மூசிமற் றதனெழின் முருக்கி மொய்த்தெழு
தூசியுற் பவவினைத் தொகுதி மற்றிதே
மாசிய றீக்குணம் வளர்க்குந் தாய்புரி
ஆசறு வினைக்கெலா மாதி மூலமால். 29

துன்னிய துகளறத் துடைத்து நின்றவன்
மன்னிய சற்பிர மாண மாமதி
முன்னிநன் னீர்தெளி முத்த வாணகை
நன்னுத லேசுவி சேஷ ஞானமால். 30

ஈட்டுதீ வினைப்பய னிருமை யுந்தரு
கேட்டினை யுருமுறழ் கிரியின் சாலமாக்
காட்டிவெங் கனற்குழி கவிழ்க்கு மல்லது
வீட்டினிற் புகுத்துமோ விதிநி டேதமே. 31

எண்படு மருட்சுவி சேஷ மேய்ந்துநம்
புண்படு மிருதயப் புரைக ணீக்கிநற்
பண்பொடு பவித்திரப் பத்தி வித்திமெய்
விண்படு போகத்தை விளைக்கு மாலரோ. 32

திருவரு ளாளர்க்கு ஜீவ வாசனை
தருவது புலைநெறி தழுவி யோர்க்குமன்
வெருவரு மாணவா சனைவி ளைப்பது
நிருமலன் றருசுவி சேஷ நீர்மைகாண். 33

பாவதா ருவையறப் படுக்குங் கோடரி
ஜீவதா ருவிலெழு தெய்வ மாக்கனி
தேவதா தரும்வியந் தேத்து செம்பொருள்
பூவுல குயவரு புனிதன் புத்துரை. 34

ஆன்மநோ யகற்றுசஞ் சீவி யன்பர்க்குத்
தேனினு மினியதீஞ் சுவைய தெள்ளமிர்
தூன்மனத் திருள்கெட வொளிரு மொண்சுடர்
வானவர் கோமகன் மதுர வாய்மொழி. 35

பாவியென் றுணர்ந்துபுண் பட்ட நெஞ்சர்க்குத்
தேவநீ தியின்வருந் திகிலை மாற்றிடுந்
தாவரு நித்யஜீ வனையுந் தந்திடுந்
தீவினை யறவரு செம்மல் வாசகம். 36

துன்பெனுந் தீச்சுடச் சுழன்று சோர்வுறும்
அன்பருக் கவ்வன லவிக்கு நித்யபே
ரின்பவா ரிதிவிசு வாசிக் கின்னுயிர்
நம்பெரு மானிவண் நவின்ற வாசகம். 37

தீர்த்தனோ டாதியிற் றிகழ்ந்து தெய்விக
வார்த்தையாய்ப் புவிக்கொளி மருவ மானிட
மூர்த்தியாய் விளங்கிய முனைவன் றந்தநூற்
சீர்த்தியை யாவரே தெரிக்கு நீர்மையார். 38

மற்றிதை மனக்கொளென் றுணர்த்தி மாடொரு
சிற்றறை புகுந்தனன் றெரியக் காட்டினான்
புற்றுறை யரவெனப் புழுங்கு மாத்திரன்
செற்றமில் சாந்தனென் றிருவர் சீரினை. 39

சாந்தனென் றுரைபெறு தகைமை யோன்முகஞ்
சேந்தொளிர் மறையெனத் திகழும் பான்மையும்
பூந்துணர் கரிந்தெனப் பொலிவி ழந்தகங்
காந்துமாத் திரன்முகங் கரிந்த பான்மையும். 40

கண்ணுற நோக்கினன் கருதி வேதியன்
உண்ணிகழ் வனமுக முனக்கு மென்னினும்
எண்ணுறுங் கலைவலோ யிவர்கு ணாகுண
நிண்ணயம் புலப்பட நிகழ்த்து வாயென்றான். 41



வளம்படு கோனகர் மருவத் தீவினைக்
களம்படு முலகினைக் கடிந்து காவலன்
நளம்படு மலர்ப்பத நயந்த நண்பநின்
உளம்பட வுரைப்பலென் றுரைத்தன் மேயினான். 42

இருவருஞ் சோதர ரெனினு மீங்கிவர்
கருமமும் விநயமுங் கருத்தும் வேறதாம்
மருமலி வனசமும் வறிய வாம்பலும்
ஒருவழிப் பிறப்பினு மொக்கு மேகொலாம். 43

அத்தனா நின்றெமக் கருளு மாண்டவன்
சித்தமே யாகவென் றமையுஞ் செவ்விய
உத்தம னிவனவன் கனிட்ட னொள்ளிய
வித்தக வைதிகர்க் குவமை மேய்யோன். 44

இவ்வியற் சுடுமுக னியல்பென் னென்றியேற்
செவ்விய ரொழுக்கினைச் சிதையக் கூறிமா
வெவ்வியற் றீவினை விளைக்கு மாத்திரன்
அவ்விய னரும்பொறைக் கசட னாமிவன். 45

நித்தனா ருட்செயற் கமைந்து நின்றிடாப்
பித்தனைத் துணைப்பொருள் பெறினும் பாழிலே
உய்த்திடு பேதைவன் மிடிவந் தொன்றுமேல்
மத்துறு தயிரென மறுகுஞ் சிந்தையான். 46

கல்வரைப் புறங்கட னாடு கான்செலீஇ
ஒல்வகைப் பொறையொடு முனாற்றி யொள்ளிய
பல்வகைப் பொருள்குவித் தருத்தும் பண்புடைச்
செல்வனைக் கண்டுகண் டெரியுஞ் சிந்தையான். 47

தாழ்வுகண் டுவப்பதை யலது தம்மின
வாழ்வுகண் டுவக்கிலா தெரியும் வன்கணான்
பாழ்வயி றோம்புவா னலது பாதலத்
தாழ்வினைக் ககன்றுயு மாற்றை யோம்பிடான். 48

கான்முதிர் கடுவயின் றினிய கன்னலைக்
கூன்முது கிரவண முவர்க்குங் கொள்கைபோல்
நான்முறை தெரிந்தவர் நுவலு நோன்மைசால்
ஆன்மபோ தகமிவற் கருவ ருப்பரோ. 49

கைப்படு சுகமலாற் கனையில் பேரின்ப
மெய்ப்படு சுகநிலை மிகவுஞ் சேய்த்தென
ஐப்படு மீயின்மாய்ந் தழியும் லௌகிக
மைப்படு மனத்தனை மானு மாலிவன். 50

ஆயுழி யுளத்தழுக் காறெ னும்புலை
மேயுழி நற்குண விபவ மார்திருப்
போயுழி யறிவரி தாகப் போக்கிடுந்
தீயுழிப் புகுத்திடு மென்பர் சீரியோர். 51

தலைப்படு முணர்விலா ருலக சாலத்து
வலைப்படு மானென மறிந்து வஞ்சகப்
புலைப்படு புவனபோ கத்தைப் புந்தியற்
றுலைப்படு மாமையி லுவப்ப ரொள்ளியோய். 52

அன்பருக் கன்பரா மகில லோகவேந்
தின்பதுன் பங்களை யியைந்த வாறுதம்
மன்பதைக் கூட்டுவர் மரபிற் றுயென
நன்புதல் வரினமைந் தொழுக னங்கடன். 53

ஈண்டிதை மறந்திடா திதயத் தோர்தியென்
றுண்டுநின் றெழுந்திள வாசற் காக்கிய
மாண்டகு கடிமனை புகுந்து மைந்தநீ
காண்டகக் கவினிய காட்சி காணென்றான். 54

சித்திர மாளிகை யகத்துத் திண்சுவர்ப்
பத்தியங் கனல்பிடித் தெரியும் பான்மையும்
அத்தகு கொழுங்கன லவிக்க வாண்டொரு
குத்திரன் விரைந்துநீர் சொரியுங் கொள்கையும். 55

அகத்தொளி ரிருங்கன லவிந்தி டாதொரு
மகத்துவன் கரந்தெதிர் மருங்கு நின்றெரி
முகத்தரு ளெண்ணெயை யுகுத்து மூட்டலும்
ஜகத்தையுள் ளுவர்த்தவன் சமையக் காண்குறு. 56

மாட்சிசா லருமறை வகுத்து மன்னர்கோன்
ஆட்சியைத் தெருட்டிடு மறிஞ வாயவிக்
காட்சியின் பொருளெது கழறு வாயெனு
நீட்சிசான் மதிவலா னிகழ்த்து வானரோ. 57



வேறு.

நங்காவ லன்றிருவ டித்துணைந யந்தோய்
மங்காவ ழற்சிகைம காபுனித வாவி
இங்காத ரித்தெமித யத்தினிதி யற்றும்
பொங்கார ருட்கிரியை போலுமிது காண்டி. 58

ஆயகிரி யைத்திறம னைத்தையும டர்ப்பான்
மாயவல கைக்கிறைசெய் வன்றொழிலை மானும்
மீயுறவி னைந்திடைய றுதுபுனல் வீசிக்
காயெரிய ணைக்கமுயல் காட்சியிது காண்டி. 59

காந்தொருவ ரெண்ணெய்சொரி காட்சிகரு துங்கால்
நிரந்தரம ருட்குரிசி னேர்ந்தலகை யுட்க
உரந்தரும காகிருபை யுள்ளுறவ ழங்கிப்
புரந்தருளு மாறிதுவெ னப்புகறல் போலும். 60

சஞ்சலவி தந்தருச ழக்குறுபி சாசம்
விஞ்சுபல மாயமித யத்துவிளை விக்கும்
நஞ்சனைய தீவினைந யக்கநமை யேவும்
வஞ்சனைமு யன்றுலவு மென்றுநம ருங்கில். 61

வேதாக மாதியைவி ரித்துணர வொட்டா
தேதாகி லும்முலக வேலையிவி ழுக்கும்
வாதாடி யாடிநம னக்கரும ழுக்குஞ்
சூதாவி டுக்குமதி துஷ்கிருத சூழல். 62

ஈட்டுபல தீவினையை யுள்ளுறவெ டுத்துக்
காட்டுமிறை வன்பெரிய கருணையைம றைக்கும்
வீட்டுலக மின்றெனவெ ருட்டுபுசந் தேகக்
கூட்டினில டைத்துயிர்கு டித்தினிது வக்கும். 63

சீமான ருட்குரிசில் ஜேசுதிரு நாமப்
பூமான மக்குதவு புண்ணியந லத்துக்
கேமாறி நித்தியவி டுக்கணுற வெத்திக்
காமாது ரக்குழிக விழ்த்துறவ மிழ்த்தும். 64

இம்மாநி லத்தவத ரித்தகும ரேசப்
பெம்மானை யுங்குறுகி மும்முறைபி தற்றி
அம்மாத கைந்திடமு யன்றதென லாயிற்
சும்மாவி டுங்கொனர தாப்பலது ரும்பை. 65

மல்லாடு வன்கணைய வஞ்சமுறு மாயப்
பொல்லாத பேயினைமு ருக்குபுபு றங்கண்
டெல்லாந லம்பெறவி ரக்ஷைதரு மெல்லாம்
வல்லான்ம காகிருபை யுள்ளுறம தித்தி. 66

மாதாவி னின்றெமைவ ளர்க்குமதி யூட்டித்
தாதாவி னின்றுசம ரக்ஷணைச மைக்கும்
வேதாவு மாகியுயர் வீட்டுலக முய்க்கும்
நீதாதி பன்கிருபை நெஞ்சுறநி னைத்தி. 67

நஞ்சீவி யத்தினிடை யெத்தனைகொ ணாசம்
வெஞ்சீய மாமலகை யெத்தனைவி தத்தில்
துஞ்சிடு பாடுகடொ ருத்தனது கைத்திட்
டஞ்சிரொ ணாவுதவிற் றுண்டையரு ளன்றோ. 68

தன்னிருத யத்தருட ரித்தியலு மாறும்
பின்னாது நன்றுநிலை பெற்றுவளர் சீரும்
என்னபரி சென்றொருவ னெண்ணியினி தாயில்
இன்னபரி சென்றளவி டற்கெளிய தன்றால். 69

இத்தகைய காட்சியையுன் னெண்ணிடையி ருத்திப்
பத்தபரி பாலனப ரஞ்சுடரை நாடி
முத்தியுல கத்துநெறி முன்னிடுக முற்றுஞ்
சித்தசல னத்தையொழி கென்றினிது செப்பும். 70

நன்றுடன டத்தியினு நல்லுணர்வு நல்குந்
துன்றுசில காட்சியுள தொக்கறிதி யென்னாச்
சென்றெழில்கு லாவுமொரு திவ்வியவி னோத
மன்றுசெறி மாளிகையின் மாடணுகி நின்றான். 71

பானிலவி னாற்றிகழ்ப ருப்பதமி தென்னத்
தூநிலவு வெண்சுதைகு யிற்றியொளி துன்னும்
வானிலவு மேனிலைய மாடமது கண்டான்
கோனிலவு நாடுகுடி கொள்ளுமன முள்ளான். 72

கண்டுமன முங்கணும்வி யப்பொடுக ளிப்புக்
கொண்டதுத னித்தனிகு றித்துவரு போழ்தில்
விண்டொடநி வந்தவதன் மேலரமி யத்தில்
வெண்டுகில்பு னைந்துலவு வித்தகனை நோக்கா. 73



ஆசறுகு ணத்தரொரு சிந்தையரா பேதர்
மாசறுமெய் யன்புடைய ரென்றுமகிழ் பூத்தத்
தேசுறம லர்ந்தமுக மோனிதெ ரிக்கும்
ஈசனுல கெய்தியவி ருக்குமவர் போலாம். 74

எட்டரிய மேனிலையி தெய்தவரு மாயிற்
கிட்டரிய மாபுனித வெண்டுகில்கி டைக்குஞ்
சிட்டரிவ ரோடளவ ளாவுநிலை சேரும்
விட்டொழியு மிச்சுமைவி டாயெவையு மேவா. 75

கூடுமெனி னன்றெனவு ளத்திடைகு னித்து
மாடணுகி நின்றமறை வாணன்முக நோக்கிப்
பீடுபெறு மேனிலையி றங்கரமி யத்தை
நாடியவ ரோடுரிமை நான்பெறுவ தாங்கொல். 76

ஐயவெனு சித்தமறி யென்னவி னாவக்
கையுறவ ணைத்துவரு கென்றுகடி காவன்
மையறவி ளங்குமணி வாயிலின்ம ருங்குற்
றையமற வேநிகழ்வ கண்டறிதி யென்றான். 77

வேறு.

கரையில் பேரின்ப மாளிகை யகம்புகக் கருதும்
புரையி லாமனத் தவர்பெயர் புத்தகச் சுருளில்
வரையு மாறொரு துரைமகன் வாயிலின் மருங்கே
நிரையி லிட்டபொன் னாசனத் திருந்தன னிலவி. 78

மாய வேதிக ளாயிர மாயிரம் வழங்கி
ஆய வில்லகம் புகாவகை யியன்றமட் டடர்க்கத்
தீய ரோர்சிலர் வெங்கதந் திருகினர் செறிந்து
பேயெ னாத்திரிந் துலவினர் வாளொடு பிறங்கி. 79

சுத்த சுப்பிர சுமங்கல சுகுணமா சுயம்பு
நித்த நின்மல நிரஞ்சன நிராமய நிருபர்
உத்த ரம்மிலா துட்புகப் பெருமையி னுலவிப்
பத்த ரோர்சிலர் முன்றில்வாய் நின்றனர் பரிந்து. 80

உற்ற மெய்த்திரு வசனமாம் பட்டய முருவிச்
செற்ற மிக்கவச் செறுநரைச் செறுத்திடார் தியங்கிக்
கொற்ற வாழ்மனை முன்றிலின் வயின்றொறுங் குறுகித்
தெற்றி நின்றுபின் னிடைந்தனர் சிலருளந் திகைத்து. 81

13

கான வேடுவர் கையகன் றறவிடாய் கதுவித்
தூந றும்புனல் துருவியோர் வாவியிற் றுன்னி
வான கப்புலி யாங்கெதிர் மறித்திட மலங்கு
மானி னத்தையொத் தலம்வந்தார் சிலர்சிலர் மயங்கி. 82

கோம்பி முற்படு தோகையிற் குறுகியுள் ளுடைந்து
பாம்பின் வாய்ப்படு தேரையிற் பரிவுறீஇப் பதைத்துச்
சாம்பி யுட்புகுந் தருக்கில ராகிமெய் தளர்ந்து
தேம்பி நன்னிலை கலங்கினர் சிலர்செய லழிந்தே. 83

ஆய காலையெம் மாண்டகைக் கன்பருச் சனைசெய்
தூய சிந்தைய னெறிதவ றுதுசெல் சூரன்
காய மாதிமுப் பகையறக் கடிந்தவன் ககோள
நாய கற்கித யாசன மளித்தவோர் நம்பன். 84

ஜீவ ரக்ஷையைச் சென்னியிற் றிருத்திமெய் யென்னும்
ஓவில் கச்சினை யரையிலிட் டிறுக்கியொண் ணீதி
மேவு மோர்கவ சத்தினை மெய்யுறப் புனைந்து
தீவி னைத்தொடர் தேய்த்திடு கழலையுஞ் சேர்த்தி. 85

பயில்த ரும்விசு வாசமாம் பரிசையைப் பற்றிச்
செயிரி லாதிரு கூரொடு திகழ்திரு மந்த்ர
வயிர வாட்படை வலக்கையில் வாங்கிமன் னருளாற்
றைரி யத்தொடு வாயிலி னருகுறச் சார்ந்தான். 86

பொறித்தி ருந்தவற் கஞ்சலி வான்முறை புரிந்து
குறித்தி யென்பெய ரையபுத் தகத்தெனக் கூறி
மறித்து நின்றவம் மள்ளரோ டெதிர்ந்தமர் மலைந்தான்
வெறித்த சிந்தையார் வீசினர் வெருட்சியாம் விசிகம். 87

குழுமி நாய்க்கணங் குரைப்பினுங் கோளரிக் கென்றே
பழுது நேருமீ தறிகிலார் பலபடப் பிதற்றிக்
கழுது நல்கிய கருவிகள் கடுந்தறு கண்ணர்
முழுது மேலெறிந் தார்த்தனர் முறைமுறை முடுகி. 88

பொன்கு லாநக ராதிப னருளிய புனித
மின்கு லாவிய படைக்கலம் வீணெனப் படுமோ
வன்கு லாமரோ வெற்றிபெற் றுய்வரிவ் வண்ணம்
என்கொ லாமென வயிர்த்தனர் முன்றில்வா யெவரும். 69



எய்த வீசிய வெறிந்தன வேதிக ளவையும்
நொய்து கேடகப் புறத்திரு னூக்கின னெனினுங்
கைத வத்திறுற் சிற்சில வாக்கையிற் கரந்து
செய்த காயமென் றுணர்ந்துமங் கிடைந்திலன் றீரன். 90

காற்றுக் கோடுபுன் பூளையிற் கருவிகை போக்கித்
தோற்றுக் கூளியும் பின்னிடு மிவர்வலி தொலைத்துக்
கூற்றுக் கேவிருந் தாக்குவ லென்பது குறியா
வேற்றுக் காலமொன் றின்றென நெடுங்கைவாள் விதிர்த்தான். 91

மந்தி ரத்தனி வாளினை விதிர்த்தலு மறவோர்
தந்தி ரம்பட வெமக்கினித் தரிப்பிலை யென்னுச்
சிந்தி யோடின ரிரவிமுன் னிருளெனத் திகழ்ந்த
திந்தி யங்களை யவித்தவ னெழின்முக விந்து. 92

வண்டர் தோல்வியுந் தொண்டன்வாள் வலிமையு மருங்கு
கண்டு நின்றவர் யாவருங் கைகுவித் திறைஞ்சி
அண்டர் நாயக னருட்செய லிதுவென வவர்வாய்
விண்டு சிந்தின ரானந்த வாரியாம் விழிநீர். 93

கருகு சிந்தைய ருடைந்துவெந் நிட்டவக் கணமே
பெருகு பேரின்ப மனைக்குளும் பிறங்கர மியத்தும்
உருகு காதலி னொள்ளியோ யுள்ளுற வருக
வருக வென்றுநன் மங்கல வாழ்த்தொலி மலிந்த. 94

அலகை தோற்றன வுட்பகை யவிந்தன வாத்த
உலக பாசமு மொழிந்தன வினியொரு போதுங்
கலக மின்றெனக் கைமலர் சென்னியிற் கவின
அலகி லானந்த பரவச மடைந்தன னறிஞன். 95

சத்தி யங்கடைப் பிடித்துநந் தம்பிரா னருளாற்
பத்தி மார்க்கத்து நிலைநின்ற பவித்திரன் பவஞ்சப்
பித்தி யாவையும் புறநிறீஇப் பேரின்ப மல்கு
முத்தி வீட்டினுட் புகுந்தனன் ஜெயத்தொனி முழங்க. 96

இன்ப வீட்டினுட் புகுதலு மெம்பிரா னடியர்
அன்பு மீக்கொளத் தழுவின ராதரம் புரிந்தார்
நன்பு லத்துவைத் தாசிகள் பற்பல நவின்றார்
துன்ப மிங்கிலை யிலையொரு சோதனை யென்றார். 97

தலையி லானந்த தைலமிட் டாட்டினர் தயங்கும்
உலையி லாதபி தாம்பர முடுத்தன ருவந்து
விலைவ ரம்பிலா வெண்ணிலை யங்கிமே விட்டார்
தொலைவி லாநலந் துய்த்தினி திருந்தனன் றாயோன். 98

ஈது சம்பவம் யாவையும் வேதிய னெதிர்ந்து
காத லாயிரு கண்கணீர் மல்கிடக் கனிந்து
வேத நாயகன் கருணையை வியந்துளத் தேத்தி
ஓது சீர்த்தியாய் விடையுத வுட்புக வென்றான். 99

காலங் காட்டிய கதிர்களு முடுக்களுங் கவினி
ஞாலங் காட்டிய பூதபௌ திகங்களு நப்பன்
மூலங் காட்டிய வியல்விதி முறைதவ றாது
சீலங் காட்டிய சீர்மையைக் கண்டனை செய்யோய். 100

இயன்மு றைக்கமைந் தொழுகல்போ லெம்மையீ டேற்றுஞ்
செயன்மு றைக்கமைந் தொழுகலு நங்கடன் றீய
மயன்மு றைப்படு மனஞ்செலு நெறிப்படன் மதியன்
றயன்மு றைக்கிறை சித்தமே நலனென வோர்தி. 101

தமர நீருல கத்தவ தரித்தசற் குருமுன்
உமது சித்தமே சித்தமென் றுவப்புடன் பணியும்
அமர நாட்டையொத் தகனில மமைகவென் றளித்த
விமல மந்திரம் ஜெபித்துமென் வேறொன்று விழைதல். 102

பித்த ளாந்தவிப் பாத்திரம் பிரித்தநீ ரெடுக்கச்
சித்த மேலஃ தாகவென் சித்தமன் றென்னா
வித்த கத்திரு மைந்தனாத் துமத்துயர் மேவிச்
செத்து சேமில்வாய் விண்டமை கேட்டிலை கொல்லோ. 103

நல்குங் கேடென நன்மையை யொருவுவ நாசம்
பல்குந் தீமையை நன்மையாப் பற்றுவம் மதியற்
றல்கு சிந்தையே மாதலி னளவிலா ஞானம்
மல்கு தந்தையார் நமக்கறிந் தூட்டலே மாபாம். 104

சுருதி நாயகன் றிருவுளங் கூட்டிநாட் டோழ
கருதி யாங்குவீ டடைதலே கடனெனக் கழறி
வருதி நீயெனச் சென்றிருண் மலிந்தவோ ராங்கைக்
குருதி வாகர தாஸற்குக் காட்டினன் கூறும். 105



கூர்த்து நோக்குதி யிரும்பினா லியன்றவக் கூட்டுள்
வேர்த்து விம்மிநெட் டுயிர்த்துடல் விதிர்ப்புற வெருண்டு
பார்த்தி றங்குசென் னியனொரு பதிதனை வினவி
வார்த்தை யாடுதி யென்றனன் மறைவியாக் கியானி. 106

நன்று நன்றெனக் கிறிஸ்தவ னன்னிலை தவறி
வன்று யர்க்குறி மல்கிய வறுமுக நோக்கிக்
கன்று சிந்தையாய் யாரைநீ கவலுமா றெவனீண்
டொன்ற வந்தகா ரணமியா துரைத்தியா லென்றான். 107

வினவு வாசகங் கேட்டலும் வெஞ்சிறை மறிந்த
வனவி லங்கெனத் தரிப்பிலா துழல்பவன் மறைதோ
பனவ யானொரு கிறிஸ்தவன் பண்டெனைப் பலருங்
கனவி லும்பிழை கண்டிலர் கண்டிலேன் யானும். 108

பிழையை யோர்பிழை யென்றுணா ராக்கொடும் பிழையார்
பிழையி லானெனப் பிழைபடப் புகழ்ந்திடும் பிழையை
பிழையென் றெள்ளிடாப் பித்தன்யான் பிழைபடப் பிழைத்த
பிழைபொ றுப்பரோ பிழையிலா நீதியம் பெருமான். 109

வீட டைந்துய விரும்பியோய் வியன்பிர பஞ்சக்
காட டைந்தனன் சிற்றின்பப் படுகரிற் கவிழ்ந்தேன்
மாட டைந்தவர் தலைகையுங் கெடுத்தது வலயக்
கூட டைந்துகெட் டேனினிக் கூறுவ தெவனோ. 110

பன்றி மாசறப் பன்முறை கழுவவே படினுஞ்
சென்று சேற்றிடைப் புரள்வது போலும்வெந் தீய
வன்றொ டார்ப்படு ஞமலிதான் கான்றதை மறுத்துந்
தின்று தேக்கெறிந் துழல்வது போலுமென் சீர்மை. 111

ஐய மின்றொரு நாளரு வருத்தெனை யயலே
வையந் தள்ளுமிம் மாநுவேல் வழிபிழைத் ததனாற்
றெய்வ வானமுஞ் சீத்திடும் யாதினிச் செய்வல்
வெய்ய பாதல மலதொரு புகலிலை மேலோய். 112

போந்த பாவிய ரெவரையும் புறக்கணி யாத
சாந்த மூர்த்திதன் னருட்கடல் தயாநிதி தகைசால்
வேந்த னோர்திருக் குமாரனென் றுரைப்பது மெய்ம்மை
ஆய்ந்த கேள்வியா யையமெட் டுணையிலை யதற்கே. 113

162441
O111,3K85,9

அனைய தாயினு நன்றிலே னறநெறி திறம்பி
நினைவிற் செய்கையி லீட்டிய நீசவெவ் வினைகள்
இனைய தித்துணை யென்றுரை யாடுதற் கெளிதோ
கனைக டற்கரை மணலினுக் கதிகமாங் காண்டி. 114

வான நாயக னிதயமா ளிகையினில் வைத்த
ஞான தீபத்தை யணைத்தன னல்லிளங் கோமான்
மேனி வார்ந்தசெங் குருதியை மதித்திலன் வெறுத்தேன்
ஊன மின்மனச் சான்றையு முள்ளுறப் புதைத்தேன். 115

ஈசன் மைந்தனைத் தினந்தினஞ் சிலுவையி லேற்றி
நீச வெவ்வினை யுஞற்றின னிமலவீட் டுய்க்கும்
மாசில் நீதியை வனைந்தனன் மகிதலத் தெவர்க்கும்
நாச காலத்து மதிவிப ரீதமா நல்லோய். 116

ஆவ லாயகத் தமர்ந்துபோ ராடிய வருள்கூர்
தேவ வாவியு முனிந்தெனை விடுத்தனர் சிதைபா
ஜீவ வாக்கெலா மெனக்கல வென்பது திண்ணம்
பாவ காரியே னிதயமும் வைரக்கற் பாறை. 117

வேறு யானினிப் புகல்வதென் விபுதவேர் தருத்துக்
கூறு சாபமுங் கோபமும் வானிடைக் குமுறி
வீறு வீறுறக் கணந்தொறுங் கதித்தெனை வெருட்டும்
ஈறில் ஜீவனுக் கிரக்ஷைமற் றினியிலை யென்றான். 118

## வேறு.

கூட்டுளா னினைய கூறக் கொற்றவ னருள்பெற் றுய்யும்
வீட்டுளா னாக நின்ற வேதியன் விரைந்து பாவத்
தீட்டுளா யெனினு நம்பன் றிருவருட் செயலோ ராதிக்
கேட்டுளா னாக வுன்னைக் கெடுத்ததென் மதிகொண் டென்றான். 119

நல்குமெய்ம் மகிழ்ச்சி யென்று நனிமதி மருண்டு தீமை
மல்குசிற் றின்ப போகம் வரைவின்றி நுகர்ந்து வாணாள்
அல்கநின் றயர்ந்தே னித்த வருஞ்சிறைப் பட்டே னந்தோ
புல்குதீ விடத்தில் ஜீவன் போமெனும் பொறியி லாதேன். 120

என்னுறு மதியீ னத்தா லியைந்ததுர்க் கரும மாய
கொன்னுனைப் பகழி மாரி யுளத்திடைக் குளிப்ப வேவிக்
கன்னலுற் றேனை வாளாக் கடிந்துபுண் படுத்தென் னுள்ளே
மன்னிநின் றுயிரை வாட்டும் வழுவறு ஜீவ சாக்ஷி. 121



இலகுசெங் நீதிப் பெம்மா னிருஞ்சிறைப் படுத்தெஞ் ஞான்றும்
விலகருந் தளையப் பூட்டி விடுத்தன ராத லாலே
உலகெலா மொருங்கு கூடி யுஞற்றினு மீட்டற் கொல்லா
அலகில்வெஞ் சீற்றச் செந்தீ யவிக்குமோ வளிய கீடம். 122

இனிவரு நியாயத் தீர்ப்புக் கென்செய்கே னீறின் றாகி
நனிவரு சதாநிர்ப் பந்த நாசத்தை யுள்ளி யுள்ளிப்
பனிவரு மிதயத் தேன்மற் றென்னினிப் பகர்வ லென்றுத்
துனிவரு முயிர்ப்ப னஞ்சித் துடிதுடித் தலறிச் சோர்ந்தான். 123

நன்னிலை தவறி யுற்ற நடுக்கமுந் திகிலுங் கண்டான்
பன்னிய மாற்றங் கேட்டான் வேதியன் பரிந்து நெஞ்சிற்
கன்னில வெழுத்துப் போலக் காட்சியைக் கவினத் தீட்டி
மன்னிய குரவ வெற்குன் பணியெது வழுத்து கென்றான். 124

தொண்டரைத் தெருட்டுந் தூய சுருதிநூல் வலவ னீண்டு
கண்டுகேட் டறிந்த விந்தக் காட்சியைக் கருத்துள் ளூன்றிக்
கொண்டநற் றவத்தை ஞான சீலத்தைக் கொளுத்துங் காம
மண்டெரி கனலா தைவாய் வழியினைச் செறித்தி மைந்த. 125

மதிநலங் கெடுந்தூர்ச் சீல மவியுந்தீ விழிகண் மல்கும்
பதிபகை விஞ்சு நிந்தை பலுகும்வெம் பழியுஞ் சேருங்
கொதிநர கழமங் காக்குங் குவலயங் கூவுங் கூற்றைக்
கதிதிருக் காப்புக் கொள்ளுங் காமப்பேய் கதுவுங் காலை. 126

விள்ளருங் கேட்டுக் கெல்லாம் வித்திது வாத லாலே
கள்ளமின் றாகி யுள்ளங் கனிந்துசெய் ஜெபத்தி னாலும்
உள்ளுறு விரதத் தாலு மொருங்கறச் சிதைத்தல் வேண்டுந்
தெள்ளியோய் பிறிதொன் றானுஞ் சிதைபடா தாகு மன்றே. 127

சிற்றின்பப் பயன்கை நெல்லிக் கனியெனத் தெரியக் கண்டாய்
பற்றறுத் தியோகு செய்யும் பவித்திரான் மிகளே தூய
கொற்றவ னுலக போகங் கூட்டுண்டு களிக்கு நீரார்
இற்றிதை மறுது சேறி யிறைவழி யிறுதி காறும். 128

அயலொரு காட்சி யுண்டங் கதனையு மணுகி யாய்ந்து
மயலறத் தெருண்டு ஜீவ மார்க்கநீ வழிக்கொ ளென்னு
இயன்மன மயங்கி யாக்கை விதிர்ப்புற விரங்கி யேங்கித்
துயருறு மொருவ னின்ற சூழலைக் குறுகிச் சொல்லும். 129

பூவல யத்தை யாளும் புரவலன் புதல்வ னாய
சேவடித் தொழும்பு பூண்ட செவ்வியோய் தெரியி னின்ற
பாவகா ரியைமற் றென்னைப் பணித்துமெய் பதறும் பான்மை
மேவரப் புகறி யுற்ற வேதியற் கறிய வென்றான். 130

நலங்கிளர் சூரவன் கூற நடுங்கிமெய் பதறி யுள்ளங்
கலங்கிவெய் துயிர்த்துச் சென்னி கவிழ்த்தந்தக் காணம் யாவும்
மலங்கியுள் ளழியு மந்த மதியிலான் மறைவ லாளன்
இலங்கெழின் முகத்தை நோக்கி யினையன பகர லுற்றான். 131

ஆத்துமக் கவலை கொள்ளா வறிவிலி யகோர பாவத்
தீத்தொழின் மறவன் றேவச் செயலெலா மிகழ்ந்து பேசும்
நாத்திகப் புலைய னந்தோ நாசதே சத்தை நச்சி
ஆத்திக நெறியிற் செல்லா வசடர்க்கு ளசட னேயான். 132

கருதிலென் ஜீவ காலங் கமரிடைக் கவிழ்த்த பால்போல்
ஒருதிறத் தானு மைய பயன்படா தொழிந்த துன்மைச்
சுருதிகூ றியவா றுகத் துயிலிலோர் கனவு கண்டு
வருதிகிற் கணங்கண் முன்னின் றுருத்தெழ வருந்து கின்றேன். 133

திருக்கிளர் ஞான செல்வர் திருத்தியோய் திகாந்தங் காறுங்
கருக்கிளர் மேக சாலங் கதுமெனத் திரண்டு வானத்
துருக்கிளர் ஜோதி யெல்லாம் புதைபட வுயிர்கள் யாவும்
வெருக்கொளீஇ யலமந் தேங்க விருண்டது பேழுங் கீழும். 134

இருநிலம் புதைப்ப மல்கிப் புயல்பரந் திருண்ட தோற்றம்
ஒருமக வின்றி யூழி யுடற்றுநா ளுற்ற தென்னப்
பெருநில மடந்தை யுள்ளம் பேதுறீஇ யிழவு காட்டுங்
கருநிறப் போர்வை போர்த்த காட்சியைக் கடுக்கு மாதோ. 135

நஞ்சினிற் கரிய வாகி நளிர்நெடுங் கடலிற் பொங்கிச்
செஞ்செவே யுலகை மூடித் திசைதோறுஞ் செறிந்த கொண்மூ
எஞ்சுறுப் புனித நீதி யிறைவன்வெஞ் சினத்தீ யாவுந்
துஞ்சிட விறுத்த தென்னத் தடித்தது துருவங் காறும். 136

தடித்தொளி தழைக்குந் தோறுந் தமரவா ரிதிநீர் சூழ்ந்த
படித்தல நடுங்கி யேங்கப் பருவரைக் குலங்கள் யாவும்
முடித்தலை தகர்ந்து சாய முடுகிமூ தண்ட கோளம்
வெடித்திட வசனிக் கூட்டம் வெய்துற விடித்த தன்றே. 137



நெருங்குகா ரிருந்தை யூடு நிலவுமின் னெருப்பை யுய்த்து
மருங்குவந் துல்வு மூதைத் துருத்தியான் மலிய மூட்டி
இருங்கடை யூழி யென்னு மிகலுறு கருமான் வேலை
ஒருங்குடன் றமுவ லாலே யுலைக்கள மாய தும்பர். 138

மைக்கரு முகில்வாய் விண்டு வயங்கொளி மருவ மின்னி
ஒக்கநின் றாறுங் காட்சி யும்பர்நா யகனை நீத்துப்
பக்கமே திரிந்து சோரம் பயின்றபா முலகைப் பல்கால்
திக்கவ மதித்துப் பேசிச் சிரிப்பது சிவணு மாதோ. 139

அடுத்தடுத் துலக மஞ்ச வசனிநின் றிடிக்கு மோசை
வடுத்திகழ் மேனி வள்ளல் வருகின்றார் மழையிற் றோன்றி
நடுத்தர வென்று வானோர் நயந்துபல் லாண்டு கூறித்
தொடுத்திடை யறுது தேவ துந்துமி முழக்கல் போலும். 140

வருகும ரேசன் றாய மலரடிக் கன்பு செய்த
திருவுடை யாரே யன்றி ஜெகத்துளா ரெவரு மஞ்சி
வெருவியுள் ளுடைந்து சோர்ந்தார் விதிநிட தத்தை வீசிப்
பெருவழி துணிந்து சென்று பேதுற்றாற் பிழைப்புண் டாமோ. 141

## வேறு.

புத்தேள் மறைதேர் புங்கவவிப் புதுமை நிகழும் போழ்தத்தே
செத்தேன் செத்தேன் யானென்னுச் சிந்தை கலங்கித் திடுக்கிட்டேன்
பித்தே றினர்போல் வாயுழறிப் பேதுற் றயங்கிப் பிழைநினைந்து [142
கைத்தே னழுதேன் கதறினேன் கண்டேன் மரணக் கடுஞ்சூழல்.

அடுக்கும் மரண நினையாத வமையத் தென்று கருதாது
கெடுக்கும் புன்மைச் சிறுமதியாற் கெட்டே னந்தோ கிளரெரிவாய்
மடுக்குங் கடிகை வந்ததினி யென்னே யென்று வானோக்கி
நடுக்குற் றுலைந்தேன் றிகிற்காட்சி நனிவிஞ் சியது கணந்தோறும். 143

மன்னுங் கருங்கொண் மூவயிறு வகிரப் பிடித்த பொன்னூலி
தென்னத் தடித்த தொருமின்ன லிடித்த வோசை யெண்டிசையுந்
துன்னச் சுவர்க்க வாசிகளுந் தனுக்குற் றிரியத் தொலையாத
இன்னற் கடலின் கரைகாணு திருந்தே னிருந்த வெல்லைதனில். 144

பேசும் படித்தன் றுலகுநிலை பெயரப் பெருநீர் ததளிக்க
மாசு படிந்த மனுக்குலங்கள் வதைப்புண் டுழல வரையிடிய
மூசுந் தருக்கள் வேர்பறிந்து முறிந்து துணிய முறைபிறழ
வீசுங் கொடிய பிரளயக்கால் வீங்கிற் றண்டம் விதிர்ப்புற்ற. 145

வருமோ ரூழி மாருதமாம் வயவெஞ் சீயம் வந்துல
உருமே றஞ்சப் பிளிறொலிய வொளிர்மின் னோடைப் புகர்முகத்த
கருமா மேக காத்திரத்த கவின்கொள் யானைக் குழூஉக்கலங்கி
வெருவா நடுங்கித் திசைதொறுங்கூ விளிக்கொண் டோடிச் சிதறின
[வால். 146

மெய்யா யந்த வேளையிலே விசுவா சிகளும் மெய்பதறப்
பொய்யா மொழிகூ றியவண்ணம் புரைதீர் கடைசி யெக்காளம்
மையார் கவிசூழ் வையகமும் வானுந் துளங்க வலிந்துதொனி
செய்யா முழங்கிற் றினியென்னே செயலென் றழிந்தேன் சிறுமதி
[யேன். 147

இரவி தானே கனற்பிழம்பி லியைந்த கொல்லோ வெழிலியிடை
விரவித் தடித்த மின்னொளியை விசித்துச் சமைத்த விதமேயோ
கரவொன் றறியேன் பன்மணிகள் கலுழுங் கனகா சனவுருவொன்
றாவு செழுங்கொண் டலினுப்ப னூற்ற தமர ருவப்பெய்த. 148

அருளும் பொருளு நனிதெரிக்கு மான்ம போதச் சுடர்தழைப்ப
மருளுந் தெருளும் விரவியருண் மலியப் பொலியு மிதயம்போல்
வெருளு மிருளு மின்னொளியும் விரவி யிருள்போய் விடிவெய்தத்
தெருளும் பொருள்சேர் பொற்பீடந் திகழத் திகழ்ந்த திருவிசும்பே.
[149

ஊழிக் கதிரைப் புடைசுற்றி யூர்கோள் வளைந்த பரிசாகத்
தாழிப் புவன நடுத்தீர்க்கச் சமைந்த நியாயா சனத்தைவளைத்
தூழிக் கனல்சேய்த் துறவெழும்பி யுலவாக் கோட்டை யாயமைந்த
தாழிப் பெருமா னாசனத்தை யடுக்க வளியேற் காவதுகொல். 150

ஆப காலை நடுப்புரிவா னமலன் வருகை யெதிர்நோக்கி
நேய மிகுவா னவர்சேனை நெருங்கி யிறைஞ்சித் தொழுதேத்தப்
போயெவ் வுலகுந் திரிந்துவரு புனிதத் தூதர் போற்றிசைப்ப
மாய மறுவே தியர்குழுமி வணங்கி வழுத்தி வாழ்த்தெடுப்ப. 151

கின்ன ரந்தம் புருவீணை கிளருஞ் சுரமண் டலமாதி
நன்னர் நவிலு மிசைக்கருவி நாதகீத நயம்பொழியத்
துன்னு மசனி யிடித்ததெனத் தொனிக்கும் ஜெயபே ரிகைமுழங்கப்
பன்னுஞ் சுரதுந் துமியோடு பலவாச் சியகம் பலைபம்ப. 152

தேவ தேவ திரியேக தேவ சுதன்வந் தார்கொடிய
பாவ வுலகை நடுத்தீர்க்கும் பரமன் வந்தார் பரலோக
ஜீவ பாதை திறந்துவைத்த செல்வன் வந்தார் வந்தாரென்
றுவ லோடுகெட் டியங்கூறி யடியார் சங்க மார்ப்பரிக்க. 153



ஆதி மூலப் பரம்பொருளி னருமைச் சுதனுங் கிறிஸ்தியேசு
மாதின் வித்தா யவதரித்த வடிவத் திருமே னியிற்றோன்றி
ஜோதி முகமண் டலச்சேவை தரிசித் தெவருந் தொழுதிறைஞ்ச
நீதி யாதி பதியாகி நியாயா சனத்து வீற்றிருந்தார். 154

வேறு.

ஆண்டி ருந்தவ ரசிளங் கோமுகம்
மூண்ட கோடைமு திர்கடு நண்பகல்
சேண்ட யங்கிய செஞ்சுடர் போன்மெனக்
காண்டல் செய்தனெ னுள்ளுறக் கன்றியே. 155

ஆதி யம்பரம் ஜோதிய டுக்கவும்
பூதி யங்களெ ரிந்துபு கைந்தன
மீதி யங்கிய மீன்கணம் வீழ்ந்தன
மாதி ரங்கள்கு லைந்தம றுகியே. 156

பொரிவ தீவபு கைவபு ழுங்குவ
எரிவ காந்துவ வேங்குவ தேங்குவ
இரிவ சோருவ வேகுவ மீளுவ
திரிவ நிற்பதி கைப்பச ராசரம். 157

இருள டைந்தவி ருசுட ரெங்கணும்
மருள டைந்துக லங்கின மாமறை
தெருள டைந்தவ ருந்திகைத் தாருளம்
உருள டைந்தில தாலிவ்வு லகமும். 158

வைய கத்தும டிந்தனிர் யாவரும்
நொய்தெ ழுந்துந வல்நடுத் தீர்வையை
எய்து மின்னென்றி யாருந்து னுக்குற
வெய்தொர் சத்தம்பி றந்தது விண்ணிடை. 159

திருக்கு விஞ்சிய சிந்தையி னென்செவிக்
குருக்கி வார்த்தசெம் பாயதவ் வோசைநொந்
திருக்கும் புண்ணிலெ ரிநுழைந் தாலென
முருக்கி நின்றதென் னுள்ளத்தை முற்றுமே. 160

ஆங்கெ ழுந்தவவ் வோசையங் கங்குறத்
தாங்கி நிற்குந்த ருக்கில வாதலின்
ஓங்கு மால்வரை யுட்கியவ் வொல்லையில்
வீங்கு மெய்பிளந் தொக்கவெ டித்தவே. 161

தேரில் ஜீவனைக் கொன்றுதி னந்தொறும்
வாரி வாரிம டுத்தவிம் மாநிலப்
பேரி யாக்கைப்பி ணந்தின்னி யீமவெஞ்
சேரி வாயுங்கி ழிந்துதி றந்தவால். 162

தொன்று தொட்டுயிர் சோர்ந்துச மாதியின்
மன்று றங்கிய மானிடர் யாவரும்
பொன்றி நீத்தபு ராதன யாக்கையோ
டின்று யிர்த்தெழுந் தாருல கெங்கணும். 163

யாது மின்மையி லேயுல கியாவுமோர்
ஏது வின்றியி யற்றிய வீசற்குப்
பூதி சாதனங் கொண்டுமுன் போலுரு
ஆதி யென்னவ டாதுகொ லாவது. 164

பொருப்பிற் கானிற்பு தரிற்று ரவினில்
நெருப்பி லாற்றின்முந் நீரினி லத்தினில்
விருப்பிற் றுருயிர் வீடிய யாவரும்
உருப்பெற் றீண்டுயி ரோடெழுந் துற்றனர். 165

வெள்ள வாரிதி மீக்கிளர்ந் தாலெனக்
கொள்ளை மானிட மெங்குங்கு ழீஇயினைத்
தெள்ளி டற்குமி டமிலை யென்னவே
தொள்ளைப் பூமிமு ழுதுந்து தைந்தவே. 166

கூய போதுபி ரேதக்கு ழிவிண்ட
வாயி னின்றுவல் லேமரி மானிட
மேய புற்றிடை நின்றுவி னாந்தெழூஉம்
ஈயல் போன்மொய்த்தி னைத்தெழுந் தாரரோ. 167

மண்ணி னின்றங்கு யிர்த்தம னுக்கணம்
எண்ணில் கோடிய ரென்பதை யல்லது
விண்ணி லாவுவி புதர்க ணிப்பினும்
ஒண்ணு மோவத னுண்மைதெ ரிக்கவே. 168

தூக்க நீங்கிய வாமெனத் தூளிநின்
றூக்கை பெற்றுயிர் பெற்றவ ரந்தரம்
நோக்கி வானவர் போற்றிய கோன்கழற்
கோக்கு மாரனைக் கண்டனர் கோதற. 169



கண்ட போதிரு கைத்தலஞ் சென்னியிற்
கொண்டி றைஞ்சிப்ப ரவசக் கூத்தராய்
மண்டு பேரன்பு மல்கிவ ழிந்தெனப்
பண்ட ருந்துதி பாடின ரோர்சிலர். 170

பேயுங் கண்டறி யாப்பெரு வஞ்சக
மாயங் கண்டம னத்தெமை வாழ்வித்த
நேயங் கண்டநி ரஞ்சன மேனியைங்
காயங் கண்டுக ரைந்திடு வார்சிலர். 171

தொத்தி ருக்குக ருமலர்ச் சோலைவாய்
மெய்த்தி ருக்குரு தித்துளி வேர்த்ததும்
முத்தி னாக்குரு சேறிய மூர்த்தமும்
இத்தி ருப்படி வங்கொலென் பார்சிலர். 172

பால சூரியன் போலொளி பம்பிய
சீல மார்ந்ததி ருமுகச் சேவையே
சாலு நித்திய சாமியர்க் கானந்தம்
போலு மென்றுளம் பூரிப்ப ரோர்சிலர். 173

கண்ணி லாரிற்க விழ்ந்துக டுஞ்சிறை
நண்ணி நின்றந மையுந்தி ருவுளத்
தெண்ணி மீட்டிங்கி னிதினீ டேற்றிய
புண்ணி யத்தைப்பு கழ்ந்தனைப் பார்சிலர். 174

தொழுவ ரோர்சிலர் தோத்திரம் பாடிநின்
றழுவ ரோர்சில ரண்ணல்ப தாம்புஜத்
தழுவ லன்பருச் சித்துயி ரார்ப்பணக்
கிழமை பூண்டகி றிஸ்தவ ராயினர். 175

ஏனை யோர்நிலை யென்னென்று விள்ளுவல்
வானி லாமழை முன்றில்வ யங்கிய
ஞான பானுவின் சந்நிதி நாடிய
ஈன இடமெ னத்துடித் தேங்கினர். 176

தெய்வ மின்றுசி ருட்டியு மின்றெலாம்
ஐவ கைப்பெரும் பூதத்தி லாய்த்தெனப்
பொய்வம் போதிய புல்லிய ரும்மினிச்
செய்வ தென்னென்று லைந்துதி யங்கினர். 177

மாறி மாறிப்பி றவிவ ருமெனக்
கூறிக் கூறி மருட்டிய கொள்கையோர்"
ஈறில் துன்பத்துக் கெங்ககல் வேமெனாப்
பாறிப் பாறிநின் றுள்ளம்ப தைத்தனர். 178

அஞ்சி டாமல கம்ப்ரம மென்றுரைத்
தெஞ்சி டாதுமன் றானவ ரீசனைச்
செஞ்செ வேகண்டு தீவிட நாகத்தின்
நஞ்சுண் டாரிற்றி பங்கிந டுங்கினார். 179

உலகிற் பல்வகைப் பொய்மதத் துற்றுழன்
றலகி றீவினை யாத்தவ மார்க்கர்கள்
இலகு நீதியெ திர்ந்தமை கண்டெங்கும்
விலகு மார்க்கமின் றாகிவெ ருண்டனர். 180

குன்ற மேமலை யேகுகை யேபுதர்
துன்று சூழல்க ளேயெமைத் தோன்றுறா
தின்று காக்கவொல் லாதுகொ லோவெனா
நின்று கூவிநெ டிதுயிர்த் தாரரோ. 181

வேறு.

ஆய காலையரு டுற்றுகிரு பாச னமொரீஇத்
தூய நீதியழல் காலுமணி துற்ற ரியணை
மீயெ ழுந்தருளி வீற்றினிதி ருந்த விமலன்
சேய விழ்த்தனரோர் செம்முறைஜெ கங்கு லையவே. 182

புத்த கச்சுருள்வி ரித்துலகு பூத்த வெவரும்
இத்த லத்தருகெ மக்கெதிரி லெய்து கவென
எத்த லத்தவர்செ வித்தொளையி லும்மெ ளிதுற
வித்த கத்திருவி தழ்ப்பவளம் விண்ட னாரோ. 183

வார்த்தை யங்குறுதி கழ்ந்திடவ யங்கு புனித
மூர்த்தி சந்நிதியி னின்றுடன்மு ளைத்து முடுகித்
தீர்த்த னுக்குரா ருக்குமிடை தீத்தி ரள்செறுத்
தார்த்து நின்றதுல கத்தவா கங்க ருகவே. 184

கோர வெங்கனல்த ழைத்தெதிர்கொ ளுத்த வதனால்
பார கங்குழுமு மன்பதைப தைத்து ளம்வெரீஇத்
தூர நின்றுபரி வுற்றுயிர்து டித்த னரினிச்
சார வோர்புகலு மின்றெனம னந்த ளரவே. 185



அக்க ணத்தகில லோகசர ணாலை யர்தம்
பக்க நின்றவரை நோக்கிமுதிர் கோது மைபயன்
மிக்க நன்மணிதி ரட்டிநம மேனி லையசேர்
தொக்கு வைம்மினஃ தேதையுநீர் சோர விடலீர். 186

வறிய புன்பதரை வன்களையை வைத்தி ரள்களைச்
செறிய வாரியடை யக்கொதிகொள் செந்த ழலிடை
எறியு மின்னெனவி சைத்தனரி சைத்த பொழுதே
பொறியெ ழுந்தனக ரிந்தனபொ ரிந்த புவனம். 187

வனச ரோருகம லர்ப்பதமி றைஞ்சி மகிழ்பூத்
தனக னேவுபணி யைச்சிரம ணிந்து மையராம்
பனவ ரோர்சிலரி ழிந்தவது பார்த்த னுளம்
சினவி வந்தவர்பு ரிந்தமையெ துந்தெ ரிகிலேன். 188

பழுத றுங்குணமெய் யன்பினொடு பத்தி கனியத்
தொழுது நின்றவரெ லாரையும்வி சும்பு சுலவிக்
குழுமி நின்றுராறு கொண்டல்கொடு போய திவண்மற்
றழுது நின்றவனை வோரும்விடு பட்ட னரவம். 189

பூத லத்துவிடு பட்டயர்பொ லாத குழுவைக்
காத லித்துடன்வி ழுங்குவலெ னக்க டுகிவாய்
மேதி னித்திடர்பி ளந்தவிட ரூடு விரவிப்
பாத லத்தெரித வழ்ந்துபுகை பம்பி யதரோ. 190

இன்ன வாறுவிடு பட்டவரி லேயொ ருவன்யான்
மன்னி ரும்புவிபி ளந்ததும ருங்கெ னடியின்
இன்னல் கூர்நரக பாதலமு மெட்டி யதெனக்
குன்ன ருந்திகில்பி டித்தது டனுண்மை யுரவோய். 191

மீக்கி ளர்ந்தமழை முன்றிலின்வி ளங்கி யபிரான்
நோக்கி னாரிடைய ருதெனையந் நோக்க யில்கொள்வேல்
தாக்கி னாலெனவி ளைந்துயிர்த ளர்ந்து தமியேன்
ஆக்கை யுங்குலைகு லைந்தறிவ ழிந்த னனரோ. 192

என்னி ரும்பெரிய தீவினைகள் யாவு மிருள்போல்
முன்ன ணைந்துளம்வெ ருட்டுவன முற்று முரணிப்
பின்னி டைந்தவென கக்கரிபி றங்கி யெரிபோல்
துன்னி நின்றுசுடு வாதைபுக லுந்து ணையதோ. 193

சகல லோகமுநி றைந்தசரு வேசர் சநிதிக்
ககல வோடவெனி லெங்ஙனம டுக்கு மலதோர்
புகலு மில்லையுயிர் பொன்றலுமின் றென்று பொரும
இகலி யேகியக ஞானவெ திர்ந்த தெனையே. 194

கனவு றழ்ந்தபய பீதியுறு காட்சி கணமும்
நினைவில் வந்துமுனி கழ்ந்திடுதல் போல நிலவும்
மனது புண்படவி னைந்துயிர்வ ருந்தி வசமில்
தனுவு மிவ்வணந டுங்குமிது காண்டி தகவோய். 195

என்றி வாறுகன வன்சொலியி றுத்த லுமெதிர்
நின்ற வேதியனு மென்னைகொல்ப யப்ப டுதனீ
மன்றல் நாயகன்ம காகருணை வாரி தியையேன்
சென்று கூடலையி தென்னுன்மதி செப்பு தியெனா. 196

ஐய கேளிய னெத்தனமி லாவ மைதியில்
வைய கத்திறுதி நாள்குறுகி வந்து பிடியாக்
கைய ரோடெனைவி டுத்ததென கால ருகிலே
வெய்ய பாதலம்வி ழிப்படவெ டுத்த துபுவி. 197

நீளி றக்கருமு கிற்கிடைய மர்ந்த நிருபர்
ஆன னக்கதிர லர்ந்தவிரு நேத்தி ரமுமென்
ஊன கத்துருவ நோக்கியவு ருத்த முகவெங்
கான கத்துவய மாவினிரு கட்பொ றிகள்போல். 198

ஆத லாலினிய சாத்தியமி ரக்ஷை யளியேற்
கோத லாவதுள தொன்றுமிலை யென்று முலவாப்
பாத லாக்கினியெ னக்குரிய பங்கு பரிவென்
ஈதெ லாமபதி யீட்டுபய னென்று ரைசெய்தான். 199

வேறு.

கடின சித்தன்க னாத்திறம்
முடியக் கேட்டனை முன்னவற்
கடிய நின்மனத் தாயதென்
நொடிதி யென்றன நூல்வலான். 200

மற்றி வன்புகல் வாய்மையால்
உற்ற தென்னுளத் தோர்பயம்
அற்ற தாயினு மாரிய
முற்று நம்பினன் முதல்வனை. 201



தீக்க வல்லவெந் தீவினை
போக்க வல்லதும் புண்ணியம்
ஆக்க வல்லது மறுதிநாட்
காக்க வல்லதுங் கருணையே. 202

என்னு ளத்தியல் பீதெனாப்
பன்னி னான்பர மார்த்திகன்
அன்ன தோர்ந்தரு ளாளனும்
பின்னர் மற்றிது பேசுவான். 203

கடையு கத்தெழு காட்சிகண்
டுடையு நெஞ்சனு றுந்துயர்
அடைய நன்கறிந் தாய்வழிக்
கிடைம றந்திட லெம்பிரீ. 204

காட்சி தொக்கவிக் கடிமனை
மாட்சி கண்டும னத்துள்வைத்
தாட்சி செய்பவ ரருள்வழி
நீட்சி யென்றுநி னைத்திடார். 205

அனைய தாதலி னன்பவிம்
மனையின் மாட்சிம தித்துநன்
னினைவி னேருநெ றிச்செலீஇ
முனைவ னுடை மொய்ம்பினோய். 206

பத்த பாலன ராம்பரி
சுத்த ஆவியின் றுணையுனக்
கெத்தி றத்தினு மியையுமாற்
சித்த சஞ்சலந் தீர்திநீ. 207

ஈச நேசமி யைந்தமெய்த்
தேசி கன்னிவை செப்பியே
ஆசி கூறிய னுப்பினான்
மாசி லானும்வ ழுத்துவான். 208

வேறு.

அகத்திரு ளிரிந்தோட வருண்மொழிச் சுடரேற்றி
மகத்துவ நெறிகாட்டும் வலவவிம் மனைமுன்றில்
இகத்தையு மினிதாகப் பரத்தையு மெதிர்காட்டி
மிகத்தெருட் டினையைய விள்ளுவ தறியேனே. 209

பேருத வியையுள்ளும் பெற்றிமை யலநியானோர்
நேருத விடுகைம்மா றுளதுகொன் னினக்கென்று
ஆருயி ரனையானுக் கன்பினஞ் சலிசெய்து
சீருயர் கதிசேருஞ் செந்நெறிக் கொடுபோனான். 210

வியாக்கியானி யரமனைப் படலம் முற்றிற்று.

## சுமைநீங்கு படலம்.

விதிவிலக் கிகந்தீட்டு வினைச்சுமை சுமந்தொல்கி
முதுகுளுக் குறுமேனு மிடுகிய முடுக்கேனுஞ்
சதியெது மணுகாமே சமைத்துள வீடேற்ற
மதிலிரு மருங்காக வழியினி யனபோனான்.

காவல னருள்சேய்செங் கமலமேல் லடிதோய்ந்த
தாவரு நெறியூடு தனிவரு மறைவாணன்
பாவரு திருநாமப் பதிகமிங் கிதமாக
மேவர வினிதோதி விரைகுவ லெனவுன்னு.

### தேவாரம், திருநாமப்பதிகம். (பண், காந்தாரம்.)

1. மன்னுயிர்த் தொகுதியீ டேற வானினும்
இந்நிலத் தினும்பிறி திலையென் றேமறை
பன்னியேத் தெடுப்பது பாவ ஜீவருக்
கின்னமு தாயதி யேசு நாமமே.

2. தெருளெலாந் தனதெனுந் தெய்வ மாமறைப்
பொருளெலாந் தனதெனப் பொலிந்தி லங்குவ
தருளெலா மன்பெலா மறனெ லாம்வளர்த்
திருளெலாந் தொலைப்பதி யேசு நாமமே.

3. பன்னருங் குணத்ததும் பவித்தி ரத்ததுந்
துன்னரும் பொருளதுந் தூய்மை பூண்டுளோர்
நன்னர்நெஞ் சத்திடை நடித்து நிற்பதும்
என்னுயிர்த் துணையதும் யேசு நாமமே.

4. நித்திய ஜீவனு நெறியும் போதமுஞ்
சத்திய நிலையமுந் தானென் றுள்ளது
பத்தியிற் பரவுவோர் பரம வீடுற
இத்தலத் திறுத்ததி யேசு நாமமே.



5. பொன்னுல கத்துளோர் புணரி சூழ்புவி
தன்னிலுள் ளோர்தலை தாழ்ந்து போற்றிட
மன்னிய தகையது மருவி வானிழிந்
திந்நிலம் புரப்பதி யேசு நாமமே.

6. நன்னெறி புகுத்திடு நவையி னீக்கிடும்
இன்னலை யகற்றிடு மிகல்செ குத்திடும்
உன்னதத் துய்த்திடு மொருங்கு காத்திடும்
எந்நலத் தையுந்தரும் யேசு நாமமே.

7. அன்பினுக் குருவநல் லறத்துக் காலயம்
மன்பதைக் கருண்மழை வழங்கு பைம்புயல்
நின்பர மென்றினை வோர்க்கு நித்யபே
ரின்பசஞ் சீவிதம் யேசு நாமமே.

8. வஞ்சகக் கூளியை மடிக்கு மந்திரம்
பஞ்சவிந் தியங்களைப் படுக்கு மந்திரம்
செஞ்செவே ஜெகமரு டீர்க்கு மந்திரம்
எஞ்சலின் மந்திரம் யேசு நாமமே.

9. கூறுமந் திரமறை குணித்த வேதியர்
தேறுமந் திரம்ஜெபத் தினுக்குச் செவ்விதின்
வேறுமந் திரமிலை வேத ஞர்செவிக்
கேறுமந் திரங்கிறிஸ் தியேசு நாமமே.

10. தருமமு மொழுக்கமுந் தவமு ஞானமுங்
கருமமு மீதலாற் கருதில் யாதுமோர்
அருமையும் பயனுமொன் றில்லை யாதலால்
இருமையுந் துணையெனக் கியேசு நாமமே.

11. நஷ்டமே தருஜெக நகைக்க நாளெலாங்
கஷ்டஜீ வனஞ்செய்து கழிப்ப மாயினுந்
துஷ்டவல் வினையெலாந் தொலைக்குந் தூமன
இஷ்டகா மியந்தரும் யேசு நாமமே.

தேவாரம் முற்றிற்று.

கண்ணிய நறுந்தேனிற் கன்னலின் மதுரிக்கும்
பண்ணில வியகீதம் பயிலிசை யொடுபாடிப்
புண்ணிய குருநாதன் பொன்னடி விழிநீரான்
மண்ணியன் பலர்தூவி யேகினன் வழிபட்டே. 3

இப்பரி சிவனேக வெதிரொரு சிறுகுன்றம்
ஒப்பதோ ருயர்பூமி யுளதென வதைநாடி
அப்பன வனுமோடி யணுகவத் திடர்மேலே
துப்புறழ் குருசொன்று தோன்றுவ தெதிர்கண்டான். 4

மற்றத னருகெய்தி மானத விழியாலே
கொற்றவ னொருசேயக் குருசினி லறையுண்டு
முற்றுகு செஞ்சோரி முழுகிய திருமேனி
குற்றுயி ரொடுநையக் கண்டன னொருகோலம். 5

அக்கணம் வெரிந்மீதுற் றடுவினை நனிதொக்க
பொக்கணம் விழுந்தொல்லை பன்முறை புரண்டோடிப்
பக்கலி இறுமீமப் படுகுழி யிடையாழ்ந்து
புக்குழி தெரியாமற் போயது புதைபட்டே. 6

விஞ்சிய கொடுஞ்சும்மை விழுதலு மறைவாணன்
நெஞ்சக மகிழ்ந்தியாக்கை நிமிர்ந்துநின் மலதேவின்
மஞ்சனிங் குதித்தீட்டும் வரம்பில்புண் ணியத்தாலே
உஞ்சன னளியேனென் றுருகியுள் ளுவந்தேத்தி. 7

மன்பதை யுயிர்வாழ வருமருண் மணிமல்கும்
அன்புத தியைநோக்கி யாவியி னனல்தூற்றி
என்புநெக் குளமாழ்கி யிருவிழி புனல்கொள்ளப்
பொன்புரை சரணிழல் புக்கனன் புகலுற்றான். 8

வேறு.

சொல்லொன்றா லனைத்துலகுந் தோற்றுவித்தாய் தோற்றியவை
எல்லாமிங் கொருபடித்தா யின்றளவு நின்றியல
வல்லாய்நீ யோர்வரம்பு வைத்தாயுன் வல்லமையைப்
புல்லேனோ சொல்விப்பு கழ்ந்துரைக்கும் போதத்தேன். 9

உருட்டுவாய் வையகத்தை யொருநொடியி லுலகினொடுஞ்
சுருட்டுவாய் ககனத்தைச் சூழ்சுடரை நிறுத்துவாய்
திருட்டுவாய் மனத்தினரைத் திரையாழி யிடையமிழ்த்தித்
தெருட்டுவா யடியரையுன் றிறஞ்செப்பற் பாலதோ. 10

ஆக்கவும்வல் லவனீயிங் காக்குவித்த வனவரதங்
காக்கவும்வல் லவனீயின் கருதுங்காற் கணப்பொழுதிற்
போக்கவும்வல் லவனீயிப் பொல்லாங்கு பொறுத்துமுடி
சாய்க்கவருந் திறனென்னே தருமத்தின் றனிமூர்த்தி. 11



எப்பொருட்கு மிறைநீமே கேசனுநீ யென்றிருக்கச்
செப்பரிய பெருந்துன்ப முனைச்சேருந் திறனென்னே
ஒப்பரிய திரியேகத் தொருவாவுன் னுள்ளன்பின்
வெப்பமிகு மனலன்றோ விவ்வாறு விளைத்ததுவே. 12

நீதியான் மனுநாச நேருமெனப் பிணைநின்று
சாதியா லெந்தாயுன் றண்ணளியின் றகையேனும்
ஆதியா னீபடும்பா டத்தனையு மறிந்துள்ளம்
பேதியா தனையிங்ஙன் விடுத்ததுவே பெரிதம்மா. 13

வாழ்வாராம் நரப்புலையர் வந்துநடு நின்றொருவர்
தாழ்வாரா மவர்பொருட்டுத் தாதைமுறை தப்பாமற்
போழ்வாராம் பட்டையத்தாற் பொன்றியொரு பரமசுதன்
வீழ்வாரா மீதென்னை வேந்தன்செங் கோன்முறைமை. 14

வானாடு தொழுதிறைஞ்சு மகிமையெலாம் புறநிறுவிக்
கானாடு மலர்க்குழலோர் கன்னிகருப் பாசயத்தற்
றானாடு முடலெடுத்திங் குயிர்ப்பலிநேர்ந் துதவினைநீ
ஆனாடற் கெளிதோநின் னன்புநிலை யச்சோவே. 15

மூன்றாய கவடுடைய முதுமூலத் தனிப்பொருளே
தேன்றோயு மலர்ப்பொழில்வாய்த் திருவுள்ளந் துயர்மேவி
ஊன்றோயுந் திருமேனி யுதிரவெய ருகுத்ததும்போய்
ஆன்றோயித் தனைதுயரும் வேண்டுமோ வச்சோவே. 16

பாவிகளிற் பிரதான பாவிகொடும் பாவிமுழுப்
பாவிதுணி கரப்பாவி பகுத்தறிவி னின்மூடப்
பாவிவிசு வாசமிலாப் பாவியதி சண்டாளப்
பாவியான் வந்தடைந்தேன் குமரேச பரிந்தருளே. 17

உசுவாச மினியிலையென் றுயிரொடுங்கி யுடற்றுருத்தி
நிசுவாச மகல்காறு நின்னன்பை நெகிழவிடா
விசுவாச மெனக்கருளி வியனுலக மயலளைந்த
பசுவாச னையையகற்றிப் பதியுலகம் பரிந்தருளே. 18

கைம்மாறு முளகொல்லோ கணிப்பறுநின் பேருதவிக்
கெம்மாவி யுடல்பொருண்மற் றிவையொருமூன் றையுமின்னே
தம்மானின் னருளுக்கே தக்கணையாச் சமர்ப்பித்தேன்
வெம்மாய வினைதொலைத்துன் வீட்டுலகங் கூட்டுகவே. 19

ஆவலொடு மருள்வேத வறநெறியைக் கடைப்பிடித்து
ஜீவலயம் வருமெனினுந் திருவடிப்பற் றொழியாமே
பூவலயத் திடையுனக்காய்ப் பொன்றுமொரு சான்றாகக்
காவலநீ யடியேனைக் கடைக்கணிக்கக் கடவாயோ. 20

வேறு.

இன்னன துதிபகர்ந் திறைஞ்சு மெல்லையிற்
பொன்னிலத் தவரொரு புனிதர் மூவர்போந்
தன்னவன் விழிப்படீஇ யஞ்சல் நின்வயின்
மன்னுக நஞ்சமா தானமாண் பென்றார். 21

மூவரி லொருவரா முதல்வன் முந்தியுன்
ஜீவனுக் கழிவுசெய் தீய வெவ்வினை
யாவையுந் தொலைத்தன மிடர்ப்ப டேலெனாத்
தாவருங் கருணையிற் சாற்றி னாரரோ. 22

உந்துபே ரன்பினா லுருகி யாங்கவன்
கந்தையைக் களைந்தொரு கவின்கொள் வெள்ளுடை
விந்தையாய்ப் புனைந்தனர் விசித்த வெங்கொடும்
பந்தமிற் றுகநடு நின்ற பண்ணவன். 23

மற்றொரு தூயவர் மகிழ்ந்து வேதியன்
நெற்றியி லொருகுறி நிலவக் கோட்டிவிண்
பற்றுசெந் நெறிதிகழ் பயணப் பத்திரந்
தெற்றென வருளிமற் றீது செப்புவார். 24

செந்நெறி யிதுவெனத் தெரிக்கு மாதலின்
உன்னெறிக் குறுதுணை யாமி தோர்ந்துநீ
நன்னெறிப் படிவரு நவையின் றாம்விரைந்
திந்நெறி கடைப்பிடித் தேகற் பாலையால். 25

புண்ணிய நகரைநீ பொருந்து போதவண்
நண்ணிய வாயிலோர்க் கிதனை நல்கிடின்
உண்ணில விடவுனை யுய்ப்ப ராமெனத்
திண்ணிதி னுணர்த்திநீ சேறி யென்றனர். 26

இவ்வகை மூவரு மெதிர்ந்து தொண்டனுக்
குய்வகை யுவந்தருள் புரிந்தவ் வொல்லையிற்
செவ்விதின் மறைந்தனர் சிந்தை யுள்ளுளே
நைவரு மடியனா நாடு நம்பிரான். 27



கரந்தமை வேதியன் கருதிக் கண்கணீர்
சொரிந்திரு கரந்தலை சூடித் தோத்திரித்
தரந்தைநீத் தகங்களித் தடிய னேனையும்
புரந்தமை யேயருட் புதுமை யென்றனன். 28

வெரிநுறு சும்மையை விழுத்தி வெண்டுகில்
பரிவொடு நல்கியோர் பயணப் பத்திரந்
தெரிவுற வருளிய சீர்மை யாவையும்
பிரிவற வுள்ளினன் மறப்பில் பெற்றியான். 29

இத்தகு சிலுவையை யெய்து முன்னர்யான்
சித்தசஞ் சலச்சுமை சுமந்து தேம்பிய
அத்தனை துயரமு மகன்ற தேயஃ
தெத்தனை பெரியபாக் கியமென் றேத்தினான். 30

புல்லிய வுலகமீ யாத பொற்புறு
நல்லியன் மெய்ச்சமா தான நண்ணுமா
றல்லியன் மனத்தெளி வருளிக் காத்தவவ்
வெல்லையில் கருணையை யிதயத் துள்ளினான். 31

காண்டகு மிருப்பினைக் கவருங் காந்தமொத்
தாண்டகை திருவரு ளகத்தை யீர்த்திட
மாண்டகு சாதனம் வகுத்துக் காட்டிய
சேண்டரு நெறிக்கொடு திருமி னானரோ. 32

சுமைநீங்கு படலம் முற்றிற்று.

## துயிலுணர்த்து படலம்.

விள்ளருந் தீவினை விளைத்த வெந்துயர்
தள்ளுறப் படுதலிற் றளர்ச்சி யின்றியே
உள்ளுறு முவகைமுன் னுந்த வுந்தலாற்
கள்ளமி லுணர்ச்சியான் கடிது போயினான். 1

அருத்தியிற் பற்பல்யோ சனைய கன்றுபோய்க்
கருத்தில்புன் மாக்களாற் கடப்ப தற்கொணா
வருத்தமென் றொருதட மலையை வானுறத்
திருத்தகு வேதியன் றெரியக் கண்டனன். 2

அம்மலைச் சாரலை யடுத்தங் கோர்சிறை
மும்மலத் தளையொடு முடங்கிப் பாந்தள்போல்.
அம்மகே டுணர்கிலா வசடர் மூவர்தாங்
கைம்மிகு துயில்கொளக் கருதி நோக்கினான். 3

ஐயகோ விவர்நிலை யளிய வாழியான்
வெய்யகோ பாக்கினி சுலவு மேலைநாள்
உய்யவோ மதிதுயி லுணர்த்த னன்றெனா
மெய்யவா வுடனடுத் தூரத்து விள்ளுவான். 4

வேறு.

அந்தோ வந்தோ வென்னிது றக்கம் மறிவில்லீர்
முந்தோ ராதே வந்தபி னெண்ணா முழுமூடச்
சந்தா பத்தா லென்பய னுண்டாந் தலைதூக்கி
நந்தா வின்ப நன்னெறி சேர்மின் நமரங்காள். 5

உடலையு ருக்கிக் குருதிவ டித்திட் டுயிர்தந்த
கடலைநி கர்க்குங் கருணையி ருப்பைக் கருதாமே
புடவிம யக்கிற் சுழலவி டுக்கும் புலைமார்க்க
நடலையை நச்சிச் சுடலைபு காதீர் நமரங்காள். 6

மஞ்சன்ம காதே வற்கொரு வள்ளன் மறுவேலன்
கஞ்சம லர்த்தா டஞ்சமென் றுள்ளங் கசியாமே
வஞ்சம னப்பேய்க் கஞ்சலி நல்கன் மதியோகொல்
நஞ்சமு தாகக் கொள்வது நாசம் நமரங்காள். 7

சிந்தனை யின்றிக் கண்படை கொள்வீர் தெறுகாலன்
வந்தெதிர் நிற்பி னென்கொல்செய் கிற்பீர் மதியில்லீர்
இந்தம யக்கைச் சிந்துமி ரக்ஷைக் கிதுகாலம்
நந்திடு முன்னே நம்பனை நாடும் நமரங்காள். 8

இன்மையி னின்று மான்மவி வேகத் தெழில்கொண்ட
ஜென்மமெ டுத்தீர் மெய்வழி கண்டுந் தெருமந்து
கன்மவ சத்தா லின்றொரு மிக்கக் கவிழ்கின்றீர்
நன்மதி யோவித் துன்மதி சொல்லும் நமரங்காள். 9

செல்கலி ரின்னே சிந்தைதி ரும்புஞ் சிற்றின்பம்
அல்கலி லன்ப வாழிய மிழ்த்தி யடுவிக்கும்
மல்குமெய்ஞ் ஞான சிற்சுக போகம் வரைவின்றி
நல்குகி றிஸ்தெம் மானரு ளோடும் நமரங்காள். 10



நின்றுசு கிக்கு மாத்தும வாழ்வை நினைகில்லீர்
பொன்றுட லிங்கோர் புற்புத மென்னும் பொருளுன்னீர்
தின்றுகொ ழுத்துத் தீச்சிறை வேட்டுத் திரிகின்றீர்
நன்றிது வாமோ பேதைய ரோநீர் நமரங்காள். 11

வெம்புமி ருத்தா மாழிகி ளம்பி விடுமாயுள்
அம்பிய லைக்கச் செய்வன செய்யா தலைகூம்பின்
கொம்பிலு றங்குங் கொள்கைய ரானீர் குணநாடில்
நம்பனை நம்பிக் கும்பிடுங் கூவி நமரங்காள். 12

தீமலி கும்பி யூடுபு குத்நித் தெறுதீமை
ஆமவை யாவுஞ் சேரவெ றுத்திட் டருளாளன்
கோமக னேசு சாமிகி றிஸ்து குமரேசன்
நாமம்வ ழுத்தி நல்வழி கூடும் நமரங்காள். 13

மேக்குயர் வாழ்வு மீடணை யாவும் விடுபட்டிங்
காக்கைத ளர்ந்தே சாக்கிடை யாகி யலமந்து
மீக்கிளர் மூச்சும் விக்குளு மேவி விழிகுன்றி
நாக்குழ றுமுன் னம்பனை வாழ்த்தும் நமரங்காள். 14

கலங்கலிர் வஞ்சப் பேயிடு வித்த கடுமாய
விலங்கைய றுக்கத் தக்கதி தென்கை மிளிர்கட்கம்
இலங்கருள் வேந்த னாணைத லைக்கொண் டெழுந்துள்ளம்
மலங்கலி ராகிச் சேசுவை நம்பி வழிக்கொண்மின். 15

காலம்வி ளைந்து தூமநி கர்ப்பக் கடிதோடுஞ்
சீலம றிந்து சிந்தைதி ரும்பித் திருவுள்ளஞ்
சாலம தித்து மெய்வழி கூடிற் றகைசான்ற
மேலுல கத்தைச் சேருவி ரென்றும் விளிவின்றால். 16

உலகைம யக்கிக் கலகம்வி ளைத்திட் டுயிர்மாய்க்கும்
அலகைக ருச்சித் தடருநெ ருக்குற் றரியேறு
சுலவுவ னாதப்போன் றிதையுணர் வற்றுத் துயில்கின்றீர்
விலகியு யற்குத் தருணம்வி ழித்து விரைமின்னே. 17

இத்தகை யான வித்தக போத மெடுத்தோதிப்
பத்தன்வி ளிக்க நித்திரை பங்கப் படுமாறு
கத்துவ தென்னீ சொற்றவை முற்றுங் கனவென்னாப்
பித்துறு பேதை விண்டது யின்றான் பிணமாக. 18

எஞ்சா தெம்பி யேனிரா கின்றா யிருகண்போற்
றுஞ்சா வாய்மற் றியாண்டுப டைத்தாய் துயருண்டென்
றஞ்சேல் சென்னீ தூங்குவல் சற்றிங் கயர்ந்தென்னா
விஞ்சா நின்ற தூக்கம்வி ளைத்தான் மிகுசோம்பன். 19

ஏங்கியி ரங்கிக் கூவிளி கொண்டிங் கெமையுய்யத்
தாங்குதி போலா மெப்பொரு ளுந்தந் தானத்தில்
ஊங்குத ரிக்க வுற்றறி யுங்கண் டுணர்கென்னாப்
பாங்குணர் வில்லாத் துணிகர னாங்கண் படைகொண்டான். 20

மற்றிவர் சொன்ன வாசக முந்தீ வருமென்று
சொற்றவை கொள்ளாத் துணிகர முங்கண் டுயில்கொள்ளும்
பெற்றிமை யுங்கண் டுன்னத வின்பம் பெறநாடும்
நற்றவ னெஞ்சிற் றன்வழி கூடி நவில்வானால். 21

என்னே யென்னே கைவரு மோச மெதிர்காட்டி
முன்னே யாகச் செந்நெறி கூடி முடுகும்மின்
இன்னே யென்னப் பன்னிய செஞ்சொ லியல்பெல்லாங்
கொன்னே போக்கி நித்திரை கொள்ளுங் குணமம்மா. 22

தேகமெ டுத்தே னாயுள்ப டைத்தென் றிகழ்செல்வ
போகம டுத்தென் பல்கலை கற்றுப் புகழ்பெற்றென்
மாகத லத்து ஜீவசு கத்தை மதியாமே
ஊகம்வி டுத்துச் சாகும னித்த ருலகூடே. 23

காவல னாணை பேணலர் ஜீவ கதிமார்க்கம்
மேவலர் சொற்ற மெய்யுரை கொள்ளார் விழிதுஞ்சிச்
சாவைவி ளிப்பா ரிவரையு ணர்த்துந் தகவோரில்
கூவலி றைத்து விண்விழ லுய்க்குங் கொள்கைத்தால். 24

வகுத்துவ குத்தூச் சொல்லிய வாய்மை மதிகேடர்
பகுத்துணர் வில்லா ராதலி னன்றோ பழுதென்னா
உகுத்தன ரெல்லாங் கவிழ்த்தகு டத்தின் னுழுந்தேபோல்
அகத்துற லின்றிப் போயதி வர்க்குய் வரிதம்மா. 25

இன்னநி னைத்தே பச்சைம ரத்தே றிடுமாணி
என்னும்வ கைத்தாய்த் தெய்விக போத மிகவின்றித்
தன்னுள ழூந்தத் தண்ணரு டந்து தனியாவி
மன்னுந லத்தை யுன்னிவ ழுத்தி வழிபோனான். 26

துயிலுணர்த்து படலம் முற்றிற்று.



## அமார்க்கப் படலம்.

ஆயிடை யொருபா னின்று மடுத்தவோர் வழிவந் தண்மி
ஏயபே ரழகு வாய்ந்த வீடேற்ற மதிலைத் தாண்டி
மாயசா லகனும் பூண்ட மாயவே டனுமென் றோது
தீயரோ ரிருவர் ஜீவ பாதையிற் றிருமி நின்றார். 1

அங்கவர் தம்மைக் காணா வாத்தும விசாரி நீவிர்
எங்குறை கின்றீர் நும்பேர் யாவெது குறித்துச் செல்வீர்
பங்கமி லிடுக்க வாயில் வழிவராப் பான்மை யென்னீர்
அங்கண்வா னகத்து வேந்த னாணையை யறியீர் போலும். 2

சேயுயர் கதியைக் கூட்டுஞ் செந்நெறி முகப்பு வாய்ந்த
வாயிலை விடுத்து வேறோர் வழிநுழை பவரெல் லாரும்
மாயமார் திருட ரென்று மறைமொழி வகுத்துக் கூற
நீயிரந் நியம மீறிப் புகுவது நீர்மைத் தன்றால். 3

என்னவாண் டுரைத்த லோடு மிருண்டவன் மனத்தர் யாங்கள்
மின்னென மிளிர்ந்து குன்றும் வீண்மகி மையிலே தோன்றி
மென்னடை பயின்று மேலாம் விழுத்தவ வேடம் பூண்டேம்
தொன்னெறி விடாது பற்றிச் சுருதிமார்க் கத்து வந்தேம். 4

எட்டிரண் டறியார் போலு மெண்ணமொன் றின்றி வாயில்
விட்டிடை வழியிற் சேர்வோர் விட்புலத் தமரர் கோமான்
கட்டளை யிகந்து நின்ற கள்ளமார்க் கத்த ராய
துட்டரென் றிகழ்ந்து பேசத் துணிந்தனை தரும மன்றால். 5

சருக்கரை தின்று பித்தஞ் சாந்தமா மென்னிற் கைத்த
கருக்கிளர் வேம்பு தின்று கழித்திடக் கருது வோர்யார்
சுருக்கமிக் குறுக்கு மார்க்க மென்பது துணிந்து வந்தேம்
நெருக்குறும் வாயில் சுற்றிச் சுழல்வதே நீர்மைத் தன்றால். 6

உற்பவ பேத மான வுபாதி பலவோ ராற்றிற்
பொற்புறப் பொருந்தி யேகிப் புணரியிற் கலக்கு மாபோல்
அற்பத்திற் பேத மான வருநெறி யநேகம் வேத
விற்பத்தி நெறியைக் கூடி வீட்டுல கடையு மன்றே. 7

மார்க்கமிஃ தெதுவா னாலு மனமொழி மெய்க ளாலே
பார்க்கொரு முதலாய் நின்ற பரமநா யகனைப் போற்றிப்
போர்க்குமெய்ஞ் ஞான வேட புராதன முறைசா திக்கும்
தீர்க்கரே யன்றோ மேலாஞ் சிற்சுக போகந் துய்ப்பார். 8

மரம்பயில் குரங்கு போல மார்க்கங்க டோறும் வாவித்
திரம்பயி லாத சிந்தை திரியவிட் டிடாது செவ்வே
உரம்பயி லுடுமு போலு மொருதலை யாக முன்னோர்
பரம்பரை நெறியைப் பற்றிற் பயன்படு மிம்மை மாதோ. 9

கண்ணையே கண்ணாக் கொண்டு காக்கின்ற விமையைப் போலப்
புண்ணிய மூர்த்தி யெல்லாப் புவனமும் புரக்கு மாட்சி
எண்ணலை போலு மெம்மூ ரொழுக்கினுக் கிசைய நின்ற
பண்ணவ ராய வெம்மை யொறுப்பரோ பரிவி லார்போல். 10

வெவ்விட ருழந்த லின்றி வேறதர் பிடித்துன் னோடும்
ஒவ்வவர் துற்றே மென்னா வுள்ளுளே புழுங்கு கின்றாய்
அவ்விய மிரும்பைத் தேய்க்கு மாமென வரிதிற் பெற்ற
செவ்விய வாக்க மெல்லாஞ் சிதைக்குமென் றறியாய் கொல்லோ. 11

இந்நின்ற நிலையி லெம்மோ டிணையன்றி யேற்ற மில்லாய்
முன்னின்ற வழியு மெம்மின் முடுகுவா யல்லை யென்னாக்
கன்னின்ற நெஞ்ச வஞ்சக் கள்வர்தாம் புகலக் கேட்டு
வெந்நின்ற சுமடு நீத்த வேதியன் விளம்ப லுற்றான். 12

கண்ணிலான் கருத்தி லானோர் சித்திரங் கவினத் தீட்டும்
வண்ணமாம் புலவர் நீதி வாக்கிய மெடுத்துக் காட்டிப்
புண்ணிய பாவந் துய்க்கும் பலாபலம் புலப்ப டுத்தி
நுண்ணிய தரும நீவிர் நுவலுத லழகிற் றம்மா. 13

தலப்பெரு மையுநீர் பூண்ட தவப்பெரு மையுஞ்ஜங் மித்த
குலப்பெரு மையும்வீண் செல்வக் குப்பையான் மலிந்த கோலக்
கலப்பெரு மையுமென் றின்ன கனத்திறங் கருதிற் கங்குல்
உலப்புற வொழியு மாபோ லொருங்கவிந் தொழியு மன்றே. 14

அயிலெயிற் றரவுள் ளீட்டு மழல்விட மனைய நெஞ்சீர்
குயிலுமிம் மாய சால கோலத்தின் குணங்க ளெல்லாம்
வெயின்முன மஞ்சட் போல வெளிறுமாற் கால தண்டம்
பயிலுமப் பொழுதென் செய்வீ ரேழைகாள் பாவம் பாவம். 15



கள்ளமி னெஞ்சு நெஞ்சிற் கலந்தமெய்ச் சொல்லுஞ் சொல்லொத்
தெள்ளரு மொழுக்குந் தத்த முளக்கரிக் கிசைந்து ளாரே
வள்ளலெம் மிளங்கோ மான்செம் மலரடிச் சுவடு தோய்ந்த
ஒள்ளிய நெறிசென் றந்தத் துயர்பர கதியிற் சேர்வார். 16

முறைத்திறம் பிறழா நித்த முத்திசா தனமா யுள்ள
அறத்திறம் பயின்று தூய ராதல்விட் டகத்தை மூடிப்
புறத்தவ வேடம் பூண்டு நடித்தலான் றோலைப் போர்த்து
மறத்திறம் பயிலும் வேங்கை வன்றொழின் மானு மன்றே. 17

வேட்டுவன் புதன்ம றைந்து விடாதுபுட் சிமிழ்த்தல் போலக்
காட்டுமித் தவவே டத்திற் கரந்துல கின்பங் கௌவுங்
கேட்டுளீர் சுருதி யுண்மை கிளப்பினு முணரீர் நன்மை
வீட்டுதி ரென்று நீங்கா விழுமமே விழைந்து நின்றீர். 18

மருள்பரம் பரையி னோடு மறைநெறி மயங்கு மாயின்
இருணனி யியங்கும் வானத் திருங்கதி ரிரவி முன்னர்த்
தெருளிலா மனத்தீர் நுங்க டச்செய லொருவீ ராகி
அருள்வழிப் பட்டே மென்ற லகந்தையின் மடமை யாமால். 19

இந்நிலம் புரந்து நிற்கு மிரக்ஷண்ய கிரியிற் றோன்றி
மன்னுபன் னதியு மொன்றாய் மருவியோர் முகமா யோடி
உன்னரும் பரமா னந்த வுததிபுக் கொடுங்கு நீர்சொல்
அன்னிய கான்யா றெல்லா மளறுபுக் கழுந்து மன்றே. 20

எதிரெதி ராகச் செல்லு மிடைநெடுந் தூர முள்ள
நதிநத மொருங்கு கூடா கூடினு நாமம் வேறாம்
கதியுறு மார்க்கத் தோடு கதமெரிக் கவிழ்த்து மார்க்கம்
எதிருறீஇப் பொருந்து மென்ற லேழைமைப் பால தேயாம். 21

வேதமார்க் சத்தின் மேய வேதிய ரொழுக்கம் வேதம்
ஓதற நெறியைப் பற்றி யுற்பவ தோடத் தாலே
சாதக மான பாவஞ் சருவிடா தகற்றி யொல்லுந்
தீதினற் கருமம் யாவுஞ் சிந்தையாற் செய்தல் வேண்டும். 22

அகிலகா ரணராந் தூய வாண்டகைக் கடங்கா தீட்டு
சகலபொல் லாங்கு முள்ளிச் சஞ்சலித் தழுது ணைந்து
புகலிட மான யேசு புண்ணிய பலத்தை நாடி
இகலிமுப் பகையை வென்றிங் கிடைநிலா தோடல் வேண்டும். 23

ஒளிக்குறி வாயி லூடு புகுந்தொரு வழிப்பட் டுள்ளந்
தெளிக்குநல் லுரைகேட் டான்ம தீக்கைபெற் றவ்வி லின்பம்
அளிக்குநற் கருணை யாய வாரமிர் துண்டு வேந்தன்
விளிக்குநா ளளவுந் தூய விதிவிலக் கோம்பல் வேண்டும். 24

ஜீவன்முத் தருக்கு நல்குந் திவ்விய சிந்தை ஞானம்
மேவருங் குணங்க ளர்க்க விசுவாசம் விரதஞ் சீலந்
தாவரு நலங்க ளெல்லாந் தந்தருள் புரிந்து காக்குந்
தேவநல் லாவி யுள்ளந் திகழ்தர ஜெபித்தல் வேண்டும். 25

இவ்வகை ஜீவ மார்க்கத் தியல்வதே ஜீவன் முக்தர்
செவ்வியென் றறிமி னீண்டு செப்பிய விலற்றொன் றேனும்
ஒவ்வலின் றும்பா லிந்த வுண்மைவற் புறுத்து மென்னை
அவ்விய னென்று தூறு மவமதி யழகிற் றம்மா. 26

கண்டிலி ரோவென் னெற்றி கவினுமோர் ராஜ சின்னம்
பண்டைய கந்தை நீக்கிப் பரிவினல் கியவித் தூய
வெண்டுகில் கையி லீதோ விளங்குசா ஸனமிவ் வெல்லாம்
அண்டர்நா யகனே பாலித் தருளிய வருட்பே றாமால். 27

மிருத்தெனு நதியைத் தாண்டி வியன்றிரு நகர வாயில்
அருத்தியிற் கண்டு சேரு மளவையிவ் வடையா ளத்தால்
திருத்தகு பரம ராஜன் றிருவடித் தொழும்ப னென்னாக்
கருத்துற வறிந்துள் ளுய்ப்பர் கணிப்பருங் கடைகாப் பாளர். 28

இத்திற வடையா ளங்க ளெவர்க்கிலை யவர்தா மீசன்
முத்திமா நகர வாயின் முகப்புற வடுத்த போதும்
வித்தக விமலன் சொற்ற விதிவிலக் கோம்பு கில்லாப்
பித்தரென் றெரியா தால பிலத்திடைப் புகுத்து வாரால். 29

ஆரணஞ் சொன்ன வாறிங் கடுத்தன னளிய னேன்யான்
சோரமார்க் கத்து வந்து சுவரேறிக் குதித்தீர் நீவிர்
காரணங் கருதி யென்னைக் கடைக்கணித் தருள்வர் நும்மைக்
கோரவெஞ் சிறையி லுய்ப்பர் முடிவிலெங் கொற்ற வேந்தன். 30

வேதிய ரல்லீர் கள்ள வுள்ளத்தீர் விபுத ராயன்
ஆதரம் பெற்றீ ரென்றற் கடையாளம் யாது மில்லீர்
கோதொரீஇ நன்மை கூடுங் குணமுமின் றாத லாலே
வேதனை யுழக்க நின்றீர் வேறினிப் புகல்வ தென்னே. 31



பொருளிலார்க் கில்லை யிந்தப் பூவுல கதுபோல் யாண்டும்
அருளிலார்க் கில்லா தாகு மவ்வுல கென்ன வான்றோர்
தெருளுறா யேனுங் கொண்டு தேடலீ ரருளை வாளா
இருளுளா ரொளியைப் பேணா ரென்பது சரத மாமால். 32

மறங்குலா மனத்தீ ரின்னே திரும்புமின் மரபின் ஞானத்
திறங்குலா மறுமா னத்தின் றிரவியங் கொண்மின் போர்த்த
புறங்குலாந் தவவே டத்தைப் போக்குமின் புனித மார்க்கத்
தறங்குலாம் விரத சீல மகத்துற வநுட்டித் துய்ம்மின். 33

காயத்தை விடுமுன் னுள்ளக் கள்ளத்தை யொருவி மேற்கொள்
மாயத்தை யுதறித் தூய வளமலி பரம கானன்
தேயத்தை நோக்கிச் சென்று ஜீவமா நதியின் புண்ய
தோயத்தைப் பருகி யென்றுந் தொலைவிலா வின்பந் துய்ம்மின். 34

இற்றிதே யமையு மேனும் மிட்டமென் றியம்பி வேத
நற்றவன் வழியைக் கூடி நனிவிரைந் தேக லோடும்
சொற்றிற மறியா ராய சோரமார்க் கத்தர் தம்மில்
எற்றிவன் றுணிவென் றெள்ளி யெதிருரை யாது சென்றார். 35

குக்கல்வான் மட்டை கட்டி நிமிர்ப்பினுங் கோண றீரத்
தக்கதோ மூட ருள்ளத் தன்மையு மன்ன தேயாம்
பக்குவ நிலத்தி லன்றிப் பாழ்படு கருங்கற் பாறை
உக்கவை நல்வித் தேனும் பயன்படா தொழியு மன்றே. 36

களங்கமின் மதியைக் காணுங் கண்ணிலா வவர்தம் பாட்டில்
விளங்குமுட் பன்றி போல விடாப்பிடி யாக வோடி
வளங்கெழு தடத்தை நீங்கி வருத்தமென் றுரைபெற் றோங்கு
துளங்கலில் கிரியைக் கிட்டி யேங்கினர் துணுக்க முற்றார். 37

வெருவருங் காட்சித் தாய வெற்பிதன் மீது செல்லும்
அருநெறி பிடித்தி யாரிவ் வவஸ்தையை யடைவ ரென்னாப்
பெருவழி யிரண்டு பாலும் பிரிந்துபோ வதைக்கண் டந்தோ
இருவரும் பிரிந்து சென்றங் கிடைவழிப் பிணமாய்ப் போனார். 38

பிரிந்தவப் பெருவ ழிக்குப் பெயர்நாச மோச மென்பர்
விரிந்தமோ சத்தின் மாய சாலகன் விழுந்தான் வேடம்
புரிந்தவ னாச மெய்திப் புதையிருண் மலிந்த கானில்
திரிந்திட ருழந்தான் பின்னர்த் திரும்பினா ரில்லை யாண்டும். 39

பேசரும் வருத்தந் துன்பம் பிறங்கினும் பிதாவின் சித்தம்
ஈசனுர் செயலெல் லாமென் னீடேற்றத் திசையு மென்னு
[illegible] வேண்டு நிலைபிச கிடுவ ராயின்
நாசமோ சம்போல் லாங்கு [illegible]ரும்வாய் திறக்கு மன்றே. 40

இடையில்வந் திடையிற் போன விருவர்தங் கதியீ தாக
உடையவன் றிருவாக் கொன்றே யுறுதுணை யாகக் கொண்டு
நடைவழி பிடித்துச் சென்ற நலங்கிளர் மறைவ லாளன்
மிடைதரு வருத்த மென்னும் வியன்கிரி யருகர் வந்தான். 41

அமார்க்கப் படலம் முற்றிற்று.

## ஜீவபுஷ்கரிணிப் படலம்.

அங்க ணோர்சிறை மீக்கிளர்ந் துயர்விசும் பணவி
மங்கு றோய்ந்தெழின் மறிதரத் தண்ணிழன் மருவிக்
கொங்கு யிர்த்துவான் மீனெனப் பன்மலர் குழூஉம்
பொங்க ரொன்றுள தாதுலர் புகலிடம் போலும். 1

வேங்கை சந்தனங் காரகில் தேக்கொடு மிடைந்த
கோங்கு சண்பக மாப்பலா வத்திகுங் குலிசம்
ஓங்கு மேழிலைம் பாலைகுங் குமம்புல வோமை
பூங்கு ருந்தசோ கந்தம ரத்தைபூங் கடம்பு. 2

வன்னி பாதிரி யிலவங்கம் வன்மரா வகுளம்
புன்னை வாதுமை யிருப்பைவான் றெடுமடற் பூகம்
தென்னை யாமல கங்கடுத் தான்றிதிந் திருணி
பொன்னி ணர்ப்படு கொன்றையச் சுவத்தமால் புன்கு. 3

புலந்தொ குத்தபல் ஜாதிய விருக்கங்கள் பொதுளி
நலந்தொ குத்தபன் மலர்க்குவை நாற்றிசை கமழ
நிலந்தொ குத்தமன் பதைக்கெலா மகமகிழ் நிலவப்
பலந்தொ குத்தத விடுவதோர் பைம்பொழிற் பழுவம். 4

பொங்கு ஜீவபுஷ் கரிணியின் புதுப்புனல் தேக்கி
அங்கு ரித்தபுற் பூண்டுதண் டலைக்குல மனைத்துங்
கொங்கு லாய்வரும் வசந்தமென் கால்படுங் கோட்பால்
பங்க மில்பசும் பொன்மய மாயதப் பழுவம். 5



அண்ணல் வானகத் தாசனிவ் வகலிடம் புரக்குந்
தண்ண ளிக்குடை கவிந்தன வாமெனத் தயங்கிக்
கண்ண கன்றவெப் பாங்கருங் கவினுறக் கவிந்து
நண்ணு வார்க்குறு வெப்பநோய் தணிக்குமந் நறுங்கா. 6

முந்து முத்தலைச் சிகரியின் முளைத்துமு துலகின்
பந்த றாறிடு ஜீவமா நதிமுகம் படிந்து
விந்தை யாய்நர ஜீவர்க்கு விழுமநோய் துடைக்கும்
மந்த மாருத மலிந்ததம் மதுமலர்ச் சோலை. 7

அலர்ந்த செவ்வியி லகத்தெழு மளியமென் குரலிற்
புலர்ந்த டைந்தவர் விடாய்தணித் துள்ளவெப் பொருளும்
உலர்ந்த வான்பயிர்க் குதவுமோர் மழையென வுதவி
மலர்ந்த செய்கையில் வள்ளலைப் பொருவுமாண் பொதும்பர். 8

மண்ட லத்துற முடங்குதா ளூன்றிவாய் மலர்ந்து
விண்டு தூமலர்க் கட்டுளி வடித்துமெய் யரும்பித்
தண்ட ளிர்க்கரம் விரித்துயர் சினைத்தலை தாழ்த்திக்
கொண்ட செவ்வியிற் பாவுதொண் டரைப்பொரூஉங் கொழுங்கா. 9

புண்ணி யன்றிரு வடிமலர்க் கன்புசெய் புனிதர்
உண்ணி கழ்ந்தமெய்ப் பத்தியி னுள்ளிய செயல்போல்
வண்ண வான்றருக் குலமலர் நறுமண மலிந்து
கண்ண கன்புவி முழுவது நறுங்கடி கமழும். 10

பொன்னி லத்தா சன்றிரு வோலக்கப் பொதுவின்
மன்னு பல்லியங் கலித்தெனச் சினைதொறும் வதிந்த
புன்னி றத்தபுள் ளினஞ்சிலம் பியவொலி பம்பித்
துன்னு வோருளங் களிப்புறச் செவிக்கின்பந் தொகுக்கும். 11

வனம டங்கலும் போதகம் வரியளி மருவும்
வனம டங்கலும் போதகக் குருளையு மயங்குங்
கனம டங்கலும் போதக வுங்களி மயில்கள்
கனம டங்கலும் போதகந் தரும்பல காட்சி. 12

அமார் யாவருங் கைபுனைந் தியற்றிய வாதி
குமர நாயகன் றிருமணப் பந்தலோ குறிக்கிற்
றமர நீருல கத்துவாழ் சபையெம்பி ராட்டி
விமல லீலையுய் யானமோ யாதென விரிப்பாம். 13

இனைய கற்பகப் பொதும்பரின் நடுவண தியைந்த
நனைம லர்த்தட வாவியைச் சிந்தையுண் ணாடிற்
கனைக டற்புவி முழுவதுங் கதிக்கரை யேறும்
புனையும் வாசக மன்றிது புராதன சுருதி. 14

ஆழி நாயகன் ஞானத்தி லருளிற்றாய் மையினில்
வாழி யன்பினி லாழ்ந்துநீர் நிறைந்துநிர்ம் மலமாய்ப்
பாழி யம்புவி யாத்துமப் பயிர்வளஞ் சுரப்ப
ஊழி யூழிபாய்ந் துறுவது ஜீவநீ ருதகம். 15

ஜீவ னுக்குல வாவொரு நித்திய ஜீவன்
நாவி னுக்கமு தச்சுவை நினைவிற்கு நறுந்தேன்
தீவி னைக்கொரு மருந்தவண் சிறையளி முரல்பைங்
காவி னுக்கணி யாயதிச் சீவநீர்க் கங்கை. 16

புனித மாயது புண்ணியம் பொலிவது பாவத்
தினித விர்ப்பது சுகிர்தத்தை விளைப்பது துய்க்கும்
மனித ஜீவனை வானவ ராக்கிடும் வலத்த
தினிதி னெங்கணுஞ் சுரப்பது நாடுவோ ரெவர்க்கும். 17

பாசம் வீசிய பான்மைய பளிங்கெனத் தெளிந்த
தேசு லாமுழு மதிக்கதி ரொருவழித் திரண்டு
மாசி லாமடு வெனப்பெயர் வதிந்தன வனைய
ஆசில் வெண்மணற் குவால்பொரூஉ மலைபுரள் கரைய. 18

ஜீவ மாநதி தீரத்தை யடுத்தலிற் செழிப்புற்
றோவி லாதது சுரப்பதத் தூயநீ ரூற்றும்
ஆவி வேட்டவந் தருந்துவோர்க் கான்மநோ யகலுந்
தாவி னித்திய சாம்பிராஜ் ஜியம்வந்து சாரும். 19

வானி ழிந்துவந் திப்பரை மருவிய மதுரம்
ஆன பானநீ ராகவிங் கமைந்ததெள் ளமுதம்
ஞான போனக நாத்தும ஜீவசஞ் சீவி
தீன ரக்ஷணை யருள்வதோர் செழுஞ்சுவைத் தீம்பால். 20

நிரும லாதிபன் றொன்றுதொட் டுலவவோர் நியமத்
தரும வேலியிட் டுவப்புடன் றரணியிற் சமைத்த
மரும விந்தநந் தனவனம் வளம்பெற நாளுந்
திரும லிந்தவிச் சீவபுஷ் கரிணிநீர் தேக்கும். 21



மழையி லாதிலை மாயிரு ஞாலத்தின் மரபு
விழையும் ஜீவனூற் றிலதெனி லிலையுள்வே ரூன்றித்
தழையு மன்புநற் றருமமுந் தானமுந் தவமும்
பிழையின் ஞானமு மெய்விசு வாசமும் பேசில். 22

மூன்றொ ருத்துவ தெய்விக மொருங்குடன் முயன்றே
ஆன்ற ரக்ஷணி யச்செயன் முடியுமிங் கதுபோல்
வான்ற ருக்குலம் வசந்தமென் கானறு வாவி
மூன்று நல்கும னோக்கிய முயன்றடுப் பவர்க்கே. 23

தண்ணி ழற்புகப் புறஞ்சுடு தாபிதந் தணியும்
உண்ணி லாவுமென் கால்பட வேற்றுரு வுறழும்
புண்ணி யம்பொலி மானத வாவிநீர் புசிக்கில்
நிண்ண யம்பசி தாகசங் கடஞ்சதா நீங்கும். 24

காணி னுங்கலி தீருமிவ் வாவியைக் கருதிற்
சேணு லாவிய ஜீவனு முள்ளுளே சேரும்
மாண ரும்புகழ் வழுத்தினித் யானந்த மருவும்
ஊண தாக்குவோர்க் குறுபய னுரைக்குமா றரிதே. 25

இன்ன தன்மைய வெழின்மலர்ச் சோலையை யெதிர்த்தும்
மன்னு ஜீவபுஷ் கரிணியைக் கண்டுள மகிழ்ந்தும்
வன்ன மாங்குயி லின்னிசைக் குரல்செவி மடுத்தும்
நன்னர் வேதியன் றன்னுள நயந்திவை நவில்வான். 26

கருத்த னாதியி லாதமோ டேவையைக் கருதி
அருத்தி யிற்குடி யமைத்தவே தேனெனு மணிகொள்
மருத்த ழைந்தகா வனமிதை மானுமென் றுரைக்கிற்
பொருத்த மின்றது தீமையை விளைத்தவோர் புணர்ப்பால். 27

பொறிநு கர்ந்திடு புலனெலாம் புனிதமா தலினும்
செறியும் ஜீவபுஷ் கரிணியின் றிறத்தினுஞ் சிந்தை
மறியு மன்பின்மன் னுயிர்க்கெலா நண்புவாய்ந் ததினும்
நெறியு ளார்புகு முயர்பர தீசொன்றே நிகர்க்கும். 28

கரையில் பேரின்ப லோகயாத் திரிகர்க்குக் கருணை
அரையன் மெய்விடா யாற்றியென் றமைத்தவி தாயிற்
புரையி லாதவப் புரவலன் பொங்குபே ரன்பை
உரையி டற்கெளி தோசுவர்க் கத்துற வோர்க்கும். 29

தனித மார்மது யலர்ப்பொழிற் சிறப்பெலாஞ் சமைந்த
புனித ஜீவபுஷ் கரிணியின் புண்ணியப் பொலிவென்
றினிதி னுள்ளிமற் றிவண்சிறி திருந்திளைப் பாறித்
துனித விர்ந்துசெல் வேனெனச் சோலையுட் புகுந்தான். 30

சீர்மை யுற்றசெங் கால்வெள்ளை யன்னங்கள் செவிய
நீர்மை யுற்றசெவ் வாய்மட மஞ்ஞைக ணிலவிக்
கூர்மை யுற்றதம் மினத்தொடும் வாவிநீர் குடித்து
நேர்மை யுற்றமை கண்டுகண் டுவந்தனன் நிவிர்த்தன். 31

மேவி வந்துதீத் தொழில்புரி வெய்யகோ ணாய்கள்
ஜீவ கங்கையைப் பருகலுஞ் செம்மறி யாடாய்த்
தாவில் சாந்தநண் பாதிய சற்குணந் தழுவிப்
போவ தாகிய புதுமைகண் டதிசயம் பூத்தான். 32

பாத வங்களிற் பழுத்ததீம் பழநறை பருகி
வேத சாகையி னிருவிழி மிகமது ரிக்கும்
கோத கன்றவக் கொழுநறை குழீஇக்குழீஇ நுகர்ந்து
மாத வங்கள்செய் வார்நிலை கண்டுள மகிழ்ந்தான். 33

பக்க நின்றுபேய்க் காற்றக நுழைந்துபாழ் படுக்கா
தக்க ரப்படை பற்பல வங்கங்கு நிறுவித்
திக்கு பந்தனஞ் செய்தவத் திறத்தினைத் தெரிந்து
மிக்கு ரத்திறை யருட்பா மரிப்பினை வியந்தான். 34

துங்க வாவியின் றுறைதொறும் வலம்புரி சுப்ர
சங்க மாத்தொனி முழங்கலிற் செவித்தொளை தாக்கி
அங்கங் கேதுயி லுணர்ந்தெழுந் தவர்பல ரன்பு
பொங்கி மெய்த்திருப் பணிபுரி புதுமையுங் கண்டான். 35

கண்ணு முள்ளமுங் களிப்புறக் கடிகமழ் காவின்
எண்ண ரும்பல காட்சிகண் டிதயநெக் குருகிப்
புண்ணி யம்பொலி ஜீவபுஷ் கரிணியின் புனிதத்
தண்ண றும்புன லருந்துவான் வேட்டவன் சார்ந்தான். 36

ஆர ணத்துறை யணைந்துநின் றாழ்ந்தவம் மடுவின்
கார ணத்தையுங் காவலன் கருணையி னிறைந்த
பூர ணத்தையு நித்திய ஜீவனிற் பொருத்தி
மார ணத்தொட றுத்திடு மாண்பையு மதித்தே. 37



சங்கை யின்றியுட் டழைத்தபத் தியின்விசு வாசச்
செங்கை யாரவத் திவ்விய தீர்த்தத்தை முகந்து
பொங்கு மாவலிற் பருகின னன்புளம் பூப்பத்
திங்க ளிற்றிகழ்ந் ததுமுகஞ் செழித்தது ஜீவன். 38

மாகந் தீர்ந்திவண் மருவிய ஜீவநீர் மாந்தி
ஆகந் தோய்தலு மாத்தும விடாய்தணிந் தாறுத்
தாகந் தீர்ந்தது தீர்ந்தது பசிப்பிணி சமழ்த்த
சோகந் தீர்ந்தது தீர்ந்தது நரஜென்ம தோடம். 39

அருந்து நீரெனத் தெளிந்தது சித்தமங் கவற்குப்
பொருந்த கப்புறக் கருவிகள் புனிதமாய்ப் பொலிந்த
வருந்து சாவுமின் றாயது புத்துயிர் மருவித்
திருந்தி னான்மறை வாணன்மற் றியாதினித் தெரிப்பாம். 40

இனைய சீலனா யாங்கொரு தருநிழ லிருந்து
சினைய லர்ந்தபூ நறுவிரை யளைந்துலாந் தென்றல்
வினைய மோடுதன் மேனியிற் படியவிண் ணவர்கோன்
புனைம லர்க்கழ றொழுதுதோத் திரம்பல புரிந்தே. 41

இத்த னைக்குநா னருகனோ வென்னையீ டேற்றச்
சித்தம் வைத்தனர் தம்பிரான் சிந்தனை யினியென்
வித்த கத்திரு வாவிநீ ரருத்திய விதத்தில்
எத்த னைக்கதி கந்நலம் பெற்றன னென்னா. 42

வள்ளல் நங்குரு ராயனைச் சிலுவைமண் மேட்டிற்
கள்ள மில்லகக் கண்கண்ட காட்சியைக் கருதி
அள்ளி யன்பலர் தொடுத்தினி தமைத்ததே வாரம்
பிள்ளை நீர்மையிற் புனைந்தனன் றிருவடி பிறங்க. 43

## தேவாரம், விசுவாசக் காட்சி. (பண், காந்தாரம்.)

1. கள்ளமுறுங் கடையேனுங் கடைத்தேறப் பெருங்கருணை
வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ சனநிதியை
உள்ளமுவப் புறுதேனை யுயிர்க்குயிரை யுலவாத
தெள்ளமுதைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

2. படிசாய்த்த பெரும்பாவப் பாரஞ்சுமந்து பரமர்திரு
மடிசாய்த்த திருமேனி வதைந்திழிசெங் குருதியுக
முடிசாய்த்த பெருமானை மூதலகை தலைநசுக்கிக்
கொடிசாய்த்த கொற்றவனைக் குருசின்மிசைக் கண்டேனே.

3. பொய்த்திருக்கும் வஞ்சனையும் பொல்லாங்கும் புறங்கூற்றும்
எத்திருக்கு முடையேமை யெண்ணியொரு பொருளாகப்
பத்திருக்கும் பிரமாணப் படியொழுகி வினைமுடித்த
சித்திருக்குஞ் செழுந்தவனைச் சிலுவைமிசைக் கண்டேனே.

4. மூவினைக்கு மும்முதலாய் மும்முதலு மொருமுதலாந்
தேவினைக்கை தொழுதேத்துந் திரிகரண சுத்தருந்தம்
நாவினைக்கொண் டேத்தரிய நல்லறத்தின் றனித்தாயைத்
தீவினைக்கோ ரருமருந்தைச் சிலுவைமிசைக் கண்டேனே

5. மூவாத முதலவனை முதுசுருதி மொழிப்பொருளை
ஓவாத பெருங்குணத்த வுத்தமனை யுலகனைத்துஞ்
சாவாத படிகாக்கத் தனுவெடுத்துத் துஜங்கட்டுந்
தேவாதி தேவனையான் சிலுவைமிசைக் கண்டேனே.

6. துன்னெறிபுக் குழல்கின்ற தூர்த்தரிலுந் தூர்த்தனாய்ப்
பன்னெறிகொள் பரசமயப் படுகுழிவீழ்ந் தழிவேற்கு
நன்னெறியின் றுணிபுணர்த்தி நயந்திதயக் கண்டிறந்து
செந்நெறிகாட் டியகுருவைச் சிலுவைமிசைக் கண்டேனே.

7. அந்தரதுந் துமிமுழங்க வமரரெலாந் தொழுதேத்தத்
தந்தைதிரு முனமகிமைத் தவிசிருந்த தற்பரனை
நந்தம்வினை தொலைத்திடற்காய் நரனாகி நலிந்திரத்தம்
சிந்தியுயி ரவஸ்தையுறச் சிலுவைமிசைக் கண்டேனே.

8. நிந்தனைசெய் திருப்பாணி நிரையழுத்திக் கொலைபுரியும்
வெந்தொழிலர் செய்வினையின் விளைவறியார் பொறுத்தருளும்
எந்தையென வெழிற்கனிவா யிதழவிழும் பெருமானைச்
செந்தனிக்கோற் கொளுந்தேவைச் சிலுவைமிசைக் கண்டேனே.

9. மறம்வளர்க்குங் களருளத்தை வளமலிதண் பணையாக்கி
அறம்வளர்க்கு மருண்முகிலி னன்புமழை மாரிபெய்து
புறம்வளர்க்கு மிரக்ஷிப்பின் புகழமைந்த புண்ணியத்தின்
திறம்வளர்க்குஞ் செழுங்கிரியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

10. காயொளியிற் கதிர்பரப்புங் களங்கறுநீ தியின்சுடரைப்
பாயொளிகொள் பசும்பொன்னைப் பணிக்கருஞ்சிந் தாமணியைத்
தூயொளிகொ ணித்திலத்தைத் தூண்டாத சுடர்விளக்கைச்
சேயொளிகொள் செம்மணியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

ஜீவபுஷ்கரிணிப் படலம் முற்றிற்று.



## உபாதிமலைப் படலம்.

கஞ்சமலர்ப் பாதமிரு கண்கலுழி யாற்கழுவிச்
செஞ்சொன்மலர்ப் பாமாலைத் தேந்தொடைய லைச்சேர்த்தி
அஞ்சலித்துப் போற்றியருள் வேண்டிநின்றங் காவலுடன்
நெஞ்சாரப் புல்லிவழி கூடினா னோர்கருதி. 1

காரார்பூங் காவகத்தின் கண்ணூர்நி ழற்சுகமுஞ்
சீரார்ந றுஞ்சுனையின் றேம்படுதெண் ணீர்ப்பயனும்
ஏராருந் தூயவி ளங்காலின் றேற்றரவும்
நேராயு ளத்திற்பொ றித்துநெறி கூடினான். 2

செல்வான்வ ழிமறித்துச் சீறிவிட முள்ளெயிற்றுக்
கொல்வாள ரவங்கு றுக்கெதிர்ந்த கொள்கைபோல்
தொல்வாரி திப்புவியி றுெக்கபெருந் துன்பமெலாம்
மல்வாய்த்து நின்றம லையடிவா ரத்தணைந்தான். 3

அவ்வசலந் தன்னைய றியாதார் யாருமிலை
கௌவைநீர் வேலிபு டைவளைந்த காசினியில்
ஒவ்வொருவ ருள்ளத்து யர்வேயு யர்வன்றிச்
செவ்வேமட் டிட்டளவு செப்பரிது தேருங்கால். 4

தொன்மையுல கிற்பாவந் தோன்றியநாட் டோன்றியெங்குந்
தின்மைபெரு கப்பெருக வோங்கிச்செ ருக்கடைந்து
வன்மைமிகு துன்பம்ம னக்கவலை துக்கமெனுந்
தன்மைத்த னிச்சிகர மூன்றுத டித்தனவால். 5

கல்லாயி ளக்கமின்றித் தீயவினைக் காடுசெறிந்
தெல்லோன்சு டர்விளக்க மின்றாகி யெப்புறமும்
அல்லாயி ருள்குழுமித் தூர்க்குணமுட் பூண்டளவிப்
பொல்லாத வல்லிதயம் போன்றுளதப் பூதரமே. 6

வட்டமிடுங் கிட்டிவரும் வந்துவந் தச்சுறுத்துங்
கட்டம்வி ளைக்குங்க டுகடுக்குங் கௌவியுயிர்
நட்டஞ்செ யுமபாவிகளோர் நல்லாரென் றோராத
துட்டவி லங்கனந்தந் தொக்கதாதச் சூழலே. 7

வானளவி நிற்பதெனக் கண்டும யங்கிமகி
ஈனரிடர்ப் பட்டிரிவ ரெட்டுணையு மெண்ணுது
ஞானமுறு மாந்தர்ந கைத்தெள்ளி மேற்போவர்
கானமுறு மிவ்விலங்கற் காட்சியது பல்வகைத்தால். 8.

தீர்க்கவிசு வாசிகளே யன்றிச்செ கத்துழல்பொய்
மார்க்கரெவ ரேனுமிந்த மாயமலையைக் கிட்டிவரிற்
பார்க்கவே யுண்ணடுங்கி மெய்பதறிப் பாழ்ங்குழியிற்
சேர்க்குமமார்க் கம்புகுவ ரென்றுந்தி ரும்பாரால். 9

அண்டபகி ரண்டமெலாம் போய்ப்போய னொடியிற்
கண்டுவரும் பொல்லாத கன்மனவன் பேய்க்குரங்கு
மண்டுபெருந் துன்பம லையிதன்பேர் கேட்டாலுந்
தெண்டனிட்டுக் குன்றித்தி யங்கியுயிர் தேயுமால். 10

செந்தழல்போ லக்கொளுத்துஞ் சிந்தனையை ஜீவியத்தை
எந்தவித மென்னினுங்கை யெட்டியைப்போ லாக்குவிக்கும்
வெந்தறுகட் பாம்பின்வி டம்போன்ம திகெடுக்கும்
இந்தவிடுக் கண்மலையின் சாரலெதிர் வோரெவர்க்கும். 11

ஒற்றைச்சு டர்த்திகிரி யோச்சியுல காண்டமுடிக்
கொற்றவருந் துன்பமலைக் கோடெதிர்கண் டேங்குவருட்
பற்றற்ற ஞானபரி பாகருந்தாம் பார்த்தவுடன்
சற்றுட்க லங்குவரீ தென்னேத ருக்கம்மா. 12

செப்பினுல கத்துநர ஜென்மமெடுத் தோரெவரும்
இப்பெரிய சாரல்புகுந் தீடழிந்தா ரல்லாது
தப்பினு ரில்லையிது தாண்டின்ம கிழ்ச்சிதரும்
ஒப்பிலா னந்தமலை யொன்றங்கு முன்னுளதால். 13

வேறு.

அஞ்சும்வெவ் விடர்துற்றி யலமரல் தருமிந்தச்
சஞ்சல மலைமுன்றி னின்றொரு தனியாக
வஞ்சமின் மறைவாணன் மனமிக மறுகுற்று
நஞ்சட வினைவார்போ னைந்திவை நவில்கின்றான். 14

எவ்வள வதிகங்கொ லென்னுறு பலவீனம்
அவ்வள வதிகமிவ் வசலம துயர்வாயின்
எவ்வகை நெடுந்தூர வேற்றாயின் மெய்தழ்யறி
அவ்வழி னுறுசா லடைகுவ னெளிதன்றால். 15



பொன்னகர் புகுமார்க்கம் பூதா நடுவாக
மின்னொளி யெனநேரின் மிளிர்வது மிதிகொம்பும்
உன்னவோர் பிடிகொம்பு முளதென வறிகில்லேன்
என்னினிப் புரிகிற்பேன் யாதுமோர் துணையில்லேன். 16

பின்னிடை குவனுயி னுறழ்வது பெருமோசம்
நன்னெறி பிசகாமே நனிகடைப் பிடித்தேறி
முன்னிடு குவனுயின் முறையிறை பிறழாத
மன்னவ னொருநைதந் துதவவும் வருவாரால். 17

முன்னரி முழையொன்றே வெரிகனன் முகிர்குலை
துன்னின ரடியர்க்காய்த் துணைபுரி தருதெய்வ
மன்னவ னஃதோரில் வளரிடர் மலையேறிப்
பொன்னில வுலகூடு புகவருள் புரியார்கொல். 18

அடர்கடு வனதீமை யளவள வியபூத
உடலிது விழுகாறு மிடையிடை யுறுதுன்பம்
இடர்பல வுழவாமே யியல்வது முறையன்றாற்
சுடருல குறினன்றே வருவது சுகநித்யம். 19

எட்டிமல் கிடுகாடோ வின்சுவைக் கனியீயுந்
துட்டவெஞ் சிறைவீட்டிற் சோடச வுபசாரங்
கிட்டில வெனலாமோ கேடுறு முலசத்தே
மட்டறு சுகபோகம் விழைவது மடமைத்தால். 20

அடியவ ருணர்வுள்ளா ரசடில ரவர்மேலே
படிவன பலதுன்ப மெனினுறு பயன்றேரின்
முடிவினி னலமேயா முறைமுறை யனன்மூழ்கப்
படியொளி நனிமல்கிப் பசுமையுற் றிடுபொன்போல். 21

ஆதலி னிடையாமே யணிதிகழ் பரலோக
நாதன தருளொன்றே நற்றுணை யெனக்கொண்டு
போதரு குவனென்னுப் பொறியொரு புலனுகப்
பூதா மிசையேறிப் போயினன் வழிகூடி. 22

ஓடுவ னடைகூடி விரைகுவ னொருநீதம்
பாடுவன் மேனோக்கிப் பார்த்துளம் பதைத்தேங்கி
வாடுவ னிளைப்பாகி மலங்குவ னினவாகக்
கோடியர் நெறிசேர்செங் குத்தடி குறுகுற்றான். 23

கண்டன னினியேற்றங் கடினமிங் நிமிர்குன்றில்
உண்டென மலைந்துள்ள முயங்கிநெட் டுயிர்த்தந்தோ
கொண்டனன் றிகிலேனுங் குறுகுறு நின்றெல்லை
அண்டர்தம் பெருமானை யுள்ளின னவலித்தே. 24

விளக்குற விருளோடும் விதமென வருடுன்னி
உளக்கவ லையைநீக்கி யுரங்கொடு காலூன்றத்
துளக்கறு திடநல்கத் துணிவுவந் தருணாதன்
வளக்கரு ணையைவாழ்த்தி யேறினன் மலைமுன்றில். 25

தைவிக கிருபாஸ்தந் தனைமுன மீர்த்தேக
ஐயமில் விசுவாச மன்புபின் னணைந்துந்த
மையறு திருவாக்காம் வச்சிர தண்டூன்றி
மெய்யுறு பலத்தாலவ் விலங்கலின் மிசைபோனான். 26

பொறியயல் விலகாமற் புலனெதும் விழையாமல்
குறியது தவறாமற் குணநிலை வழுவாமற்
பிறிதெது நினையாமற் பிறங்கலின் மிசைசெல்லும்
நெறியது பிசகாமற் சென்றன னெடுந்தூரம். 27

அடிக்கடி முழந்தாணின் றடருவ னருள்பற்றிப்
பிடிக்குவ னாரத்துன்னிப் பெயர்குவ னினவாகப்
படிக்கிர க்ஷணைநல்கும் பானியற் றியசெந்தேன்
வடிக்குமொண் மலர்நந்த வனத்தினி லினிதுற்றான். 28

வேறு.

கோனகர் புகவருங் கொள்கைத் தாயவெம்
மானவ னையும்வழி வருத்த மாற்றிடும்
பான்மையிற் றூயகம் புனையும் பண்புள
தூனமில் காட்சிய துவகை பூப்பது. 29

சஞ்சல முடித்தலை தயங்கு மாதலில்
விஞ்சிய சுகத்தினை விளைக்கு மாலது
வஞ்சமின் மலர்முகங் காட்டி வாய்த்ததேன்
செஞ்செவே தருமன்பர் செவ்வி போன்றது. 30

மன்னுநந் தனவனத் தெழின்ம ரக்கிளை
பின்னியும் வல்லிகள் பிணைத்தும் பெட்புற
நன்னறுந் தழைக்கொடி படர்த்தி நாட்டிய
பன்னக சாலையொன் றுளதப் பாங்கரில். 31



வருந்திய வேதிய னிறுத்தம் மாணெழில்
திருந்திய சாலையிற் புகுந்து செவ்விதின்
இருந்திளைப் பாறின னிறைவன் பாதத்திற்
பொருந்துமன் பருச்சனை புரிந்து போற்றினான். 32

பரமனன் றருளிய பயணப் பத்திர
வரமனோ கரத்தினை வாசித் தாய்ந்துதன்
கரமலர் சென்னியிற் கவின வெண்டுகில்
நாயகி பதிதரு நலமு முள்ளினான். 33

அருகனே யல்லனித் தனைக்கு மாண்டகை
திருவருண் மலிந்தவச் செயலின் செவ்வியென்
றுருகினன் றுதித்தன னுவகை மாமதுப்
பருகினன் களித்தன னயர்வு பல்கவே. 34

மறந்துளக் களிப்பினான் மயங்கிச் சோர்வடைந்
தறந்தவா விப்பிர னயர்ந்து தூங்கினான்
இறந்தவோர் வெகுளியிற் றீதென் றெள்ளுவர்
சிறந்தவுண் மகிழ்ச்சியின் சோர்வைச் செவ்வியோர். 35

தூங்கிய வேதியன் றுயிலு ணர்ந்திலன்
ஓங்கிர வியுங்கதி ரொடுக்கு வானனா
ஆங்கொரு புண்ணிய னடுத்து ணர்த்துவான்
நீங்கரு மன்பினா னிகழ்த்து வானரோ. 36

வழிபிடித் தித்துணை வருந்தி வந்துநீ
கழிதுயில் விளைப்பது கரும மன்றுகாண்
பழிபடு மடிகுடி கெடுக்கும் பாலது
விழிவிழி யோடுதி விரைந்தெ ழுந்தரோ. 37

ஆம்பரி சுணர்கிலா வசட ராமெனச்
சோம்பிநீ துயிலுமித் துணிவு நன்கதோ
போம்பக லிருட்படாம் போர்க்கும் போதுசென்
மேம்படு நூனெறி விளங்கற் பாலதோ. 38

நித்திரை சத்துரு வென்னு நீர்மையை
உய்த்துணர்ந் திலைகொலா முயிருக் குட்பகை
வித்தக விருத்தியைக் கெடுக்கும் வெவ்விடஞ்
சித்தரோ வினுக்கொரு செவிலித் தாயரோ. 39

துற்றிய துயிலுணர்ந் தெழுந்து சோம்புறுஞ்
சிற்றெறும் பாதியின் சில மோர்ந்துநீ
கற்றுணர் வடைகடைத் தேறு வாயென
உற்றபே ராசையோ டுரத்துக் கூவினான். 40

மீக்கிளர் துடிப்பொடு விளித்த வாசகக்
கூக்குரல் செவித்துளை குறுகி யொல்லெனத்
தாக்கலும் வேதியன் றனாந டுக்குறத்
தூக்கம்விட் டெழுந்தனன் றணுக்குற் றோடினான். 41

பொழுதுபட் டிடும்வரை துயின்ற புன்மையை
அழுதழு துளநினைந் தழுங்கி யேங்கினான்
பழுதறத் துணைபுரி பரம சாஸனம்
முழுதுணர் வேதிய னவல மூடியே. 42

பார்த்தில னயற்புறம் பரப ரப்புடன்
கூர்த்தசெந் நெறிக்கொடு குன்றத் துச்சியை
வேர்த்துடல் விதிர்ப்புற விரைந்த டுத்தனன்
சீர்த்தபு மாலையுஞ் செறிந்த தென்பவே. 43

அதுபொழு தச்சனு மறச்சந் தேகியும்
எதிர்முக மாய்விரைந் தோடி யேங்கிமெய்
விதிர்விதிர்த் தலறியுள் வெருண்டு மீயுறக்
கதுமென வருவதைக் கண்ணுற் றனரோ. 44

அங்கவ ருருகுற வணைந்து தோழன்மீர்
வெங்கொடும் பயங்கரம் விளைந்த மூலமென்
எங்குசெல் கின்றனீ ரெதுகு றித்துளீர்
சங்கட மெவன்கொலோ சாற்று வீரென்றான். 45

ஆரியன் வினவல்கேட் டச்ச னென்னுமப்
பூரிய னையகேள் புனித யாத்திரை
வீரியந் தருமென விரும்பி வந்திவண்
காரியம் பிறிதெனக் கண்டு கொண்டனம். 46

நாசதே சத்துளேம் நாங்கள் நல்வழி
ஈசனார் பதியினி தீட்டு மென்றிதில்
ஊசலா டுளத்தொடு முலவி வந்தனம்
மோசமித் துணையென முன்னு ணர்ந்திலேம். 47



உன்னருங் கதிபுகுத் தன்மை நூல்வழி
பின்னிங் காலடி பிசகிச் சற்றயல்
மன்னிடி லதோகதி மடுத்து வல்விதிற்
சின்னபின் னம்படச் சிதைக்குங் காண்டியால். 48

தாவரு முபாதிமா மலையின் றன்மையை
யாவரே தெரிப்பருன் னிதயந் தேர்ந்ததால்
கேவலர் தம்மிலக் கிள்ளிக் கீரையாப்
பாவனை செய்வர்வாய்ப் பழக்க மட்டிலே. 49

முன்னுற முடுகினேம் முறைபி றழ்ந்திடாச்
சென்னெறி செலச்செலத் திகிலு மச்சமும்
பன்னருந் துன்பமும் பதைப்பு மேயலால்
என்னெனுஞ் சஹாயமொன் றெதிர்ந்த தில்லையால். 50

சூலுறு முகின்மழை துவன்றிப் பெய்தென
மாலுறு திகில்பல வளைந்து துன்பமேன்
மேலுற விழுதலின் வெருண்டு யாங்களிப்
பாலுறத் திரும்பினேம் பட்ட தீதென்றான். 51

அச்சனீ துரைத்திட வறச்சந் தேகியாங்
குச்சித னுண்டிரு கோர சிங்கங்கள்
உச்சித மாப்படுத் துறங்கக் கண்டனம்
நிச்சயந் தெரிகிலம் விழித்த நீரவோ. 52

அடுத்தன மாயினெம் மங்கம் பீறிவாய்
மடுத்திடுங் கூற்றுவன் மறந்தெம் மாவியை
விடுத்தன னோவெங்கண் மேலை யோர்தவங்
கொடுத்தவோ வெமக்குயிர் யாது கூறுகேம். 53

என்றுளக் கலக்கமோ டியம்பி னாரிருள்
துன்றிய மனத்திரு வோருந் தொல்வினை
பின்றைநின் றுந்திடப் பேய்கொண் டாரெனக்
குன்றதோ முகமுறக் குப்புற் றேகினார். 54

வெருவியோ ருரைத்தவவ் வெருட்சி வார்த்தைநெஞ்
சுருவிட வுள்ளுடைந் துயங்கி வேதியன்
புரிவதென் னினியவர் புறமிட் டோடுதல்
கருமமன் றலெனக் கருத்துள் ளுன்னுவான். 55

## வேறு.

வெறுத்த நாசப்ப டப்பைவி ரும்பியான்
மறுத்து நாடின்ம கேசன்சி னத்தழல்
இறுத்தொ ருங்கற யாவையும் வாய்மடுத்
தொறுத்த காலைமற் றுய்குவ தெங்ஙனம். 56

மொழியும் பல்வகை மோசங்கண் முன்னுள
வழியி லேனுநம் மன்னருள் வாய்க்குமேல்
ஒழியு மங்கவை யாண்டுறி னுன்னை
அழிவில் பேரின்ப ஜீவன டுக்குமால். 57

திருமித் தீக்கிரை யாவதிற் சீரிய
தருமப் பாதைபி டிப்பது தானலம்
வருமப் பாலவ ருவவ ரட்டுமென்
றொருமைப் பாட்டுடன் சென்றிவை யுள்ளுவான். 58

அலக்க ணுக்கொர ருமருந் தாகியுட்
கலக்க நீக்குங்க ருணைப்பி ரான்றரும்
இலக்க ணத்திரு வாக்கினெ ழிற்சுருள்
புலக்க ணைத்தெளி விக்கும்பு துமைத்தால். 59

என்ன வுன்னியி லங்கருட் சாஸனந்
தன்னை நாடினன் றன்வயிற் காண்கிலன்
பன்ன ருந்திகி லோடும்ப தைபதைத்
தென்னு யிர்க்குயி ரையிழந் தேனெனா. 60

எண்ணி யெண்ணியி ரங்குமி டர்ப்படுந்
துண்ணென் றேங்குந்து டிக்குமெய் சோர்வுறும்
புண்ணி யப்பொரு ளின்பொலி வையினுங்
கண்ணிற் கண்டுக ளிப்பன்கொ லோவெனும். 61

பாதை காட்டிந டத்தும்ப வித்திர
சாத னத்தைத்த வறவிட் டேனெனாக்
காத லோடுபி ணங்குங்க ரைந்தழும்
ஏதெ னக்கினி ரக்ஷையென் றேங்கிடும். 62

சிந்தை மாழ்குமோர் ஜென்மத ரித்திரன்
விந்தை யாகப்ப டைத்தவி ழுநிதி
புந்தி யின்மையிற் போக்கியு லைந்தென
நொந்திவ் வாறுறு ணங்கிய காலையில். 63

மீவ ணக்கிய கொம்பரின் வேய்நறும்
பூவ ணக்கொடி பின்னிய பொற்புறு
காவ ணத்துயி லேகவர்ந் திட்டதென்
ஆவ ணத்தையென் றுள்ளின னாரியன். 64

ஒல்லை யிற்றன்னு றக்கப்பி ழைநினைந்
தெல்லை யில்பெரு மூச்சினி ருதயக்
கல்லை நூறிக்க ரைந்துமன் றாடினான்
தொல்லை யம்பரன் சந்நிதி துன்னியே. 65

ஆய போதின ருள்வழி யாவியில்
மேய தோர்சிறி தாறுதன் மீண்டினிப்
போய வண்டுரு விக்கொடு பூதாங்
காயி னன்படு முன்கடப் பேனெனா. 66

அறங்கு லாமனத் தந்தண னந்தனப்
புறங்கு லாமலர்க் காவணம் போதர
இறங்கு வான்விரைந் தின்னலோ டேமனங்
கறங்கு போற்சுழ லக்கரை வானரோ. 67

ஆவிக் காறுத னல்கவென் றாக்குபூங்
காவிற் கண்டுயின் றான்பொதி காயத்தைப்
பூவிற் போற்றிய புல்லிய னாருமிப்
பாவிக் கெங்ஙனம் வாய்க்கும்ப ரசுகம். 68

புவன போகப்பு லாலைப்பு சிக்கவே
தவன முற்றத நுகர ணங்களோ
டவனி சுற்றிய ழிமதிக் காத்தும
கவன மென்றுவ ருங்கடைத் தேறவே. 69

சாந்த னைக்குந்து ணைபுரி சாஸனஞ்
சோர்ந்து வீழச்சு வரணை யின்றிபோர்
பாந்தள் போற்றுயில் கொண்டப யித்தியம்
மாந்த ருக்குளுண் டாங்கொலிவ் வையத்தே. 70

ஆக்கை பேணியு மாவண வீட்டியுங்
காக்கை யேகட னுக்கொண்டு காப்பினும்
போக்கி யென்னைப்பு றக்கணித் தொல்லைமண்
சேக்கை சேருமன் றென்செயத் தக்கதே. 71

திட்ட மும்மலச் சேட்டைது தைந்தமெய்
ஓட்டி நிற்பினு முள்ளுவர்த் தொட்டிலார்
சிட்டர் வாவிச்செ முங்சம லத்தினைப்
பட்ட லங்குதெண் ணீரது பான்மைபோல். 72

ஆன்ம ஆகிய நாடில ளாகியிவ்
வூன்ம லிந்தவு டற்சுக நச்சிய
பான்மை யெத்தனை பாழ்படு புன்மதி
கோன்மு றைக்கித னுத்துணை கொள்ளுமோ. 73

நாட்டைச் சேருந சையுள ரேனுமுன்
கூட்டைப் பேணில ரேவின்கு மூரமுனங்
காட்டைச் சுற்றித்தி ரிந்துக ழிந்தவப்
பாட்டைப் போன்றுள தென்னுறு பாடரோ. 74

இம்மட் டாகமுன் னேறிச்செல் வேனெனில்
எம்மட் டோசென்றி ருப்பனங் கெட்பக
வெம்மட் டோருணர் வற்றயர் வெய்தலால்
மும்மட் டிவ்வழிச் செல்துயர் மூண்டதால். 75

என்று ளக்கசப் போடமு தேங்கியும்
நன்ற தர்க்கிரு பாங்கரு நாடியும்
மன்ற லார்ந்தம துமலர்க் காவணஞ்
சென்றி றுத்தவண் டேடினன் செவ்வியோன். 76

கள்ளி ணர்ப்படு தாதுகு காவணத்
துள்ளு றப்புகுந் தொண்ணிதி வைப்பினைத்
தெள்ளி திற்றுரு வித்துயில் செய்தவப்
பள்ளி யுற்றதன் கீழுறப் பார்க்கையில், 77

தன்னு யிர்க்குயி ராயசம் பத்தினை
மன்னு யிர்க்குயி ராகும ருந்தினை
என்னு யிர்க்குமி னியசஞ் சீவியைப்
பொன்னு யிர்க்கும்பொ லன்சுரங் கத்தினை. 78

விதிவி லக்கின்வி ளக்கைவி சும்புதோய்
மதியை மண்ணுல குக்கென வைத்தமா
நிதியைக் காட்டிநி லவஞ்ச னத்தினைக்
கதியைக் காட்டுமோர் கைவழி காட்டியை. 79



எண்ணா ரும்பொரு ளீதெனக் கண்டெடுத்
துண்ணி கழ்ந்தவு ரிமையின் முத்தமிட்
டண்ணல் நாடடைந் தானென வானந்தக்
கண்ணி னீர்வடித் தானுட்க சிந்தரோ. 80

மாண்ட யாக்கைம றுத்துயிர் பெற்றெனக்
காண்டல் செய்திரு கைத்தலஞ் சென்னியிற்
பூண்டு நல்லுணர் வோடிபு ரந்தர
ஆண்ட கைக்கித யாஞ்சலி யாக்கினன். 81

இற்றி தேயெனக் கீறின்பெய் ஜீவனும்
கொற்ற வன்றிருக் கோபுர வாயிலுக்
குற்ற சான்றுமென் றுகையோ டொண்ணெறி
பற்றி யேகினன் கோன்முறை பற்றியே. 82

கங்கு லூடினை தேர்கொடுங் கான்விலங்
கெங்க ணுந்திரி யுங்கண்ணெ திர்ப்படில்
நங்கு மென்னையு மென்றுறு ளித்துணர்
புங்க வன்னிடை நின்றிலன் போயினன். 83

அஞ்சி யஞ்சிய லக்கணும் ஞரியன்
மஞ்சு லாமலை யுச்சிவ ராமுனம்
எஞ்சி யத்தத்தி றுத்தனன் வான்கதிர்
சஞ்ச லத்திற்ற ரிப்பரி தென்னவே. 84

திக்க னைத்தும்வி ளக்கிய செங்கதிர்
மைக்க ருங்கட லூடும றைதலிற்
செக்கர் வானொளி தேயுமுன் றீவிரித்
தக்கி ரித்தலை மீதுவர் தண்மினன். 85

பொழுது பட்டிருள் பட்டதென் போக்கினிப்
பழுது பட்டிடு மென்னும்ப யத்தினல்
அழுது நொந்தவ லத்தொடு மண்ணல்தாள்
தொழுது நோக்கினன் முற்படு தொன்னெறி. 86

வேறு.

முற்பட நோக்குங் காலை முறைப்படு நெறியின் பாங்கர்
கற்பக வுலகை யுள்ளங் கைநெல்லிக் கனியிற் காட்டும்
அற்புத வுருக்கொ ளீதென் றதிசயம் பயக்கு மாறு
பொற்புற விளங்கித் தோன்றும் புனிதமா ளிகைகண் ணுற்றான். 87

தெள்ளிய நறிய தூய செழுஞ்சுவை மிளிரத் தீற்றி
வெள்ளியங் கிரியிற் றேன்றும் வியனிலை மாட நின்றும்
எள்ளரு மகர யாழி னெழால்மிடற் றெலியோ டொன்றித்
துள்ளிய மதுர கீதஞ் செவித்தொளை தொகுத்த தன்றே. 88

கண்டுகேட் டுளமுங் கண்ணுங் களிப்புறீஇக் ககோள நாதன்
மண்டல வனத்த லைந்து வான்வழி பிடித்துச் செல்லுங்
தொண்டருக் காக்கு வித்த துரிசின்மா ளிகையீ தென்ன
ஒண்டவன் கருதி வல்லே யுறுவது கரும மென்னு. 89

பொருக்கென வேகுங் காலை புறத்துலாஞ் செக்கர் மாண்டு
கருக்கல்வந் துற்ற தாகக் கானகத் துழல்வி லங்கின்
வருக்கநின் றாற்று மோசை செவித்தொளை மறித லோடும்
வெருக்கொளீஇக் கலக்க முற்று வேதியன் கவல லுற்றான். 90

புந்தியற் றயர்ந்து தூங்கிப் பொழுதுவீண் போக்க டித்துக்
கொந்திருட் படலம் போர்ப்பக் கொடுவிலங் குழலுங் காட்டில்
வந்திடர்ப் படுவன் பாவ மயற்றுயில் விளைத்த மோசம்
இந்தவா றுய துய்வுக் கென்னினிச் சூழ்ச்சி மாதோ. 91

என்னுறு மதியீ னத்தா லிப்பெருந் திகிற்குள் ளாகிச்
சின்னபின் னங்க ளாகச் சிதைவலென் றழுங்கு கின்றேன்
முன்னுறக் காவா னாகி யிழுக்கியான் பிழையை முன்னிப்
பின்னர்நா றிரங்கு மென்ற தெருளுனா பிழையாங் கொல்லோ. 92

இருண்டகா னெறிமுன் செல்லா தெதிரிடை யூறுக் கஞ்சி
வெருண்டுபின் னிடைவ னாகில் விடுங்கொலோ வேந்தன் கோபம்
தெருண்டமே லவர்தம் ஜீவன் சிதையினு மறந்தி றம்பி
மருண்டுவை யகத்து வாழ்வை மதிப்பரோ மதியற் றார்போல். 93

சந்தேகி யச்ச னென்ற சழக்கர்போற் றிரும்பி யேகில்
வெந்தேநீ றுதல் வேண்டும் விண்ணின்று விழுவெந் தீயில்
முந்தேமற் றிதையுற் றாய்ந்து முடுகியிந் நெறியைப் பற்றி
வந்தேனிங் கிடையூ றஞ்சி மலங்குதன் மடமை யாமால். 94

மறமெலாங் குடிகொ ளாச தேசத்தை மருவில் ஞானத்
திறமெலா மழியுஞ் சிந்தைச் செறிவெலா நெகிழ்ந்து தேயும்
அறமெலாஞ் சிதையுந் தீரா வனர்த்தமே விளையு மன்றிப்
புறமெலா நகைசெய் தேசும் பின்னிடல் புலமைத் தன்றால். 95



திடுக்குறு மிடுக்கண் சேரிற் சித்திர தீபம் போல
நடுக்கமின் றாகி நிற்பர் நல்லுணர் வுடைய நீரார்
அடுக்குந வடுக்கு மென்று மாண்டகை சித்த மன்றிக்
கெடுக்குந வெவைமற் றிந்தக் கிளர்நில வுலகத் தம்மா. 96

ஆவது கருதிப் பார்க்கி லழிவிலா ஜீவ னோடு
மேவுசா மீப முத்தி வீட்டின்ப முதல வாய
தேவபோ கங்க ளெல்லாஞ் சிறக்கமுன் னுண்டு பின்னே
சாவொடு கவிழ்க்குஞ் செந்தீச் சாகா முண்டு மாதோ. 97

துனியெலா மொருங்கு கூடி மலையெனத் தொடரு மேனும்
பனியெனப் படுமாற் றாய பார்த்திவ னருளுண் டாயின்
இனியிடைந் தேக னன்றன் றியலுமட் டாக முன்னே
தனியெதி ரூன்றிப் போத றகவதே தரும மாமால். 98

என்றின வாவி சாரி யெண்ணமிட் டிருண்ட கானிற்
பொன்றிடர் வருவ தேனும் புரவலன் புரப்ப ரென்னு
ஒன்றியாய்ச் செல்லுங் காலை யொருதிருத் தேவா ரத்தை
நன்றியோ டுள்ளிப் பண்ணோ டிசைபெற நவின்று போனான். 99

## தேவாரம். (பண், இந்தளம்.)

"கிறிஸ்துவே எனக்கு எல்லாமாயிருக்கிறார்."

1. சத்தாய் நிஷ்களமா யொரு சாமிய மும்மிலதாய்ச்
சித்தா யானந்தமாய்த் திகழ் கின்றதி ரித்துவமே
எத்தால் நாயடியேன் கடைத் தேறுவ னென்பவந்தீர்ந்
தத்தா வுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.

2. எம்மா விக்குருகி யுயி ரீந்துபு ரந்ததற்கோர்
கைம்மா றுண்டுகொலோ கடை காறுங் கையடையாய்ச்
சும்மா ரக்ஷணைசெய் சொல்சு தந்தரம் யாதுமிலேன்
அம்மா னுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.

3. பித்தே றிச்சுழலும் ஜெகப் பேய்பிடித் துப்பவத்தே
செத்தே னுன்னருளாற் பிழைத் தேன்மறு ஜென்மமதாய்
எத்தோ டங்களையும் பொறுத் தென்றுமி ரங்குகவென்
அத்தா வுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.

4. அப்பார் சிந்தையிலேன் மறைந் தீட்டிய தொல்வினையுந்
தப்பா தேவெளி[illegible] தாங்கிக்கொள்ள
இப்பா ருய்யவென்றே மனுக் கோலமெ டுத்தவெங்கள்
அப்பா வுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.

5. மையார் கண்ணிருண்டு செவி வாயடைத் துக்குழறி
ஐயான் மூச்சொடுங்கி யுயி ராக்கைவிட் டேகிடுநாள்
நையேல் கைநெகிழே னுனை நானுண் டஞ்சலெனை
ஐயா வுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.

6. வான்றேய்ந் திட்டதன்றே தமி யேன்புரி வல்வினைதான்
என்றா னிவ்வுலகில் ஜெனித் தேனென வீடழிவேன்
மூன்றாய் மூன்றுமொன்றாய்த் தொழின் மூன்றுமி யற்றிநின்ற
ஆன்றோ யுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.

7. திரைசேர் வெம்பவமாங் கடன் மூழ்கிய தீயரெமைக்
கரைசேர்த் துய்க்கவென்றே புணை யாயினை கண்ணிலியான்
பரசேன் பற்றுகிலே னெனைப் பற்றியப் பற்றுவிடாய்
அரசே வுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.

8. தாயே தந்தைதமர் குரு சம்பத்து நட்பெவையும்
நீயே யெம்பெருமான் கதி வேறிலை நிண்ணயங்காண்
ஏயே யென்றிகழு மூல கோடெனக் கென்னுரிமை
ஆயே வுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.

9. என்னேர் பாவியர்தா னுல கத்திலை யென்னினுமுன்
பொன்னே ருங்கழற்கே புக லாக வந்தடைந்தேன்
மன்னே ரக்ஷணிய வமிர் தூட்டிம னுப்புரக்கும்
அன்னே வுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.

10. ஈண்டே யென்னுளத்தில் விசு வாசவி ளக்கிலங்கத்
தூண்டா யென்னிலந்தோ மயல் சூழ்ந்துகெ டுத்திடுங்காண்
மாண்டா யெம்பிழைக்கா வுயிர்த் தாயெமை வாழ்விக்கவே
ஆண்டா யுன்னையல்லா லெனக் கார்துணை யாருறவே.

தேவாரம் முற்றிற்று.

இன்னிசை பாடி யேகு மேல்வையி னிரண்டு பாலுந்
துன்னிய புதரி னூடே சுருங்கிய நெறியின் பாங்கர்
மன்னிரு கோர சிங்க மறிந்திடு நிலைகண் டேங்கித்
தன்னிலை கலங்கி நெஞ்சந் துணுக்குறீஇத் தமியன் றேர்வான். 100

ஆங்கவர் கண்டு சொற்ற வடுந்திறல் வயவெஞ் சீயம்
ஈங்கிவை போலு மென்க [illegible] மிரண்டு மமஞ்சித்
தூங்குவ வல்ல நின்று துயல்வரு கின்ற யாண்டும்
பாங்குற வகலத் தக்க பரிசெது மின்று பார்க்கில்.



ஆற்றெதிர்ப் பட்ட துன்புக் களவிலை யவற்றால் யானோர்
காற்றெதிர்ப் பட்ட பூளை யாயினன் கருணை வேந்தன்
தேற்றெதிர்ப் பட்ட தாலோர் தீங்கின்றி வந்தே னீண்டிக்
கூற்றெதிர்ப் பட்டேன் வாணா ளின்றொடுங் குறுகிற் றேயோ. 102

நேருறத் துணிந்து செல்லி னினைப்பதன் முன்னம் பீறிக்
கோரவெம் பகுவா யார விழுங்கிடுங் கொள்கைத் தம்மா
ஆரிவற் றிடையிற் சென்றிங் காவிபெற் றுய்வ ரிந்தக்
காரியங் கண்டன் றேவவ் விருவருங் கடுகி மீண்டார். 103

உயப்படு மார்க்க மாமிவ் வோரடித் தடத்தை விட்டிங்
கயற்புறம் விலகி யேகி னுவதன் றதோமு கங்கொண்
மயற்படு குழியுள் வீழ்ந்து மடிவது திண்ண மென்னே
செயப்படு முபாய மீண்டு திருமுதல் சீரி தன்றால். 104

பண்டுகோ ளரிவாய் கட்டிப் பத்தனைப் பாது காத்த
அண்டர்நா யகன லாலிவ் வாபத்துக் குதவு வார்யார்
உண்டெனக் குறுதி யென்னா வுள்ளியுள் ளூக்கந் தோன்றித்
தெண்டனிட் டிரக்கக் கூவி ஜெபித்தனன் சிந்தை யொன்றி. 105

ஆகுலத் துடன்வா னோக்கி யழுதுமன் றாடிக் கூவுங்
காகுளி வான மெட்டக் கதித்தபே ரோசை கேட்டுக்
கோகுல மாட வீதிப் புறக்கடை குலவிக் காக்கும்
சோகமில் சாவ தானி தன்னுளே சூழுங் காலை. 106

மேக்குயர் பாலோ கத்து விபுதா யனைவி ளித்த
வாக்கிது வயவெஞ் சீய மறிதல்கண் டஞ்சி யிட்ட
கூக்குர லிதுவென் றோர்ந்தென் வார்த்தையைக் குறிக்கொ ளென்னா
மீக்கிளர் சத்தத் தோடும் விளித்துமற் றிதனைக் கூறும். 107

வெஞ்சின மடங்கற் கஞ்சி விளித்தனை போலு மெய்பி
அஞ்சிடே லஞ்சி டேனீ யருந்தளை காலிற்பூட்டிச்
செஞ்செவே தொடரின் மாட்டிச் சிறையிடு வித்த துண்டால்
விஞ்சியோர் தீங்கு செய்ய விறலின்றிவ் விரய மோர்தி. 108

கால்வழி பிசகா துள்ளங் கலங்காது கடவுள் வேந்தன்
கோல்வழி யிழுக்கா வண்ணங் குறிக்கொளீஇ யமைத்த வேத
நூல்வழி யுரத்து மத்தி நுனித்தடி பெயர்த்து வந்திப்
பால்வழி பிடித்தி நெஞ்சிற் பதியிது பரமார்த் தங்காண். 109

தீயினுங் கொடிய கோடி துன்பங்கள் செறினு மாவி
மாயினும் ஜீவ மார்க்க வரம்புநீ யிகப்பா யல்லை
ஆயினு நடுவி கந்தோ ரணுத்துணை பிசகி யோர்பாற்
சாயினுந் தீங்கு வந்து சாருமென் றறிதி தக்கோய். 110

என்றவ னிசைத்த வார்த்தை யெனுஞ்சுவை யமுதத் தோடு
சென்றுநின் றுழலும் ஜீவன் செவிவழி புகுதத் தேறி
வென்றிசே ராச னுய்த்த விழுத்திரு வாக்கீ தென்ன
நன்றியோ டுள்ளிப் போற்றித் துதித்திது நயந்து செய்தான். 111

கச்சையை யிறுக்கிக் கட்டிக் கால்நிலைத் தூன்றிக் கையில்
வச்சிர தண்டொன் றேந்தி நடுநிலை வழுவா வண்ணம்
உச்சித விசுவா சத்தி னுரங்கொண்டங் குற்று நோக்கி
நிச்சய நுண்ணூன் மார்க்க நெறிகடைப் பிடித்து நின்றே. 112

வானநா யகனை யுள்ளி மானதாஞ் சலிவ ழங்கி
மோனமாய் முன்னிட் டேக முயன்றடி பெயர்க்கும் போழ்திற்
கானகத் துழல்வி லங்கின் கணநிலை குலைந்து சாயத்
தானவா ரணங்க ளேங்க முழங்கின தறுகட் சீயம். 113

முதிர்சினந் திருகிக் கான முடங்குளை மடங்க லெங்கும்
அதிர்பட முழங்கிப் பொங்கி யடுத்தடுத் தூறி யார்ப்ப
எதிரொலி யெழும்பி நால்வா யிருங்களிற் றியானை மூளை
பிதிர்பட வுருமி னோசை பிறங்கிய தடவி யெங்கும். 114

தெற்றென மறையோ னுள்ளந் துணுக்குற்றுத் திகைத்த தேனும்
நற்றவம் பயின்ற தாலே நடுநிலை தவறா னாகி
மற்றெதி ரூன்றி முன்னே வைத்தகால் பின்வாங் காமல்
வெற்றொலி யிதுவென் றெள்ளி நடந்தனன் விறல்கொள் வீரன். 115

இருட்டையூ டறுத்து முன்சென் றெதிருற வணைந்து சீறி
வெருட்டுவெம் மடங்கல் வாயுட் புக்குடன் மீண்டா னென்ன
அருட்டுணை யாலே யந்த வாபத்துக் ககன்று போனான்
திருட்டுவா யலகைக் குண்டோ தொண்டனைச் செயிக்குந் திரம். 116

பாம்பின்வாய்த் தேரை மீண்ட பரிசெனப் படருண் மூழ்கித்
தூம்புறழ் பகுவாய்ச் சீயச் சுவட்டிடை மறிந்து போந்து
மேம்படு தலத்தின் மேய வேதியற் குற்ற வெற்றி
ஓம்படை யாகக் காத்த வுன்னதத் தொருவர் பாற்றே. 117



பொருட்டிற னறியார் சொல்லும் பொய்யுரைக் கொறுகாற் சற்று
மருட்டிமுன் னின்று மெய்யை மறைக்குமோர் வலியுண் டேனும்
அருட்டிற னுடைய நீரா ரவலத்தோ டொக்கு மெய்ம்மை
தெருட்டுவா ரறினுந் தானே திகழ்ந்திடுஞ் செவ்வி யுண்டால். 118

கடுங்கத மடங்க லேற்றின் கைதப்பி யகன்று போன
அடுங்களி றனையான் சித்த மமைதலுற் றூறி ஜீவன்
நடுங்குற வெதிர்ந்த மோச நாசத்தி னுயிர்தந் துய்த்த
ஒடுங்கலில் கருணைத் தேவை நன்றியோ டுள்ளி யுள்ளி. 119

அஞ்சலித் தோகைக் கண்ணீ ரவிழ்ந்துதன் னங்கம் போர்ப்பத்
துஞ்சுறா வன்பிற் பல்காற் றொழுதுதோத் திரித்துப் பாடி
உஞ்சன னளிய னேனென் றுவந்துதன் னெறியிற் சென்றான்
எஞ்சிய கருக்கன் மாயக் காரிரு ளிறுத்த தன்றே. 120

உபாதிமலைப் படலம் முற்றிற்று.

ஆதிபருவம் கவி, 1116.

# இரக்ஷணிய யாத்திரிகம்.

## இரண்டாவது: குமாரபருவம்.

### சம்பாஷணைப் படலம்.

வெய்யவ னிறத்தலிற் பரிந்து மேதினித்
தையலாள் துக்கவெந் தழல்சு டச்சுட
மெய்யெலாங் கருகிய விதத்தை மானுமால்
வையக முழுவதும் புதைத்த மையிருள். 1

செஞ்சுட ரவிரொளிப் பிழம்பைந் நீக்குமோர்
நஞ்சிது வென்னவு நாச தேசத்துப்
பஞ்சபா தகத்திரள் படர்ந்த தென்னவும்
விஞ்சிய திருட்குழா மேலுங் கீழுமே. 2

அஞ்சுட ரவிந்தவர் தகிலம் யாவையும்
வஞ்சனை யுருக்கொடு காந்து வெளவிய
அஞ்சனக் கருநிறத் தாக்கி யேகொலாம்
செஞ்செவாய் மடுத்துறச் செறிந்த காரிருள். 3

அலைகடற் புவியில்வா ழான்ம கோடிகள்
நிலைதபக் கொடுந்தொழி லினையும் பேய்க்கணத்
தலைமக னிடைக்கிடை வீசு தந்திர
வலையென விரவிருள் வளைந்த தெங்குமே. 4

பள்ளநீ ருலகெலாம் படிந்த வெந்நிசி
நள்ளுந ராமென நடித்து நாடருங்
கள்ளமும் வஞ்சமுங் கலந்த கைதவர்
உள்ளமு நாகபா தலமு மொத்தவே. 5

கெடுக்குந ரடர்ந்துபல் கேடு சூழினு
நடுக்குறு நோய்பல நலியு மேனுங்கை
எடுக்குநர்க் கிறையரு ளிலங்கு மாறுபோல்
உடுக்கணம் விளங்கின வும்ப ரெங்குமே. 6

மருட்டுபுன் மாக்கள்செய் வஞ்சப் போதக
இருட்டுறு மிருதயத் துணர்ச்சி யேய்ந்திட
அருட்டகு குரவர்மெய் யன்பி னுலகந்
தெருட்டுபோ தனையெனத் திகழ்ந்த தாரகை. 7

ஆன்றபே ரகல்விசும் பணவி யெங்கணு
மீன்றிகழ்ந் தொளிர்வன விட்பு லத்துநங்
கோன்றிரு நந்தனங் குலவு ஜோதிய
வான்றருக் குலம்பொலி மலரை மானுமே. 8

சோதனைக் கிடைந்திடாச் சூர சேனன்மெய்
வேதிய னெனநனி வியந்து மேம்படு
தூதர்தூ வியமலர்த் தொகுதி போலுமால்
மீதுறத் திகழ்ந்திடை மிளிருந் தாரகை. 9

அடங்கின விலங்குபுள் ளடவி யார்ப்பொலி
அடங்கின பல்லியத் தணிகொள் பேரிசை
அடங்கின பணிமுறை யகில காரியம்
அடங்கின பொறிபுல னவித்த யோகிபோல். 10

இத்திற முன்னிசி யிருட்டொ டேகிய
வித்தக வேதியன் விரைந்து போயெழிற்
சத்திரப் புறக்கடைத் தலையைக் கிட்டினன்
அத்தகு காவல னனை நீயென்றான். 11

நாசதே சத்துளே னயந்து நாடொறும்
பாசவெவ் வினைத்தொழில் பயின்ற பாமர
நீசன்முற் பெயரவ பத்த னின்மல
ஈசன ருள்பிடித் திழுத்த திவ்வழி. 12

வந்தன னுபாதிமா மலையின் மீதுள
நந்தனத் திருந்துயி னயந்து நன்மதி
சிந்தினே னதுபல தீங்கு மோசமுந்
தந்ததா லிருள்வழி தவித்து வந்தனன். 13



இத்தகு தலத்திடை யிரவு தங்கியான்
நித்திரை தெளிந்துத யாதி நீங்கவெற்
குத்தரங் கிடைக்குமோ வுலங்கொ டோளினாய்
எத்திற னுங்கருத் தியம்பு வாயென்றான். 14

எள்ளருங் கடைத்தலை யேந்தன் மற்றிவன்
உள்ளமும் வாக்குமொத் துளது போலுமால்
கள்ளமி னீர்மையன் கருதுங் காலெனா
ஒள்ளியோய் கேளென வுரைத்தன் மேயினான். 15

அரும்பிய மெய்விசு வாசத் தாலகந்
திரும்பியுன் னதநகர் சேர யாத்திரை
வரும்பர தேசிகள் வதிந்து போதர
விரும்பியிங் கமைத்ததிவ் விநோத மாடங்காண். 16

வித்தக விவேகிசொல் விநய யூகிமெய்ப்
பத்திநற் சிநேகியென் றுரைக்கும் பார்ப்பன
உத்தமி நால்வரிங் குளர்மற் றெண்ணிலைச்
சித்திர மாளிகை யகத்துச் செவ்வியோய். 17

கைவரு தவநிலை யியற்றுங் கன்னியர்
தெய்விக சுருதிநன் குணர்ந்த செவ்வியர்
மெய்வரு நாவினர் விதேக முத்தர்போல்
ஐவரை யறுவரா யமைத்த வாருடர். 18

மற்றிவர் சீலமு மறைமெய்ஞ் ஞானமும்
பற்றறுத் தியோகுசெய் பரிசுந் தெள்ளிதின்
உற்றறி யஃதுனக் குறுதி யாமெனச்
சொற்றுடன் யூகியை விளித்துச் சொல்லுவான். 19

அம்மகேள் நாசதே சத்த னாமிவன்
நம்மசீ யோன்மலை நணுகு மாசையால்
இம்மலை யேறிவந் திடர்ப்பட் டெஞ்சியோன்
செம்மையை யறிந்தினிச் செய்வ செய்மினோ. 20

என்றினி துரைத்திட விசைந்து வைதிக
நன்றிகொண் மடவால் நம்பி யெங்குலை
ஒன்றியிவ் வழிவர வுற்ற தென்னையோ
இன்றெலாம் புலப்பட யியம்பு கென்றனள். 21

தாயெனப் பரிவுடன் வினவுந் தையலாள்
சேயுயர் மதிமுக நோக்கிச் செவ்விய
தூயவன் றன்வர லாறு தொன்றுதொட்
டேயவை சுருக்கிநன் கியம்பி னானரோ. 22

கேட்டனள் யூகியென் றுரைக்குங் கேதமில்
வாட்டடங் கண்ணினள் மற்றை மூவரைக்
கூட்டின ளிவனிலை குறிகு ணங்களைக்
காட்டினள் கைநெல்லிக் கனியின் வாய்மையால். 23

காரிகை யூகிசொற் கருத்தை யோர்ந்தவர்
சீரிய னிவன்செயல் செவ்வி தாதலிற்
கூரிய தவநிலை குறித்துப் பேசுதும்
ஆரிய வருகவென் றழைத்துப் போயினார். 24

முன்பொரு பற்றிலர் முகங்கண் டோரிலர்
பின்பெறுங் குறித்திலர் பேணுஞ் செய்கையோ
டென்புநெக் குருகித்தம் மினத்தொ டேற்றனர்
அன்பெறுங் கருதிடா தளிக்கு நீரதே. 25

அறப்பெருஞ் சாலையை யடுக்குங் காற்பலர்
புறப்படூஉ வெதிர்ந்தருள் பொழியுங் கண்ணினார்
மறப்பரு நன்மொழி வழங்கி வாழ்த்தினார்
சிறப்பொடு பூசனை செய்யுஞ் செய்கையார். 26

புவனபோ கங்களைப் புதைத்திட் டாத்தும
கவனமுற் றருநெறி கடைப்பி டித்தவன்
உவகையோ டுபசரித் துறவு காட்டுமத்
தவநிலை முதியரைத் தாழ்ந்து போயினான். 27

ஆங்கொரு சார்பினி லழகு வீற்றிருந்
தோங்கிய தவளமா ளிகையி னுள்ளுறப்
பூங்கொடி மடந்தையர் புகுந்து புங்கவ
ஈங்கினி திருக்கவென் றிருக்கை யீந்தனர். 28

நன்றியோ டாசனத் திருந்து நம்பனை
ஒன்றிய சிந்தையோ டுவந்தி றைஞ்சினான்.
துன்றிய வுபாதிதொக் கடர்ந்த சூழலில்
பொன்றிடா வகைதனைப் புரந்த துள்ளியே. 29



அவ்வயிற் சிலதிய ரடுத்தங் கேந்திய
திவ்விய பானநீ ரருந்திச் சிந்தையிற்
கவ்வையின் றுயிருந் தாங்கின் காட்சியைச்
செவ்விதி னோக்கினன் றிகைத்துள் ளுன்னுவான். 30

புண்ணியங் குடிபுகப் புதுக்கு மாடமோ
கண்ணிய வருந்தவக் கழகந் தான்கொலோ
தண்ணளி யுறைவதற் கியன்ற சாலையோ
பண்ணுல கிறுத்தபே ரின்ப மாடமோ. 31

துறைதொறு மாரணத் துழனி தூயநாட்
டிறைதிருப் புகழ்விளக் கினிய பாட்டிசை
மறைமொழி வழாதமா டகநல் யாழிசை
நிறையுமா லிதுவுமோர் நிமல வீடுகொல். 32

வெண்ணிலா வுமிழ்சுதை மிளிர்ந்த பித்தியிற்
றிண்ணிய சுருதியிற் றெளிந்த நீர்மைய
கண்ணடிப் படிவங்கள் ககன கோளத்தின்
வண்ணமித் துணையென வகுத்துக் காட்டுமால். 33

மாயமில் லுளத்திடை வந்து தைவிக
தூயவா வியினரு டுன்னு மாறுபோல்
மேயசா ளரந்தொறும் வீசு மிவ்வகத்
தேயவ ருடல்புள கேறத் தென்றலே. 34

பொறிக்கெலா நலந்தரு புனித மாப்புலன்
செறிக்குமாற் சிந்தனை தெருட்டு மாலற
நெறிக்கெலாந் துணையென நிலவு மானில
வெறிக்குமா ளிகையிதை யென்னென் றுள்ளுகேன். 35

இன்னண மதிசயித் தெண்ணி வேதியன்
தன்னுளே யுவந்தன னிருப்பத் தண்ணளி
துன்னிய முத்தவத் தோகை மாரவன்
முன்னுற விருந்திவை மொழிகு வாரரோ. 36

அரசிளங் கோமகற் கன்பு செய்யுமெய்ப்
பரிசுடை யையவெம் பக்க னீவரும்
வரிசைபெற் றனமெனு மகிழ்ச்சி யுண்டெமக்
குரைசெயுந் தரத்ததன் றுண்மை நூல்வலாய். 37

தாரதல விரக்ஷணை சமைக்குந் தன்மைய
புராதன சுருதிநன் குணர்ந்த புந்தியோய்
இராவுண வியையுமட் டாக யாங்குழீஇ
விராயுரை யாடுதும் விழைவெ னென்றனர். 38

ஆசறு மனத்தின ரன்பி னற்சொலும்
வாசகங் கேட்டுள மகிழ்ந்து வேதியன்
பூசனை மொழிசில புகன்றெ னன்னைமீர்
பேசுது மெனக்கது பெரிய நன்றென்றான். 39

அத்திற மறிந்தரு கமர்ந்த வான்றமெய்ப்
பத்தியாம் பவித்திரை பவள வாய்திறந்
தெத்திற வெண்ணமற் றன்னை யிவ்வழி
உய்த்தது புலப்பட வுரைத்தி யாலென்றாள். 40

முருந்துறழ் மூரலாண் மொழிய முற்றுளந்
திருந்திய மறையவன் செவ்வி தாமென
அருந்தவத் தோய்பிறப் பவித்தை யேகுடி
இருந்ததே சம்மெமக் கிறைவன் பாரிடம். 41

ஈசன்கோ பாக்கினி யெரிக்கும் யானுறு
நாசதே சத்தையென் றெழுந்த நல்லுரை
ஓசைகேட் டஞ்சியுள் ளுடைந்து யங்கினேன்
பாசவெவ் வினைமிகு பார மாயிற்றால். 42

வழியறிந் தோடல ளுயின் மாண்டுயிர்
அழிவனென் றோருணர் வகத்து ளூன்றலாற்
கழிவினுக் கிரங்கிநாட் கழிய விவ்வழி
மொழிசுவி சேஷகன் முடுக்கி னனென்றான். 43

வேறு.

நன்று வேதிய மறைவியாக் கியானிநன் மனையில்
நின்ற துண்டெனி னிகழ்ந்ததென் னிகழ்த்தென நீர்மை
குன்று றுதபூங் கொம்பனாள் வினவலுங் குறித்த
மன்றில் யான்கண்டு கேட்டவை மறப்பரி தம்ம. 44

ஜென்ம சத்துரு வாயெமைக் கெடுப்பது தீரா
வன்ம முற்றபேய் மற்றதை யடர்க்கநம் மாட்டுத்
தன்ம ரக்ஷகர் கிருபைதந் தருள்வரித் தகைமை
என்ம னத்துற வூன்றிய தங்ஙன மெம்மோய். 45



நாம னாலயத் திடம்பெறு பாவமே நாளும்
பாம நாயன்கை மாறின்றிப் பாலிக்குங் கிருபை
உரமு றுவகை தரந்திடு மென்பது முணர்ந்தேன்
வரம னேகர நுனித்துணர் மதிவலோய் மனத்துள். 46

மற்று மேலைநாள் வருநடுத் தீர்வையின் மாபைச்
சொற்ற னன்னொரு சொப்பனி கேட்டுளந் துளக்கம்
உற்ற தென்னினு முடையவன் றிருவுளச் செயலான்
முற்று மெற்கது பெரும்பய னீந்தது முதியோய். 47

நித்தி யானந்த மாடத்து நிலவர மியத்திற்
பத்த ரோர்சிலர் வெள்ளுடை பரித்துல வுவதுஞ்
சுத்த வீரனோர் தூயவம் வாயிலிற் றுன்னி
முத்தி வீட்டினுட் புகுந்ததுங் கனவா முதிர்ந்தே. 48

உள்ளு றப்புக விரைந்தனெ னுத்தம குரவன்
வள்ள லுத்தர மின்றென மறுத்தெனை விடுத்தான்
எள்ள ரும்பல காட்சியிற் றெருட்டியென் றிசைத்தான்
கள்ள மின்மறை வேதியன் கனங்குழை யுரைப்பாள். 49

உலங்கொ டோளினு யுன்னுளத் துள்ளதுன் னுரையாந்
துலங்கு கண்ணடி மயலறக் காட்டிடத் துணிந்தேய்
நலங்கொண் மார்க்கத்து மற்றெதை யெதிர்ந்தனை நம்பி
புலங்கொ ளத்தெரித் துரையென வாரியன் புகல்வான். 50

குருதி சிந்தியோர் குன்றிடைக் குரிசினம் மிளங்கோ
பரிதி போலொளி கான்றுயிர் விடுத்திடும் பரிசைக்
கருதி நோக்கின னோக்கலுங் கழிந்தது சும்மை
சுருதி நூல்வலாய் தோன்றினர் மூவரச் சூழல். 51

ஆய காலையிற் பாவமன் னிப்பெனக் கருளி
ஏய பேரடை யாளங்க ளிவையெனக் கீந்து
மீயு யர்ந்தவா னகத்திடைக் கரந்தனர் விரைந்து
கூய மெய்யடி யாருளங் குடிகொண்ட கோமான். 52

கொள்ள ருந்துயில் கொண்டவர்க் கறிவினைக் கொளுத்த
எள்ளி மூவருந் துயின்றன ரெழுந்தில ரொருசார்
கள்ள மார்க்கத்த ரிருவர்வந் திடையிலே கலந்து
நள்ளி ருட்படு கவர்வழி பிடித்தனர் நயந்து. 53

அடர்ப்ப தன்றுநீ யஞ்சிடே லாளரி யேறு
தொடர்ப்ப டுத்தவை யென்றுகா வலன்சொன்ன சொல்லால்
இடர்ப்ப டாதிவ ணிறுத்தன னன்றெனி லிருவர்
பிடர்ப்பு றம்பிடித் தோடுவல் பெறுங்கதி பிறவே. 54

பெண்ண ருங்கலத் தாயர்மீர் பிணிபிழைத் தோடி
உண்ணு நீர்நசை யாற்றிரிந் துலைந்தவோ ருழைக்குத்
தண்ண றும்புனற் றடாகமொன் றெதிர்ந்தபோற் றமியேற்
கெண்ண ருங்குணத் திவ்வுழை லபித்ததிவ் விரவில். 55

சாவ தானிபே ருதவியின் றகைமையுந் தழைத்த
ஆவ லோடெனக் காதரம் புரியும தன்பும்
நாவி னாலன்றென் னுளக்கிடை நன்றிபா ராட்டித்
தேவ தேவனைச் அதிப்பலென் றிசைத்தனன் செய்யோன். 56

இனிது வேதியன் வாய்மைகேட் டகங்களித் தெல்லாம்
புனித வாவியி னருட்செய லாமெனப் போற்றிக்
கனித னீர்மையிற் கண்ணுளங் கசிந்தனள் பத்தி
வனிதை யவ்வயின் விவேகிமற் றிவ்வுரை வகுக்கும். 57

மக்க ளைத்துணை மனைவியை மருவுசம் பத்தைத்
தொக்க ளைந்தவுன் கிளைஞரைத் துறந்துவான் வழியிற்
புக்கு வந்தனை மற்றவற் றிடைக்கிடை புகுந்து
சிக்கு கின்றவோ சிந்தனை செப்புதி யென்றாள். 58

புந்தி மாதிது புகறலும் புறத்தொடர் பெல்லாம்
முந்து வர்க்கப்பின் வெட்டுழல் கின்றவோர் மூடச்
சிந்தை யின்றெனி னும்பழ வாசனை சிறிது
வந்து வந்துபோம் விடுபட்ட வூசலின் வடம்போல். 59

மாலை கண்டர வாமென மயங்கிப்பின் வாங்கும்
சீல மாயொரு தீங்குறிற் றிகைத்துளந் திரும்பிப்
போலி வாழ்க்கையிற் புகவரு மாயினும் புகமேோய்
மேலை நாணடுத் தீர்வையை நினைத்துடன் மீளும். 60

நேர்ந்த தாற்பல சமயங்க ளிருவிசா ரத்தைச்
சார்ந்தி டற்குளஞ் சாய்ந்திடி லெத்தனை தவறும்
ஆர்ந்த நிந்தையு மாமொரு முறையரு வருத்துத்
தீர்ந்த பின்னதை விழைவது வோநர ஜென்மம். 61



அநித்தம் பாவசந் தோடங்க ளனைத்தும தன்றித்
துனித்தி றஞ்சதோ தயந்தரு மென்றருட் டுணையால்
நுனித்து ணர்ந்துபே ரின்பலோ கத்தையே நுதலித்
தனித்து நூல்வழி வாவொருப் பட்டனன் றக்கோய். 62

இனைய யாவுமற் றொருபக்ஷ மெம்பிரா னன்புந்
தனையன் றண்ணளி யும்புனி தாவியின் றயையும்
நினையுங் காலிந்த நீணிலத் துறவினை நினைக்கும்
வினைய மென்னவா மீதென்றன் முக்கிய விநயம். 63

என்று வேதியன் றன்னுளத் தியற்கையை யியம்பத்
துன்றி ருங்குழற் சுமதியென் றுரைபெறுந் தோகை
நன்று நின்கரு விழியென நயந்தவை சிலவீங்
கொன்றி வந்தவோ வுன்னொடு முரையென வுரைப்பான். 64

பச்சைப் பூகநின் றெழுகுலக் குயின்மொழிப் பாவாய்
கொச்சைப் பாமரக் குடிமையிற் பழகிய கொடிய
இச்சைப் பாடுகள் சிற்சில வென்னொடு மிசைந்தே
அச்சப் பாடுக டருவன யாண்டுமென் னகத்துள். 65

விதிவி லக்கிகந் துனுற்றுதல் விருப்பமின் றேனும்
விதிவி லக்கிகந் துனுற்றுவ லோரொரு வேளை
விதிவி லக்கிகந் திடுவன்யா னாயினும் விதித்த
விதிவி லக்கெலா நன்றென விருப்புடன் ரமிப்பேன். 66

என்ற மாத்திரத் தையவுன் னியற்சுபா வேச்சை
துன்று நன்மனோ தத்துவ விரோதமாய்த் துளங்கி
நின்ற தென்னிலவ் விச்சையை நிலவுரு தடக்கி
வென்றி யெவ்வகை விளைத்தனை விளம்புதி யெனலும். 67

தாக்கி டப்படுஞ் சிற்சில வேளையிற் றமியேன்
நீக்கு ணங்களவ் வமைதியை மயலறத் தெருண்டு
நோக்கி லோர்பதி னாயிரங் கோடிபொன் னொடியில்
ஆக்கல் போலுமெய்ம் மகிழ்ச்சியுண் டாமகத் தணங்கே. 68

சுபாவ விச்சையைக் கெடுத்துவே ரொடுத்தறத் துடைக்கும்
உபாய மைம்பொறி வாய்வழி புலனுறு தொருங்கே.
கபாட பந்தனஞ் செய்வதென் பாரது கருதில்
அபாவம் வாய்ப்பழக் கன்றியோர் பயனிலை யம்ம. 69

குருதி காட்டிய சிலுவையை நினைப்பதுங் கோதில்
சுருதி நூலையுய்த் துணர்வதுந் துகிலையுன் னுவதும்
வருதி றத்தமா மகிமையை மதிப்பதுஞ் சுபாவந்
தருது ரிச்சையைக் களையுமெய்ச் சாதன சதுஷ்கம். 70

தீய சிந்தையைச் செருப்பதுஞ் செம்மையிற் றிறம்பா
மாய மற்றநற் கிரியையை வளர்ப்பது மயங்கி
மேய சோதனைக் கெதிருற விறல்தரு வதுமெற்
கேய வத்தகு சாதன சதுஷ்கமே யென்றான். 71

ஆரி யன்சொலக் கேட்டலு மாரண விவேகி
சீரி தாமெனச் சிந்தையுள் வியந்துநீ சீயோன்
மேரு மாமலை யாத்திரை விளைந்ததென் விருப்பங்
கூரி யோயெது குறித்துள கூறுதி யென்றாள். 72

இலகு வாண்மதி முகத்தினா யென்னுயிர்த் தோழர்
உலகெ லாமுயக் கொண்டவர் வினைச்சுமை யொழித்தோர்
அலகி லாமகி மைப்பிர தாபமோ டாங்கு
குலவி வீற்றிருத் தலைக்கண்டு களிப்பதோர் குறிப்பால். 73

இம்மை யேயெனை யீடழித் திடுபல விடுக்கண்
வெம்மை மிக்கபல் வேதனை விடயங்க ளெதுவும்
அம்மை யிற்புகா தழிமர ணமுமிலை யாங்கு
செம்மை சேர்மதி மற்றிதோர் சிந்தனை தெரிநீ. 74

பிணங்கு றாமனப் பெருந்தகை யவரொடும் பிரியா
திணங்கி வாழ்வது மெம்பிரா னடிசிரத் தேந்திக்
குணங்க ளைப்புகழ்ந் தேத்தியின் னிசையொலி கூட்டி
வணங்கி நிற்பது மெனக்குள மற்றொரு வாஞ்சை. 75

இத்த கைப்படு திடவிசு வாசத்தை யெனக்குள்
உய்த்திம் மட்டுமா தரித்துநின் றுறுதுணை யாகி
எத்தி றத்தினும் பாதுகாத் தளிப்பதெம் மிறைவன்
வித்த கப்புனி தாவியின் செயலென விண்டான். 76

சீர்மை யுற்றமெய்க் கிறிஸ்துவன் றிடவிசு வாச
நீர்மை யுற்றறிந் தாமிது நிண்ணய மென்னாக்
கூர்மை யுற்றநல் விவேகியுட் குதுகலித் திருப்ப
நேர்மை யுற்றசி நேகிமற் றின்னன நிகழ்த்தும். 77



ஐய மின்றற வோயுனக் காத்தும வாழ்வு
கைய தாயதெம் மாண்டகை கருணையி னழைப்பும்
வைய ரக்ஷகன் மலரடி யாட்கொண்ட மாண்புந்
துய்ய வாவிநல் காருட் பெற்றியுந் துணியில். 78

மண்பி சைந்தருத் தாரனார் மலிந்தபோ தத்துங்
கண்பி சைந்தழு சேய்க்குளங் கசியுமோர் தாயின்
பண்பி சைந்தநம் பரம்பரன் பத்தபா லனத்தை
நண்பி சைந்தினி தாற்றுமா றறிந்தன நல்லோய். 79

அரிய மித்திர விங்கிது நிற்கநின் னன்புக்
குரிய காதலி மக்கண்மற் றுளர்கொலோ வுளரேற்
பிரிய விட்டுனைப் பிரிந்தவண் டரிப்பதென் பிரமை
தெரிய விள்ளுதி யென்றனள் சிநேகியாந் தெரிவை. 80

வினவு வாசகங் கேட்டலும் விம்மிநெட் டுயிர்த்துக்
கனவு போன்றதெங் காமிய வாழ்வெனக் கருதி
வனவி ழித்துணை நீர்முத்த முகுத்திட மறைதேர்
பனவ னுள்ளுடைந் துருகிமற் றிவ்வுரை பகர்வான். 81

குணங்கு லாவிய குயிற்குரற் கோமள வல்லி
மணங்கு லாவிய மனைவியோ டீரு மைந்தர்
நிணங்கு லாமுடற் குயிரென வெனக்குளர் நிகழ்த்தில்
கணங்கு லாவிய கிளைஞரும் பலருண்டு கண்டாய். 82

புலைநி ரம்பிய திருவிசா ரத்தொடு புணர்ந்த
அலைநி ரம்பிய கடற்புவி முழுவது மவிக்கும்
உலைநி ரம்பிய கனலின்வா னுருதழ லென்னாக்
கலைநி ரம்பிய கட்டுரை தெரித்தனென் கவன்று. 83

உலக வாழ்க்கையை யுறவினை யூர்ப்பழக் கத்தை
அலகை மார்க்கத்தை யழல்விட வரவென வஞ்சி
விலகி யென்னொடுந் திருமியிம் மெய்வழி பிடித்தற்
கிலகு நன்மதி படைத்தில ளென்மனைக் கிழத்தி. 84

மறுவி லாமதி முகத்தினாய் மைந்தரோர் நால்வர்
சிறுவர் சொன்மதி தெருண்டிடார் நன்மையிற் றிறம்பி
உறுவ தாயசிற் றின்பவுல் லாசமே யுவப்பர்
நறுவி தெள்ளிவெங் கடுத்தழை நயக்குமாப் போலும். 85

பொறுமைத் தெய்வவேந் தாணையைப் பேணலர் புகுதும்
மறுமைச் சிந்தையோர் சற்றில ரிகத்துறு வாணாள்
குறுமைத் தென்பதுங் கொள்ளலர் குவலய வாழ்வின்
சிறுமைப் போகம்வேட் டுழல்வரெம் மூர்வரு சிதடர். 86

பாபத் தைப்பா னீதியைப் பகர்நடுத் தீர்ப்பின்
ஆபத் தைக்குறித் தறிவுறுத் தாவிநல் லருளாந்
தீபத் தைக்கெடுத் திருட்படு தீவினை யீட்டிச்
சாபத் தைப்பெறச் சதோதய முயல்வரச் சழக்கர். 87

தெள்ளி தென்மனை மக்களைத் தெருட்டிய செஞ்சொல்
உள்ளி லங்கணத் துக்கதீம் பாவினை யொத்த
வள்ளி யோயெமர்க் குரைத்தசொல் வல்லுளி மதியா
தெள்ளி யிட்டநித் திலத்தையொத் துளதுகா ணிசைக்கில். 88

சொற்ற தோர்ந்திலர் வடித்தகண் ணீரொடு சும்மை
உற்ற டைந்தமெய் வருத்தமும் விடுத்தநெட் டுயிர்ப்புஞ்
சற்று நோக்கல ரிகழ்ந்தன ராதலிற் றமியேன்
முற்று நீத்துவந் திவ்வழி பிடித்தனன் முதியோய். 89

கறுத்த சிந்தையர் மடமையாற் கனன்றுவர்த் தெள்ளி
வெறுத்தெ னைப்புறக் கணித்தன ராயினும் விமலன்
ஒறுத்தி டாதவர்க் குண்மையைத் தெரித்தறி வுறுத்திப்
பொறுத்தி ரக்ஷணை நல்கமன் றாடுவல் புகழோய். 90

ஆக்கு தீவினை யருவருத் தஞ்சுமென் மனமும்
வாக்குஞ் செய்கையு மாறுகொண் டனமனை மக்கள்
போக்கி னுக்கெனை யாதலிற் பொருந்தல ராகி
நீக்கு மாறொருப் பட்டனர் நிகழ்ந்ததீ தென்றான். 91

கனித னீர்மையன் வாய்மையிற் கனன்மெழு கென்ன
வனிதை யுள்ளநெக் குருகினண் மறைமொழி யாய
புனித வித்தவன் புந்திநன் புலத்திடைப் பொருந்தி
இனிதி னுய்த்தவான் போகத்தை வியந்தன ளியம்பும். 92

பன்னு வேதபா ராயண பரனொரு மைந்தன்
என்னி மித்தமே தினியுமைப் பகைத்திடு மேனும்
பின்னி டாதுசான் றாகுதிர் பேதுறீ ரென்னாச்
சொன்ன வாசக முண்டதற் குண்டுகொல் சோர்வு. 93



அன்று வேதநன் ஞானெறி கடைப்பிடித் தாபேல்
மன்று ளேபுரி நற்கரு மத்தினால் மனது
கன்றி வெஞ்சினங் கதுவியங் கவன்றனைக் காயீன்
கொன்று தீர்த்தன னிதுவன்றோ குவலயக் கொள்கை. 94

திகழு நூன்மதிச் செவ்வியோய் செவ்விய ரென்னப்
புகழு வார்க்கன்று நந்தமைப் புறக்கணித் தெள்ளி
இகழு வார்க்குநன் றியற்றலே நங்கட னென்றும்
அகழு வார்க்குநன் றாற்றுமாற் றாணி யைய. 95

தாயைத் தந்தையைத் தாரத்தைத் தன்றுணைத் தமரைச்
சேயைச் செல்வத்தை வெறுத்துயர் ஜீவனை விரும்பி
மாயைக் கீடழி யாதுநல் வழிப்படு மாண்பே
பேயைத் தாக்கிய பெருந்தகைக் காட்படும் பெற்றி. 96

காவ லன்பெருங் கருணையிற் கரையில்பே ரின்ப
ஜீவ நன்மையைத் தெரிந்தனை மற்றிதிற் சீரி
தாவ தென்கொலோ வின்னுமவ் வாண்டகை யருளால்
வீவி லானந்த பதவியும் பெறுகுவை மேலோய். 97

தேசு மல்கிய சிற்குணா லயதிரி யேகர்
ஆசி மல்குக வனவர தமுமுனக் கென்னாப்
பேசி யன்பினாற் பிறங்குமெய்ப் பத்தியை நோக்கி
ஆசி லாமனத் தணங்கனா ளஞ்சலித் துரைப்பாள். 98

## வேறு.

அருந்த வத்தெழில் பெற்றமெய் யாரணி
திருந்த வாரியன் செப்பிய தோர்ந்தனம்
பொருந்து மன்பரைக் காக்கின்ற புண்ணியப்
பெருந்த கையருட் பெற்றியைக் கண்டனம். 99

அன்னை யுண்டுசின் னோரம முதுணற்
கின்னு மாவிக்கி னியசம் பாஷணை
பன்னு துங்கிறிஸ் தன்புப மூத்தவா
றுன்னு துங்கருத் தென்னென வோதினாள். 100

இதுசி நேகியி யம்பலு மேந்திழை
மதிம டந்தையென் வாஞ்சையு மீதென்றாள்
புதுவி ருந்தின னும்மகிழ் பூத்துடன்
அதிந லமடி யேற்கம்மன் மீரொணா. 101

ஒன்று வேண்டுவ னுன்னத கோமகன்
மன்றி ரக்ஷைமு டித்தவ ரப்பினில்
அன்ற டைந்தவ ரும்பெரும் பாட்டினை
இன்றி சைக்கமன் றுடுகின் றேனென்றான். 102

பத்தி யென்னும்ப வித்திரை பாங்குளார்
சித்த மும்மவர் செப்பிய சீர்மையும்
உய்த்து ணர்ந்துள்ளு வப்பொடு மொள்ளிய
வித்த கக்கனி வாய்மலர் விண்டனள். 103

எம்மு யிர்த்துணை யீரிறை வன்னொரு
செம்மல் மேயசி லுவையின் பாடுகள்
மம்மர் நீங்கிய வானவர்க் காயினும்
அம்ம சொல்லிய ளவிடற் காவதோ. 104

தரையில் யாவரும் பாவிகள் தண்டனை
நிரைய நித்திய மூநடு நின்றவர்
ஒருவ ரேயொருங் குத்தரித் தார்சிறு
வரையில் யாவரர் ரோவைவ குப்பரே. 105

பாரை வானப்ப ரப்பைப்ப ரவையை
வீரை வானுகத் தையள விட்டிடுஞ்
சீர ராயினும் ஜேசுத்த ரித்தவக்
கோர வாதைகு ணித்திடற் பாலரோ. 106

வாக்கொன் றிற்குளிவ் வையம டக்கிய
கோக்கு மாரனல் லால்விக்கு வலயந்
தீக்க நின்றசி னக்கொடுந் தீத்திரள்
ஆக்கை மீதுத்த ரிக்கவல் லாரெவர். 107

பாழி யம்புவி யுய்யப்ப ரன்சுதன்
வாழி மேனிவ தைப்புண்ட நீர்மையை
ஊழி யூழினி னைத்தழு தொண்கணீர்
ஆழி யாகவு குப்பினு மாற்றுமோ. 108

வையம் விண்டிடும் வான்கதிர் மாய்ந்திடுஞ்
சைய முந்தக ரும்தலை சாய்ந்தெனில்
ஐயன் மேயவ வஸ்தையை யாய்ந்துரை
செய்ய யாரொரு சின்மதி யோதாம். 109



நாய கன்புனி தாத்துமம் நைந்ததும்
மீயி ரத்தவெ யர்த்துளி வீழ்த்ததும்
ஏய தின்னண மென்றெடுத் தோதவாய்
ஆயி ரம்மிலை யாயுவு மற்பமால். 110

பெருகு மன்பிற்பி ணித்தவப் பெற்றியை
உருகு முள்ளத்திர் யானுரை செய்வதற்
கருகி யல்லென்மற் றாயினு மாவியின்
திருவ ருட்கொட றிந்தன செப்புகேன். 111

என்று பன்னியி கபர சாதனம்
நன்று ணர்ந்தந லங்கிளர் பத்தியாந்
துன்றி ருங்குணத் தோகைதன் சிந்தனை
ஒன்றி யீசன ருட்டுணை யுன்னுவாள். 112

சம்பாஷணைப் படலம் முற்றிற்று.

## இரக்ஷணிய சரிதப் படலம்.

(ஸ்தோத்திரம்.)

அகில லோகம்ப டைத்தளித் தன்பினாற்
சகல மன்னுயி ருங்கதி சார்ந்துய
மகவை நல்கிய மாண்புறு தாதையாம்
பகவ னுக்கித யாஞ்சலி பண்ணுவாம். 1

வேறு.

உலகமகிழ்ந் திடேறப் பரலோக வாசிகளுக் குவகை யேற
அலகையுளந் திகிலேற வகண்டபரி பூரணனு ருண்மெய் வாக்கு
விலகிலதாய் நிறைவேறத் துதியேற நாவுருவாய் விளங்கி யன்பாற்
சிலுவைமிசை யேறியமெய்ஞ் ஞானசூ ரியனடியைச் சிந்தை செய் 2
வாம்.

வேறு.

துனிதரு வினைமுனி தூய சிந்தனை
கனிதர நன்னெறி கடைப்பி டித்திட
இனிதுவந் தடியவ ரிதயத் தென்றும்வாழ்
புனிதநல் லாவியைப் போற்று வாமரோ. 3

வேறு.

காவ னத்திலே நிசியிடைத் தனியிருந் துலகெலாங் கதிசேர
ஜீவ னைக்கொடுத் திடவரு திறநினைந் திரத்தவேர்த் துளிசிந்தி
ஆவி யிற்கொடுந் துயரமுற் றையருக் கபயமிட் டதுமந்நாள்
தேவ மைந்தனார் சகித்தவே தனையுமென் சிந்தைவிட் டகலாவே. 4

மூசு முண்முடி முடித்திட முனிவுறு முகசரோ ருகப்போதும்
நேச மோடுபே துருமனங் கசந்தழ நோக்கிய நெடுங்கண்ணுந்
தேசு குன்றிவெங் குருதிநீர் பொழிதரு செய்யமே னியுமெம்மான்
ஏசு நாயகன் றிருவடித் துணையுமென் னிதயம்விட் டகலாவே. 5

பாவி யென்றெனக் குணர்த்திய கருணையும் பாவநா சனைக்காட்டி
ஏவி யென்னையங் கவர்வயி னடத்திடு மிருத்திற மையுமெற்காய்
ஓய்வி லாதுபி தாவைமன் றுடலி லுற்றெழு பெருமூச்சுந்
தேவ ஆவியின் புனிதமாச் செயலுமென் சிந்தைவிட் டகலாவே. 6

வேறு. (திருவிருத்தம்.)

மாக வேந்தற்கு மானத பூசனை
ஓகை யோடளித் தொண்பொன்வள் ளத்துறு
பாகு குத்தப ரிசெனப் பத்தியாந்
தோகை யின்னன சொல்லுதன் மேயினாள். 7

கோட்ட மின்மனத் தீரிளங் கோமகன்
நீட்டு மானிடம் யாவையுந் தீச்சிறை
மீட்டு மேக்குயர் வீட்டுல கத்தினைக்
கூட்டு வானுற்ற வாதைகு றிக்கொளில். 8

மற்றை நாண்மனு மக்களி ரக்ஷணை
முற்று மென்றுமு னிவின்றி முற்படும்
அற்றை நாளிர வில்லடி யாரொடும்
உற்ற ருந்தினர் நல்விருந் தோர்மனே. 9

மருந்தெ னத்தகு மந்திர வற்புத
விருந்த ருந்துமவ் வேலையில் வித்தகந்
திருந்த நற்கிலை திவ்விய போதனை
பொருந்து மாறுப கன்றனர் புண்ணியர். 10

உந்து தண்ணளி யாலுல கத்திடைத்
தந்தை தன்னைவி டுத்ததுந் தாம்வரு
விந்தை யுந்திரு வுள்ளம்வி ழைந்திடும்
அந்த ரங்கம வனிக்க ளித்ததும். 11



விதிவி லக்கின்சு டனைவி சும்புதோய்
மதிவி ளக்கிற்பொ ருத்திய மாட்சியுங்
கதிபு குத்துமெய் யன்பின்க னிதரூஉ
முதிரு மெய்விசு வாசத்தின் மொய்ம்பதும். 12

கால முற்றுங்க டவுள்க ருத்தினுக்
கேலு நற்கரு மங்களி யற்றிய
சீல மும்பரி விற்றெரி யச்சொலி
மேலும் விள்ளுவர் ஞானவி ரோசனன். 13

சருவ வல்லதி ரித்துவ தற்பராத்
தொருவன் யானொரு மூவரொன் றுயுள
நிருவி கற்பநி லையைவி சுவசித்
தொருவு கிற்கிலி ரேலெமக் குள்ளுளீர். 14

தொள்ளை மாநில மெங்குந்து ருவிநீர்
விள்ளு மின்சுவி சேஷத்தின் மெய்ம்மையைக்
கொள்ளு மாலுல கம்பகை கொள்ளினும்
வள்ள லாரருள் வாய்க்கும லங்கலீர். 15

சொற்ற வென்னுரை யுட்கொடு தூநெறி
பற்றி மெய்ம்மைப கர்ந்திடு சான்றிராய்
நிற்றி ரென்னிலந் நின்மல வீடடைந்
துற்றெ னோடரு காசனத் தோங்குவீர். 16

எண்ட ரும்பர லோகவி ராஜ்ஜியத்
தண்டு பற்பல தானமங் குற்றியான்
ஒண்ட லந்தெரிந் தும்பொருட் டன்பினீர்
கண்டு மீள்குவ னெஞ்சங்க லங்கன்மின். 17

அழிவி லின்பவு லகத்தை யாக்குமெய்
வழியு மாசறு சத்திய மாண்பதும்
ஒழிவி னித்திய ஜீவனு முண்மையா
மொழியின் யானல தின்றிதை முன்னுமின். 18

என்னில் வேறல ரெந்தையு மெந்தையார்
தன்னில் வேறலன் யானுமித் தன்மையின்
மன்னு மென்னைம யலறக் காண்டலே
உன்ன தேசனைக் காண்டலென் றுன்னுமின். 19

பிரிவை யுள்ளிக்க லங்குதல் பெற்றியன்
றுரிமை யோடென்னு ணைபிடித் தொலைடவம்
புரிமின் யான்புனி தாவியைப் புக்கிவண்
வரவி டுப்பது மக்கருண் மல்கவே. 20

எந்தை யாவியி ருநிலத் தெய்திடிற்
பந்த நீதிப கர்நடுத் தீர்வையென்
றிந்த ஞேயமெ ளிதிற்பு லப்பட
விந்தை யாகமெய்ஞ் ஞானம்வி ளங்குமால். 21

ஏது கேட்பினு மென்னொரு நாமத்திற்
றுதை வேண்டுவ தந்துச தோதயம்
ஆத ரிப்பரென் றின்னன வாண்டகை
ஏத மில்லுரை யாடிடு மெல்லையில். 22

ஆத்து மத்தின ளவிலு பாதிகண்
மீத்தி ரண்டொரு மித்துவி ழுங்கனல்
நீத்த மென்னநெ ருங்குபு கைவரத்
தீர்த்த னுவிக லங்கித்தி கைத்ததே. 23

வேறு.

புரையிலாப் புண்ணிய புருஷ வுத்தமர்
தரையில்வாழ் நரருயக் கலக்கந் தாங்கியே
கரையிலாப் பவக்கடல் கடத்தி லாரெனில்
நிரையநித் தியந்தரு கலக்க நீங்குமோ. 24

இறைவரவ் விருந்தினுக் கிசைபஸ் காவெனும்
மறியுணு மடியரின் வதன நோக்கியீண்
டுறைதரு முங்களி லொருவ னேயெனைச்
செறுநர்கைப் படுத்துவ னென்றுஞ் செப்பினர். 25

ஆங்கது கேட்டமெய் யடியர் யாவனித்
தீங்கினை நினைத்தன னென்னத் தேர்கிலார்
தாங்கருந் துக்கமுந் திகிலுந் தம்முளே
வீங்கிடத் தனித்தனி வினவி னாரரோ. 26

ஈண்டுறுந் துரோகியா னெனக்கொ திப்புடன்
ஆண்டகை மடியரு கணைந்த வன்பனைத்
தூண்டினன் பேதுரு சமிக்கை தோன்றுற
வேண்டின னவனும்யார் விள்ளு கென்னவே. 27



அன்பருக் காரமு தனைய வஞ்சொலார்
இன்புறுந் துணிக்கையொன் றெடுத்துத் தங்கையால்
வன்புறு மனத்தனுக் களித்து மற்றவன்
என்பதை நண்பனுக் கிசைத்துப் பின்னரும். 28

என்னொடுங் கலத்திற்கை யிடுகின் றோனெவன்
அன்னவ னேயெனை யளிப்பன் றெவ்வர்க்கு
முன்னவை மொழிந்தவா றெனக்கு மூள்வன
பின்னவற் குறுதுயர் பேசற் பாலதோ. 29

பிறந்திடா திருப்பனேற் பெரிய நன்மையென்
றறைந்தனர் பேதுரு வாதி யன்பர்க்கு
மறைந்துபுட் சிமிழ்க்கும்வேட் டுவனில் வஞ்சகம்
நிறைந்தவன் மற்றிவை நிகழுங் காலையில். 30

அகத்தெழு சாக்ஷியை யடக்கி மானத்தை
உகுத்துநன் மதியினை யொழித்து நன்றியைச்
செகுத்துவன் னெஞ்சொடு தியங்கி யான்கொலோ
வகுத்துரைத் தவனென வாயிற் கேட்டனன். 31

உள்ளுவா ருள்ளுவ துடனு ணர்ந்திடும்
வள்ளலார் திருமுன மிரும னத்தனாய்
விள்ளுவான் றுணிந்தமை யறிந்த மெய்ப்பரன்
கொள்ளுநீ யுரைத்தவை யென்னக் கூறலும். 32

நஞ்செனக் கொடியவ னுளத்து நாடிய
வஞ்சகம் வெளிப்பட வைரக் கல்லினும்
நெஞ்சகங் கடினமாய் நிறுவ நேர்பழிக்
கஞ்சிடா னமலனை யகன்றிட் டானரோ. 33

எறிந்தவேன் மெய்நுழைந் திருக்க வாண்டையென்
றறிந்துவால் குழைத்துவந் தணுகுங் குக்கலுஞ்
சிறந்தபே ரருளொடுஞ் செய்த நன்றியை
அறிந்திடா தகன்றனன் யார்கொ லாமிவன். 34

காத்தநல் லாவியைக் கடிந்து கண்டகச்
சாத்தனுக் கிதயத்தைத் தானஞ் செய்பவர்
கூத்தர்கைக் குரங்கிலக் குணங்க ளாட்டிடத்
தீத்தொழின் முயன்றழிந் தொழித றிண்ணமே. 35

அடுத்துநான் கெடுப்பனென் றறைந்த சூழ்வினை
முடித்திடுந் தருணமீ தென்ன முன்பணப்
கொடுத்தவப் பதிதனைக் குறுகி னான்கொலுங்
கடுத்துறு மனத்துயூ தாசென் கள்வனே. 36

துன்மதி போயபின் சூழ்ந்த தொண்டர்க்கு
நன்மதி சிற்சில நவிற்ற நாயகன்
தன்மனத் தெண்ணிமேற் றதும்பு மன்பினாற்
கன்மனங் கரைந்திடக் கழறு வாரரோ. 37

மனுமக னாற்பிதா மகிமை யோங்கலால்
நனிவிளைந் தவனுக்கு மகிமை நல்குவார்
இனியொரு சிறுபொழு திருப்ப னும்முடன்
கனிவொடும் பின்னெனைக் கருதித் தேடுவீர். 38

மக்களே யான்செலு மிடத்து வந்துநீர்
புக்கிடக் கூடிய தன்றிப் போழ்திலே
மிக்கவன் புடையாராய் விளங்கு வீரெனிற்
றக்கவென் சீடரென் றறியுந் தாரணி. 39

ஆதலா லொருவரி லொருவ ரன்புகூர்ந்
தேதமில் குணத்தரா யிருமி னீண்டுநும்
மீதுநா னேசத்தை விளைத்த வாறுபோல்
ஈதொரு கற்பனை யியம்பி னேனென. 40

மூண்டெழு துயரினான் முடுகிப் பேதுரு
ஆண்டவ வெங்குநீ ரணைகின் றீரென
வேண்டிட வின்றலை மேவிச் சில்பகல்
மாண்டபின் பற்றுவை மனக்கொள் வாயென்றார். 41

எனுமைத் தொடர்ந்திடே னின்றென் ஜீவனை
நானுமக் காகவே நல்கு வேனெனத்
தானுடைப் பலத்தையே சார்ந்து பேசலும்
வானவர் கோமகன் மறுத்துங் கூறுவார். 42

நின்னுடை ஜீவனை நீக்கு வாய்கொலோ
என்னுடை நிமித்தமா யிடங்கொ டாமல்யான்
துன்னிய பசாசினைத் துரந்தென் றந்தையை
உன்விசு வாசநன் றுரக்க வேண்டினேன், 43



உரப்படும் பின்னர்நீ யுன்ச கோதரர்
திரப்படு மாறுசிந் தனைசெய் வாயென
நிரப்பினர் பேதுரு நிலைக்கப் பூமிசைப்
புரப்பது கருதிவந் தணைந்த புண்ணியர். 44

கேட்டவன் றன்பலக் கேடு ணர்ந்திடான்
மீட்டுமும் முடன்சிறை மேவு வேன்றலை
நீட்டுவன் சாவிலு மெனத்தன் னேசத்தைக்
காட்டினன் வருவது கருது வாரெவர். 45

ஆவது கருதிய வமலன் பேதுரு
சேவலின் றிரவிலே தெருளக் கூவுமுன்
மூவிசை யெனைமறு தலிப்பை முற்றுநீ
மேவுறு மெய்ம்மையை விளம்பி னேனென்றார். 46

இன்னண நிகழ்வுழி யிருந்த சீடருந்
தன்னிக ராயதற் பரனுந் தம்முனம்
மன்னுபஸ் காவெனு மறியைத் துய்த்துமே
முன்னிய மப்படி முடித்திட் டாரரோ. 47

வேறு.

பொங்குபா மானந்த நமக்கருள வந்தமனுப் புதல்வர் தாமே
செங்கரத்தா லப்பமெடுத் ததைப்பிட்டுத் தோத்திரித்துச் சீடர்க் [கீந்தீ
துங்களுக்காய் மரணத்துக் கொப்புவிக்கு மெனதுடலீ தென்னை யுன் [னித்
தங்கிடுநீ ரிந்தவகை யியற்றியெனக் கருணையொடு சாற்றிப் பின் [னும். 48

இனிமைதரு பழரசபாத் திரமேந்தி ஸ்துதிசெலுத்தி யிதிலே நீங்கள்
அனைவீரும் பருகுமின்மற் றிதுபுதிய வுடம்படிக்கைக் கமையச் சிந் [தும்
எனதிரத்தம் பாவமன்னிப் பிதனாலே யுண்டாகு மினியிப் பானந்
தனைநுகரே னென்பரம தந்தையிராஜ் ஜியந்தனினீர் சாரு மட்டும். 49

என்றுதிரு வாய்மலர்ந்தன் புருவாக வெழுந்தருளி யேசு நாதர்
ஒன்றியதம் மடியரொடும் பாவிகளுக் காயிரங்கி யொருபே றான
தன்றிருமைந் தனைக்கொடுத்திவ் வளவாக வுலகிலன்பு சார்ந்த தேவை
நன்றுநினைத் தேத்தியொரு தோத்திரகீ தமுமிசையாய் நவிற்றி [னால். 50

பாசமய விருளகலச் சுவிசேஷ விரிகிரணம் பரப்பி நின்ற
இரவியெனுந் திருச்சபையி னிலையாக வழங்கிவரு மிரண்டு ஞான
வரமிகுசாக் கிரமெந்தின் முன்னதுஞா னஸ்நானம் மற்றொன் றிந்தப்
பரமவிருந் தாநமது பரமகுரு வேயிவையேற் படுத்தி னாரே. 51

முந்துறஞா னஸ்நான மடைவர்திருச் சபைபுகுவோர் முறையி [னின்று
பந்தமறு காதபரா பரன்மதலை யெம்முடைய பாவந் தாங்கிச்
சிந்தினர்செங் குருதியுயிர் விடுத்தனரென் றுளநினைந்து சிந்தை [யன்பால்
நைந்துருகி விசுவாசத் தூன்றிநிற்பர் நற்கருணை நயந்துட் கொள் [ளில். 52

வேறு. (பிரார்த்தனை.)

ஒலிகட லுலக மெல்லா முயர்பர கதியிற் சேர
மலிதரு கருணை யாலே மானிட வுருவந் தாங்கி
மெலியராய் வந்த மேசி யாயிவை விளம்பிப் பின்னர்
நலிவுறு மடியர்க் காகச் செபத்திலே நாட்டம் வைத்தார். 53

வேறு.

ஆதிமத் யாந்த ரகிதநிஷ் களங்க
வநாதியை யருட்பெருங் கடலை
ஓதுதற் கரிய மூலதத் துவத்தை
யொப்பற வுயர்பராஞ் சுடரை
வேதநா யகனைத் தமினிரு விகற்பாய்
விளங்கிய விபுதர்தம் பிரானைக்
காதன்மீ தூரச் சிந்தையு ணினைந்து
முதுமறை கனிந்தவாய் திறந்தார். 54

தந்தையே நேரம் வந்தது நீருந்
தனையனுக் களித்தவ ரெவரும்
உய்ந்திட நித்ய ஜீவனை நல்கு
முரிமையை யருளினீ ருமையும்
மைந்தனு மெனையு மறிந்துகொள் வதுவே
மாசறு நித்திய ஜீவன்
எந்தையே முன்ன முமிலெனக் கிருந்த
மகிமையை யீந்திட வேண்டும். 55

எனக்குள யாவு முமக்குமற் றுமக்குள்
ளனவெனக் காதலி னிவர்தாம்
எனக்குநீ ரளித்தோ ராயினு முமக்கே
யுரியவ ரிவராயிவ் வுலகிற்



றனிக்கவிட் டும்பால் வருகின்றேன் பரம
தந்தையே யீங்கிவர் நமைப்போல்
இனிக்கலந் திருக்கத் திருவருட் டுணைநீ
ரீந்திடப் பழிச்சுகின் றேனே. 56

சொற்றமெய் வசனம் பிழையுறு வண்ணந்
துன்மதி படைத்துளா னன்றி
மற்றிவர் தம்முள் ளொருவரு மிதய
மருண்டுகே டடைந்திடா ராக
இற்றைஞான் றளவு முழுதுநா மத்திற்
காத்தனன் யான்பிரி தருணம்
உற்றதா லென்னி லிவர்மனத் துவகை
யுதித்திட விவற்றையீண் டுரைத்தேன். 57

நலனுறு முமது திவ்விய வசன
மிவர்க்கியா னல்கலி னெனைப்போல்
உலகிய லிகந்து நீத்தன ரதனு
லுவரிநீர்க் கடல்புடை சூழும்
நிலவிய லுடையார் மிகப்பகைக் கின்றார்
நெருங்குபொல் லாங்கினின் றென்றும்
விலகிமெய் நெறியில் வழுவுறு திவரைக்
காத்தருண் மிகத்தர வேண்டும். 58

முன்னமிவ் வுலகி லென்னைநீர் விடுத்த
முறைமைபோ லியானுமீங் கிவரை
இந்நிலத் தனுப்பு கின்றன னதனு
லிவர்க்கும தரியமெய்ப் பொருள்கள்
மன்னுதெய் வீக முறும்பர மார்த்த
வசனத்தாற் பரிசுத்தம் வழங்க
என்னையே யுமக்குச் சமர்ப்பணஞ் செய்தே
னிரங்கியாண் டருளுக வெந்தாய். 59

பேதமற் றொன்றாய் நாமிருத் தலைப்போற்
பேசுமித் தொண்டர்வாய் மொழியாற்
பூதல மாந்த ரென்னைநீர் விடுத்த
புதுமையைப் புகரற வுணர்ந்து
போதமுற் றென்னின் மெய்விசு வாசம்
பொருந்திநம் முட்கலந் திருக்கத்
தாதையே யுமது கிருபையீந் திடற்காய்த்
தமியன்மன் றாடுகின் றேனே. 60

அகிலலோ கங்க ளமைக்குமுன் னென்னி
லன்புகூர்ந் தையநீ ரளித்த
மகிமையை நீரொற் குதவிய விவர்கண்
மயக்கறக் கண்டுகண் களிப்புற்
றகமகிழ் வெய்தற் கியானினி திருக்கு
மத்தலத் தென்னொடு மமர்ந்து
தகவுட னிருக்க வேண்டுமிவ் வருத்தி
தரித்திருக் கின்றதென் னுளத்தே. 61

வையக மறியா தும்மையா னறிவன்
மற்றிவர் தாமுமீங் கென்னை
ஐயநீர் வரவிட் டதையுநன் கறிந்தா
ராதலி னரியவும் மன்பு
மெய்யுற வென்னில் விளங்குதல் போல
விவருளும் விளங்குக வென்று
தெய்வமாக் குமரன் வெளிப்படை யாக
ஜெபித்தனர் சிந்தனை யுருகி. 62

வேறு.

தாதை யார்திருமு னம்ப ணிந்துசுத னின்ன வாறுபல தண்ணறும்
போத விழ்ந்துமது வார்ந்தெ னப்புனித வாய்தி றந்தினிய புத்துனா
ஓதி மானிடவு யிர்க்க ணங்கடிரி யேக நாதனையு ளத்துனி
ஆத ரத்தொடுஜெ பிக்கு மாறிதனை மாதி ரிக்கருள்செய் தாரரோ. 63

துருவ மீனின்வழி துருவி நண்ணுவர்தி ரைக்க டற்றுறைம ரக்கலத்
த்ருவி னொருண் மூர்த்தி சிந்தனையை யமுத வாக்கையவர் செயலை
[யுட்
கருதி நீக்கமற முன்னர் வைத்துவில காது நன்னெறிக டைப்பிடித்
துரிமை சேர்பரம பதம டைந்துநனி யுய்வ ருத்தமகி றிஸ்தவர். 64

தணிந்தி டாதுபரி சுத்த வாவியன றங்கு பத்தர்கள்ச தோதயம்
பணிந்தி டும்பிதய கார்மு கத்தைநனி பற்றி யன்புநெடு நாணியும்
அணிந்த ருஞ்செபமொ ழிக்க ணைக்குநம தாண்டை செங்குருதி யா
[ட்டியுட்
டணிந்து பக்திவிசு வாச மாம்பெரிய தோட்ப லங்கொடுதொ டுத்து
[மே. 65

நெட்டு யிர்ப்புவிசை மூட்டி யுன்னதநி லத்து லாவுபரி சுத்தருஞ்
சிட்ட ருந்தொழுபி ரானி ருஞ்செவிதொ ளைத்த ருட்டிருவு ளக்கடத்
துட்ட டும்பிநிறை கருணை மாநறவு குக்க வெய்துமகி ழோங்கவம்
மட்ட ருந்தியன வரத யின்பமெனு மாண்க ளிப்பினிடை வைகு
[வார். 66



அழிம்ப னேவுகன லஸ்தி ரங்களைய கற்று கேடகமெவ் வுலகமுந்
தொழும்ப ராபரன்வி ரும்பு கின்றபலி துய்ய ஜீவநதி நீர்தருஞ்
செழுங்கு டம்பரம நாய கன்றிருமு னஞ்செல் தூதுசெய்ப வங்களால் 67
அழுங்கு கின்றவித யத்துணின் றெழுநல்லாவி தந்தஜெப மாமரோ.

ஆன்ம ரக்ஷதனை நீவி ழைந்தனைகொல் கேள்பி தாவொடரு ளாளரிம்
மாநு வேலையு மறிதி யென்றுநசி யாத ஜீவநிலை மருவுவாய்
ஞான தேசிகனை யின்ற வாய்மையிஃ தன்றி வேறுவழி நாடுதல் 68
கான லம்புனலெ னத்து ணிந்தடவி யோடி யெய்ப்பதுக டுக்குமால்.

முத்தி வீடுபெற நித்த மானவொரு முத்த னைப்பாவு முத்தம
பத்தி யொன்றமையு மென்ப ரண்ணல்பரி சுத்த நீதியது பான்மையை
உய்த்து ணர்ந்தறிவு ருத மாந்தரிஃ தென்னை யாழிநடு வுற்றுழன் 69
றெய்த்த வந்தகன டுத்த நற்புணைவி டுத்தி ருங்கரையி றப்பனே.

நாச மேதருபொ லாத பாதகந யந்தி யற்றியப சாசன்யான்
ஈச னேபவந ராத்து மங்களையெ ரிக்கு மங்கியினி யென்செய்கேன்
ஏசு வேயெனது பாவ நாசருபி ரீந்த வள்ளலிவ ரென்றறிந் 70
தாசை யோடுவிசு வாசி யானர காக்கி னிப்புழுவ யின்றிடும்.

எவன்ற னைக்கொடிய பாவி யென்றுளமி சுக்க சந்துதய ரெய்துவான்
எவன்ற னக்குவரு தேவ கோபவழ லஞ்சி யோடவகை யெண்ணு
[வான்
எவன்ற னக்கழிவி லாத முத்திநல மெய்து மிச்சையதி யைந்துளான்
அவன்கி றிஸ்துவில்மெய் யன்பு கூர்ந்துவிசு வாசம் வைத்திடில டுக்
[குமே. 71

நாயி னுங்கடைய பாவி யேனையெரி நரக வாயினுற டுக்குறும் [ருள்
பேய்கொ டுங்கையினு நின்றி முத்தழிவில் பேற ளித்தபெரு மான
தாயி னுஞ்சதம டங்கு நேயமுறு தற்ப ரன்சரண மன்றியென்
வாய்ம றந்துதுதி யாது சென்னியும்வ ணங்கி டாதிருதி வரினுமே. 72

வேறு. (ஒலிவமலை.)

மன்ப தைக்கொரு மருந்துமாய் மருந்தென வருந்தும்
அன்ப ருக்கழி யாதபே ரின்பமு மாகி
என்பு ருக்கிடுங் கருணையா னேகநா யகனார்
முன்பி ரார்த்தனை செய்தபி னிகழ்ந்ததை மொழிவாம். 73

கத்து ருத்துவக் கடவுளின் கற்பனை கடந்து
சத்து ருத்துவ மாகிய தாரணி யோர்க்கு
மித்து ருத்துவம் பூண்டுள மேசியா தமது
மத்தி யத்தொழி லால்வருந் துயரொலா மதித்தே. 74

புனித நீதியும் பரமகா ருணியமும் பூத்த
முனைவ னின்னருள் வேண்டுவான் முழுதுணா ரகத்தில்
நினைவு கொண்டொலி வாசலச் சாரலி னின்ற
புனைம லர்த்தடஞ் சோலையை நோக்கினர் போனார். 75

ஊசி நூலென வுடனிழ லெனப்பிரி வின்றி
ஆசை யோடுபின் றொடர்ந்திடு மடியரோ டமுத
வாச கம்பல பேசியிம் மானுவேல் மலினக்
காசு றும்புனற் கீதரோ னாற்றையுங் கடந்தார். 76

மும்மை யாயவோர் முதலுக்கு நடுநின்ற மூர்த்தி
செம்மை சேருளங் கவன்றிடத் திருவுரு வடைந்த
வெம்மை யைச்சிறி தாற்றுவ லெனவிரைந் தெழல்போல்
விம்மு தண்சுடர் வீசிமே லெழுந்தவெண் டிங்கள். 77

எண்ண ருங்குணத் தெம்பிரான் மனுவுரு வெடுத்திம்
மண்ணு ளோர்வினை தொலைத்தல்போன் மையிரு டொலைத்து
விண்ணி னோங்கிய வெண்மதி வியன்கதி கூட்டும்
புண்ணி யம்மெனத் தண்ணிலாத் தாரைகள் பொழிந்த. 78

இரவி பாலொளி பெற்றிரு நிலமிசை யெங்கும்
விரிநி லாக்கதிர் வீசிய மதியமெய்ஞ் ஞானம்
பரம சூரியன் பாலடைந் துலகெலாம் பரப்பும்
குரவ ராமெனத் திகழ்ந்தது விசும்பிடைக் குலவி. 79

படைத்து நித்தமும் பாலனம் புரிகின்ற பரமன்
எடுத்த கோலமும் படுந்துய ரமுநினைந் தெறிநீர்
உடுத்த வையகத் துறுபொரு ளனைத்துமுள் ளுடைந்து
சடைத்து மேல்வெளுத் தெனநிலாத் தயங்கின வெங்கும். 80

ஆற்று நீரெலாம் பாலென லாயதவ் வாற்றை
ஏற்ற வாரிதி நீரெலாம் படிகமொத் தியைந்த
ஊற்ற மிக்குயர் கிரியெலாம் வைரமே யொத்த
தோற்றி ருங்கலை நிரம்பிய மதிச்சுடர் தோய்ந்தே. 81

வேதம் வேதியர் விட்புலத் தவர்விழைந் தேத்தும்
நாதன் சேவடி நடுக்குறு கல்லதர் நடத்தல்
தீது றும்பவ வினையெலாந் தேய்க்கவும் ஜெகத்தை
ஆதி நல்லற நிலையினி னிறுத்தவு மன்றோ. 82



எய்து துன்பத்தைப் பெருமையைச் சிறுமையை யெண்ணாத்
துய்ய வன்பினைப் பிறர்துயர் மேற்கொண்டு தோன்றித்
தெய்வ மாணடி சிவப்புறக் கானிடைச் சேறும்
ஐயன் பாலன்றி நமரங்காள் யாரிடத் தறிவீர். 83

இல்லை யில்லையோ ரிளக்கமும் பாவத்தா லிறுகி
வல்லு ருக்கினும் வைரத்தும் வலுத்தவென் னெஞ்சக்
கல்ல ரக்கிய திருப்பதங் கான்வழிப் பட்ட
புல்லி தாம்பரற் கொல்குமென் றெங்ஙனம் புகல்கேன். 84

## வேறு.

மண்டலம் புரிபவஞ் சுமந்த மாட்சியால்
அண்டர்நா யகனுளத் தாத்து மத்துயர்
கொண்டுபா டுகள்படக் குறித்துச் செல்லுமத்
தண்டகா ரணியத்தின் றன்மை யுன்னுவாம். 85

இருளெலாங் கதிரவற் கோட ழிந்துபோய்
ஒருவழித் தொக்குறைந் தென்ன வோங்கிய
தருநிழல் கதுவிய தண்ணந் தாதுகு
விரிமலர்ப் பரிமளம் வீசுங் காவனம். 86

தண்ணறுந் தடங்களாற் றடத்து லாங்கொழு
வண்ணவான் மீன்களான் மலர்ந்த கொம்பரால்
விண்ணுற நிவந்தெழு வியன்பொ தும்பராற்
கண்ணிணை களிப்புறுங் கடிகொள் காவனம். 87

விரும்புநற் குழலிபா டிசையும் வீழ்வுறச்
சுரும்பின முரலுமின் னிசையுந் துன்னரும்
மரம்பயில் புட்குலம் வழங்கு மோசையும்
நிரம்பலாற் செவிக்கின்ப நிறைக்கும் பூம்பொழில். 88

குளிர்தடந் தோய்ந்தலர் குலவு வாசனை
அளவிநன் னிழற்படிந் தசையுந் தென்றலால்
இளமரக் காவினின் றெறியுஞ் சாரலாற்
புளகுற மெய்விடாய் தணிக்கும் பூம்பொழில். 89

தெளிபுனற் றடங்களுஞ் செறிந்த மேகமும்
வளர்தருக் குலங்களும் வசந்த வாடையும்
உளேபரி யாதியா யுவந்திச் சோலைவாய்க்
குளிரா சிருத்தலாற் கோடை நாடலா. 90

திஙகரன் கதிரொளி சேர்கி லாமையாற்
கனவிரு ணிறைந்தவிக் காமர் சோலைதான்
புனிதநல் லாவியின் கதிர்பு குந்திடா
மனமென லாயபொய் மதமும் போன்றது. 91

உள்ளன வறியவர்க் குவந்து நல்குமவ்
வள்ளலுக் கிருநிதி வளஞ்சு ரத்தல்போற்
றெள்ளுதீங் கனிமுத லாய செம்பொருள்
கொள்ளினும் வண்பயன் குன்றி டாதது. 92

வண்டுகண் மலர்குடைந் தினிய மாநற
வுண்டிசை முரன்றுதா லாட்ட வொண்பொழிற்
றண்டலை சினைக்கர மசைத்துத் தாங்குறக்
கொண்டலங் குழவிவந் துறங்குங் கொள்கைத்த. 93

ஓடையுங் கோடையு மோடுங் கான்மலர்
வாடையும் வாடையு மலியும் புட்பரி
பாடையும் பாடையும் மயங்கும் பைம்புயல்
ஆடையும் மேடையு மணியுந் தாருவே. 94

பனிமகன் மழைமுழ வொலிக்கப் பாட்டளி
இனியதே னமுதமுண் டிசைக்கக் கற்பக
நனைவிரி நறுந்தொடை சூட்டி நல்லெழில்
வனமடந் தையைமணம் புரிவன் வைகலும். 95

அனவர தமுந்திரு மொழியை யன்பினால்
நினைவினி லுன்னியந் நிலையி னிற்பவர்
நனிசெழித் திடுதல்போ னறுந்தெண் ணீர்க்கரைப்
பனிமலர்த் தருக்குலம் பயன்கொண் டோங்குமே. 96

படருமுந் திரிகொழு கொம்பு பற்றியே
கெடலரு நறுங்கனி கிடைத்த தோற்றமெய்த்
திடவிசு வாசமோ டையன் சேவடி
அடைபவர் நடையினை யடுத்துக் காட்டுமால். 97

சந்தத முடங்குதா டளைக்க ணூன்றிநின்
றந்தர நோக்கியே யலர்க்கண் ணீர்சொரி
கந்தமல் லிகையுளக் கசிவோ டண்ணருள்
வந்தனை புரிபவர் செயலை மானுமால். 98



வேறு. (ஆத்தும வேதனை.)

இனையன வளங்கொண் டோங்கி யிறும்புசூழ் கிடந்த வந்தப்
புனைமரக் காவின் பாங்கர் பொலன்கெழு கெதுசே மென்னும்
நனிசிறந் தொப்பி கந்த நறுமலர்ச் சோலை கண்ணுற்
றனகனு மன்பின் மிக்க வடியரு மாண்டு புக்கார். 99

சோலைவாய் விளைந்த பாவச் சுமைசுமந் ததனா லிந்தச்
சோலைவா யணைந்து தேவ சுதன்றம தாத்து மத்தில்
மூலகா ரணமாய் நிற்கு முழுமுதன் முனிவு தாங்கிச்
சாலநோ வடைந்து தீர்த்தல் தகுதியென் றடைந்தார் போலும். 100

காரிருண் மலிந்த வந்தக் கடிபொழிற் சுருங்கை தோறுந்
தாரகா பதியின் கற்றை தவழ்ந்தொளி தயங்க வாங்கே
ஆருட் டரும மூர்த்தி யடுத்தமை யண்ண லாவி
சீருறத் திகழு மன்பர் சிந்தையுட் சேறல் போலும். 101

செழுமலர்ச் சோலை யோங்கு சினைதொறு நிறையப் பூத்த
கொழுமுகை யவிழ்ந்து செந்தேன் குளிர்நறுந் துளிவார் காட்சி
அழகிய மணவா ளன்ற னகத்துவந் தடையு மான்மக்
கழிதுயர்க் கிரங்கிச் சிந்துங் கண்ணினீர்த் தாரை போலும். 102

பொழிலுறு பறவை யாவும் புண்ணிய மூர்த்தி வந்து
கழிதுய ரடைவ ரென்று கருதின கொல்லோ கங்குல்
வழிவரு மியற்கை தானோ வாய்விடா தொழிந்த வண்பூந்
தழையெலாங் குழைந்து சாம்பித் தருக்களுஞ் சடைத்த மாதோ. 103

முத்தமி ழாதி பாடை முழுதுணர் கவிஞ ரேனும்
வித்தக னடைந்த வான்ம வேதனை யினைய வென்று
வித்தரித் துரைக்க வல்லா ரல்லரிம் மெய்ம்மை தேர்ந்தும்
பித்தரிற் பிதற்று கின்றேன் பேதைபே ராசை கொண்டே. 104

எங்கணா யகன்பூந் தோட்டத் திறுத்தபின் கருணை பூத்த
பங்கஜ விலோச னத்தாற் பாங்குறுஞ் சீட ரெண்மர்
தங்களை நோக்கி யான்போய்த் தனிஜெபம் புரிந்து மீள்வல்
இங்கிரு மென்னச் செவ்வா யிதழ்திறந் தியம்பிப் பின்னர். 105

கிரிமிசை முன்னர்த் தம்மைக் கேழ்கிளர் மகிமை யோடு
தரிசனஞ் செய்த மூன்று தாஸரை யுடன்கொண் டேகி
ஒருசிறை யுற்றுத் துன்ப முறுவதற் குரிய தான
நரசுபா வத்திற் பாடு நயந்தனு பவிக்க லுற்றார். 106

வாக்கினுக் கதீத மான மகிமையை யிழந்துங் கன்னி
பாக்கிய வயிற்றிற் கர்ப்பப் பையுளே பழங்க ணுற்றும்
ஆக்கமற் றேழை யாகி யலைந்துஞ்சற் றவியா தோங்கி
மீக்கிளர் தேவ நீதி வெந்தழல் குளிப்ப தானார். 107

மட்டறு கருணைத் தாதை மகத்துவ புனித நீதிப்
பட்டய மெழும்பி யாவி பதைக்கவூ டுருவிப் போக
முட்டிய தேவ கோப முழங்கனன் முடுகிப் பொங்கிச்
சுட்டிடத் தூய வுள்ளந் துடிதுடித் ததுதண் ணென்றே. 108

தடித்திடு கரிய மேக சாலங்கள் ககன கோளத்
திடித்தெழுந் துகாந்த காலத் திரவியைப் புதைத்தா லென்ன
மடித்திடு மகோர பாவ வாதனை யொருங்கு கூடிப்
பிடித்திட நீதா தித்தன் பேரொளி யிழந்த தம்மா. 109

பாபத்தின் கூலி நித்ய பயங்கர மெனத்தே ராது
மாபத்து விதியை மாந்தர் வரைந்திட வெழுந்த தேவ
கோபத்தின் மிகுதி யாலே கூடிய குரூர மான
சாபத்தின் றிரள்க ளெம்மான் றலைமிசை விழுந்த வன்றே. 110

மண்ணுல கனைத்துந் தீக்க வானிடைக் குமுறி நின்ற
அண்ணலா ருக்கிர தண்ட மாகிய வசனிக் கூட்டந்
தண்ணளி சுரக்கும் ஜீவ தாரக மாம்ர க்ஷண்ய
புண்ணியப் பொருப்பின் மீது பொருக்கென வுரறி வீழ்ந்த. 111

வெந்துய ரென்னுந் தாப மிகுகனன் மூள மூளச்
சுந்தரக் குமா ரனாவி துடித்துள முடைந்து சோர்ந்து
நைந்தனன் மெழுகு போல வுருகியே குடரி னுப்பண்
சிந்திய தென்னே யேது பாவியேந் தீமை யன்றோ. 112

அன்றொரு சிமயத் துச்சி யலர்கதிர் ஞாயி றென்னத்
துன்றொளி விரித்த ஜோதிச் சுடர்த்திரு முகங்கு ருவி
நன்றிலா மாந்த ரீட்டும் லஜ்ஜையா னுண முற்றுப்
பொன்றிய வதனம் போலப் பொலிவிழந் திருந்த தின்றே. 113

அருண்மகோ ததியிற் பூத்த வாவிந்த மமுத தாரை
சொரிதரா நித்ய ஜீவ சுருதித்தேன் றுளித்த தெய்வ
மருமலி குமுதப் போது வாயறப் புலர்ந்த தாலும்
உரைதர வரிதாய் மீயுற் றொடுங்கிய துரைக்கற் பாற்றோ. 114



அன்புரு வான நம்பிக் கருந்துமா கார மான்ம
துன்பமே பருகும் பானஞ் சொரிகனீ ராத லாலே
என்பெலாங் கட்டு விட்ட தெழிற்றிரு மேனி வாடித்
தன்பல மோடு போலக் காய்ந்தறச் சலித்த தம்மா. 115

கெந்தக நாறிச் சாவாக் கிருமிகள் கெழுமி நித்ய
வெந்துயர்க் குறையு ளாகி மிகக்கொதித் தெழும்புங் கும்பிச்
செந்தழற் கொழுந்து வீசி ஜெகதலம் புரக்க வந்த
சுந்தரன் றுய்ய மேனி துவண்டதோ வுறிகி லேமால். 116

தாங்கரும் பாவ பாரஞ் சமழ்த்திடு மொருபா னீதி
ஓங்கிய கட்க நெஞ்சை யுருவினின் றுடற்று மோர்பால்
வீங்கிய தேவ கோப வெங்கனல் வெதுப்பு மோர்பால்
நீங்கரு மரணங் கிட்டி நெடுந்திகில் விளைக்கு மோர்பால். 117

பயங்கர மரண பாசம் பிணித்தலாற் படருண் மூழ்கி
இயங்குறு புலன்க ளெல்லா மொடுங்கின விந்தி யங்கள்
மயங்கின மனாதி யந்தக் கரணங்கள் மருண்டு மாழாந்
தயங்கின வவய வங்கள் மற்றினி யுரைப்ப தென்னே. 118

முழங்கெரி நடுவ ணுய்த்த முருகுலா மலங்கல் போலுந்
தழங்குவெண் டிரைவா யுற்றுத் தளர்ந்துழல் கிரணம் போலும்
பழங்கணுக் குடைந்து தேம்பிப் பரிவுறீஇப் பாருக் கின்பம்
வழங்குவான் றுணிந்து வந்த மானுவேல் வருந்தி னால். 119

கணந்தொறு மினைய துன்பங் கதித்திடக் கருணை யென்னுங்
குணங்குடி யிருந்த சிந்தைக் குரிசிலுட் கோட்ட மின்றி
இணங்கின ரலமர் தேங்கி யிடர்க்கடற் கெல்லை காணா
துணங்கிவெய் துயிர்த்தா ரமாந்த ருயிர்க்குயி ராகி நின்றார். 120

ஒருசிறு பவத்தா னித்ய வூழித்திக் கடற்குண் மூழ்கிப்
பரிபவ மடையும் ஜீவன் பாருல காதி யந்தம்
புரிபவ வாதை யெல்லாம் புனிதனிப் பொழுதி னுக்குள்
ஒருதனி யடைய வென்று லதன்றிற முரைப்பார் யாரே. 121

பாருண்ட பாவக் கொண்டல் படர்ந்துவெ தனையா மாழி
நீருண்டு பொழிந்த நீத்த நீடிய மரண வாற்றிற்
சீருண்ட பெருமா னென்னில் ஜீவனை யிடுக்கி நீந்தி
ஈருண்டு தவிர்த்துங் கைவிட் டிலர்தனி யிடப்பட டாரால். 122

நலனுறு நித்ய செல்வ நல்குர வதனி னின்றும்
அலகிலா நித்யா னந்த மரியவே தனையி னின்றும்
இலகுறு நித்ய ஜீவ னிழிமர ணத்தி னின்றுங்
குலவிவந் துதித்த தன்றேற் கும்பிநங் குடியா மன்றே. 123

சொல்லரு மரணே பாதிச் சுடுகனற் சுவாலை மீக்கொள்
எல்லையி றுன்ப மென்னு மெறிதிரைக் கடலுண் மூழ்கி
அல்லலுற் றழுங்கி யந்தோ வருட்கும ரேசன் றுதை
தொல்லையன் பிதயத் துள்ளித் தனித்தொரு சூழல் புக்கு. 124

காலிணை முடக்கி யந்தக் காணத்தை யொடுக்கி யன்பின்
சீலமே திகழுங் கஞ்சத் திருமுக நிலத்திற் சேர்த்திக்
கோலமார் தடக்கை கூப்பிக் கும்பிட்டு விழிநீர் சோரச்
சாலவும் பணிந்து தீன தயாளரின் னருளை நாடி. 125

அப்பனே யெல்லா மும்மா லாகுமிவ் வவஸ்தை யார்ந்த
கைப்புறு பாத்தி ரத்தைக் கழித்திடக் கருத்துண் டாயின்
அப்படி யாக வன்றே லையவென் சித்த மன்று
மெய்ப்படு முமது சித்தம் விளைந்ததே யாக வென்றார். 126

இம்முறை யாக் மேனி யிரத்தவே ரொழுகு மாறு
செம்முறை திறம்பாத் தூய சிந்தையுள் ளுடைந்து தேம்பி
மும்முறை பிதாவைக் கிட்டி ஜெபித்தனர் முனிவொன் றின்றி
எம்முறை பாட்டிக் குள்ள மிரங்கியா தரிக்கு மீசன். 127

அத்தனைக் கருதிக் கூவு மளவையி லடுத்தோர் தூதன்
சித்தசஞ் சலத்தை யாற்றித் தேற்றினன் சென்று னுக
இத்தரா தலத்து மாந்த ரெவரையும் புரக்க வந்த
வித்தகப் புனித மூர்த்தி யெழுந்தனர் விமலற் போற்றி. 128

உலகினுக் கிரக்ஷை நல்கு மொருதனி நடுவ ராவிக்
கலகறு துன்ப மாய கடுவிட மருந்தி யின்னும்
விலகில தாகி யேன்மேல் வேதனைப் பகழி சிந்தி
இலகரு ளுருவ மாய்க்க வெதிர்ந்தது கடவு ணீதி. 129

வேறு.

பேசரிய பெருந்துன்பப் பிரளயவெங் கனல்கொளுத்தப் பேதுற் றந்
[தோ
ஆசகன்ற புனிதமனத் தலக்கணுறுந் திருக்குமரன் னன்பை யாய்ந்தும்
நேசவொரு மகவென்றுங் கருதாது தகித்தவான் நீதி கண்டும்
பாசவினைக் காணாகி நாசமுறாத துணிவதறப் பாவம் பாவம். 130



வேறு. (கட்டுண்டேகல்.)

ஆத்துமவ வஸ்தைசிறி தாறியரு ளுதன்
மாத்தகைய நம்பனைவ ழுத்திவழி தேகி
ஆத்தனாயு ணர்த்தியில னின்றகறு மென்னாத்
தீத்தொழிலர் வந்துபுரி தீவினைதெ ரித்தார். 131

அந்தவமை யத்தசட ராயவர்வி டுப்பப்
பந்தமொடு பல்வகைய வேதிகள்ப ரித்து
வெந்தறுக ணாளர்பலர் வல்விதின்வி ரைந்து
வந்தனர்யு தாசொடும ருங்குறநெ ருங்கி. 132

நஞ்சமனை யான்கடுகி நம்பனொரு பேரும்
மஞ்சனைய டுத்திரபி வாழ்கவென முத்தி
வஞ்சனையு ணர்த்தலும காகருணை வள்ளல்
விஞ்சியது ரோகிமுக நோக்கியிது விள்ளும். 133

அடுக்கவரு மித்திரவ கத்துளதென் னீண்டு
கடுக்கிவரு வஞ்சநெறி யாளர்கையிற் காட்டிக்
கொடுக்கவெனை முத்தமிடு கிற்றிகொல்கு றித்தென்
றடுக்குநவெ லாமறியு மாண்டகைமொ ழிந்தே. 134

வேடுவரொ டுவருறும் வெய்யவரை நோக்கித்
தேடுவதி யாரையென லோடுநெறி தீயர்
நாடுவமி யேசுநச ரேயனையெ னுநான்
தேடவிர்வே ருருமல னென்றிறைதெ ரித்தார். 135

நானவரெ னுவிறைந விற்றிமுடி யாமுன்
ஆனவரொ ருங்குயிர விந்தனர்கொ லாமென்
றானிவரு டற்பொறைநி லத்துற வுருண்டார்
ஏனவா யிர்த்திதுவெ னென்றுதிகி லுற்றார். 136

பூரியர்வி ழுந்தழிபு ணர்ப்புநடு நின்ற
காரியமு டிக்கவரு கன்னலின னித்துஞ்
சீரியம றைப்பொருள்தெ ரித்திடுக ருத்தும்
ஆரியனி னைத்தனரு ருட்டிருவு ளத்தே. 137

அய்யரிஃ துள்ளுமனு க்கிரக சத்தி
ஒய்யெனவு லாய்த்துயிலொ ழித்தெனவு ணர்ந்த
வெய்யவரெ ழுந்தழல்வி ழிக்கடைசி வக்க
மெய்யுயிரை வாதைபுரி வாமெனவெ குண்டார். 138

ஜீவாதி பன்கருணை மல்கியதி றத்திற்
சாவாதெ ழுந்தமையு ணர்ந்திலர்ச ழக்கர்
கூவாவ கந்தைமொழி சிற்சிலகு ரைத்துத்
தேவாதி பன்றனைநெ ருக்கினர்செ ருக்கி. 139

உருத்தெதிர்பி ணிக்கவரு மொன்னலரை யுங்கள்
கருத்தெனைய டர்ப்பதெனி லிங்கிவர்க லங்க
வருத்தலிர்வி டுத்திடுமி னென்றுமறை வாய்மை
பொருத்தமுறு மாறுநம தாண்டகைபு கன்றார். 140

வேதமுத லின்னணம்வி ளம்புமமை யத்தே
பாதகர்பி டித்துடல்பி ணிக்கும்வகை பாராப்
பேதுருசி னந்தெரிபி றங்குகதிர் வாளாற்
காதறவெ றிந்தனனோர் காதகனை வெம்பி. 141

ஆங்கதைய றிந்துதம தன்பன்முக நோக்கி
ஈங்கிதுகொ லோவறவி யற்கையெவ ரேனும்
ஓங்குசுரி கைத்தொழிலு வப்பினத னாலே
நீங்குவர்தம் மின்னுயிரு மன்றிநெறி யின்றால். 142

ஆண்டகையை வேண்டிடுவ னாயினரு ளார்கோல்
ஈண்டொருக ணத்திலோரி லக்கமுறு தூதர்
வேண்டுகிலன் யானதுவி ழைந்தியலு வேனேற்
காண்டகைய வேதமொழி மெய்ம்மைகவி னுங்கொல். 143

மாத்தகைய தந்தைதரு வன்றுயர்ம லிந்த
பாத்திரமி திற்பருகு பான்மைதக வேயென்
றேத்தரிய புண்ணியமி ழைக்குமரு ளாதன்
ஆத்தமுறு தொண்டரைய மைத்திவைவி ளம்பும். 144

மாண்டகக ளூர்மனைம டங்கள்பொது மன்றம்
நீண்டமறு காலயமி டங்கடொறு நின்றே
காண்டகைய போதனைக ருத்துறவி சைத்தேன்
ஆண்டெனைவி டுத்தனிரி தென்கொலும தச்சம். 145

கள்ளிரவி லேகுழுமி நாந்தகம்வி திர்த்துக்
கொள்ளிதிக ழத்துருவி வந்தனிர்கு றிப்பென்
கள்ளுநர்க ரந்துறைதல் கண்டுபிடிக் கின்ற
உள்ளமுடை யீர்கொலென வுள்ளவரு மாலோ. 146



ஞாலமிசை யேகருவி யாகவுமை நாடிச்
சாலமிகு தீயலகை தன்னெணமு டிக்குங்
காலமிது வாதலின டர்ந்தனிர்க டுத்து
மேலினிவி ரும்பியவி தம்புரிமி னென்னா. 147

வேதமுத னாதனனி வேதனையு ழக்குங்
காதறைநி றத்தருள்க னிந்துமட லொட்டி
ஆதரவ ளித்தனர்கி றிஸ்தவவ டர்க்கும்
பாதகரொ னாதுபுரி பூதகமை பாராய். 148

மூத்தருமை பன்றியறி யுங்கொன்முறை தோராப்
பித்தாது போலறிய கிற்கிலர்பி ரானங்
குய்த்தவுத வித்திறனை யொல்லைகொடு போனார்
வித்தகவி வேசனவி யோமனைவி சித்தே. 149

வல்லியம்வெ ரீஇயிரிம டங்கலரி யேற்றைக்
கொல்லியவ லைந்துபல குக்கல்கள்கு ரைத்துச்
செல்லியவெ னப்புடைசெ ருக்கினர தேவைப்
புல்லியரி கழ்ந்துபல பேசிநெறி போனார். 150

மெய்ப்படுத வச்சுருதி வித்தககி றிஸ்து
பொய்ப்படும னக்கொடிய புல்லியர்பி ணிப்பிற்
கைப்படுத லும்பாவு தொண்டர்கள்க லங்கி
மைப்படுபொ ழிற்கிடைநு ழைந்தனர்ம றைந்தார். 151

தெள்ளமுத வாய்மொழிச்செ விப்புலனு கர்ந்துங்
கள்ளமில்ப லற்புதம்வி ழித்துணைகள் கண்டும்
உள்ளுறநன் மாதிரியு றைத்துமடி யார்பாற்
பிள்ளைமைபி றங்கல்பிற விக்குணபி ராந்தி. 152

திருவுளம்வெ றும்பினோர்க ணத்தினிடை தீயுஞ்
சருவவுல கங்களுமெ லுந்தகைமை சான்ற
ஒருவருரை யாடிலர்மற் றொன்றும்வினை யுன்னித்
திருவடிவ ருந்தவிட ரோடுநெறி சென்றார். 153

பிணித்தவித மாநமபெ ருந்தகையை வெய்யோர்
அணித்துறவ ளைந்தொலிவ வாரணிய நீத்து
மணித்தவள மாடநிரை மல்கெருச லைக்குள்
குணித்தமனை நாடிமறு கூடுகொடு போனார். 154

(காய்பா முன்னிலை.)

வாசால கன்றினமு மாலயம ரீஇச்செய்
பூசா கைங்கிரிய போதனது போழ்துக்
காசாட பூதிமறை யந்தணரின் முந்தும்
மாசாத கன்காயி பாசெனுமோர் வன்மி. 155

மூர்க்கனாமு கப்பர்பல மூர்க்கரெனல் போலுந்
தீர்க்கருரை நாடியறி யார்பலர்தி ரண்டு
சீர்க்குணமி லானுறையுள் சேர்ந்துதிரை யாழி
தூர்க்கமுயல் வாரின்வழி தியோசனைது ணிந்தார். 156

இங்கிவர்போ லாங்குபுரி யெண்ணமிடு மெல்லை
நங்களரு ளுதனைந ராந்தகர்கொ ணர்ந்தே
சங்கமற வோரெதிர்நி றுத்தவொரு தானுந்
துங்கவுல காதிபரு நின்றனர்சு சீல. 157

எல்லையில்பல் கோடியுல கங்களையி மைப்பிற்
கல்வியெறி வார்மறிக ழுங்கெனநி லாவ
நில்லெனநி றுத்துவரி யக்கிடுவர் நீரூ
ஒல்லையெரி யுண்டொழியு மோரிவரு ருப்பின். 158

கோடிரவி போலொளிகு லாவுசமு கத்தில்
நீடுபுவி மாந்தரனை வோரையுநி றுத்திப்
பீடுபெறு நீதிமுறை பேசுகும ரேசன்
பாடுறவி ரீசர்முன நிற்குநிலை பார்மின். 159

மன்பதைக ளுக்குருகி வான்பதம்வ ணர்ந்து
துன்புமிடி நிந்தைசுடு சொற்சுடவி மூத்தி
வன்புலையர் முன்பதம்வ ருந்தும்வகை விட்ட
தன்பிதில றக்கொடிதி யாதுபிறி தம்யா. 160

அன்பிலர்த மக்குரிய ரன்புடைய ராக்கை
என்புமுரி யார்பிறருக் கென்னுமுனா யெம்மான்
தன்புடைய லாதெவரிற் சான்றுபடு மாயின்
முன்புமிலை பின்புமிலை மூதுலகின் மாதோ. 161

பாசமென வுன்னலிர்பி ணித்தமைப கைத்த
நீசமனு மக்களைநி னைத்துருகு மன்பின்
நேசமெனும் வல்லியதை நீக்கவச மின்றி
ஈசன்மக னின்றனரோ ரேழையென வோர்மின். 162



வேறு.

விண்ணிழி மதிய மென்ன வேதவே தாந்த மூலப்
புண்ணிய மூர்த்தி யந்தப் புல்லிய குழுவி னுப்பண்
நண்ணிய பரிசை யோர்ந்து நலமிலாக் காய்பா சென்னுங் 163
கண்ணிலான் கருதி நோக்கிக் கனன்றிது கழறு கின்றான்.

எண்டகு வேத நூலின் முறைமையை யிகந்த நேகர்
தொண்டுனக் காகு மாறு துணிந்துசில் லுபதே சங்கள்
விண்டனீ யவற்றை யீண்டு விள்ளுதி தெரிய வென்று
கண்டகன் வினவக் கேட்டுக் கருணையெம் பெருமான் கூறும். 164

புனிதவா லயத்தும் வீதிப் புறத்தினும் பொதுமன் றத்தும்
மனிதஜீ வனுக்கீ டேற்றம் வழங்குமெய்ச் சுருதி வாய்மை
நனிதிக ழுபதே சத்தை நவின்றனென் னெவர்க்கு நாடி 165
இனிதுகேட் டுய்ய வேதும் ரகசியத் திசைத்த தின்றால்.

மேவர வென்பா னீவிர் வினவுவ தென்னே யான்சொல்
ஜீவவாக் கதனைக் கேட்டோர் செப்புவர் கேண்மி னென்னுத்
தாவில்சீ ரமலன் சாற்று மளவையிற் றலைவன் கூற்றுக் 166
காவதிவ் விடையோ வென்ன வழன்றங்கோ ரசடன் சீறி.

யாதென வியம்பு கிற்கே னேழைநா வெழும்பி யீசன்
மாதயா ரூப மான மானுவேல் வடிவஞ் சேப்ப
நோதக வறைந்தா னந்தோ நோன்பிலே மிழைத்த பொல்லாப் 167
பாதகத் துருவம் வாய்ந்த பனைநெடுந் தடக்கை யோச்சி.

ஆங்கவன் றுணிந்து கண்ணின் றநீதியாய்ப் போத மின்றி
ஓங்கியுள் ளகங்கா ரத்தா லடித்தலு முலப்பில் பெம்மான்
தீங்கணு காத தூய திருப்படி வத்தா னோவு 168
தாங்கினின் றருளி நோக்கிச் சமித்துமற் றிதனைச் சாற்றும்.

உள்ளதை யுள்ள வாறே யுரைத்தன னதினி யாயக்
கள்ளவா சகமுண் டேனீ காட்டிடல் வேண்டு மன்றி
எள்ளியிங் கெனைய டித்த னடுநிலைக் கிசையத் தக்க 169
ஒள்ளிய செயலோ வென்றா ருலகெலா முய்ய நின்றார்.

நடுப்புரி நம்ப னீது நவிற்றலு நாச வஞ்சக்
கடுப்பயில் மனத்த ரெல்லாங் கவன்றினிக் குற்றஞ் சாட்டி
வடுப்படுத் திவனைக் கோறும் வகையெது வென்று தம்மைக்
கெடுப்பதே கரும மாகப் புறம்புபோய்க் கேடு சூழ்ந்தார். 170

கொலைக்களப் படுத்த வல்ல குற்றங்க ளிவன்பா லுண்டென்
றுலைக்கருஞ் சான்று சொல்வா ரெவரென வுசாவுங் காலை
புலைக்குணப் பதிதர் சில்லோர் பலபடப் புகன்ற பொய்ச்சான்
றலைக்கலை யழிவு மாபோ லொன்றையொன் றழித்த தன்றே. 171

அந்தவோ ரையிலே பொல்லாங் கறிதுமென் றிருவர் பொங்கி
இந்தவா லயத்தை யானே யிடித்தொரு மூன்று நாளில்
விந்தையாய்ச் சமைப்ப னென்ன விளம்பிடக் கேட்டோ மென்றார்
தந்திரத் தவர்கொ லைக்குத் தக்கசான் றிதுவன் றென்றார். 172

பற்பல வுபதே சத்தைப் பலபடப் பழுது கூறி
அற்புத கிரியை யாவு மபத்தமென் றழிம்பு பேசும்
கற்பித மாய கட்டுக் கரியெலாங் கரிந்த வம்மா
எற்படு பகலைச் சில்லோ ரிரவென்றா லிளையுங் கொல்லோ. 173

சான்றுவே றில்லை யென்னத் தம்முளே கவன்று சங்கத்
தான்றவர் மறுத்து முந்தை யரங்கணைந் தமர வம்மான்
தோன்றலைக் காய்பா சென்னுந் துர்ஜனத் தலைவன் கண்கள்
ஊன்றிநின் றுருத்து நோக்கி யிவையிவை யுரைப்ப தானான். 174

வேதியர் பலரு னக்கு விரோதமா யுரைத்த சான்றுங்
கோதற விருவர் வந்து கூறிய வாய்மைக் கூற்றும்
ஈதிது வாக நீசொல் லெதிர்மொழி யேது மின்றோ
ஓதுநி யுளவே லென்றா னுரைத்தில ரமல னொன்றும். 175

பின்னருஞ் சினந்து மேலாம் பெருந்தகை யாய பெம்மான்
தன்னொரு நாமத் தாணை சாற்றுதி யுண்மை நீயப்
பன்னரும் ஜீவ னுள்ள பராபரன் புதல்வ னான
உன்னருங் கிறிஸ்து வோவென் றுசாவினன் கபட மாக. 176

தூயநல் லுரையுந் தேவ தோற்றமுஞ் சுகிர்த மாண்பும்
நாயினுங் கடைப்பட் டேமை நயந்துபா ராட்டு மன்பின்
நேயமு மெதிரி னின்று நிகழ்த்துசான் றமையா தென்ன
மீயுய ராணை கூறி விசாரிக்கு முறைமை யென்னே. 177

கண்ணுளார் கண்டுங் காணார் காதுளார் கேட்டுங் கேளார்
எண்ணிரு தயத்தி னாலு முணர்ந்திடா ரிவர்மற் றென்ற
புண்ணிய வசனம் யாண்டும் பொய்க்குமோ வருளோன் றின்றேன்
மண்ணுளார் பொறியு மந்தக் கரணமு மண்ணே யன்றோ. 178



பொறிபுல னொருங்க நோற்றுப் புதுமைசெய் புலவ ரேனும்
வெறுமையிற் றிகழ்வ ராயில் வெறுத்தவ மதிக்கு மொல்லை
சிறுமைதீர்ந் துயர்வு காணிற் சேவடித் தொழும்பு செய்யும்
எறிதிரைப் பரவை ஞால மேழைமை யுடைத்து மாதோ. 179

இறைவன்மே லாணை மற்றீ தியம்பு[illegible] னிசைத்த மாற்றம்
மறைமுதல் கேட்டுத் தெய்வ மைந்தனுங் கிறிஸ்து நா[illegible]
தறையிலித் தகைய னேனுந் தாதையின் வலப்பா கத்தும்
முறைபுரி நடுநாட் கொண்மூ முற்றத்தும் விளங்கக் காண்பீர். 180

ஒளிப்பற நியாய முங்கட் குணர்த்தினு முணரீர் யாவும்
வெளிப்படை யாய போதும் விசுவசித் திடுவீ ரல்லீர்
அளிப்படா மனத்தீ ரென்னா வறத்துறை யமுது மல்கித்
துளிப்படு குமுதச் செவ்வாய்த் துவரிதழ் விண்டு சொன்னார். 181

வன்மனக் காய்பா சோடு சூழுற்று மருங்கு தொக்க
கன்மனத் தவரு மையன் கழறிய செஞ்சொற் றோரார்
அன்மதி யாகத் தேவ தூஷணஞ் சொன்னா யென்னாப்
புன்மொழி பலவா றாகப் புகன்றனர் வெகுளி பொங்கி. 182

எம்பிரா னுரைச்சஞ் சீவி யிருந்தவப் பதிதர்க் கெல்லாம்
வெம்புதீ விடம்போ லாகச் செவித்தொளை வெதும்பிற் றென்னில்
நம்பினோர்க் கெல்லாம் ஜீவ வாசனை நல்கு நம்பா
வம்பருக் கென்று நீங்கா மரணவா சனையா மன்றோ. 183

காயிபா சென்னும் பொல்லாக் கடினவன் னெஞ்சன் வஞ்ச
மாயமூ டியமே லங்கி வல்லையிற் கிழித்துத் துக்கம்
மேயவன் போல நின்று வேறுசான் றினிவேண் டுங்கொல்
நீயிரே யிவன்வாய் சொற்ற நிமலதூ ஷணங்கேட் டீரால். 184

மற்றினி யுரைப்ப தென்னே மதிவலீ ரிதனை யொத்த
குற்றம்வே றுளது கொல்லோ குறித்திடிற் கூறிற் றெல்லாம்
எற்றெனக் கருது கின்றீ ரேற்றதண் டனைதான் யாது
தெற்றெனப் பகர்மி னென்றான் தீவினை திருத்த நின்றான். 185

நன்றிலா னுரைத்த மாற்ற நடுவிலர்ச் சங்க மேய
புன்றொழில் யூதர் கேட்டுப் பொருக்கென விவனை யின்னே
கொன்றுயிர் களைவ தல்லாற் குறிப்பிடு தண்டம் வேறொன்
றின்றென வுரக்கக் கூவி யிரைந்தன ரிகலி மாதோ. 186

உலப்பிலா வாதி மூலத் தொருபரம் பொருளென் றன்னைப்
புலைப்படு மனத்த ரேனும் புரையிலா வொருவற் பற்றிக்
கொலைப்படுத் துகவென் றிட்ட கூக்குரல் குறித்து நோக்கில்
அலப்புறீ ருடுத்த வையத் தழிம்பினுக் கவதி யுண்டோ. 187

எண்ணிய வெண்ணம் [illegible] தென்பதோ ரேம்பல் விஞ்சிக்
[illegible] தலைவ னேகக் காவல்செய் திருந்த கள்வர்
புண்ணிய மூர்த்தி தன்னைப் புறக்கணித் தகந்தை யோடும்
நண்ணியா கடியஞ் செய்ய நாடினர் நிந்தை பேசி. 188

பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை யென்னுங் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மா னிருதயத் தூன்ற வூன்ற
வேதனை யுழந்து சிந்தை வெந்துபுண் பட்டா ரல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி. 189

மறுமையு மிம்மை தானு நோக்கிலா மடமை பூண்ட
குறுமையோ ரமலன் றாய குணத்தையெட் டுணையெண் ணாது
வெறுமையை நினைத்துத் துன்பம் விளைத்தனர் மேன்மே லாகப்
பொறுமைகண் டெள்ள லிந்தப் பூதலத் தியற்கை யன்றே. 190

கறுத்திடி லுலக மெல்லாங் கவிழ்ந்தழிந் தொழியு மேனும்
பொறுத்தன ரிருந்தார் தாஞ்சொல் புத்துரைக் கொருசான் றாக
ஒறுத்திடு மதுகை மிக்க வுரனுடை யாள னுள்ளம்
பொறுத்திடும் பொறையை யன்றே பொறையென்பர் புலமை மிக்
[கோர். 191

திருந்திய செவ்வி வாய்ந்த திருமுகத் துமிழ்ந்தார் சில்லோர்
வருந்துற வடித்தார் சில்லோர் மலர்த்திரு வதனஞ் சேப்பக்
கருந்தடங் கண்ணைப் பொத்திக் குட்டினர் சிலர்கை யோங்கிப்
பெருந்தகாய் யாவ ரென்னப் பேசுகென் றிகழ்ந்தார் சில்லோர். 192

(பேதுரு மறுதலித்தல்.)

விடியுமட் டிறைவன் றாய மேனிநொந் தல்சி யுள்ளந்
துடிதுடித் திவ்வா றுகத் துயருழந் திடையுங் காலை
கடிமனை முன்றி னின்று கன்மலை யெனப்பேர் பெற்ற
அடியவன் குளிருக் காற்று தனன்முகத் தமர்ந்தா னிப்பால். 193

ஆங்கவன் றன்னைக் காணு வயலுளார் யாவ னீயத்
தேங்கமழ் சோலை வாயிற் சேசுவோ டிருந்தா யன்னோன்
பாங்குறுஞ் சீட ருக்குள் ளொருவனீ போலும் பார்க்கில்
ஈங்குநின் னுரையே சாக்ஷி யியம்புகின் றதுமற் றென்றார். 194



ஒருமுறை போல மூக்கா னுசாவனு மச்சத் தாலே
திருமுறை யறிந்த சீடன் சிந்தனை கலங்கி யந்தோ
குருமுறை நிறுத்த தூய குமரனை யறியே னென்று
வருமுறை தோரான் மூக்கான் மறுத்தனன் மருண்டு மன்னோ. 195

வேறு.

மன்னுங் கருணைப் பெருநிதிய வைப்பை யறியே னெனமறுத்துக்
கொன்னே மறங்கூர் பொய்யாணை கூறிக் கடிய கொடுமொழியால்
அன்னோ தன்னைச் சபித்திடவு மமைந்தா னென்னில் யாவரினித்
துன்னு மிடருக் கலசாமே யுண்மை மொழியுந் துணிவுள்ளார். 196

மூக்காற் கலங்கி மறுதலித்து மூடிய விரண்டா முறைசேவல்
தக்கோ யிதுவோ விசுவாசச் சமைவு மன்புந் தைரியமும்
எக்கா னீங்கு மிவ்வசையென் றிழித்து விளிக்கு மியல்பேபோற்
கொக்கோ வென்னக் கொக்கரித்துக் கூவிற் றமலன் கூறியபோல். 197

ஜீவ நெறியை யறமயக்கி ஜெகத்தை யகத்துப் புடைவளைந்த
பாவ நிசியை யிருஞ்சிறகாற் பறக்க வடித்துப் பகைத்தோட்டிப்
பூவ லயத்துக் கிரக்ஷணியம் பொலிய வருபுண் ணியப்பகலை [198
வாவென் றுரக்க விளிப்பதுபோன் றெழுந்த மதவா ரணத்துழனி.

வேறு.

கோழி கூவிய கூக்குரல் செவிகுறு குதலுந்
தாழி மத்துறு தயிரென வுடைந்துளந் தளர்வுற்
றாழி நாயக னுரைத்தமை யுள்ளுளே யுள்ளிப்
பாழி னீத்தனன் ஜீவநன் மையையெனப் பரிந்தான். 199

அயில்கொள் வேலென வுளத்திடைக் குளித்ததெம் மையன்
துயிலி லாதெமைப் புரந்திடும் விழிக்கடை தொண்டன்
பயிலு ளக்கரி கடிந்துபுண் படுத்தது பதைத்து
வெயிலி டைப்படு கிருமியிற் றுடித்தனன் வெதும்பி. 200

இனைய தன்மைய னாகியீட் டியபிழை யெண்ணித்
தனைவெ றுத்துரை யிடற்கரு மெய்மனத் தாபம்
நினைவி லோங்கவு நிருமல னருட்டிற நினைந்தம்
மனையி னோர்சிறை வறிதுபோய் மனங்கசந் தழுதான். 201

தேவ வாவியி னருட்செயல் சிறக்கின்ற செய்ய
ஜீவன் முத்தரே திறம்பிய பிழையினைத் தேறித்
தாவ முற்றுளந் திரும்பிவை திகந்தலைப் படுவர்
பாவ காரியர் லௌகிக வளற்றிலே பதிவார். 202

அவல மேயதம் மன்பர்கா லடிநிலை பிசகித்
தவறிப் பாவவெஞ் சேற்றிடை வீழினுந் தாங்கிக்
கவலை யோடெடுத் தாதரம் புரிவர்தாய் கடுப்பப்
புவன ரக்ஷணை சமைத்தநம் புண்ணிய மூர்த்தி. 203

அழுது நைந்துபே துருதிரு வருட்டுணை யடைந்து
தொழுத வாறிது சுருதிமா முதல்வனைத் துணிந்து
முழுதுங் கொல்வமென் றொருப்படு மனத்தராய் முடுகிப்
பழுது மல்கிய சூழ்ச்சியி னமைந்தனர் பதிதர். 204

(பிலாத்து முன்னிலை.)

எண்ண மிட்டவர் பொந்தியுப் பிலாத்தெனு மிறைமுன்
அண்ண லைத்தனி நிறுவவு மாக்கினைத் தீர்ப்புப்
பண்ண வும்மென நிண்ணயம் பண்ணினர் பகைகொண்
டொண்ணு மோவறுங் கூவலுக் குததியை யொடுக்க. 205

முடிந்த தன்றிரா முன்னவன் முகமறைத் தோங்கிப்
படிந்த பாவமா நடுச்சுவ ரடியொடு பாழ்பட்
டிடிந்து போகந ராத்தும ஜீவருக் கிரக்ஷை
விடிந்த தாமென விடிந்தது நலந்தரு வெள்ளி. 206

துரிய மாமுதல் ஜீவருக் கிரக்ஷணை தொகுத்து
விரிய வைத்தபுண் ணியம்பொலி தசும்பென விளங்கிப்
பெரிய வெள்ளியென் றொருபெய ருலகெலாம் பிறங்கற்
குரிய தாயவப் பகற்பொழு தோங்கிய துவரி. 207

மதலை யாகிய திரித்துவத் தொருத்தவர் மநுவாய்
முதுத ராத்திரிக் கிரக்ஷணை சமைத்திடு முறைமை
புதுமை யீண்டது காண்டுமென் றுவலிற் போந்து
கதுமெ னக்குணக் குன்றின்மீ திவர்ந்தனன் கதிரோன். 208

துதித்து யாவருந் தொழத்தகு நீதசூ ரியனை
மதித்தி டாதபுன் மாக்கண்மேல் வஞ்சினந் திருகி
விதிர்த்து மெய்யெலாஞ் சிவப்புற நெடுங்கைவாள் வீசிக்
கதித்தெ ழுந்தன னுமெனக் கதிர்கனன் றெழுந்தான். 209

அருட்ப டுங்கிறிஸ் தகச்சம யத்தொளி யலர
இருட்ப டும்பல புறச்சம யங்களு மிடையே
தெருட்ப டுஞ்சில கொள்கையுஞ் சிதைந்தொழிந் திடல்போல்
மருட்ப டும்நிசி யோடுவான் மீன்கண மறைந்த. 210



விஞ்சொ லித்திரள் விளைந்தன விழிக்கத வடைத்துத்
துஞ்சி யோருணர்ந் தெழுந்தனர் முதல்வனைத் தொழுது
வஞ்ச மின்மனை மக்களோ டளவளாய் மகிழ்ந்து
செஞ்செ வேதொழில் தொடங்கின ரறநெறி திறம்பார். 211

ஜீவ நாசமின் றுகமெய்த் திருவுளந் தெரித்த
பாவ நாசனைப் பிணித்ததும் படுகொலைத் தீர்ப்பு
மேவ நாசயோ சனைசிலர் விளைத்ததும் வெருக்கச்
சாவ நாசம்வந் துற்றதென் றணிநகர் சலித்த. 212

ஆய காலையிற் பாதகந் திரண்டுரு வமைந்த
பேய ரோர்சிலர் நம்பனை யிறுகுறப் பிணித்து
நாயெ னாக்குணாத் தணிநகர் வீதியி னடத்திப்
போயி னார்பதைத் தெவருங்கண் புதைத்தழு திரங்க. 213

ஐய னைக்கொடு பிலாத்துமுன் னடுத்திவன் கிறிஸ்தாம்
வைய வேந்தொரு மன்னர்க்கும் வரியொலா தென்ன
மெய்யு றப்பல கலகங்கள் விளைத்தன னிவற்கு
வெய்ய வாக்கினைத் தீர்ப்பிடு கென்றனர் வெகுண்டு. 214

செற்ற மில்கிறிஸ் தியேசுவின் றிருமுகக் குறிப்புஞ்
சொற்ற குற்றமெய்ப் படாமையும் யூதர்தந் துணிவுந்
தெற்றெ னப்பிலாத் தறிந்தன னாயினுந் திகைத்திங்
குற்றி டும்பெருங் கலகமென் றஞ்சியுள் ளுடைந்தே. 215

வேத பாரகர் யூதமார்க் கத்திலே விதித்த
நீத வாக்கினை செய்துகொண் மின்னென நிகழ்த்த
ஆத காதெமக் கரசனே கோறலாக் கினைக்கு
நாத னென்றுநின் பாற்கொணர்ந் தனமென நவின்றார். 216

மூர்க்க ருள்ளமும் வாய்மொழி மூர்க்கமு முணர்ந்து
பார்க்க னின்றநம் பரம்பொருள் திருமுகம் பார்த்துத்
தீர்க்க மாயெலாந் தெரிந்தனை நீயினிச் செப்பும்
மார்க்கம் யாதுநின் பொருட்டென்ன வுசாவினன் மன்னன். 217

ஒன்றும் பேசல ருத்தமர் மற்றதை யுணர்ந்து
மன்று ளேயொரு தனிச்சிறை வரதனை நோக்கி
வென்றி சேர சன்கொலா நீயென வினவ
என்று மாறிலா விறைமக னெதிருணா யியம்பும். 218

அரசன் யானென தரசிய துலகா சியல்போல்
உரைசெ யுந்தர மன்றது வாயினென் னுரையர்
விரசி நின்றுபோ ராடுவ திலையதால் வேந்தென்
அரசி யல்லுல கரசிய லன்றென வறிதி.

இந்த ராதலத் திறுத்தன னென்றென்று மூலவாச்
சத்தி யந்திகழ்த் துதற்கொரு சான்றென வதனாற்
சித்த சுத்தமுள் ளவனெவன் யான்சொலும் ஜீவ
சத்தி யந்தனைக் கடைப்பிடித் துய்குவன் சரதம். 220

என்று நம்பனீ துரைத்தலும் யூதரை யெதிர்ந்து
கொன்று நீக்குதற் காவதோர் குற்றமு மிவன்பால்
இன்று தண்டனை யெங்ஙன மியற்றுவ லென்றான்
நன்று செய்வதற் கஞ்சிய நகரதி பதியே. 221

ஆக்கி னைக்கரு கன்னல னிவனென வரசன்
மீக்கி ளந்தசொல் லிருசெவி வெதுப்பிட வெகுண்டு
போக்கின் றாகநின் றொருவருக் கொருவர்முன் போந்து
கூக்கு ரற்படுத் தாரந்தக் கொடுமன யூதர். 222

பொங்கு பேரொலி யவித்தவ ரிற்சிலர் போற்றி
இங்கி வன்கலி லேயநா டாதியிம் மட்டும்
நங்கு லஜனங் களுக்குப தேசத்தை நவிற்றி
வெங்கொ டுங்கல கத்தினை விளைத்தனன் மெய்ம்மை. 223

தன்னை யேவரு கிறிஸ்துவாந் தராபதி யென்றும்
பின்னை மன்னிறை செலுத்துதல் பெரும்பிழை யென்றும்
முன்னை யேசொலி யரசற்கு முழுப்பகை யானான்
என்னை யேதடை மரணதண் டனைக்கென விசைத்தார். 224

சொற்ற யாவையுங் கேட்டுடன் பிலாத்தெனுந் தோன்றல்
இற்றி வன்கலி லேயனா மதற்கிறை யெரோதென்
கொற்ற வன்னவ னிங்நக ரத்துளன் குறுகி
மற்றி வன்பிழை வகுக்கவென் றேவினன் வரைந்து. 225

(எரோது முன்னிலை.)

கறுத்த சிந்தையர் நன்றுநன் றெனக்கடி தேகி
இறுத்தெ ரோதெனு மிறைமுன மீசனை நிறுவி
வெறுத்தி ராயனைப் பகைத்தவன் வேதநூல் விரோதி
ஒறுத்தி டற்குரி யானிவ னென்றன ருரத்து. 226



அண்ண லைக்கண்டு பேசவு மற்புதச் செயலைக்
கண்ணி னாற்கண்டு களிக்கவுங் கருத்துடை யெரோதென்
எண்ண முற்றுமென் றேம்பலிற் பிணித்தெதிர் நின்ற
புண்ணி யன்றனை யுசாவினன் புதுமையை விரும்பி. 227

ஆவ லுற்றரு கணைந்துநின் றுத்திரத் தோடு
காவ லன்பல முறைபுகன் றிடவுநங் கருணை
ஜீவ தாரகர் செய்யவாய்த் துவரிதழ் திறந்து
நாவ சைத்தொரு மாற்றமு நவின்றிலர் நண்ப. 228

மோன மித்தனை யோவென முறையிலா மன்னன்
வான நாயகன் றனையவ மதித்துநிந் தனைசெய்
தீன மாயொரு மினுக்குவத் திரமுடுத் தெழில்கூர்
மேனி யிற்றரிப் பித்துநின் றித்திறம் விரிப்பான். 229

கோற லுக்குரி யானல னிவன்வயிற் குற்றந்
தேறு கிற்கிலன் யாதுமோர் திறத்தினுந் தெரியின்
மாறி யிங்கிவற் கொடுபிலாத் துறையுளை மருவிக்
கூறு மின்னென விடுத்தன னெரோதெனுங் கோழை. 230

வேறு. (மரணத்தீர்ப்பு.)

அவ்வயி னரசவை யகன்றம் மானொடு
வெவ்வழற் புகையென வுயிர்ப்பு விங்கிட
எவ்வகை யினுமிவற் கிறுதி யின்றெனத்
தெவ்வர்தத் தமிதுளஞ் செருக்கி யேகினார். 231

வன்றிறற் பிலாத்தெனு மன்னன் மன்றணி
முன்றிலைக் குறுகிநம் பகவை முன்னுறீஇப்
பின்றைநின் றாசிடம் பெயர்ந்து மீண்டமை
கன்றிய மனத்தினர் கழறி னாரரோ. 232

அதிபனங் கவர்சொலை யமையக் கேட்டுடன்
சதிபுரி குரவரை ஜனத்தின் மூப்பரை
முதியரை வருகென முறையிற் கூட்டிவைத்
தெதிரெழீஇ யினையன வியம்பன் மேயினான். 233

உலகர க்ஷகனென வுரைக்கும் பேர்நணி
இலகிய மற்றிவ னியூத மார்க்கத்தின்
விலகிய போதனை விரித்திந் நாட்டினும்
அலகறு கலகமுண் டாக்கி னானனா. 234

கைப்படுத் திவ்வயிற் கட்டி வந்தனிர்
மொய்ப்படு நும்முன முறையிற் றேர்ந்தனன்
மெய்ப்படு கிற்கில விரித்த குற்றங்கள்
மைப்படு மிருளொளி மருவத் தேய்தல்போல். 235

ஆண்டகை யெரோதெனு மரச னுய்ந்துயிர்
மாண்டுபோம் வகைபுரி மாண தண்டனைக்
கீண்டிய பிழையிவ னிடத்துக் காண்கிலேன்
மீண்டுபோ மின்னென விடுத்த தோருதிர். 236

ஏதமொன் றிலாவுயிர்க் கிறுதி காட்டுதல்
வேதநூல் விதிக்கெதிர் விரோதம் வேந்தர்க்கு
நீதமு மன்றுல கருக்கு நேர்படு
போதமு மன்றெனப் புரிவிற் கூறிமேல். 237

நடுவிது வெனினுமிங் கிவனை நம்முனம்
வடுவுற வடித்திவண் வரைந்து போகென
விடுவது துணிந்தன னெனவி ளம்பினன்
அடுவதே துணிவென வசடர் பொங்கினர். 238

பின்னரு முறைமுறை பிலாத்தெ னுந்துரை
நன்னய மொழிகளாற் றிருத்த நாடினன்
முன்னுறு நன்மையைச் சிதைக்கு மூடர்க்குப்
பன்னுநன் மதிபயன் பயக்கு மேகொலாம். 239

ஆங்கவ்மன் திருமினென் றவரை யேவிப்போய்த்
தாங்குநீ தாசனத் திருந்து தன்னுளே
வீங்கிய வுயிர்ப்பொடு கவன்று வேந்தனும்
ஈங்கினிச் செயலெனென் றெண்ணுங் காலையில். 240

இல்லவள் விடுத்தது தெதிர்ந்து வைகறை
புல்லிய கனநிலை புகன்றப் புண்ணியற்
கல்லலே துஞ்செய் லாவ தன்றெனச்
சொல்லின ளம்மனை யென்னச் சொற்றனன். 241

கேட்டுளக் கலக்கமேர டெழுந்து கேதமில்
நாட்டமொன் றுடையனும் நடுப்பு ரிந்திடு
கோட்டியை யகன்றுபோய்க் குழீஇய பூதரை
மீட்டுநல் விநயமாய் விளித்து விள்ளுவான். 242



மருவுபண் டிகைதொறும் வழக்க மாயுமக்
கொருவனைச் சிறைவிடுத் துதவு மாறுபோல்
பருவர லடையுமிப் பார மார்த்திக
திருவனை விடுதலை செய்து மென்றனன். 243

என்றசொல் லிசைமுடி வெய்தி டாமுனம்
கொன்றுயிர் களைகவெங் குருசி லேற்றியிங்
நின்றவன் றனைப்பா பாசை நீக்குக
வன்றொடர்ப் படுசிறை மறங்கொள் வேலினும். 244

மன்னர்மன் னனுக்கிறை வரியொ லாதெனச்
சொன்னவன் சொல்லருந் தேவ தூஷணம்
பன்னியோ னிவனைநீ பார மார்த்திகன்
என்னநீ விடுதலை யிசைப்ப தென்கொலாம். 245

மற்றிவன் றனைவிடின் மன்னர் மன்னனுக்
குற்றநண் பினனெனு முரிமைப் பாடிலாய்
செற்றமோ டிவனுயிர் சிதைத்தி செய்பழி
பற்றுக வழிவழி யெம்மிற் பார்த்திவ. 246

அஞ்சிடேல் சிலுவையி லறைந்து கொல்கெனச்
செஞ்செவே பலமுறை செவிடு பட்டிட
விஞ்சிய கூக்குரல் விளைத்திட் டாரரோ
நஞ்சினுங் கொடியநெஞ் சுடைய நாஸ்திகர். 247

புரவலன் யூதர்செய் புரளி போர்த்தலில்
உரமிலா தஞ்சியாங் கொருபு றஞ்செலீஇ
வரமனோ கரனையெவ் வயினின் றுற்றனை
பரமனோ தெரியெனப் பரிவிற் கேட்டனன். 248

உம்பர்நா யகனெதி ருரைகொ டாமையால்
வெம்பியா னுனைக்கொல விடுக்க வாயினும்
இம்பருண் டெனக்கதி கார மென்றுநீ
நம்புதி யேகொலா நவிற்று கென்றலும். 249

உன்னத நியமமா யுமக்கி[illegible]விடில்
என்னவோர் விரோதமு மியற்றே [illegible]
கன்னதா கலினுமக் கெனைய ளித்தவர்க்
குன்னரும் பாவமுண் டென்ன ஓதினர். 250

இத்தகு திருமொழி யெம்மை யாளுடை
வித்தகன் விளம்பலும் வேந்தன் விட்டிடற்
கெத்தனை முயன்றுமெட் டுணைநன் றின்றியே
பித்தரிற் றிகைத்துளம் பேதுற் றனரோ. 251

சிலுவையி லறையறை யென்னுந் தீச்சொலாம்
வல்லுவயிற் செவியிரு மருங்குந் தைத்தலாற்
கொலுவயி னாசனங் குறுகிக் கூறினான்
உலவையிற் சருகென வுழலு முள்ளத்தான். 252

குழுமியீர் நும்முறை குறிக்கொண் டியாதுமோர்
வழுவிலாற் கிந்தனன் மரண தண்டனை
பழியிதென் பாலல வென்று பாவர்முன்
கழுவினான் காகநீர் கவிழ்த்துக் கைகளை. 253

ஏவமி லொருவருக் கிறுதி காட்டியே
தூவரும் பெரும்பழி சமைப்பன் றுனுறு
ஜீவனுக் காயினும் ஜெகத்துக் காயினும்
ஆவது கருதிலா னார்கொ லாமிவன். 254

புறத்துறு கலையிலைப் போற்றிப் புண்ணியத்
திறத்தையே விளைக்கின்ற பயிரைத் தேய்த்திகன்
மறத்தையே யுலகிடை வளர்த்து மன்னிய
அறத்தைவே றறுப்பவ னார்கொ லாமிவன். 255

பங்கமில் பாமசற் குருப வித்திர
அங்கநோ வக்குரு சறைந்து கொல்கென
வெங்கொலை நாவினால் விளம்பு வான்வினாந்
தங்கையைக் கழுவுவா னார்கொ லாமிவன். 256

விஞ்சிய வுணர்விலை வீட்டி நீதிசெய்
நெஞ்சிய லுரத்தையு நீத்துத் தன்மனை
வஞ்சிசொல் கனுத்திற மறந்து வஞ்சருக்
கஞ்சிநஞ் சருந்துவா னார்கொ லாமிவன். 257

உலகர க்ஷணியமுண் டாக வுன்னதர்
மைந்தனைக் கருவியா யிருந்தி யற்றியோன்
அலகறு முன்குறித் தலின மைந்திடா
விலகிய லாத்தெனும் வேந்தன் காண்டியால். 258



இத்திற முன்குறிப் பியைந்தி டாதவுன்
மத்தரே கருவியாய் வாய்ந்தி ருந்தனர்
உத்தம னாக்கையுத் தரித்த பாடுகள்
அத்தனைக் கும்மென வறிதி மைந்தனே. 259

நெய்விளக் கிடிலிரு ணீங்கு மாறுபோல்
மெய்விளக் கிடில்வினை வீயு மல்லது
பொய்விளக் கிடுபுறச் சமய போதத்தாற்
கைவிளக் கிடில்வினை கழியு மேகொலாம். 260

உக்கிர தீவினை யுளுற்றி யொண்பழிச்
சிக்கறக் கைகழூஉ மதியின் றீக்ஷணஞ்
செக்கினை விழுங்கிப்பின் சீர ணித்திடச்
சுக்குநீ ரருந்துமச் சூழ்ச்சி யொக்குமால். 261

கள்ளறு கியபர பாசைக் காவலிட்
டெள்ளரு மேசுநா யகனை யீனமாய்
விள்ளரு மாக்கினை விதித்தல் கேட்டுடன்
துள்ளினர் களித்தனர் துட்ட யூதரே. 262

வேந்தனுக் கினைகொடு வெய்ய மள்ளர்தாம்
போந்துபுண் ணியன்றனைப் புடைவ ளைந்தனர்
பாந்தளிற் சீறினர் பற்றி யீர்த்தனர்
காந்துபுன் மனத்தருங் கைக லந்தனர். 263

புக்கனர் மாளிகைப் புறத்தங் கோர்சிறை
மக்களுட் பதடிக ளாய வன்கணார்
தொக்கனர் பலர்பல தூஷ ணஞ்சொலிக்
கொக்கரித் திகழ்ந்தனர் குழுமி யோரெலாம். 264

முன்னுடை களைந்தொரு முருக்க லர்ந்தெனச்
செந்நிற வங்கிமேற் றிகழச் சேர்த்தினர்
கொன்னுனை யழுந்திவெங் குருதி பீறிடப்
பின்னிய முண்முடி சிரத்துப் பெய்தனர். 265

கோலெனக் கையிலொரு கோலை நல்கினார்
காலிணை முடக்கிமுன் னின்று காவல
மாலுறு மாசநீ வாழ்க வாழ்கவென்
றோலிடூஉப் பரிகசித் தூறி னார்பலர். 266

கைதறுங் கோலினைக் கவர்ந்து கண்டகர்
வெய்துறத் தலைமிசை யடித்து வேதனை
செய்தன ருமிழ்ந்தனர் திருமு கத்தினே
வைதனர் பழித்தனர் மறங்கொ ணீசரே. 267

மலர்ந்தசெந் தாமரை யனைய வாண்முகம்
புலர்ந்துசெங் குருதியாற் பூசுண் டெஞ்சிய
துலர்ந்தது தாலுவுங் கருணை யூற்றிருந்
தலர்ந்தநேத் திரங்களுங் குழிபட் டாழ்ந்தவே. 268

நிந்தனை மொழிதிருச் செவிநி றைந்தன
நொந்தபுண் ணிடையெரி நுழைந்த தாமெனப்
பந்தனை மேனியிற் படிந்த செம்புணீர்
சிந்தின புண்ணியத் திவலை போன்மென. 269

குன்றிய துடற்பலங் குருதி கோத்துயிர்
பொன்றிய தெனமுகம் பொலிவி ழந்ததால்
கன்றிநொந் துலைந்தது கனக காத்திரம்
ஒன்றிய வெழினல மொருவிப் போயதால். 270

ஓதரும் வேதனை யுழந்து மொன்னலார்
நோதக வொருமொழி நவலு வாரலர்
ஏதில ரோபொறைக் கிரங்கு வாருமில்
பாதகம் பாதகம் பரம பாதகம். 271

மாரணத் தீர்ப்பிடு மன்ன னேவலன்
கோரணிப் படுத்துமக் கொடிய ரோவலர்
ஆரணன் பாடுக ளனைத்தி னுக்குமுற்
காரண நமதுதீக் கருமங் காண்டியால். 272

வாவென வந்ததிவ் வுலகம் வந்தபோற்
போவென வொல்லையிற் புவன கோசரம்
ஆவன யாவுமே யகனு நீறியத்
தேவிவை சகிப்பதென் சிந்தை தேர்திநீ. 273

வேறு.

வரிசை தப்பிய மன்னன நீதியும் வம்பர்
குரிசி லைக்குரு சேற்றியு யிர்ப்பழி கொள்ளும்
பரிசு மோடிப்ப ரந்தது பற்றுசெந் தீயில்
புரிசை மாநக ருள்ளமெ ரிந்துபு கைந்த. 274



புகரி லாதநம் புண்ணியர்க் குற்றமை மேன்மேல்
நகர மாந்தர்செ விசுடக் கேட்டலு நைந்தே
நிகரி லாக்கொடும் பாதக நேர்ந்ததிங் கென்றுப்
பகரு வாரங்க வரவர்க் கொல்வன பன்னி. 275

நாசம் நங்குலத் துற்றதின் றேடென நைவார்
ஈசன் மைந்தனை யோகொலை செய்வது மென்பார்
தேசி கன்வயி னெப்பிழை கண்டிது செய்தார்
நீச ரென்றுநெ டிதுயிர்த் தேங்கினர் நிற்பார். 276

மின்ன லின்றிவி ழுந்ததிவ் வெள்ளிடி யென்பார்
கன்ன லொன்றிலித் தொன்னக ரஞ்சுடு காடாய்
மன்னு மென்பர்சி லர்சிலர் வானிருண் மல்கித்
துன்னு ஜோதிக ளுந்தொலை யும்மெனச் சொல்வார். 277

தலைக விழ்ந்துல கந்தடு மாறலிற் றண்ணீர்
நிலைய மேவிடு மென்பர்சி லர்சிலர் நீண்ட
மலையு மண்டல முந்துக ளாகிடும் வானுங்
குலையு மண்டமுங் குப்புறு மென்பர்கொ தித்தே. 278

கண்ணி ருண்டுக லங்குவ ரோர்சிலர் காந்தும்
புண்ணு ளத்தோட ழுங்குவ ரோர்சிலர் பொங்கித்
துண்ணென் றுட்கித்து டிப்பவ ரோர்சிலர் சூழ்ந்த
தெண்ணி யெண்ணியி ரங்குவ ரோர்சில ரேங்கி. 279

கரவிற் காட்டிக்கொ டுத்தவக் கள்வனிற் கள்ளக்
குரவ ரேகொடி யாரென்ப ரோர்சிலர் கூறில்
உரவு நீருல கத்திதை யொத்தநி யாயம்
விரவிற் றுண்டுகொ லோவென்ப ரோர்சிலர் வெம்பி. 280

என்கொல் மேதினி கீண்டுவெ டித்தில தென்பார்
என்கொல் வானமி டிந்துவி ழுந்தில தென்பார்
என்கொல் வாரிதி நீர்சுவ றுதது மென்பார்
என்கொ லோமுடி வித்துணை தாழ்த்தது மென்பார். 281

கண்ப டைத்தில மேவிது காண்கில மென்பார்
மண்ப டைத்தபி ணிக்கினி மாற்றிலை யென்பார்
புண்ப டைத்தநெஞ் சோடுயிர் போகல வென்று
எண்ப டைத்தவ ரின்னன பன்னிடு மெல்லை. 282

(ஸ்காரியோத்து தற்கொலை.)

மோச மாயருண் மூர்த்தியை முப்பது வெள்ளிக்
காசை நச்சியொன் ஞார்கையிற் காட்டிய கள்வன்
மாசி லானவ தைத்துயிர் மாய்க்கெனும் வன்சொல்
நீச நெஞ்சினிற் றைத்தது நெட்டிலை வேல்போல். 283

இதயத் துள்ளுற வூன்றலு மின்றென லாகிப்
புதைய வுற்றவ கக்கரி மெல்லெனப் போந்து
வதைபு ரிந்தருள் வள்ளலை மாய்க்கவ குத்தாய்
எதைவி ழைந்துயிர் வாழுதி கேளென்றி டிக்கும். 284

பணம்வி டங்கொள்ப ஞமுடி யென்பது மற்றக்
குணம்வி ளக்குவ தாட்கொலி யென்பதுங் கொள்ளாய்
மணம்வி ழைந்திறும் வண்டென லாயினை மாளாப்
பிணமெ னத்திரிந் தாரு ருற்றனை பேதாய். 285

களவி னுற்பொரு ளைக்கவர் வானசை தூண்டும்
அளவி லுன்னைய தட்டின னவது கொள்ளாய்
உளவ றிந்துனக் குற்றுழி யுண்மையு ணாக்கும்
வளவ ஞமெனை யற்பமு மெண்ணலை மாற்றேய். 286

பொருளை நச்சினை போதமி லாய்புரை யில்லா
அருளின் வாழ்வினை யாக்கினைத் தீர்ப்பினுள் ளாக்கி
மருளு றும்புலை மக்களொ டோயெரி வாய்ந்த
இருளு றுங்கொடும் பாதலத் தெய்துவை யின்றே. 287

பழிக்குப் பாவத்துக் கஞ்சலை பல்லவர் தூற்றும்
மொழிக்கு நாணலை முன்பினுற் றுய்ந்திலை முற்றும்
அழிக்கு நீசப்ப சாசுக்க டித்தொழும் பாய்நேர்
வழிக்கு வாரலின் றுயினை யான்மதி மாண்டோய். 288

விதிவி லக்கையி கந்தவன் மெய்ந்நெறி விட்ட
பதித ரிற்பதி தன்கொலை பாதகன் நட்பிற்
சதிபு ரிந்தசண் டாளன்ற னைத்தெரி கிற்பின்
மதியி லீயுனை யன்றியிம் மாநிலத் தியார்கொல். 289

அறந்தி றம்பிய வாயுள்பு டைத்தலில் யாக்கை
இறந்து பாழ்பட லீனமன் றுலிவ்வி கத்திற்
பிறந்தி ராயெனி னன்றெனப் பேசிய மாற்றம்
மறந்து விட்டனை யாங்கொன்ம றந்திறம் பில்லாய். 290



நன்றி கொன்றனை நல்லுணர் வற்றனை நாசந்
துன்றி நின்றனை தொன்னெறி தூர்த்தனை தூர்த்த
பொன்றி னும்வசை போவதின் றுற்புவி மீதே
பின்றி நின்றுநின் றென்னினிச் செய்குவை பேதாய். 291

மேவ லாரையு வந்தனை முப்பது வெள்ளிக்
காவ லாயரு ளாளனை விற்றனை யந்தோ
ஜீவ நல்லமு தத்தையு குத்தனை தீராத்
தீவி டத்தைய ருந்தினை யுய்வினித் தீர்ந்தாய். 292

குற்ற மற்றகு ருதிநி லத்துகக் கொண்டு
விற்ற காசெனும் வெந்தழ லுன்மடி மேவப்
பற்ற வைத்தனை யேகொடும் பாழ்மதி யின்னும்
உற்ற வோர்துணை காசென வுன்னுதி போலாம். 293

என்ற கத்துறு சாக்ஷியி டித்திடித் தின்ன
வன்றி றற்கொடு றுத்தம றுத்தொரு மாற்றம்
நன்றி கெட்டயு தாசுந விற்றில னடில்
என்று முண்மைக்கெ திருரை யின்றென லாமால். 294

கடிந்து புண்படுத் தும்மனச் சாக்ஷியைக் காய்ந்து
நொடிந்தி டானெனி னும்புகன் முட்டின னைந்தான்
மடிந்து போயில னயினிவ் வாதையை மாற்ற
முடிந்தி டாதென வுள்ளம்வ லித்தனன் மூண்டான். 295

வள்ள லார்திருக் கோயிலை வல்விரைந் துற்றான்
கள்ள வேடக்கு ரவரைக் கண்டெதிர் காட்டி
எள்ள ருங்குணத் தியேசுவை நுங்கையி லீந்தேன்
வெள்ளி யிற்படு முப்பது காசிதை வெஃகி. 296

பேச ருங்கொடும் பாதகம் பேணிய பித்தேன்
மாசி லாதவி ரத்தம்வ டிந்துக வாங்கிக்
காசு கொண்மினெ னவவர் கொள்ளலர் காசை
வீசி யேகினன் பேய்பிட ருந்திட வெம்பி. 297

எப்பெ ருங்கொடும் பாவிக ளுங்களை யேற
இப்பு விக்கூறு தித்தரு ளுங்கு[illegible]
துப்பு றழ்ந்தசெஞ் சேவடிச் சூழலைத் துன்னான்
வெப்பு றழ்ந்தநி ரையக்கி டங்கிடை வீழ்வான். 298

பணித்த சிந்தைய பாமரன் சென்றொரு பாங்கர்
தனித்த சூழலில் நாண்கொடு தற்கொலை செய்தே
அநித்த தேகத்தை வீழ்த்தின னுருயி ரந்தோ
இனித்தி ரும்பரி தாகிய துர்க்கதி யெய்த. 299

நன்மை தீமையை நாடிந விற்றுந லங்கூர்
தன்ம சாக்ஷியை மெய்த்துணை யாக்கிய தக்கோர்
ஜென்ம சாபல்லி யம்மடை வாரதைச் செற்ற
கன்மி கள்ளெவ ருங்கடைத் தேறலர் காண்டி. 300

சுடுக னற்சுடர் நச்சுப தங்கமுந் தூண்டில்
இடுமி றைச்சிறு கர்ந்திடு மீனமு மென்ன
நடுவி கந்தபொ ருளொனு நஞ்சைந யப்போர்
கெடுவ ாருயி ராயுற லேபெருங் கேதம். 301

பழியும் பாவமுந் தன்னொடு பற்றவும் பாரில்
ஒழிவி லாவசை யும்மவ கீர்த்தியு மோங்கி
வழிவ ழிக்குறி லவவும் வைத்துயிர் மாண்டு
கழிவி லாவிருட் கங்குலுட் புக்கனன் காரி. 302

காரி வீசியெ றிந்தவக் காசுகைப் பற்றி
சோரி தோய்ந்தன வென்றொரு துண்டுநி லத்தைப்
பூரி யர்விலை கொண்டுபு தைத்திடு மீமச்
சேரி யாக்கினர் தீர்க்கர்முன் செப்பிய சீர்போல். 303

வேறு. (சிலுவைப்பாடு.)

தன்னுயிர் போயாக்கை தலைகீழு றவிழுந்து
சென்னித கர்ந்துகு டர்சிதறிச் செத்தொழிந்த
துன்னரிய சாமித்து ரோகிசெய விற்றுகப்
பன்னருநம் மான்சிலுவைப் பாடுகளை யுன்னுவாம். 304

பொல்லாத யூதர்களும் போர்ச்சேவ கர்குழுவும்
வல்லானை யெள்ளிப்பு றக்கணித்து வாய்மதமாய்ச்
சொல்லாத நிந்தைமொழி சொல்லித்து ணிந்தியற்றும்
பொல்லாங்கை யெல்லாநம் மீசன்பொ றுத்திருந்தார். 305

புற்றரவிற் சீறிப்பு டைவளைந்து புல்லியர்தாந்
துற்றிவி ளைத்தகொடுந் துன்பங்க ளியுழந்து
முற்றுங்கி ரகணத்தின் மூழ்குதி னகரன்போல்
செற்றமிலாத் தேவமைந்தன் றேசிழந்து தேம்பினர். 306



செவ்வங்கி யைக்களைந்த தேவர்பிரான் முன்றரிக்க
அவ்வங்கி யைத்தரித்தே யாகடியம பலம்பசித்
தெவ்வர்கு ழுமிச்சி லுவைத லைச்சுமத்திக்
கவ்வைந கர்கலுழக் கட்டிக்கொ டுபோனார். 307

நோக்கிலனு வொவ்வொன்று நூறுயி ரங்கோடி
மாக்கயத்தின் சும்மைம லிந்தபா வந்திரட்டி
ஆக்குசி லுவைய மலன்சி ரத்தேந்திக்
காக்கைக டனுகக் கல்வாரி நோக்கினர். 308

வள்ளல்கு ருராயன் மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
எள்ளிய வதரித்த வெம்மான்ச ருவேசன்
கொள்ளைபு ரிந்துகொ லைத்தீர்ப்புப் பெற்றுவரு
கள்ளரி ருவரொடுங் கல்வாரி நோக்கினர். 309

மாரணத்தின் கூரொடிய வன்பேய்த லைநசுங்க
ஆரணஞ் சொல்லுண்மை யவனிமி சைவிளங்கப்
பூரணமா ரக்ஷணிய புண்ணியங்கை கூடுதற்குக்
காரணமாஞ் செய்கைமுற்றக் கல்வாரி நோக்கினர். 310

ஈசன்சி னநோக்கி யீனநர கைப்பிணித்த
பாசவினை நோக்கிப்ப ரிந்துநடு நின்றுவரும்
பேசரிய துன்பப்பி ரளயத்தை நோக்கியிந்தக்
காசினியை நோக்கினர் கல்வாரி நோக்கினர். 311

அற்புத மும்வானத் தசரீரி யும்புனிதச்
சொற்பயில் வுமெல்லாச் சுகுணங்க ளுமிவரே
தற்பரனென் றேலமிடச் சண்டாளர் தாமிதனை
அற்பமு மெண்ணாத தறவும நியாயம். 312

தத்துநீர் வேலித்த ராதலத்தோர் செய்தவினை
அத்தனை யுந்தாங்கி யலமந்து மாங்கமைந்து
சத்தமி டாதேகுந் தகனப லிமறியாம்
உத்தமருஞ் சாந்தமா யூருடு செல்கின்றார். 313

கைபயர்ந்து வாய்புலர்ந்து, கண்ணிருண்டு காதடைத்து
வெய்யசி லுவைசு மந்தலசி மெய்வருந்தித்
துய்யதி ருவடிகள் சோர்ந்துநடை தள்ளாடி
அய்யன்ம றுகூடு வாக்கண்டா ரனிநகரார். 314

[illegible] னெஞ்சவன்[illegible] [illegible]லாப் பாதகராம்
புல்லியரா யன்றியிந்தப் பொல்லாங்கு போந்தமைகண்
டெல்லவ ருந்தந்த முயிர்க்கிறுதி யெய்ந்தனபோல்
அல்லலு ழந்தல மந்தாக்கை நிலைதளர்ந்தார். 315

மாதருக்கு ளாசிபெற்ற மங்கலையா மன்னைமரி
காதலனுக் கோவிக்க நேர்ந்த தென்றுமன
வேதனைப்பட் டாற்றாது மெல்லியலார் தாங்குழுமி
வீதியி ருமருங்கு மொய்த்தார்வாய் விட்டழுது. 316

காந்தண்ம லர்செங்க மலமல ரைப்புடைப்பப்
பூந்தண்க ருங்குவளைப் போதுநீர் முத்துகுப்பத்
தேந்தளவு தொக்கநறுஞ் சேதாம்ப லையலர்த்தி
மாந்தண்ட லைக்குயிலின் மென்மொழியார் மாழ்கினார். 317

தீயடைந்த வல்லியெனத் தேம்பிச்செ யலழிந்தும்
மாயும்வகை யின்றுய்ம றுகுற்று யிர்பதைப்பப்
போயடைந்த தெம்மருங்கும் பொற்பெருச லேசகாத்
தாயிழையார் வாய்விட் டழுதகு ரலோசை. 318

கண்டார்ப தைத்தார்க ளுழந்தார்க ரைந்தழுதார்
கொண்டார்து றுக்கங்கொ தித்தார்க டுவிடத்தை
உண்டார்போ லேங்கியு யங்கிநெ டிதுயிர்த்துத்
திண்டாடி நின்றினைய செப்புவா ராயினார். 319

ஆவாவி தென்னவ றவுமநி யாயமென்பார்
தாவாவ றமோத லைசாய்ந்தி றுவதென்பார்
[illegible]மு தல்வன்மு னியாத தென்னென்பார்
ஓவாது மலெம்மு யிர்க்கொழிவின் றோவென்பார். 320

இம்மைந்த னாவிக்கி றுதிவரக் கண்டுமரி
அம்மையு யிர்வாழா ளவனிமி சையென்பார்
செம்மைநிறப் பாத்தூய தேவசி னந்திருகி
மும்மையு லகும்மு டியுங்க ணத்தென்பார். 321

மாண்டாரு யாளிக்கு மாமருந்தை [illegible]
சீண்டெறி வாரிந்தக் கெடுதோஷி களென்பார்
சீண்டெறி வாரிந்தக் கெடுதோஷி களெனினும்
மீண்டுமு ளைக்கவொரு வேளைவா தோவென்பார். 322



புன்றொழிலர்க் கஞ்சிநடுப் போற்றாதார் பொங்கியழ
மன்றோரஞ் சொல்லியுயிர் வாழ்வதுவோ வாழ்வென்பார்
மன்றோரஞ் சொன்னோன்ம னைபாழாய் வன்குடியும்
பொன்றியெ ருக்கலரும் பொய்யாதி துவென்பார். 323

நள்ளிரா ஜீவரக்ஷ நல்கவரு ஞானகுரு
வள்ளலுக்கு வன்கொலையும் மாபாத கம்புரிந்த
கள்ளனுக்குக் காவல்வி டுதலையுங் கட்டுரைத்த
விள்ளுவதோ நீதிபுரி வேந்தருக்குச் சீலமென்பார். 324

கொல்லாது விட்டுவிடக் கொற்றவன்பல் கான்முயன்றும்
பொல்லாருக் கஞ்சிப்பு கன்றான்கொ லையென்பார்
பொல்லாருக் கஞ்சிப்பொ றாநீதி யைப்புரட்டி
அல்லாத செய்வார்க்க றங்கூற்றே யாமென்பார். 325

காட்டிக்கொ டுத்தோன்க ழுத்திலொரு கயிற்றைப்
பூட்டிமன வாதையினாற் பொன்றினனும் பொல்லாங்கு
சாட்டிக்கொலை புரிசண்டா ளர்மனச் சாக்ஷியுந்தம்
பாட்டிற்கி டப்பதென்ன பாவமதி பாவமென்பார். 326

நிந்தனையாஞ் செந்நெருப்பு நெஞ்சைக்கொ ளுத்திடவும்
நொந்தொருசொற் சொல்லாத நோன்மைநு னித்துணரின்
மைந்தருக்கிச் சாந்தம்வ ருமோம கேசனெனுஞ்
சிந்தைசெ றுநருக்குச் சேராத தென்னென்பார். 327

செந்தாம ரைபோற்றி கழுந்தி ருவதனம்
அந்தோவ தங்கிய முகுகுடி போயதென்பார்
நந்தாக்க ருணைந றுத்துளிக்குங் கண்மலர்கள்
சிந்தாகு லம்பொதிந்து தேசிழந்து விட்டதென்பார். 328

உன்னதமெய்ஞ் ஞானமு வந்துகுடி கொண்டதிருச்
சென்னிபுடை யுண்டிரத்தஞ் சிந்துவதோ செவ்விதென்பார்
மன்னுதிரு மேனிமுற்றும் வாரடியாற் கன்றிநைந்து
சின்னமுற லாவதுவோ தெய்வமே யோவென்பார். 329

பெண்ணீர்மை குன்றாத பெய்வளையா ரிவ்வண்ணம்
புண்ணீருந் தீயிற்பு கைந்தாரு யிர்பொடிப்பக்
கண்ணீரின் றுன்பக்க டற்கெல்லை காணாராய்
எண்ணீர ராய்ச்செல்லு மெம்பெருமான் பின்சென்றார். 330

மைத்தடங்கண் ணீர்சொரிய வாய்விட்ட ழுதாற்றிச்
சித்தமு டைந்துதொ டர்ந்துவரு சேயிழையார்
பத்திமையுஞ் சிந்தைப்ப ருவரலுங் கண்டிரங்கி
உத்தமசற் போதவு பசாந்த ரீதுரைப்பார். 331

எருசலேம் புத்திரிகா ளென்பொருட்டுக் கலுழாதே
துரிசறமற் றும்பொருட்டுஞ் சுதர்பொருட்டுங் கலுழ்ந்திடுமின்
வரிசைபெறு மகப்பெறும லடிகள்பாக் கியரென்று
உரைசெறியத் தகுநாளிங் குளதாமென் பகையுணர்ந்தே. 332

அன்றுபுக லிடமரிதா யவரவரே துயர்விஞ்சிக்
குன்றுகளே மலைகளுமே யெமைமூடிக் கொள்ளுதிரால்
என்றுரைப்பர் பசுமரத்துக் கிதுசெய்வா ரெனிலந்தோ
தொன்றுலர்ந்த படுமரத்துக் கெதுசெய்யார் துணிவொன்றி. 333

என்றுதுய ருறுமடவார்க் கிரங்கியிருந் துயரோடு
நன்றுமொழிந் தடர்சுமையா னலிவெய்தித் தளர்ந்தேகத்
துன்றுசிலு வையையாங்கோர் வழிப்போக்கன் றொடுத்தேந்தி
ஒன்றிவரு கெனக்கொலைஞ ருத்தமனைக் கொடுபோனார். 334

பெண்டிரெலா மழுதாற்றப் பிள்ளைகளெ லாங்கதறக்
கண்டுகேட் டவரிரங்கிக் கரைந்துருகிக் கருத்தழிய
மண்டுதுய ரெனுந்தீயால் வயிறெரியக் கடிநகரம்
பண்டெரிவீழ்ந் தழிசோதோம் பதிபோலப் பதைத்தேங்க. 335

பொருவரிய பரலோகப் புத்தேளிர் புதுமையிதின்
மருவுவதெம் முடிவோவென் றையுற்று மறுக்கமுறப்
பருவரல்கொண் டைம்பூத பௌதிகமாத் திரையாய
சருவசிருட் டியுந்திகைத்துத் தமைமறந்து நிலைகுலைய. 336

குழனாலிற் பிரியாத குருத்துவமா ரருட்சீடர்
அழலனைய துயர்நலிய வழுதுகரந் துடன்செல்லப்
பழுதறுமெய்ப் பரம்பொருளை மகவாக்கொள் பசுந்தோகை
தழலிடுபூங் கொடியேபோற் சாம்பியுயிர் தளர்ந்தேக. 337

எண்ணிலா மறவோர்தம் மிகனெஞ்சு பறையறைய
உண்ணிலவு விசுவாசத் தூரவோர்நெஞ் சுள்ளழியப்
புண்ணியருக் குறுங்கொலையின் புணர்ப்புன்னிப் பொருமியழு
கண்ணீரும் பெருமூச்சுங் ககனதுருத் தியிலடைய. 338



இப்பரிசு பெருந்துக்கக் குறிமல்கி யெவ்வுயிருஞ்
செப்பரிய துயருழப்பச் செருசலையைப் புறம்போக்கி
ஒப்பரிய முதுமூலத் தொருபொருளைக் கொண்டுய்த்தார்
மைப்படுவன் மனக்கொலைஞர் வதைபுரிவான் கொலைக்களத்தில். 339

ஈண்டினியான் புகல்வதெவ னெம்பெருமான் றிருமேனி
தீண்டினார் சிலுவையொடு சேர்த்தினார் செங்கையிலுங்
காண்டகுசே வடியிலும்வெவ் விருப்பாணி கடாவினார்
நீண்டசிலு வையையெடுத்து நிறுத்தினார் நிலங்கீண்டு. 340

மற்றிரண்டு திருடரையும் வலப்புறத்து மிடப்புறத்துஞ்
செற்றமொடு குருசேற்றிக் கொலைமாக்கள் செயலொழிய
சொற்றமறைத் திருவசனந் துலக்கமுறச் சுருதிமுதல்
குற்றவா ளிகளோடு நடுநின்றார் குருசுமிசை. 341

தன்னரிய திருமேனி சதைப்புண்டு தவிப்பெய்திப்
பன்னரிய பலபாடு படும்போதும் பரிந்தெந்தாய்
இன்னதென வறிகில்லார் தாஞ்செய்வ திவர்பிழையை
மன்னியுமென் றெழிற்கனிவாய் மலர்ந்தார்நம் மருள்வள்ளல். 342

இத்தகைய வரும்பொறையும் மனநலமு மியைந்தவரே
வித்தகனுக் கடித்தொழும்ப ரெனத்தகுமெய்க் கிறிஸ்தவர்மற்
றித்தகைய குணமிலருங் கிறிஸ்தவரென் றிசைபெறுதல்
செத்தவரைத் துஞ்சினவ ரெனவுரைக்குஞ் சீர்மைத்தால். 343

கீண்டிருப்பு முளையுடலைக் கிழித்துருவி வதைப்புண்டு
மாண்டுபடும் போதிவர்க்கு மன்னியுமென் றுரைத்தமொழி
ஈண்டிவரே யுலகினுக்கோ ரிரக்ஷகரென் றெடுத்துரைக்கும்
வேண்டுமோ யினிச்சான்று மிதைவிடுத்து வேறொன்றே. 344

மன்றாடு மருட்சீவ வசனத்தை வன்மறவோர்
ஒன்றாகப் பொருள்செய்யா ருடைகளைந்து பங்கிட்டார்
குன்றாத நசரேயன் யூதருக்குக் குலவேந்தன்
என்றாக டியமான வெழுத்திட்டார் சிலுவைமிசை. 345

கேடணவு தலைவரொடு கெழுமியபல் யூதர்களும்
மாடணவிக் காக்குநரும் வழிவருபுன் மனத்தவரும்
பாடணவி வருந்துநமை பரமசுத னைப்பழித்துத்
தூடணங்கள் பலபேசித் துணிந்துபுறக் கணித்திகழ்ந்தார். 346

வணங்காத முரண்கழுத்தர் வல்லுருக்கிற் கடினமுறீஇக்
குணங்காணுக் கொடுமனத்தர் கூறியதீ மொழியொன்றே
அணங்காருங் குருசுமரத் தறையுண்ட வொருதிருட்டுப்
பிணங்காணு யிகழ்ந்ததுவும் பிதற்றியது பெருமானை. 347

அடுங்கொலைஞர் பொருட்டமல னகங்கனிந்த வருட்டிறமுங்
கெடுங்கொடிய ருணர்வின்றிக் கிளந்தபழி மொழிச்செருக்கும்
நடுங்கியுயிர் நலிசோர னச்சுமனத் தியற்கையுமோர்ந் [348
தொடுங்குயிர்மற் றெருசோர னுளம்பொறுக்கா துரைக்கின்றான்.

எஞ்சுறும ரணத்தீர்ப்பி யைந்துழந்து மேழைநீ
அஞ்சுவா யலையேயிவ் வமையத்து மமலனுக்கு
நஞ்சனைய நமக்கீது நேர்ந்ததுமெய் நடுநிலைமை
விஞ்சியாம்வி ளைத்தகொடு வினைப்பயனை யடைகின்றேம். 349

மற்றிதனை யுணராது வன்னெஞ்சோய் மாசணுகா
நற்றவனை யிகழுவது நன்மையோ நன்மையலாற்
குற்றமிவ் ரிடத்துளதேற் கூறுதியென் றறக்கடிந்து
தெற்றெனவுட் குழைந்துரைத்தான் ஜீவவழித் தலைநின்றான். 350

உள்ளநாண்மு ழுதுமற முளுற்றியாக் கினையுழக்குங்
கள்ளனிவ னெனினுமனங் கண்டறிந்த சத்தியத்தைத்
தெள்ளிதுடன் வெளிப்படுத்திச் சிந்தையுடைந் துளந்திரும்பிக்
கொள்ளையிடத் துணிந்தானித் தியவாழ்வைக் குறிக்கோடி. 351

சாக்குறிக ளடுக்காமுன் றனுகரணந் தளராமுன்
மீக்கிளரு நெடுமூச்சு விரவாமுன் விழிமயங்கி
நாக்குழறி வீழாமுன் நல்லுணர்வுற் றருட்கள்ளன்
நோக்கினான் றலைதிருமி நுவலரும்புண் ணியப்பொலிவை. 352

காண்டகைய பெருங்கருணைக் கற்பகத்தை யெதிர்கண்டு
மாண்டகைய வன்பினொடு மானதாஞ் சலிவழங்கி
ஆண்டகைநும் மாசியலி லடியேனை நினைந்தருள
வேண்டினே னெனவிரந்து வேண்டினான் மிகவிரும்பி. 353

கள்ளமிலா வருட்கள்ளன் கசிந்துகரு ணையைநம்பி
உள்ளுணர்வோ டினிதுரைத்த வொருமன்றாட் டுயிர்நல்கும்
வள்ளல்திரு வுளத்தமுந்த மலங்காய்நீ பரதீசில்
உள்ளபடி யின்றேயென் னுடனிருப்பா யெனவுரைத்தார். 354



வேறு.

எம்மாதிர மும்படு பாவியென் றெள்ளு கள்ளன்
அம்மாவுயிர் போமள விற்கதி யாக்க நச்சிப்
பெம்மானரு ளுக்கிலக் காகிமெய்ப் பேறு பெற்றான்
கைம்மாறின்ம காகிரு பைத்திறங் காண்டி மைந்த. 355

தன்னேரினின் றேங்கிய மூர்தனித் தாயை யன்பின்
முன்னாகவ ழுங்கொரு சீடனை முற்று நோக்கி
அன்னாயிவ னுன்மகன் மற்றுனக் கன்னை நண்ப
என்னாவரு ளின்னுரை தந்தன ரென்று முள்ளார். 356

ஆயிற்சிறந் தவற மாவதிவ் வாழி வைப்பிற்
றாயிற்சிறந் ததம ரின்றெனத் தக்க வன்பாஞ்
சேயிற்சிறந் தவரு ளாயகன் சிந்தை யார
வாயிற்சிறந் தமொழி காட்டுமிம் மாண்பை யோர்தி. 357

அன்பின்றலை நின்றருள் பெற்றவத் தொண்ட னையன்
துன்பின்றலை நின்றுக ருத்தொடு சொற்ற வாய்மை
என்பிங்குகு மட்டித யத்திலி ருத்தி யன்னை
தன்பங்கின ளாவவள் சொற்றலை தாங்கி நின்றான். 358

வாழிப்பெரு மானைவ தைத்துயிர் மாய்க்க மல்கும்
பாழித்துய ரின்பட லம்மெனப் பாரை மூடி
ஊழிக்கரு மாலைவ ளைந்தென வொல்லை யும்பர்
ஆழிக்கதி ரைப்புதைத் தோங்கிய தந்த காரம். 359

எல்லாவுல கத்தவர் பாவமு மேற்ற தேவ
நல்லாடுயர் வேதிகை மேவுநு நம்ப னீதிச்
செல்லாரழ றீத்திட வப்பலி தீந்தெ ழுந்த
அல்லார்புகை யாமென வோங்கிய தந்த காரம். 360

வாதிக்கும நீதவஞ் ஞானம காந்த காரம்
நீதிக்கதி ரோனைம றைத்திடு நீர்மை கண்டு
சாதிக்கமாட் டாதுல குக்கொளி தந்து நின்ற
ஜோதிக்கதிர் குன்றிட மையிருள் தொக்க தெங்கும். 361

காராழிபொங் கிக்கக னம்புதை பட்ட தென்கோ
பாராதியந் தம்புரி தீமைப்ப டாமி தென்கோ
தீராவனர்த் தத்திரள் கூடிச்செ றிந்த தென்கோ
போராதொரியா மம்வரு துற்றிருட் பெற்றி தன்னை. 362

மெய்யானதீ பங்கிறிஸ் தியேசெனு மெய்ம்மை கண்டாம்
உய்யாவுயி ருக்குயி ராமுயி ரோயு மெல்லை
மைபார்கணி ருண்டிட வானொளி யாவு மட்கி
வெய்யோனொளி யுங்கரந் தாரிருண் மேய வாற்றால். 363

மெய்யுற்றதெய் வம்பசு பாசம்வி ளக்கி நாளுங்
கையுற்றநெல் லிக்கனி யின்மறை காட்ட வின்னும்
ஐயுற்றலை யும்புலை மாக்கர கத்தி னஞ்சில்
மையுற்றகூட் டிலிரு டொக்கது மண்ணும் விண்ணும். 364

ஊறுற்றிடு காரிருண் மூடியு டற்ற வஞ்சிப்
பீறுற்றுள முட்கிய யர்ந்துபி தற்றி யாதுந்
தேறுற்றில வாய்ச்செய லற்றஜெ கத்து லாம்பல்
கூறுற்றஜீ வவருக் கங்குலை வுற்ற மாதோ. 365

பெருந்தீப்பிழம் பும்பிறங் காதொளிர் பெற்றி குன்றிக்
கருந்தீயென லாயின கண்ணொளி யற்றி மைத்தல்
பொருந்தாதுமு ழுக்குரு டாயின பொன்றி னாலொத்
திருந்தாரெவ ருமெவை யுஞ்சரித் தில்ல காண்டி. 366

ஈர்த்தங்கல கையிருட் கும்பியி விட்ட பூவை
ஆர்த்தன்புவ டங்கொடி ழுக்குநம் மைய னாற்றல்
பார்த்தும்பரு டுபல தேவக ணங்கள் பையுள்
போர்த்தங்கிடைந் தார்ந கத்திருள் போர்த்த தென்னா. 367

நளியுண்டமுந் நீருல கத்துந லம்பெய் கொண்மூத்
துளியுண்டுண வுண்டுபல் போகசு காயு வும்முண்
டளியுண்டரு ளுண்டற முண்டிவை யாய வெல்லாம்
ஒளியுண்டெனி லுண்டில தேவிலை யொன்று மன்னோ. 368

இற்றாகவுச் சிதொடுத் தேழரை யென்னு நாழி
முற்றாகமு யங்கிய வல்லிருண் முற்று மெல்லை
எற்றோகைவி டுத்தனி ரென்னையென் றேவ னேயென்
சாற்றாருட் டாதையை நோக்கியோ ரோல மிட்டார். 369

எவ்வாறுநம் மான்றிரு வுள்ளமி னைந்த தேயோ
எவ்வாறுனு யதிரு மேனியி னைந்த தேயோ
எவ்வாறுதந் தையித யஞ்சகித் திட்ட தேயோ
எவ்வாறென வுள்ளுவல் விள்ளுவ லேழை யானே. 370



செற்றாரெலி யாவைவி ளித்தனன் ஜீவ ரக்ஷை
பெற்றார்வீது காண்டுது மென்றுபி தற்றி நிற்க
வற்றாவருள் வாரிதி தாகம ரீஇய தென்னச்
சொற்றார்சுரு திமொழி முன்னுறச் சொற்ற வாறே. 371

எல்லாவுல குமுடை யார்பொருள் யாவு முள்ளார்
தொல்லாதிமூ லப்பரஞ் சோதியர் தோற்ற நாசம்
இல்லாரொரு தாகம நாதிதொட் டெய்த லாலே
கொல்லாதுவி டாதவோர் தாகமுங் கொண்டி ரந்தார். 372

காதுற்றொரு வன்கட லாம்பியைக் காடி தோய்த்தே
ஓதுற்றவீ சோப்பெனுங் கோல்கொடு யர்த்தி நீட்டிக்
கோதுற்றிலா தரும ரேசனுக் குக்கொ டுத்தான்
மாதுக்கதுக் கம்ஜலப் பஞ்சமும் வந்தி வற்கே. 373

பல்லாயிர கோடிய ஜீவனைப் பாவ பந்தத்
தல்லார்சிறை மீட்டவர்க் கோர்மிட றார வுண்ணீர்
இல்லாதிறுங் காற்புளிங் காடியி யைந்த தந்தோ
எல்லேமுக்கா கமடி வார்க்குல கீயு நன்றே. 374

மருவாரளித் தபுளிங் காடியை வாங்கி யன்பின்
உருவாய்ந்தவர் யாவுமு டிந்தவென் றுய்த்தி யம்பி
ஒருவாதவெந் தாயுயிர் நல்கின னுங்கை யென்னாத்
திருவாய்மலர்ந் ததலை சாய்த்தனர் ஜீவன் விட்டார். 375

வேறு.

ஜீவாதி பதியேக திரித்துவத்தி லொன்றான தேவ மைந்தன்
தாவாத கருணையினாற் பேரன்பு மயமான தனுக்கொண் டண்டி
மூவாத முதனீதி யிரக்கசா ரசம்புரிவான் முதுநீர் வையஞ்
சாவாத படிதானே பலியாகி ஜீவன்விட்ட தகைமை பாராய். 376

சந்ததங்கற் பனைமீறிச் சண்டாள ராகிநன்றி தனையெண் ணாமற்
புந்தியற்றுக் கொடுங்கூளிக் கடித்தொழும்பு புரிந்தொழுகும் பொல்
[லா ருக்காய்
அந்தரியா மிப்பொருளா யகிலாண்ட கோடிகளை யாட்டு விக்கும்
விந்தையுளார் மனுவாகி யுயிர்விடுத்த விந்தையைப்போல் விந்தை
[யுண்டோ. 377

தனக்குலவாப் பெரும்பேறு தரவந்தா விழிக்கெதிரே சான்று காட்டி
மனக்கினிய வுபதேசம் வகுத்தசரு வேசனொரு மைந்தன் றன்னைப்
பனிக்கவதைத் துயிர்கவர்ந்த பாருலகைத் தகிக்காமற் பரம தாதை
சினக்கனலை யவித்தெழுந்த ஜீவகா ருணியநிலை தேறற் பாற்றோ. 378

வேறு.

அலகிலாப் பரம நீதி யாயதென் னெண்ண மென்று
இலகுவா னுறையிற் சேர்த்தி யெரிந்தெழு கோப மாறி
உலகினுக் கொருவ ராகி யுத்தரித் ததனை யுள்ளிக்
குலவியே தாதை பக்கற் குதூகலித் திருந்த தம்மா. 379

பரமகா ருணியம் பொங்கிப் பலித்ததென் னெண்ண மென்று
வரமனோ காரை வாழ்த்தி வாழ்த்திராத் தழுத மூப்ப
உரமிலா வான்ம கோடி யுய்ந்தமை யுள்ளி யுள்ளித்
தாமிலா துவகை யோங்கத் தாதைபாற் சிறந்த தன்றே. 380

வேறு.

ஜீவனை யிழந்தவிச் செகத்துக் கீறிலா
ஜீவன்வந் தியையவுஞ் செறித்த நித்திய
ஜீவவா யிலுக்கொரு திறப்புண் டாக்கவும்
ஜீவனி னதிபதி ஜீவன் விட்டனர். 381

கோழையிப் பிழைமணி குறித்துக் கூட்டுதற்
கர்ழிநீர் குளித்துழச் சடக்கு மாக்கள்போல்
ஏழைந ரான்மகோ டிகளை யீட்டுதற்
கூழியான் மரணத்துள் ளொடுங்கி னாரரோ. 382

கண்ணிய வன்பினாற் கட்டுண் டோங்கிய
தண்ணளிச் சலதியின் முழுகித் தாழ்வுறீஇ
உண்ணிசழ் பொறையினா லுயிர்ப்பொ டுங்கினார்
புண்ணிய முலகெலாம் பொலியத் தோன்றினார். 383

முடிந்தது சஞ்சல முடிந்த பாடுகள்
முடிந்தது வறுமைநோய் முடிந்த சிந்தனை
முடிந்தது தீர்க்கர்சொன் முடிந்த முன்குறி
முடிந்தது கருதிய கரும முற்றுமே. 384

முடிந்தது பாவவி மோச னப்பலி
முடிந்தது பழமறைச் சடங்கு முற்றிலும்
முடிந்தது குவலயத் திரக்ஷை மொய்ம்புற
முடிந்தது ஜீவிய முழுது மென்பவே. 385

இத்தகு வனவெலாம் பொருந்த வீறிலா
முத்தனார் முடித்தலின் முடிந்த தென்றொரு
வித்தக வாய்மொழி விளம்பித் தாமுடை
அத்தனுக் காவியை யளித்த வொல்லையே. 386



கிழிந்ததா லயத்திரை யிரண்டு கீற்றவாய்க்
கிழிந்ததா சாரியர் கேடு சூழுளங்
கிழிந்தது முதுமறைக் கிரியைச் சாஸனங்
கிழிந்தது தூடணங் கிளந்த வாயெலாம். 387

அதிர்ந்தது கிடுகிடென் றூழி சூழ்புவி
அதிர்ந்தது பாதலத் தாச னுளுகை
அதிர்ந்தது கிறுகிறுத் ததீத மன்றலை
அதிர்ந்தது புறமதத் தஸ்தி வாரமே. 388

பிளந்தது வயின்றொறும் பெரும லைக்குலம்
பிளந்தது வஞ்சகப் பிசாச னெஞ்சுரம்
பிளந்தது சந்நிதி மறைத்த பித்திகை
பிளந்தது தீவிடம் பிறங்கு பைத்தலை. 389

திறந்தது தூயவர் சேம வைப்பிடந்
திறந்தது கதிக்குறு ஜீவ வாயிலுந்
திறந்தது கருணையின் றிருவி ழிக்கடை
திறந்தது செறுத்துள ஜீவ வூற்றரோ. 390

நற்சுதந் தாநமக் கருள நாயகன்
தற்சுதந் தாவுயிர் விடுத்த தன்மையைக்
கற்சுதந் தாமுறு கடின நெஞ்சுடை
அற்சுதந் தாரறிந் தகங்க லங்கினார். 391

நிகழ்ந்தசம் பவங்கள்காக் குநர்த நெஞ்சினை
அகழ்ந்திட வஞ்சிமெய் யாக மற்றிவர்
இகழ்ந்திடற் பாலரோ வீச னோர்சுதன்
புகழ்ந்துபோற் றிடத்தகும் புனித ராமென்றார். 392

தொக்குநின் றவரெலாந் துயரக் காட்சியோ
டக்கணத் தசம்பவ மாய யாவையுஞ்
சிக்கறத் தெரிந்துநெட் டுயிர்த்துத் தேம்பியே
துக்கமுற் றழுதுளந் துளங்கி யேகினார். 393

கிழிபடு மிதயத்துக் கெழீஇய நண்பினர்
வழிபடு கலிலெய மாதர் மற்றுளார்
விழிபுனல் சொரிதர வெதும்பிச் சேய்மையிற்
கழிதுய ரொடுமனங் கவன்று நின்றனர். 394

ஞானமா கியவொரு நாதன் றூங்கிய
மானவ தேகத்தை வனைந்திட் டாவிஞ்ய
வானநா யகன்கரம் வழங்கக் கண்ணுறீஇத்
தானமும் வானமுந் தழங்கும் வேலைவாய். 395

கொற்றவ னுத்தரங் கொண்டு யூதர்கள்
சொற்றவா றுயவண் டுதைந்த சேவகர்
குற்றுயிர்ச் சோரனைக் குறுகித் தொன்முறை
தெற்றெனக் கான்முறித் துயிரைச் சிந்தினர். 396

அன்பினோர் படிவத்தை யாவி நீத்தலில்
என்பினை முறித்தில ரெனினு மீட்டியால்
வன்புறத் திருவிலா மருங்கு குத்தினான்
கொன்பயி லொருமறக் கொடுங்க ணாளனே. 397

அனந்தர முலகினுக் கருளி யாண்டகை
தினந்தரு மான்மசஞ் சீவி யேயென
வனந்தரு திருவுடல் வடுப்பட் டவ்வழிக்
கனந்தரு குருதியு நீருங் கான்றதால். 398

பாவவெங் கோடையிற் பாடுண் டெஞ்சிய
தாவரு மாத்துமப் பயிர்த ழைத்திட
பூவரு புண்ணியப் பொருப்பி னோர்புடை
ஜீவநீ ரூற்றுக்கண் டிறந்த தென்பவே. 399

ஓர்ந்திடாப் பத்தனோ ரடியி லொண்சிலை
ஆர்ந்தநன் னீர்சுரந் தளித்த வாறுபோல்
கூர்ந்தவீட் டியின்வழி குருதி கோத்தநீர்
ஆர்ந்ததிவ் வாக்கைநின் றவனி யுய்யவே. 400

முடிவன யாவையு முடிய நோக்குறு
நெடிதுயிர்த் திரங்கியுள் ளழிந்து நின்றவோர்
அடியன்யோ சேப்புநம் மாண்டை யாளுகை
படிமிசை வாவெதிர் பார்த்தி ருப்பவன். 401

மிக்கசம் பத்துளான் யூத வேதியர்
தொக்கசங் கத்தினோர் தலைமைச் சூழ்ச்சியான்
புக்கன னரசிடம் புனித யாக்கையென்
பக்கலிற் றருகெனப் பரிந்து வேண்டினான். 402



திசிலுடை மன்னவன் றீரத் தேர்ந்[illegible]
அகிலலோ கேஸ்வர னருளி யாக்கையை
இகலில்லை[illegible] [illegible] நீயினித்
தகுமுறை யியற்றுதி சமாதி போயென்றான். 403

உத்தரங் கிடைத்தமை வினவி யுள்ளுளே
பத்திசெய் நிக்கதே மெனப்ப கர்ந்திடும்
உத்தமன் பரிமள வுசித வர்க்கங்கள்
வித்தக வுடற்கெனக் கொண்டு மேவினான். 404

கொலைக்களத் திருவருங் குறுகி யொல்லையிற்
றொலைக்கரும் பாவநோய் தொலைத்த யாக்கையை
நிலைக்குரு சகற்றிமே னிலவச் சாத்தினர்
விலைக்கரும் பூந்துகில் விரித்து மூடியே. 405

விந்தைசே ரெழிற்றிரு மேனி மீதெலாங்
கந்தநற் றிரவியம் புனைந்து கண்கணீர்
சிந்திமெய் யன்புடை ஜீவன் முத்தர்தாந்
தந்தம சென்னியிற் றாங்கிச் சென்றனர். 405

வனக்குறும் பரம்பினோர் மருங்கு மட்டவிழ்
நனைக்குறு முகைவிரி நந்த னத்திது
வினைக்குரித் தாயயோ சேப்பு வேதியன்
தனக்கெனச் சமைத்தவச் சமாதி நண்ணினர். 407

கன்முறை யகழ்ந்தவக் காமர் வைப்பினில்
தொன்முறை விதிப்படி தூய யாக்கையைப்
பொன்முறை போற்றிடும் புலமைத் தாமென
நன்முறை வளர்த்தினர் நலங்கொண் மொய்ம்பினர். 408

ஆர்வமிக் குடையமெய் யடியர் மொய்ம்பினால்
வார்விழி புனலுக வாரிப் பெய்தனர்
தீர்வரும் பரிமள திரவி யங்களை
சேர்வுறு கபாடக்கற் செறித்திட் டாரரோ. 409

உலகெலாம் புரிந்ததீ வினையைய யுத்தரித்
தலகிலாப் புண்ணிய மமைத்த வாண்டகை
இலகுபே ரெழிற்றிரு மேனி யீண்டொரு
சிலைகெழு சமாதியுஞ் செறிந்த தேயந்தோ. 410

தைவிக [illegible] தனுவெ டுத்தநந்
தைவிக ரக்ஷகர் த[illegible]ந்த மானிட
மெய்வசுந் தராயிடை வாவ் 411
[illegible]வதின் மேற்புவிக் குய்வின் றுகுமால.

நேசயோ சேப்பென நிக்க தேமெனப்
பேசிய தொண்டரும் பிறரு நம்பிரான்
பூசமா திக்குறு புணர்ப்பெ லாம்புரிந் 412
தீசனை மதிக்குள்வைத் தேத்திப் போயினார்.

அத்தனுக் கடித்தொழும் பமைந்த வன்புடைப்
பத்திமை வடிவெடுத் தனைய பாவைமார்
சித்தசஞ் சலத்தொடு கலுழ்ந்து தேம்பியே 413
தத்தம துறையுள்போய்ச் சடைத்தி ருந்தனர்.

அஞ்சுறு காட்சிகண் டலமந் தாவிநைந்
தெஞ்சிய பாதக ரியல்மு றைப்படி
செஞ்செவே யுலகமைந் தொழுகுஞ் சீர்மைகண் 414
டஞ்சமென் றுளம்வலித் தூரங்கொண் டாரரோ.

வேறு.

பொங்கரு ளாதன் பூதல ரக்ஷை புரிவான்வந்
தங்கம்வ ருந்தி யாருயிர் நல்கி யவனிக்குள்
மங்கிய டங்கக் கண்டுச கிக்க மாட்டான்போல் 415
வெங்கதி ருட்கிக் குடகட லிற்குப் புறவீழ்ந்தான்.

பாயொளி மட்கிப் போயது வெள்ளிப் பகலேனும்
மீயொளி மல்கி மேற்றிசை தூற்றி விரிசெக்கர்
நேயமி குத்தோர் காயமு குத்த நிறைசோரி 416
தூயசி னத்தீ மாயவ டர்த்துத் தொகல்போலும்.

நன்றிம றந்து நட்பிடை நாளு நயவஞ்சந்
துன்றிய கள்வர் நன்றியில் செல்வந் தொலைவெய்த
ஒன்றிவ ருத்தும் வன்பிடி போல வொளிர்செவ்வான் 417
நின்றில தாக வந்தது மாலை நிமிர்கங்குல்.

பூவணை யாகக் கண்படை கொள்ளும் புனிதற்கோர்
மேவுவி தான மென்னவி ரிந்த மேல்வான்மீன்
ஓவற வெங்கும் பாயிரு ணக்கி யொளிகாலுந் 418
தீவம தாகவு தித்தது கீழத் திசைதிங்கள்.



சித்திர மாகச் செல்வனு றங்குஞ் செயல்கண்டு
நித்திரை பங்கமு றுதமை வுற்றிடு நெறிபோலும்
எத்திசை யும்முள வெப்பொரு ளும்முல கெல்லாமும் 419
அத்தின ராவினி சத்தம தாய வருங்காட்சி.

காலமி தாக வன்மன யூதர் கதித்தோடிச்
சீலமில் மன்னன் பாலனை வுற்றுத் திருட்டாகக்
கோவியு யிர்த்தா னென்றவ னாக்கை கொடுபோகிச் 420
சாலம ருட்டிச் சீடர்பல் கேடு சமைப்பாரால்.

ஈண்டொரு மூன்றுதி னத்துயிர் பெற்றெழு வேனென்ன
மாண்டவ னோதிய துண்டுச மாதியை மற்றின்னே
காண்டகு காவல மைக்கென வொப்புரை கைக்கொண்டு 421
வேண்டிய வாறுபல் வீரரை வைத்தனர் வெங்காவல்.

இட்டனர் முத்திரை யேமமு றத்தனி யீமத்தின்
முட்டிய டைத்தவோர் கற்கத வத்தினை முற்றாக
அட்டதி காந்தமு மம்பர மும்மிதோ ரங்கைக்குள் 422
இட்டன முய்விலை யென்பவர் போன்மதி யில்லாரே.

கோவிய காவல ரேதிக ளோடுகு ழீஇச்சேம
வாலிய வைப்பைவ ளைத்தனர் நின்றிட வாராந்தக்
காலைக டும்பக லெற்படு காலைக டந்தந்தி 423
மாலைக ழிந்தநி யாமமும் வந்தும ரீஇயிற்றால்.

கைவரு லௌகிக வேலையொ ழிந்துக ருத்தொன்றித்
தைவிக நாளனு சாரிக ளாயுயர் சற்போதர்
உய்வரு ளாதனு யிர்த்தெழு வேனென வுய்த்திட்ட 424
மெய்வச னத்திற முள்ளியி ருந்தனர் விழிதுஞ்சார்.

மாசில்ம டந்தை மார்சிலர் கந்த வருக்கங்கள்
ஆசற விட்டி யாதிதி னத்தி னதிகாலை
ஈசனு டற்குப் பூஜிதை செய்வா மெனவெண்ணி 425
நேசம்வ டிக்குங் கண்ணொடி ருந்தார் நிசிமுற்றும்.

வேறு. (உயிர்த்தெழுதல்.)

இருநில முய்யக் கொண்ட வெம்பிரா னாக்கை யீமம்
மருவிய வாறீ தாக மறுத்துயிர்த் தெழுந்த வுண்மை
திருமுறை கிளக்கும் வண்ணந் தெரிப்பலென் றமலற் போற்றிப் 426
பொருவரும் பத்தி யென்னும் புனிதைமேற் புகல்வ தானாள்.

மைந்தனே ணம்பி ரானிம் மாநிலத் துயிர்த்தெ ழுந்த
விந்தையைத் தரிசித் தேத்தும் விழைவினால் விபுத ராவார்
அந்தரத் தீண்டிப் பல்லாண் டணியிசை யலர்த்து மாபோல்
சிந்துநீர்ச் சுனையுங் காவும் புள்ளொலி சிறந்த மாதோ. 427

விண்ணுற நிவந்த நாறு வியன்சினைப் பொதும்பர் மென்பூஞ்
சுண்ணமு மலருந் தீந்தேன் றொருகுதியும் வானந் தூய
ஒண்ணிறப் பனிநீ ரோடு கலந்துமென் கால்கொண் டோச்சல்
புண்ணிய னெழுச்சிக் கோலம் புனைந்தெனப் பொலிந்த தன்றே. 428

மருப்படி கமல வாவி மறிதிரை முழவ மார்ப்ப
அருப்புநாண் மலர்வாய் கிண்டி யழிபசுந் தேறன் மாந்திச்
சுருப்பிசை சுருதி காட்டப் புள்ளொலி யிசையிற் றன்னத்
திருப்பள்ளி யெழுச்சி கூடுஞ் செவ்வியை யொத்த தம்மா. 429

கோதிலாப் புனித வன்பு குலவுநீ ரகத்து நம்மான்
பாதபங் கஜம லர்ந்த பரிசெனப் பளிங்கிற் றோன்றுஞ்
சீதநீர்ப் பொய்கை யெங்குஞ் செழுங்கடி கமழுந் தூய
மாதர்மென் கமலப் போது வள்ளவாய் மலர்ந்த மாதோ. 430

வையகம் புதைத்த கங்குல் வாருணி யற்ற நோக்கித்
துய்யதண் மதிய மென்னுந் துயல்வரு சுறவத் தோடு
மையற விளங்கும் வான மீனொளி மழுங்கி மாய
வெய்யவ வலைஞன் றோன்றான் விடிவலை வீசி னானால். 431

மெய்கண்ட விடத்துப் பொய்மை வெளுத்தென வெளுத்த திந்து
கைகண்ட களவி னாக்கங் கரந்தெனக் கரந்த விண்மீன்
பொய்கண்டு மருண்ட வுள்ளம் போலொளி யிழந்த தீபம்
மைகண்ட கங்குல் வாட்டும் வைகறை கண்டு கண்டே. 432

இன்னதோ ரமையந் தன்னி லிருநில வுலகுக் கெல்லாம்
பன்னரு நலத்த வாய பாகதிப் பயனை யீட்டித்
துன்னிய ஜடவி யோகத் துயிலுணர் சூழ்ச்சி யேபோல்
உன்னத தேவ மைந்த னுயிர்த்தெழுந் தருளிப் போந்தார். 433

வார்த்தையாய் நடுவ ராகி மன்னுயிர்க் கிரக்ஷை நல்க
மூர்த்தியாய்ச் சமாதி கூடி முறைவழா துயிர்த்தெ ழுந்த
கீர்த்தனைத் தரிசித் தேத்தி ஜெயஜெய வென்று போற்றிக்
கீர்த்தன நறும்பூ மாரி பெய்தனர் கெழுமி விண்ணோர். 434



தன்மமுந் தவமு மோங்கித் தழைத்தன வருள்மெய் வேத
கன்மமு மொழுக்கும் வல்லே கதித்தன கருணை பூத்த
நன்மையு மெய்மை தானு நடநவின் றுலக மெங்கும்
வன்மமும் பகையுந் தேய வளர்ந்தன மருவி மாதோ. 435

அறந்தலை யெடுத்த தொல்லை யாரணத் தழனி யோங்கிச்
சிறந்தது ஜென்ம தோடத் தீக்கரு மத்தின் மூழ்கி
இறந்துபாழ் பட்டோ ராவிக் கீறிலா ஜீவன் வந்து
பிறந்தது சுகிர்த போதம் பிறங்கிய தவனி யெங்கும். 436

ஆயபே ரன்பு மல்கு மாழியி னுதித்து மாந்தர்
மீயுயர் விண்ணோ ராக விளங்குபுண் ணியவே தாந்த
ஆயிரங் கரங்க ளோச்சி யலர்பாஞ் சுடரைக் காண்பான்
சேயொளி பரப்பிக் கீழ்பாற் றினகர னுதயஞ் செய்தான். 437

நிருமல மூர்த்தி யேவ நிரையபா தலம்பு குத்தி
வருமமிக் குரத்த பேயை வன்சிறைப் படுத்தி மீண்டு
கருமபூ மியிலே தம்மான் கழனிழல் கருதி வந்த
தருமசக் கரமே யென்னத் தயங்கினன் றபனன் மாதோ. 438

ஜெகமெலாங் கெடுத்த பேயைச் சிதைத்தழற் சிறைக்குள் ளாக்கிச்
சகலமு மடிப்ப டுத்த தன்னொரு குமரே சற்குப் [439
பகவனும் பரம தாதை பரிவுடன் றரித்த வெற்றி
மகிமையொண் மௌலி போலுந் திகழ்ந்தனன் வயங்கு வெய்யோன்.

அலகிலா வுயிர்க ளெல்லா மரும்பெறன் மகிழ்ச்சி பூத்த
குலவுகோ டாதி யாய கொழுங்கடி மலர்கள் பூத்த
விலகரு மவித்தை நீங்கி மெய்யொளி யுளந்தி கழ்ந்த
துலகுசூழ் கங்கு னீங்கி யுதயமுந் திகழ்ந்த தெங்கும். 440

வண்டுணை விரிந்த செந்தா மரைமுக மலர்ச்சி காட்டித்
தண்டலை தாழ்த்தி மென்பூத் தடஞ்சினைக் கரத்தா னல்கி
எண்டகு புள்ளி னாய வின்னிசை யெடுத்துப் போற்றி
மண்டல மடந்தை யீசன் மைந்தனை வணக்கஞ் செய்தாள். 441

மயலுறும் பாவ தோட மருங்கறக் கெடுத்து மாந்தர்
உயவரு நலங்கொண் டைய னுயிர்த்தெழ வூர்த்த நன்மை
வியனிலத் தெங்கு மோடிப் பரந்துடன் விழாக்கொண் டென்ன
துயிலுணர்ந் தெழுந்து ஜீவத் தொகுதிகள் களித்த மாதோ. 442

கண்ணிய நிசிக்குள் ளாய கழிபெருந் துயிலை வீசி
எண்ணிலா வுயிர்கள் காலை யெம்பலோ டெழுந்த காட்சி
மண்ணியல் வினையின் மாய்ந்த மன்பதை யுயிர்த்தெ ழுந்த
புண்ணியர் தமக்குள் ளாகப் புத்துயி ரடைந்தாற் போலும். 443

எந்தவா றடையு நம்பி லீறிலா ஜீவ னென்னுஞ்
சிந்தனை மருளே னம்மான் புண்ணியம் ஜீவர்க் கெல்லாஞ்
சொந்தமாம் விசுவ சித்தோர் சுவர்க்கபே ரின்பந் துய்ப்பர்
அந்தரி யாமி யேசு வென்பதை யயரே லைய. 444

வரைவின்றிக் கிருபை யார்க்கும் பொதுவென வழுத்தி னாலும்
பரமன்முன் குறித்தோ னுள்ள மொன்றிலே பழுக்கும் பத்தி
தரணிவான் கிரண மெந்தத் தலத்தினுந் தங்கு மேனும்
இரவிகாந் தத்தி னன்றோ விருங்கனல் பிறக்கு மம்மா. 445

ஒருநரன் வழியே பாவ முலகத்தை யுடற்று நிற்ப
ஒருநர தேவ னீட்டும் புண்ணிய முலகுக் கந்தப்
பருவரல் துடைத்து நித்ய பரகதிப் பயனை நல்கல்
திருவருண் மாட்சிக் கேற்ற திவ்விய முறையென் றோர்தி. 446

நம்பிரா னுயிர்த்தெ ழுந்த நலம்பெறு முகூர்த்தந் தன்னில்
அம்புவி யதிர வஞ்சிக் காவல ரயர்ந்து வீழ
உம்பர்நின் றிழிந்த தேவ தூதரோ ரிருவ ரொல்லை
இம்பரிற் சேம வைப்பை யெதிர்ந்தனர் பகைவ ரஞ்ச. 447

இருள்புலர் காலை கண்ட வேந்திழை மாரோர் மூவர்
தெருளுறீஇ யெழுந்தெம் மையன் சேமவைப் பதனை யண்மி
மருளறச் சமாதி வாயில் திறவுண்ட மாபை நோக்கி
வெருளுறீஇக் கலங்கி நின்றார் வெய்துளந் திகைத்து மாதோ. 448

ஆயிடை யருகர் நின்று மவிரொளி மின்னி னார்ந்த
தூயுடை பரித்த தேவ தூதரோ ரிருவர் தோன்றி
நீயிரிச் சேம வைப்பி னேடுவ தெவன்கொல் ஜீவ
நாயகன் றன்னை முன்ன நவின்றவா சகத்தை யோர்மின். 449

ஈண்டுளா ரல்லர் ஜீவ னியைந்தெழுந் தருளி னாக்
காண்டகு நம்பி நும்முன் கலிலெய நாடு சேர்வர்
பூண்டமெய் யன்ப ருக்குப் புகலுமிப் புதுமை யென்னாச்
சேண்டலத் தெழுந்து போனார் நிகழ்ந்தவை தெரியச் செப்பி. 450



## வேறு.

உன்ன தேசனு யிர்த்தெழுந் தாரெனச்
சொன்ன சொல்லமு தஞ்செவி தோய்தலும்
மன்னு நித்திய வாழ்வுகை வந்தெனப் 451
பொன்ன னார்க்குட்சி றந்தது புத்துயிர்.

வள்ளல் சொற்றவ சனமும் வைகறைப்
பள்ளி நின்றெழு பான்மையுந் தம்முளே
உள்ளி யுள்ளத்து வட்டெழு மோகையுந் 452
தெள்ளி தச்சமுங் கொண்டுதி யங்கினார்.

உரையி றந்தவு வகைப்பெ ருங்கடல்
கரைபு ரண்டுக தித்ததுக் காக்கினி
வரைவின் மாய்ந்திட மெல்லிய லாரெழுந் 453
துரைசெய் வாந்திருத் தொண்டர்க்கென் றோடினார்.

தூதர் சொற்றசு மங்கல வார்த்தைகொண்
டேத மில்லவ ரேகுழி யெம்முயிர்
நாதன் கண்ணெதிர் தோன்றிந லங்கிளர் 454
மாத ரீர்நன்கு வாழ்கென வாழ்த்தினார்.

அருளின் வாழ்வைய றங்கிள ராரணப்
பொருளை யன்பின்பு ணரியைப் புங்கவர்
தெருளுஞ் சின்மய தேசிக மூர்த்தத்தை 455
மருளொன் றின்றிம டந்தையர் நோக்கியே.

உழுவ லன்பொடு ளங்கனிந் தொல்லெனக்
கழுதின் வன்றலை யைத்தெறு காற்றுணை
தொழுது வீழ்ந்தனர் பன்முறை தோத்திரித் 456
தெழுது பாவையன் னாரினி தேத்தினார்.

நன்று யாவுந விலுறு சீடருக்
கின்றி யம்பியெ னைக்கலி லேயநாட்
டொன்ற வின்னுமி னுள்ளங்க லங்கன்மின் 457
என்று ரைத்துக்க ரந்தன ரெம்பிரான்.

ஓகை மாநற வுண்டுக ளித்தவத்
தோகை மார்பனெ ருதிருத் தொண்டர்பால்
ஏகி யீசனெ ழுச்சியும் யாவையுஞ் 458
சோக நீங்கவ குத்தனர் சொல்லினார்.

அணங்க னாருரை கேட்டுமெய் யாரணக்
குணங்கள் பூத்தகு ருத்துவ ராருயிர்
உணங்கி மீண்டிங்கு யிர்த்தெழ லொல்வதோ
இணங்கு றாதென வெய்தின னையமே. 459

முற்ற றிந்தமு ழுமுதன் முன்னுறச்
சொற்ற வாய்மையு முள்ளிலர் தொக்குடன்
இற்றி துண்மையின் னேதனி யீமத்தின்
உற்ற றிந்திடு வாமென வோடினார். 460

ஒன்று மன்பனு லம்பொரு பேதுரு
என்ற சீடரி ருவரு மீமத்திற்
சென்ற கத்துறத் தேடினர் காண்கிலர்
மன்றல் யாக்கையைச் சிந்தைவ ருந்தியே. 461

திருமி யேகினர் சீடர்ம கதலேன்
ஒரும டந்தைநம் முன்னத ஜீவனைக்
கரும பூமியிற் கண்டருள் பெற்றுடன்
தரும சீலனைச் சார்ந்தனள் சாற்றினாள். 462

தாயை நாடிய கன்றெனத் தற்பரன்
சேயை நாடித்த விக்கின்ற சீடனுந்
தூயன் மூழ்குது யர்க்கட னீத்துய
நாய கன்றிருச் சேவையை நல்கினார். 463

எம்ம வூருக்கன் றேகிய சீடரின்
மம்மர் நீங்கம திவிளக் கேற்றியும்
அம்ம வங்கவ ரோடுண வாற்றியுஞ்
செம்மல் சிந்தைதெ ருட்டினர் செவ்விதின். 464

ஈண்டு காட்சியெ திர்ந்தவ ரெய்தியாம்
மீண்டெ ழுந்தருள் வித்தகன் றன்னைநேர்
காண்டல் செய்துட னுண்டுக ளித்தனம்
மாண்ட போதன ரீரென்று வாழ்த்தினார். 465

தக்க சான்றிது வென்னினுந் தம்முளே
புக்க வையம்பொ திந்துபு றஞ்செலா
தொக்க வாங்கொரு றையுளி னுள்ளுறத்
தொக்கி ருந்தனர் பன்னொரு தூயரும். 466



ஆன போழ்தத்த டியவர் நாப்பணே
தூன லந்திகழ் மேனியிற் றோன்றிநந்
தின ரக்ஷக தெய்வத மெய்ச்சமா
தான மல்கித்த ழைக்கவென் றாரரோ. 467

அண்டர் நாயகன் றோன்றிய லரிதழ்
விண்ட வாய்மொழி கேட்டும்வி ழிக்கெதிர்
கண்டு மின்னுங்க லங்கின தன்றிமெய்த்
தொண்ட ருள்ளந்து றந்தில வையமே. 468

ஐய முந்திகி லுங்கலந் தம்புவி
உய்ய வந்திங்கு யிர்த்தெழுந் துன்னத
தெய்வி கந்திகழ் மேனியைத் தேர்கிலார்
வெய்ய வாவியி தென்றுவெ ருண்டனர். 469

சிந்தை தேருந்தி ருத்தகு தெய்விக
மைந்த னோர்ந்தும னங்கலங் காதிர்நீர்
எந்த வாவியும் யானுறு மானவ
விந்தை யாக்கைப டைத்தில மெய்ம்மையால். 470

பாரு மின்பரி சித்தென்ப தாகியை
ஒரு முன்னுரை யானன்றி யுண்மைவே
றுரு மில்லர்மற் றையுற லீரெனாத்
தேரு மாறுதெ ருட்டினர் சிந்தனை. 471

மேலு மேலும்ப லமுறை வித்தகக்
கோலங் காட்டிக்கு ரவர்க்குக் கோதறு
சீல மல்கத்தெ ரித்தனர் செம்பொருள்
ஞால மீதொரு மண்டல நாடியே. 472

ஆதி மெய்யடி யார்திறத் தன்றியும்
பாதி யாயிர வர்க்கொரு பக்கலிற்
பூத லத்திலு யிர்த்தெழு புண்ணிய
நாதன் சேவைய ளித்தனர் நன்குற. 473

இத்தி றங்கிறிஸ் தியேசுவி னீறிலா
மெய்த்த வத்திரு மேனிவி ளங்கலிற்
சித்த சஞ்சல நீங்கித்தி கழ்ந்தனர்
சுத்த மெய்விசு வாசத்திற் றேமிலார். 474

அஞ்சி நெஞ்சம ழுங்கிய யர்ந்துவீழ்ந்
தஞ்ச காவல ரோடியு லப்பிலான்
எஞ்சு ருதவெ ழுச்சியும் யாவையும்
வஞ்ச கக்குர வர்க்குவ குத்தனர். 475

பங்க முற்றப திதர்ப லர்குழீஇச்
சங்க முற்றுநந் தாபத ரேகாந்
தங்கம் வெளவிய கன்றன ரென்னவவ்
வெங்க ணூர்க்குவெ றுக்கையை வீசினர். 476

களியர் பொய்ப்படு கட்டுரை யோபுவி
தெளியுந் தெய்விக மெய்ம்மைசி தைத்திடும்
அளிய புன்மதி யாதித ருக்கனர்
ஒளிபு தைந்திடு மோவிர லொன்றிலே. 477

மன்ன னஞ்சிவ தீதுள மாழ்கினன்
ஒன்ன லார்நெஞ்சு ரங்கிழி பட்டனர்..
பன்ன லாந்தர மன்றுவெம் பாழ்மதி
துன்னி யோரெவ ருந்துணுக் குற்றனர். 478

பத்தர் யாரும்ப வித்திர சிந்தையின்
உத்த மவிசு வாசத்து ரத்தலின்
மத்தர் வாயடை பட்டும றங்கிளர்
சித்த மாழ்கிய டங்கிய செவ்விவாய். 479

வேறு.

உம்பர் நாயக னுயிர்த்தெழுந் தருளிய வுண்மை
இம்பர் மெய்ப்படுத் தீரிரு பதுதினத் திறுதி
கொம்பி ருவிழிந் தொழுகொலி வாசலங் குறுகி
நம்பு தொண்டர்க்கு வேதியர்க் கிவையிவை நவிலும். 480

நண்பு ளீருல கெங்கணு நாசமூ ஊங்கட்
கெண்பெ றுஞ்சுவி சேஷத்தை யியம்புமி னிதயக்
கண்ப டைத்தவன் கதிநலம் பெறுகுவன் காணும்
பண்பி லாதவ னுக்கினைத் தீர்ப்பினுட் படுவான். 481

கண்டு கேட்டமெய்ச் சான்றுநீர் கருதிலென் றந்தை
விண்ட வாறினி யருட்பலம் விண்டலத் திழிந்து
மண்ட லத்துமை மருவுமட் டெருசலே மருவித்
தொண்ட ரீர்மலங் காதவண் டரித்திருந் துன்னி. 482



ஒன்றி நும்முட னிருப்பன்யா னுலகமுள் ளளவும்
என்று வாய்மையி னிலகுசெவ் வாய்மலர்ந் தியம்பி
நின்றெ ழிற்றிருக் கரங்களை வானுற நிமிர்த்தி 483
நன்று மங்கல விடையரு ளாசியு நவின்றார்.

ஆசி மங்கள சாதன மருளிய வமையம்
மாசி லாவருண் முகிலையோர் மழைமுகில் வளைப்பத்
தேசு மல்கிய திருவுருக் காண்கிலார் சீடர் 484
மூசு பைம்புயல் விசும்புற முடுகுதல் கண்டார்.

மிக்க பேரதி சயத்தொடு மேலுற நோக்கித்
தொக்கு நின்றவே தியர்மருங் கோரிரு தூதர்
புக்கிவ் வாண்டகை யேகிய புதுமையே போல 485
மைக்க ரும்புயன் மீதுற மீண்டினி வருவார்.

என்கொல் வானுற நோக்கிநீர் நிற்பதிங் கென்று
மின்கு லாவிய வுடையினர் வெள்ளிடை கரப்பப்
புன்க ணோடிடி யவரெலாம் பொருப்பைவிட் டகன்று 486
நன்கொ ருப்படு மனத்தராய் நகரியின் மேவி.

நம்பி ரான்றிரு வாக்கினி னலந்திக ழாவி
இம்ப ருற்றிடு காறுமா லயந்தரித் திருந்து
பைம்பு யற்றிர ணேக்குவான் பயிரெனக் குரவர் 487
உம்பர் நோக்கிய சிந்தைய ரொருங்குதொக் கிருந்தார்.

மேக வாகன ரூடராய் விட்புலத் துருவி
மாக மீதுமீ துயர்பதம் யாவையும் வரைந்து
சோக நீங்கிய சுரகணந் தொழுதுவாழ்த் தெடுப்ப 488
ஏக நாயகன் சந்நிதி யடைந்தன னெம்மான்.

ஒரும கன்பா திரித்துவத் தொருத்துவ ருரிமைத்
திரும கன்றம தாணையி னெழுகிய செல்வன்
கரும பூமியிற் பிரிந்துபோய்க் கடுந்துய ரடைந்து 489
வரும கன்னெனிற் றுதையி னுவகையார் வகுப்பார்.

புனித மாயுயர் போதமாய் விளங்கிய புத்தேள்
கனித னீர்மையிற் காதலற் குவந்துகை யளித்த
தனித [illegible]ரு பாசனந் தன்னில் 490
இனிது வீற்றிருந் தருளின[illegible]ீசன்.

சந்த தம்நர ஜீவருக் கிரக்ஷணை சமையச்
சுந்த ரத்திரு மேனியிற் றுலங்குமைங் காயந்
தந்தை யார்திரு விழிப்படுத் தின்னருள் தழைப்ப
விந்தை யாகமன் றுடலே நம்பிரான் வேலை. 491

மூன்றொன் றாகிய முழுமுதன் முந்துநின் ணயம்போல்
தோன்றல் வேண்டலிற் றுதையார் தூயநல் லாவி
ஆன்ற ஜீவகோ டிகளுய மெய்யறி வளிப்பான்
என்று வந்தரு ளுருக்கொடு மகிதலத் திறுத்தார். 492

கோதி லாத்தவம் புரிந்துதே வாலயங் குழீஇய
ஆதி தேசிக ரிடத்தனல் வடிவமா யமர்ந்து
பூத லத்தினங் கிறிஸ்துவின் புண்ணியம் பொலியக்
காத லாய்வர மளித்தனர் கதிவழி காட்டி. 493

அன்று தொட்டருட் குருபரம் பரைநிய மத்தால்
இன்று காறுநின் றவித்தையை யிகலற நூறி
ஒன்றி யாலம்வித் தீண்டல்போ லுலகெலாம் பரம்பிக்
குன்று றுதுமெய்த் திருச்சபை குலவுகின் றதுகாண். 494

அனந்தர் நீக்கிமெய் யறிவினைக் கொளுத்தியாண் டகைபான்
மனந்தி ருப்பிர க்ஷணைவிசு வாசத்தை வளர்த்துத்
தினந்தி னம்புதி தாக்கியான் மாக்களைத் தெருட்டல்
அனந்த மங்கள வாவியி னருட்செய லறிதி. 495

இரக்ஷணிய சரிதப் படலம் முற்றிற்று.

## விசிராந்திப் படலம்.

இத்திறந ராத்துமவி ரக்ஷணைமு டித்த
வித்தகச ரித்திரம்வி ரித்தினிது ரைக்க
உத்தமகி றிஸ்தவனு ணர்ச்சியொடு கேட்டே
பத்திமுக நோக்கிவிந யத்தொடிவை பன்னும்.



பூவலய முய்யவரு புண்ணியமு நித்ய
ஜீவநிலை யும்மினிது சித்திபெறு மாறும்
ஓவறவி ளக்கினையி தோர்ந்தளிய னுற்ற
ஆவதுகொ னிற்கொருகைம் மாறுபிறி தம்மா. 3

பண்டைமறை பன்முறைப டித்துமுள னேனும்
ஒண்டொடிநின் வாய்மொழிக ளுட்பொருளு ணர்த்தும்
எண்டகுவி ளக்கமித யத்தொளிர வைத்தாய்
அண்டருல கெய்துவகை யும்மவிவ தின்றால். 4

நன்மையளி யேமுறந லந்திகழு நம்பன்
கொன்மலித ருங்குருசி லேகுருதி சிந்தித்
தன்மனமு வந்துதலை சாய்த்ததிருக் கோலம்
என்மனவி ழிக்கெதிரி லென்றுமுள தெம்மோய். 5

நொந்துவதை யுண்டதிரு மேனியுநொ றுங்கிச்
சிந்துதிர மும்புனித ஜீவவுண வாகும்
சந்ததநு கர்ந்துவரு சாதகம்வி ளைக்கும்
விந்தையுறு சிற்சுகமி தேயென்விசு வாசம். 6

இற்றையிர வும்மிடமி றுத்தரிய போதம்
உற்றதும கேசனரு ளூற்றுதவு பேறும்
நற்றவந லத்தியென நன்றியறி தக்க
பெற்றியன்வ ணக்கமொடு பேசினன்வ ழுத்தி. 7

ஏனையரு நன்றிதெரி யின்னுரையி யம்ப
ஆனனம லர்ந்தனைவ ரும்மமுத மன்ன
போனகம மைந்துவர வுண்டுபுது மைத்த
தூனறிய சிற்சுவைய பானநறை துய்த்தார். 8

மருந்தனைய தைவிகம காகருணை மல்கும்
விருந்தினித ருந்தியபின் மெய்யுணர்வி னுள்ளந்
திருந்தடியர் நன்றியொடு செம்மலையி றைஞ்சிப்
பொருந்துதுதி தோத்திரமு றைப்படிபு கன்றார். 9

மற்றிவைநி கழ்ந்தபினை மாண்பினர்ம கிழ்ச்சி
உற்றொருவ ருக்கொருவ ரன்பின்விடை யுய்ப்ப
நற்றவனு மங்கவர்ந யந்தினித ளித்த
விற்றவழு மாளிகையின் மேனிலைபு குந்தான். 10

ஜீவவச னத்திருவி ளக்கொளிதி கழ்ந்து
மேவகவி ருட்டறவி ளக்கவிசு வாசத்
தாவலொடு மாண்டவரு ளாசனம டுத்துப்
பாவலர டைக்கலவி யற்றமிழ்ப டிப்பான். 11

## தேவாரம், கையடைப்பதிகம். (பண், தக்கராகம்.)

1. ஓதியே சுருதி தினந்தினம் படித்து முணர்விலா துலகொழுக் குவந்து
நீதிலே பயின்று செந்நெறி யிகந்த தீயனே னுய்யுமா றறியேன்
கோதிலா நீதிக் கொழுங்கதிர்ப் பிழம்பே குணிப்பருங் கருணைவா ரிதியே
ஆதியே யடியே னின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

2. பத்தனாய்ப் பாடேன் சுத்தனா யொழுகேன் பகலெலாம் பாவமே பழகி
எத்தனாய்க் கழித்தே னின்றுளே னானை யிலனென வெண்ணவும் படுவேன்
பித்தனேற் குனது பேரரு ளல்லாற் பிழைக்குமா றில்லையா தலினால்
அத்தனே யடியே னின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

3. கலைக்கணுக் கரிய காட்சியே சிரத்தைக் கண்ணினுக் கெளியகண் மணியே
புலைக்குடிலோம்பும் புன்மதி யதனாற் பொருவரும் பொழுதைவீண் போக்கி
உலைக்கம டம்போ லுலகமா யத்தை யுவந்தநின் மூடனென் றுளச்சான்
றலைக்கநொந் தடியே னின்சரணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

4. மண்டலத் தெனைப்போற் பாவியுமில்லைமற் றெனைப் பொருவதோர் தெய்வம்
உண்டொருக் காலென் றுணர்வுளா ரெவரு முரைத்திடா ருண்மையா தலி[னால்
தொண்டருக் கிரங்கி மநுவுரு வெடுத்த தொல்லைமூ லப்பரஞ் சுடரே
அண்டருக் கரசே நின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

5. வெப்புறு பாவ விடத்தினைப் பருகி மெய்யறி விழந்தனை மறந்தேன்
அப்புற வுலக மடுக்கிலென் செய்கே னுண்டெனக் காதர வியாரே
ஒப்பற வுயர்ந்த வொருதனி முதலே யுணர்வுடை யோலத்துக் குருகும்
அப்பனே யடியே னின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

6. எனதியானென்னு முடல்பொரு ளாவி யிவையொரு மூன்றையு மின்னே
உனதென வுனக்கே கையளித் தெளியே னுன்னருட் பற்றையே யுவந்து
மனதிதத் துவங்கட் கதீதமா யன்பர் மனத்தவி சுகந்துவீற் றிருக்கும்
அநாதர க்ஷகனே நின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

7. படித்தொழும் பாகிப் பதைத்துழல் வேனைப் பரிந்துன தருள்விழி பரப்பிக்
குடித்தொழும் பாக்கிக்கொண்டகோமானே குன்றிடாவிழுநிதிக்குவையே
மிடித்தொழும் பினையு மகற்றிடா தென்னோ விநயமே தும்பிறி துளதோ
அடித்தொழும் பலனோவப்பனே யடியேற் கஞ்சலென் றடைக்கல மருளே.



8. உருளுறு சகடம் போலவென் மனமு மொருவழி நிலையிலா துழலும்
மருளுறு முலமோ டலகையுங் கொடிய மாயமாம் வலையிடைப் படுத்துந்
தெருளுறு பொருளே நின்னடிக் கன்பு செய்தநா னுய்யுமா றெங்ஙன்
அருளுறு மெந்தாய் நின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

9. என்புதோல் போர்த்த யாக்கையைச் சதமென் றெண்ணியாத் துமத்தை [யெட் டுணையும்
முன்பினெண் ணாது புரிந்ததீ வினையென் முன்புநின் றுடற்றலான் முதிர் [பேர்
இன்பநாட் டரசே புண்ணியப் பொருப்பே யிருநிலம் புதைத்தெழுந் [தோங்கும்
அன்பினார் கலியே நின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

10. புறத்தொரு புகலு மிலையுனை யல்லாற் பொய்யுறு மலகையின் புணர்ப்பாம்
முறத்தினிற் புடையுண் டயருவேன் கருணை முளரியை மூடுதேன் முறை [யோ
மறத்தியோ மாறு மெய்த்திரு வாக்கை வரதனே யபயனே வண்மை
அறத்தனி முதலே நின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

11. மருண்மனோ வாஞ்சைச் சுழலிலே யுழலும் வறியபுன் றிரணமென் னாவி
இருண்மலோ ததிபுக் கழுந்திடி லந்தோ வென்செய்கே னேழை நின்னடி [மை
தெருண்மனோ கரமே ஜீவதா ரகமே திகழ்குண மேருவே சீர்சால்
அருண்மகோ ததியே நின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கலமருளே.

12. வேதமே வேத விளக்கமே விளக்கின் விழுத்தகு ஜோதியே விமல
போதமே போதங் கடந்தமெய்ப் பொருளே பொருள்புலப் படவெளிவந்த
நாதமே யூத குலநரா திபனே நன்னெறி பிழைத்துல குழலும்
ஆதனா னடியே னின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

13. வாழியா ரணநூல் வரம்பெலா மிகந்து மதியிலாப் பேதையான் மயங்கிக்
கீழியான் பிழைத்த பிழையெலாம் பொறுத்துன் கிருபைதந் தருளெனக் [கெஞ்சி
ஊழியா யூழிக் குறையுளா யெவையு முலப்பினு முலப்பிலாத் தரும
ஆழியா யடியே னின்சர ணடைந்தே னஞ்சலென் றடைக்கல மருளே.

தேவாரம் முற்றிற்று.
விசிராந்திப் படலம் முற்றிற்று.

## காட்சிப் படலம்.

கையடையெ னப்புனைசு வின்கொள்பதி கத்தை
மெய்யுணர்வோ டுள்ளுருகி விண்டுமறை வாணன்
மையறவி ளக்குவிசு வாசவனை மேவிச்
செய்பகன்மு கிழ்த்தமைதி யோடுதுயில் செய்தான்.

கண்டுயிலி லாதுலகு காவல்புரி கின்ற
அண்டர்பெரு மான்சரண டைக்கலம் மைந்தா
தண்டாள வெண்ணகையர் தத்தமத ரங்கிற் 2
கண்டுயில்வ திந்தனரக் கங்குல்கழி காறும்.

எண்ணில்பல கோடியபி ராணிகளு மெல்லாங்
கண்ணிமைய டைத்தனவ டைத்தனக பாடம்
அண்ணலரு ளாணையின ருங்கடிய மைந்த 3
விண்ணிலவு தூதர்கண யெங்கணும்வி ராய.

பின்னுறுவ தோர்கிலர்பெ ருந்தனமி டுக்கர்
முன்னுறவி யற்றுவர்பல் தீங்குமுறை பேணார்
துன்னிருளு மப்பரிசு தொல்கவின ழித்த 4
மன்னுலகை யென்றெதிரு மாறுணர்கி லாதே.

அற்புணரி சுண்டியகி லந்திகழும் வண்ணம்
பிற்புணரும் வைகறைபி றங்கியது வஞ்சர்
சற்பனையின் வெவ்விடர்ச திக்கவரு மேனுந் 5
தற்பரன ருட்கெதிர்த ரித்தியல்வ தேயோ.

சூழிகலி ருட்பகைது மித்தறவெ றிந்து
பாழியுல கத்தினைவி ளக்குமோர்ப தங்க
ஆழியர சற்குரிய கட்டியம டுத்துக் 6
கோழிமுத லாயினவி ளித்தனகு லாவி.

சஞ்சலமு டித்தலைத ரிக்கவச மின்றி
எஞ்சியவி ருஞ்சுடரெ ழுந்ததுகு ணக்கில்
நஞ்சிருளி லேதனிந டந்தமறை வாணன் 7
அஞ்சரிதம் யாதெனவ டுத்தறிகு வான்போல்.

வலிந்தொளிகி ளம்பியுத யந்திகழ வல்லே
மெலிந்திருளி ரிந்தனது யின்றணவி ழித்த
மலிந்தனவ யின்றொறும்வ ழங்குபல வேலை 8
பொலிந்தனத ராதலமோர் புத்துலக மேபோல்.

பத்திமதி யூகிவிசு வாசிபர மார்த்தி
வித்தகிசி நேகிதயை வேதவதி யாதி
உத்தமிக ளுன்னதம கிபதியை யுள்ளிச் 9
சித்தமொடு நித்திரைதெ ளிந்தனரெ ழுந்தார்.



காலையெழு முன்னிரவு கண்டுயில்பொ ருந்திச்
சாலவரு டந்துசம ரக்ஷணைச மைத்த
சீலமிகு ஜீவபதி சேவடிப ழிச்சிக்
கோலமறை யோனுணர்வு கூடினனெ ழுந்தான். 10

தேவாரம், காலைத்துதி. (பண், காந்தாரம்.)

---

1. எந்தையே ஸ்தோத்திர மிகலின் மன்பொதுத்
தந்தையே ஸ்தோத்திரஞ் சருவ லோகமும்
விந்தையாய்ப் படைத்தருள் விமல ஸ்தோத்திரம்
அந்தணு ஸ்தோத்திர மனந்த ஸ்தோத்திரம்.

2. பொருட்படு பொறிபுல னொடுங்கிப் பொன்றல்போன்
மருட்படு துயில்கொளீஇ மறந்திக் கங்குல்வாய்
இருட்பெருங் கடல்குளித் தேனைக் காத்தனை
அருட்பெருங் கடலனு யனந்த ஸ்தோத்திரம்.

3. எத்தனை யோவிபத் திரவிற் றேர்கிலேன்
அத்தனை யுந்துரந் தருள்வி ழிக்கடை
வைத்தெனக் காருயிர் வழங்கிக் காத்தனை
அத்தனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம்.

4. என்னவெம் மாத்திர மேழை யானுன
புண்ணிய விழித்துணை பொருந்து றுதெனைக்
கண்ணிய துயிலிடைக் காத்த ளித்தனை
அண்ணலே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம்.

5. கனவிரு ளகற்றியிக் காலை யுய்த்தல்போன்
மனவிரு ளதனையு மாற்றி நீதியின்
தினகர னருள்வழி செலுத்தி யென்னையாள்
அனகனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம்.

6. கண்டுயி லீத்ததுங் கருணை மைந்தனைக்
கொண்டெனை மீட்டதுங் குறிக்கொண் டன்பொடு
தொண்டனெக் கியற்றமெய்த் துணிவு தந்தருள்
அண்டர்நா யகவுனக் கனந்த ஸ்தோத்திரம்.

7. மாதிரம் யாவையும் வளைந்த வல்லிருட்
போதிலே பலர்புக ருலகம் போகவும்
பேதையேற் கெமரொடும் பிழைப்பை யூட்டினை
ஆதியாய் நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம்.

8. ஐயமே விடமர ணாந்த காரம்வந்
தொய்யென மூடிநின் றுடற்று மாயினுந்
துய்யபங் கயமுக ஜோதி காட்டியாள்
அய்யனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம்.

9. மைப்படு கங்குலைக் கடந்துன் வண்மையால்
இப்பகல் கண்டுனை யேத்த நின்றனன்
எப்பரிசி யான்கைமா றியற்று கேனென
தப்பனே நின்னடிக் கனந்த ஸ்தோத்திரம்.

10. திகிலுலாம் பவவிருள் சிதையத் திவ்விய
சுகிர்தமார் தருமொழிச் சுருதி வான்சுடர்
மகிதல மெங்கணு மலிய நல்குவாய்
அகிலலோ கேஸ்வர வனந்த ஸ்தோத்திரம்.

தேவாரம் முற்றிற்று.

## வேறு.

காத்தருள்பு ரிந்தகரு ணைக்கடவுள் வேந்தன்
ஏத்தரிய சேவடியி றைஞ்சியித யத்துப்
பூத்தவுணர் வோடுரிய பொற்புறுத வத்து
மாத்தகைய ரோடளவ ளாவினன்ம கிழ்ந்தே. 11

தம்மகவு கண்டுருகு தாயரென வன்பின்
அம்மனைய ருங்கசிய கத்துவகை பொங்கிச்
செம்மொழிப கர்ந்துமறை யோய்சிறிது போழ்து
மம்மரக லிம்மனைவ திந்தகறி யென்றார். 12

மாதவவ ழிப்படுகை வல்யவயி ராக்ய
வேதியனு நன்றெனவி ருப்புடன்வி ளம்ப
மேதகைய சிற்சுகம்வி சித்தெனவி ளங்கும்
போதமுறு புத்தகவ ரங்குழைபு குந்தார். 13

வரங்குலவு புத்தகம விந்துமதி தோயும்
அரங்குலௌஉ கீகவச டற்றெழில மைந்த
உரங்குலவி நின்றதையு ணர்ந்துமறை வாணன்
பரங்குலவு ஞானமுறை பள்ளியறை யென்றான். 14

அருந்தவம டந்தையர றப்புறம மைத்த
பெருந்தகைகு ணாதிசய மாதியபி றங்கித்
திருந்துமுறை சிற்சிலதி றந்தினிய செஞ்சொல்
விருந்தினனு ளங்கொளவி ரித்திடுவ தானார். 15



அலகில்புவ னங்களைய மைத்தியல றத்தை
நிலையுறநி றுத்தியரு ணீதிபுரி சீயோன்
மலையரச னோர்குமரன் வந்தவத ரித்த
குலவரிசை யீதெனவி ளக்கினளோர் கோதை. 16

ஆக்கரிய சத்திரமி தாக்கியவ நாதி
கோக்குமர னீண்டுபுரி கோதில்கிரி யாதி
மீக்கருணை மீட்டவர்பெ யர்த்திறம்வி ளங்க
வாக்கியமெ டுத்தினிது ரைத்தனளோர் மங்கை. 17

மீட்சியுறு மன்பதைகள் வீட்டுலக மேவி
ஆட்சியுறு மாளிகைய னந்தமழி வில்லா
நீட்சியுறு சிற்சுகநி றைக்கநிறை வெய்தி
மாட்சியுறு மென்பதைவ குத்தனளோர் மாது. 18

சத்துருபு றக்கொடைத ரச்சமரில் வென்று
பத்தர்சிலர் ராஜ்யபரி பாலனந டத்தி
முத்திநக ரத்திறைமொ ழிந்ததிரு வாக்குத்
தத்தவர முற்றபடி சாற்றினளோர் தையல். 19

அண்டருல கத்தரச னாணையின மைந்த
தொண்டர்சில ரங்கியெரி சூளையுளு லாவிச்
சண்டவரி மாவொடுத ரித்ததையெ டுத்து
விண்டனள்ம னங்கனாய மெல்லியலொ ருத்தி. 20

நண்ணலர டார்ந்துயிர்ந டுங்கியுட னைய
எண்ணரிய வாதைகளி யற்றியடு போழ்தும்
அண்ணலடி யார்பலர றத்திறமி ழுக்கா
வண்ணமிதி தென்றுரைவ குத்தனளோர் வல்லி. 21

வானமொடு பூமிநிலை மாறுகினு மாறா
மேனிகழ்வ தென்றுரைசெய் சம்பவ விதங்கள்
தானமிசை முற்றிமுறை சான்றுபடு மென்னா
ஞானமிகு தீர்க்கமொழி காட்டினளோர் நாரி. 22

கொன்புலையர் பைப்பயுவ ளர்த்தெரிகொ ளுத்த
என்புகரு கித்தனுவெ ரிந்துபடு போழ்தும்
மன்புதல்வ னன்பையுண்ம தித்திருவர் மாய்ந்த
அன்பின்வலி நன்குறவி ளக்கினளோ ரம்மை. 23

தற்பாகு மாரனதி சற்குணவி காசம்
அற்புதவி தங்கள்பர மாச்சரிய ஞானம்
பற்பலசு கிர்த்தியப லங்களிவை யெல்லாம்
பொற்புறவி ளக்கினர்பல் பூவையர்கள் மாதோ. 24

இத்திறம தங்கியரி யம்புமொழி கேட்டும்
உத்தமமொ ழித்திறமு ணர்ந்துமறை வாணன்
வித்தகம றைப்பொருள்வி ளக்குமிதி காச
சத்தியம றிந்துமகிழ் வோடுதரி கொண்டான். 25

போயதொரு நாண்மறுப கற்பொழுது போந்து
மேயதென மாதவிகள் வேதியனோ டேகித்
தூயதிரு மந்திரசு யம்பிரபை தோய்ந்த
ஆயுதவ ருக்கநிறை சாலையைய ணைந்தார். 26

## வேறு.

கண்கவருங் கவினார்ந்த கனகமணி மண்டபத்துப்
பண்கவரு மொழிமாதர் பலர்குழுமிப் பணிந்தேவ
விண்கவர மிளிர்பத்தி வேதியன்றன் முகநோக்கி
எண்கவரும் படைக்கலங்க ளியன்முறைமை யெடுத்துரைப்பாள். 27

போராழி கரைபுரண்டு பிறழாமற் பவஞ்சத்தை
ஓராழி யெனவுருட்டி யுதித்தொடுங்கித் தினஞ்செய்வான்
ஏராழிக் கதிர்நிறுவி யியற்கைமுறை புரிதருமச்
சீராழிப் படையீண்டு திகழ்கின்ற திறநோக்காய். 28

சலங்காட்டி யழிக்காது தயைகாட்டி யரசர்பிரான்
புலங்காட்டிப் புறச்சமயப் புரைகாட்டி யிரக்ஷணிய
நலங்காட்டிக் குணங்காட்டி நயங்காட்டிப் பகைப்புலத்தை
வலங்காட்டி யிழுக்கின்ற மணிப்பாச மிவைகாணாய். 29

பாருதித்த விளவரசன் பகைப்புலத்துக் கொடுங்கூளி
காருதித்த தெனவெதிர்ந்து கைகலப்பக் கொழுங்குருதி
வேருநிக்கப் பொருதழித்து விறல்புனைந்த மேனாளிக்
கூருதித்த படைக்கலங்கள் குறிக்கொண்ட படிகாணாய். 30

ஒருகானம் பெருமானிங் குபவாசம் புரிகாலை
அருகாக வெதிரூன்றி யடாலகை பெருங்காற்றிற்
சருகாகப் பறந்தோடிச் சமர்தொலையத் தனிவழங்கும்
இருகூர்ப்பட் டயங்களிவை யெந்துணைவ வெதிர்நோக்காய். 31



உத்தமர்கை யெடுத்துந்தி யொருபுயங்கப் பஃறலையும்
பித்தளைந்த கொடுங்காமப் பேய்த்தலையும் பிரபஞ்சச்
சத்துருவின் பெருந்தலையுந் தகர்ந்துசித றிடப்புடைத்த
பத்திவயி ராக்யமெனும் பருந்தண்ட மிவைபாராய். 32

வலிந்திழுக்க விழுக்கவலை மானதகோ தண்டமொடும்
நலிந்தனற்கு மிடையாத நார்க்கயிற்று நாணியொடும்
மலிந்துதவு நல்விதய மந்திராத் திரப்புட்டில்
பொலிந்திலங்கு வனவேத புங்கவவிங் கிவைகாணாய். 33

குத்திரமித் தியமாதி கொடும்படைகள் பலவீசி
நித்தியசத் துருவாய நீசப்பேய் மகார்குழுமி
எத்திசையு மலைந்தாலு மிகலழிக்கும் விறலளிக்குஞ்
சத்தியமா மரைக்கச்சை தயங்குவன தனிநோக்காய். 34

ஏவாளை வசப்படுத்தி யிகங்கெடுக்குங் கெடுதோஷி
ஓவாது படைசிதறி யோச்சியெறிந் துடற்றுகினுஞ்
சாவாமற் செய்தருமந் தலைகாக்கு மெனக்காக்குந்
தாவாத விரக்ஷையெனுந் தலைச்சீரா யிவைகாணாய். 35

கரையிகந்த பெருந்துன்பக் கடுங்கூர்முட் கணையானுங்
குரைபழிபொய் நிந்தையெனுங் கொடுஞ்சிலீ முகத்தானும்
வரையினையுந் தரையாக்கும் வறுமைச்சா யகத்தானும்
புரைபடா நீதியெனும் பொற்கவசம் பலபாராய். 36

குருசுயர்த்த பெருமானைக் குறிக்கொண்டு மனந்திரும்பி
விரசுமினோ சுவிசேஷ விபுலத்தென் றோலிடுமோர்
அரசர்பிரா னாழியத்துக் கனவாதா யத்தமென 37
உரைசெறியும் பாதரக்ஷை யுலப்பிலமற் றிவைநோக்காய்.

பெரியபூ தரங்களையும் பெயர்த்தெறியும் பித்தளைந்து
திரிபுவன கோசரத்தைத் திரணமா யவமதிக்குந்
துரியபூ மியைத்துருவிச் சுலவிவரு மன்பினொடு
கிரியைசெயும் விசுவாசக் கேடகங்க ளிவைநோக்காய். 38

நீசனர சியறுலைத்து நிமலாவி கிறிஸ்துவெனும்
ஈசனர சியனிறுவ வெதிரூன்றும் ரணகளத்துப்
பாசறையிற் படைவீரர் படைக்கலமந் திரஞ்செபித்துப்
பூசைபுரி யுபகாரணம் பொலிந்திலங்கு வனபாராய். 39

விண்ணுடுவிற் குணிப்பரிய படைவீரர் மிகுத்திடினும்
எண்ணிறந்த படைக்கலங்க ளேற்றமுறு மிழுக்கிரவால்
கண்ணியகூர் மழுங்காமற் கருதுகுறி விலகாமற்
புண்ணியம்போற் பொருதுவிறல் புனைவனமற் றிவைநோக்காய். 40

வித்தகமெய்ச் சுவிசேஷ விசுவாசி யிவையெல்லாம்
பத்தருக்குப் பொதுவாய படைக்கலங்கள் பராஜீவன்
முத்தருக்கு விறல்வாகை முடிபுனைந்து முனைமுகத்திற்
சத்துருவைப் புறங்கண்ட தனிப்படைக ளிவைபாராய். 41

பங்கமுற வெகிப்திலொரு பதுவாதை விடுத்ததுவுஞ்
செங்கடலிற் பார்வோனைச் சேனையொடு கவிழ்த்ததுவுங்
கங்கைபெருக் கெடுத்தோடக் கருமலையைப் புடைத்ததுவும்
நங்குரவன் விதிக்கிழவன் நடுக்கைக்கோ லிதுகாணாய். 42

மண்டலமெல் லாந்திகைக்க வலஞ்சூழ்ந்து சூழ்ந்துலவிப்
பண்டெரிகோ மதிலிடிந்து பாழாகும் படிபருவக்
கொண்டலிடி முழக்கமெனக் கோத்தபே ரொலிகிளப்பி
எண்டிசையும் புகழ்படைத்த வெக்காள மிதுநோக்காய். 43

வசையாக வறுநூறு மறவோரைச் சம்கார்முன்
இசையாகப் பொருதழித்த தாற்றுக்கோ லிதுகாணாய்
பிசகாது கறுவோடு பெண்ணொருத்தி பிடித்துந்திச்
சிசராவை யுயிர்கவர்ந்த ஜெயமுளைமற் றிதுகாணாய். 44

தொகைகண்டு சொலவரிய பெருஞ்சேனைத் தொகுதியெலாம்
புகைகண்டு மறைவதுபோற் பொருகளத்துத் தொலைவெய்தும்
வகைகண்டு கிதேயோன் வன்கையின் வயப்படையாப்
பகைகண்ட திலையென்னப் பிடிபந்தம் பலகாணாய். 45

நமராய. விஸரேற்கு நடுவணாய்ப் பகையிருட்குத்
திமிராரி யாயுலவி யொருதனியே திறல்காட்டி
அமரரைச் செயங்கொண்ட வந்நாளிற் சிம்ஸோற்குச்
சமராடுங் கைக்கருவித் தாடையெலும் பிதுபாராய். 46

இதங்கொண்ட வருட்டாவீ தெனுஞ்சிறுவ னெதிரூன்றி
விதங்கொண்ட பெருஞ்சேனைப் பெலிஸ்தியர்வெந் நிட்டோட
மதங்கொண்ட பெருங்காய வல்லரக்கன் மடிந்துவிழக்
கதங்கொண்டு வீசியெறி கவண்கற்க ளிவைகாணாய். 47



மங்கலத்தின் னிசைமலிந்த வானுலகத் திளவரசன்
அங்கரத்தங் கொடுமீட்ட வடிமைகளைச் சூறையிட
உங்கரித்துப் பாவநர னுக்கிரத்தோ டெழுநாளிற்
சங்கரிக்க வினியெடுக்குந் தழனிறப்பட் டயங்காணாய். 48

செய்விரவிப் பயிர்வளர்க்குந் தெண்ணீர்போற் படைவீரர்
கைவிரவி யறம்வளர்த்துத் தற்காக்குங் கருணையொடு
மெய்விரவி மிளிர்ஞான வியன்படைகள் வேந்தனவாழ்
பொய்விரவா வருள்வேத புங்கவவிங் குளவென்றுள். 49

என்றினைய பத்தியெனு மேதமறு தவக்கிழத்தி
மன்றிலங்கு வயப்படையின் வரன்முறையும் விவரணமும்
வென்றிபுனை தருமாண்பும் விரித்துரைப்ப வியப்பினொடு
நன்றுகேட் டினிதுவந்து வேதியன்மற் றிவைநவில்வான். 50

அன்னாயிப் பிரபஞ்சத் தாரணியத் தருள்வழியின்
முன்னாகத் துணிந்துசெல முழுதுமெனைத் தெருட்டினவால்
பொன்னாடு புரந்தருளும் பூபதிபுண் ணியத்தமைந்த
மின்னாரும் படைக்கலம்போல் விளங்குநின தருண்மொழியே. 51

அவ்வியமே முதலாய வகத்திருளை யறத்தொலைக்குஞ்
செவ்வியவிம் மணியரங்கிற் செறிந்திலங்கித் திகழ்கின்ற
திவ்வியசர் வாயுதமா வருக்கத்திற் சிறிதொன்றே
வெவ்வியதெம் முனைமுருக்கி விறல்வாகை புனைந்திடுமால். 52

கீர்த்திமலி யிளவரசன் கிறிஸ்துவின்போர்ச் சேவகர்கள்
ஆர்த்தியுடன் றரித்துலவு மாயுதங்க ளிவையென்னிற்
கூர்த்திகைகை விடுத்திறைஞ்சித் தொழும்புகூ டுவதல்லாற்
பார்த்திசையி னெதிர்நிற்கப் படுபகையு முளவாங்கொல். 53

இருண்மேவு பகைதெறவென் றினிதமைத்த விவ்வெல்லாம்
பொருண்மேவு படைக்கலங்க ளொவ்வொன்றும் புநருலகத்
தெருண்மேவு துணைபுரிந்து ஜீவரக்ஷ யளிப்பனவால்
அருண்மேவு பரலோகத் தரசன்சீர் வாழியவே. 54

என்றின்ன பரிசுவியக் தெடுத்தியம்பும் வேதியற்கு
முன்றுன்னு மலைக்காட்சி முறைநாளை மொழிதுமெனாப்
பொன்றுன்னு மெழின்மாத ரவரவர்தம் முழைபோக
நன்றுன்னி விசுவாசி தன்னுறையு ளணுகினனால். 55

வேதியனு மன்றிரவு விழிதுயின்று விடிகாலை
மாதவப்பள் ளியைக்குறுகி வான்முறையஞ் சலிபுரிய
மேதகுநற் றவத்தியாவ் விருந்தினனைக் கொடுசென்று
மீதுயர்ந்த வணிமாட மேனிலைமண் டபத்தணைந்தார். 56

பண்ணாடு மொழிச்சியர்தாம் வேதாந்தப் பளிங்குநிலைக்
கண்ணாடி வழியாக விசுவாசக் கண்கொண்டு
விண்ணாடு புகுஞ்சிகர வியன்கிரியை வேதியனீ
உண்ணாடுங் கருத்தொன்றி நோக்குகவென் றினிதுரைத்தார். 57

வேறு.

சகல கேவல மாதிய தத்துவார்த் தத்தைப்
பகரு நூனெறி பற்றிய பவித்திர னோக்கப்
புகரி லானந்த மால்வரை யியல்பெலாம் பொருந்த
நிகரில் பத்தியா நேரிழை நிகழ்த்துவ தானாள். 58

விண்ணெ றிப்படும் வேதிய மாநுவேல் விளைத்த
புண்ணி யம்புவி போர்த்துமீ தோங்கிய புரைய
மண்ணின் மன்னுயிர் வளம்பெற வழங்குமிம் மலையங்
கண்ண கன்விசும் பணவிநின் றிடுநிலை காணாய். 59

நோன்மை மிக்குயர் வேதிய நுவலரு மாசன்
ஆன்ம கோடிகட் காக்கிய வானந்த மனைத்தும்
வான்மு யங்குமிம் மலையெனத் திரண்டுரு வமைந்த
பான்மை போலுள காட்சியே தெரிப்பன பாராய். 60

கெடுத்து முப்பகை தொலைத்தமெய்க் கிறிஸ்தவ முத்தி
அடுத்த தொண்டர்க்கென் றாக்கிய வானந்த போகம்
மடுத்த நித்திய பேரின்ப மாடமா ளிகைகள்
கடுத்தி லங்குபொற் சிகரங்கள் கணிப்பில காணாய். 61

அனகன் சேவடிக் கன்புசெய் யாரண வமலன்
சினக ரந்திகழ் புயற்றறி நிழலிடு செயல்போல்
வனக ராசல நிரைபொரூஉங் கருமுகில் வளைந்து
கனக மால்வரைச் சாரலிற் கவிவன காணாய். 62

தொக்க பேரிடர் மலைமிதித் தேறிய தோன்றால்
இக்க மாயவெங் கோடையைத் திசைதிசை துரந்து
பக்க மெங்கணு நல்லறப் பயிர்வளஞ் சுரப்பக்
கக்கு தண்ணருண் மழைமுகில் கலுழுவ காணாய். 63



அறங்கு லாமனத் தந்தண வந்தரத் தமரர்
இறங்கி யேறவென் றாக்கிய வேணியீ தென்னப்
பிறங்கு வான்முகட் டிழிந்துநின் றிம்பரிற் பிறழ்ந்து
கறங்கு வெள்ளரு வித்திரள் பொலிவன காணாய். 64

பொருண யந்தெரிந் தவித்தையைப் போக்கிய புலவோய்
அருண யந்தமெய்ஞ் ஞானிய ரகமெனத் தெளிந்து
தெருண றும்புனற் றீர்த்திகை ஜீவனைப் புரக்குங்
கருணை வெள்ளமொத் தலர்வன வயின்றொறுங் காணாய். 65

ஊன ளாவுதூர்க் குணங்கடிந் தொதுக்கிய வுரவோய்
தேன ளாவிய கொழுமலர்ச் செழும்பயன் செருமி
வான ளாவிய ஜீவதா ருவினிழல் வயங்குங்
கான ளாவுதண் ணறுஞ்சுனை மிளிர்வன காணாய். 66

ஞான நாயகன் றிருவடிக் கன்புசெய் நண்ப
மானும் வேங்கையு மொருதுறை நீருண்டு மகிழ்வ
தேனி றாலிழி மதுவொடும் பழநறை தேக்கிக்
கான வேழமுஞ் சிங்கமுங் களிப்பன காணாய். 67

பிள்ளை நீர்மையிற் குணநிலை பிறங்கிய பெரியோய்
கொள்ளை யாடுகோ ணாய்த்திரள் குலப்பகை யின்றித்
துள்ளு செம்மறித் திரளொடு தொடர்புகொண் டுலவிக்
கள்ளு லாமலர்ப் பொதும்பரிற் றுயில்வன காணாய். 68

உச்சி தற்கித யாசன நல்கிய வுரவோய்
செச்சை யாளரி யூனிரை தேர்கில தெருண்டு
கொச்சை யாட்டொடுங் கோக்குலத் திரளொடுங் குழுமிப்
பச்சை நாகிளம் புற்றழை கறிப்பன பாராய். 69

மேம்ப டும்பர சிற்சுகம் விழைந்திடு மேலோய்
தீம்ப யன்கடை வாயிழி யாயர்தஞ் சிறுவர்
தாம்பு றழ்ந்தபுற் றாவொடுந் தொகுகடு விரியன்
பாம்பொ டும்விளை யாட்டயர் பரிசினைப் பாராய். 70

தொல்லை யாரண துருவையா னிரைதுரூஉந் தொறுவர்
முல்லை யங்குழ லிசைக்குறி முறைவழா தொழுகி
மல்ல லோங்குபுல் லாரவுண் டணிநிழன் மறிந்து
கல்ல லைச்சுனை நீருண்டு வருவன காணாய். 71

மன்னு நித்திய ஜீவனை விழைந்தநன் மதியோய்
சென்னி வான்றொடு மாதவப் பள்ளியுஞ் செறிந்த
அந்த லார்துற வாச்சிர மங்களு மறவோர்
பன்ன சாலையு முறைமுறை திகழுவ பாராய். 72

எண்ட போதன விமக்கரு முதிர்ந்தரு ளெழிலி
விண்டு சூத்தநித் திலம்புரை வெண்பனித் திவலை
அண்டர் கோன்படை வீருக் காருணை வாகப்
பண்டு பெய்தமன் னுவினை நிகர்ப்பன பாராய். 73

புன்மை சீத்துமெய்ப் பொருள்கடைப் பிடித்தவண் புலவோய்
நன்மை யேயலாற் றீமையெங் கணுமிலா நலத்தில்
தன்ம மாயசெஞ் சாலிநீர் வளத்தினுற் றந்த
பன்ம ணிக்குலை வயின்றொறும் பொலிவன பாராய். 74

சிறுவை தாங்கிநம் ஜேசுவைப் பின்றொடர் செல்வ
சுலவி வானரத் தொகுதிகள் சோலையிற் றுவன்றிக்
குலவு முட்புறக் கொழுங்கனிச் சுளையுண்டு குதட்டிப்
பலவி னீள்சினை துயல்வரப் பாய்வன பாராய். 75

மடியி லாதுஞல் வேதிய வானராஜ் ஜியத்தின்
குடிகள் செய்கையிற் கொற்றவ னரும்பெருங் குணத்திற்
படியும் வானமும் பரிமளம் பரப்பிடப் பரம்புங்
கடிகொ ணர்தன வனத்தெழில் கவினுவ காணாய். 76

நீங்க கன்றமெய்க் கிறிஸ்தவ செழித்தபூங் காவில்
மாங்கு யிற்குலத் தின்னிசை திசைதொறு மடுத்தல்
ஓங்கு பேரின்ப சிற்சுக முண்டிவண் வம்மின்
பாங்கு ளீரென விளிப்பது போன்றன பாராய். 77

இடர்சு டச்சுட விலங்குபொன் னெனமிளி ரெழிலோய்
அட்ரு மின்சுவை தருவவா ரோக்கிய மமைவ
கெடல ரும்நறும் பாகன கெழுமிய கிளைய
படரு முந்திரிச் செழுங்கொடித் தாறுகள் பாராய். 78

கரவி லாதுளம் பழுத்தமெய்ப் பத்தியிற் கனிந்தோய்
உரவு மால்வரை யோங்கிய தருக்குல முதவும்
விரவு தீஞ்சுவை விழுத்தகு கனிவருக் கங்கள்
பரவு தொண்டர்நற் கருமங்கள் புரைவன பாராய். 79



வைம்பொ னூட்டவர் பரவுமோர் பவித்திர புரியின்
செம்பொ னிஞ்சிமீ துயரிய செழுமணிக் கொடிகள்
உம்ப ரோங்குபைங் கழையர வுரிப்படா முறழ்ந்து
பம்பு கார்மழைப் படலத்தைப் பொதுப்பன பாராய். 80

உத்த மக்கலை ஞானமெய் யுணர்வுநல் லொழுக்கஞ்
சத்தி யந்தவஞ் சாந்தநற் றருமமே தயாளம்
நித்த மங்கள மாகிய குணங்களா னிமிர்ந்து
பத்தி யிற்றிகழ் மாடங்க ளளப்பில பாராய். 81

பன்னு வேதபா ராயண பரக்கநீ பார்க்கும்
மன்னு மானந்த மலைப்பிர தேசமற் றிதனைத்
துன்ன ரும்பரி சுத்தசேத் திரமெனுஞ் சுருதி
பொன்னி லத்திள வரசனே சதோதயம் புரப்பர். 82

காவ லன்றிருக் கருணையைக் கடைப்பிடித் துள்ள
ஜீவன் முத்தரே குடிகளங் கியல்வது செங்கோல்
பாவ தோடங்கள் யாதுமின் றுதலிற் பரம
ஜீவ நன்மையே கதிக்குமத் தேயத்துச் செய்யோய். 83

சுமையைப் போக்கிய தூயவ வானந்தந் துதைந்த
சிமையத் தேநின்று தென்றிசை நோக்கிடிற் சேயோன்
இமையத் தாரெழின் முத்திமா நகரத்தை யெதிரில்
அமையக் காண்குவை கரதலா மலக்மா யருகில். 84

என்று பத்தியா மாதவக் கிழத்திகண் ணெதிரில்
தென்றி சைப்படு காட்சியைத் தெள்ளிதிற் றெரிக்க
மன்றல் வேதியன் மலைநிலை மயலறத் தெருண்டு
நின்று போதி சயத்தொடு மற்றிவை நிகழ்த்தும். 85

கண்ட காட்சியிற் கதித்தவாச் சரியமுங் கருத்தை
உண்டெ ழுந்தபே ருவகையு முண்மையை வடித்து
விண்ட நின்னுரை விசேடமு மிவ்வென விதக்க
ஒண்டொ டீஇயெனக் குணர்ச்சிமட் டுரையுத வின்றால். 86

சக்க ராதிப னருட்புணை யாலன்றித் தமியேன்
துக்க சாகரத் தலறிய வெறிதிரைச் சுழியுட்
புக்கு நீந்தியிவ் வானந்தப் பொருப்பினைக் குறிக்கொண்
டக்க ரைத்துறை பிடித்திட லாவதோ வம்மா. 87

வழிதெ ரிப்பதும் வழித்துணை யாவதுங் குறித்த
வழிந டத்தியா தரிப்பதும் வழியைவிட் டயலோர்
வழிபு காவகை மறிப்பது முடிவுமட் டாக
வழியின் மேவிடர் களைவதுந் திருவருண் மாட்சி. 88

துற்று பேரிடர் யாவையு மொருங்கறத் துடைத்துக்
கொற்ற வன்கிரு பாஸ்தமே குறிக்கொண்டு காத்த
திற்றை நாள்வரை யின்னுமென் வழித்துணை யாகி
முற்றுங் காக்குமென் றுருப்படீஇ வழிக்கொள முயன்றான். 89

உருகு காதலி னருந்தவக் கிழத்திய ருவந்து
வருக வென்றுசென் றுயுத சாலையை மருவி
இருக ருக்குள பட்டய மாதிய வேதி
திருகி லாமறை வாணனுக் களித்தனர் தெரிந்து. 90

எள்ள ருங்கும ரேசன்யாத் திரிகருக் கென்ன
உள்ளி யாக்கிய வப்பமு முசிதமுந் திரிகைத்
தெள்ளு தீங்கனி வற்றலுங் கைக்கொடு செல்க
கொள்ளு கையவென் றுதவின ரமைவன கொணர்ந்து. 91

மந்தி ராயுத வருக்கமு மருந்தன வுணவும்
அந்த ணன்றனக் கின்றமை யாப்பொரு ளாகப்
புந்தி யாலுற மதித்துநன் றறிமொழி புகன்று
சிந்தை யாலுறப் புனைந்தனன் றிவ்யபோர்க் கோலம். 92.

மேவும் யுத்தசன் னத்தனாய் விளங்கிய திறலோன்
பூவை யர்க்கெலா மஞ்சலி வான்முறை புதுக்கி
ஆவி யிற்பிரி யாவிடை யாசியும் பெற்று
ஜீவ பாதையைக் கடைப்பிடித் தேகினன் செய்யோன். 93

காவ லாளனை வினவியக் கதிவழி நிதானி
போவ தாகிய செயலறிந் துளமகிழ் பூப்ப
ஆவ லாயுப சரித்துவந் தனமினி தாற்றிச்
சாவ தானநன் விடைகொடு போயினன் சதுரன். 94

காத லாய்நெடுந் தூரமெய்ப் பத்தியங் கனையே
ஆதி மாதருன் ஞவியிற் பிரிகலம் யாமென்
றோதி மங்கள சாஸன விடையினை யுதவிப்
போது வாயென விடுத்தனர் தாயரே போல்வார். 95

இந்த மாதவக் கிழத்தியர் குணஞ்செய லெலாமென்
சிந்தை யுள்ளுறத் திகழ்ந்தன நனவுறு செயல்போல்
விந்தை யங்கனு வின்னமு நிகழ்வுழி விரும்பி
அந்த ணன்றனைத் தொடர்ந்தனன் மேல்விளை வறிவான். 96

காட்சிப் படலம் முற்றிற்று.

குமாரபருவம் கவி, 714.

# இரக்ஷணிய யாத்திரிகம்.

## மூன்றாவது: நிதானபருவம்.

### வனம்புகு படலம்.

வித்தக யூகி யுய்த்தமெய் யுணர்ச்சி
விவேகிமா துளைத்தநற் புத்தி
மித்திரை வளர்த்த சிரத்தைமெய்ப் பத்தி
விளங்கிழை புகட்டிய மேலாம்
உத்தம தேவ பத்தியென் றினைய
வுசிதநற் குணங்களே துணையா
முத்திமார்க் கத்து நெறிபிச காமே
முன்னுற முடுகின னிவிர்த்தன்.

நெறிசெலச் செல்ல நெருக்கமும் வழுக்கு
நேரிய விறக்கமு நெறியின்
குறிமருண் டபாலோர் சற்றடி பிசகிற்
குணிப்பரு மோசமு முளவென்
றறிவனுள் ளழுங்கி யவசமுற் றனன்மற்
றுயினு மகவயி ராக்யப்
பொறிவா வைரித் தலை[illegible] நீள்றிப்
போகவுங் கூடுமென் றுரத்தான்.

மிடுக்குறும் பரிய கோல்பிடித் தூன்றி
மிதித்துநின் றுரத்தடி பெயர்த்தும்
நடுக்குறு மமையத் தருளுறப் பலத்து
நன்மையை நனிகடைப் பிடித்தும்
இடுக்குறும் ஜீவ பாதையி னிறக்கத்
தினையொடு மென்மெல விறங்கி
அடுக்கலி னடிவா ரத்துவந் தணைந்தா
னறவருக் கரிதியா வதுவே.

சஞ்சல மலையைத் தாண்டிவந் திப்பாற்
சாரலிற் றாழ்மையென் றொருபேர்
விஞ்சிய பள்ளத் தாக்கினை யெதிர்ந்தான்
மேதகு கிறிஸ்தவ னெவர்க்குஞ்
செஞ்செவே நெடுநாட் பல்பெருந் துன்ப
நுகர்ந்துபின் சிந்தனை திருந்தி
வஞ்சமில் தாழ்மை வரப்பெறு மிதுவே
வாரிசூழ் வையகத் தியற்கை. 4

## வேறு.

சீரிய தாழ்மையென் றுரைக்குஞ் செவ்விய்
பேரியற் படுகரின் பெற்றி நோக்குறின்
ஆரிய ராயமெய் யறிஞ ரேயலாற்
பூரியர் யாவரும் புகப்பெ றாதது. 5

அண்ணலார் கருணையாற் றணிகொ டரத்துத்
தண்ணளி நறுநிழல் படர்ந்த சார்பது
புண்ணியப் போனக மமைந்த பொற்பது
நண்ணரு மிகபர நலம்ப யப்பது. 6

கன்மனத் தூறுநீர்க் கான்சு னைத்தது
பொன்முக மரைமலர் பொலியும் பொற்பது
நன்மொழி நறைகமழ் நந்த னத்தது
தன்மமாக் கனிதருந் தருக்கள் சான்றது. 7

கோதறு குணவளங் குலவு மாயினும்
மாதரை மானிடம் வரையத் தக்கது
மேதகு நற்பயன் விளைக்கு மாயினுஞ்
சாதக மாவதற் கருமை சான்றது. 8

இத்தகு வழிப்படு மெம்ம னோர்க்கெலாஞ்
சத்துரு பயங்கரந் தவிர்க்குங் கோட்பது
வித்தக கிறிஸ்துவின் விமலச் சேவடி
உத்தம சுவடுநன் கொளிரப் பெற்றது. 9

வலமிட மறிகிலா வச்சை மானிடம்
நலமிலா திகழ்புகழ் நாடு கில்லது
குலநறுங் குணமலர் குழுமி யெண்டிசைப்
புலமெலாம் பரிமளம் பொலியும் பொற்பது. 10



மேதகு மெய்மனத் தாழ்மை மேவிய
சாதுமார்க் கத்தவர் தடங்கு லாயது
பேதையர் பலபடப் பிதற்று நிந்தையாம்
வேதனை கூர்த்தமுள் விரவுங் கோட்பது. 11

மின்னெனப் புகையென வீயுந் தேகருக்
கென்னொரு பெருமையென் றெறியு நீரது
பன்னருந் தாழ்வுறு படுக ராயினும்
உன்னத பதவிபுக் கொடுங்கு மீட்டது. 12

பலந்திக ழினையதோர் படுகர் வைப்பினை
வலந்திகழ் வேதிய னடைந்து வான்படர்
நலந்திகழ் கருத்தொடு நயந்து மெய்ம்மறைப்
புலந்திகழ் நெறிக்கொடு போயி னனரோ. 13

வனம்புகு படலம் முற்றிற்று.

## அழிம்பன் றோல்விப் படலம்.

முற்படச் செலுநெறி முறையை நன்கறி
விற்பன நிதானியைச் சேரும் வேட்கையாற்
பற்பல யோசனை படுகர் வைப்பினிற்
பிற்பட விரைந்தனன் பின்றொ டர்ந்தரோ. 1

ஆயிடைத் தமியனு யருள்வ ழிச்செலுந்
தூயவ னெஞ்சகந் துணுக்குற் றேங்கிடக்
காயுரு மிடித்தெனக் கதித்தொர் பேரொலி
ஏயெனு மாத்திரத் தெழுந்த தெஞ்சவே. 2

பேரொலி முழக்கினாற் பேதுற் றுள்ளுடைந்
தாரிய னடிபிச காது நின்றிவண்
மாரியின் றுகவச் சுறுத்த வந்தனிக்
காரியம் யாதெனக் கருதுங் காலையில். 3

நஞ்சமு மவித்தையு மிருளு நாசமும்
வஞ்சமுங் கொடுமையு மறமுந் தீமையுஞ்
செஞ்செவே திரண்டுருத் தெரிய நின்றிடும்
அஞ்சனக் கருநிறத் தவுண யாக்கையன். 4.

பேயுமஞ் சுறுபெரும் பேய்மு கத்தினன்
காயெரி பங்கியன் கடுத்து றுங்கொடு
வாயினன் வக்கிர தந்தன் வன்கணன்
தீயெழு புகையென வுயிர்க்குந் தீயவன். 5

உருக்கிய வுலம்பொரூஉ முரங்கொ டோளினன்
செருக்கொடுங் காத்தட மார்பன் றிண்ணியன்
வெருக்கொளத் தடித்தெழு மெய்யன் வெவ்விய
தருக்குறு மிருசிறை தழைத்த சார்பினன். 6

முடங்குளை யரியின்மும் மடங்கு மொய்ம்புளான்
கடங்கலுழ் கறையடிக் காலன் காழ்படும்
இடங்களிற் செதிளுறு மிருப்பு மேனியன்
விடங்கவி ழரவெனச் சீற்ற மிக்குளான். 7

பின்னிடு பார்ப்பனப் பிணங்க ளின்குறி
மன்னுவெண் டலைப்புழை மலிந்த மாலையன்
பன்னரு மவகுணப் படைக்க லத்தினான்
உன்னிய வுருவெடுத் துழலுங் கூற்றனான். 8

பாபத்தை மணந்தவன் பழியைப் பெற்றவன்
சாபத்தைப் படைத்தவன் றரும நாயகன்
கோபத்தை யடைந்தவன் குவலை யத்தினுக்
காபத்தை விளைப்பவ னாக்கத் தின்பவன். 9

உயக்கொளு நெறிவரு வோரை யொன்னாதி
மயக்கிவன் சிறையிடைப் படுத்தும் வஞ்சகன்
வயக்குரு சுயர்த்தவிம் மானு வேல்பதம்
நயக்குநர் யாவர்க்கு நாச கண்டகன். 10

இப்படு பாதக னழிம்ப னென்பவன்
மெய்ப்படு கிறிஸ்தவன் விழிக்கு நேரெதிர்
கைப்படக் காண்டலுங் கலங்கி யுள்ளழிந்
தெப்படி யெனக்கினி யுய்வென் றெண்ணுவான். 11

முன்னெதி ரூன்றிட முரணின் றென்னயான்
பின்னிடு வேனெனிற் பிழைப்பின் றூலிவன்
வெந்நிடைச் சுடுசரந் தூரந்து வீட்டுவன்
மன்னர்கோ னன்றியை மறந்த கேடுமாம். 12



போர்த்தொழிற் சேவகம் புரிவன் யானெனத்
தீர்த்தனுக் குடம்படி செய்திந் நாள்வரை
ஆர்த்தியிற் றருமுண வருந்தி வந்திவண்
பேர்த்தடி பிறழ்வது பெருந்து ரோகமால். 13

எனைப்பகைத் தானல னிவன்மற் றெம்பிரான்
தனைப்பகைத் தானெனச் சான்றுண் டாதலின்
முனைப்பகை முருக்கிட முரண்டந் தேழையேன்
வினைப்பகை தொலைப்பதும் வேந்தன் பாலதால். 14

அஞ்சியான் பின்னிட லழகன் றுருயிர்
துஞ்சினு மாசற்குத் துரோகி யாகலன்
நெஞ்சுற வெதிர்த்துமுன் னிற்ப தேகலன்
எஞ்சுறே னெனவுரத் தெதிரிட் டானரோ. 15

உங்கரித் தழிம்பன்வந் துருத்து நோக்கிநின்
றெங்குளை யெங்குசெல் கிற்றி யானைநீ
நுங்குமுன் புலப்பட நுவறி நொய்தென்றான்
கங்குலும் பகல்படக் கருகு நெஞ்சினான். 16

விளக்கொளி வரவிருள் விலகு மாறுபோல்
இளக்கநெஞ் சேழைமை யபல மென்றின
துளக்கற வருட்பலந் துன்னி வேதியன்
உளக்களிப் பொடுதுணிந் துரைத்தன் மேயினான். 17

நாசதே சத்துளே னாச தேசத்தில்
நீசவெவ் வினைகுடி நிலவிற் றாதலின்
மோசமு நாசமு முடுகு மென்றமெய்
வாசகங் கேட்டதை வரைந்து வீசினேன். 18

வீவினை விரும்பிடா விட்பு லத்துயர்
கோவினுக் கேயடித் தொழும்பு கூடினேன்
சாவினை விளைக்கவென் முதுகிற் றங்கிய
தீவினைச் சும்மையுந் தெறித்து வீழ்ந்ததால். 19

நித்திய மங்கள நிகழ்சு கானந்த
முத்திமா நகர்செல முடுகு கின்றனன்
எத்திற நுங்கருத் திராஜ பாதையின்
மத்தியில் யானுளன் மனக்கொ ளீயென்றான். 20

நன்றுநன் றுன்னிலை நாச தேசமுந்
துன்றிய குடிகளுஞ் சொந்த மாமெனக்
கென்றறி நீயுமென் றெழும்ப லின்றெனிற்
கொன்றுயிர் குடிப்பனீ துளத்துக் கோடியால். 21

களைசெயற் கரியவென் காமி யச்சுவை
திளைசெய்தென் கடற்புவிக் கருத்து தெய்வமும்
அரசனு மாமெனை யறிய கிற்கிலாய்
விரசுவ தென்னிவண் மீளு வாயென்றான். 22

கொல்வது முருத்துளங் கொதித்துப் பொங்கிமேல்
வெல்வது மிருக்கவோர் பக்கம் வேறுநீ
சொல்வது மெய்யெனைத் தொழும்பு கொண்டனை
செல்வதோ விளங்கையிற் றீட்டு சாசனம். 23

உள்ளநாண் முழுவது மொழிவின் றாழியங்
கொள்ளுவை நல்குபுன் கூலி கொண்டவன்
பள்ளநீ ருலகினின் றுய்வன் பாவத்துக்
கெள்ளரு நித்திய மரண மேயுமால். 24

தீமையிற் றிருந்துமுன் றேச வாழ்க்கையின்
காமியச் சுவைநலங் காட்டு மேகொலாம்
வேமெரிக் கிடையிடை விறகிட் டென்னவே
மீமகீ பதிசினம் விளைப்ப தேயலால். 25

செப்பருந் தனிமுதல் திருவ டிக்கியான்
ஒப்படை யாய்த்தொழும் புளுற்ற நேர்ந்தனன்
எப்பெரு மிடரெனக் கிறுதி சூழினுந்
தப்புமார்க் கத்தடி சறுக்கி வீழ்கிலேன். 26

வீழினும் பிடித்தகை விடுக்கி லார்பகை
சூழினு முன்னின்று துணிப்பர் ஸ்வர்க்கத்து
வாழிய நலந்தரு வள்ள லாருக்கே
ஊழியஞ் செய்துய வொருப்பட் டேனென்றான். 27

நிண்ணயம் வேதிய னிகழ்த்தக் கேட்டலுங்
கண்ணழல் கதுவிடக் கனன்று காரிருள்
வண்ணனு மெனையொரு மசக மாகவும்
எண்ணலை போலுநீ யெனவி யம்புவான். 28



வாழுநன் மதியுனக் கில்லை வாழ்வொடு
சூழுமிவ் வுடற்சுகந் துய்க்க நச்சிலை
ஊழிவெந் தீவிழுந் துடற்று மென்றசொற்
கேழைநீ யிடைந்திடர்க் கடற்குள் ளெய்தினாய். 29

செய்தவ றுணர்த்துனை சிமையத் தண்டனை
செய்திடு நலமெலாஞ் சிறிது மின்றெனச்
செய்தருள் வசத்தினால் ஜீவ ரக்ஷைவந்
தெய்துமென் றிசைப்பதே யீசு ராதிக்கம். 30

உன்னத புனிதமா மொண்ணெ ருப்பினைப்
புன்னர கிடங்கள் பொருந்த லாவதோ
முன்னமெத் தனையவர் முரணி முற்றும்விட்
டென்னர சியன்முறை யுவந்திங் கெய்தினார். 31

மருண்டுமற் கடப்பிடி வாத மாய்ச்சிலர்
தெருண்டில ரென்மொழி செருக்கப் பட்டனர்
உருண்டநே மியினர சுய்க்கு மாண்டகை
இருண்டபுன் மனத்தனா யிரக்ஷி யாததென். 32

பொய்வழி யுழன்றுநீ புரிந்த போகவிம்
மெய்வழி பிடித்தபின் ஞெகியில் வீழ்ந்தனை
உய்வழி பிறிதெனு முனைகொண் டேகினை
மைவழி வெருண்டுபின் வாங்க வெண்ணினை. 33

மற்றுநின் புகழ்ச்சியை விரும்பி வந்தனை
இற்றைமட் டெண்ணினீ யியற்று தீமைகள்
முற்றறி கடவுளின் முறைமைக் கேற்பவோ
எற்றவா மிரக்ஷனை விழைத லேழைநீ. 34

தஞ்சமென் றெனையடைந் தவர்க்குச் சாவுமட்
டெஞ்சுருத் துன்பம்வந் திடையு மாயினும்
வஞ்சனை யானும்பொய் வாய்மை யானுமிங்
குஞ்சிடப் பலவகை யுறுதி சூழ்வனால். 35

ஈட்டிய நன்றுதீ தெதையு நாடலேன்
கோட்டமி லென்னுளா குறித்து நின்றிடின்
வேட்டவர் வேட்டசிற் றின்பம் வேண்டுமட்
டீட்டலென் னரசியன் முறையென் றோர்தியால். 36

பொற்புறு நாசதே சத்துப் போந்துநீ
அற்புத வளநகர்ந் தாயு ணாளெலாம்
முற்படு காமிய முழுதுந் துய்த்திரு
பிற்படு கதிநினைந் திரங்கிப் பேதுறேல். 37

இணங்குவா யெனிலிக சுகத்தை யீகுவல்
பிணங்குவா யெனினுயிர் பிழிந்து தேக்குவல்
உணங்கியோ யெதுதுணி புரைத்தி யென்றனன்
நிணங்கெழு குருதிவே ணிசாச ரேசனே. 38

நஞ்சினிற் றீயினி னடுக்கங் காட்டிய
வஞ்சகப் பேய்மகன் பிதற்றும் வாய்மொழி
அஞ்செவி புகப்புக வகத்தி னுள்ளுற
விஞ்சிய தருட்பலம் வேதி யற்கரோ. 39

வேறு.

தைவிகவ னுக்கிரக சத்தியினு ரங்கொண்
டெய்வழியொ ழுக்கம்வில காதெதிரி லூன்றி
மைவருநி சாசரம னக்கொளிது வென்னா
மெய்வருத வச்சுருதி வித்தகன்வி ரிப்பான். 40

சித்தமுற நன்கறிவ னீயெனது ஜென்ம
சத்துருவெ னக்குதவு சார்புரிமை வாழ்வென்
றத்தனையு நித்தியவ னர்த்தமெனு மாற்றால்
இத்தகைய நூனெறிபி டித்திவணி ருத்தேன். 41

மாயமுறு மின்பநலம் வாழ்வுசுக மாதி
ஆயவைத ரத்துணிதி யம்மவழ கிற்றால்
மேயமனை தோறுமெறி மிச்சில்விழை நாய்கொல்
சீயமுடி பெற்றரசு செய்யும்வகை செய்யும். 42

கொடுமதிப டைத்துலவு கோழைநர மல்லால்
நடுமதிப டைத்தவருன் னச்சுமதி கொள்ளார்
அடுமதிப டைத்திழிய ழிம்பவழி வெய்துங்
கெடுமதிப டைத்தனைகெ டாப்பழிப டைத்தோய். 43

விள்ளரிய பாதகவி னைச்சுமைவி ழுத்த
வள்ளலருள் சிற்சுருதி வாய்மைமதி யொன்றே
கொள்ளுவல்பு றத்துமதி கொள்ளமன முள்ளேன்
தெள்ளமுது குத்துவிட முண்பதுகொல் சீர்மை. 44



மேதகைய தொண்டரைவி ரோதிகள்செ குக்கும்
போதிறைகை விட்டனரெ னாப்புகறி பொங்குங்
காதலினி கத்திடர்க ளைந்துமதி யுய்க்கும்
மாதயையின் மாட்சியென வெண்ணாகிலை மாற்றோய். 45

மார்க்கவயி ராகருடல் வார்குருதி யென்றும்
பார்க்கனால வாக்கரிப கர்ந்திடலின் மேலாஞ்
சீர்க்கதியின் மேயபர சிற்சுகம்வி ளங்கித்
தீர்க்கமுறு மென்பதும கேசபதி சித்தம். 46

பாவநா ஜீவதிர ஐம்பரம ராஜன்
கோடரியினில் பற்றியெரி யாவகைகு றித்தே
ஆவ்வளி வீசியரு ளாழியின்ம டுக்கும்
ஜீவதி யுய்க்கவினை தீர்ந்துகதி சேரும். 47

கேட்டியுன நாட்டிடைகெ ழீஇயபல வீனக்
கேட்டிமக வாயெனைவ ளர்த்தனள்கு யப்பால்
ஊடடிநனி யாதலினு னாற்றுபல தீமை
ஏடடினில டங்குகில வெண்ணிமுடி யாதால். 48

எண்ணரிய தீவினையி யற்றியுள னேனும்
நண்ணியம னத்துயரு நாடுபெரு மூச்சுங்
கண்ணருவி நீர்சொரிக ருத்தநனி கண்டு
புண்ணியர்பொ றுத்தருள ளிக்கமகிழ் பூத்தேன். 49

இம்மகிழ்வ ளித்தெனையீ டேற்றுசரு வேசன்
செம்மலொரு நட்பினைதி ரிக்கமுயல் கிற்றி
அம்மகெடு வாய்முடிவ தாங்கொலோ துன்னால்
மும்மையுல குக்கெனினு மொய்ம்பிலது காண்டி. 50

மற்றினியு னைப்பதெவன் வந்தவழி யின்னே
பற்றுதிய னுதத்துணைப யன்படுத லில்லாச்
செற்றமொடெ திர்ந்தமர்செ யத்துணிதி யாயின்
வெற்றிபெறு வாயலைவி னைந்திடுதி யென்றான். 51

செய்யமறை யோனுரைசெ விப்படவ ழிம்பன்
நெய்யுறும ழற்சிகையெ னச்சினநி மிர்ந்து
கையொடுகை யெற்றியிரு கண்குருதி காட்ட
வெய்யவுரு மேறெனவெ டித்தநகை செய்தே. 52

முத்தியர சற்குமவர் மொய்ம்பின்மகி மைக்கும்
நித்தவர சாட்சிமுறை மைக்குநெறி நிற்கும்
பத்தஜன ருக்குமதி கேடுகள்ப டக்குஞ்
சத்துருவெ னக்கெதிர்த ருக்குலைகொ லாநீ. 53

நீதியர சன்கொலைநி னைத்துமில வாயிப்
பூதலமெ லாமெமது புத்துரையி னிற்ப
ஆதிமுத லாயுலக டக்கியர சாள்வேம்
பேதையொரு நீதனிபி ணங்கிலட ரேன்கொல். 54

அடாச்சிறிய வெப்பல்பசு கத்துணையு மல்லாய்
கெடாமுதல ருட்டுணைகி டைக்குமென நம்பிக்
கடாசலமொ டேயமர்க லக்கவரு கின்றாய்
படாதுபடு வாயொருக ணத்திலது பார்த்தி 55

என்றெயிற துக்கியட வெங்கதறி யென்னு
கொன்றுயிர்கு டிக்கவரு கூற்றெனம றித்துங்
குன்றெனநி மிர்ந்ததிர டோண்முருடு கொட்டி
வன்றிறல்கொள் வெங்கதம டங்கலென வர்த்தான். 56

ஆர்த்துரறி நின்றனனெ டித்துணைகண் மாறிப்
போர்த்தனன்வி ளைந்துபல சாரிபெயர் பெட்பிற்
பார்த்திடர்பி திர்ந்தனப ரந்தபடு தூளி
போர்த்தனவி சும்பிரவி பொங்குகதிர் நுங்கி. 57

மறங்கிளரும் வன்சிறக டித்துபர வாவிக்
கறங்கெனவு ழன்றுகக னத்திடைக ரப்பன்
இறங்குவனி வங்கிழிய வெட்டியடி கிட்டி
அறங்கிளரு நெஞ்சனைய டுப்பனறை கூவி. 58

வாவெனவி ளிப்பன்முழை வாய்மிடறு காறித்
தூவெனவு மிழ்ந்துபழி தூற்றியிகழ் வன்மெய்த
தேவெனநி னைக்கவொரு ஜெந்துமில வென்னப்
பூவுலகை யின்றொடுபு துக்கிடுவ னென்பான். 59

செத்தபிண நுங்குகழு கிற்சிதட மார்க்கப்
பித்துறுபி ணங்கலைநு கர்ந்துழல்பி சாசன்
இத்திறம நேகவித கோரணியி யற்றி
வித்தகனொ டேயமர்வி ளைத்திடுவ தானான். 60



ஆத்துமவி சாரியும ருட்கடவுள் வேந்தன்
யாத்தனைய சேவடிம னத்திடையி ருத்தித்
தீத்தொழில ரக்கனுயிர் சிந்தவதிர் தும்பைப்
பூத்தொடைபு னைந்தமர்பு ரிந்திடுவ தானான். 61

நன்மைபர ஞானமொளி நல்லறமி வற்றைத்
தின்மையறி யாமையிருள் தீமறம டர்த்து
வன்மைமிகு வெஞ்சமம லைத்திடுதல் போலாந்
தொன்மறைவ லானொடுபெ சாசமர்தொ டுத்தல். 62

ஆயிடைபி சாசரன றக்கொடுமை பூண்ட
மாயமுறு வெஞ்சிலைவ ளைத்துமற மல்குங்
காயெரிமு கத்தனக டுத்துறநு னித்த
சாயகச தம்பலத ருக்கொடுவி டுத்தான். 63

மற்றிணித டம்புயம றைக்கிழவன் வல்லே
செற்றமொட ரக்கன்விடு தீப்பகழி நீந்து
முற்றுமவை யிற்றுகமு ரண்கொள்விசு வாசப்
பற்றெனுமி ருப்பரிசை யாற்பொடிப டுத்தான். 64

தாக்கியவ முற்பகழி சாம்பருறல் கண்டே
மீக்கிளர்சி னத்தவுணன் வெய்யவசை யென்னுந்
தீக்கிளர்ச கத்திரசி லீமுகம்வி டுத்தான்
காக்குதிகொ லோவறிவ லென்றொருக ணத்தில். 65

அங்கவைவி சைத்தனுகி யாத்துமவி சாரன்
செங்கையுறு கேடகம திந்திடைசி தைந்து
பங்கமுற லாயினப ழிப்பிலற வோர்பால்
வெங்கணவர் சூழ்வினைவி ளிந்தொழியு மாபோல். 66

நன்முறையொ ரீஇயகெடு தோஷநனி பொங்கித்
தொன்முறைவ டிக்கலைக ணிப்பிலது ரப்பப்
பன்முறையு நுண்டுகள்ப டப்பரிசை கொண்டே
சொன்முறைய றிந்தவனெ திர்ந்தவைதொ லைத்தான். 67

வேறு.

விஞ்சவி டுத்த நஞ்சசு வெங்கோல் விறலின்றி
எஞ்சுதல் கண்டே நெஞ்சழி வெற்றங் கிகல்வெய்யோன்
பஞ்சைமு னிற்காய் செஞ்சிலை பற்றாய் பரிசைக்குள்
அஞ்சியொ ளிப்பாய் வெஞ்சம ருக்கீ தறையேயோ. 68

முந்தெதி ரிக்கொத் தேதிவ ழுங்கன் முகமாறு
வெந்திற லாண்மை நிராயுத னோடமர் வெஃகாமை
கொந்தவ ருக்குத வுந்திறன் மற்றின நூலோதும்
விந்தையு றும்புய வீரவி லக்கண விதியாமால். 69

விற்றொழி லாதிப டைக்கல வித்தைகள் வேறொன்றுங்
கற்றிலை யுத்தக ளத்திலும் வந்தெதிர் கால்வைத்தாய்
மற்றெது செய்குதி மற்கட வன்பிடி மானக்கை
பற்றிய கேடக மொன்றிறில் வளிபடு பஞ்சாவாய். 70

என்றிவை வஞ்சனை யாகவ ழிம்பனெ டுத்தோத
ஒன்றிய கேடக நெஞ்சுள டக்கியு ரத்தொல்லை
வென்றிகொண் மானத வெஞ்சிலை வாகைமி லைந்தேற்றி
நன்றறி வேதிய ஞாணொலி காட்டின னவையெஞ்ச. 71

நாணொலி விஞ்சலு நெஞ்சுது ணுக்கென நாஜீவர்
நீணிரை யச்சிறை யூடடை யச்செயு நீசப்பேய்
பேணிய கார்முக வெஞ்சர மாமழை பெய்தார்த்தான்
மாணொளி மங்கிம றைந்தது தாழ்மையின் வைப்பெங்கும். 72

அக்கணம் வேதிய ஞான மந்திர வழறோய்ந்த
செக்கர்பொ ரும்பக ழித்திர ளெய்துசெ றுத்தொல்லை
மைக்கரு வண்ணன்வி டுத்தச ரக்குவை மாய்வித்தான்
கக்கும ழைத்திரள் சிந்தம டுத்தெறி கால்போலே. 73

நச்சர விற்சின மீறிந ராந்தக னன்றென்னுக்
குச்சித மாயகொ டுஞ்சொன்மு கக்கணை கோத்தெய்யச்
சிச்சியெ னப்பொறி வாயில்செ றித்தொரு செயலின்றி
வச்சையி லானெதிர் நிற்கம றைந்தன வானோடி. 74

நீசனி னைந்துபல் சாபவ டிக்கணை நின்றேவ
ஆசியெ னுங்கணை வீசிய ழித்தன னறவோனும்
மூசிய பாசமு கக்கணை மூடன்மு னிந்தெய்ய
ஈசுர நேசச ரங்கொட றுத்தன னெதிரில்லான். 75

பன்முக மாகவி ரிந்தடு கோல்பல பைசாசன்
வின்முக நின்றுது ரந்திட வங்கவை வேதாந்த
உன்முக ஞானிவி டுத்தசி னக்குறி யூடாடிச்
சென்முக வெங்கணை யிற்சிதை வுற்றன நீந்தெல்லாம். 76



எய்தகொ டுங்கணை யெத்தனை கோடிக ளெல்லாமும்
வைதுகு றைத்தன னென்பதை யல்லது வரிவில்லாற்
கொய்துகு றைத்தன னென்பதெ னென்றுகொ டும்பேயன்
செய்திறம் யாதினி யென்றுதி கைத்தொரு தெளிவுற்றான். 77

சத்திர மாப்படை கொண்டிவ னோடே சமராடுஞ்
சித்திரம் வெற்றித ரும்பரி சன்றது சீர்கேடாம்
அத்திர மாயவ ரும்பண்டை கொண்டிங் கமராடிக்
குத்திர வாகைமி லைச்சுவ லென்று குறிக்கொண்டான். 78

சுமையுறு பொய்மைத் தூணியுண் மண்டித் தொகுமாறு
சமையமு கங்கொள் ளத்திரம் வாங்கித் தனுநாணிட்
டிமயமு தற்றக் கணம்வளை வென்ற திதுகாணென்
றமையவி டுத்தான் வஞ்சவ ழிம்ப வசுரேசன். 79

வேறு.

விடுத்த வெம்படை முகந்தொறும் பேய்க்குறி மிளிர்வ
கடுத்து றும்புழை விழிதொறுஞ் சினக்கனல் கனல்வ
மடுத்த வாய்தொறும் புலைப்படு மொழிப்புகை மலிவ
வடுத்த மைந்தமெய் மயிர்தொறுங் கூளிகள் வதிவ. 80

மதங்கொ டுன்முகந் தனித்தனி மாறுகொண் டடர்த்துக்
சதங்கொள் சிற்றமிக் கிகலுவ தத்தமிற் கறுவி
விதங்கொண் மாந்தரைச் சிற்றின்பப் படுகரில் விழுத்தி
வதங்கொ ளும்பழங் கதையெடுத் துயிர்கொளும் வலத்த. 81

எண்டி சாமுகத் தெமக்கெதி ரின்றெனச் செருக்குக்
கொண்டு நிந்தனைக் கொடுந்தழ விறைப்பவீண் குதர்க்கம்
விண்டு மெய்ப்படு விளக்கொளி விளங்கில தாக
யண்டு பேரிரு டொடுப்பமன் பதைக்குல மருள. 82

ஆய விக்கொடும் படைக்கல மகங்கரித் துலம்பித்
தூய வேதிய னெஞ்சினுக் கெதிர்செலத் துளங்கான்
நாய காத்திரந் தொடுத்திது நாசமுற் றேக
மாய விப்படை சிதைத்திடு வேனென மதித்தான். 83

ஏயெ னும்பொழு தீசுரப் படைதொழு தெடுத்தான்
மாய மில்லதோர் மானத பூசனை வகுத்தான்
தீய விப்படை செகுத்தியென் றுள்ளுறை தெரித்தான்
மேய தூவரி விற்றொடை யாக்கினன் விட்டான். 84

தொண்டன் விற்றொடை யாக்கிய சுருதியுத் திரமிவ்
வண்ட கோளகை யடுக்கழிந் தொழியினு மவியா
தெண்டி சைப்புவி யகத்திரு ளிரிதர விரவி 85
மண்டி லம்மெனப் பொலிந்தது வானுற வயங்கி.

திவ்வி யாத்திரந் தேசொடு செறுத்தெதிர் வரக்கண்
டவ்வி யச்சம யாசுகம் வாய்மத மடங்கி
எவ்வ யிற்கரந் துறைதுமென் றேங்கியுள் ளுடைந்து 86
கௌவை யுற்றறு முகங்களுங் கவிழ்ந்தன கருகி.

புடைப ரந்தமெய் யொளியினாற் புகலிடம் பெறுதங்
கிடையு மாசுரப் பகழியை யெறுழ்வலிக் கலுழன்
அடையும் வெவ்விட நாகத்தை யாருயிர் குடித்தாங்
குடைய வன்படை யொருங்குயிர் குடித்ததவ் வொல்லை. 87

மித்தை யாயதுன் முகப்படை விளிந்துமீ ருக
உத்த மாத்திரம் வேதியன் றாணிபுக் கொடுங்கி
வித்த கச்சுடர் விரித்தினி தமர்ந்தமெய் வேத 88
சத்தி யத்தெதிர் நிற்குமோ புலைப்படு சமயம்.

அலகை வீசிய வறுசம யச்சிலீ முகத்தை
இலகு திவ்வியாத் திரமென்ப ரியன்மதி யில்லார்
கலக மாயவை யொன்றையொன் றடர்ப்பது கண்டும் 89
உலக சிற்றின்ப போகத்தை யூட்டுவ துணர்ந்தும்.

காசு ரம்பெறு காப்பியக் கவிஞர்கள் தீட்டும்
பாசு ரத்தெழுந் துலகிடைப் படுபுறச் சமய
ஆசு ரப்படை கோடிக ளடுப்பினு மவையெம் 90
ஈசு ரப்படை யாதித்தற் கெதிருமின் மினியாம்.

குத்தி ரச்சம யாசுகந் தொலைந்தமை குறிக்கொண்
டெத்தி றம்மினி வாகைகொள் ளுவலென வெண்ணித்
தத்து வம்மசிப் பொருளெடுத் தகந்தையிற் சமைத்த 91
அத்து வைதமாம் படைதொடுத் தார்த்தன னழிம்பன்.

சொல்ல ரும்பசும் பொன்னணிக் கிடையிடை துதைந்து
வில்லி டும்பல விதம்படு வெறுந்திருட் டாந்தக்
கல்ல முத்திய கலனிரா கவினுறப் புனைந்த 92
தல்லை யும்பக லாமருட் டுவதத்து வைதம்.



சித்த விர்த்தியைக் கெடுப்பது தீநெறி யொழுகப்
புத்தி யைமயக் கிடுவது புவனகோ சரத்தை
மித்தை மித்தையென் றேய்ப்பது மெய்யுணர் விலாரைச்
சுத்த சூனிய கதியிடைக் கவிழ்ப்பதத் துவைதம். 93

இனைய தீப்படை யறவன்முன் செருக்கிவந் தெதிர
முனைவ னின்னருட் பலத்தினான் முனைமுகத் தூன்றி
வினைய மாகமெய் விதண்டவா தத்தொடை மிலைச்சிப்
புனையு மோர்வயி ராகதண் டங்கொடு புடைத்தான். 94

தண்ட வெள்ளிடி வீழ்தலுந் தலைமண்டை சிதறிக்
கொண்ட கொள்கையு மதவகங் காரமுங் குலைந்து
கண்ட கன்படை காந்தது கானகந் துருவி
மண்டெ ரிக்குமுன் றருக்குமோ வறியபுன் பதரே. 95

நாத்தி கப்படை தொடுத்தனன் நராந்தக னலங்கொள்
ஆத்தி கப்படை தொடுத்துட னழித்தன னறவோன்
நித்தி ரட்படு செங்கணான் பிடித்தவெஞ் சிலையிற்
கோத்த வத்திரம் யாவையும் வேதியன் குறைத்தான். 96

சால மார்தரு படைக்கலத் தொகுதிகள் சாம்பிப்
போலி யாயின யாதினிப் புரிகுவ லெனவிற்
கோலி வெஞ்சினக் கொடுந்தழற் பகழிகோத் தெய்தான்
நீலமே கஞ்செந் தழன்மழை பொழிந்தென நிருதன். 97

செக்கர் வானெனத் தீக்கணை வயின்றொறுஞ் செருமிப்
பக்க மெங்கணுந் தீந்துகப் படர்தலும் பனவன்
அக்க ரத்திரு மந்திரப் படைதொடுத் தவித்துந்
தொக்கு மேனியிற் சிற்சில சுடுகணை துதைந்த. 98

கொள்ளி யாரழற் சுடுகணை யாக்கையிற் குளிப்ப
ஒள்ளி யோன்சிறி தலமா லுற்றமை யோர்ந்து
துள்ளி யோடிவந் தெதிருமீஇ மல்லமர் தொடுத்துத்
தள்ளி வீழ்த்தின னிலனுற வழிம்பனுஞ் சழக்கன். 99

ஆரி யன்றளர்ந் தவனியிற் படிந்துமூச் சயர்ந்து
போரி யன்றில னுகவின் னேதலை புரட்டி
வீரி யம்பெறு வேன்வெற்றி யெனதென விளித்துப்
பூரி யன்கெடு புணர்ப்பினா லருகுறப் போந்தான் 100

விளித்த கூக்குரல் செவிபுக விட்புலத் தாசன்
அளித்த மெய்ப்பல மகம்புக வயதியி னெகிழ்ந்த
ஒளித்த பட்டயங் காம்புக வுணர்வுவந் தூன்றிக்
களித்த சிந்தையோ டெழுந்தனன் வேதியன் கடுகி. 101

அணித்த ழிம்பனைக் கண்டுநன் றாமென வகத்திற்
குணித்து வல்விரைந் தொருகையிற் கேடகங் கொளுவிப்
பணித்த மந்திரப் பட்டய மொருகையிற் பற்றித்
துணித்து வஞ்சநெஞ் சுழக்குவல் காவெனச் சொல்லி. 102

மந்தி ரத்தனி வாட்படை யோங்கிவன் கண்ணன்
தந்தி ரத்தட மார்புறப் புகுத்தலுந் தலைசாய்ந்
தந்த ரம்பட வலறின னழிபெருங் குருதி
சிந்தி யங்கவன் வெஞ்சினத் தீத்தழல் சிதைத்த. 103

நெஞ்சு ரங்கிழிந் தழிம்பனீ ணிலத்துறீஇ நெடிது
சஞ்ச லம்படத் தடஞ்சிறை யிரண்டையுந் தடிவான்
செஞ்சொ லாரணன் மந்திர வாள்கரந் திகழ்த்த
அஞ்சி வாய்வெரீஇ மீக்கிளர்ந் ததோகதி யடைந்தான். 104

திரும லிந்தவி ஜெகமெலாந் திரளினும் ஜெயித்தற்
கருமை யாயவெவ் வழிம்பனை யாரணக் கிழவன்
ஒருமை யாய்ப்பொரு தோட்டினன் வெற்றிபெற் றுயர்ந்தான்
தரும மேஜெயந் தருமெனல் சதோதய சரதம். 105

மன்னு திவ்யசர் வாயுத வருக்கத்தின் வலியும்
பொன்னி லத்தர சன்றரு திருவருட் பொலிவுந்
தன்னி ருந்துணை யாக்கலி னழிப்பனைச் சமரில்
வெந்நி டத்துரந் தான்றிட மெய்விசு வாசி. 106

வம்பர் நிந்தனை வசைமொழி வறுமைநோ யிடுக்கண்
இம்பர் நேரினும் பகைத்திற மெதிரினு மெல்லாம்
உம்ப ரேசெல வொப்படைத் தொருமன மாக
நம்பி னோரைக்கை விடுவரோ நலம்புரி நம்பன். 107

முற்றுந் தன்றுணை யாயசு ரேசனை முருக்கச்
செற்ற நல்கிய திருவருட் செயலினைத் தேறிக்
கொற்ற வன்சுதன் றிருவடிக் கோகன கத்தில்
வெற்றி மாலையைப் புனைந்தனன் வேதியர் திலகன். 108



கழுதின் வன்றலை நசுக்கிய கழற்றுணை கருதித்
தொழுது பன்முறை தோத்திர கீதமும் பாடி
எழுது சீர்த்தியான் ஜெபித்தன னகமற் றெனக்குள்
முழுதுங் காணிய வாசைவந் தீர்த்தது முடுகி. 109

அழிம்பன் றோல்விப் படலம் முற்றிற்று.

# மரணச் சூழலிறுத்த படலம்.

கானகத் தெதிர்ந்த நீசக் கள்வனைப் புறங்கண் டேர்த்த
வானகத் தாசற் போற்றி வண்டமை கொண்டு வாளி
ஊனகத் துடன்ற காய மொருங்கற வகற்றி ஜீவ
போனக ஞான பானந் துய்த்தனன் புலமை மிக்கான். 1

உண்டிளைப் பாறி யொல்லை யொளிகொள்பட் டயத்தை யேந்திக்
கண்டக வழிம்ப னின்னுங் கைகலந் திடுவ னேனும்
அண்டர்நா யகனுண் டென்னா வவலமின் றாக வன்பிற்
றெண்டனிட் டிறைஞ்சி வாழ்த்தி ஜீவபா தையிலே சென்றான். 2

முன்னுறக் கருதி நோக்கி முடுகுவ னெறியைப் பற்றிப்
பின்னுறத் திரும்பி நோக்கிப் பேருயிர்ப் பெறிவன் பேதுற்
றென்னுறப் படுவ தேயோ வின்னுமென் றிடைவன் கானிற் [3
பொன்னுறப் பொதிந்து செல்லுந் தனிவழிப் போக்கன் போல்வான்.

ஓடுவ னோடி யெய்ப்புற் றுலவுவன் விரைந்து முன்பின்
நாடுவன் வெருண்டு நின்று நலிகுவ னம்பன் சீர்த்தி
பாடுவன் றுதிப்பன் கிட்டிப் பதாம்புஜம் பணிந்து சென்னி
சூடுவன் றுணிந்து செல்வன் சுருதிநூ னெறிவி டாதே. 4

இப்பரி சாகச் சின்னா ளேதமின் மறைவ லாளன்
ஒப்பருந் தாழ்மை வைப்பை யூடறுத் தருவி யேகிச்
செப்பரு மரண வாதைப் படுகரைச் சென்று சேர்ந்தான்
குப்புறீஇ விழுந்தான் வெய்யோன் குடதிசைக் குன்றி னேறி. 5

அஞ்சுறு மரண வைப்பை யடுத்தலு மலறி யேங்கி
எஞ்சியோ ரிருவ ரோடி யெதிர்வரக் கண்டு நீரிச்
சஞ்சல மடைதற் கென்னோ சம்பவ மெதிர்ந்த தென்றான்
உஞ்சிடு மாறெம் மோடு திருமுகென் றுரைப்ப தானார். 6

பாமசீ யோனை நாடிப் படர்ந்தனம் பதைப்பொடின் றின்றிச்
சாமர ணத்தைக் கிட்டிச் சார்ந்தனஞ் சாரச் சார
ஊரமுட ளுச மோச மொருங்குடன் குழுமக் கண்டேந்
திரமிலேம் வெருவி யோடித் திரும்பினேஞ் சிந்தை மாழ்கி. 7

சீரிய சீயோ னென்னுந் திவ்விய கிரியின் சாரல்
காரிருட் பிழம்பொன் றேயோ கடுவிடப் பாந்தள் துற்றி
மாரணப் படுக ரெங்கும் வரம்பில்பேய்க் கணங்கண் மல்கிப்
பேரிடி முழக்க மெஞ்சப் பிளிறிநின் றாரறு மாதோ. 8

அதரிரு மருங்கும் கிட்டி யாழ்படுங் குழிக்குண் மேய
சிதடர்வல் விலங்கு பூண்டு திகிலுறீஇக் கலங்கி மாழ்கிப்
பதறிநெட் டுயிர்ப்பு வீங்கிப் பதைபதைத் தலறி யேங்கிக்
கதறியங் குழலுங் காட்சி யாதெனக் கழறு கிற்பேம். 9

மன்றலங் கிரியின் சாரன் மழைமுகி றுவன்றி யெங்குந்
துன்றிருள் பரத்த லாலே விழிப்புலந் துருவி டாதால்
கொன்றுழன் மாணம் பொங்கிக் கொடுஞ்சிறை விரித்துப் போர்த்துச்
சென்றுநின் றகவு மாங்கே யாரதை ஜெயிக்கு மீட்டார். 10

முன்னையோ ரடிபெ யர்ப்பின் மோசத்தின் மூழுகிப் போவேம்
பின்னையே திரும்பி யாவி பிழைத்திங்ஙன் வருவே மல்லேம்
நின்னையுங் காணுகில்லே நிகழ்பரி சுணர்த்து கில்லேம்
என்னையே நிற்றி தாழா தெம்மொடு திருமு கென்றார். 11

என்றலு மறைவ லாள னெம்பிரா னகர்சென் மார்க்கம்
ஒன்றிதை யொருமு வோருக் குய்விலை யுண்மை தேரின்
இன்றொடு முடிவ தாய விடரினுக் கலசி யோடித்
துன்றிரு ணிரயத் தென்றுந் துடிப்பதோ சூழ்ச்சி யென்றான். 12

நன்றுநன் றுனது சிந்தை நாடிய படிசெ யாங்கள்
பொன்றிடத் துணியே நின்சொற் புத்தியு நீயு மாமுன்
சென்றறிந் திடுக வெங்கள் தெருளுறா யென்று நெஞ்சங்
கன்றிய விருவ ரோடிக் கலந்தன ரழிம்ப ளுட்டில். 13

வெருவியோர் வெந்திட் டேக வித்தகன் முன்னிட் டேகி
மருவினன் றமிய னாக மாதுளத் தெழுந்த பாவக்
கருவினின் றோங்கி மாயக் கருந்தழைக் காடு மல்கிப்
பருவரல் பழுத்துத் தூங்கும் மாரணப் படுகர் வைப்பை. 14



செற்றமில் குணத்தா னந்திச் செக்கர்வான் மருண்டு கங்குல்
உற்றுழி யடுத்தா னாக வுள்ளுளே கவன்று நோக்கி
மற்றிதே போலுங் கேட்ட மாரணப் படுக ரென்று
சற்றுளந் திகைத்து நின்று தன்னுளே கவல்வ தானான். 15

பாபத்தின் றிரளோ வந்த க்ரரத்தின் பரப்போ தேவ
சாபத்தின் செறிவோ மாய சாலத்தின் சமைவோ நித்ய
கோபத்தின் மலிவோ ஞான நாசத்தின் குவிவோ மோச
ஆபத்தின் குகையோ வந்தத் தாரிருட் படல மம்மா. 16

பூருவந் தொடங்கி யூழி புடைபெயர் காலங் காறும்
பாரகங் கெழுமு ஜீவப் பகுதிக டம்மை யெல்லாம்
வாரிவாய் மடுக்கு மீண்டோர் மாரணப் படுக ருண்டென்
றாரவ ருரைக்கக் கேட்ட துண்டியான் கண்ட தின்றால். 17

பொறியெலா மருளு மாலைம் புலனெலாம் புதையு மானன்
நெறியெலாம் பிசகு மாலென் னினைவெலாம் புரளு மால்விண்
குறியெலாங் குழம்பு மாலென் குணனெலா மழுங்கு மான்மெய்
அறிவெலா மடங்கு மாலென் னுருயி ரசலுங் கொல்லோ. 18

ஆவியே யகலு மேனு மாருட் கிறிஸ்து வேயென்
ஜீவனுந் தேக பந்தந் தீர்ப்பதற் கியல்வ தாய
சாவுமே தியமா மென்னச் சமைந்துள விசுவா சத்தின்
மேவரு தைரி யந்தா னுடலொடு விளிவ தேயோ. 19

கொந்தழ லனைய துன்பங் குவைகுவை யாக வென்மேல்
வந்துவந் தடர்க்கு மேனு மகத்துவ கருணை வெள்ளம்
உந்திமே விடுமற் றென்னா வுள்ளுளே யூக்கந் தோன்றி
மந்திர வாள்கைக் கொண்டு மாணவைப் பூடு செல்வான். 20

பட்டய வொளியிற் பக்கம் பார்த்தருட் பாதை பற்றி
உட்டெளி வொடுகா லூன்றி யுரத்தடி பெயர்த்து நின்று
துட்டவல் விலங்கு காளி கூளிக டொகுமக் காட்டுள்
சிட்டனோர் தமிய னாக மென்மெலச் செல்லுங் காலை. 21

பூவல யத்து நீசப் புலையறு போதந் துய்த்து
ஜீவநாட் கழித்துச் சிந்தை திருகியே சிதட ராகித்
தாவரு நொதிக்குள் வீழ்ந்து தத்தளித் துயிர்ப்பு முட்டி
ஆவ்லங் கொட்டி வாய்விட் டழுதழு தவலிப் பாரை. 22

மாதனை யுலகைப் பொன்னை மதித்தற நெறிகை விட்ட
பாதகந் திரண்டு சாவின் படுகுழி கவிழ்ப்ப மாழ்கிப்
பூதலம் வெடித்த வாயிற் பொதுளிய நிரயச் செந்தீ
மீதெழுஞ் சுவாலை தாக்க வெந்துளங் கருகு வானை. 23

சாற்றுநன் மதியைத் தள்ளித் தன்மனம் போன போக்கில்
வீற்றுவீற் றாகிச் சென்று விளைத்ததீ வினையைச் சுட்டிக்
கூற்றம்வந் தடற்றி நெஞ்சிற் கொடுந்தழ லிறைப்ப வாதை
ஆற்றரி தாகி யாவி யழுங்கிநின் றலறு வானை. 24

மெய்வழி தெரிந்தார் போல விழுத்தவ வேடம் பூண்டு
பொய்வழி யலைந்து தீமை புரிந்தபே தமைவந் தூன்றச்
செய்வழி வகைகிட் டாது தெருமர லுழந்து தேம்பி
உய்வழி யினியின் றென்னா வுயிர்ப்பெறிந் துயங்கு வானை. 25

விக்கிர கத்துக் கந்தோ மெய்த்தெய்வ வழிபா டாற்றும்
அக்கிர மத்தை யுள்ளி யாருயிர் பதைப்பத் தேவ
உக்கிர கோபத் தீயி னுள்ளழற் கிடங்கர் வீழ்ந்து
கொக்கரித் தலறி யேங்கிக் கூக்குர லெழுப்பு வானை. 26

இக்கொடு மரணச் சூழ லெண்ணில ரெய்தக் கண்டும்
மக்களை மனையைப் பேணி வறும்பொரு ளீட்டி மாயச்
சிக்குளே சிக்கி வாளாச் சிதைத்தனம் வாணா ளென்னாத்
தொக்கபே ரிடர்க்குண் மூழ்கித் துடிதுடித் தயரு வானை. 27

உய்திற நாடு வார்போ லுவப்புரை பேசி யொண்பூக்
கொய்திறம் போல மற்றோர் கொழுநிதி கவர நாளுஞ்
செய்தவஞ் சனைகளாய தீமுகத் தயில்வேல் தாக்கி
நொய்துளங் கிழிய மாழ்கி நொறுங்கிநொந் தலம்பு வானை. 28

ஆத்தும சுகத்தைப் பேணா தனவர தமுநன் றாட்டிக்
காத்துடுத் தணிந்து பேணிக் கதித்தபா ழுடலை யந்தோ
தீத்தொழி லுருவு வாய்ந்து செறிந்தவன் கிருமிக் கூட்டம்
பாத்துண்டு களிப்ப மாழ்கிப் பதைபதைத் துழல்கின் றானை. 29

கண்ணொளி மழுங்க லாகிக் காதடை பட்டுக் கைகால்
தண்ணெனக் குளிர்ந்து நாடி தளர்ந்துபுண் பட்டு நெஞ்சந்
துண்ணெனக் கலங்கி யாவி துடித்துமூச் சொடுங்கு காலை
பண்ணிய வினைக்கு நேர்ந்த பயனெனப் பதைக்கின் றானை. 30



உள்ளநாண் முழுது மொல்கா துலகின்ப நுகர்ந்து கூற்றங்
கொள்ளுநாண் முத்திவேட்டுக் குறைப்பதென் பயன்கொண் டென்னா
எள்ளரும் ஜீவ சாக்ஷி யிடித்திடித் துடற்ற நொந்து
விள்ளரும் பிராண தாப வேதனை யுழக்கின் றானை. 31

நித்திய ஜீவ மார்க்க நிண்ணயந் தெரிந்தோர் தம்மைப்
பித்தரென் றிகழ்ந்து தேவ தூஷணம் பிதற்றி வேத
சத்திய விரோதி யாகிச் சமைத்ததீ வினையை யுள்ளி
மத்திடு தயிரே போல மறுகியுள் ளுடைகின் றானை. 32

தந்தைதாய் பெண்டு பிள்ளை தமர்பரி ஜனரெல் லாரும்
இந்தனச் சடங்குக் காவ தியற்றுவா ரீசன் கோபஞ்
செந்தழ லிறைக்கும் யாண்டும் புகலிலை ஜீவ னேயென்
றந்தா நோக்கி நோக்கி யகங்குலைந் தயர்கின் றானை. 33

நோக்கரு மவநம் பிக்கை நொதிப்படு கிடங்கர் வீழ்ந்து
சாக்கிடை யாகிக் கூளி தலையெடா தமிழ்த்த வாற்றா
தேக்கமுற் றாழி யூழி யிருட்சிறைத் துயரை யெண்ணி
ஆக்கையி னிலைதள் ளாடி யலமா லுறுகின் றானை. 34

கள்ளுண்டு களித்துங் காமக் கடுவிட நுகர்ந்தும் வாயால்
எள்ளுண்ட பிணியுண் டாகி யிடருண்டு தவிப்புண் டியாக்கை
துள்ளுண்டு துடித்து வாணா டொலையுண்டு மலங்கி யாவி
அள்ளுண்டே மள்ளுண் டேமென் றாருயிர்ப் படங்கு வானை. 35

சலங்கொடு பிசாச வர்க்கந் தனித்தனி வெருட்டிச் சார்ந்து
விலங்கினம் வெகுண்டு பீறும் வேட்கையி னெதிர நாகக்
குலங்கள்வந் தடர்ந்து சீறிக் கொத்துவான் வளைந்து கொள்ளக்
கலங்கிநெஞ் சழிந்து சோர்ந்து கதழெரிக் கவிழ்கின் றானை. 36

கண்டுகண் டுருகிக் கண்ணீர் களகள வடிப்ப னச்சங்
கொண்டுள நடுங்கி யாவி குலைகுவன் குமார வள்ளல்
உண்டெனக் கென்று நீங்கா வொருதுணை யென்ன வுன்னித்
தெண்டனிட் டிறைஞ்சி நிற்பன் றேறுவன் றெளிவு தோன்ற. 37

காலடி பெயர்க்கும் போது கலங்குவன் கலங்கிப் பாதை
மேலடி யூன்றும் போது விமலனைத் துதிப்பன் மீண்டும்
மாலிடைப் படுவ னீண்டோர் மயிர்க்கிடை விலகு மேனுங்
கோலிய படுக ரூடு குப்புற வருங்கொ லென்னா. 38

இத்திற மாவி சாரி யிருட்சிறைப் படுகர் துற்றிச்
கத்துகூக் குரலுங் துன்பக் காட்சியுங் கண்டு கேட்டுச்
சித்தசஞ் சலிய னாகத் தெய்விக சகாயத் தாலே
முத்திநா னெறியைப் பற்றி முறைபிச காது சென்றான். 39

அங்கொரு சிறையி னூடே யக்கினிக் கடன்மே லோங்கிப்
பொங்கிய தென்னச் சீறிப் புகைந்துகந் தகத்தீ மண்டி
எங்கணு நடுங்கி யேங்க வெரிகொடு மலபா தால
வெங்கொடு நரகங் காந்து விரித்தபேழ் வாயைக் கண்டான். 40

கொந்தழல் பருகி யோங்கு கொடும்புகை யாய கொண்மூ
அந்தரத் தெழுந்து மூடி யவிரொளி யார மின்னி
உந்திய வினைச்சன் மேய வுருமிடி யேறு தாக்கிக்
கந்தகப் புலிங்க மாய கனன்மழை பொழியக் கண்டான். 41

கையுறு விளக்கைப் போக்கிக் கடுங்குழி கவிழ்வார் போல
மெய்யுறத் திகழ்த்தும் வேத விற்பன நெறியை விட்டு
மையிருள் படர்ந்து தொக்க மாரணப் படுகர் வீழ்வுற்
றையகோ வைய கோவென் றலறுபே ரொலியுங் கேட்டான். 42

கண்டுகேட் டுளமுங் கண்ணுங் கருகின துணுக்குற் றேங்கிக்
கொண்டபே ரச்சத்தாவி குலைந்தறி வழிந்தி யாக்கை
தண்டென விறைத்து நின்ற தலத்திலே தரித்து நின்ற
துண்டுகொ ளுயிர்மற் றென்னத் திகைத்தன னுணங்கி யானும். 43

ஆயிடை யருகர்க் கிட்டி யழிபடு நரகக் கோட்டை
வாயின்மேற் கொள்ளா தென்ற மகாதிரு மந்தி ரத்தைச்
சேயவன் காதி லூதித் தெருட்டிய செஞ்சொற் கேட்டேன்
தூயச ரீரி தானோ பிறிதொன்றோ சொலத்தேர் கில்லேன். 44

மருண்டறி வழிந்து நின்ற மறைவலா னுணர்வு தோன்றித்
தெருண்டன னாகி யொல்லை திவ்விய செயலைப் போற்றி
வெருண்டபோ துரந்தந் துய்க்கும் விறல்கொள்கே டகத்தைப் பற்றி 45
இருண்டகா னகத்து முன்னிட் டேகினான் சிறிது தூரம்.

அமையச்சே தீபந் தூண்டி யலர்த்துவார் போலோர் வாக்குக்
கமையுற்ற தொண்டர்க் காவி காட்டிய தகைமை யோரின்
இமயத்தை நிகர்த்த துன்ப மிடுக்கண்வந் துறினு மேற்ற 46
சமயத்தே யுதவு மன்றோ தற்பரன் கிருபை யென்றும்.



நித்திய ஜீவா னந்த நின்மல போகந் துய்க்கும்
முத்திவீட் டாசை பற்றி முன்னர்நின் றிழுக்க மூண்ட
உத்தம பத்தி பின்னின் றுந்திட வொளிகொள் வேத
சத்திய நெறிதி கழ்த்தத் தடம்பிற ழாது செல்வான். 47

காரிரு ணிறைந்த கானிற் கங்குலி னள்ளி ராவிற்
பாரிட நிறைந்த சாவின் பயங்கரப் படுகர் வைப்பில்
ஓடித் தடத்தை நாடி யொருதனி யேக வென்னின்
ஆரிதற் கருக ராவா ரருட்பல முடையா ரன்றி. 48

துருவிநா னெறியிற் செல்லும் வேதியன் றுணுக்குற் றேங்க
மருவிவெங் கான மெங்கு மெதிரொலி மடுத்து மல்கக்
கருவிளை மகளிர் கர்ப்பங் கலங்கிட வலகைக் கூட்டம்
பெருவலித் திரடோள் கொட்டி யார்த்தன பிலத்துப் போந்து. 49

மீயுயர் மூக்குங் கண்ணும் வியன்பகு வாயு மண்டிக்
காயெரி தழுவிச் சுற்றக் கதழ்ந்துபேய்க் கணங்க டொக்குப்
பாயிரம் பலவுங் கூறிப் பகைச்சினந் திருகி வல்லே
ஆயிர முகங்க ளாகச் செருக்கிவந் தடர்ந்த மாதோ. 50

மிடுக்குறு பைசா சங்கள் வெருட்டுபு வெகுண்டு கிட்டிக்
கடுக்கிவந் தடையக் கண்டுங் கதித்தபே ரிரைச்சல் கேட்டுங்
கெடுக்குமுப் பகையை வென்று கேவல நாடிப் போகுந்
தடுக்கரும் வலத்தா னின்று தன்னுளே கவல்வ தானான். 51

நீசனே னாச தேச நீறுபட் டிடுமென் றஞ்சி
ஈசனூர் நகரம் வேட்டெண் டெய்தினே னழிம்பன் மட்டில்
மூசிய விடுக்கண் டுன்ப முழுதுமோ ரணுவா மிந்த
நாசவைப் பெதிரு மோச நாசங்கள் பிறங்க லாமால். 52

விரவிய விவித மான விக்கினங் களைமேற் கொண்டு
புரவுநா னெறியிற் பாதி போக்கினேன் புதுமை யாகக்
காவுறு மாரண வைப்பைக் கலந்திது காறும் வந்தேன்
இரவுழல் கிருத்தி மங்கட் கினையமை வதற்கென் றேயோ. 53

வெய்யபேய்க் கணத்துக் கஞ்சி வெந்நிடி னேன்பு வீணும்
வையக நகைக்குந் தூய மனக்கரி வதைக்குங் கேடு
கைய்தா முன்னிட் டேகி யாருயிர் கழியு மேனும்
மெய்யதா நித்ய ஜீவ வீட்டின்பம் யாவு நன்றாம். 54

ஆதலிற் றுணிந்து முன்னின் முற்றலே தரும மென்னாச்
சாதகத் திலை நோக்கித் தற்பா னாமே கோவா
மேதகு திருநா மத்தின் விறல்கொண்டு வேத நுண்ணூற்
பாதையிற் படர்வே னென்று பன்னினா னுரத்துப் பல்கால். 55

கோளரி முழக்கங் கேட்ட குஞ்சரத் தொகுதி போலுங்
காளரி முழக்கங் கேட்ட கட்செவிக் குலமே போலும்
வாளரி மறையோன் சொற்ற வாய்மைகேட் டஞ்சி யொல்லை
மூளரி யலகைப் பொம்மன் முன்னிலா திரிந்த மாதோ. 56

பகைத்திற மிரிந்த போதும் பயங்கர மிரியா தாகித்
திகைத்தல மந்து சிந்தை தியங்கினான் சிறிது செவ்வி
உகைத்தெழு மூக்கத் தோடுள் ளுணர்வுவந் துவகை யோங்கிச்
சிகைத்தலஞ் செங்கை சேர்த்தித் திருவருள் பழிச்சிச் சென்றான். 57

இன்னணம் புனிதத் தொண்ட னேகுழி யெதிரோர் சார்பில்
துன்னரு மரண பள்ளச் சூழலைத் துருவும் போதும்
என்னொடுந் தேவ ரீரோ யிருக்கின்றீ ரெதற்கு நாயேன்
பின்னிடைந் தஞ்சே னென்று பேசிய மாற்றங் கேட்டான். 58

இத்தகு வனப்பு வாய்ந்த விசைமொழி மிழற்ற வல்ல
உத்தம பத்தர் சில்லோ ருளர்கொலா மரண வைப்பில்
எத்தனை மோச நாச மெதிரினு மிடையூ றின்றி
வித்தக விமலன் காக்கும் விதமிதென் றுவகை பூத்தான். 59

தீங்கின்றி யுயிர்பெற் றேகுந் திவ்விய திருக்கூட் டத்தின்
பாங்குறி லடியார்க் கெல்லாம் பரிந்தருள் புரியும் பெம்மான்
ஆங்கென தாவிக் கேற்ற வாதரம் புரியா ரோவென்
றோங்கிய காதலீர்க்க விரைந்தன னுற்று நோக்கி. 60

துன்னரு முத்தி வேட்ட தூயயாத் திரிகர்க் கிட்டி
என்னொரு தனிமை நீங்கப் பெறுமெனி னிகலொன் றின்றி
நன்னய மொழிகள் பேசி நடப்பதெத் தனைக்கு நன்றென
றுன்னினன் மறையோ னுள்ளத் தருவெளி யுற்ற தன்றே. 61

விடிவுறு கங்குற் காலை வேதிய னெனது சிந்தைப்
படிவமோ வேறோர் தேவ பத்தியி னுருவு வாய்ந்த
வடிவமோ முன்னர்ச் செல்வ தியாதென மருண்டு தேறி
நொடிவனை நிற்றி வந்தேன் யானென நுவன்றான் கூவி. 62



சதாநியங் கிறிஸ்தி யேசு சரணபங் கயத்துக் கன்பன்
யதாநிய மத்தன் வேத வியனெறி கற்று வல்ல
விதானக னுலக பாசம் வீசிய விரத்தி யெங்கும்
நிதானியென் றுரைக்கு நாம நிலவுதற் குரிய நீரான். 63

தற்பயந் தினைய தக்கோன் றனிவழி துருவித் தானே
முற்பட முடுகுங் காலை முறையறி ஜீவன் முத்தன்
பிற்பட முடுகிக் கூவக் கேட்டுமோர் யாற்றம் பேசான்
சற்பனை யிதுமற் றென்னா விரைந்தனன் றன்னைப் பேணி. 64

பருவரல் தொடுத்த சாவின் பயங்கரப் படுகர் நீந்தித்
திருவரு ளுய்யக் கொண்ட செல்வனோர் திடர்வந் துற்றான்
மருவுமந் நிசியிற் றொக்க மையிருட் கடலை நீந்தி
உருவெளி திகழ்த்தி வெய்யோ னுதயமால் வரைவந் துற்றான். 65

நைவரு மரணா பாதி நனிதொகும் படுகர் வைப்பிற்
கைவரு கலக்க நீங்கிக் கருதுநூ னெறிதி கழத்துந்
தைவிக வருளே போல தமப்பிழம் பிரிய நூறி
உய்வளித் தருக்கன் கீழ்பா லுதித்தனன் னொளியை வீசி. 66

கண்டன னுதயத் தோற்ற மென்பதென் ககனத் தூடே
செண்டெனச் சுழன்று நீங்காத் தெருமா லுழந்து தேய்வுற்
றுண்டுகொ லினிமற் றிங்கே யுறையுளென் றாசலாடும்
எண்டகு முயிரைத் தொண்ட னெதிர்ந்தன னென்ப தல்லால். 67

அலகிலா மரணா பாதி யாழியின் கரையைக் கண்டாங்
குலகெலாந் திகழத் தோன்று முதயத்தி னொளியைக் கண்டான்
விலகரு நாச மோசம் விலக்கியன் றிரவு காத்த
இலகுபே ரருளை யெண்ணி யெண்ணியஞ் சலித்தா னேத்தி. 68

இருள்புலர் காலை வானாட் டிறைவனைப் பரவி யுள்ளந்
தெருளுறீஇத் தான்வந் துற்ற திடர்நின்று திருமி நோக்கி
வெருளுறு மிரவிற் றொக்க வெவ்விடர்ப் படுகர் முற்றும்
மருளறக் கண்டு கண்டு மலங்கினான் மறந்தான் றன்னை. 69

தேறின னுயிர்தந் துய்த்த திருவுளச் செயலைச் சிந்தித்
தாறினன் பிராண தாப மருட்டுணை யுரத்துப் பற்றி
வேறினிக் காலந் தாழ்த்தன் மிகுபிழை யென்று வல்லே
ஆறடர் மரண வைப்பின் சூழலைத் துருவிப் போனான். 70

சுருங்குறால் வழியைப் பற்றித் தூயவன் முன்செல் காலை
மருங்கெலாங் கண்ணி மாய வலைசுழல் பொறிகண் மல்கிப்
பெருங்கிடங் குழிசெங் குத்துப் பிறங்கலென் றினைய தொக்கு
நெருங்குபல் விலங்கு கிட்டி நின்றுநின் றுழல்வ கண்டான். 71

புகலரு நாச மோசம் பொதுளிவீற் றிருக்கு மிந்த
இகலுறு மரண வைப்பி லிரவுபட் டுழலா வண்ணம்
பகலொளி திகழ்த்திக் காத்த பரமகா ருணிய முள்ளிக்
ககனநா யகனைப் போற்றிப் படுகரின் கடைவந் துற்றான். 72

மிருத்துவி னந்தத் துள்ள வியனிரும் பிலத்துண் மேயோர்
திருத்தகு ஜீவ பாதை சிதைத்திட முயலுந் தீயர்
வருத்திவே தியனைக் கொன்றான் சுவைபெறு மறவோர் தம்மிற்
கருத்தழிந் துழலி ரண்டு கள்ளவல் லரக்க ருண்டால். 73

இங்கிவ ரிருவ ரும்பண் டெண்ணில்யாத் திரிக ராவி
நீங்கியோ ருகுத்த சோரி நொதிப்படு கிடங்குந் தூய
அங்கம்வெந் தக்க சாம்பற் குவைகளு மகில லோகம்
எங்கணுந் தெரியச் சாக்ஷி யியம்புவ தின்று காறும். 74

பாவிய ரிருவர் தம்மிற் பகற்குரு டாய தீயன்
ஜீவனுக் கிறுதி காட்டுஞ் சிலேட்டுமந் தொடங்கி நைவன்
கோவிய லழித்த மற்றோர் கொடியவ னாற்றல் குன்றிச்
சாவடிப் பட்டி யாக்கை தளர்ந்தனன் முதுமை தாக்க. 75

அடங்கின ரனர்த்தஞ் செய்யு மாக்கரோ ரிருவ ரேனும்
மடங்கலே றனையான் கிட்ட வயோதிக வைரி யாய
படங்கிள ரரவு சிறிப் பணிக்கரும் பழிச்சொல் லென்னும்
விடங்கலுழ்ந் திடவெண் ணாது வேதிய னெறியிற் போனான். 76

மல்லல்கூர் பரம சீயோன் மலைக்கதி பதியாந் தெய்வ
நல்லருட் டுணைமையாலே நவிலரு மரணச் சூழல்
எல்லையைக் கடந்தோர் கானத் திறுத்தன னாச தேச
அல்லலைக் கடந்து வந்த வாரணக் கிழவ னம்மா. 77

அலைபுரண் டனைய துன்ப மடரினு மழலைக் காலும்
மலையென மரணங் கிட்டி மலையினு மருட்பே றாக
நிலையுறு மனத்திட் பந்தா னெஞ்சுறத் திகழு மாயிற்
கலைமதிக் கதிர்முன் னுற்ற விருளெனக் கழிதல் கண்டாம். 78



வன்புறு மரண வைப்பை யகன்றபின் மறைவ லாளன்
முன்புசென் னிதான னட்டை முயலுவா னாட்டம் வைத்தான்
மன்பதை யுலகி லாவி வதைபடு வறுமை யாதி
துன்புறழ்ந் தவர்க்கே யன்றோ தோன்றுநன் னிதான புத்தி. 79

மரணச் சூழலிறுத்த படலம் முற்றிற்று.

## நிதானிநட்புப் படலம்.

மெய்யா ரணவித் தகன்வெவ் விடர்சால்
மையார் மானா டவிவைப் பையொரீஇ
மொய்யா ரளியின் னிசைமுற் றியவோர்
உய்யா னவனாந் தாமுற் றனனால். 1

வானா டிவரும் பிரயா ணிகடாங்
கானா டியமெய் வழிகண் டறியக்
கோனா டியமைத் தசெய்குன் றிவரா
நானா டியவே தியனோக் கினன்முன். 2

நேரா றுபிடித் துநிதா னியெனும்
பேரா ளனெறிப் படுபெற் றிதனைக்
கூரார் விழிகொண் டுகுணித் தணுகிச்
சீரா ளனடுத் திதுசெப் புவனால். 3

அருமைத் துணையே யிவ்வரோ கவனத்
தொருமித் துவழித் துணையுற் றியையத்
தருமக் கிருபா கரர்தந் தவருட்
பெருமைப் பிரசா தநலம் பெரிதே. 4

நம்மா வியுமாக் கையுநம் பொருளும்
அம்மா னடிக்கர்ப் பணமாக் கிடினுங்
கைம்மா றுகவா துகசிந் தவருட்
கிம்மா றணுவே னுமொரீ டுகொலாம். 5

என்றின் னனவோ ஓகையொடீ சனருள்
நன்றுன் னிவழுத் தலுநன் றிதெனா
நின்றுன் னிநிதா னனுநெஞ் சமகிழ்ந்
தின்றுன் றுணைவாய்த் ததெனக் கெளிதோ. 6

என்றே வழிநா டினனென் குடிவீட்
டன்றே விழைவுற் றனரும் துணையை
இன்றே வளைநா டினனெய் துகிலேன்
நன்றே யிவணோர்ந் ததுநா னுனையே. 7

அருளே யெனையிவ் வழியாக் கியெனக்
கருளே யுனரும் துணையாக் கியதால்
அருளே துணைமுற் றுநம்மா ருயிருக்
கருளே யலதொன் றிலையா தரவே. 8

புத்திக் கொருபோ தகதந் தையிறை
பத்திக் கொருபா லனைர க்ஷணிய
சித்திக் கொருநற் குருதே சிகன்வான்
முத்திக் குவழித் துணைமுற் றினுநீ. 9

என்று வுனைநட் டனனெம் பெருமான்
பொன்னார் கழனீ ழல்பொருந் தும்வரை
முன்னு டுதுமா ரணமுந் துகெனுச்
சொன்னான் விநயத் தொடுசூழ்ச் சியனே. 10

வல்லார் திருவுள் ளமகிழ்ந் தபடி
எல்லா நலமா குகவில் லொருவி
நல்லா யிவ்வழிப் படுநாண் முதலாச்
சொல்லாய் வரலா றுதொடுத் தெனவே. 11

வேறு.

உளமலி யுவகையி னொருங்கு கேளென
வளமலி யாரணக் கிழவ வானுலைக்
களமலி கனன்மழை கவிழ்ப்பக் காசினித்
தளமலி சராசரஞ் சாம்ப ராமெனு. 12

நாசதே சத்தவ ரெவரு நாடொறும்
பேசின ராயினும் பிழைப்பை நாடிலர்
மோசநா சத்திலே முழுகி டாவகை
ஈசனு ருளெனை யிழுத்த திவ்வழி. 13

விதிவழிப் பட்டனன் விசால வெள்ளிடை
நொதிவழி யுருவகை நுனித்து வந்தியான்
கதிவழிக் கடைத்தலை யடுக்குங் காலையிற்
சதிவழி புகுத்துமோர் தையல் தோன்றினள். 14



முச்சக மருண்மதி முகத்தள் மோகன
நச்சுவேற் கருங்கணி நறைவ டித்தென
இச்சக மொழியினி திசைக்கு மேந்திழை
அச்சறுண் மருங்குலா ளலகைக் கோர்துணை. 15

கேடெலா மொருவழித் திரண்டு கேழ்கிளர்
பீடுசா லுருவமைந் துழலும் பெய்வளை
நாடியுண் ணினைப்பினுங் கொல்லு நஞ்சமிக்
காடவ ருயிர்ச்சுவை யறிந்த கூற்றரோ. 16

நாமமோ காதுரி யெனநு விற்றுமக்
காமினி மயற்படு கண்ணி குத்திவந்
தேமறு னெறியிகந் தெனது மஞ்சமுன்
சேமவைப் பாக்கொளிற் செல்வர் நின்னில்யார். 17

புவிபடு சிற்றின்ப போக போக்கியங்
குவிபடு மாளிகை குலவி யென்னொடுந்
துவிபடா திளநலந் துய்த்தி யாலுயிர்
அவிபடு காறுமென் றடுத்துக் கூறினள். 18

காதகி பகட்டிய கபட்டு நச்சுரை
ஈதிதென் றெடுத்தியா னிசைப்ப தும்மதைக்
கேதமில் குணத்தநீ கேட்ப தும்மதி
பாதகம் மனக்கறைப் படுக்கு மென்பரால். 19

மாந்தளிர் மேனியை மருட்டு நோக்கினைத்
தேந்தள வரும்பினிற் றிகழ்புன் மூரலை
ஏந்திழை யிச்சக மொழியை யென்மனம்
நீந்தவோர் நெடும்புணை நிகழ்ந்த தவ்வுழி. 20

பணிவிடத் திளநலம் பகரும் பைந்தொடிக்
கணிகையர் காலடி கவிழ்க்குங் காமவெம்
பிணிகெழு மாந்தரைப் பிலத்தென் றேங்கிய
அணிகிளர் திருமொழி யதுமற் றென்பவே. 21

நல்லுரை கடைப்பிடித் தைய நங்கைபாற்
செல்லிரு விழிகளைத் திருகித் தீங்குரை
புல்லிடா திருசெவி பொத்திப் பொள்ளென
வல்லிநின் விரைந்தனன் வலைக்குத் தப்பியே. 22

மாயமோ காதுரி யென்னும் வம்பியே
ஏயென விகழ்ந்தணி லேற விட்டவோர்
நாயெனக் குரைத்துள நலிந்து நின்றனள்
சீயெனத் துரந்தனன் செலவை நோக்கியே. 23

என்றபோ தாரிய னெம்பி மற்றிவள்
நன்றறி விடலையோ சேப்பை நச்சிய
அன்றவ னுருயிர்க் கறுதி சூழ்ந்தனள்
வென்றிவேந் தருளினால் விலகி யுய்ந்தனன். 24

அத்தகு திருவரு ளாட்சி யேயுனை
இத்தலை புரந்ததென் றீச னுமத்தைத்
துத்தியஞ் செய்தினிச் சொல்லு கென்றனன்
வித்தக நிதானியும் விளம்பன் மேயினான். 25

ஆரணக் கிழவசஞ் சலவ டுக்கலின்
சாரண வியபொழு தாதி தந்தையாம்
பூரண நரைதிரைக் கிழவன் போந்துபல்
கோரணிப் படுமொழி கூறன் மேயினான். 26

முகக்குறி யாலொரு முத்தி யாத்திரை
உகக்குனை னூனெறி யொழுகி யென்பதும்
அகக்கணீ யருவருத் தவனி வாழ்வெலாம்
இகக்குனை யென்பது மெளிதிற் றேர்ந்தனன். 27

மண்ணுரு வினைமருங் குறவு மண்ணுலை
மண்ணுகர் வாழ்க்கையை மண்ணின் வைகுவை
மண்ணின்மண் ணுகுவை மரித்தி தோலை
மண்ணினை யிகத்தியென் மதிகொண் டேழைநீ. 28

கையக வெண்ணெயைக் கருதி டாதுபோய்
நெய்யகந் தொறும்வினாய் நேடு வாரினே
வையக வாழ்வினை வரைந்து வானுறு
மெய்யக வாழ்வினை விழைவை நன்றரோ. 29

பாழியம் புவிநலம் பழுத்த வென்மனைக்
கூழியஞ் செயமன மொருப்பட் டாயெனின்
ஆழியே யனையமு வாசை மாதரை
வாழிய நினக்குயான் மணமு டிப்பனால். 30



சிற்றின்ப கருமமே யன்றிச் செய்வினை
மற்றிலை யென்பது மனக்கொண் மாதவம்
முற்றிநீ மறுமையின் முத்தி மாநலம்
பெற்றிட வெத்தனை யூழி பேருமோ. 31

பூதல மனைத்துமோர் புணர்ப்பி னுற்றருஞ்
சூதுமா நகரிடைத் துன்னி யான்பெறு
மாதரை மணந்திறு மட்டும் வாழ்கெனக்
காதலித் தென்னுளங் கரையப் பேசினான். 32

தெருண்டமே லவனெனத் திருகி யென்மனம்
மருண்டதங் கவனய வசனந் தாயினும்
இருண்டமூஞ் சியின்மறை யெழுத்துக் கண்டுடன்
வெருண்டகந் தெருண்டது வெறுப்புக் காட்டியே. 33

ஐயகேள் பழையமா னுடனை யங்கவன்
மையுறு கிரியையை வரைந்து நீங்கெனுஞ்
செய்யவா சகமது தெரியக் காண்டலுஞ்
சையென விகழ்ந்தனன் றருவ தன்றெனா. 34

இச்சகம் பேசியா ளாக்கி யென்னையக்
கொச்சைவன் சிறைப்படுத் துயினாக் கொள்ளுவன்
நிச்சய மெனவொரு நினைவு தோன்றலாற்
குச்சிதன் முகங்குறிக் கொண்டு நோக்கியே. 35

நின்னையுங் கெடுத்துநீ ணிலத்தை யுங்கெடுத்
தென்னையுங் கெடுத்தனை யெனினு மேழையேன்
தன்னையாட் கொண்டது தம்பி ரானருள்
முன்னைய னல்லனென் றுணர்தி முந்தநீ. 36

ஓசைநீ ருலகர சுரிமை நல்கினும்
ஆசைமா தரைமண மாற்று கிற்கிலேன்
நாசநின் மனைக்கடை நச்சுவார் கொலாம்
ஈசனோர் கடைத்தலை யெய்து மெம்மனோர். 37

வருகிலேன் முதியநின் வழிக்கொள் வாயெனக்
கருகிய சிந்தையான் கனன்றுன் னுருயிர்
பருகவோர் மறவனை விடுப்பல் பாரெனத்
திருகினா னுடலையென் னுயிர்தி யங்கவே. 38

ஆயிடை யாக்கைநின் றகன்ற தாங்கொலுன்
மேயபூ ருவவியற் கூறு வேந்தருட்
சாயலைப் பிடித்துநூற் றடத்தி லோடினேன்
போயின னறக்கொடுங் கிழவன் பொங்கியே. 39

வல்விரைந் தணுகினே னுபாதி மல்கிய
கல்வரை கண்டுளங் கலங்கிற் றாயினும்
ஒல்வகை யடிபெயர்ந் தேறி யோங்கலிற்
செல்வநந் தனவனச் சேக்கை சேர்ந்தனன். 40

அக்கணத் தெரிமுக னழலுஞ் செங்கணான்
கொக்கரித் துருமெனக் குமுறி யண்மியோர்
உக்கிரன் பணைக்கர மோச்சி யொல்லென
மிக்குறாத் தோரடி யடித்து வீழ்த்தினான். 41

கண்ணிலான் மும்முறை கனன்ற டித்தெனை
மண்ணுற விழுத்தியம் முதுவன் மன்றுற
எண்ணினை யன்றுகொ லென்னச் சீறினான்
உண்ணில வெனதுயி ரூச லாடவே. 42

கூற்றமிவ் வுருக்கொடென் னுயிர்கு டிக்கவந்
தேற்றதென் வினைவிளை கால மீதெனா
ஆற்றல னாகிநெஞ் சழிந்து கண்கணீர்
ஊற்றிட வாவிநொந் துலைந்து போற்றியே. 43

பூரிய னேனுளம் புணர்த்த தீமையை
ஆரிய பொறுத்தரு ளளித்துக் காவென
நேரியல் வான்முறை நிகழ்த்த நெய்சொரி
வீரியக் கனலென வெகுளி மூண்டதால். 44

அவ்வயிற் றளையளி கருணை யாருள்
திவ்விய வன்பெனுங் குணந்தி ரண்டவோர்
செவ்விய னடுத்துளந் தெருட்டிச் செங்கணான்
வெவ்விய கரத்தெனை விலக்கிப் போயினார். 45

வழுத்தரும் பெரும்புகழ் வரதன் வந்தெனை
இழுத்தரு ளளித்திடா ரென்னில் வெஞ்சினம்
பழுத்தவன் கொன்றுயிர் பருகு வானன்றேல்
தொழுத்தையாக் குவன்சிறைப் படுத்தித் தூய்மையோய். 46



நின்னைய மிதுவென நிகழ்த்துங் காலையக்
கண்ணிலான் கற்பனைக் கிழவன் காண்டகு
தண்ணளிக் குரிசிலெம் ஜீவ தாரக
புண்ணிய மூர்த்தியென் றறிதி புந்தியோய். 47

கற்பனை நெறிகதி காட்டு மாயினுஞ்
சற்பனை விளைக்குமோர் சற்று நீங்கிடில்
தற்பர னருள்வழி சருக்க லாயினும்
பொற்புறு நீதிவான் கதிபு குத்துமால். 48

சாதன மிழந்துயான் றவித்த வவ்வயின்
நீதுய ருழந்தமை நினையுங் காலையத்
தாதுகு நறுமலர்ச் சாளக் காவணஞ்
சோதனை நந்தனச் சூழல்போன் மென்றான். 49

அந்தண னுறையகத் தழுந்த வாரிய
விந்தையைங் காயத்தை விழியிற் கண்டுமென்
சிந்தனை தெருண்டில னாண்டு தெய்விக
மைந்தனென் றுணர்ந்தனன் பின்பு வள்ளியோய். 50

வருத்தியென் னாருயிர் வதைத்த மற்றொரு
விருத்தனை முன்னரே யறிவன் வீட்டகத்
திருத்தியே விம்மனை யெரிம டுப்பலென்
றுருத்தனன் பூருவாச் சிரமத் துற்றரோ. 51

ஐயநின் னுறையினா லருளின் மாட்சியும்
மையகன் மெய்விசு வாச நீதியுந்
துய்யகற் பனையநுட் டிப்பின் சூழ்ச்சியும்
ஐயமின் றாகவென் னகந்தெ ருண்டதால். 52

## வேறு.

எந்தையதன் மேல்வழிநி கழ்ந்தவையி னிக்கேள்
நந்தனம்வி டுத்துமலை யுச்சிநடை கூடி
வந்தவமை யத்திரும டங்கலரி யேறு
பந்தமொடு றங்குசெயல் கண்டுயிர்ப தைத்தேன். 53

மத்தியுறு நண்பகலி னுங்கதம டங்கல்
சித்திரைசெய் நீர்மையினு நெஞ்சுதுணி வுற்றே
அத்திசைய கன்றுதிரு மாளி[illegible]
பத்திமறு கூடுதிகழ் பாதைகொடு போந்தேன். 54

சஞ்சலம லைச்சிகரி நின்றிழித டத்தில்
எஞ்சியமு கத்தருளி லானிதய கோட்டன்
நெஞ்சுறவ ணைந்திநெறி நீசமுறு மேழைப்
பஞ்சைகள்ப யின்றிடுமோர் தாழ்படுக ருய்க்கும். 55

சீரொடுசி றப்பிலது செல்வர்புக வொல்கும்
பேருளதி கழ்ச்சியுறு பெற்றியது நீயக்
காரிருடொ கும்படுக ரிற்கவிழ்ந்தி யேனம்
ஊரவம தித்துநகை செய்யுமிஃ துண்மை. 56

திருவிலிக ளோடுநெறி சேர்தன்மதி யன்றால்
கருவனிறு மாப்பனகங் காரியோடி டம்பன்
பெருமிதனு னக்குறவ ராயவர்பி ணங்கிப்
பொருவரிய மூடனென வெள்ஞவர்பொ றாரால். 57

நம்பினஜ னங்கள்செலு நன்னெறிவி ஞவின்
அம்மபெரு மைத்திடரின் மீதுசெல மார்க்கம்
எம்மவர்கு ழாங்கொளத லத்தினிதி னுய்க்குஞ்
செம்மையுறு மேலவர்செ லும்பரிசு மோர்தி. 58

இலகுபுகழ் மேன்மையுல கின்பசுக மெல்லாங்
குலவுநெறி விட்டிழிகு லீனர்நெறி கொள்வாய்
உலகருள தென்பதிலை யென்னிலுல குக்கோர்
அலகையிவ னென்பரித றிந்திலைகொ லென்றான். 59

கோணியம னத்தனிது கூறலும றுத்துச்
சேணிலவு பூபதிதி கழ்த்துநெறி சேர்வல்
கோணிலைதி ரிந்துலகு குப்புறுவ தேனும்
நீணிரைய முய்க்குநெறி நோடிபெ யர்க்கேன். 60

என்றருள்வ ழிப்படமு யன்றுளமி சைந்தேன்
அன்றுகிளை நட்புரிமை யாயவுற வோர்க்குப்
பொன்றினவ ஞனவரெ னக்குமது போல்வர்
இன்றவர்வ ழிப்படுவ தெங்ஙனம டுக்கும். 61

மாயவிரு ளோடுசுடர் வான்பரிதி காலுஞ்
சேயொளிம டுத்துறவு செய்யுமெனி லன்றோ
[illegible] றுந்தகைதொ ழும்பர்
ஆயவர்ப ரிந்துறவு செய்வரென லாமால். 62



ஈதுவல ரீதிடமெ னக்கையறி யாத
பேதையர்பு கழ்ந்துதுதி பேசிடினு மென்கொல்
ஊதியமி கழ்ந்திடினு முண்டுபடு மேயோ
சேதமிலை யூரவம திப்பிலொரு சிந்தை. 63

கோட்டமுறு தாழ்மையுயர் மேன்மைநிலை கூட்டுங்
கேட்டிடைவி ழுத்துநனி கேதமுறு சிந்தை
மேட்டிமையி தோர்ந்துமறை வேதியர்செல் தாழ்மைப்
பாட்டையைவி ழைந்தனனிம் மேட்டுநெறி பாரேன். 64

என்றறுதி கூறியய லேகெனவி டுத்துத்
துன்றியவு பாதிதொகு சூழலையொ ரீஇப்பின்
வென்றிதரு தாழ்மைநில மேவிவில காமே
மன்றனக ராதிபனை வாழ்த்திவழி வந்தேன். 65

மட்கிமதி குன்றறிம டக்குடிநி லாவும்
வெட்கமெதிர் வந்தெனைவி டாப்பிடிபி டித்தே
கட்கமென நெஞ்சுருவு கைப்புனைதொ டுத்தான்
உட்கிமறு குற்றதொரு கன்னலென துள்ளம். 66

செத்தபின்வ ரும்பரம சிற்சுகமெ னக்கண்
டுய்த்துணர்கி லாதுமன முட்கியுழல் தேவ
பத்திநடை யென்பதுப யித்தியம லாலோர்
சத்துமிலை யென்பதெமர் சாசுவத கொள்கை. 67

மாசறுகு லத்தமனை வாழ்வைமதி யாமே
நீசரொடு தாழ்படுகர் நேர்ந்துநடை கொள்ளல்
மோசமறி யாதமுழு மூடமதி யன்றிச்
சீசியடி மைத்தனமி தென்கொலிழி ஜென்மம். 68

நாணலைகு லப்பழியை நச்சுறவின் மானம்
பேணலைநி கைத்துலகு பேசுபடு நிந்தை
காணலைக ழித்தெறிதி காமியந லத்தைப்
பூணலைபு விப்படுபு கழ்ச்சிசிறி தேனும். 69

மேதினியி லேபிரபு டகாதி வீரர்
மாதகைய ஞானியர்வ ரம்பிலரி மார்க்கம்
மேதகைய தன்றெனவெ றுத்தனர்நி னைப்போற்
பேதையர லாலெவர்பி டித்திழிவு பெற்றார். 70

கேவலரோ டாலயம ரீஇத்துதிகி ளந்தும்
ஆவலின்வ ணங்கியும ருட்குரவர் போதம்
மேவியுமு ணர்ந்திருவி ழிப்புனல்சொ ரிந்தும் 71
பாவனைசெய் நாணிலியி தெத்தனைப ழிப்பாம்.

செய்பிழைபொ றுக்கெனவி ரக்குதல்செ ருட்டிற்
கைவருபொ ருட்குரியர் கையுறவ ழங்கல்
பொய்வழிய ரும்பொருள்பு றத்தெறித லென்றும் 72
மெய்வழிமி டிப்படலி தெத்தனைகொல் வெட்கம்.

கானமுழ லுங்கவரி மாவுயிர்க ழிந்தே
ஈனமுறு மோர்மயிரி டர்ப்படுவ தேனும்
ஊனுடல்வ ளர்த்துயிர்சு மந்துலகு லாவி 73
மானமழி யப்பெறுமோர் வாழ்வுமுள தேயோ.

தலையினிழி வுற்றமயி ரேயனையர் தத்தம்
நிலையினிழி வுற்றகடை யென்றறநி கழ்த்துங்
கலையைமுச லாக்ரமதி காட்டினைதி கழ்த்திப் 74
புலையரொடு கூட்டுணவி யைந்தபொழு தத்தே.

இத்தகைய வெட்கமுமி கழ்ச்சியுமி ழுக்குஞ்
செத்தனைய துன்பமுமு ழக்கவரு தேவ
பத்தியைவெ றுத்துலக கேளிர்நடை பற்றிச் 75
சித்தமகிழ் கென்றுபல செப்பினனெ டுத்தே.

## வேறு.

இன்ன வாறிகலி வெட்கமெனு மீன னெதிரில்
துன்னி நின்றெனித யஞ்சுடவு ரைத்த சுடுசொன்
மன்னு ஜீவவச னத்திறெடு மாறு கொளவும் 76
என்னு ளோநனியி னைந்தினைய வெண்ணி னனரோ.

உலகர் மேன்மையென வுன்னுவதை யுன்ன தநிலத்
தலகி லாதிபர கத்தருவ ருப்ப ரறநூல்
விலகி மற்றிவன்வி திப்பதுமெய் வேத விதியன் 77
றலகை துன்மதிய ளாயநர மேதை யசடால்.

பன்றி ரக்ஷணைவ ழங்கவரு மாம றைகொடே
நன்ற ருட்குமர நாயகன டுப்பு ரிவரீ
தன்றி யிவ்வுலக கந்தையறி யாமை செருமிப் 78
பொன்று புன்னர்கொ லன்றெமைந டுப்பு ரிவதே.



வாவு கோட்டம ணங்குலவு மாலை மதியா
தோவி லாதுலகு வந்துதலை சூடுமு ணர்வில்
பாவ காரியர்ப யித்தியமெ னுவிகழு பத்தியைத் 79
தேவ பூபதிம தித்துளமு வப்பர் தினமும்.

சருவ லோகமுமொ ருங்கெதிர்த டுத்த பொழுதும்
நிருவி காரபதி வாக்குநிலை நின்று நிலவும்
மருவு யிர்ப்பொருவ ழிப்படம டுத்த பொழுதும் 80
பொருவில் மாருதக திக்கெதிர்பு லப்ப டுவதோ.

வாம னோகரன டித்துணைம ரீஇய வறியோர்
பரம செல்வமுறு பாக்கியர்ப கைத்த மறவோர்
தாமி லாதுலக வாழ்வுறுத ருக்க ரெனினும் 81
ஊமி லாதுழல பாக்கியரொ ருங்க டையவே.

அருளி னுயவொரு செல்வமதி செல்வ மதனைத்
தெருளி னுயபர ஞானியர்தெ ரிந்து திகழ்வர்
பொருளி னுயவொரு பூதியிழி பூதி யிதனை 82
மருளி னுயவழி பூரியர்ம தித்து மகிழ்வர்.

மீது றும்பரம ராஜ்ஜியம்வி ரும்பி முயல்வோர்
பேதை யென்றுல கிகழ்ந்துபழி பேசு மெனினும்
மேதை யாயபர ஞானியரெ னுவி புதரே 83
காத லோடுபுகழ் வார்நனிக ளிப்பு மிகவே.

என்ற கத்துணர்வெ ழும்பலிலெ னக்கெ திரிலே
நின்ற வெட்கிமுக நோக்கியட நீச மதியோய்
இன்று னக்கிடம ளிப்பனெளி னீச னொருசேய் 84
அன்றெ னக்கிடம ளிப்பர்கொல ருட்ச ரணிலே.

ஆன்ம ரக்ஷணைய ழிக்கவரு சத்து ருவுனை
நான்ம தித்துரைந விற்றிடின லங்கொ ணடுநாள்
வான்மு கத்திரவி போலொளிவ ழங்கு மகிமைக் 85
கோன்மு கத்தெதிர்வி ழிக்கவருள் கூடு வதுகொல்.

ஜீவ நூனெறிபி டிக்கமகி ழ்ச்சி சைபமுறை
ஆவ லாயநுச ரிக்கவரு கார ணர்குழாத்
தோவில் கூட்டுறவு கொள்ளவுள மொல்கு வனெனில் 86
தேவ வாசியருண் மல்குவகை யாது தெரியேன்.

நன்மை செய்யவெனி னாட்கிமன நாணி லிவை
தின்மை செய்யவெனின் முன்னிடுதி சிந்தை திருகாய்
புன்மை யோய்கடிது போதியயல் போதி யெனவன்
சொன்மை யாலுறவெ ருட்டுபுது ரந்த னனரோ. 87

நின்றி டாதுபடு நீசமதி நீணெ றியிலென்
பின்றொ டர்ந்தருகி டைக்கிடைபி தற்றி வரவும்
வன்றி றற்கொடுவி ழுத்தினெனி லத்து மறியத்
தென்றி சைக்கணெறி கூடினன்வி ரைந்து சிறியேன். 88

இகலொ ழித்ததய வெல்லொளித வழ்ந்து மிளிரும்
பகலி லாருயிர்ப தைக்கமர ணப்ப டுகர்வந்
தகில லோகசர ணாலையர ருட்டு ணைமையாற்
சகல விக்கினமு நீந்தினனி தென்ச ரிதமால். 89

என்ன நன்மதிநி தானிசொலி யெந்தை யினிநீ
பன்னு குன்சரித மென்றுபணி விற்ப கர்தலும்
பொன்னி லத்துரைசெ வித்தொளைபொ துத்த பொழுதே
என்னு ளத்துணர்வெ ழுந்ததென வெண்ணி மொழிவான். 90

## வேறு.

உரிமைநீத் தொளியை நாடி யொருமனை குறுகி யாய்ந்து
வெரிநுறு சும்மை வீழ்த்தி வெற்பிடர் கடந்தி ரவின்
அரமனை விருந்துண் டிப்பா லழிம்பனை யமரிற் போக்கி
மரணவைப் பொரீஇநின் னட்பின் வலியுற்றேன் மற்றுங் கேட்டி. 91

உத்தம வுபாதி யோங்கற் சிகரிமீ தொருகோல் வேந்தன்
சத்திர மணைந்தோர் வைகல் தரித்துளை யெனினென் சொல்கேன்
முத்திசா தனங்க ளாக முறைமுறை திகழுங் காட்சி
எத்தனை யதிகங் காண்பை யெத்தனை பரமா னந்தம். 92

கழிந்ததற் கிரங்க லென்னோ கானகத் தெதிர்ந்த நீசன்
பிழிந்துதீ விடத்தை யூட்டும் பேயெனப் பிடித்து நிந்தை
மொழிந்துனைக் கெடுக்க முற்று முரணிய மூடக் கொள்கை
அழிந்திடச் சிதைத்த வுன்ற னாண்மையே யாண்மை யாமால். 93

துதிபெறு ஞான முள்ளார் சுதந்தர மகிமை யாகும்
மதியிலா மூடர்க் கென்றும் வாய்ப்பது வெட்க மென்னா
நிதிமிகப் படைத்த ஞானி நீதிவாக் கியத்தை யோர்ந்து
சதிபுரி வெட்கந் துஞ்சச் சமழ்ப்பதே தரும மெம்பி. 94



மருளூறு சங்குற் போது மாரணச் சூழ னீந்த
அருளொளி திகழ்த்தி யென்னை யாதரித் ததுமற் றுன்னைத்
தெருளொளி திகழ்த்திக் காத்த செவ்வியுந் துவிதமாய
பொருளெலாம் புரக்கும் பெம்மான் பூரண ஞானத் தாட்சி. 95

கோல்வழி யிழுக்கா வேந்தன் குவலயா டவியி லெம்மை
நூல்வழி நடத்திக் காத்த நுவலருங் கருணை நம்பி
மால்வழி விழாது வல்லே மானத தியானத் தோடு
மேல்வழி பிடித்து மென்னா விருவரும் விரைந்து சென்றார். 96

நிதானிநட்புப் படலம் முற்றிற்று.

## அலப்பனை வரைந்த படலம்.

உலப்பிலா வாதி மூலத் தொருபரஞ் சுடரை நாடிப்
புலப்பகை களைந்த வேத புங்கவர் குழாத்த னேனும்
நிலப்பொறை யாகி நுண்ணா னிண்ணயங் கருத்து ளொன்றா
அலப்பனென் றொருபேர் பெற்ற வசடனங் கவர்முன் சென்றான். 1

செய்மையின் விளங்கக் கண்ட தேகந்தான் கிட்டக் கிட்டத்
தேய்மதி போலக் குன்றித் தேசழிந் துருவேறாக
நோய்மைமிக் குடையான் கொல்லோ விவனென நுனித்து நோக்கி
ஆய்மதி நிதானி யொல்லை யலப்பனை யுசாவித் தேர்வான். 2

பூருவ தேசம் யாது பொருவரு நாச தேசம்
ஊரெது சள்வாய்க் கோட்ட முறுவதெங் கும்பர் நாட்டுக்
காருளை குமரே சன்பா லாவலென் னிரக்ஷை வேண்டி
நேருமோ வொன்றித் தேக நேருமென் றுரைப்ப தானான். 3

இத்தகு துணையெ னக்கிங் கிசைந்ததெத் தனைம கிழ்ச்சி
உத்தம வழிதோன் றாமே யுவந்துசெல் வதற்கு பாயம்
பத்திமார்க் கத்த ராய பவித்திர ரோடு செய்யும்
மித்திரங் கலந்த சம்பா ஷணையினின் வேறொன் றுண்டோ. 4

முன்முக மறியே னுன்னை யாயினு முனிவொன் றில்லா
நின்முகங் கண்டும் நேரே வினவிய நேர்மை யோர்ந்தும்
என்முகங் களித்த காட்சி யெதிர்ந்தனை பளிங்கே போலத்
தன்முகங் காட்டு நெஞ்சத் தன்மையை யென்பர் சான்றோர். 5

சொன்மதி தெருளா ராகிச் சூழ்ச்சியற் றுழலு மாந்தர்
நன்மையும் பயனு நாடார் நகைத்துரை யாடி யந்தோ
பொன்மையாக்கிடைத்தவாறாட் பொழுதுபோக்கடிப்பரென்கொல்
ஜென்மசா பலிய மீதென் சிந்தைக்கோர் பெரிய துக்கம். 6

என்னலு நிதானி வீணே யிறைப்பொழு தேனும் போக்கல்
கொன்னுரை வழங்க லாதி கொடுந்தொழில் துக்கந் துக்கம்
பொன்னிலத் தரசன் சீர்த்தி புனைந்துரை யாடிப் போக்கும்
இந்நிலத் துரிய வைக விருமைக்கு முறுதி யென்றான். 7

ஆங்கது கேட்டு நின்சொல் லனைத்துநல் லுணர்ச்சி மூட்டும்
பாங்குள நவீனச் செய்தி பயக்குமாந் தருக்கின் பெண்ணின்
வீங்குபுண் ணியலோ கத்து விசேடமான் மியப்ப கர்ச்சி
ஓங்கிய பரமா னந்த மூட்டுதற் கைய முண்டோ. 8
சகல

இம்மையி னிகழ்ப வெல்லா மிறுதலின் மாயை யேயாம்
அம்மையி னிகழ்வ வெல்லா மழிவில்மெய்ப் பொருளா மாயிற்
செம்மைசேர் கதியைச் சேரத் திகழ்மறு ஜெனனம் வேண்டும்
நம்மையீ டேற்று றுதா னஞ்சுய நீதிப் போலி. 9

முத்திநாட் டிளைய கோமான் முறைபிச காதிங் குய்த்த
நித்திய ஜீவன் மல்கு நீதியே நமக்கு வேண்டும்
இத்தகு நீர்மை யுள்ளி யெடுத்துரை யாட வாட 10
உத்தம தேவ பக்தி யொளிருநன் கிதயத் தோங்கி.

மெய்க்குணப் படுத லுண்டாம் விசுவாசம் வளரும் பாவச்
சிக்கறும் பிரார்த்த னைக்குச் சிந்தனை திருந்துந் துன்பந்
துக்கநோய் பகையே யாதி சோதனைக் கிடையா துள்ளம் 11
பக்குவப் படுநம் பிக்கை பலப்படு மருள்மெய் வாக்கின்.

மித்தையை நம்பி யந்தோ வீணவ பத்தி யென்னும்
பித்தமிக் கவித்தை மூடிப் பிரபஞ்சத் துழலு மாந்தர்
நித்திய ஜீவ மார்க்க நெறிபிடித் துய்ய வேத 12
சத்தியந் திகழ்த்தும் வாஞ்சை தழைக்குமெய்ப் பத்தி யாலே.

குன்றுறு நித்ய ஜீவன் குலவுதற் கிருத யத்தில்
நன்றுசெய் கிருபை யன்பின் நனிவிசு வாசம் வேண்டும்
இன்றமை யாதென் றோரா தெத்தனை யேழை மாந்தர் 13
பொன்றுவர் தமக்கே சொந்தப் புண்ணிய முளவென் றேம்பி.



கோட்டமில் தேவ பத்தர் கூட்டுற வடைந்து செய்யுந்
தாட்டிக மான சம்பா ஷணைபெரு மையினு லிந்தக்
கேட்டினுட் படுவ ரென்னே கிளரிருஞ் சிறக ரின்றி
மோட்டுயர் விசும்பை முட்ட முடிவதோ பறவைக் கென்றான். 14

தைவிக கிருபை யொன்றே தணப்பிலா வவித்தை நீக்கி
மெய்விளக் கிடுமெஞ் ஞான்றும் வித்தகப் பயிற்சி யேனுங்
கைவரு கல்வி யேனுங் கதிநலங் காட்டா தென்ற
பொய்வரை புந்திக் கொல்லை புகலுமா லலப்பன் மாதோ. 15

உன்னதத் தருளொன் றின்றே லுறுநலம் யாது மின்றும்
பன்னருந் தூய நீதி பகர்விதி நிடேதத் தாலே
துன்னுமென் றுழல்வோ ரெல்லாந் துரியநா யகனோர் செம்மற்
சந்நிதி நின்று வீழ்ந்த சழக்கரென் றுரைக்கும் வேதம். 16

மற்றிதே போலுந் தூய மறைமொழி யநேகந் தீரக்
கற்றறிந் துளன்யா னென்னுங் காலைநன் னிதானி நன்றும்
எற்றியாங் குறிக்கொண் டின்னே யெடுத்துரை யாடத் தக்க
நற்றிற மென்ன லோடு நாக்கடிப் பிரட்டிற் றன்றே. 17

இகபரம் விதிநி டேத மெழிலிர க்ஷணிய வேதம்
மகபதி யருள்சன் மார்க்கம் வைதீக லௌகீ கங்கள்
ஜெகவிசே டங்கள் காலத் திரயங்க டெரிக்க வல்லேன்
தகவுளாய் விரும்பிற் றென்றைச் சாற்றுதி நிகழ்த்த வென்றான். 18

அவ்வயிற் றனித்துச் சென்ற வறங்கிளர் மறையோற் கிட்டிச்
செவ்விய நிதானி பேச்சுத் திறமுளா னிவனைத் தேரின்
இவ்வழி பிடித்த நங்கட் கேற்றவோர் துணைமை போலும்
ஒவ்வுமோவ் வாதென் றாகித் துன்கருத் துரைத்தி யென்னு. 19

தன்னுயிர்த் தோழன் பேச்சுச் சாதுரி யத்திற் சிக்கி
இந்நிலை யுசாவி னானிங் கென்பதை யகத்துட் கொண்டு
புன்னகை கோட்டி யென்கொன் மருண்டனை புலமை மிக்கோய்
பன்னுவல் கேட்டி யென்னப் பகருவான் பனவன் யாதோ. 20

வேறு.

தெருட்டுமடி யவர்போலத் திருவசன மெடுத்துரைத்து
மருட்டுவான் றனையறியா மனுக்கடமை மனமடங்காத்
திருட்டுவாய்ப் பழக்கமொழித் திறங்கண்டு திகைத்தனைநீ
அருட்டிறனை யொருசற்று மறியாத வசடனிவன். 21

தன்னையிவ னறிகின்ற தகைமையினும் பதின்மடங்கா
நன்னரறி குவன்வாழ்க்கை நாசதே சத்தொருசார்
என்னயலூர்க் குடிதந்தை வாசால னிவனலப்பன் 22
இன்னிசைவாய் மொழிமதுர மிதயமெட்டிக் கனியாமால்.

உருக்கவினிச் சேய்மையினி னுவப்பளிக்கு மண்மையுற
அருக்களிப்பைத் தருஞ்சிலசித் திரப்படங்க ளவைபோலும்
உருக்கிமன முவப்பிக்கு முளையாதி புறக்காட்சி 23
அருக்களிப்பைத் தருமிவன்றன் னகக்காட்சி யடுப்போர்க்கே.

பரிகசிப்பென் றுளங்கோடல் பாமார்த்தம் பழிப்பின்றல்
தெரிகுவரென் சிந்தையைநந் தேவர்பிரான் முறைதவறி
தரியலரா யினுங்குற்றஞ் சாற்றமனந் துணியேன்யான் 24
பெரியபிழை யந்நியர்தம் பிழைகாணும் பிழையன்றே.

ஏதமறு திருத்தொண்டர்க் கிசையநடிப் பதுபோலச்
சூதுபொரு கழகமதுக் கடைசோரர் தொக்ககுழாந்
தீதகலா விலைமாதர் சேரியிவற் றவரவர்க்குப் 25
பேதமற நடித்திசையப் பேசுசமர்த் துளனிவன்காண்.

மன்றாட்டு மனஸ்தாபம் விசுவாச மறுஜெனனம்
என்றாய வுபதேச வியலைவிரித் துரைப்பனவற்
றென்றானுந் தனதிதயத் துணராக்கற் றறிமோழை 26
குன்றாத தீக்கருமி குணங்காணுக் கொடுந்தோஷி.

பண்டைமறைத் திருவசனம் படித்துணர்ந்தும் பயனடையாச்
சண்டாள வறியஹிரு தயந்தனக்கு யானைத்தீ
உண்டுதிர்ந்த விளங்கனியு முருப்படுதற் குதவாமே 27
கொண்டகருப் பயனிழந்த குடம்பையுமே நிகர்குணிக்கின்.

விண்டியற்று மறைவினைகள் வெளிப்படுதற் கஞ்சுமிவன்
அண்டர்நா யகனெல்லா மறிகுவரென் றஞ்சுகிலான்
உண்டுசுகித் துறங்குதலுக் குளங்கவல்வான் பாவியெனக் 28
கண்டுணர்ந்தா வியிற்கலங்கிக் கவலுவா னலன்கண்டாய்.

மாதகைய கிறிஸ்துவினூன் மார்க்கத்துக் கிடறுகட்டை
வேதபா ரகர்க்கெல்லாம் விலக்கரிய பெருநிந்தை
ஏதிலருக் கருவருப்பா மில்லவர்க்கு மனக்கசப்பு 29
பூதலத்துக் கொரு[illegible] [illegible]லையனிவ னிலைதேரின்.



வஞ்சமொழிக் குகைவாயில் வதிந்திருக்கு மறைவசனம்
நெஞ்சகத்துத் தணவாமே நிலைத்திருக்கும் பைசாசஞ்
செஞ்செவே யவயவத்துச் செறிந்திருக்கும் பலதீமை 30
சஞ்சலநித் தியநாசந் தரித்திருக்கு மிவனடியில்.

மித்திரரை யுறவினரை வேலைபுரி மாக்களைத்தன்
புத்திரரை மனையாளைப் புறத்தாரை யகத்தாரைச்
சித்திரமா மதிமருட்டித் தேசிகன்போற் றனைக்காட்டும் 31
எத்தனிவ னிசைபோய வெத்தரையு மெத்துவன்காண்.

ஆக்கையும்ஜீ வனும்வெவ்வே றாயினுமொத் திருப்பதுபோல்.
வாக்கொடுசெய் கருமங்கள் மாறுபடா திருத்தல்கடன்
வாக்கொடுசெய் கருமங்கள் மாறுபடு வறுமாற்றம் 32
ஆக்கைநிலை குலைந்துவிழுந் தழுகுமுடைப் பிணநாற்றம்.

பாருலகப் புலையொழுக்கிற் படர்ந்தழுக்குப் படியாமே
சேருறுநன் னெறியொழுகித் தனைக்காக்கு நிலைசியோன்
மேருநக ராதிபதி விருப்புறுமெய்த் தேவபத்தி 33
சீருறுநன் னடைகாண்டி மற்றதனிற் றிகழ்ஜீவன்.

வித்தாகுந் திருவசன முளைகிளம்பி விசுவாச
உத்தமவே ரகத்தூன்றி யுள்ளன்பு கிளைத்தோங்கி
சுத்தநினை வெனுநறும்பூந் துணர்மலிந்துன் னதந்தோயும் 34
பத்தியெனுந் தருவினுக்கோர் நன்னடக்கை பயனாமால்.

மின்பிறங்கு மழைமுகத்துக் குமரேசன் வியனுலக
மன்பதைக்கு நடுத்தீர்வை வகுக்குங்கால் விசுவாச
அன்புறமுங் கிரியைக்கே யருள்கிடைக்கும் வெறும்பேச்சுப் 35
புன்பதருக் கென்கிடைக்கு மெரிநிரயப் புழையல்லால்.

பத்தியெலாஞ் சொல்லளவிற் பரிணமிக்கு மன்றியிவன்
குத்திரமார் நெஞ்சகத்துங் குடியகத்தும் பாழ்படுமால்
எத்தனைய ரென்றுரைக்கேன் றவவேடம் பூண்டிவன்போற் 36
பித்துலக மயலளைந்து புறம்பொதியும் பேதையரை.

அருள்வசத்தான் மனமொழிமெய் யான்மசுத்தி யடைந்தன்றிப்
பொருளுணரா வறுமொழியாற் புநருலகிற் பெறலரிய
மருளறுபே ரின்பநலம் வாய்க்காதென் றருள்மறையுந் 37
தெருளுறுநன் மனச்சான்றுந் தெரிக்கின்ற திறமோர்தி.

செய்யும்வினை யொன்றாகச் செப்புமொழி பிறிதொன்றா
வையகத்து நடிக்கின்ற மறவோர்தங் கூட்டுறவு
பொய்யாய கனவிடத்தும் பொல்லாங்கு தருமென்றல்
மெய்யாய வறம்விளக்கும் வித்தகநூற் றுணிபென்றான். 38

நுண்ணறிவு பகுத்துணர்த்த னுவலுகின்ற சொற்சுவைமெய்
எண்ணநல மிழுக்காமே யலப்பனிய லெடுத்துரைத்த
பண்ணவனை மனதாரப் பழிச்சிநனி பரமார்த்த
நிண்ணயத்தைக் கடைப்பிடித்த நிதானிநிகழ்த் துவதானான். 39

விரதமா தவத்தோய்நின் விழுத்தகுசீர் மொழியாய
ஆரதநீ பத்தாலிவ் வலப்பனகத் தியல்பெல்லாங்
காதலா மலகமெனக் கண்டறிந்து கருத்துற்றேன்
சாதமுணர்த் தியவுனக்கோர் கைம்மாறு தரவுளதோ. 40

செப்புமொழித் திறமன்றிச் செய்கைநலம் படையாத
தப்புளிமற் றிவன்றனக்குச் சாமியமா மிரைமீட்புக்
கப்படியென் றிரண்டன்றி யொன்றிருந்துங் கருதுங்கால்
தப்பிலவென் றிழிவுற்ற சூகரமுங் குறுமுயலும். 41

அசப்பியவாக் கியனென்ப தறியாமே வழித்துணைக்கு
வசப்படுவ னிவனென்னா மருண்டனனென் செவிவாயிற்
பசப்பியவி னலப்புமொழி பாரித்த மதுரமெலாங்
கசப்பாயிற் றெந்தாயுன் கட்டுரையின் வன்மையினால். 42

ஏர்திருத்தி யாழவுழு தெருப்பெய்தங் குவர்கழியப்
பார்திருத்திச் செழுஞ்சாலிப் பயிர்விளைப்பர் பணிமாக்கள்
ஓர்திருத்த மிலரையுமெய் யுணர்வெழுப்பி யுளம்புதுக்கிச்
சீர்திருத்தி யிரக்ஷணியப் பயிர்விளைப்பர் ஜீவன்முத்தர். 43

அறங்காட்டு மலப்புறுவா யகங்காட்டு மவயவங்கள்
மறங்காட்டு மனத்துணிவு மற்றிவற்கு நன்மையெலாம்
புறங்காட்டு மெனினுமியாம் பொதுநீதி யருள்ஞானத்
திறங்காட்டி யீடேறத் தெருட்டுதனங் கடனன்றே. 44

என்றின்ன நிதானியெடுத் தியம்புதலு மறைவாணன்
நன்றுனது கருத்துண்மை நவின்றாலு நலந்தோன்றல்
இன்றிவன்பான் மாசுணத்துக் கின்னமுத மளித்தாலுங்
கொன்றுயிரைக் கவரும்விடங் கொடுப்பததன் குணமாமால். 45



போயலப்பன் றனைக்கிட்டிப் புரையறுமெய்த் தேவபத்தி
மேயகிரி யாசாரம் விமலவருண் மெய்யுறுதி
ஆயவற்றி னுட்பம்விரித் தறிவுறுத்தொப் புரைகொண்டு
வாயளவோ கிரியைமனை வயினுளவோ வெனவகுப்பாய். 46

அருள்வசத்தா லொருகாலுள் ளுடைந்துணர்வுற் றகந்திரும்பித்
தெருளுவனன் னடைகூடி வழிக்கோடல் செவ்வியதாம்
இருள்வசத்தா லிணங்கானே லெம்பியொருங் கந்நிலையே
மருள்பிடித்த வவனுறவை வரைவதுவே மாபென்றான். 47

ஒக்குமிதே சூழ்ச்சியென வுவந்தலப்ப னருகணைந்து
பக்குவமா யுரைதொடங்கிப் பரனருண்மா னவருளத்தின்
சிக்கறுத்து நிலைத்தூன்றி ஜீவரக்ஷை விளைக்குமெனின்
அக்கிரியைத் திறமெவ்வா றறிகுதுநீ யுரைக்கென்றான். 48

சுத்தமனத் தவனுரைக்கத் துருமலிந்த கருமனத்தான்
இத்தகைய வினாவினுக்கோ ரிருவகையுத் தரமுளவாம்
அத்தகைமை சுருக்கியினி தறைகுவனல் லருட்பேற்றாற்
சித்தமொரு முகமாகச் செப்புவன செவிக்கோடி. 49

மகத்துவதை விககிருபை மக்களிரு தயத்தடங்கி
அகத்தியல்தீ வினைப்பகையோ டமர்மூட்டுந் திறத்தானும்
மகத்துவமெய்ச் சுவிசேஷ மறைபொருளை வகுத்துரைக்க
அகத்தூட்டு மறிவானு மருட்கிரியை வெளிப்படுமால். 50

உத்தரமற் றிவற்றைவிரித் துரைக்கவிருப் புளையாயின்
வித்தரிப்ப லெனநிகழ்த்த விழைவானை யெதிர்நோக்கி
அத்தனரு டீவினையை யருவருப்பித் திடுமென்றல்
ஒத்திருக்கும் போராட்ட முளவெனினு மொவ்வாதால். 51

திருவிளக்கு மிரக்ஷணியத் திறந்தெரித்துத் தீவினையை
அருவருப்பித் துளம்புதுக்கி யாத்துமத்தை யுயிர்ப்பிக்கும்
மருவிருக்கு நறும்பிரச மலர்மறைந்தும் புறம்போந்து
பரிமளிக்கு மதுபோலும் பரன்கிருபைச் செயல்காண்டி. 52

சொந்தமதிச் சூழ்ச்சியினாற் சுயவறிவாற் புறம்பொதிந்து
பந்தவினை பகைப்பார்போற் பலர்பேசிப் பகட்டிடுமிவ்
விந்தையினைப் பனித்துறையில் விரிபகன்றை வெறுந்துணரென்
றந்தரங்கத் தருவருப்ப ரருட்கிரியைத் திறந்தெரிவார். 53

உத்தமனைப் பழிசாட்டிப் பெருங்காம முளத்தடக்கிப்
பத்தினியா நடித்துரிய கணவனுக்குப் பகைகாட்டுங்
குத்திரையிற் புறம்பேசி யகத்தடக்குங் கொடுவினையர்
எத்தனையர் தருங்கால மிடந்தேடித் திரிகின்றார். 54

புண்ணியனாத் தாசுருதிப் பொருளைவிரித் துரைக்கவரும்
நுண்ணறிவி லருட்கிரியை விளக்குமென நுவல்கிற்றி
விண்ணிலவு பொருள்விளக்கு மேதினிக்குத் தூரதிட்டிக்
கண்ணடிதன் னகப்பொருளி னிலைதேருங் கருத்துளதோ. 55

### வேறு.

மல்கு தேவவ ரப்பிர சாதமே
நல்கு மானத பாக்கிய நன்குறப்
பல்கு கல்வியிற் பாற்படு கேள்வியிற்
புல்கு மென்றல்பு லமையின் பாலதோ. 56

நெறிதி கழ்த்திய நின்மல னிவ்வெலாம்
அறிது மென்றவ டியற்கு றுஞ்செயல்
பிறிது ளுவகை பேணுதி ரென்றசொல்
அறிதி யல்லைகொ லோமற்ற யர்த்தியோ. 57

துதிபெ றுந்திரி யேகனுஞ் சுப்பிர
விதிநி டேதவி ளக்கைய லர்த்தியென்
மதிவி ளக்குக மற்றது காத்தியான்
கதிவ ழிப்படை கொள்வல்க ருத்தோடே. 58

பேதை யேன்பிர பஞ்சம யலறப்
போத நல்குக பூரண வாஞ்சையாய்
வேத நூனெறி பற்றிவி ளியுமட்
டாதி யாயநுட் டிப்பல கத்தோடே. 59

வினைய றுத்துமெய் வீடருள் பாதையில்
எனைந டந்துக வெம்பெரு மானதென்
மனம கிழ்ச்சியென் றின்னிசை மன்னவன்
முனநி கழ்த்துமு றைமறந் தாய்கொலோ. 60

இத்தி றத்துரை கோடலன் யானுனோ
டெத்தி றத்துமி ணங்கல னென்றியால்
வித்த கச்சுரு திக்குமெய் வேதிய
உத்த மர்க்குமோவ் வாதுன்னு ணாத்திறம். 61



ஆரிய நுண்பொரு ளாய்ந்துளை யாயினுந்
தெரிய கிற்றிலை தேவகி ருபையின்
கிரியை யுண்மைகி ளக்குவல் கேட்டியென்
றுரிய காதலி னோதுவ தாயினான். 62

மூண்டெ ழுங்கிரு பைச்செயன் மொய்ம்பினைக்
காண்டல் செய்வாங் கைப்படு நெல்லியில்
ஆண்ட கைக்கித யாசன மாக்கிய
மாண்ட போதனர் வாய்மைம னக்கொணீ. 63

எவனு ளங்குடி புக்கதெம் மானருள்
அவனு ளத்திரு ளாக்கிய தீவினைப்
பவவு ணர்ச்சிக திக்கப்ப டுறீஇத்
தவன முற்றுள்ளு டைந்தத விப்புறும். 64

சீசி மும்மலச் சேட்டை[illegible] சகங்ய
நீச னேற்குய்வி யாதென நேடிடும்
ஈசன் கோபமெ ரிக்குமென் றேங்கியுள்
ளூச லாடுயிர்ப் புற்றுளங் கைத்தழும். 65

ஆய காலைய சுந்தூறு மாத்தும
நாய கன்சா ணூடுந லங்கிளர்
நேய மார்விசு வாசநி லைப்படத்
தூய சற்கரு மங்கடு ணியுமால். 66

ஜீவ ரக்ஷைதி ருத்திய ஜேசுவை
ஆவ லாய்ப்பின்றொ டர்ந்தடி யார்க்குறுங்
தேவ வாக்கின லம்பெறு சிந்தையின்
ஓவ லின்றிமு யலுமு வந்தரோ. 67

முத்தி யிச்சைமு திர்ந்துமு ழுப்பரி
சுத்த வாஞ்சையி தயந்து தைந்திட
நித்தி யானந்த நின்மல தெய்வத்தைப்
பத்தி செய்யுமுள் ளன்புப ழுக்கவே. 68

ஈண்டு சொற்றவி வற்றொடெம் மானடி
பூண்ட மெய்விசு வாசம்பு லப்பட
மாண்ட கும்பரி சுத்தவ ரம்புளே
காண்ட குந்நடை காட்டுங்க ழறல்போல். 69

புல்லொ ழுக்கமொ ருங்கறப் போக்கியே
நல்லொ ழுக்கந வின்றுநன் னூல்வழி
இல்லொ ழுக்கிக வாமலி ராப்பகல்
செல்லொ ழுக்கம்வி டாவகை செல்லுமால். 70

கோதி லுண்மைகு லாமுக்க ரணமெய்ப்
போத மல்குபு னிதசம் பாஷணை
சாது சங்கந்த லைப்படு கூட்டுற
வாதி காதலித் தாற்றிவ ழிபடும். 71

தனைவெ றுக்குந்த னைக்கெடுக் கின்றதீ
வினைவெ றுக்கும்வி சுவசித் தன்பொடு
முனைவற் போற்றிமு றைப்படு செய்கையில்
நினைவிற் காட்டிநி றுக்குமெய்ந் நூனெறி. 72

ஆய வித்தகு [illegible]
மாய மின்றிம லிந்திடின் மற்றது
தூய தேவகி ருபைச்சு கிர்தமென்
றேய தொண்டரொ டுத்திசைப் பாரரோ. 73

விஞ்சத் தன்னைவி யந்துமெய் வேதநூல்
அஞ்சொற் கொண்டுப கட்டும ழிம்பர்தங்
கஞ்சப் புன்னடை காண்டொறுங் காசினி
வஞ்சப் புல்லரென் றெள்ளிடும் வையுமால். 74

மற்றிவ் வுண்மைம றுத்திடப் பாலதேற்
சொற்றி யென்னவுஞ் சொற்றிலை யாதலாற்
கற்ற றிந்துளா யாடுங்க ருத்தினேய்
செற்றம் விட்டிது செப்பெனச் செப்புவான். 75

உள்ளந் தேருநம் முன்னத தெய்வமுந்
தள்ள ரும்மனச் சாக்ஷியுஞ் சாக்ஷியா
வள்ள லாருட் சத்தியுன் வாயிலோ
தெள்ளி துள்ளுஞ்சி றந்தனவோ சொலாய். 76

மெய்ய தாமருட் பேற்றினை மேதையோ
டைய மின்றிய நுபவித் தாய்தியோ
செய்ய வாய்மொழி போலநின் செய்கையுந்
துய்ய வாயின வோபிறி தோசொலாய். 77



பத்தி யுள்ளம்ப ழுத்துள தோவலாற்
கத்து வாய்மொழி மட்டிற்க னிந்ததோ
எத்தி றங்கருத் தியாவும்பு லப்படச்
சத்தி யம்புகல் வாயெனச் சாற்றினான். 78

திருக்கி லாரணன் செப்பிய செஞ்சொலாம்
உருக்கு செம்பலப் பன்செவி யூடுறீஇக்
கருக்கு சிந்தைய ஞயகங் காந்தலிற்
பொருக்கெ னச்சில மாற்றம்பு கலுவான். 79

கற்ற தங்கைய ளவுகல் லாதவை
எற்று நீருல கத்துள வென்பர்மெய்
உற்ற றிந்தவர் நீயஃ தோரலை
முற்ற றிந்தனை யோன்மொழி கிற்றியால். 80

குப்பைக் கீரைகொ ழுங்கவ டோச்சினுங்
கப்பற் பாய்மர மாகுங்க ணக்கதோ
செப்ப ருங்கலை தேரினு மெம்மனோர்க்
கொப்பு மோசிறி யாயுன்னு ளாத்திறம். 81

பேச்சுக் காலிற்பி ரானையி ழுப்பதுஞ்
சாக்ஷிக் காமனச் சான்றினைக் கொள்வதும்
மூச்சுக் காயிரம் பொய்மொழி முந்தும்வெள்
ளீச்சுக் காரர்கு ணத்தினின் வேறதோ. 82

தன்குற் றங்களைத் தானற நீக்கிய
பின்குற் றந்தெரி வார்பிறர் பாலெனின்
என்குற் றமவர்க் கென்றுல கேத்துறும்
நன்குற் றார்சொலு நாடலை நம்பிநீ. 83

பாதை காட்டும்வ ருத்தமும் பாழ்படும்
போது போக்குமுண் டாமெனப் புக்கியிற்
காத லித்துளா யாடக்க லந்தனன்
சாத முற்றத ருக்கியென் றெண்ணிலேன். 84

கனவி னுந்துயர் கண்டறி யாவொரு
பனவ னென்றுப குத்தறி யாதநீ
மனவ ருத்தம்வி ளைத்திடும் வன்சொலால்
வினவு கிற்றியி தென்கொல்வி வேகமே. 85

ஊரவு நூனெறி யோதியு ணர்த்திய
குரவ னேவலை கொற்றவ னும்மலை
விரவு குற்றம்பி டித்திவெ றுஞ்சொலிற்
காவி னென்னுளங் காணுதற் காணாநீ. 86

நன்று நன்றுன்வி னுத்திற நானதற்
கொன்று முத்தாஞ் சொல்லவு ளங்கொளேன்
என்றி றத்துவி னுயவி வற்றினுக்
குன்றி றத்துறு காரண மோதென்றான். 87

வேறு.

காரணங் கேட்டி யாயிற் கழறுவல் கனன்றி டாதி
ஆரணப் பயனுட் கொள்ளா தருண்மொழி யலப்பிக் கூறி
மாரணத் தொடரி னீங்கா வாக்குவல் லவனென் றுன்னைப்
பூரண மாகத் தேர்ந்தேன் புரைபடு புன்மைச் சொல்லால். 88

மருட்படு மனத்தோய் ஞான வரம்பிக வாது செல்ல
அருட்பயன் யாண்டும் வேண்டு மாரணம் பயின்று கூறும்
பொருட்பய னடையாச் சொல்லின் போதமெத் துணைய வேனும்
இருட்படுத் திடுமீ தன்றி யீடேற்ற மியையுங் கொல்லோ. 89

அய்யகோ சொல்லிச் செய்யா வழிமதி படைத்தோய் நின்னை
மையுறு தேவ பத்தி வாய்மொழி வகுக்கும் போதே
செய்யுறு கருமம் யாவுந் தீமையைத் தெரிக்கு மென்னு
வையக மிகழ்ந்து பேசும் வசைசெவி மடுக்காய் போலும். 90

கள்ளுண்டு கழித்தி புந்தி காமியாய்ப் பரத்தை போகத்
தள்ளுண்டு கழித்தி வாணா ளறனிலாப் பொருளை நச்சி
எள்ளுண்டு தினம்பொய் யாணை யெத்தனை யிடுதி பேயால்
நள்ளுண்டு கெடுதி யின்னு நவிலுதி நாவிற் பத்தி. 91

பத்தருக் கொருவா நட்டம் பவித்திர ராய ஜீவன்
முத்தருக் கிலச்சை சசை முயலுவார்க் கொருத டுக்கல்
இத்தனை கேட்டுக் கெல்லா மேழைநீ மருட்டிக் காட்டுங்
குத்திர பத்தி யென்று காரணங் கூறக் கேட்டேன். 92

சொந்தநா யகனை நீத்துச் சோரநா யகனைப் புல்லிச்
சந்ததங் குலத்து நிந்தை சமைத்திடு மகளி ரேபோல்
வெந்தொழில் விழும நச்சி வேதியர் குழாத்துக் கெல்லாம்
நிந்தனை பெருக்கி யான்ம நேசனை யகத்து நீத்தி. 93



புனிதசன் மார்க்க மாய பொதுவிதி யருட்டித் தீண்டு
மனிதஜீ வனையீ டேற்ற வந்தசற் குருவைப் போற்றிக்
கனிதரு மன்பி னன்மை கடைப்பிடித் திடுதி யாயின்
இனிதுறப் பயன்ப டுங்கா ணேழைநீ யெடுத்த ஜென்மம். 94

சிற்றறி வுடைய னேனுஞ் செப்புரை யெனதன் றெல்லாம்
முற்றறி கடவுட் சொல்லே மொழிந்தனன் முனிவா யல்லை
இற்றிதே யிரக்ஷைக் கால மென்றசத் தியத்தை யுள்ளி
நற்றிற நாடி யுய்தி யென்றனன் னன்னி தானி. 95

தீர்க்கன்மெய் வாய்மை கேட்டுத் தெருண்டில னலப்பன் சிந்தை
ஊர்க்கதை கேட்டுத் தேரா தொல்லைநீ நடுத்தீர்க் கின்றாய்
ஆர்க்கிது பொருந்து நட்புக் கருகனீ யலையென் மேன்மை
பார்க்கலை போதி யென்னப் பன்னியே கினன்றன் பாட்டில். 96

புலப்படு மாறு கொள்ளாப் பொறியிலி யகத்துப் பொங்கி
அலப்பியாங் ககன்ற காலை யாரணக் கிழவன் கிட்டிச்
சொலப்படு முண்மை யாவுந் துணிந்துவற் புறுத்திப் பேசிப்
பலப்பட முயன்றாய் நம்மேற் பாரித்த கடமை யீதால். 97

ஐயநீ சொற்ற வாறே யருள்வழிப் பட்டோர் யாருங்
கையரைக் கடிந்து கூறித் தெருட்டுதல் கடனாக் கொள்ளில்
துய்யராய்த் திகழ்வ ரன்றேற் சுடுநெருப் பிவர்நட் பென்னு
மையறத் தெருண்டு தாமே விலகுவர் வாதொன் றின்றி. 98

எவ்வழி யுனது சிந்தை யெண்ணினுக் கிகல லப்பன்
வெவ்விய நடையும் பேச்சும் விரோதமா மறிதி யென்னு
அவ்வழி யுரைத்தே னோர்ந்த தறிந்தனை யைய வொன்றைச்
செவ்விதி னறிந்து தீர்தல் சீரிதென் றுரைப்பர் செய்யோர். 99

தன்னடை யிகவா னுய சழக்கனோ டுறவு பூண்டு
பின்னடை பிறழ்ந்து சிந்தை பிணக்குண்டு பிரிந்து போதல்
நன்னடை யன்றின் னேயே நழுவிய செவ்வி நன்றாந்
துன்னடை யவரை முற்றுந் துறத்தியென் றுரைக்கும் வேதம். 100

என்றின மறைவ லாளன் மகிழ்ந்துள மெடுத்துப் பேச
நன்றறி நிதானி யைய நவிற்றிய வுண்மை காத்துப்
புன்றொழி லிகந்து நன்மை புரிவனேற் கதிபுக் குய்வன்
அன்றெனிற் குற்ற மெல்லா மவனதே யெனதன் றென்றான். 101

அலப்பனை வனைந்த படலம் முற்றிற்று.

## ஞானசிரியனைக் கண்ணுற்ற படலம்.

இனிது ஞானெறி கடைப்பிடித் திருவரு மெழில்கூர்
புனித ஜீவிய மார்க்கசம் பாஷணை பொருந்தித்
துனித விர்ந்தரோ காடவி வழிக்கொடு தொடர்ந்து
தனித மாருட் பலநுகர்ந் திறுதியைச் சார்ந்தார். 1

ஆயி டைச்சுவி சேஷனு மருண்மறைக் குரவன்
சேய பங்கயத் திருமுகந் திகழ்ந்திடத் தோன்றி
நாய கன்பெயர் வழுத்தியா சிகள்பல நவிலத்
தாயெ திர்ந்தவான் கன்றெனத் தனித்தனி மகிழ்ந்தே. 2

அன்பி னஞ்சலி பன்முறை யளித்தன ரகங்கொண்
டென்பு நெக்குநன் றறிமொழி யினியன விசைத்தார்
வன்ப கைப்புலங் கடத்திமெய் வழிப்படுத் துயர்பேர்
இன்ப ஜீவனுக் கீட்டிய துள்ளியேத் தெடுத்தார். 3

எந்தை நிற்பிரிந் திந்நெறி யெதிர்ந்ததற் கிடையே
வந்த விக்கின மிதுவிது மற்றவை தணந்த
விந்தை யீதிது வென்றெடுத் தியாவையும் விதந்தார்
அந்த ஞானு மினிதுகேட் டருண்மொழி வகுப்பான். 4

காதன் மைந்தன்மீர் நும்பல வினைத்துக் கதித்து
மீது மீதுற்ற விபத்தெலா மொருங்கற வெருட்டி
மேதக ஜெயங் கொண்டனிர் மிகமகிழ் சிறந்தேன்
மாத யாபரன் வாம்பில்பே ரருட்டிறன் வழுத்தி. 5

வித்தி னெனவை சேர்த்தனிர் விழுப்பய னருந்தி
இத்தி றத்திரு வேழுமொன் றித்திருந் தேமுற்
றொருத்து ளங்களித் தோகையுற் றிட்வுறு மொருநாள்
எய்த்தி டாதுயி ரிறுதிமட் டுஞற்றிநின் றிடுமின். 6

வசு நாயகன் றிருக்காத் திரவியே யென்னத்
தேசு மல்கிய வழிவிலா ஜீவகி ரீடம்
மாச றத்திகழ் கின்றன காணுமின் மக்காள்
பேசி னும்பொருட் டாயதோ ரெட்டுணை பிசகா. 7



...றி முனம்பல ரோடித்
...யாசததின் பிணிப்பிறு விடைக்கிடை தடுக்கிக்
களைத்து வீழ்ந்துயர் கதியிழந் தனரிது கருதி
இளைத்து நின்றிடா தோடுமின் றளைப்பன வெறிந்தே. 8

அலகை யோச்சுதீக் குண்டினுக் ககப்படா தின்னும்
விலகி னீரவீர் வெங்கொடு வினைப்பகை வெறுத்துக்
கலக மிட்டுடற் குருதிநீர் கவிழ்தரக் கறுவி
உலகி டைச்சம ராடலீ ரின்றுகா றாவீர். 9

விட்பு லத்தர சுரிமையை விழைந்தமெய் நோக்கந்
திட்ப மாகுக சிந்தனை மயலறத் தெருண்டு
கட்பு லப்படாப் பரமகா ரியங்களைக் கருதி
நட்பு வீர்விசு வாசத்தி னனியுரத் திடுமின். 10

விஞ்ச மேல்வரு சோதனை யெவற்றினும் விரிந்த
நெஞ்ச மும்மத னிச்சையு நிகழ்த்துதற் கரிய
வஞ்ச கக்கொடும் பகைமையா மாதலின் மக்காள்
செஞ்செ வேதெரிந் தகற்றுமின் மற்றதன் றிருக்கை. 11

எட்ப குப்பன சிறுமைய தாயினு மென்றும்
உட்ப கைத்திறத் துள்ளதாங் கேடென வுணக்கும்
ஒட்ப நான்மதி யுட்கொளீஇ யொல்லையி னூன்றிக்
கொட்பு றும்புலப் பகைதெறிற் கொற்றமுற் றிடுவீர். 12

ஊன்ப ழுத்தபூ மாயமொன் றுனுமுள் ளுறுமே
நோன்பு பற்றிமுப் பகைத்திற முருக்குமி னேன்பால்
வான்பு விப்படும் வல்லமை யாவுநும் வசத்தாங்
கோன்பு கன்றமெய் வாக்கிது நெஞ்சகங் கொண்மின். 13

இன்னு மெம்வழிக் கெதிருறும் விக்கின மெவைமற்
றன்ன வற்றைமேற் கொள்ளுமா றெவன்வகுத் தறியப்
பன்னு கென்றிரே லருண்மறை பரமராஜ் ஜியந்தான்
இன்ன வூடறுத் தேகுவார்க் கெய்துமென் றிசைக்கும். 14

ஐய மின்றுமக் கெதிர்ப்படு நகர்தொறு மகோர
வெய்ய தீச்சிறை விலங்குபல் விக்கினம் விரவி
மையி ருட்படு மலையெனத் தொடர்ந்தெதிர் மலையும்
நொய்ய சித்துணை யடைந்தவை வருவன நுனிக்கின். 15

கைய கன்றனிர் கானகந
வைய கத்துமா யாபுரி நகரிடை மறிந்து
வெய்ய கானவர் வலைப்படு மானென வெருண்டு
பொய்ய ரீட்டுவெங் கொடுமையிற் புன்கணுற் றிடுவீர். 16

ஆற லைத்துமை யடித்தப ராதரென் றதட்டிக்
கோற லைத்துணிந் தாக்குவர் கொடுஞ்சிறைப் புறத்தில்
மாற லைத்துறும் வம்பர்பொய் வாய்மையி னீதிக்
கூற லைத்தவன் முன்றிலி னிறுத்துவர் கொடியோர். 17

நம்ம ரில்விசு வாசத்தின் வலியசான் றாக
நும்மி லேயொரு வன்கதி கூடுவ னுதலிற்
செம்மை யுத்தம ராயிரும் ஜீவனுள் ளளவும்
நம்ம கீபதி நல்குவர் நலந்திகழ் மௌலி. 18

முன்கு லாவிய நெறிப்படு மிடரெலா முயங்கிப்
பொன்கு லாநகர் புகுவதி லிடைப்படு புனைதீர்
வன்கொ லைப்படு வாதனை வரம்பறு மெனினும்
நன்க தாயசிற் சுகம்பெற லெத்தனை நன்றும். 19

விஞ்சு பேரின்ப வீட்டுல குய்க்குமெய்ந் நெறிதான்
வஞ்ச மிக்கமா யாபுரி மறுகையூ டறுத்துச்
செஞ்செ வேசெலும் பிறிதொரு வழியிலை ஜெகத்துக்
கஞ்சி யோடுவ தெங்ஙன மாக்கையுள் ளளவும். 20

தம்ப லக்குறை யுணர்ந்தருட் பலத்தையே சார்ந்திங்
கும்பர் நூனெறி யொழுகியோர்க் குறுபெருந் துன்பம்
வெம்பு தீயென முருக்கினு முன்னின்று விலக்கி
நம்பன் வானநாட் டுயர்பத நல்குவர் நமர்காள். 21

துன்பம் யாவையு மொருங்கறத் துடைப்பினுந் துடைப்பர்
அன்பின் மெய்விசு வாசத்தை யவனியிற் றெரிக்க
வன்ப கைப்புலத் தடியரை மடிப்பினு மடிப்பர்
என்பு ரிந்தன ரெம்பிரான் யாவுநன் றெமக்கே. 22

பந்த நீங்குமுப் பகையறும் பாவசங் கடங்கள்
நந்து மெவ்வகை நலிவுமின் றுயர்கதி நன்மை
முந்து மாரண சாக்ஷியா முடுகியா ருயிரைச்
சிந்து தீருக் குறுநலஞ் செப்புமா றரிதே. 23



16244

தீத்தொ ழிற்படு மாயையூர் சேருமக் காலை
கோத்து ணாத்தவென் வாய்மையைக் குறிக்[illegible] கருதி
வத்த ருஞ்சரு வேசனு ரெழிற்றிருக் காத்தும்
ஆத்து மங்களைக் கையடை யாக்குமி னஞ்சீர். 24

என்ற கத்துநல் லுணர்வெழ வின்னன தெருண்டு
கன்றி னுக்குளங் கசிந்திடு கறவையான் கடுப்ப
நன்று ணங்கொளுஞ் சொன்மதி புகட்டின னவைதீர்
குன்று றாநலங் குலவுமெய்ச் சுருதிதேர் குரவன். 25

குரவன் வாய்மையி னுயசஞ் சீவியுட் கொண்டு
கரவி லாவிசு வாசமெய் யன்பொடு கவினி
விரவி யோங்கலின் வேதியர் விண்ணுல காளும்
புரவ லன்றிரு வடித்துணை பழிச்சினர் புகல்வார். 26

எந்தை நூனெறிக் கிடையிடை யெதிர்ந்தெமைத் தெருட்டி
அந்த மில்பர மானந்த மடையுமா றளித்த
விந்தை யாயபே ருதவியை வியந்தனு தினமுஞ்
சிந்தை யாரவுள் ளுவதலா லென்செய்கேஞ் சிறியேம். 27

பொய்வ குத்தபூ மாயமும் புலைமையும் போகத்
தெய்வ நிண்ணயந் தெரித்தனை ஜீவர க்ஷைக்காம்
மெய்வ குத்தனை மேல்விளை வனவெலாம் விரித்தாய்
உய்வ ழிப்படுத் துதவிமற் றிவற்றின்வே றுளதோ. 28

ஓவில் பல்பெருந் துன்பமிக் குடற்றினு முருக்துப்
பாவ காரியர் செருப்பினுந் தீவழிப் படரேம்
ஜீவ ரக்ஷணை தருகிறிஸ் துயேசுவே ஜீவன்
சாவு மூதிய மென்றொருப் பட்டனந் தக்கோய். 29

வாழி யையநீ புரிதிருப் பணிவிடை மல்கிப்
பாழி யம்புவி முழுவது மிரக்ஷணைப் பயன்கொண்
டூழி யூழிநின் றுயர்கவென் றுளங்குவிந் தேத்தி
ஆழி யானகர்க் கேகுது மருள்விடை யென்றார். 30

அண்டர் நாயகன் றிருவரு ளாக்கமு மடியார்
கொண்ட நல்வயி ராக்கியமுங் குணித்தருட் குரவன்
மண்டு மன்பினா சிகள்சொலி விடுத்தனன் மாபிற்
றெண்ட ரஞ்சலித் தேகினர் சுருதிமார்க் கத்தில். 31

O111,3KB3,8

இடைவி டாதுமெய் வேதிய ரிருவரு மிணங்கி
நடைவ ழிப்படூஉ நயந்துசின் னாளினி னலங்கூர்
அடவி நீத்துவந் தலகைதொக் கறங்குடி போய
புடவி நச்சுமா யாபுரிப் புரிசைகண் ணுற்றார். 32

ஞானாசிரியனைக் கண்ணுற்ற படலம் முற்றிற்று.

## மாயாபுரிப் படலம்.

அரிய நூனெறி கடைப்பிடித் தாரணக் கிழவன்
பரிய கானகந் துருவிவந் திறுத்தமை பகர்ந்தாம்
விரியுந் தீவினைக் குறையுளாய் விளங்கிய மாயா
புரியின் பான்மையுங் கோன்மையும் வகுத்தினிப் புகல்வாம். 1

இஞ்சி தோன்றலு நிதானியென் றிசைபெறு மேந்தல்
அஞ்ச லித்துநின் றையநின் னனுபவத் தாய்ந்த
வஞ்ச மிக்கமா யாபுரி மரபுணாக் கென்னாச்
செஞ்சொ லாரண னன்றென வினையன தெரிப்பான். 2

தோன்று தொல்லறந் துதைந்தெழில் குலவிய தூய
மன்று தொக்கபல் வளனெலாங் கரவினால் வௌவிக்
கன்று வெஞ்சினத் தலகைதன் கவிகையைக் கவித்தான்
அன்று தொட்டுமா யாபுரி யாயதிவ் வகிலம். 3

தூய நன்மையுஞ் சுகிர்தமு மொருங்கறத் துடைத்து
மாயி ரும்புவி முழுவதுந் தனதென வளைத்த
பேய னேபகைத் தவித்தையாம் பிறங்கலை யடுக்கி
மீயு யர்ந்தவான் கடிமதி லிட்டனன் மேனாள். 4

மேனி வந்தெழு மௌட்டியப் புரிசையின் விரகால்
ஞான பானுவின் கதிரொடு நற்கலை மதிதோய்
தான லந்திகழ் சுடரொளி யகத்துறச் சுலவா
தீன மாயபுன் சமயமின் மினிகளே யியங்கும். 5

மட்டி லாதுயர் கடிமதில் வானுற நிவந்து
முட்டு மென்றெழின் முத்திமா நகர்வெளி முகட்டிற்
கெட்டி நிற்குமற் றகழிவாய் திறந்திரு ணிரையந்
தொட்டு நிற்குமீ தன்றிவே றுளகொலோ சூழ்ச்சி. 6



கடிம திற்புறத் தகழிநீர் நிலையெனக் கருதி
கொடிவ ரன்றது மாயமாக் காரிரு ணுதலிப்
படியும் வானமும் வாய்மடுத் தோருழைப் பதுங்கிக்
குடிகொ ளுந்திரு வரங்கமே யதனிலை குணிக்கின். 7

சஞ்ச லஞ்செறி நிரையபா தலங்கொலோ சமைந்த
பஞ்ச பாதகப் படுகரோ பாரகம் பொதிந்த
வஞ்ச மல்குகா ராழியோ மதிற்புறம் வளைத்த
எஞ்சு றாததொல் லகழிமற் றியாதென விசைப்பாம். 8

குருசு யர்த்தபெம் மானடிக் கன்புசெய் குநர்தம்
பரிசி கழ்ந்தவ தூறுசெய் பாமரர் படர்ந்த
எரிசு லாநர கத்துநின் றேறினு மேறார்
புரிசை முற்றுபே ரகழியி னிடறிவீழ் புவியோர். 9

பண்டு கேடுசூழ் கொடுவிடப் பாந்தள்வாய் முழையோ
கொண்ட மார்க்கனை விழுங்குதீக் கும்பியின் குகையோ
மண்டு நித்திய மரணத்தின் மதகரோ வலகைத்
தொண்டை தான்கொலோ வாயிலை யென்னெனத் துணிகேன். 10

கேட்டி னுக்கெலா மொருகுரு பீடமாய்க் கெழுமி
மேட்டி மைத்திட ராயகோ புரநிரை யியன்பொற்
கோட்டி மாசலக் குடுமியிற் றொநகர்ப் புரிசைக்
கேட்டு வாயிலிற் றிகழ்வன திசைதிசை கெருவி. 11

ஊழி னாமென வுரப்பியோர் மடமையி னோங்கிப்
பாழி யம்பகு வாய்தொறுந் திகழுமுப் பரிகை
ஆழி பொங்கிமே லிடினிறு வாமென வஞ்சிப்
பூழி மானிடஞ் சமைத்தகோ புரமெனப் பொலிவ. 12

வன்மை மல்குமு தெயிற்றலை வாயில்க டோறும்
புன்மை மல்கிய பேதைமைப் பொறிகளே பொதுளித்
தின்மை யாவையும் விருப்பொடந் நகரிடைச் செறித்து
நன்மை யாவையும் புறப்பட நலிந்தெறிந் திடுமால். 13

மரண கண்ணிகள் வீசுதந் திரவலை மாயா
கரண வேதிகள் பாசங்க ளினையன களுவி
முரணி வேதியர் குழுக்களை முருக்கியந் திரங்கள்
அரண வாயிலி னமைந்தெதி ரடர்ப்பன வனந்தம். 14

மாய முற்றிய ஞானரூ னியமதிள் மலிந்த
நிய யந்திரத் திரள்கொலோ திசைதிசை செறிந்து
பேயும் பூதமுங் காளியுங் கூளியும் பிளிறி
ஆயி ரங்களாப் படையெடுத் தருங்கடி யமையும். 15

மோக மல்குமா யாபுரி மூதெயின் முயங்கும்
வாகை நீள்கொடிக் குலங்கள்விண் டியல்வரு மரபு
மாகம் வேட்டுழன் மதியிலீர் வரம்பில்சிற் றின்ப
போக முண்டிவண் வம்மினென் றழைப்பது போலும். 16

உரவு நீர்நிலத் தலகைமா னிடருா மொருங்கே
காவின் வெளவினேங் காசினி முழுவதுங் ககனத்
திரவி மண்டிலங் காறுமெம் மாளுகை யெம்மைப்
பாவு கென்றெயி லுயர்த்திய பதாகைவிண் படர்வ. 17

இகழு மாறெரி கோமதி லிடிந்ததற் கிசையத்
திகழு மெய்ச்சுரு தித்தொனி திசைதிசை முழங்கின்
அகழி சுற்றுமிவ் வாணிலை குலையுகம் மவர்தம்
பகழி யாதிய படைக்கலம் பாழ்படுத் தாவால். 18

தீவி னைக்கொரு களஞ்சியர் தீக்குண மன்றம்
பூவி னுக்கறு போகமா ளிகைபுலை புரக்குங்
கோவி னுக்கர சிருக்கைமாங் கருக்கொரு கொப்பம்
ஜீவ னுக்கெலாங் கேடுமா யாபுரிச் சிறையே. 19

பாத கத்தொழில் பயிலிடம் பாதலம் புகுத்தும்
வேத னைப்பயிர் விளைபுலம் வியன்பிர பஞ்சச்
சாத கத்திரள் குழுமிய தனிட்பெருங் கோட்டஞ்
சோத னைப்படு கிடங்குமா யாபுரிச் சூழல். 20

உலக மாயவர்த் தகம்புரி யொருபெருஞ் சந்தை
கலக வாள்விழிக் கணிகையர் காமியக் கோட்டி
அலகி லாகபொய்த் தேவருக் காலய மழிம்பற்
கிலகு கின்றமா யாபுரி யிருதயத் தானம். 21

நாச தேசமென் றிசைபெறு நானிலக் கிழத்தி
நீச மான்மதி வதனமோ நினைவினைக் கவரும்
மோச வாள்விழி யோதட மார்பிடை முயங்குங்
காசி னூமோ வென்கொல்மா யாபுரி கருதின். 22



பரிசி லாதுய ரிதயமா ளிகைதொறும் பயிலும்
வரிசை தப்பிய மன்னர சிருக்கையு மன்றும்
எரிசு லாமநி யாயஞ்செய் கோட்டியு மீனப்
புரிசை முற்றிய கோபுர நிரைகளும் பொலியும். 23

தீமை மல்கிய ஜெயக்கொடி வானுறத் திகழுங்
காமி யச்சுவை பகுத்திடு முழவொலி கறங்கும்
பாம ரக்குழு வேயன வாதமும் பயிலுஞ்
சாமி யைப்புறக் கணித்திடு தவநெறி தழைக்கும். 24

கடிம ணப்பறை பிணப்பறை விழாப்பறை கறங்கக்
கொடிப டும்பொரு களப்பறை வயின்றொறுங் குளிறப்
படிபு ரந்தருள் வளந்தரு பைம்புயன் முழக்கத்
திடியின் சும்மையைச் செவிமடா திந்நக ரென்றும். 25

தெருவி னென்றுபன் னூறெனுங் குறுந்தெருத் திரிய
மருவு மந்நகர் மாந்தரோ வழிமயங் கிடுவர்
பொருவ ருங்கலை கற்பினும் பொருணிலை குறிக்கொண்
டொருவ ழிப்படா துழன்றிடு முள்ளமே போல. 26

மேதி னிப்படு தேசங்கள் வியன்மறு காகக்
கோது மல்குபன் மதங்களே குறுந்தெரு வாக
ஜாதி பேதங்க ளேபல சந்துக ளாகந்
தீது துற்றுமா யாபுரி புகுந்தன தெரிக்கின். 27

நான மைவகைத் திரவிய முப்பழ நறைசெந்
தேனு லாநறு மலர்க்குவை மயிலினஞ் செறிந்து
மேனி வந்துபல் கொடிவிராய் வெண்சுதை மாடம்
பானி லாத்தவழ் கிரியெனப் பொலிகின்ற பலவே. 28

உருக்க வின்பெறக் கைபுனைந் துன்மையை யொருவித்
திருக்கு லாவியுள் ளகம்புறங் கொடுவினை திருத்திப்
பெருக்க மாயடாம் பீகத்துப் பிணிப்புறும் பிணக்கர்
செருக்கி னோங்கிய மாடங்க ளளப்பில திகழ்வ. 29

கேடு சாலுமிவ் வுலககோ லாகலங் கெழுமி
மாட மாளிகை கூடகோ புரம்பொது மன்றம்
மேடை மேனிலை யாமியத் தலமென விரவிப்
பீடு சாலுருப் பெற்றன வோவெனப் பிறங்கும். 30

அவ்வி யத்திஞ் ஞவச்சுவ ரமைத்தகங் கெழீஇய
தெவ்வின் வன்றுலாங் கிடத்திவச் சிரத்தகால் செறிந்து
வெவ்வி யற்படு மேனிலை திருத்திவெள் ளொளிகால்
செவ்வி யாக்கிய மாளிகை வயின்றெுறுங் திகழ்வ. 31

கோது மல்குமா யாபுரி நகரிடைக் குழுமி
ஓத ரும்பல பாக்கங்க ளுள்ளன வவற்றில்
ஆதி யாயது மரும்பொருள் சுரப்பது மங்கங்
கேதி லார்விழைந் திடுவது மிந்தியப் பாக்கம். 32

குன்றி டாதுயர் கல்வியுங் கொழுநிதிக் குவையும்
மன்று தொக்கவை வகைத்திர வியங்களு மலிந்து
தோன்று தொட்டில வாநில வளங்களுந் துதைந்தே
பொன்றி ணிந்தபொற் பேழையிற் பொலியுமற் றதுவே. 33

நாலு வேதமா றங்கம்பன் னெண்புரா ணங்கள்
கோலு மூவிரு சமயங்கள் குலவுமுத் தேவர்
சீல. மார்பதி னெண்புலப் பாடைகள் செருமிப்
போலி மாந்தளா மருட்டுவ விடந்தொறும் பொதுளி. 34

வாயி லங்கிருண் மறைத்தொனி மார்புநூல் குசைப்புல்
தீயி லங்குபல் வேதிகை திருத்துழாய் மாடம்
மீயி லங்குபல் குலக்குறி புண்டர விதங்கள்
ஆயி லங்கிய பார்ப்பனச் சேரிக ளனந்தம். 35

மன்னர் தொல்குலத் தவரென வறும்பெபர் மேன்மை
பன்னி வன்மனஞ் செருக்கிவெம் படைத்தொழில் பயின்று
துன்னு மிந்நக ரிடைக்கிடை தொடுத்தினி திருந்த
வன்ன மேனிலை மாடங்க ளளப்பில மலிவ. 36

ஒன்றி னூதிய மொன்பதாக் கொண்டுவிற் றேம்பி
நன்று தீதுநா டாதொரு காசுக்கு நஞ்சு
தின்று நீணிதி செருக்கிய வைசியர் செறிந்த
பொன்ற ழைத்தமா ளிகைநிரா கோடியாப் பொலிவ. 37

எண்டி சாமுகந் திசைபட வர்த்தக மியற்றி
மண்டு காமியச் சுவைபடு மாயமாச் சரக்குக்
கொண்டு கட்டிவிற் றாதியக் கொள்ளைகொள் வணிகர்
பண்ட சாலைக டுறைதொறும் பெருவளம் படைப்ப. 38



அங்கண் மாநிலந் திருத்தியூண் விளைத்தன வரதங்
தங்கள் காரிய துரந்தா ராக்குடி தழைப்பக்
கங்கை யின்குலத் துதித்தபூ வைசியராங் கபட்டு
வெங்க ணாளர்தம் மேனிலை மறுகெங்கு மிளிர்வ. 39

மூந்து முக்குலத் தவர்பணித் திடுதொழின் முழுதுஞ்
சந்த தம்புரி தந்துதந் தங்குல தெய்வம்
அந்த ணாளரென் றஞ்சலி யாக்கியு மடங்கிச்
சிந்தை கன்றிய சதுர்த்தர்வாழ் மனைகளுந் திகழும். 40

கைத்தொ ழிற்படு மாடகூ டங்களுங் கவினி
மொய்த்த யந்திர சாலையு முறைநெறி பிறழ
வைத்த நாடக சாலையும் பொதுப்படு மன்றுங்
குத்தி ரத்தொடு பயில்வன நகரிடைக் குழுமி. 41

இழிகு லத்தரென் றேனையர் புறக்கணித் திகழுங்
கழிம டக்குடி யாளர்தஞ் சிந்தனை கன்றி
வழிவ ழிப்பகை கொண்டுவாழ் மனைச்சிறு குடிசை
பொழிலி டம்பெறு புறநக ரெங்கணும் பொலியும். 42

திங்க ளைக்கரி தாக்குவ செழுஞ்சுதைப் பித்தி
கங்கு லைப்பக லாக்குவ கணிகையர் கழகம்
மங்கு லைச்சிறி தாக்குவ மலிபுகைப் படலந்
தங்க ளைக்குரு டாக்குவ ரிந்தியத் தருக்கர். 43

இருள்ப டும்மரச் சோலையு மிருதயக் குகையும்
மருள்ப டுங்களி விழிகளு மதத்தநூன் மாபுந்
தெருள்ப டும்புவிக் கலைகளுங் கலவியின் றிருக்குஞ்
சுருள்ப டுங்குல மலர்களுந் துத்துவெள் ளடையும். 44

கண்ணி குத்துவர் காமுகப் புள்ளினைப் படுப்பான்
வண்ண வாள்விழிப் பரத்தையர் மறுகெங்கு மருட்டி
நண்ணி யெத்துவர் மனைதொறு நயப்புரை பேசிப்
பெண்ணெ ழுக்கறு மாதளாக் காமப்பேய் பிடித்தோர். 45

அங்க மாமத வாரணத் தொலிபடு மல்லால்
அங்க மாமத வாரணத் தொனிபடா தாக
எங்கு மில்லொழுக் கிகந்தன வென்பதை யல்லால்
எங்கு மில்லொழுக் கிகந்தன விலையென லிலையால். 46

மறமெ லாங்குடி புகுந்துள மானவ ருளத்தில்
அறமெ லாங்குடி போயதவ் வணிநக ரொருவிப்
புறமெ லாம்புலை நிரம்பின பொருவரு ஞானத்
திறமெ லாநகைப் படுவன தீவினை கதிப்ப. 47

மெய்யு ரைப்பவர் யாவரு மடம்படு மிலேச்சர்
பொய்யு ரைப்பவ ரேயதி புண்ணிய புருஷர்
கையு லோபரே மதியுளார் கசிந்துப காரஞ்
செய்யு மாந்தரே பயித்திய ரிந்நகர்ச் செவ்வி. 48

புகழ்வி ரும்பியட் டேட்டுவர் புரண்டறா லவருக்
கிகழ்வ ரேழையை யிரங்கியோர் சற்றுண வீயார்
திகழு ஞானநூல் செப்புவர் திருட்டள வாக
அகழ்வ ரேனைய ரருநிதி வைப்பிட மறிந்தே. 49

பத்தி நூல்வழிப் போக்கர்மேற் படாப்பழி கூறிக்
கத்து வார்தெருத் தெருத்தொறுங் கத்தபங் கடுப்பக்
குத்தி ரத்துவ வேடர்பாற் கூட்டுண்டு களித்து
மித்தி ரத்துவம் பூணுவர் கொக்கன விரகால். 50

பஞ்ச தந்திரம் பயிலுவர் காமநூல் படிப்பர்
தஞ்ச மாக்கிய வுடைமையைத் தமதெனச் சதிப்பர்
நஞ்ச மன்னதீ வினையெலா நயந்தனுட் டிப்பர்
வஞ்ச மல்குவாய் மொழியினாற் புதைபட மறைப்பார். 51

கடனை வாங்கியே மாற்றுவர் சிலர்சிலர் கையிற்
கடனை வையெனத் தொண்டையை நெரிப்பர்கைக் கணக்கிற்
கடனை யேற்றிமற் கட்டுவர் சிலர்சிலர் கடுகிக்
கடனை யன்றியோர் காசிலை யெனப்பொருள் கரப்பார். 52

கொண்ட பெண்டிரா லூதியங் கொண்டுயிர் கொளுவி
உண்டு தேக்கெறிந் துழலுவார் பாழ்வயி றோம்பி
மண்டு காமவெம் பிணியினால் வரன்முறை மயங்கி
எண்ட காப்பழி பூணுவ ரிகபர மிழந்தே. 53

அன்ன சத்திரத் துண்டுநேக் கெறிபவ ரனந்தந்
துன்னு காமசத் திரந்தொறுந் துதைபவ ரனந்தம்
மன்னு செல்வர்தம் மனைக்கடை வறியவ ரனந்தம்
இன்ன லுற்றுளங் கசந்தழு மேழைக ளனந்தம். 54



காளி கோட்டமு மூட்டமு மாட்டமுங் கதிக்குங்
கூளி நாட்டமுங் குறக்குறி யீட்டமுங் குமையுங்
கோளி னீட்டத்து மனைதொறுஞ் சண்டைகொக் கரிக்குந்
தேளி னீட்டிய விடமெனச் செவிக்கிடர் செருகும். 55

வேறு.

மயங்காட்டம் புரிகணிகை மடமாதர் மனமருட்டி
இயங்காட்டி லயங்காட்டி யெழில்காட்டி விழிகாட்டி
நயங்காட்டிப் பயங்காட்டி நகைகாட்டிச் சிகைகாட்டிக்
குயங்காட்டிக் காமுகரைக் குரங்காட்ட மாட்டுவரால். 56

உண்டாட்ட மந்தணருக் குரையாட்ட மடவார்க்குக்
கண்டாட்டங் காமுகர்க்குக் களியாட்டங் குடியருக்குக்
கொண்டாட்டம் பரத்தையர்க்குக் குடியாட்டங் கொடுங்கோற்குத்
திண்டாட்டம் பொருளிலர்க்குச் சிரசாட்டங் கெருவிகட்கே. 57

வேறு.

தன்ன யங்கெடா துலகுவப் பாக்கலே தருமம்
என்ன தீங்குசெய் தாயினு மீட்டலே பொருள்மற்
றின்ன லின்றியே யருந்தலும் பொருந்தலு மின்பம்
பின்ன ராவதே வீடென்ப திந்நகர்ப் பிரமை. 58

நன்று ஞற்றுவார்ச் செகுப்பதே நகரதி பதிக்கு
வென்றி தீதுசெய் வினைஞரைப் புரப்பதே வேட்கை
கன்று சிற்றின்ப போகமாங் கண்ணியைக் குத்தி
என்று மாந்தரைப் படுப்பதே யிடையறு வேலை. 59

மன்னு நற்குண மங்கல வணியிலா மடவார்
நன்னர் மேனியை மினுக்கியு நல்லுடை புனைந்தும்
இன்ன றும்புகை யூட்டியு மெழினலம் புகழ்ந்தும்
பொன்ன ருங்கலந் திருத்தியும் பொழுதுபோக் கடிப்பார். 60

சதுரர் யாமெனத் தருக்கிய வாடவச் சழக்கர்
மதுவி ரைச்சியுண் டாடியும் வஞ்சனை யிழைத்தும்
முதுவ ரைப்புறக் கணித்தும்வெஞ் சூதுப்போர் முயன்றும்
பொதும னைத்தொழும் பியற்றியும் பொழுதுபோக் கடிப்பார். 61

நீச மல்குமா யாபுரி நெடுநக ரிடைச்சென்
மாசி னூல்வழிக் கிருமருங் கினும்பல வளஞ்சேர்
தோகை பெற்றமா யக்கடை வீதியொன் றுளதிந்
நாச தேசமா தமங்கலக் கழுத்திடு நாண்போல். 62

## வேறு.

மீயுயர் கதியை நாடி வேதநூ னெறியிற் செல்லுந்
தூயரைக் கெடுப்பா னெண்ணித் துணிந்துபே யேல்செபூலாம்
பேயினத் தாச னாகித் தியற்றினன் பிறங்க மேனாள்
மாயசூ னியப்பண் டங்கண் மலிந்தவிம் மாயச் சந்தை. 63

அலகறு நிதியுத் யோக மாளுகை மகிமைப் பட்டம்
இலகுபொன் வெள்ளி யில்ல மிசைதன தானி யங்கள்
பலகலன் வாக னாதி படைக்கலந் தவிசு டம்பம்
உலகசம் பத்துல் லாச முயர்குலப் பெருமை மேன்மை. 64

பலகலை ஞானோ பாயம் பகட்டுரை பஞ்ச தந்த்ரம்
அலகிலாச் சூது வஞ்ச மபகட மபத்தா பாசங்
கலகமிச் சகமே மாற்றங் கள்ளங்கை தவம்வா சாலங்
குலகுறி படையா ளங்கள் குசோத்தியங் குதர்க்கங் கோட்டம். 65

மந்திர வித்தை யட்ட மாசித்தி மாய வித்தை
எந்திர வித்தை கண்கட் டிந்திர சால வித்தை
தந்திர வித்தை யோகந் தருவித்தை கருவின் வித்தை
விந்தையா ரோப வித்தை வெகுவித விநோத வித்தை. 66

உரைவிதந் தனைய வாய வுலப்பிலா மாயப் பண்டந்
தரைவளம் படுக்கு மாயச் சந்தையித் தகைமைத் தொன்றே
வரைவரை போலத் தொக்கு மலிந்தமா பாவப்பண்டம்
விரைவினி லழிந்து தோன்றி விலைப்படும் வைக றோறும். 67

வித்தகக் கலைப்ப யிற்சி மேதையாத் துமவி சாரம்
உத்தம ஞான நன்மை யுண்மைநல் லுணர்ச்சி தேவ
பத்தியுள் ளன்பு சாந்தம் பவித்திரந் தயைகண் ணோட்டஞ்
சித்தநற் குணநற் செய்கை ஜெபதப விரதஞ் சீலம். 68

முத்திசா தனங்க ளாக முதுமறை திகழ்த்திக் காட்டும்
இத்தகு வனப்பு வாய்ந்த விரும்பொரு ளெவற்றொன் றேனுங்
குத்திரம் பயிலு மாயக் கடைதொறுங் கோடி செம்பொன்
வித்தினுங் கொளக்கிட் டாது விடமன்றித் தருமோ நாகம். 69

அவந்தரு திருவி னாய வாவணத் தணிகொள் வீதி
நிவந்திரு பாலுந் துற்றி நிலவுவர்த் தகசா லைக்குள்
நவந்திகழ் மாய சால நயந்துவீற் றிருந்தெந் நாளும்
உவந்துல கருந்த வூட்டி யுயிர்ப்பலி கொள்ளு மன்றே. 70



மாணுடை யுணவு பான வருக்கமஞ் சனஞ்சு கந்தம்
பூணணி கலங்கர்ப் பூரப் புதுநறுங் கலவை மென்பூக்
காணநெஞ் சிவருங் காட்சிக் கருப்பொருள் பலவு மீட்டி
நீணகர்க் குதவி யென்று நிறைவளம் படுக்கு மாதோ. 71

வரைகட னகர நாடு வனம்படு மமுதத் தோடு
குரைகடற் புவியின் மேய கொழுநிதிக் குவையும் விண்மீன்
புரைநவ மணியி னாய பொற்குவை பலவும் பொங்கி
நிரைநிரை பொலிய வெங்கு நிருத்தனம் பயிலு மாயம். 72

அகத்திரு ளிரிக்கு மன்றே வவிரொளித் தீபம் யாண்டுந்
தொகுத்தபன் மணிமுத் தம்பொன் சுடர்விரி வைர மாதி
மகத்தொளி விளக்க நாளு மாயவர்த் தகஞ்செய் மாந்தர்
அகத்திருண் மலியு மல்லா லகல்கில திதுவே யாக்கம். 73

பல்வளங் கெழுமு நானா தேசத்தும் பயின்றங் குள்ள
நல்வள மொருவி ஜீவ நாசத்தை மலியக் கொண்டு
சொல்வளம் பெருக்கி விற்றுச் சூனியப் பொருளை யாக்கிக்
கொல்வளம் படுக்கு மாயக் குத்திரங் குலவுஞ் சந்தை. 74

அங்கிலோ தேசத் துள்ள வரும்புரு ஷார்த்தங் கொள்ளார்
பொங்குடாம் பீகம் வன்கண் பொருளீட்டு தந்தி ரங்கள்
வெங்குடி கேடென் றாய விநாசத்தை விலைப்பா லீட்டிச்
சங்கடம் பகரு மாயச் சந்தையி னமலைத் தெங்கும். 75

மாயிரு ஞாலத் துள்ள வரம்பிறீக் குணங்க ளெல்லாந்
தீயசிற் றின்ப போகச் செவ்வியா யுருவு வாய்ந்து
மேயவிவ் வுண்மை தோரார் விழிமருண் டெளிதிற் றுய்ப்பர்
தூயஜீ வியத்தை நல்கிச் சுடர்விழு பதங்க மேபோல். 76

பாரீச னாக காட[illegible] பாதகப் பசாச னுய்த்த
மாரீசக் கடையின் சால [illegible]சவின் பக்தை நச்சி
நேரீசற் குழுவின் மொய்த்து நிலவுல கத்து மாந்தர்
ஓரீஷத் துணர்வற் றுன்ம ஆகிய மிழப்ப ரந்தோ. 77

ஆரணங் காட்ட நாடி யகங்குழைந் திருப்பார் யாண்டும்
ஆரணங் காட்ட நாடி யகங்குழைந் திருப்பா ரில்லர்
தாரணி தந்த ஞானச் சனியனைப் பணிவார் யாண்டுந்
தாரணி தந்த ஞான தம்பிராற் பணிவா ரில்லர். 78

மறங்கடைப் பிடித்து நின்ற வன்கணர் மறுமை நோக்கி
அறங்கடைப் பிடியா ரென்னே வழிமதி படைத்து மாயம்
பிறங்கிய மறுகு லாவிப் பேதுற்று வறிது மாள்வர்
கறங்கிசை யவாவி மாயுங் கேகயங் கடுப்ப மன்னே. 79

தெருட்கடல் படியாச் சிந்தை தீவினைக் கடற்கு ளுய்ப்ப
அருட்கடல் படியா ராகி யாசையங் கடற்குண் மூழ்கி
இருட்கடல் படுவ ரந்தோ விங்நக ரத்து மாக்கள்
மருட்கட லிகந்தா னந்த மாக்கடல் குளிப்ப தென்றோ. 80

## வேறு.

நித்தி லம்பவ ளஞ்செறி நீர்மையின்
பத்தி யாய்த்திரை நாடிய பான்மையின்
கத்து லப்பரி தாயக ணக்கினில்
தத்து நீர்க்கட லொக்குமச் சந்தையே. 81

படம்வி ரித்துப் பஃறலை தோய்ந்துபே
ருடல்கி டத்தியு றுவண வாயிடூஉக்
கொடுவி டம்பொதிந் தாருயிர்க் கொள்ளைகொள்
நெடிய பாந்தளந் நீள்கடை வீதியே. 82

என்றி லங்கவி லங்கெழின் வாய்நெகூஉ
மன்ற லார்ந்தளி மொய்த்தம துச்சொரிந்
தொன்று ளக்களி காட்டலி னெண்மறு
கன்ற லர்ந்தவ ருங்கடி மாலையே. 83

திசைமு கந்திக ழப்பொருள் செய்தலின்
வசையின் மாயைவ ரம்பறு பான்மையின்
நசைபி றங்கமன் றூடிந டித்தலின்
இசையு மம்மறு கிந்துமுத் தேவரை. 84

மூச்சுக் காயிரம் பொய்படு மூந்துபாய்ப்
பேச்சுக் காயிரம் பொன்படும் பேசும்வெள்
வீச்சுக் காயிரம் பொன்படும் வீச்சவா
யேச்சுக் காயிரம் பொன்படு மென்றுமே. 85

கோடி கோடிகு யிப்பன குத்திரங்
கோடி கோடிதா குப்பன கோண்மொழி
கோடி கோடிதி ரட்டுங்கொ டுவினை
கோடி கோடிகு வைநிதிக் கொள்ளையே. 86



கோடி கோடிகு லப்பெரு மைகொளுங்
கோடி கோடிவெங் நோயிற்கு றைந்திடுங்
கோடி கோடியுல் லாசத்திற் கொள்ளைபோந்
தேடி வைகலுஞ் சேமித்த தீநிதி. 87

கோடி கோடிகு டலிற்பு தைந்திடுங்
கோடி கோடிகு டிவெறி கொண்டிடுங்
கோடி கோடிசிற் றின்பக்கு கைபுகும்
ஓடி யாடித்தி ரட்டிய வூர்நிதி. 88

ஆட ரங்கத்த ழிபபல் லாயிரம்
பாட ரங்கம்ப றிக்கும்பல் லாயிரங்
கூட ரங்கங்கு றைக்கும்பல் லாயிரங்
கேட ரங்கங்கெ டுக்கும்பல் லாயிரம். 89

கண்ட மாயக்க டையுங்க வின்கடை
தண்டு மாயச்ச ரக்குஞ்ச ரக்கினின்
மண்டு மின்பமு மாயையெ னுமதி
பண்டொர் ஞானிப கர்ந்தன னுண்மையே. 90

உன்ன தானந்த வோங்கல ரசன்முன்
இந்நி லத்துவந் திவ்வழிச் செல்கையில்
மன்னு மாயவின் பத்தைவ னாந்துசீ
என்ன வீசிப்பு றக்கணித் தேகினர். 91

தொண்டர் பன்னொரு வோருமித் தொன்னகர்
கண்டு மாயக்க டையைக்க டிந்துமெய்
விண்டு வர்த்துயிர் வீடுமெட் டாயுரங்
கொண்டு நின்றுபி ரானடி கூடினர். 92

மாய சூனிய மல்கிய விந்நகர்த்
தீய சீலந்தெ ரிப்பரி தென்னுனாக்
காயி ரம்மடங் காயறி வாயெனுந்
தூய வேதியன் சொற்றன னென்பவே. 93

மாயாபுரிப் படலம் முற்றிற்று.

## நகர்புகு படலம்.

நாடி யாரணன் சொற்றசொ னன்னிலை
ஆடி யின்கண லங்குமா யாபுரிப்
பாடொ ருங்குகண் டுள்ளப்ப தைப்பொடே
நீடு நீர்மைநி தானிநி கழ்த்துவான். 1

ஜீவ நாசம்வி ளைக்குமித் திநகர்க்
காவ லன்செயல் கட்டற நீக்குதல்
தேவ சேனையர் கோனருட் செவ்வியே
பாவ காரிய ரேஞ்செயற் பாலதென். 2

அவித்தை யாயவ ரணும கத்துறக்
குவித்த மாயசிற் றின்பமுங் கோளறக்
கவித்தி டித்துக்க கோளத்த ருண்முகில்
புவித்த லத்துப்பொ ழிவதெக் காலமே. 3

செவ்வ ணானெறி சேறுது மாயினும்
அவ்வ யிற்படு மாயவ ழிம்பினைக்
கௌவை யுற்றபு ரளியைக் கண்டுகேட்
டெவ்வ ணஞ்சகித் தேகுவ தெந்தையே. 4

பாவ நீதிப கர்நடுத் தீர்வையின்
ஆவ தீதென்ற றிவுகொ ளுத்துநந்
தேவ வாவிதி ருவருட் பெற்றியை
ஜீவ ருக்குத்தெ ரிப்பதன் றேகடன். 5

நாச தேசந கரியி னண்பொடு
நேச மார்சுவி சேஷநி கழ்த்திடின்
மோச நாசம்வி ளைப்பாம் மூர்க்கரேல்
ஈச னேசமீ டேற்றம ளிக்குமால். 6

சோத னைக்குள்வி ழாவகை சூழ்ச்சியோ
டாதி தேவன டிநிழ றுன்னியாங்
காத லாயெமைக் கையடை யாக்கிடிற்
போத மல்கும ருட்டுணை பூக்குமால். 7



என்று ளங்குவிந் தின்னன கூறலும்
நன்று நன்றுன்க டைப்பிடி நம்பியாம்
பொன்றி னும்மிடை யூறுபொ ருந்தினும்
மன்ற ணயகன் சித்தம கோத்தமம். 8

வழும்பு பட்ட யாக்கையும் புல்வினைத்
தழும்பு பட்டநம் மாவியுஞ் சார்ந்தயுந்
தொழும்பு பட்டவன் றேபா மன்சுதற்
கொழுங்கு பட்டன வொப்படை யாகவே. 9

நந்த மக்கரு ணைதன்க ழல்புகுஞ்
சிந்தை யேயன்றிச் சிந்தைபி றிதிலை
முந்து வெங்கொடுந் துன்பமு ருக்கினும்
இந்த வாக்கையொ டேமுடி வெய்துமால். 10

ஈறி லாப்பா லோகவி ராஜ்ஜிய
ஆறு செல்லுது மாவன வாருக
தேறு கையவெ ணவித்தி றத்தன
கூறி னன்மறை யோன்குணக் குன்றனன். 11

இன்ன வாறுரத் தின்னுரை யாடிநம்
உன்ன தேசனெ ருதிரு வோலக்கச்
சன்னி தானத்துத் தாழ்ந்துமன் றூடியே
சென்னெ றிக்கொடு போயினர் சீரியோர். 12

நன்று பேசிந ராத்தும ரக்ஷகன்
வென்றி யன்புவி ழுத்தவம் வித்தகம்
என்றிவ் வன்னவி சைபுனைந் தேத்தியே
சென்று கூடினர் மாயச்சி றைப்புறம். 13

ஆழி யன்னவ கழைய கப்புறஞ்
சூழு மேருவிற் றோன்றிய விஞ்சிபை
ஊழி ணைக்கியு யர்கடை வாயொரீஇ
வாழி யாரணர் புக்கனர் வஞ்சரூர். 14

வண்ண மேனிலை மாடங்கள் கூடங்கள்
எண்ணி றந்திரு பாலுமெ ழிறிகழ்
கண்ண கன்றக டிநகர் வீதிவாய்
நண்ணி நூனெறி நாடினர் போயினார். 15

விதித்த மெய்யணி கற்பணி வித்தகம்
மதித்த நீதிவெண் வத்திரங் காண்கிலார்
சதித்த பொய்யணி தாங்கிமி னுக்குடை
கதித்த பாழுடல் கண்டுகண் டேகினார். 16

விண்ணு' செச்சுடர் விக்கிர கங்களி
டணனு ருக்கவி யமபிற வற்றினுக்
கண்ணல் பூசனை யாற்றுமு றையெலாங்
கண்ணிற் கண்டுகண் ணீர்வடித் தேகினார். 17

நெறியெ லாங்கள்ள நீணெறி நீதிசெய்
துறையெ லாமநி யாயத்து றையகப்
பொறியெ லாந்தந்தி ரப்பொறி புல்லுமிக்
குறியெ லாங்கண்டு கேட்டுளங் குன்றினார். 18

சென்ற சென்றதி சைதொறுந் தூஷியம்
மன்ற மெங்கும்வ சைப்படு வாய்மதங்
கன்று சாபக்க டுங்கனல் காதுறீஇ
நின்று நின்றுதி கைத்தனர் நீர்மையார். 19

விண்டு பாழ்ங்கதை பேசுறு வீணரை
மண்டு காமச்செ ருக்கரை வார்மது
உண்டு ரப்பியு ருண்டலை வார்தமைக்
கண்டு கண்டுக ருத்தழிந் தேகினார். 20

புலிவ யப்படு புன்மறி போன்மென
வலியர் கைம்மறிந் துள்ளம லங்கிய
மெலியர் கண்கலு ழக்கண்டு வேதியர்
நலிவு கொண்டுள நைந்தனர் போயினார். 21

தூய மாதரு மந்துதை யாதவித்
தீய மாநகர்ச் செல்வமெ லாங்குடி
போயொ ருங்கவி யப்புனி தச்சினந்
தோயு மேயெனச் சோகமுற் றேகினார். 22

போக்குஞ் சிந்தைப்பொ ருமலும் போதமார்
வாக்கு நேர்செல்வ ழிவில காமையும்
நோக்கி யங்கங்கு மாயநு னித்துணர்
மாக்க டொக்குவ மூத்துதன் மேயினார். 23



எங்கு செல்பவர் யாதுகு றித்துளார்
இங்கு வந்ததென் னோவென்றி யம்புவார்
துங்க யாத்திரை வேடஞ்சு மந்தலை
பங்க முற்றப தித்ரி வரென்பார். 24

வளவ னாயகம் மன்னவ னாட்டியல்
உளவ றிந்துழ லொற்றரி வரென்பார்
களவிற் காதல னாக்கவர் வோரிவர்
கிளவி யாக்கங்கி ளக்கின்ற தீண்டென்பார். 25

ஒறுத்து நிந்தித்து ருத்துமண் ணோச்சினும்
பொறுத்து நம்மைப்பு றக்கணிப் பாரென்பார்
நிறுத்து நீதிநி கழ்த்துமின் னோரெலாங்
கறுத்த சிந்தையக் கள்ளுந ரேயென்பார். 26

வாக்கில் வேறலம் வன்றடி கொண்டியாந்
தாக்கி வேறுஞ்ச மைதிரென் பார்சிலர்
தாக்கி வேறல்ச மர்த்தன்று சாதிக்க
வாக்கின் றேற்பின்னை வாயென்னென் பார்சிலர். 27

வெய்து துன்பம்வி ளைப்பினுங் காக்கவோர்
பொய்சொல் லாதபு லையரென் பார்சிலர்
மெய்சி தைந்திடின் வேறுமுண் டோவொரு
செய்த வம்மது சீரிதென் பார்சிலர். 28

ஆக்கம் வேண்டிய றந்திறம் பேமெனாப்
போக்கு முட்டிய புல்லரி வரென்பார்
போக்கு முட்டின ரேனுநம் போற்செயார்
தீக்கொ டுந்தொழில் தேர்மினென் பார்சிலர். 29

வழிதெ ரிக்கும தியுடை யார்நமக்
கிழிகு லத்தர்கொ லோவென்ப ரோர்சிலர்
இழிகு லத்தரெ வர்பழி பாவத்தை
ஒழிகி லாதவ ரேயென்ப ரோர்சிலர். 30

இன்ன வாப்பெரும் பூலரி கழவும்
மன்னி யோர்சிலர் தட்டிம றுக்கவும்
நன்னர் நூனெறி நாடியவ் வேதியர்
துன்னி னார்கொடுஞ் சூனிய வாவணம். 31

கல்வி னத்துட்க வினாக வமணி
கொல்லி னத்தினு முண்டோர்கு ணக்கியன்
சொல்ல வல்லர்து ணிந்துந டுவினை
இல்லை யென்றிலை யிந்நக ரத்தினும். 32

பொய்ய ளைந்தபு ரத்துணை போக்கியே
வைய ளைந்தம தியினர் போயினார்
மெய்ய றிந்தகல் வித்தக ருட்கொளார்
கைய றிந்தில ரேத்துணை கைப்புணை. 33

குத்தி ரப்பொறி கூட்டுண வீட்டிய
மித்தை யாயசிற் றின்பவி டயங்கள்
வைத்த மாயக்க டையைம தித்திடார்
கைத்த சிந்தையர் கண்டுவர்த் தேகுழி. 34

ஆர்கொ லாமிவ ராடையு டைநடை
நோர்கி லார்நம ரோடுநி கழ்த்தலும்
பார்கு லாமொரு பாஷையன் றாதலின்
தோர்கு வாம்வம்மெ னத்திரண் டாரரோ. 35

செருக்கி வந்தங்க வாவர் தீஞ்சுகப்
பெருக்க முள்ளந யமுள பேசருந்
திருக்கு லாங்கடை தெய்விக கற்பக
விருக்கங் கொள்ளவி ழைந்ததென் னோவென்றார். 36

முன்னு றக்கண்டு மோசப்ப டுகணைப்
பின்னி டாதுக விழ்வதென் பேதைமை
என்ன பாவமி வர்மதி கேடெனா
நன்னி தானிமற் றீதுந விற்றுவான். 37

மாய மல்கிம லிந்தம றுகுளீர்
தூய சத்திய மேதரு விக்கொள்வேம்
ஆபு நன்னிதிக் கேவிலை யாக்குவேம்
ஏய வெண்ணமி தன்றிப்பி றிதிலேம். 38

என்று கூறலு மென்னுங்கெ டுமதி
துன்று காமிய மாச்சுவை துய்க்கிலீர்
பொன்று மட்டுமிப் புன்கண்பு சித்திரோ
நன்று சத்திய நாட்டமென் றெள்ளினார். 39



சற்று நின்மெனச் சாற்றியங் கோர்சிலர்
உற்று முன்வந்து யர்தவ வேடத்தீர்
சொற்ற சத்தியம் யாதது சொன்மினோ
நற்றி றத்தைந யக்குதும் யாமென்றார். 40

வினவு மாற்றநன் றாமென மெய்யுணர்
பனவ விப்படு பாதகச் சேரியிற்
கனவி லுங்கரு துற்றில னித்தகு
மனவு ணர்ச்சியுண் டென்றும திவலோய். 41

வஞ்ச மாயக்கி டக்கைம றிந்துகண்
துஞ்சு மாந்தர்தொ குதியுள் ளாஞ்சிலர்
விஞ்சு சத்திய வாக்கம்வி ளாவுநன்
னெஞ்சு ளாரென நேருறக் கண்டனம். 42

தீண்ட ரும்பெரு மாயச்செ ருக்குளார்
மூண்டு ருத்துயிர் மோசம்வி ளைப்பினும்
ஈண்டு சத்தியம் யாமெடுத் தோதலே
வேண்டு மென்றுது ணிந்தனன் மேலையோய். 43

அங்கண் வானத்த ரசிளங் கோமகன்
உங்க ளோடுல குள்ளள வும்முளேன்
எங்கு முண்மையி யம்புமி னீரென்ற
துங்க வாசகஞ் சோர்வுறு மேகொலாம். 44

செய்ய வல்லசெ யக்கெடுஞ் செய்வன
செய்ய லாமையி னுங்கெடுந் தேர்கெனா
வைய கத்துநன் னீதிவ குக்குமால்
ஐய நின்கருத் தியாதென வந்தணன். 45

நன்று சொற்றனை நம்பிநி தானிநீ
என்ற னுள்ளுறை யும்மிது வேயெனா
மூன்று னும்ஜெக மாயைமு யக்கருக்
கின்று மெய்ம்மையி சைத்துமென் றொல்லையே. 46

மாத வாதிரி யேகம கத்துவர்
பாத பங்கயங் கிட்டிப்ப ராவினார்
ஏத மற்றவி [illegible]ண்ய மானவ
நீத சத்தியங் காட்டுநி கழ்த்துவார். 47

நகர்புகு படலம் முற்றிற்று.

## இரக்ஷணிய நவநீதப் படலம்.

தந்தை யாகி யுலகனைத்துந் தந்து மறுக்க டமைப்புரக்க
மைந்த னாகிப் புனிதாவி வடிவாய் ஞான வரமருளிப்
பந்த மறநின் றிலங்குதிரி யேக பரமன் பதாம்புஜத்தைச்
சிந்தை யாரத் தொழுதேத்திச் சேர வாரும் ஜெகத்தீரே. 1

நீதி கருணை பரிசுத்த நேசஞ் சுயம்பு சாமர்த்தியம்
போத மினைய லக்ஷணங்கள் பரிபூ ரணமாய்ப் பொருந்தியனா
ஏத மிலனாய்க் காமாதி யெறிந்து பவத்தை யெரிக்கின்ற
ஆதி தேவன் சரணநிழ லடைய வாரும் ஜெகத்தீரே. 2

ஆதி நரனைப் படைத்துலக மனைத்து மவனுக் கடிப்படுத்திப்
போத மொடுபாக் கியம்புனிதம் போத வருளி மனச்சான்று
மேதின் மதியு மீந்துசுயா தீனத் திருவென் றினிதுவந்த
நாதன் கருணை யுள்ளியதை நாட வாரும் ஜெகத்தீரே. 3

பாவ நரங்க ளெரிநரகிற் பதையா வண்ணம் பரகதிசெல்
ஜீவ வழியைத் திறந்தொன்றாஞ் செல்வ மகவைச் சிலுவையிலே
சாவக் கொடுத்தெப் பாவிகட்குஞ் சலியா திரக்ஷை தனையருளுந்
தேவ சிநேகந் தனைநினைந்து சேர வாரும் ஜெகத்தீரே. 4

சொந்த மகவை நம்பொருட்டுத் துணிந்து சாகக் கொடுத்தபிரான்
உந்த மிதய மெமக்குநல்கி யுய்ம்மி னென்ன வுணராமற்
சந்த தமும்பேய்க் கிடங்கொடுத்துச் சாத னலமோ தயாபரற்கே
சிந்தா சனத்தைக் கையளித்துச் சேர வாரும் ஜெகத்தீரே. 5

கோதி னீதி யிரக்கமெனுங் குணங்கண் மாறு கொள்ளாமல்
தாதை யுவப்ப மாதுவித்தாய்த் தயாள வுருக்கொண் டவதரித்து
நீதி யிரக்க சமரசனா நின்றுத் தரித்த நிறைகருணை
ஆதி மூலப் பரம்பொருளை யடுக்க வாரும் ஜெகத்தீரே. 6

மண்ணை விழுங்கக் கொதித்தெழும்பி வருந்தீ யாற்றைக் கடப்பதற்கு
வெண்ணெய்ப் பாலஞ் சமைப்பார்போல் வேத நாதன் வெகுளிசுய
புண்ணி யத்தாற் றீருமெனப் [illegible]ம்ப வேண்டாம் புரைதீர்ந்த
அண்ண லேசு குருதி[illegible]கந் தவிக்க வாரும் ஜெகத்தீரே. 7



நீதா சனத்தண் டையினிற்க நீதி மானுக் கும்மரிதேற்
கோதார் பாபாத் துமங்களுக்குக் கூடு மோகூ டாதெனவே
வேதா க்ஷரங்கள் விளம்புகின்ற மெய்யைக் கருதி விரைந்தின்னே
தாதா கிருபா சனத்தண்டை சார வாரும் ஜெகத்தீரே. 8

நம்மைப் படைத்துக் காத்துவரு நாத னிதர தேவர்களை
நம்மைப் போல வணங்காதீர் நாமே கருத்த ரெனநவின்ற
செம்மை மொழியைக் கருத்திருத்தித் தெய்வப் பதரைச் சீத்துவிட்டு
வம்மின் றிரியே கப்பெருமான் மலர்த்தாள் வணங்க ஜெகத்தீரே. 9

விக்கி ரகநம் மிணையாக்கி விழுந்து வணங்கும் விழலரைநம்
உக்கிர கோபந் தகிக்குமென வுரைத்த கடவு ளுமைமுழுதும்
நிக்கி ரகஞ்செய் திடுமுன்னர் நீச வுருவா ராதனமாம்
அக்கிர மம்விட் டியேசுதிரு வடியை யடைமின் ஜெகத்தீரே. 10

தூய நினைவா லன்றிநம்பேர் சொல்லி வழங்குந் துர்ஜநரைக்
காயு நமது சினமென்ற கடவு ளுரையைக் கருதாமல்
வாயில் வந்த படிபிதற்றி மதியா தொழுகன் மகாபாவம்
நேய மிகுமெய்ப் பத்தியுட னினைத்து வழுத்தும் ஜெகத்தீரே. 11

அனைத்து நமக்குக் கையளித்த வகண்ட பரிபூ ரணன்றம்மை
நினைத்து லோக வியாபார நிறுவி வணங்க வாரத்தோர்
தினத்தை விதித்தா ரந்நாளைத் தீட்டுப் படுத்திற் றீராத
அனர்த்தம் வருங்காண் டேமனமா வமலற் பரவும் ஜெகத்தீரே. 12

ஆயு ணீடித் திவ்வுலகி லமர்ந்து சுகிக்க வுனது தந்தை
தாயைக் கனம்பண் ணுதியென்று சருவலோக தந்தை சொன்ன
தூய விதியை நன்னெறியின் றுணிபென் றுன்னிப் பெற்றோர்க்கு
ஞாய முடன்கீழ்ப் படிந்தியேசு நம்பற் றொழுமின் ஜெகத்தீரே. 13

கொலைசெய் யாதே யெனப்பரம கோமான் கொடுத்த கற்பனைக்கு
நிலமீ துதித்த குமரகுரு நியாய மிலவாச் சீறுவதுங்
கொலையோ டொக்கு மெனவிதந்து கூறும் பொருளைக் குறிக்கொண்டு
தலைமீ தணிந்தச் சற்குருவின் சரணைப் பணிமின் ஜெகத்தீரே. 14

தீய வினையாம் விபசாரஞ் செய்யா திருங்க ளென்றுமகா
தூய கடவுள் வரைந்துதந்த துகடீர் விதியைத் தூமனமாய்
மாய மறவே யநுட்டித்து மனையோ டிருந்தில் லறநடத்தி
நேய மிகுர க்ஷகன்சரண நிழலை யடைமின் ஜெகத்தீரே. 15

இச்சை யோடங் நியமாத நெறியைக் கருதி நோக்கிடுவோன்
துச்சா ரிகள்பங் கடைவனென்ற தூயோ னருளைத் துணைக்கொண்டு
சிச்சீயெனத்துரிச்சையெலாஞ்சேரவெறுத்துச்சீத்துவிட்டுக் [தீரே.16
கொச்சை மதியை யகற்றியெம்மான் குணஞ்சார்ந் தொழுகும் ஜெகத்

மீளா நரகுக் காளாக்கும் விபசா ரத்தீ வினைபுரிந்து
வாளாப் பாமா னந்தசுக வாழ்வை யிழத்தன் மதியாமோ
நாளா ரம்பத் தயல்தூற்ற நாண மழிந்து நகைக்கிடமா [17
மாளா முன்னே கிறிஸ்தியேசு மலர்த்தாள் வணங்கும் ஜெகத்தீரே.

எங்குந் தமசந் நிதியாக விருக்குங் கடவுள் களவான
பங்க வினைசெய் யாதிரெனப் பகர்ந்த துணர்ந்து பாபொருளைச்
சிங்கி யெனவே வெறுத்தழியாச் செல்வம் வழங்குங் கிறிஸ்துவெனும்
மங்காப் பொருளை யடைந்துநித்ய வாழ்வை யடைமின் ஜெகத்தீரே.18

பொய்யைப் புகலா திருங்களெனும் புனிதன் புனித கற்பனையை
அய்யோ நினையா தவமதித்தீ ரல்லும் பகலு மனவாதந் [தீர்.
துய்ய மனச்சாட் சியைமழுக்கித்துணிந்து முழுப்பொய்சொல்லுகின்.
உய்யீ ருய்யீர் மெய்பேசி யுய்ய வாரும் ஜெகத்தீரே. 19

பொய்மை தானும் வாய்மையதாம் புரைதீர் நன்மை பயக்குமெனின்
மெய்மை யாவ தெத்தீங்கும் விளையா துரைத்த லெனுங்குறளின்
நொய்மை யுரையைத் தவிர்த்துள்ள துள்ள படியே நுவலுமென்ற
தெய்வ வுரையைக் கடைப்பிடித்துச் சேர வாரும் ஜெகத்தீரே. 20

நெஞ்சுத் துணிவாய்ப் பொய்பேசி நேச மொருவி யங்கியரை
வஞ்சித் தொழுகு மதியிலிகாண் மனுதி யறியு மகாதேவன்
கிஞ்சித் தேனும் விடாதநும்மைக் கேட்குங் காலங் கிட்டுமுனம்
அஞ்சித் தீமை யகற்றியெம்மா னடிசார்ந் துய்மின் ஜெகத்தீரே. 21

விரிவெள் ளரியங் கனிக்கிருப்புப் பூண்கட் டிடுமவ் விதம்போல
ஒருபொய் நிலைக்க வாயிரம்பொய் யுரைக்க வேண்டு முரைத்தாலும்
வருமே வெளிக்கு வரிலதிக மானக் கேடே மறுமையினும் [22
எரிவாய்ப்படுக்குமிதைவிடுத்தெம்மிறையைத்தொழுமின்ஜெகத்தீரே.

அனைத்து முடையான் பிறருடைமை யான வெதையு மாசையுடன்
நினைத்தி டாதே யெனவிரித்து நிகழ்த்துங் கடைசிக் கற்பனையை
மனத்து ளிருத்தி யவரவர்க்கு வகுத்த வளவின் மகிழ்ந்துசொற்பத்
தினத்தைக் கழித்தெம் மானருளும் ஜீவ னடைமின் ஜெகத்தீரே. 23



தந்தை கொடுத்த தசவிதியைத் தள்ளி யகச்சாட் சியைமழுக்கிச்
சிந்தை யுரக்க நன்றுருவித் தீமை புரிந்த நாரேங்காண்
எந்த விதத்துந் தேவசின மெரிக்கு முன்ன மெமைப்புரக்க
வந்த பரம சுதன்பாதம் வணங்க வாரும் ஜெகத்தீரே. 24

கல்லைச் செம்பைக் களிமண்ணைக் கடவு ளெனவே யுருப்பிடித்துப்
புல்லைப் பூவை நறுங்குழையைப் போட்டுப் பூஜை புரிவீர்காள்
தொல்லைப் பவமும் புரிபவமுந் தொலையு மாறு கிறிஸ்துவெனுஞ்
செல்வக் குமரன் றிருவடியைச் சேர வாரும் ஜெகத்தீரே. 25

ஏழை மதியாற் றுன்மார்க்கத் தெய்தற் கரிய வாழ்நாளைப்
பாழாக் கிடுவீ ரந்தோநிர்ப் பந்த முடிவு பற்றியபின்
ஊழி யூழி யழுதாலு முய்வுண் டாமோ வுளந்திரும்பித்
தாழா தின்னே யேசுதிருச் சரணைப் பிடிமின் ஜெகத்தீரே. 26

எல்லாங் கொடுத்த தாதாவை யிறைஞ்சிப் பிழைக்க மதிகுலைந்து
பொல்லாங்குடற்றும்பேய்க்கடிமைபுகுந்துவிலக்குங்கனிபுசித்தோர்
அல்லா லமலன் பாவவினைக் காதி யென்ப தறப்பாவம்
எல்லாப் பவமு மறக்குமா ரிணைத்தா ளடைமின் ஜெகத்தீரே.27

பொறுதி யுடைய தெய்வமென்று போக வாநீர் புரிபவத்துக்
கறுதி யிலையே யந்தோநும் மாவி யிறைமுன் னடுத்திடுமவ்
விறுதி நாளின் பயங்காத்துக் கென்னே செய்வீ ரிக்கணமே
உறுதி நாடிக் கிறிஸ்துவுக்கே யுளமீந் துய்மின் ஜெகத்தீரே. 28

சர்வ ஜீவ காருணியர் தன்னு லென்றுந் தமக்குரிய
சர்வ மகிமை யுங்கனமுந் தள்ளி மநுவாய்ச் சஞ்சரித்து
சர்வ லோக தண்டனையுந் தாமே சகித்துக் கதிதிறந்த
சர்வ லோக சரணியனைச் சார வாரும் ஜெகத்தீரே. 29

பாவ வழுக்கு மாத்துமத்தைப் பற்றி யிருப்ப தறியாமல்
ஆவ லொடுசிற் சிலநதிநீ ராடிற் றொலையு மெனவலைந்து
சாவீ ரீதோ ரக்ஷணிய சைலஞ் சுரந்து பெருகிவரும்
ஜீவ நதிநீ ராடுதற்குச் சேர வாரும் ஜெகத்தீரே. 30

கானம் புகுந்து தனையொறுத்துக் காயம் வருத்திக் கண்மூடி
மோனம் புரிந்து தவயோக முயல வேண்டா மவரவர்தந்
தான மிருந்தாத் துமபாவச் சழக்கைக் கருநித் தனைத்தாழ்த்தி
ஞான குருவின் புண்ணியத்தை நாட வாரும் ஜெகத்தீரே. 31

மனம்போம் வழியே மதிபோக்கி மயங்கிப் பலபா தகம்புரிந்து
தினம்போம் வீணே நடுநாளிற் றிகிற்குள் ளாகிக் கலங்குதிரோ
இனம்போ காதீர் மதிமோச மின்னே யெம்மா னேசுதிரு
முனம்போய் விழுந்து கெஞ்சுதற்கு முடுகி வாரும் ஜெகத்தீரே. 32

திரண மெனவே யுமைவாரித் தீவாய் நரகக் கடலிடத்தே
மரணச் சுழல்கொண் டுய்க்காமுன் மனப்பூ ருவமாய்வழிபடுவோர்க்
கரண மாகி யான்மரக்ஷை யருளு மேசு சாமிதிருச்
சரண மடைய விதுசமயஞ் சமயம் வாரும் ஜெகத்தீரே. 33

ஒன்றே தெய்வ மெய்கருணை யுள்ளார் உண்மை பிழைபொறுப்பார்
அன்றே வன்று நரர்க்காக வரும்பா டடைந்து பிணையேற்று
நின்றே பலியா யுயிர்கொடுத்த நிமல னீதி யடையீரேல்
நன்றீ வார்கொ லையமில்லை நம்பி வாரும் ஜெகத்தீரே. 34

நாலு வேத முளதுசெவி நயனங் கண்டு கேட்டதில்லை
மாலா தியமுத் தேவருளர் மலடி பெற்ற மகார்போல்வர்
மேலு நாலு பதவியுள விண்ணிற் பூத்து விரிந்தமலர்
போலி யிவைமற் றியேசுசரண் போற்ற வாரும் ஜெகத்தீரே. 35

வேத மொன்றே மெய்யுளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குதிதோ
நாத ளொருவ ருளருலக நவிலுஞ் சான்று நற்கதியின்
பாதை யொன்றுண் டதுகிறிஸ்து மார்க்க மிதனைப் பகுத்துணர்ந்து
கோதில் பரம குருபாதங் கும்பிட் டேத்தும் ஜெகத்தீரே. 36

பாவி யுளத்தை யூடுருவிப் பாயு மிருவாய்ப் பட்டயநம்
ஆவிக் குளவெம் பவநோயை யகற்றி யழியாப் பேரின்ப
ஜீவ னளிக்குந் தெள்ளமிர்தாஞ் சிந்தைக் கினிய தீம்பாலாந்
தேவ வசன மிதையுணர்ந்து சேரவாரும் ஜெகத்தீரே. 37

தலைகீ ழாக வுலகடுக்குத் தடுமா றிடினும் வான்சுடர்கள்
நிலைமா றிடினும் பூதியங்க ணீறு நீறுக் கரிந்திடினும்
உலவா வேதா க்ஷரங்களிலோ ருறுப்பு மிதைவிட் டுய்வழிவே [38
றிலையா தலினீ துணர்ந்தெம்மா னிணைத்தாள் வணங்கும் ஜெகத்தீரே.

பூமி பாரந் தீர்க்கவந்து பொல்லாங் கியற்றிப் பொய்பேசிக்
காம வெறியா வீரெண்ணா யிரங்கோ வியரைக் கற்பழித்த
சீமா னுக்குத் தொழும்புசெய்து தீவாய் நரகிற் பதையாமற்
சாமி யேசுக் கிறிஸ்துதிருச் சரண மடைமின் ஜெகத்தீரே. 39



பாவ நாசஞ் செயவந்து பழுதொன் றின்றிப் பரமார்த்த
மேவு விரதி யாயுலக வேட்கை நீத்துப் பாடுபட்டு
ஜீவ கோடி சனைமீட்டுச் செல்வ மோக்ஷந் திறந்து வைத்த
தேவ மைந்தன் றொழும்புசெய்யச் சேர வாரும் ஜெகத்தீரே. 40

வெண்ணெய் திருடிக் கட்டுண்டு வெதும்ப வடிக்க விம்மிவிம்மிக்
கண்ணைக் கசக்கி யழுதுநின்ற கள்ளப் பிள்ளை கருத்தாவென்
றெண்ணப் போமோ தெய்வத்துக் கிதுவோர் விளையாட் டெனலாமோ
நண்ணிக் கிறிஸ்து திருவடியை நயந்து போற்றும் ஜெகத்தீரே. 41

நீசப் புலைந ராத்துமத்தை நினைந்தோர் பொருளாய்ப் பிணைப்பட்டு
பாசத் தாலே பிணிப்புண்டு பதைக்க வடிக்கக் குருதிசிந்தி
நேசத் தாலே யுயிர்கொடுத்த நிமலன் றொழும்பு வெட்கமெனப்
பேசிற் பழுதா முயிர்தப்பிப் பிழைக்க வாரும் ஜெகத்தீரே. 42

தொட்டுச் சிசுவை யுயிர்ப்பிக்கச் சோரன் சோர விடைச்சிகளைக்
கட்டிப் புரண்டு நட்டமந்தைக் கற்போ னிருவி காரிமகா
சிட்டப் பிரம சாரியென்று தெட்டி னவனைத் தெய்வமென்று
கெட்டுப் போகா தியேசுசரண் கிட்டிப் பிழைமின் ஜெகத்தீரே. 43

முன்மா ரிசமாய் நிருவாணப் பிச்சை கேட்டு முனிப்பெண்டு
தன்மா னத்தைக் கெடுக்கமுயல் தாணு மால யன்கொல்லாம்
நன்மார்க் கத்தைக் காட்டியுமை நாலாம் பதத்தி லுய்ப்பனந்தத்
துன்மார்க் கத்தை விடுத்தியேசு துணைத்தா டொழுமின் ஜெகத்தீரே. 44

பாசு பதனாற் சலந்தரனைப் படுத்தக் காயந் தனினுழைந்து
மாசில் விருந்தை கற்பழித்த மாயன் மடிந்த மற்றவடன்
ஆசைப் பேய்கொண் டலைந்துதுழா யணிந்து காமந் தணிந்தானுஞ்
சீசீ நாற்றம் விடுத்தியேசு திருத்தாள் வணங்கும் ஜெகத்தீரே. 45

வருவ தறியாச் சிவன்முனிக்கு வரத்தை நல்கி யொளித்தோடக்
கரிய மான்மோ கினியாகிக் காக்கக் காமந் தலைக்கொண்டவ்
விருவர் கூடிக் காரிவந்தா னென்பீ ரிதுவோ தேவமுறை
தெரிய விலையோ நின்மலன்றாள் சேர வாரும் ஜெகத்தீரே. 46

பத்து முனிவர் தாசரதி சரிதம் பகர்ந்தார் பலவிஷயத்
தொத்த தில்லை வான்மீகத் தொடுவா சிட்ட முய்த்துணர்மின்
சுத்த சுவிசே ஷகர்நால்வர் சொன்ன பரம சத்தியத்தைச்
சித்தஞ் செய்து கிறிஸ்தியேசு திருத்தாள் வணங்கும் ஜெகத்தீரே. 47

கடலைக் குரங்கு தாவினதுங் கடலைக் கணையாற் றகித்ததும்பின் [யக்
கடலை யடைத்துக் கடந்ததும்பாற் கடலை மலையாற் கடைந்ததும்பொ
கடலைக் கடைந்த கடற்புழுகர் கட்டி வைத்த கதைகாணுங்
கடலை யமைத்துக் காத்தகர்த்தன் கழற்காட் படுமின் ஜெகத்தீரே. 48

கம்ப நாகம் பொய்க்கடுவைக் கக்கி மதுர கவியென்னும்
அம்பொற் கிண்ண நிறைத்துவைத்த தறியா தமிழ்த மெனவருந்தி
வெம்பி யறிவு மாண்டீரவ் விடந்தீர்த் துய்க்குங் கிறிஸ்தெமது
நம்பன் வசன சஞ்சீவி நயந்துட் கொள்ளும் ஜெகத்தீரே. 49

வாய்க்குங் கொடிய வைணவர்தம் மனைவா யெச்சில் வாரியுண்ட
நாய்க்கும் பரம பதமளித்தான் குருகூர் நின்ற நாரணனென்
றேய்க்குங் கவிப்பேய் பிடித்துழலா தெய்தற் கருவீ டெனமதித்துத்
தாய்க்கும் பெரிதன் புடையானைச் சார வாரும் ஜெகத்தீரே. 50

மூர்க்க மான வைணவமே முதலாஞ் சமய முழுப்புரட்டைப்
பார்க்கப் பார்க்கப் பாவமலாற் பயனொன் றில்லை யிரக்ஷிப்பின்
மார்க்க வுபதே சங்களையு மருவு புருஷார்த் தங்களையுந்
தீர்க்க மாயுய்த் துணர்ந்தியேசு திருத்தாள் வணங்கும் ஜெகத்தீரே. 51

பொல்லா வுலகப் புரட்டர்வெறும் பொய்யை நிறைத்துக் கட்டிவைத்த
எல்லாக் கதையு மெரிநரகுக் கிழுக்கும் பாச மெனவெறிந்து [ருத்தி
சொல்லாற் பொருளாற் பழுதில்லாச் சுருதி மொழியைக் கருத்தி
எலலாம் வல்ல பெருமானை யிறைஞ்ச வாரும் ஜெகத்தீரே. 52

ஆறு சமயப் படுகுழிவீழ்ந் தந்தோ வறிந்து மதனிடைநின்
றேறு சமய மிதுவன்றென் றியம்பி யமிழ்ந்து மேழைகாள்
வேறு சமய மிலையேசு விரும்பி விரும்பி யிரக்ஷிப்பைக்
கூறு சமய மிதுகண்டீர் கூடி வாரும் ஜெகத்தீரே. 53

பாவ பாரஞ் சுமந்துபிர பஞ்சா ரணியத் தலைந்தாத்ம
நோவுற் றிளைத்தீர் தாகித்தீர் நோக்கு மிதுதா னிரக்ஷணிய
ஜீவ வூற்று விசுவாசச் செங்கை யார முகந்தருந்திற்
சாவீ ரல்லீர் தாகியீர் சாதம் வாரும் ஜெகத்தீரே. 54

ஒருசின் மயசற் குருவாகி யுலகத் துதித்து ஜீவரக்ஷை
தருசன் மார்க்க நெறியிதெனத் தமநல் லொழுக்கஞ் சான்றாகத்
திருசின் மனத்தோ டுபதேசஞ் சொல்லிச் சுகிர்த பலியாய்வெங்
குருசின் மடிந்த குருசிலைக்கை கூப்ப வாரும் ஜெகத்தீரே. 55



ஒலிவா சலக்கா விடையொரிரா வுலகோர் பவமேற் றொருதனியே
மெலிவா யாத்து மத்துயர மேவி யிரத்த வெயரொழுக
நலிவாய்த் தேவ சினத்தாலே நணுகும் வாதை யனைத்துமன்பின்
மலிவாற் சகித்த பெருமானை வணங்க வாரும் ஜெகத்தீரே. 56

குருசி லறையுண் டுரைக்கடங்காக் கொடிய துன்பஞ் சகிக்கையிலப்
பரிசு வருத்தும் பாதகர்க்காய்ப் பரிவோ டெந்தாய் மற்றிவர்கள்
புரிசெய் வினையீ தெனவறியார் பொறுமி னென்ற புண்ணியர்தம்
உரைசெய் யரிய வன்புநிலை யுன்னி வாரும் ஜெகத்தீரே. 57

வானங் களிக்கப் புவிமகிழ வழுவாத் தெய்வ மறைபரம்ப
ஞானம் பெருக நல்லறங்க ளெளு மோங்க நனியுயர்ந்த
தான நரர்க்குக் கைகூடச் சமாதி யொருவி யுயிர்த்தெழுந்து
தீனந் தொலைத்த குமரேசைச் சேர வாரும் ஜெகத்தீரே. 58

நந்தா விரக்ஷண் ணியகிரியை நலமாய் முடித்து நரஜீவ
பந்த வினையை யறநூறிப் பரலோ கத்துக் கெழுந்தருளித்
தந்தை வலபா ரிசமேவிச் சார்வ தாநந் தமக்காகச்
சிந்தை கனிந்து மன்றாடுந் தேவைப் பரவும் ஜெகத்தீரே. 59

ஆதி முதலாய்ப் பிறந்திறந்தோ ரனைவோ ரையுமந் தத்துநொடிப்
போதி லுயிரோ டெழுப்பியிரு புறமு நிறுவி யவரவர்க்கு
நீதா சனத்தி லிருந்துமகா நியாயத் தீர்ப்புக் கூறமுகில்
மீது வருவார் கிறிஸ்தின்னே விரைந்து வணங்கும் ஜெகத்தீரே. 60

மாய வுலக மயக்கைமுற்றும் வரைய வேண்டின் வஞ்சனைசெய்
பேயைப் புறங்கண் டிடவேண்டிற் பிடித்த துரிச்சை பிறங்காமல்
தேய வேண்டிற் புனிதமனஞ் சிறக்க வேண்டிற் றிகையாமல்
தூய பரிசுத் தாவியருள் சுறுக்காய்த் தேடும் ஜெகத்தீரே. 61

ஈன மதியாற் பவம்புரிந்தே மினியென் செய்வே மிரக்ஷிப்புக்
கான வழியே தஞ்சமென வபயங் கொடுப்பா ரெவர்புனித
ஞான முறுமா றெவனென்ன நாடிக் கவன்று ழைவீரேல்
தீன தயாள சற்குருவைச் சேர வாரும் ஜெகத்தீரே. 62

மாபா தகஞ்செய் துரோகிகள்யாம் வரையா தருடா தாவேயுங்
கோபாக் கினியைத் தாங்கவெம்மாற் கூடா தய்யா குவலயத்தின்
ஆபா சத்தைத் தவிர்த்தவும தருமைக் குமா னிமித்தமெங்கள்
பாபாத் துமத்துக் கிரங்குமெனப் பணிந்து வாரும் ஜெகத்தீரே. 63

பாவ வுணர்ச்சி மனந்திரும்பல் பச்சாத் தாபம் பரமசுதன்
ஜீவ வவஸ்தை தனைநினையுஞ் சிந்தைக் கனிவு விசுவாசந்
தேவ சிநேகம் பவவெறுப்புத் திடநம் பிக்கை யிவைபரிசுத்
தாவி யருளாற் பெற்றிறைவற் காட்பட் டொழுகும் ஜெகத்தீரே. 64

தம்மோர் மகவை யும்பொருட்டுத் தந்த பரம தாதாவின்
கைம்மா றொன்றுங் கருதாத கருணைப் பெருக்கைக் கண்டிருந்தும்
எம்மாத் திரமு முணராம லெல்லா நாளும் பவம்புரிந்தாற்
சும்மா போமோ பெருமானைத் துதிக்க வாரும் ஜெகத்தீரே. 65

மிக்க சம்பத் துரிமைமனை விரும்பு மக்கள் கிளைஞருற
வொக்க வொழியு மல்லாம லுயிர்போங் காலத் துடன்வருமோ
எக்கா லத்து முடனிருந்திவ் விகத்தும் பரத்துஞ் சுகம்வழங்கத்
தக்க பெருமா னேசுதிருச் சரணைச் சாரும் ஜெகத்தீரே. 66

ஜீவ ரக்ஷை யுளம்பதித்துத் தேக விச்சை தனைமுனிந்து
பாவ வுலகை யருவருத்துப் பசாசைச் செயித்துப் பரமார்த்தம்
மேவு சுருதி நெறியொழுகி விசுவா சத்தாற் றிரியேக
தேவைப் பரவிக் கதிகூடச் சேர வாரும் ஜெகத்தீரே. 67

ஜென்ம வினையு மனுதிகளாற் றினமும் புரிந்த தீயகொடுங்
கன்ம வினையுங் கதிரவனைக் கண்ட பனிபோற் கழிந்தோடும்
புன்மை யகலும் புதிதான புனித மனமும் பொருந்துமதால்
தன்ம வுருவா கியயேசு சரண மடைமின் ஜெகத்தீரே. 68

விசுவா சத்தாற் பெருஞ்சூளை வெந்தீக் கிடங்கை மேற்கொண்டார்
விசுவா சத்தால் வெஞ்சீய விரிவா யடைத்தார் விறல்கொண்டார்
விசுவா சத்தான் முப்பகையை வென்றார் முதுவே தியாதனால்
விசுவா சத்தாற் கிறிஸ்தரசை விரும்பி வணங்கும் ஜெகத்தீரே. 69

மண்ணை மணலைச் சிவலிங்க வடிவாய்ச் சமைத்து மலர்தூவி
எண்ண மின்றி மந்திரஞ்சற் றியம்பிப் பழம்பாட் டுகள்பாடிப்
பண்ணும் பூஜை பயன்படுமோ பவை கடக்கக் கற்புணைகொண்
டொண்ணு மோர க்ஷணியகலத் துவந்து புகுமின் ஜெகத்தீரே. 70

கசந்து பவத்தை யுணர்ந்துசொரி கண்ணீர்த் திருமஞ் சனமாட்டி
இசைந்த ஜெபமா லிகைசூட்டி யிதய பீடத் தினிதிருத்தி
அசைந்தி டாமெய் விசுவாச வன்பின் கிரியை நிவேதித்துப்
பசைந்த மனமோ டேசுதிருப் பதம்பூ ஜியுமின் ஜெகத்தீரே. 71



காலைத் துதியோ டெழுந்திருந்து கடவுண் மொழியாங் களங்கமற்ற
பாலைப் பருகி யாவலுடன் பணிவாய் முழங்காற் படியினின்று
மூலப் பொருளாங் குமரேசை முன்னிட் டேத்தி ஜெபம்புரிந்து
சாலப் பரம தந்தையருட் டயைபெற் றுய்மின் ஜெகத்தீரே. 72

இராவிற் றனித்து மறைத்தீப மேற்றி யிதயத் திருணீக்கிக்
காவற் றிலங்கும் விசுவாசக் காட்சி யாலே கருத்தாவைத்
தரிசித் துலகந் தரக்கூடாச் சமாதா னத்தைத் தருமட்டும்
பாவி ஜெபித்துன் னதபரம பதநா டடைமின் ஜெகத்தீரே. 73

பார மான பவஞ்சுமந்து படருற் றிரங்கும் பாவிகாள்
வாரும் வாரு மெனைக்கிட்டி வந்தா லான்ம வருத்தமெலாந்
தீரும் பரம பதத்துநித்ய செல்வந் தருவ னெனக்கூவும்
ஆருங் கருணைக் குமரேசை யடுக்க வாரும் ஜெகத்தீரே. 74

அய்யோ வழிவி லாத்துமத்தை யவமே கெடுக்க லாவதுவோ
பொய்யா முலக போகமெலாம் போதும் போது முளந்திரும்பித்
துய்யோன் சரண மடைந்துபவத் தொடக்கை யறுத்துத் தொலையாத
மெய்யாம் பரம சுகமடைய விரைந்து வாரும் ஜெகத்தீரே. 75

பொய்யார் தியபா வங்களெலாம் புரிதல் புகழாப் புரிந்திடுவீர்
மெய்யா ரணனார் நன்னெறியை வெறுத்து விலகி வெட்கமென்பீர்
அய்யோ விதுநன் மதியாமோ வால மமிழ்தென் றருந்துதிரோ
உய்யா வழிவிட் டுளந்திரும்பி யுய்ய வாரும் ஜெகத்தீரே. 76

வாணா ளிரவு பகல்மாதம் வருட மாகிப் புகையேபோற்
காணா தொழிய மரணமிகக் கடுகி வருதல் கண்டிருந்தும்
நாணா ளுந்தா னுடற்போக நச்சி யான்ம நாயகனை
வீணா யிழக்க லாவதுவோ விரைந்து வாரும் ஜெகத்தீரே. 77

என்று முமக்கு வேண்டுவன வீந்தா தரிக்குஞ் சருவேசன்
நன்றி யறிந்த கிரியையெனு நறும்பூங் கனிநீர் நல்கலிரென்
றின்றே களைகென் றிடச்சிலநா ளின்னும் பார்ப்பம் பார்ப்பமென
மன்றா டுஞ்சற் குருவருளை மறவா தேத்தும் ஜெகத்தீரே. 78

உலக முழுதுந் தனிச்செங்கோ லோச்சி யரசு புரிந்தாலும்
இலையி லாப மாத்துமத்தை யிழந்தா லவையு மிகந்துதத்தஞ்
சிலுவை சுமந்தென் பின்றொடரின் ஜீவ னடைவர் திண்ணமென்ற
அலகில் கருணா கரன்வாக்கை யகங்கொண் டுய்மின் ஜெகத்தீரே. 79

மூழ்ந்த சுற்றங் கல்விசெல்வ முயற்சி முதல காரணமாச் [விட்டுத்
சூழ்ந்த மனமேட் டிமைகளெலா மொருங்கே தொலையத் தொலைத்து
தாழ்ந்த சிந்தை யடியுறையாத் தடக்கை கூப்பித் தலைவணங்கி
ஆழ்ந்த கருணைக் கிறிஸ்தாசை யன்போ டேத்தும் ஜெகத்தீரே. 80

பெருமை யடைந்தாற் பொறிகலங்கும் பேத மாகும் புலன்களெலாம்
பெருமை யடைந்தான் மனாதிகளும் பேதித் தொழியாப் பிரமைமிகும்
பெருமை யடைந்தா லடையாத பிறிதோர் பாவ மில்லையதாற்
பெருமையடையா தியேசுவெனும் பிரானை வணங்கும் ஜெகத்தீரே.81

எண்ணப் பெருமை யெட்டுணையு மில்லாக் கிருமி யனையோமுக்
குண்ணப் புசிப்பு முடைத்தூசு முதவி யிரவு பகலாகக்
கண்ணப் புறத்துச் செல்லாமற் காக்குங் கடவுட் கிரண்டகநாம்
பண்ணப் போமோ நன்றியொடு பாவ வாரும் ஜெகத்தீரே. 82

ஜாதிப் பெருமைக் காதாரஞ் சாசு வதநி ராதாரம்
ஜாதிப் பெருமைக் கன்புமுற்றும் ஜந்மப் பகைசால் சத்துருவாம்
ஜாதிப் பெருமை தரும்பலன்கந் தகத்தீக் கடலிற் சார்துயரம்
ஜாதிப் பெருமை விடுத்தியேசு சரணை வணங்கும் ஜெகத்தீரே. 83

தருவொன் றுதவு கனிகள்பல சுவையைத் தருதல் சகஜமதோ
கருவொன் றினிலுற் பவித்தநர கணங்க டமிலே பலஜாதிப்
பிரிவொன் றிடுமோ வீணான பிடிவா தத்தாற் கெடுவானேன்
உருவொன் றியசற் குருநடைபார்த் துய்ய வாரும் ஜெகத்தீரே. 84

ஜாதி யிரண்டே யந்நியனைத் தனைப்போ னேசித் தாத்மார்த்த
போத மடைந்த புங்கவரே புனிதர் பிறரைப் புறக்கணித்துப்
பேத மியற்றிக் குலப்பிரமை பிடித்தோ ரீன ருமதுபிடி [85
வாதம் வேண்டாங் கிறிஸ்தியேசு மலர்த்தாள் வணங்கும் ஜெகத்தீரே.

வேத நெறியைக் கடைப்பிடித்து விசுவா சத்தாற் கிறிஸ்தியேசு
நாதற் றொழுதன் புடையோராய் நல்ல மனச்சா க்ஷியையடைந்து
கோதற் றொழுகிப் பரமபதங் கூடக் கருதிக் குழாங்கொண்ட
ஜாதி யொடுசேர்ந் திறைவனடி தனைப்போற் றிடுமின் ஜெகத்தீரே. 86

பண்டிவ் வுலகு பிரளயத்தாற் பாழா னதுஞ்சோ தோங்கொமரா
மண்டி யெரிகந் தகத்தீயின் மழையான் மண்மே டாகியதும்
மிண்டர் செய்த தீவினைக்கு விளைந்த பயனென் றுணர்கிலிரோ.
அண்டர் பெருமான் சீறுமுன மண்டிப் பிழைமின் ஜெகத்தீரே.87



அன்று பிரம னெழுதியவா றாமென் றுரைக்கு மறிவீனம்
என்று தொலையு நும்மைவிட்டிங் கெல்லா மிறைவன் செயலாயின்
நன்று தீதேன் மோக்ஷமதே னரகந் தானே னாஸ்திகராய்ப்
பொன்ற வேண்டாம் புண்ணியனைப் போற்ற வாரும் ஜெகத்தீரே. 88

இதயக் கதவைத் தாள்செறித்திட் டிகபோ கத்தி லிறுமாந்து
மதியற் றலகை நடித்திடமெய் மறந்து களித்து மகிழ்கின்றீர்
பதுமக் கரத்தாற் றட்டியெம்மான் பலகாற் பரிவோ டுமைக்கூவும்
மதுரக் குரல்வந் தெட்டலையோ வல்லே திறமின் ஜெகத்தீரே. 89

மதியைக் கெடுத்துப் பிரபஞ்ச மாய வலைக்குள் ளுமைமாட்டிக்
கொதியுற் றெழும்பு மெரிநரக கும்பிக் கிடவே கூலிசெயுஞ்
சதியைக் கருதி யவன்றொழும்பைத் தள்ளி யனுச்சஞ் சலமனுகாக்
கதியைக் கொடுக்கு மேசுதிருக் கழற்காட் படுமின் ஜெகத்தீரே. 90

விழிமின் மெய்வே தியரெனுங்குக்குடங்கள் விழித்து விளித்தனவால்
விழிமின் சுவிசே ஷக்கிரணம் வீசி யெழுந்தா னீதிரவி
விழிமின் விடியா நிசிவருமுன் விரைந்து செய்வ செயவேண்டும்
விழிமின் விழிமின் பவத்துயிலை விடுமின் விடுமின் ஜெகத்தீரே. 91

தள்ள வரிய நியாயமிது தானென் றுணர்ந்துஞ் சாதனையாய்
உள்ள மொன்றிங் குரையொன்றா யுரப்பி வாது புரியாமற்
கள்ள மறவே விதிவிலக்கைக் கருதிப் புரிந்து கருணைமிகும்
வள்ளற் குமையே கையளிக்க வாரும் வாரும் ஜெகத்தீரே. 92

தீங்கென் றொன்றை யறிந்தவுடன் செய்யே னென்று தேவாவி
ஓங்கு மருளைத் துணையாக்கொண் டுறுதி யாநிண் ணயம்பண்ணி
நீங்கா ததனி னிலைநின்று நெறிவிட் டயலில் விலகாமற்
றாங்கும் குமர குருசரணஞ் சார வாரும் ஜெகத்தீரே. 93

வேட மான பொய்ப்பத்தி வெயின்முன் மஞ்சட் பூச்சதுபோல்
ஓடுங் கணமு நில்லாதிங் குறுமோர் சிறிய சோதனையில்
தோட மலது துகளளவுஞ் சுகிர்த மிலையா லிருதயத்துள்
நாடி யெழுமெய்ப் பத்தியுட னம்பற் பரவும் ஜெகத்தீரே. 94

ஜீவ னெமக்குக் கிறிஸ்தியேசு தேக பந்தந் தீர்க்கவரு
சாவு மெமக்கா தாயமென்று சான்றோ ருலக சாலமெலாம்
மேவா வண்ணங் கடைப்பிடித்த விசுவா சத்தை விரைந்தறிந்து
சாவா முன்னச் சுதன்றிருத்தாள் சார வாரும் ஜெகத்தீரே. 95

அன்பு மயமாந் திருமேனி யருளுக் குறையுள் திருநயனம்
இன்பு தருமெய்ச் சஞ்சீவி யெழில்வாய் கனியுந் திருவாக்கு
மன்பூ வுலகுக் கஞ்சலென வழங்கு மபய வரதாஸ்தந் [96
துன்பே னுமக்கிவ் வெம்பெருமான் றுணைத்தா டொழுமின் ஜெகத்தீரே.

இரும்போ நெஞ்ச மின்னுந்தா னிளக விலையோ வீண்டுசற்றே
திரும்பிப் பாரு முமக்காக ஜீவன் கொடுத்த தியாகேசன்
பெரும்பா தையைவிட் டிடுக்கவழி பிரவே சியுங்கள் பிழைப்பிரென
விரும்பி யழைத்து வருகின்றார் விரைந்து வணங்கும் ஜெகத்தீரே. 97

ஜீவன் பிழைக்க மகவளித்த தேவே தந்தை தியாகேசன்
பாவ நிவிர்த்தித் துமைப்பரம பதத்திற் கூட்டுந் துணைபுனித
ஆவி சுருதி யமிழ்தூட்டு மன்னை மெய்வே தியருறவோர்
தேவ குடும்ப மிதைவிரைந்து சேர வாரும் ஜெகத்தீரே. 98

ஒன்று நினைமி னராத்துமங்க ளுர்த்த கதிசேர்ந் துயவேண்டின்
என்று மேசுக் கிறிஸ்துநல்கு மிரக்ஷண் ணியபுண் ணியபலத்தால்
அன்றி வேறு வழியிலையீ தனந்த தாஞ்சத் தியமதனால்
இன்றே யந்த விரக்ஷகனை யிறைஞ்ச வாரும் ஜெகத்தீரே. 99

ஏழை யடியோ முக்காக விரங்கி யிரக்ஷண் ணியகிரியை
தாழ்வின் றமைத்த திரியேக சர்வ ஜீவ தயாபரற்கே
ஊழி யூழி யிராஜ்ஜியமு முலவாக் கனமு முள்ளபடி
வாழி வாழி யென்றேத்தி வணங்க வாரும் ஜெகத்தீரே. 100

இரக்ஷணிய நவநீதப் படலம் முற்றிற்று.

## சிறைப்படு படலம்.

அத்தகு வேதிய ரான்ம ரக்ஷையின்
சத்தியந் திகழ்த்திய தகைமை சாற்றினும்
மத்தமா யாபுரி மாக்கண் மற்றவர்க்
குய்த்ததீக் கொடுஞ்சிறை யுரைத்து மேலரோ. 1

வெய்யமா யக்கடை வீதி வாய்ப்படு
மையிரு ளிரிதர மறைவ லாளர்தாம்
மெய்யொளி திகழ்த்தவும் வெகுளிக் காற்றாத்
தொய்யென வவித்ததவ் வொல்லை யென்பவே. 2



சீர்த்தபு பகைமுகில் செறிந்த வித்தையாம்
நீர்த்திரை முகந்தக நிரைத்து மேல்வெளி
போர்த்திடித் தூறிமண் புழுதி போக்கிவிண்
தூர்த்தன வசைமழை சொரிந்த தெங்குமே. 3

ஊக்கிய மதவகங் காரத் தொல்லென
தீக்கொடுஞ் சிகைக்கனல் சிந்தை தோறெழப்
போக்கரி தாய்த்திரண் டடர்த்துப் பொங்கியே
கூக்குரல் விளைத்தனர் கொள்ளை மாக்களே. 4

கூடினர் குழுமினர் கொக்க ரித்தனர்
ஓடின ருறுமின ருருட்டிப் பார்த்தனர்
சாடினர் மறித்தனர் தடுத்துக் கிட்டினார்
கோடினர் வலித்தனர் குரைத்திட் டாரரோ. 5

வைதவ ரெத்தனை மறவர் மண்மழை
பெய்தவ ரெத்தனை பிசாசர் கோரணி
செய்தவ ரெத்தனை தீயர் தீக்கணை
எய்தவ ரெத்தனை யிடும்ப ரென்கயான். 6

விலையுறு மாயசிற் றின்பம் வேட்டுழல்
புலையுறு மாந்தருட் பொருந்திற் றில்லையால்
கலையுறு ஞானியர் பகர்ந்த கட்டுரை
சிலையுறு பந்தெனத் திரும்பிற் றென்பவே. 7

மூண்டபே ரிரைச்சலு முடுகித் தத்தமில்
ஈண்டியோர் செறுத்தெதி ரிகலி யேற்பதுங்
காண்டகங் காடியின் றலைவன் கண்டுகேட்
டாண்டணுந் தளைமறி யாவிற் சீறியே. 8

பூரிய ருரையினைத் தேறிப் போந்துநீர்
ஆரிய ராயவிவ் வசட ரைப்பிணித்
தூரிய னீதியா திபனுக் குய்த்துநுங்
காரியந் திரப்படக் கழறு மினென்றான். 9

கலகமெங் கெனவரைக் கச்சை கட்டியங்
குலவிய மூர்க்கரவ் வுரைகொண் டொல்லையே
உலகையுள் ளுவர்த்திடு மொள்ளி யோர்தமை
வில்கறப் பாசமிட் டிறுக்கி வீக்கினர். 10

வெய்துற வடித்தனர் குருதி மேலிடப்
பொய்துறு வசைமொழி புகன்று போர்த்தனர்
மெய்திகழ் முகத்துமிழ்ந் துறுமி வீம்புற
வைதன ரவமதித் திகழ்ந்து வம்பரே. 11

இத்திற வின்னல்பற் பலவி யற்றிமெய்
உத்தம ரிருவரைக் கொடுசென் றேங்கிய
சித்திர நீதிமன் றணைந்து செவ்வியோய்
குத்திர மாயவர்த் தகர்நுங் கோற்குடி. 12

இங்கிவர் தமைமறு கெதிர்ந்து கண்டனம்
பங்கமில் சத்தியம் பகரு வாமென்
அங்கது தெரித்திரென் றவாவிக் கேட்டனர்
நங்களி லொருசிலர் நவிற்சி தேர்ந்தனம். 13

பொருவின்மா யாபுரிப் புகழும் பொற்புமெய்த்
திருவும்லௌ கீகசிற் றின்பச் செவ்வியும்
மருவிய வரம்பறு நிதியின் மாட்சியும்
பருவாற் படுகரிற் கவிழ்த்தும் பாலவாம். 14

கைப்படு காமியங் கருத்தி னீந்தருள்
மெய்ப்படு நந்தம்விக் கிரக தேவரும்
மைப்படு சமயநூன் மரபு மார்க்கமும்
பொய்ப்படு கெடுமுறைப் புன்மைத் தாயவாம். 15

கலைபொருள் புகழ்பலங் கவின்கொள் காத்திரங்
குலநல முதலிய யாவுங் குப்பையாம்
வலையன மனைமகார் மருங்கு வாழுநாள்
நிலையிலா நீரெழுத் தனைய நீரவாம். 16

இன்னவோ மநுக்குலத் தெவரு மீசனும்
பொன்னுல காளிசொற் போற்றி டாதுதந்
துன்னெறி யொழுகிய தூர்த்த ராமினி
மன்னுகோ பாக்கினி மழையும் பெய்யுமாம். 17

எத்திற முய்வெனி னிகல்செய் திக்குணங்
கைத்தழு துணர்வொடு கருணைக் கோமகன்
மெய்த்தொழும் பாய்விதி விலக்கை யோம்பிடின்
நித்திய ஜீவநன் னிலையு நேருமாம். 18



ஈதெலா முத்திநாட் டிறைவ னொப்பிடு
மேதகு விளம்பர மெனவிவ் வீம்பரே
போதனை செய்தனர் புரளி போர்த்தலின்
ஊதிய மிழந்ததெம் முலப்பில் வர்த்தகம். 19

மாயவர்த் தகத்துள மகிமை தேய்ந்தது
மேயவூ ரினும்பிரி வினையுண் டாயது
நாயகத் துவங்களி னூற்ற மிக்கன
ஆயகா மியமரு வருக்க லாயின. 20

பஞ்சபா தகத்தையும் பறக்க டிக்குநம்
மஞ்செழுத் தெட்டெழுத் தாற்ற லோர்கிலார்
நஞ்செய னுசத்தை நனிவி ளைக்குமென்
றஞ்சுறூ திகழ்ந்தெமை யவம தித்தனர். 21

ஆதலிற் றண்டனைக் கருக ரென்றியாம்
நீதியா சனத்தின்முன் னிறுவி னேமென
ஓதினு ருரத்துரத் துருத்துப் பன்முறை
சாதகத் திரளெனத் தறுக ணாளரே. 22

ஆங்கவ ருரைசுடு முகனென் றுசனத்
தோங்குநீ தாதிப னுரித்திற் கேட்டனன்
வீங்கிய வெகுளியின் வெதும்பி வேதியர்
பாங்குறத் திருமிமற் றினைய பன்னுவான். 23

உலகெலா மவமதித் தொழுகும் புந்தியீர்
கலககா ரணரெனக் கட்டுண் டெய்தினிர்
பலகலை பயின்றுபாழ் பட்ட தேகொலாம்
இலகுநன் மதியினி யுய்வ தெங்ஙனம். 24

தங்குமூர் யாதிவண் சார மூலமென்
எங்கணு சாரவே டத்தோ டேகுவீர்
இங்குவந் தித்துணைக் கலக மீட்டிய
நுங்கருத் தியாதது நுவலு வீரென்றான். 25

சுடுசினச் சுடுமுகன் சுடுசொற் சுட்டிட
அடுசினக் களிறனை யகிலத் தேபெயப்
படுசினக் கனன்மழைக் கஞ்சிப் பாவியேங்
கொடுசினத் தலைகைகூட் டுறவைக் கொள்கிலேம். 26

நிரந்தர நலம்புரி நிகில நித்திய
துரந்தரர் திருவடித் தொழும்பு பூண்டுளேம்
வரந்தரு சுருதிமார்க் கத்து வந்தனம்
புரந்தர நாடிய போது வேமரோ. 27

இங்ஙக ரிடைநெறி யெய்த வெய்தினேம்
மன்னுமா யக்கடை வர்த்த கக்குழாம்
என்னநும் விழைவுசத் தியமென் றேமது
பன்னுதி ரென்றனர் பகரக் கேட்டனர். 28

சம்பவ மிஃதிறை சான்று மற்றிது
வெம்புறு கலகத்தை விளைத்தற் கென்னினும்
எம்பிர யாணத்தைத் தடுத்தற் கென்னினும்
நம்புகா ரணங்கொலோ நாடு கையரீ. 29

கண்மயக் குறிற்பொருட் காட்சி காண்கில
எண்மயக் குறினெதிர் கேடு மெண்ணில
மண்மயக் குறினவர் மறுமை யாக்கத்தின்
உண்மையைத் தெரிவரோ வுலங்கொ டோளினாய். 30

என்றுமெய்க் கிறிஸ்தவ ரியம்பக் கேட்டனன்
கன்றிய சுடுமுகன் கடுஞ்சி னத்தனாய்
நன்றுநன் றுண்மையை நவின்ற பான்மைநம்
மன்றன்மா யாபுரி மரபை மாய்க்கவோ. 31

தீரயாந் தெளிந்தனஞ் சேண கர்க்கதி
தூரயாத் திரைசெலத் துணிந்து ளாரிவர்
காரியக் கெடுதிநங் கடைக்கு நேர்ந்தன
ஆரெனி னுந்நமக் காவ தென்கொலாம். 32

ஈங்கிவர் துணிந்திவ ணிசைத்த மாற்றமும்
பாங்குளீ ரறிந்தனிர் பகர்வ தென்னினி
நீங்கிடா வகைசிறைப் படுத்தும் நீதிமன்
ஓங்குநீ தாசனத் தறுமட் டாகவே. 33

ஆதலிற் றெருத்தொறு மடித்துக் காட்டியிப்
பேதையர் தமைச்சிறைப் பெய்மி னீரொரு
ஓதினன் சேவகர்க் குருத்து டன்றனர்
நீதிமன் றழையரா நிலவு நீசரே. 34



ஆண்டுநின் றகற்றிவை தடித்தி ரும்பியற்
கூண்டில்வல் விலங்குகால் கொளுவிப் பெய்தொரு
பாண்டிலிட் டிழுத்தனர் பரிவில் பாமரர்
காண்டகு கடிநக ரினைத்துக் காணவே. 35

இகழ்ந்துநிந் தனைசெயு மிடும்ப ரோர்புறம்
மகிழ்ந்துளங் களித்திடு மறவ ரோர்புறம்
நிகழ்ந்தது சிறிதெனு நீச ரோர்புறம்
புகழ்ந்துநீ தியைப்புனை புல்ல ரோர்புறம். 36

சத்தியங் கடைப்பிடித் தவர்க்குச் சார்வதோ
இத்தனை யிடுக்கணென் றேங்கு வாருளர்
அத்தலத் தாயினு மழிம்பர்க் கஞ்சியே
சித்தம்வைத் தொடுங்கிவாய் திறந்து செப்பிடார். 37

மாயவர்த் தகம்புரி மறுகிற் சேறலுங்
கூயினர் குதித்தனர் கொக்க ரித்தனர்
சீயெனப் புறக்கணித் திகழ்ச்சி செய்தனர்
பேயெனச் செருக்கிய பித்த ரென்பவே. 38

கலைத்தொழில் பயின்றவக் கள்வர் வாயினாற்
கொலைத்தொழிற் குரியர்செங் கோன்மை காட்டியிங்
கலைத்தலி லென்பய னடங்கு வார்கொலோ
புலைத்தொழிற் பதிதரென் றுருத்துப் பொங்கினார். 39

இன்னண நிகழ்வுழி யிகலில் வேதியர்
சொன்னசத் தியங்கடைப் பிடித்துத் துன்னகர்
மன்னியோர் சிலரெதிர் வந்து வாய்மதம்
என்னவா மிவர்திறத் தென்கொ லோபிழை. 40

பாவியர் தொகுதிரு வாண பட்டணங்
கோவணி பைத்திய னென்னுங் கொள்கைபோல்
ஆவணத் தழிம்பரு மறந்தி கழ்த்திய
ஜீவன்முத் தரையிகழ் செய்வர் செவ்விதே. 41

நிறந்துரூஉ மயிலென நிந்தை செய்குதிர்
திறந்திற மெத்தனை தீங்கி ழைக்குதிர்
மறந்தொரு கொடுமொழி வழுத்து வாரலர்
அறந்திறம் பாமையென் றறிகி லீர்கொலோ. 42

குறுமையீர் யாதுநுங் குறிப்புக் குற்றமோர்
சிறுமையு மியற்றிலர் தீங்கி யற்றுதிர்
வெறுமைகண் டவமதித் திடுதிர் வேதியர்
பொறுமையே யிப்புரம் பொடிக்குங் காண்டிரால். 43

இன்றுநந் தீங்கினுக் கிடர்செய் யாதிவர்
ஒன்றுநன் றுஞற்றலி னும்ப ரேயிவர்
நன்றுசெய் பவர்க்குயிர் நலிவு செய்யுநீர்
கொன்றுழல் விலங்கினுங் கொடியி ராமன்றே. 44

இத்தகு வனசில ரியம்பி நிற்கவும்
அத்தகு வனபல ரதட்டி யார்க்கவும்
மத்தமா யக்கடைத் தலைவன் மற்றிவை
உய்த்துணர்ந் துளமகிழ்ந் துலவு மெல்லையில். 45

பதிதருக் காநடுப் பரிந்து பேசிய
சதிசெயுங் கயவரைச் சமயங் காட்டிய
விதிதரு தண்டனை விதித்துந் தேர்கெனுப் 46
புதிதொரு விளம்பரம் புக்க தவ்வழி.

விளம்பரத் தொனிசெவி வெதுப்ப மெல்லென
உளம்பரிந் தொதுங்கின ருண்மை சொற்றவர்
வளம்படு மாயையின் வலவர் தொக்கமர்க் 47
களம்படு சிலைத்தெனக் கௌவை வீங்கிற்றே.

அலைபடு கடல்கிளர்ந் தனைய தாமெனப்
புலைபடு மானிடங் குழுமிப் பொங்கலிற்
சிலைபட வெங்கணுஞ் செலவு தீர்ந்துாய் 48
மலைபடக் கிடந்ததம் மாய வீதியே.

வெய்தினிற் காவலர் விரைந்து பற்றியீர்த்
தெய்தினர் வேதிய ரிருவ ரைக்கொடு
செய்திறம் யாவையுஞ் செய்து வெஞ்சிறைப் 49
பெய்தன ரொள்ளொளி பிறங்கு வாளின்வாய்.

உறையுறப் புகுந்திடு மொளிகொள் வாளெனக்
குறையறக் கனன்முகங் குளிக்கும் பொன்னெனப்
பொறையொடு முணர்வொடும் புகமொ டுங்கொடுஞ் 50
சிறையிடைக் கிடந்தனர் தெள்ளி யோர்களே.



நறைகமழ் சோலையை நயமின் மன்னவன்
முறைபிறழ் முன்றிலை முரண்கல் வாரியை
இறையக லாதுளத் தெண்ணு நீரரை 51
சிறைமறி துயரொது செய்யத் தக்கதே.

ஜீவர க்ஷணியமாச் சிறைபு குந்தினி
ஓவலி லானந்த போக முண்பதற்
காவலித் துடற்பொறை யற்ற நாடியோர் 52
நோவுறு சிறைத்துயர் நுனிக்கற் பாலரோ.

துன்புழந் தன்றியெட் டுணையின் பின்றெனு
மன்பதைக் கிகத்தியல் வரைந்த சாசனம்
நன்புலத் தாக்கிய நவையில் வேதியர்க் 53
கின்பிலுந் துன்பினி தென்று நாட்டமே.

## வேறு.

பருவரல் சுவைப்பா லுண்டி படர்கணீர் பருகும் பானம்
வருமவ மதிப்புப் பொற்பூண் வசைமொழி மதுர கீதம்
மருவுபூ வடுக்கு மெத்தை மௌனநித் திரைவண் செல்வத் 54
திருவரீண் மாடம் வெய்ய சிறைப்புறஞ் செவ்வி யோர்க்கே.

தள்ளருந் துயரஞ் சித்த சஞ்சலந் தாபந் துக்கம்
விள்ளருந் துன்ப மாய வேதனை யுழக்கும் போதும்
எள்ளரும் விசுவா சத்தோ டிரமியந் தழுவிப் பல்கால் 55
உள்ளுவர் தேத்திப் போற்றி ஜெபிப்பருன் னதத்தை நோக்கி.

உற்றமெய்க் குரவன் வாய்மை யுள்ளிமற் றெம்மின் முந்திக்
குற்றமில் குருதி சிந்திக் குவலயத் தொல்லை நீந்தி
முற்றுபே ரின்ப லோக முத்திவீ டடையத் தக்கான் 56
நற்றவ முடைய னென்று நச்சியேக் குறுவர் நல்லோர்.

கோறலுக் கிலக்காய் நேர்தல் குறிக்கொண்டு விசுவா சத்தின்
ஆறெழுக் கிழுக்கா வண்ண மருட்டுணை யெடுத்துப் பேசி
ஊறுமெய் யன்பி னாலே யொருவரை யொருவ ரூன்றித் 57
தேறுதல் புரிந்து சிந்தை தெருட்டுவர் திருவாக் கூட்டி.

நாடுவர் சருவ லோக நம்பனைக் கருணைப் பௌவத்
தாடுவர் தெவிட்டா வுண்டி யருந்துவ ராரக் கீதம்
பாடுவர் துதித்துப் போற்றிப் பவித்திர பதாம்பு ஜத்துச் 58
சூடுவ ரன்பிற் கட்டித் தொடுத்தபைந் துணர்த்தே வாரம்.

## தேவாரம், வேட்கையின் விதும்பல். (திருத்தாண்டகம்.)

1. அம்பரம திரியேகத் துவத்தொன் றாகியருட்டிருவாக் குருவாகி யகில மீன்ற
நம்பரனுக் கொருமகவாய் ஜீவ ருய்ய நடுநின்ற நாயகத்தை நயந்தெந் நாளும்
உம்பருல குவந்துதொழ மஹாதெய் வத்தை யொன்றான வூர்த்தகதி வழி
[யைக் காட்டி
இம்பருல கம்புரந்த வெம்பி ரானை யென்றுகொலோ கண்குளிரக் காணு நா
[ளே.

2. இல்லையொரு நாமநர ஜீவ ரக்ஷைக் கியேசுதிரு நாமமலா லிசத்தி லென்று
தொல்லைமறை முறையிடுபே ரின்ப வாழ்வைத் துரிசறநின் றிலங்குபரஞ்
[சோதி தன்னைப்
பொல்லையெனப் புறக்கணியா தெனையாட் கொண்ட பூரணபுண் ணியநி
[லையைப் புகழ்ச்சி யோங்கும்
எல்லையிலாப் பேரருளி னிருப்பை நாயே னென்றுகொலோ கண்குளிரக்
[காணு நாளே.

3. அருள்பழுத்த திருமுகமண் டலத்தி னானை யளிநிறைந்த கமலலோ சனத்
[தெம் மானைத்
தெருள்பழுத்த ஜீவமொழி கனிவா யானை ஜென்மவிடாய் தணித்தருள்சீர்
[பாதத் தானை
மருள்பழுத்த மனத்தேனைத் தெருட்டி னானை வான்கதிக்கு வழிதிறந்த வலத்
[தி னானை
இருள்பழுத்த நரகடைத்த வெம்பி ரானை யென்றுகொலோ கண்குளிரக்
[காணு நாளே.

4. மன்னுசுர கணங்கள்ஜெய ஜெயவென் றேத்தி வாழ்த்தெடுப்ப வீற்றிருந்த
[மகிமைத் தேவைப்
புன்னரகீ டங்களையோர் பொருளா யுன்னிப் புகலரிய பெரும்பாவப்
[பொறைசு மந்து
தன்னுயிரைப் பரிந்தளித்த மேசி யாவைச் சர்வபரித் தியாகனைமெய்த்தரும
[வாழ்வை
என்னுயிருக் குயிராயவீசன் றன்னை யென்றுகொலோ கண்குளிரக்காணு
[நாளே.

5. பன்னரிய பரமபத நாடு நீங்கிப் பவித்திரமாய்க் கன்னிமரி பால னாகிப்
பின்னர்விரத் துவம்பூண்டு ஞான தீக்ஷை பெற்றுவிதி விலக்கோம்பிச் சீட
[ருக்கு
நன்னெறியின் றுணிபுணர்த்தி யருளி னானை நரஜீவ தாரகனை நம்பன் சித்தம்
இந்நெறியா மெனத்தெரித்த விறைவன் றன்னை யென்றுகொலோ கண்கு
[ளிரக் காணு நாளே.



6. ஜென்மதரித் திரத்தழியாச் செல்வ மோங்கச் சிறுமையிலே மகிமைநலந்
[திகழ்ந்து தோன்ற
வன்மரணந் தனினின்று நித்ய ஜீவன் மல்கவரு ணீதிமுறை வழுவா
[வண்ணந்
தன்மவுரு வெடுத்தகும ரேசன் றன்னைத் தற்பரமா யகிலசரா சரங்க
[ளொன்றும்
இன்மையிலே தோற்றுவித்த வீசன் றன்னை யென்றுகொலோ கண்குளிரக்
[காணு நாளே.

7. அலகைதலை நசுக்கியபே ராற்ற லானை யவித்தையிரு ளறுத்தொளிர்மெய்ஞ்
[ஞானத் தானை
உலகமயக் கொழித்திரக்ஷை யுதவி னானை யுத்தமசற் குணத்தானை யுலப்பி
[லானை
விலகியுயி ருடலைவிடு மமையத் தெம்மை விலகாது விசுவாச விளக்கைத்
[தூண்டி
இலகுதிரு வடிநீழ லிருத்து வானை யென்றுகொலோ கண்குளிரக் காணு
[நாளே.

8. தம்மாவி யினைந்துபெருந் துயரந் தாங்கித் தண்ணறும்பூங் காவிலொருதனி
[யா மத்தில்
விம்மாவுள் ளுடையாநெட் டுயிர்ப்பு வீங்கி மெய்புழுங்கி வெங்குருதி
[வெயர்வைசிந்தி
அம்மானை விளித்திறைஞ்சி யலக்க ணுற்ற வருந்தவத்தின் பெருந்தகையை
[யருளின் வாழ்வை
எம்மாவிக் கினியானை யெய்தி நாயே னென்றுகொலோ கண்குளிரக்
[காணு நாளே.

9. பொல்லார்முன் முடிசூடிக் கோல்கொண் டோச்சப் பொழிகுருதி யுடன
னைப்பப் போதம் யாதும்
இல்லாமன் னவன் கொலைத்தீர்ப் பிசைந்து கூற வெருசலேந கர்கடந்து
[கொல்கதாவிற்
செல்லாநின் றருகிரண்டு திருடர் நாப்பண் சிலுவைமரத் தறையுண்டு
[செயன்மு டிந்த
தெல்லாமென் றுவிவிட்ட விறைவன் றன்னை யென்றுகொலோ கண்குளி
ரக் காணு நாளே.

10. தண்ணளியங் குரித்தெழும்பியன்புமூலந் தாரணிக்குள் ளூரூன்றித்தழைய
[ஊடாகி
நண்ணுமிரு தத்துவக்கோ டார்ந்து தூய நல்லுரையாந் தழைமல்கி நன்மை
[பூத்துப்
புண்ணியங்காய்த் தருள்பழுத்துப் பரமா னந்தப் புத்தமுதங் கனிந்துகதி
[பொருந்தி நிற்கும்
எண்ணருநித் தியஜீவ கற்ப கத்தை யென்றுகொலோ கண்குளிரக் காணு
[நாளே.

தேவாரம் முற்றிற்று.

சிறைப்படு படலம் முற்றிற்று.

## நிதானி கதிகூடு படலம்.

அவ்விய மவித்த சிந்தை யருந்தவ ரிவ்வா றுகத்
தவ்வியற சிறையை மேலாம் ஜெபதபப் பள்ளி யாக்கித்
திவ்விய வழிபா டாற்றிக் கழித்தனர் சிறிது திங்கள்
இவ்விய லறிந்தவ் வூர்சூழ் வினைத்திற மியம்ப லுற்றாம். 1

வேறு.

குத்திரப் புரியுலாங் கொடியவர்த் தககுழாம்
அத்தலத் தரசன்மா டணுகியா ரியர்தமக்
கெத்திறத் தினுமுயிர்க் கிறுதிசெய் திடவெமக்
குத்தரந் தருகென வூக்கினார் மூர்க்கமாய். 2

நன்றுசெய் குதுமென நவிலறப் பகையெனுங்
கன்றுவெஞ் சினமுகக் கரியனான் கடுகிநீர்
புன்றலைப் பதிதரைக் கொணர்கெனப் போக்கினான்
வன்றலைப் புலையராம் வயவரோர் சிலரையே. 3

ஈதலால் வேதியர்க் கெதிர்விரோ தக்கரி
ஓதுவா ரெவரவ ரொல்லையிங் குறவுடன்
வீதிதோ றும்பறை யறைகென விண்டுதான்
ஏதநீ தாசனத் தேறினான் சீறினான். 4

சுடுமுகத் துணைவனுந் துன்முகக் கபடனுங்
கடுவிடத் தகமுகக் கண்ணலாற் கண்ணிலா
நடுவர்பன் னிருவரு நரைதிரைக் கிழவருங்
கொடுமையின் குலமெனக் கூடினார் கேடினார். 5

கிழக்குமேற் கிலர்தமைக் கெடுவழித் தலைவிடுத்
துழக்கிலே கிழக்குமேற் குரைத்துரித் துளவெலாம்
வழக்கிலே யிழுக்கும்வீண் வாக்குரை யாயிகச்
சழக்கரும் வழக்கருந் தழுவினார் குழுமினார். 6

ஆரியப் பகைவர்தம் மாருயிர்க் கிறுதிசெய்
காரியப் பொறையொருங் கெமதெனக் கறுவிவெம்
பூரியப் புலமைதேர் பொய்க்கரித் திரள்குழீஇ
வீரியத் துடனவை விரவினார் காவினார். 7



கொடுவிடப் பற்களே குழுமியோ ரவருளங்
கடுவிடங் கெழுமுபை கவினுமண் டபநிலை
தொடுகடற் புடவியைத் தொல்லைவாய் வைத்தவப்
படுகொலைப் பாதகப் பாந்தள்வாய் முழையரோ. 8

துட்டவெம் புற்கணந் தொகுமுழைப் புதரின்வாய்ப்
பட்டமா னினமெனப் பருவரற் றலையொடுங்
கட்டுபா சத்தொடுங் கடியர்கொண் டுய்த்திடச்
சிட்டரோ ரிருவருங் குறுகினார் செவ்விதே. 9

அனையவோ லக்கமா வமையறப் பகைமுனம்
முனைவவிப் பதிதரெம் முதுகடைத் தெருவில்வந்
தினையதே சத்திய மென்றெடுத் தோதியெம்
வினைசிதைத் தார்ப்பிரி வினையுமுண் டாக்கினார். 10

உலகவின் பொழியுமென் றுள்ளுவர்த் துச்சிலர்
இலகுமா யச்சரக் கெதையுநா டாறுபோய்
விலகினார் வர்த்தகம் வீழ்ந்ததிம் மட்டுமோ
அலகையா திக்கமு மவமதிப் புற்றதால். 11

இருவர்மற் றிவரின்யா மேழையாத் திரிகராய்
மருவினன் றின்றெனின் மாயவர்த் தகமெலாந்
தெருவிலே வந்துசீ சியெனப் பட்டபின்
பெருகுகே டயலாற் பெறுதுமோ வூதியம். 12

இம்மறைக் கிழவர்கண் ணெதிருறும் பொழுதெலாம்
எம்முளத் தில்லவே யில்லையென் றுள்ளவோர்
செம்மனக் கரிமிகச் சினவிநின் றுயிர்செறும்
அம்மகூற் றுவரெனற் கையமொன் றின்றரோ. 13

கொற்றவா வோர்திகொல் லாதுகொல் லுங்கொலை
கற்றபா தகரிவர்க் கோறலே கடனெனச்
செற்றமல் கினமுறைப் பாடெலாந் தேர்ந்துமுன்
சொற்றனன் றுஷ்கிரு தப்பெயர்த் தூர்த்தனே. 14

சொன்னதுஷ் கிருதன்வாய் மொழிசெவித் தொளைபுக
நன்னிதா னன்னெறு நவையிலா னுங்கெழுந்
துன்னதா திபனெறிக் கொருவியோ ருறவுமற்
றிந்நகர்ச் சிலமு மருவருப் பெற்கரோ. 15

மாயசா லக்கடை மறுகுறு மரபும்வான்
தூயயாத் திரைசெலுந் துணிவுமோர்ந் தோர்சிலர்
சேயவன் மன்றிசெலத் திருமினு ரீதுநன்
றுயதே யன்றிமற் றுவதொ தீமையே. 16

பொன்கொலோ புவிபடும் பொருள்கொலோ யானையும்
மின்கொலோ விளிதவி னெனவெறுத் துளமெனின்
என்கொலா மிவர்தமக் கெம்மனோர் மேற்பகை
நன்கொலா தென்றுமே நாசயோ சனையினே. 17

உலகமா யச்செருக் கொல்லைநீத் துலகுளீர்
அலகையா திக்கம்விட் டகறலே நலமென
இலகுசத் தியமிசைத் தனமெடுத் திதுகொலாங்
கலககா ரணமெனக் கழறினன் கலைவலான். 18

ஒருகலை வழக்குநூ லொழுக்கினுஞ் செவ்விதாக்
கருதறப் பகையெனுங் கண்ணிலான் கறையிலாக்
குருதிசிந் திடவுளங் கொண்டபா தகன்முனஞ்
சுருதிநூற் றுறைவலான் சொற்பயன் படுவதோ. 19

வேறு.

மெய்ப்படுநி தானியுரை கேட்டலும்வெ குண்டே
மைப்படும னத்தரும வன்மியெனும் வஞ்சன்
கைப்படுமி வர்க்குறுக டும்பகையர் வந்து
பொய்ப்படுகி லாக்கரிபு கன்றிடுக வென்றான். 20

ஒல்லையொரு மூவரெதி ரூன்றிமுறை யாக
இல்லையொரு பொய்யுரையி சைப்பதெது மெய்யே
அல்லதுவி ழித்துணைய விந்திடுக வென்னாச்
சொல்வினர்த னித்தனிது ணிந்துபிர மாணம். 21

இப்பரிசு சத்தியமி சைத்தபினெ ரிப்பன்
தப்பிலிநி தானியிவ னென்றலைத கர்க்க
முப்பொழுது நாடுறுமு ழுப்பகைவன் மாயக்
குப்பையென வெள்ளுவனிக் கோனகர வாழ்வை. 22

தேசநடை யூர்நடைஜெ கத்துநடை யெல்லாம்
நாசநடை யென்றறின டக்குநடை கொள்ளான்
ஜேசுநடை நாடுநடை செவ்விநடை யொன்றே
ஈசனடை யேறுநடை யென்றுநடை கொள்வான். 23



எம்மதமு மெய்ம்மதமெ னத்துணிபி சைக்கும்
நம்மதமு மம்மதமு நாட்டுமதம் யாவுஞ்
சம்மதமி லாதுபர லோகபதி தந்த
தம்மதமெய் யென்றுபுகல் சாதுரிய தர்க்கன். 24

மாயபிர பஞ்சமக ராஜனைம திக்கான்
தேயமுறை யைத்தழுவு சீர்மைசிறி தில்லான்
மேயவுல கத்தவரொ ழுக்கினைவி ரும்பான்
ஆயகுல கோத்திரம றிந்துறவு செய்யான். 25

அண்டர்பெரு மானுலக டக்குநெறி யென்று
கண்டநெறி புக்கதுதன் னோடுகழி யாமே
விண்டலம்வி ழுத்தழலின் வேமுலக மென்னு
மண்டலமு ழுக்கவுமி ழுக்கமுயல் வம்பன். 26

மேன்மைதரு நஞ்சமய மெண்டிசைவி ளக்குங்
கோன்மைகுண தோஷமுறை யாமைபுகழ் கொண்ட
பான்மைமதி யாதுபடு பாவியரொன் றெள்ளும்
நோன்மையிலி மன்னுரிமை நோக்குகில னென்றான். 27

ஆயிடைய பத்தனும றப்பகைமுன் னின்று
நாயகவெ னைக்கனவி லுங்ஙனுக வொட்டாத்
தீயனக வாயிலறி யேன்பலதி றத்தும்
மாயநக ரத்தவரை வைதவம தித்தான். 28

வைதிகம தத்தபிர மாணமும வெல்லாம்
பொய்திகழு ரீரவவை போற்றியொழு கிற்பின்
மெய்திகழ்க கோளபதி மேலைநடு நாளில்
வெய்துநிலா யத்தெமைவி ழுத்துவது மெய்மை. 29

என்றினைய குற்றம்விவ ரித்தெமையி ழித்த
தொன்றலவ நேகவித சாபமுமு ரைத்தான்
நின்றவிநி தானியறி நிண்ணயமி தென்றான்
றுன்றிருள டைந்தமனை தோறுமுழல் தூர்த்தன். 30

காளவிட மன்னகடு நெஞ்சனது காலை
மூளனலெ னச்சினமு திர்ந்திறைவன் மொய்ம்பிற்
கேளனமு றப்பதித ரென்சொலின ரென்றுக்
கோளனைவி ளித்தறிவ கூறுகினி தென்றான். 31

மண்டலநி யாயநெறி வல்லதுரை ராஜ
கண்டகனி தானிபல காலுமுரை யாடி
விண்டபல தூஷணவி தங்கள்விவ ரிக்கின்
மண்டுமன வேதனையிம் மன்றுநவை மல்கும். 32

மன்னர்தில கன்பெயல்செ பூலையிவன் வைத
இன்னவென மன்றிடைது ணிந்தினிதி சைப்பின்
என்னிலப ராதிபிறர் யாவர்புக லெந்தாய்
உன்னமன மஞ்சுமுரை யுங்குழறு முண்மை. 33

மும்மலபி தாக்கள்சௌ பாக்கியர்வன் மோகர்
எம்மினவு லோபர்படு காமுகரி டம்பர்
இம்மகிப ராக்குடியெ மூப்பிவிடு வேனென்
றம்மசெயு நிந்தையுமி ழிம்புமள வின்றால். 34

என்னனைய ரோர்சிலரி சைந்துளமி ணங்கித்
தன்னொடுநன் றூனெறித னைத்தழுவி நிற்பின்
மன்னுபல மாயவள மல்கியிசை பெற்ற
இந்நகரி லாவகையி யற்றிடுவ லென்றான். 35

இப்பெரிய தேசமுழு தும்மிசைப ரப்பி
ஒப்பொருவ ரின்றிநடு வோதிமுறை செய்யுஞ்
செப்பமுடை யாயுனையுந் தேவபய மில்லாத்
தப்புடையை யென்றுபழி சாற்றினனி தானி. 36

இற்றிதமை யாவெனிலி சைப்பலினி தென்னாச்
செற்றமோட கங்கருகு தேளனைய கோளன்
சொற்றலும றப்பகைது லக்கினவி ளங்க
நிற்றியென நோக்கினனி தானியைநி கழ்த்தும். 37

தொல்லைமறை யைப்பழுது சொல்லியவ மாக்கும்
பொல்லைமத தூஷணியெ மர்ச்சைமுறை போற்றா
தெல்லையறு நிந்தனையி சைத்திழிவு செய்த
சொல்லையல கைக்குரிய ராஜ்ஜியது ரோகி. 38

இந்துணையை யென்றுகூரி யாயவரி சைத்த
சத்தியம றிந்தனைசு பைக்கெமதி ரக்கச்
சித்தநிலை நன்குதெரி யச்சினவி டாதே
உத்தாம ளித்தனமு ரைப்பதுரை யென்றான். 39



வேறு.

இலக்கணை நீதி மன்றத் தியற்கையு மியலு நீதிப்
புலக்கணைக் கெடுக்க நெஞ்ச புல்லறப் பகையின் போக்கும்
நிலக்கணக் காயு நீதி நிலவுநா ளென்கொ லோமென்
றலக்கணுற் றருணி தானி யமலனைப் பரவிச் சொல்வான். 40

இந்நகர்க் கரசே ஜீவர்க் கிகபர சாத னந்தான்
பொன்னகர்க் கரச னுய்த்த பொதுவிதி விலக்கத் தோடு
மன்னில வுலகத் தாட்சி மறுதலைத் தெனின்வை தீகச்
சென்னெறிக் குதவா தென்னச் செப்பிய துண்மை தேர்தி. 41

உத்தம தேவ பத்திக் குயிர்விசு வாச மாகும்
அத்தகு விசுவா சத்துக் கருளுயி ரருள்வந் தெய்த
மெய்த்தொழும் புரிமை யாகு மெய்த்தொழும் பாவ தெம்மான்
சித்தத்துக் கமையுஞ் செவ்வி சித்தத்தைத் தெரிக்கும் வேதம். 42

திருவச னத்துக் கொவ்வாத் தெய்விக வழிப்பா டெல்லாம்
பெருவழி பிடித்துச் செல்லும் பிரபஞ்சச் சேட்டை பேசின்
அருவருப் பாகுந் தேவ சித்தத்துக் காத லாலே
பொருவரு நித்திய ஜீவன். பொருந்தாதென் றதுவு முண்மை. 43

இந்நகர்க் கரசு மேவற் பரிசனர் குடிகள் யாரும்
பன்னரு மலபா தாலப் படுகர்புக் குறைவா ரன்றி
உன்னத பதத்தெம் மோடு மொருங்குபே ரின்பந் துய்த்து
மன்னுதற் குரிய ரல்ல ரென்றது மறுத வுண்மை. 44

சத்தியம் வினவி னார்க்குச் சாற்றிய விவற்றைத் தானே
வித்தரித் துரைத்தே னிந்த மெய்மைதூ ஷணமாங் கொல்லோ
இத்தகு முபநி யாசத் தேதொரு தவறுண் டென்னின்
உத்தம நியாயங் காட்டி யொறுத்திட றரும மென்றான். 45

நடுவிகந் தொருபாற் கோடி நச்சர வென்னச் சீறிப்
படுபொரு ளுணரா னுப பாதகப் பசாசன் முன்னர்
வடுவறு நிதானி நின்று வழக்கிடு மாபை யோரின்
தொடுகட லுலக வேந்தன் றுரும்பன்றோ துறவிக் கம்மா. 46

திருக்கிளர் ஞானச் செல்வன் செப்பிய சிதைவின் மாற்றம்
உருக்கிய செம்பி னாகிச் செவிவழி யுருவிப் புக்குக்
கருக்கிய சிந்தை யாள னறப்பகை சதங்கொண் டொல்லை
பொருக்கென வுரறிப் பொங்கி யினையன புகல லுற்றான். 47

தோமறு குணநி யாய துரந்தா ரேயிந் நின்ற
பாமரற் கெதிர்வி ரோதம் பகர்ந்தமெய்ச் சான்றும் பின்னர்
வேமெரிக் கிடையே யிட்ட விறகென விரவ[illegible] மில்லான்
கோமகற் கிழிவு காட்டிக கூறிய கூற்றுங் கேட்டீர். 48

ஆதிதொட் டலைகை ராஜ பரம்பரை யவனிக் குய்த்த
நீதியின் செயலு மிந்த நீணில வழக்குக் கொத்த
ஜாதியுஞ் சமயா சாரக் கொள்கையுந் தழுவி நின்ற
காதையு மாய்ந்து தீர்வை கழறுத லழகிற் றுமால். 49

பண்டெங்க ளரசற் கேவற் பணிபுரி பார்வோ னென்னுஞ்
சண்டனெம் மதவி ரோத தகுவரான் சிசுவை யெல்லாந்
தெண்டிரை யாற்றிற் பெய்து ஜீவனை. வதைத்த செய்கை
மண்டல மறியு மிந்த மாபைநீர் மறந்தி டாதீர். 50

நீணிலத் தரசு செய்த. நேபுகாத் நேச்சர் காலத்
தாணவச் சிலையைப் போற்று தழிபுற மதத்தர் தம்மைக்
கோணைவெங் நெருப்புச் சூளை குளித்திட வெறிந்த கொற்றஞ்
சேணுறப் புகுந்தும் பாரிற் றிகாந்தமட் டேலாய தின்னும். 51

தடங்கட லுலகம் போற்றத் தனிக்குடை நிழற்றி யாண்ட
மடங்கலே றனைய கொற்ற மன்னவன் றரியு வானைக்
கடங்கிடா மதவி ரோத வழிம்பனைப் பிணித்து வெய்ய
முடங்குளை வயவெஞ் சீய முழையிடைப் படுத்த தோர்மின். 52

இத்தகு பிரமா ணங்க ளெவற்றையு மீறி யாங்கள்
பத்திசெய் மார்க்கத் துள்ள பழுதெலாம் பாக்சத் தூற்றி
வித்தக நினைவால் வாக்காற் கிரியையால் விரோதஞ் செய்யுங்
குத்திரக் கலகி ராஜ துரோகியிக் கொடியன் காண்டிர். 53

ஏதமில் சான்றுக் கொத்த திங்கிவன் வாக்கு மூலம்
மேதையீ ரங்கை நெல்லிக் கனியென விளங்கிற் றெல்லாம்
ஆதலாற் குற்ற வாளி யென்பதற் கைய மின்றால்
ஓதுதிர் பேதி யாதும் முட்கருத் தென்றான் வெய்யோன். 54

கிள்ளைக்கு நீதி பூனை கிளந்திடக் கேட்டல் போலும்
புள்ளிமான் மறிக்கு நீதி புலிசொல வினவல் போலுந்
தெள்ளிய நிதானி சீர்மை தெரிந்துரைத் திடுக வென்றான்
உள்ளறப் பகைபொல் லாங்கி லுருப்புணர் நடுவர் தம்மை. 55



நனறெனத துணிந்தீ ராறு நடுவரு நடுவி னீதி
மன்றொரு சூழ லுற்று மடமதச் செருக்கு விஞ்சிப்
புன்றலைப் புலமைச் சூழ்ச்சி தத்தமிற் பொருந்தி வாளாக் 56
கொன்றிடத் துணிந்து நீதா சனிக்கிது கூற லுற்றார்.

வேறு.

எண்ணில்து ரோகம், பண்ணி[illegible] திதல் 57
திண்ணமி[illegible]ன்னைக் [illegible]ணணிலி சொன்னான்.

இன்றிவ னைத்தான், செ[illegible]ன்றுயிர் கோடி 58
என்றுது ணிந்தே, [illegible]னறிலி விண்டான்.

கடி[illegible]மு கத்தைப், படியில கற்ற 59
[illegible]நொடியினி தென்றான், கொடியகு ரோதி.

குறித்திவன் குற்றம், பொறுத்திட லாகா 60
ஒறுத்திடு கென்றான், கறுத்திடு காமி.

நாணிலி சிந்தை, கோணிகு லீனன் 61
பேணலை யென்னு, வீணன்வி ரித்தான்.

பிணியொடு மித்துர்க், குணிதலை கொய்யப் 62
பணிதரு கென்றான், துணிகர னென்பான்.

நீசனி வன்காற், காசுபெ றுனென் 63
யோசனை யென்றான், மாசுறு வம்பன்.

துரியநி லத்துக், குரியவ னிவனை 64
அரிசிர மென்றான், பெரியவி ரோதி.

வேறு.

மித்திர பேதம்வி ளைத்த, குத்திர னைக்கொலை செய்ய 65
எத்தனை யோசனை யென்றான், சத்துரு வாயச ழக்கன்.

வென்றிந டப்புரி வீர, இன்றிவ னைக்கழு வேற்றிப்
பொன்றவ தைப்பினும் போதா, தென்றுநிட் டூரனி சைத்தான். 66

மாநில முற்றும யக்கி, ஆனிவி ளைக்கும ழிம்பன்
மேனிசி தைக்கென விண்டான், ஈனனி ருட்பிரிய னென்பான். 67

சத்திய மென்றுரை தந்த, அத்தனை யும்பொய்ய பத்தம்
எத்தனை விட்டிட லென்றான், புத்தியி லாமுழுப் பொய்யன். 68

வேறு.

இன்னண நடுவர்பன் னிருவரு மொழிய
என்னொரு துணிபுமற் றிதுவென நுவலா
அன்னிலை பழுதக லறவனை யெதிர்கூய்ப்
பன்னின னறப்பகை படுகொலைத் தீர்ப்பு. 69

வேறு.

படுபொருளைத் தெரித்தியென வினவுதலிற் பரமார்த்த
வடுவறுநன் னிலையுரைத்த மாதவற்குக் கொலைத்தீர்ப்பு
நடுவிகந்து நவிற்றினவா னாசமுறு நடுமன்றங்
கொடுமையினுங் கொடுமையிது குவலயத்திக் கொடுங்கோன்மை. 70

குற்றவா ளியைப்பிணித்துக் கொலைத்தொழிலர் களத்தூக்க
மற்றிவனைத் தளைபூட்டிச் சிறைச்சாலை மடுத்திடுக
கொற்றவனா ணையினென்று கூறினான் கொடுங்கோன்மைப்
பெற்றியெலா நிலைநிறுத்தும் பிணக்குடைய குணக்கேடன். 71

சொன்னவுரை முடியாமுன் சுருதிநூல் வலவனைக்கொண்
டங்கியமர் சிறைச்சாலை யடைவிக்க வருந்தவனைக்
கொன்னுனைவாள் வயவீரர் கொலைக்களத்துக் கொடுசென்று
மன்னவனா ணையைப்புரிந்து தெரித்தாரம் மறவனுக்கே. 72

கொலைத்தீர்வைக் கொடுங்கூற்றங் குறுகிவெருட் டிடுபொழுதும்
அலைத்தீர்த்து விசித்தியாக்கை யரிந்தழலிற் பெய்பொழுதுஞ்
சிலைத்துமில னொருமாற்றம் ஜேசுதிரு வடித்தொழும்பின்
நிலைத்தருமங் கடைப்பிடித்து நித்தியஜீ வனைக்கருதி. 73

புற்புதநீ ருடற்பொறையைப் பூதூளி யிடைவிழுத்தி
அற்புதமெய் விசுவாசி யான்மநித்தி யானந்த
சிற்பரம ராஜ்ஜியத்தின் ஜேசுதிரு வடிநீழற்
பொற்புறவீற் றிருந்ததுவாற் புத்தேளிர் கணமுவப்ப. 74

அஞ்ஞான விருளடைந்த வகத்தேமெய் யொளியலர
மெய்ஞ்ஞான விசுவாச விளக்கேற்றி யணையாது
பொய்ஞ்ஞானப் பொறிசெறித்துப் புநருலகம் புகுமட்டும்
சுஞ்ஞான நிலைகாக்குந் தூயாவி நலம்வாழி. 75

நிதானி கதிகூடு படலம் முற்றிற்று.

நிதானபருவம் கவி, 803.

# இரக்ஷணிய யாத்திரிகம்.

## நான்காவது: ஆரணியபருவம்.

### நம்பிக்கை நன்னெறிபிடித்த படலம்.

முத்தி கூடிய வருந்தவன் பத்தியின் மொய்ம்புஞ்
சுத்த மெய்விசு வாசமுஞ் சுகுணமுந் துகளில்
வித்த கக்கலை ஞானமுந் தீரமு மிளிர
எத்தி றத்தரும் விதந்துரை யாடின ரெங்கும். 1

மாய சூனிய வர்த்தகக் குழுக்கள்யாம் வதைத்த
தூயன் றாயசெங் குருதியின் கூக்குரல் சுடர்வான்
தோயின் வெங்கனல் சொரிந்திவூ ருஞ்சுடு காடாய்த்
தீயு மென்செய்தே மென்றகங் கலங்கினர் திகைத்து. 2

புகரி லாவொரு புனிதனை வதைத்துயிர் போக்கி
நிகரி லாப்பழி சுமந்தன ரிந்நகர் நீசர்
ககன வேந்தொரு கணத்திடைக் கவிழ்ப்பர்மற் றென்னாப்
பகரும் ஜீவசான் றகப்பறை முழக்கியார்ப் பரித்தான். 3

அனைய சத்தமுற் றாய்ந்தன னந்நகர் மாயம்
புனையு மாவணத் தொருசிறை வர்த்தகம் புரிந்து
மனைநி ரம்பிய வாழ்க்கையன் வஞ்சனை மலிந்த
வினைய னம்பிக்கை யெனப்பெயர் பெற்றிடு வெய்யோன். 4

ஜீவ சாக்ஷியி னல்லுரை செவிமடுத் திடலும்
ஆவ தென்னினிச் செய்வலென் றாவியிற் கலங்கித்
தேவ வெஞ்சினந் தணிப்பதோ செய்யுநற் கருமங்
கூவ னீர்குளிர்ப் பிக்குங்கொல் வாரிதி கொதிக்கின். 5

பழுதில் வேதியர் பகர்ந்தசத் தியத்தொடு பழகி
முழுது நன்னடை திருந்திய முறைமையென் னுளத்தில்
எழுதி யாயதவ் வுண்மையைக் கடைப்பிடித் திலனேற்
கழுது மல்குபா தலமலாற் பிறிதுண்டோ கதியே. 6

துட்ட வல்வினைத் தொடர்பெலா மெவ்வணந் தொலையும்
இட்ட காமியச் சுவையெலா மெவ்வணம் விடுப்பல்
செட்டு வர்த்தகஞ் செல்லுமோ நன்னெறி சேரின்
நட்ட மாகுமே யென்றுளங் கவன்றன னலிந்தான். 7

இனைய தன்மைய னாகியே காந்தமுற் றிருந்தே
நினைவி னேங்கிய ஜீவசா க்ஷியையெதிர் நிறுவிப்
புனையு நன்மொழி யாற்பிழை பொறுக்கெனப் புகன்றீண்
டெனைய றிந்தனை யியம்புதி மதியெனக் கென்றான். 8

## வேறு.

நம்பி நல்லுரை நன்றென நன்மனச் சாக்ஷி
எம்பி யாமிரு வேமல மொன்றுபட் டென்றும்
இம்பர் மெய்ப்புரு டார்த்தமி யற்றுவ மென்னில்
உம்ப ருற்றழி யாநல முண்ணுவ மோர்தி. 9

நன்று தீதுந விற்றுத லென்கட னாடி
நன்று ளூற்றின்வ ரும்பய னுண்ணுவ னானும்
நன்றி கந்தனை யேல்வரு துர்ப்பய னண்ணேன்
நன்று கூறியு மீறினை யாதலி னண்ப. 10

ஆதி தொட்டென ருங்கட னாற்றிய வென்னை
ஏதி லானென வெள்ளினை யென்மதி கொள்ளாய்
நீதி யுற்றநெ றிபிடித் தாயலை நீசப்
பாதை பற்றினை பாவிய ரோடுற வாடி. 11

புனித ராயபு ரந்தர வேந்தினைப் போற்றாய்
மனிதர் கைப்படு மர்ச்சையைப் போற்றுதி வாளா
நனிதி கழ்ந்திடு நல்லற நச்சிலை நாளுந்
துனிதி கழ்ந்திடு தீவினை யீட்டுதி தோழ. 12

உற்ப வந்தொட்டி மட்டுமு வந்துண வாதி
அற்பி னல்கிய றிவளித் தாரிடர் போக்கி
நிற்பு ரந்தநி ருமல வேந்தைநி னைத்துப்
பொற்பி னன்றிபு ரிந்திலை பேயடி பூண்டாய். 13



பொய்தி ருட்டுநி யாயம்பொ றாமைபொல் லாங்கு
கைத வந்தந்தி ரங்கொடுஞ் சூதுவன் கண்மை
வெய்தி னையவி னைத்திற முள்ளன வேட்டுச்
செய்து தீவிடம் ஜீவனுக் கீட்டினை தீயோய். 14

தூய ஞானஞ்சு கிர்தஞ்சு சீலமி வற்றால்
ஆய செல்வம டைந்திலை யாலநி கர்க்கும்
மாய சூனிய வஞ்சக வர்த்தகம் பேணித்
தீய செல்வந்தி ரு(த்)தினை சிந்தனை யில்லாய். 15

வஞ்ச மாதிய துர்க்குண மேமனை மக்கள்
பஞ்ச பாதக மாதிபஞ் சாமிர்த பானம்
விஞ்சு பொய்முத லாயவை மெய்யணி சாந்தம்
அஞ்சு கின்றிலை தீமடி பேணுதி யந்தோ. 16

முன்னம் வேதியர் பன்முறை மோசத்தைக் காட்டிச்
சொன்ன நன்மதி கொள்ளலை தூயநல் லாவி
உன்ன கத்துமல் லாடிய தோர்கிலை யொன்றும்
என்னை யும்பகை யாக்கினை யேமதி யில்லாய். 17

ஈண்டு தொண்டனுக் கீட்டிய விம்சையும் யாக்கை
கீண்ட ரிந்தழ லுக்கிரை யாக்கிய கேடுங்
காண்ட விற்கவல் கிற்றிசின் னாட்படக் காணாய்
மூண்ட வித்தகு சிந்தனை காணுவை மோசம். 18

இற்றி தோரலை நீரெழுத் தியாக்கையென் றெண்ணாய்
சுற்ற நட்புரி மைத்திறம் யாவுநிற் சூழ்ந்து
பற்று மாயவ லைத்தொட ரென்பதும் பாராய்
நிற்றி மோசப்ப டுகரி னூனெறி நோராய். 19

உள்ளி னையவு ணர்ச்சிமற் றுன்னத ராஜன்
நள்ளி ரக்ஷணை நல்கிடு நல்லடை யாளம்
வள்ள லாருண் மல்கிய மாண்புறு வைகல்
எள்ளு வாயலை யீதுன்னி ரக்ஷணை நன்னாள். 20

நிண்ண யந்தெரி ரக்ஷணி யநவ நீதம்
உண்ணி லாத்தும தாபித நோயொருங் கோடும்
நண்ணு மெய்ப்பர மானந்த சிற்சுக நம்பி
புண்ணி யன்பொற்றி ருவடிச் சூழலிற் போதி. 21

எத்து ணைப்பெரும் பாவிய ராயினு மெள்ளா
வித்த கக்கும ரேசனை மெய்விசு வாசப்
பத்தி யாயிறு மட்டும்ப ராவுதி யென்னின்
முத்தி வீடுபு குந்தனை முத்தனு மாளுய். 22

ஆயு ளெல்லைய றிந்தில மாதலின் முன்னே
மாய வாழ்வைவ ளாந்தகம் மானைமன் றூடித்
தூய வாவிது ணைக்கொடு நன்னெறி துன்னென்
றூய சொன்மதி விண்டன னந்தரங் கத்தில். 23

ஜீவ சாக்ஷிதெ ருட்டுசெஞ் சொல்லமு தத்தை
ஜீவ பாதைக்குத் திவ்விய போனக மாக்கி
ஜீவ நாடியு யிர்த்தகல் லோரையின் செவ்வி
ஜீவ பாதைசெல் வான்மனங் கொண்டனன் செய்யோன். 24

பழியும் பாவமு மல்குமிவ் வூரினிப் பாழ்பட்
டொழியு மென்பதற் கெட்டுணை யையமொன் றில்லை
அழிவி லாதசீ யோன்மலைத் தேசத்தை யாக்கும்
வழியை நாடுவல் யானென வுள்ளம்வ லித்தான். 25

தெருளுஞ் சிந்தையின் முந்துறு தெய்விக வேந்தன்
அருளு மார்ந்துர மாக்கலி ளுக்கிய வெல்லாப்
பொருளுங் காதல்வ ருக்கமும் போற்றிய புந்தி
மருளும் போக்கிநம் பிக்கைமெய்ந் நூல்வழி வந்தான். 26

முப்ப ரம்பொரு ளாயவோர் புண்ணிய மூர்த்தி
துப்பு றழ்ந்ததி ருவடிச் சூழலை நாடி
இப்பு விப்படு மீடணை யாவுமி கத்துக்
குப்பை யாயுவர்த் தேகினன் கோன்முறை கொண்டு. 27

எரிவி ழுந்திக்க டிநகர் நீறிடு மெல்லை
உரிய தன்மனை மக்களு மொக்கலும் வெந்து
கரிவ ரேயென வேங்கியு யிர்த்தழு கண்ணீர்
சொரிய நின்றுது டித்தன னங்கொரு சூழல். 28

இருவ கைப்பற்றி னூழ்ந்தவெ னைக்களை யேற்றத்
திருவு ளத்தருள் பூத்ததி ரித்துவ தெய்வம்
பொருவு றுங்கரு ணைக்கட லாதலிற் பொன்று
தருள்வ ரங்கவர்க் கும்மெனத் தேறின னூறி. 29



கருவிற் செய்கையி னுயவெந் தீவினைக் கள்வன்
பெருவ ழித்தலை பேய்பிடித் தோடிய பித்தன்
ஒருவ ருமிலர் பாவிய ரில்லெனை யொப்பார்
திருவ ருட்டுணை யாயதென் னென்றுதி கைத்தான். 30

எண்ணி னெத்தனை யாச்சரி யம்மிஃ தென்று
நிண்ண யத்தொடி ராப்பக லோரிடை நில்லான்
கண்ணு றக்கமற் றோர்தனி யாய்நெறி கண்டு
புண்ணி யக்கும ரேசனை வாழ்த்தினன் போனுன். 31

நம்பிக்கை நன்னெறிபிடித்த படலம் முற்றிற்று.

---

## கிறிஸ்தவன் கதிவழிகூடிய படலம்.

---

கதிபு குந்தமெய்ந் நிதானியின் கொலைக்களங் கண்டு
புதிய நம்பிக்கை தெருண்டுநன் னூல்வழி போந்த
அதிச யத்தையாய்ந் தானந்த பரவச மடைந்து
முதிய வேதிய னிலையினை நாடுவான் முயன்றேன். 1

சென்று கூடினன் யான்சிறைச் சாலையைத் திருமி
நின்று கண்டனெ னிடையறுக் கனவுறு நினைவில்
மன்ற னுயகன் றிருவருண் மாட்சியென் றுணர்ந்துந்
தன்று ணைப்பிரி வாலகந் தளர்ந்தனன் சதுரன். 2

புணையி ழுந்துநீர் நிலையுழல் வாரெனப் [illegible]
றிணையி ழுந்தமா னினமெனக் [illegible]கமுற் றினைந்தும்
அணைக டந்தநீ ரழினும்[illegible] ராதென வாறி
உணைவு நீங்கின[illegible] றிருவருட் பலங்கொண்ட வுரவோன். 3

மாய் வா[illegible]ப்பெருங் கருணைமன் வரப்பிர சாத
[illegible]று பெற்று[illegible] யாபுரி வெங்கொடு வினையின்
தூற டர்ந்தமா யச்[illegible] [illegible]யர்க்கட லொருவி
ஏறி னுன்கதிக் கரைவழி யிகல்கடந் தெளிதில். 4

வழுவி னூனெறி கூடிய வருண்மறை வாணன்
உழுவ லன்பொடு முளங்கனிந் தருட்டிற முன்னித்
தொழுவன் பன்முறை தோத்திரம் புரிந்துமன் றூடி 5
அழுவ னின்னுமோர் வழித்துணை யமையுங்கொ லென்

இனைய சீலனு வேதிய னிரவுநண் பகலுந்
துணைவி னூல்வழி துருவிட வாங்கொரு சூழல்
அனைய னைந்தவான் கன்றென நம்பிக்கை யடுத்து
வினைய மோடுகை கூப்பிநின் றினையன விளம்பும்: 6

ஐய வையவென் னுருயிர்க் காருயி ரனையாய்
பொய்ய ளைந்தவிப் புலைக்குடி லோம்பிய புலையேன்
வெய்ய மும்மலச் சேட்டையின் விழுமநோய் துடைத்தீண்
டுய்யு நன்மதி யொண்மருந் தூட்டினை யுரவோய். 7

விண்ண டைந்தவவ் விடலையும் வேதிய நீயுங்
கண்ண கன்றமா யாபுரிக் கடைமறு கணைந்து
புண்ணி யச்சுவி சேஷமான் மியமழை பொழிகால்
அண்ணல் சத்திய முளைத்ததென் னகத்தினி லறவோய். 8

இருவிர் தங்குண சீலமு மொழுக்கமு மிறுமட்
டொருவ ரும்விசு வாசமு மூக்கமும் பொறையின்
அருமை யுங்கண்டு கேட்டலி னடியனே னுள்ளந்
திருமி மெய்வழிப் பட்டதா லருட்செயல் செய்யோய். 9

பொருளின் செல்வமும் பூதலத் துரிமையும் போக்கி
அருளின் செல்வமெற் காக்கினை யகத்துணர் வெழுப்பி
மருள றுத்தனை மற்றிதற் கியற்றுகைம் மாறு
தெருளும் புந்தியோய் தெரிகிலே னுளதென ஜெகத்தில். 10

குரவ னும்பு[illegible]தாய் தந்தையுங் கோமான்
புரவு நூனெறித் துணைவ[illegible] பொன்றுநா ளளவும்
உரவு நீர்நிலத் துணையலாற் [illegible]லை னுண்மை
கரவி லோயெனைத் தெருட்டுத லின்கட[illegible] கா[illegible]. 11

ஏக நின்றநீ னெறிக்கிரு வேருமிங் கிணங்கி
மாக நாடடை காறும்யாம் வழித்துணை யிசைந்து
போக வுன்னினன் றிருவருள் கூட்டிய புதுமை
ஆக நேர்ந்தன மீண்டென வுரைத்தன னறிஞன். 12

[illegible]வன் முத்தனன் னம்பிக்கை தெருளுறை திகழ்ந்த
[illegible]நவ பத்தியுஞ் சற்குண சீலமுந் தெளிவுந்
[illegible]ரும்பா மார்த்தமுஞ் சமைந்தநன் னிதானி
[illegible]லிவ னென்றகத் தன்னுவா றுறன். 13



நித்த சத்தியந் தெரித்துயிர் விடுத்துநீ ருய
வித்த கத்தெழி னிதானியே வெந்தசாம் பரினின்
றித்த லத்துயிர்த் தெழுந்துவந் தனன்கொலோ வெனது
சித்த வெண்ணமே யெதிருறீஇத் திகழ்வது கொல்லோ. 14

உன்ன வேறில னுன்னத கிருபைமே லுய்த்த
என்ன கத்துநம் பிக்கையை யெனக்கெதிர் திகழ்த்தி
நன்னெ றித்துணை யாக்கினர் நம்பிரா னென்னுத்
தன்ன கத்துளஞ் சலித்துவந் தினையன சாற்றும். 15

நம்பி நல்வர வாருக நல்வழி திகழ்த்தி
இம்ப ரான்மவி டேற்றத்தி னிசைத்திட லெல்லாம்
உம்பர் தம்பிரான் றிருவருண் மாட்சியென் றுணர்தி
வெம்பு தீவினைக் கீட்டுத லலகைசெய் வினையால். 16

அனைய தாதலி னகிலலோ காதிபன் றொழும்பர்
வனையு நல்வினைக் கருவியாய் மகிதலத் துலவி
வினையி யற்றுவர் கருவியின் றுகியும் வேந்தன்
நினைய வாயின சராசர நிகிலலோ கங்கள். 17

ஆட்டி னூலன்றி யாடுமோ பம்பர மருள்வந்
தீட்டி னூலன்றித் தீவினைத் தொடாறுத் தீர்த்துக்
கூட்டு வார்கொலோ ஜீவரைக் கதிவழி கூறிக்
காட்டு வேதியர் சொற்பயில் கிள்ளையைக் கடுப்ப. 18

பொருண யந்தெரி யேம்புலை வினைபுரி பொல்லேம்
இருண யந்தெரி பாதலக் கிடங்கரு கிருந்தேம்
அருண யந்தெமைப் பிடித்திழுத் திவ்வழி யாக்கக்
கருணை யங்கடல் வளாகத்துக் கதிகடைப் பிடித்தேம். 19

முற்று மெம்மிடர் கடிபவர் மூத்திரா டாளுங்
கொற்ற வன்னவர் திருவருட் பேற்றினைக் குறிக்கொண்
டுற்று நோக்கிநன் னெறிபிச காதொரு மித்து
நற்ற வம்பயில் வாங்கடை காறுநம் பிக்காய். 20

ஊனு நல்லுயி ரும்மென வொன்றுபட் டின்று
நானு நீயும[illegible]லையென நட்டன னுன்னை
வானும் வையமுஞ் சான்ம[illegible]னுரைத்தனன் மதுரத்
தேனும் பாலுமொன் றுயசெஞ் சொன[illegible]ணன். 21

எந்தை சொற்றதே யமையுமா யினுமெனக் கினிநீ
தந்தை யானுனக் கொருசிறு தனையனாந் தயைகூர்
அந்த ணாளநீ யென்னெஜ மானன்யா னடியன்
சொந்த நிற்கெனப் பகர்ந்தனன் றாயகம் பிக்கை. 22

எள்ள ருங்குணத் திருவரு மிவ்வண மாக
நள்ளி ரக்ஷணை நல்வழி பிடித்துட னடந்தார்
தெள்ளு ஞானமு முணர்ச்சியுஞ் சேர்ந்தன வனையார்
உள்ளு மெய்விசு வாசமு மொழுக்கமு மொப்பார். 23

ஊன்மு திர்ந்துவீ ழுடற்சுக போகத்தை யுவர்த்துத்
தேன்மு கந்துணும் வண்டெனச் சிந்தனைக் கினிய
நூன்மு கந்தெடுத் தநுபவ முதிர்ச்சியை நோக்கி
ஆன்ம ஞானசம் பாஷணை யருந்தியே குவரால். 24

இருவ ரிப்பரி சேகுழி யகந்தையி னிறுமாந்
தொருவன் வெள்ளிய செருப்படி யுண்டவ னுலவி
வருவ தாகிய செயலறிந் தருந்தவ மறையோன்
திருவி னாயுனைத் தெரியுமா றிவைதெரிக் கென்னா. 25

எங்கு ளாய்பெய ரென்கொலா மெத்தொழி லுடையை
மங்க லம்புனை மனைமகா ருளர்கொலோ மரபின்
றங்கு லத்தவர் யாரெங்கு சேறியுன் னோக்கென்
சங்கை தீர்விடை தருகென வினவினான் சதுரன். 26

கேட்டி யுத்தரங் கிளக்குவல் கிளர்பெருஞ் செல்வம்
ஈட்டு மிச்சக தேசமே யென்ஜெந்ம தேசம்
நாட்டி லுள்ளவர் தன்னய னெனவொரு நாமஞ்
சூட்டி னார்தொழி லெவ்வகை யினும்பொரு டொகுத்தல். 27

போலி யென்றொரு துரைச்சியின் புத்திரி காமி
தாலி கட்டிய மனையவ டனையருல் லாச
வாலி பக்குணத் தாலெனை மதிக்கிலர் மனையாள்
சீல மும்பலர் காமிக்கு நடையுடைச் செல்வி. 28

இச்ச கன்சம ரசனிரு முகனிவ ரென்றாய்
மச்ச ளாக்குடன் பிறந்தவ ரவர்க்கியான் மருகன்
குச்சி தன்பக்க மாறிவீண் முகாக்கிடாம் பீகன்
நச்சு வாக்கின றியரெமர் நனிநிதி படைத்தோர். 29



வாக்கு விஞ்சிரு நாக்கனென் பவன்மறை யோதிக்
கூக்கு ரற்படுத் ததிகப்ர சங்கியாங் குருக்கள்
மீக்கி ளர்ந்தபே ராசையால் வேதியர் வேடத்
தீக்கை பெற்றனன் யானவற் குண்மையாஞ் சீடன். 30

இத்த லத்துவாழ் வினாக்கிடை யூறொன்று மின்றி
ஒத்து வந்தமட் டொள்ளியோய் முத்திநா டுறுமிப்
பத்தி மார்க்கத்துப் படர்குவல் பருவர லாதி
தத்து மேலிடி னேர்வழி விலகிப்பின் சார்வல். 31

என்றிவ் வாறுதன் னயன்விதந் துரைத்தலு மெழில்கூர்
மன்றல் வேதிய னுண்மையே யுரைத்தனை மதிக்கின்
நன்ற றிந்தன னுன்னிலை யாவையு நயந்தீண்
டொன்று கூறுவல் கேட்டியென் றுரைத்தன்மே யினனால். 32

பத்தி வேடங்கொண் டயலுளார் மருண்டிடப் பகட்டி
எத்தி நீசமட் பொருட்குவை யீட்டுத லிழிவாங்
குத்தி ரக்கொடு வினையுமாங் குறித்திடிற் கொடியோய்
எத்தி றத்தினுங் கேடுகா ணிகபரத் தெவர்க்கும். 33

குறித்துக் கோனகர் வழிப்படிற் குளிர்பனி வெயிலான்
மறித்த சண்டமா ருதத்தினால் வலியநீர்ப் பெருக்காற்
செறித்த பல்பெரு மோசத்தாற் றியங்கிடா துயிரை
வெறுத்து முன்னெறி யூன்றிடு மெய்ப்பத்தி வேண்டும். 34

களங்க மற்றமெய்ப் பத்தியோ டுழைத்திடிற் ககன
வளங்கொண் முத்தியுந் திருவருட் பயத்தினால் வாய்க்கும்
உளங்கொ ளாப்பத்தி வேடத்தா லுறுநர கென்றே
விளங்க மெய்ம்மறை யோவிடு மிடந்தொறும் விளித்தே. 35

இத்த குந்தெய்வ பத்தியோ டெத்துயர் வரினுஞ்
சித்த சஞ்சல மடைந்திடர்ப் படாதெதிர் செறுத்துன்
மத்த சிந்தனை வரைந்துடன் வருதியேல் வருக
ஒத்தி டாதெனி னுவந்தசெய் யெனவெதிர்த் துரைத்தான். 36

மலநு கர்ந்துழல் சூகரம் வான்சுவைக் கரும்பின்
நலம்வி ழைந்திடா வாறுபோ னச்சுல கத்துப்
புலையின் பந்நுகர் பொறியிலி பொருவில்பே ரின்ப
நிலைவி ழைந்திடா தேகினன் றனிதுணை நேடி. 37

உலகன் காமுகன் பேயனென் போருயர் குலத்துத்
திலக ரென்றகஞ் செருக்கியோர் தன்னய னோடும்
அலகி லாதவா தாயவா ரியிலறப் படித்த
பலக றைப்படு லோபிபாற் பணக்கலை பயின்றோர். 38

பலவந் தம்படு தந்திர மிச்சகம் பத்தி
குலவு வேடமென் றிவற்றினாற் பொருட்கொள்ளை கொள்ளும்
வலவர் தன்னயன் வரவுகண் டவனொடு மகிழ்ந்து
சலக லத்தன ரிருவர்முன் கதித்திடல் கண்டார். 39

ஆய காலையிற் றன்னய னருகணைந் தைய
தூயர் போலிரு துறவிக டணிந்துமுன் செல்வார்
நீய ரிந்தனை யெனினவர் நிலைநிகழ்த் தென்றான்
பேய னம்பணப் பிரியன்றன் னயனிது பேசும். 40

முன்செ லும்பர தேசிகள் சுருதிநூன் மொழியைப்
பொன்சொ லாமெனப் போற்றுவர் பிறவுரை போற்றார்.
என்சொன் னாலுந்தஞ் சொற்பிடி வாதத்தை யிகவார்
இன்சொற் கண்டிதத் தெனையவ மதித்தன ரென்றான். 41

கருதி வந்தபே ராசையாங் காமுகன் கடுகிச்
சுருதி நீதிய ருலகநீ தியர்தமைத் துணிவுற்
றொருதி றத்தினு மவமதித் துரைத்திட லொழுக்கன்
றிருதி றத்தநும் மிடையென்கொல் விகற்பமற் றென்றான். 42

எம்பி கேளவ ரெத்துய ரினும்வழி யிகவார்
வெம்பி ரும்பகை சூழினுந் தங்கொள்கை விடுக்கார்
இம்பர் நிந்தைதா டணமணி யெனப்புனைந் திடுவார்
தம்பி ரான்துணை யாய்ச்செல்வர் தனிவழி யிரவில். 43

அடுக்குந் துன்பெனி னயல்வழி நுழைந்துபின் னடுப்பல்
ஒடுக்கும் வெம்பகை யுறிற்றக்க வேடங்கொண் டுய்வல்
மிடுக்கி னிற்பொருள் பெற்றுப்பொற் பாதுகை மிலைவல்
விடுக்க ருந்துணை யாயென்றும் பொருட்செல்வம் விளைப்பல். 44

காண்டி வேதியர் பக்திமெய்க் காரண பக்தி
தேண்டு காரிய பக்தியென் றெய்விக பக்தி
ஈண்டி ரண்டிலொன் றெதுபிழை யெதுசரி யென்னா
மாண்ட நூன்முக மதிவலீர் வகுத்துரைக் கென்றான். 45



ஈது தன்னய னிசைத்தலு முலகனுண் டெழுந்து
கோதின் மெய்ப்படு காரண பக்திசெய் குநரே
தீதி னித்திய ஜீவவாழ் வுறுமென நம்பிக்
காத லித்திக வாழ்வெலாங் கசந்துகை விடுவார். 46

அலகி லாப்பொருள் யாவையு நானுக்கென் றாக்கி
உலகை வாழ்விக்குந் தெய்வத்துக் கிவர்பக்தி யுவப்பின்
றிலகு நன்மதி படைத்திக வாழ்வையெள் ளாது
குலவு காரிய பக்தியே யுவப்பதாங் குணிக்கின். 47

வரைவி லாதுபன் மலர்தொறு மருவிவெம் மதுவை
விரைவி னீட்டுதே னீயென விதிவிலக் கிகந்துந்
தரையி லேசம்பத் தாக்கலுங் காக்கலுந் தருமம்
அரவு போன்மதி யடையினோ வெனுமருள் வேதம். 48

பண்டு மிக்கசம் பத்தபி ராம்படைத் ததுவும்
எண்டி சாமுகத் திசைபெற்ற சாலமோ னியைந்த
தெண்டி ரைப்பெருங் கடலன செல்வமு மெதனால்
உண்டு பட்டன காரிய பத்தியா லுணர்மின். 49

என்று துன்மதி தெருண்டுல கன்னெடுத் தியம்ப
நன்று சொற்றனை நாளுமற் றிதுவென்ற னாட்டம்
பொன்றுங் காலத்துப் பொருளலாற் றுணையெது புகல்வீர்
என்றுங் கைப்பொரு ளில்லவர்க் கெவருற விகத்தில். 50

ஆத லாற்பொரு ளீட்டுதன் மதிக்கழ கதனைக்
கோதென் றெள்ளுதல் வைதிகர் பயித்தியக் கொள்கை
தீதி லாப்பத்தி வேடமே பெரும்பொருள் சேர்க்குஞ்
சாத னங்களிற் சிறந்தமெய்ச் சாதன மாமால். 51

இத்த லத்துப தேசிக்குங் குருவுக்கு மிறைமை
உத்தி யோகிக்கும் வணிகற்கு முலப்பிலா துழைக்குங்
கைத்தொ ழிற்கரு மிகளுக்கு மிரவலர் களுக்கும்
பத்தி வேடத்தால் வரும்பலன் பகருமா றரிதே. 52

பாரில் யாவரு நம்புவ ரஞ்சுவர் பகையார்
ஊரி லேமரி யாதையுண் டுவப்பன கிடைக்குஞ்
சோர ரும்பொரு ளீகுவர் சொல்லெங்குஞ் செல்லும்
ஓரிற் பத்திவே டத்தருக் கொப்பெவ ருலகில். 53

புனையும் பத்திவே டத்தினைப் பூதலத் தெவரும்
நினைவி னுறு மதித்தவி னிருமல னும்
அனைவ ராலுந்துத் தியம்பெறு மையமோன் றில்லை
கனக டற்புவி முழுவது நன்மையே கதிக்கும். 54

கள்ள மாயபொய்ப் பத்தியாற் கருதிய கருமங்
தெள்ளி தாகவே சித்திபெற் றிடுதலில் ஜீவ
வள்ள லாருளங் கொண்டன ரென்பதே மரபாம்
எள்ளி யின்றெனல் பேதையர்க் கியல்பென விசைத்தான். 55

பேய னின்னணம் பிதற்றலு மேனைய பித்தர்
நாய கன்றரு சுருதிக்கும் யுத்திக்கு நமக்கே
ஆய நேரனு பவத்துக்கு மொத்துள வதனுன்
மாய மற்றநின் கட்டுரை வன்மையென் சொல்கேம். 56

எண்ணி நீயெடுத் தியம்பிய விங்கியா யத்தை
மண்ணில் யாவரே மறுப்பவர் வான்வழி தொலைந்து
நண்ணி னெஞ்சில யோசனை நன்றுநன் றுனது
நிண்ண யங்கடைப் பிடித்தன மெனநிகழ்த் தினரால். 57

கண்ணுங் காதுமி லார்தமி னேர்வழி காட்டி
நண்ண லுஞ்சொலக் கேட்டலு மொக்குமிந் நால்வர்
எண்ண ரும்புரு டார்த்தமற் றதுவிது வென்னு
நிண்ண யித்தலுந் தம்மிலே புகழ்தலு நினைக்கின். 58

பேயன் சொற்றநி யாயத்தை மறுத்தெதிர் பேசத்
தூய வேதிய ரெம்மிலு நியாயசூக் குமர்கொல்
ஆயி னுங்கடா விடுத்தறி வாமென வடுத்துப்
போயி னாகஞ் செருக்கிய பூரியர் மாதோ. 59

இருவ ணக்கிட்டி நால்வரு மிறுத்தன ரெதிர்கூய்ப்
பொருவில் வேதிய புகறியுத் தரமிதற் கென்னு
மருவு தெய்விக பத்தியா லுலகத்து மலிந்த
திருவை யெய்துத னன்றலாற் றீதன்று தேரின். 60

பொருளி னுனன்மை யுளவெனி னப்பொரு ளீட்டத்
தெருளும் பத்தியைத் தெரிந்திட றீங்கெனப் படுமோ
மருள றத்தெரிந் துரைத்திநீ மறைவலோ யென்றான்
இருள றுத்தறுத் திரிப்பினு மிருட்படு முலகன். 61



தூய ஞானத்துக் குழவியுஞ் சொல்லுமற் றிதுபோல்
மேய வோர்பதி னுயிரங் கேள்விக்கு விடையெம்
நாய கன்னனை நாடுதி ரற்புத நயந்தன் 62
றேய வுண்டியா லென்றதை யேழைகா ணினைமின்.

உண்டி யாலுல கத்தினுக் குரியசம் பத்தாற்
பெண்டி ராற்பெரும் புகழ்ச்சியை விரும்புபேய்க் குணத்தாற்
கொண்ட பத்தியின் கோலத்தைக் குவலய நகைக்கும் 63
அண்டர் நாயக னருவருப் பாரிதை யறிமின்.

அலகை யின்குழாஞ் சூனியக் கபடிகண் மார்க்கர்
உலக ஞானிகண் மாயசா லகர்கதி யொழுக்கம்
விலகி யோர்களே பத்திவே டத்தைமேற் போர்ப்பர் 64
இலகு மெய்க்கிறிஸ் தவரிதைக் கனவினு மிகழ்வார்.

முன்னர் மோகத்தை முனிந்திடாச் சிகேமெனு மூடன்
கன்னி காதலாற் கடும்பொரு ளாசையாற் கடைத்தோற்
சுன்ன மிட்டின ஜனத்தொடு வெட்டுண்டு தொலைந்த 65
துன்ன லீர்கொலாம் பத்திவே டப்பலத் துரிமை.

நெஞ்சஞ் சாப்பரி சேயர்வை தவிகள்பா னிலவி
நஞ்ச மன்னதீப் பொருணயந் துலகத்து நடித்த
வஞ்ச மாயபொய்ப் பத்திமா காதிபன் கோபம் 66
விஞ்சி யாக்கிய சாபத்தை விளைவித்த தறிமின்.

அருளை நச்சிமெய்ப் பத்திசெய் யடியரோ டமர்ந்தும்
பொருளை நச்சியே பொய்ப்பத்தி செய்தவப் புல்லன்
இருளை நச்சிநா ணிட்டிறந் தொழிந்தமை யென்றுந் 67
தெருளை நச்சியோர் சிந்தையுட் டிகழ்வது தெரிதிர்.

மித்தை யாயசம் பத்தினைக் கீர்த்தியை வேட்டு
வித்த கப்புனி தாவியை விலக்குத வென்னும்
மத்த னுயசீ மோன்திருத் தொண்டன்வாக் குதித்த 68
நித்த சாபத்தை யடைந்தமை நீணில நிகழ்த்தும்.

பத்தி வேடத்துப் பதகளைப் பகைத்தரு வருத்து
நித்த தண்டனை விதிக்கின்ற நிருமல தெய்வம்
எத்த ருக்கநு கூலரென் றிசைத்தலெத் தனையாம் 69
புத்தி யீனமெத் தனைகொடும் பாதகம் பொல்லீர்.

மெய்ப்ப டும்பத்தி யானன்மை விளையுமே யன்றிப்
பொய்ப்ப டும்பத்தி யானன்மை பொலிந்திட லாகா
செய்ப்ப டும்பயிர் செழிக்குந்தெண் ணீரினா லன்றி
அப்ப டும்பலன் றருபயி ரவியும்வெந் நீரால். 70

மிடியன் வேந்தவே டந்தரித் திரவின்மேம் படுவன்
விடியி னூரவ மதிக்குமால் வேடநீத் துழல
நொடியிற் பத்திவே டத்தர்க்கு மன்னவா றுதலிப்
படியி லேவரு மதிப்பவ மதிப்பும்யாம் பார்த்து. 71

ஆவின் றோல்பொதிந் தழிவுசெய் புலியெனப் பத்தி
மேவு வேடத்த ருலகபோ கங்களை மிசைவர்
நாவி னக்கியின் புறத்துயி ருண்ணுநச் சாப்போல்
தீவி னைந்நயங் காட்டியே நரகுய்க்குந் திண்ணம். 72

அழியுஞ் செல்வம்வேட் டிடுதவ வேடமா மென்றல்
பழியும் பாவமும் பாழ்த்தபேய்ப் பத்தியும் பழுதும்
இழிவு மாயவஞ் ஞானமு மாமென வெள்ளி
மொழிவ ராலருண் ஞானநூன் முறையுணர் முதியோர். 73

பத்தி யந்தரு வுளத்தெழுந் தருண்மழை பருகிச்
சத்தி யந்தழைத் தோங்கிமெய் யறமலர் தாங்கி
உத்த மந்திகழ் கருமமாம் பலன்றொகுத் துலவா
நித்தி யானந்த ஜீவமாக் கனிதரு நிலவி. 74

மித்தை யங்குரித் தெழுபத்தி வேடமா மெட்டி
குத்தி ரப்பொருட் டழைமல்கிக் கொடுவினை மலர்ந்து
சுத்த வக்கிர மக்கடுக் காய்ப்பலன் றொகுத்து
நித்தி யக்கொடு மரணத்தைக் கனிந்திடு நினைமின். 75

கரும நன்றெனிற் கருமத்தின் பலனுநன் றாகுங்
கருமந் தீதெனிற் கருமத்தின் பலனுந்தீ தாகும்
நிரும லன்றிரு மறையுமிந் நிலத்தவ ரவர்தங்
கருமம் போற்றக்க பலனடை வாரெனக் கழறும். 76

இன்ன வாசப்பூர் வோத்தர ஸாதன மெடுத்து
நன்னி லைப்படு நியாயதாட் டாந்தத்தை நாட்டி
அன்ன தற்கமை யத்திருட் டாந்தமு மடுக்கிப்
பன்னி னான்மறை யாரியன் பூரியர் பதுங்க. 77



சிறந்த பேருட் பலத்தினாற் சத்தியந் திகழ்த்தும்
அறந்தி றம்பிடாற் கெதிர்சொலா தனில்விட்ட நாய்போல்
மறந்தி றம்பிடா நால்வரும் வாயடை பட்டுப்
புறந்தி ரும்பினார் முகங்கரிந் துள்ளமும் புழுங்கி. 78

ஈண்டு வேதிய னென்னருந் துணைவவிங் கிழிமட்
பாண்ட மாகிய நமக்கெதி ராமையாய்ப் பதுங்கின்
ஆண்டு தேவநீ தாசனத் தருகழற் சுவாலை
மூண்ட போதிவர் நிலைமையென் னாமென மொழிந்தான். 79

விட்டு முந்தினர் நால்வரை யிருவரும் விரைந்து
திட்டி வைத்துநூல் வழிபிச காறுசெவ் வேகி
வெட்ட வெள்ளிடை யாயவோர் மெய்விடா யாற்றி
கிட்டி யாருண வருந்தினர் தேறினர் கிளர்ந்தார். 80

இறின்தவன் கதிவழிகூடிய படலம் முற்றிற்று.

## சுரங்கப் படலம்.

மெய்க்கிறிஸ் தவர்க ளாய வேதிய ரிருவர் தீமை
கைக்குந ராகித் தூய கதிவழி துருவிச் சென்று
மைக்கரு மனத்து மல்கும் வஞ்சக மடமை யாதி
பொய்க்குணத் திரளி னோங்கும் பொருளாசைத் திடர்வந் துற்றார். 1

அத்திட ரேறிச் செல்லு மளவையி னருகோர் பக்கல்
புத்தெனு நாகங் காந்த பொறியுடைப் பேழ்வாய் கொல்லோ
நித்திய நாசந் தொக்கு நிலவுவெங் குகையோ வென்னப்
பித்துல கனாவாய்ப் பெய்யும் பெரியவோர் பிலத்தைக் கண்டார். 2

சொன்னவிப் பிலத்தை யேபொற் சுரங்கமென் றுலகஞ் சொல்லும்
முன்னரோர் சிலர்தாஞ் செல்லு முறைநெறி விலகி யேகி
அங்கிலை யறிவான் கிட்டி யடுத்தன ரடுக்கா முன்னர்
துன்னிடி விழுந்து சாய்ந்து தொலைந்துயி ரழிந்தா ரந்தோ. 3

அணித்தொரு மனித னின்றங் கருள்வழிப் போக்கர் தம்மைக்
குணித்திவண் வம்மின் வம்மின் கொழுநிதிக் குவையீண் டுள்ள
கணித்தள விடுதற் கொவ்வா காண்மினீர் வம்மின் வந்து
மணித்திர ளவாவுக் கேற்ப வாருதிர் வம்மி னென்பான். 4

ஆங்கவ னெறியிற் செல்லு மறவனை விளித்து நீவிர்
ஈங்கணைந் துமக்கு வேண்டு மிருநிதித் திரள்கைக் கொண்மின்
தாங்குபே ரின்ப லோகஞ் சார்தற்குத் தகவீ தன்றே
நீங்கரு நிதிநீத் தேகு நிராசையோர் புலமைத் தன்றால். 5

வடுவிலா வையத் தியாண்டு மன்புரு டார்த்தமூன்றில்
நடுவண தெய்துங் காலை யிருதலை நல்லு மெய்தும்
நடுவண தெய்தா னாயி னன்னுவ னுலையிற் பெய்தான்
டடுவது போற்றுன் பென்ற வறவுரை தெருளீர் கொல்லோ. 6

என்றுள மருளக் கூவு மிருங்குரல் செவியின் முட்டி
நன்றறி வுறுநம் பிக்கை நலம்புரி குரவ வாண்டு
சென்றியா மடுத்து நோக்கித் திருமுதல் சீர்மைத் தாங்கொல்
ஒன்றுநின் மதியே தென்று னுத்தம னுரைப்ப தானான்.

எம்பிநீ மருளே லந்த விரும்பிலத் தியற்கை தேர்வல்
பம்பிய நாச மோசப் படுகரென் றறிதி யாண்டும்
அம்புவி மானி டங்க ளாசைப்பேய் பிடித்துத் தள்ள
வெம்பிவீழ்ந் திறக்குங் கோடி வேதனை யுழக்குங் கோடி. 8

அறநெறி பிடித்துஞ் சில்லோ ரறிமடம் பூண்டாண் டேகி
உறவரு நாசத் துற்று ருன்னத நோக்கிச் செல்லுந்
துறவுளேம் விலகி யாண்டோ ரடியிடத் துணிது மேனுந்
திறவிடைக் கவிழ்த்துங் காண்டி சிறிதுமோ ரைய மின்றால். 9

அங்குநின் றரக்கக் கூவு மழிம்பனிவ் வுலகத் தாய
பொங்கிருந் துரோகம் பூத்த பொருளாசைக் குலத்தி லுள்ளோன்
இங்கிவன் றுதை யூதா செனுங்குருத் துரோகி பாட்டன்
எங்குங்கே யாசென் றேது மெஜமானத் துரோகி யாமால். 10

வேதியர் குலத்துக் கெல்லாம் விக்கினம் விளைக்கு மிந்தக்
காதக னமையு மிந்தக் கிடங்கரிற் கவிழ்க்க வுன்னி
ஆதரித் தழைக்கின் றானு லனுவெல்லை கடத்து மாயின்
வேதனைப் படுகர் வீழ்வே மெய்ம்மையீ தைய வோர்தி. 11

ஆசைப்பேய் பிடித்த நால்வ ரடுக்கிலிவ் வழிம்பன் கூற்றால்
நீசப்பாழ் நிதிக்கி டங்கை நேர்ந்துயிர் மடிவா ரென்றற்
கீசத்து மைய மின்று லென்றுவற் புறுத்தி நன்கு
பேசிப்பின் விளித்து நின்ற பிசாசனுக் கீது சொன்னான். 12



விண்டுயிர்க் கேடு சூழும் வெகுஜநத் துரோகி யென்னுங்
கண்டக வுனக்குன் றந்தை கள்ளயூ தாசுக் குற்ற
தண்டனை வருக நின்சொற் சார்ந்துயி ரிழவே மென்னு
மிண்டனுக் குரைத்து மேலே துணையொடும் விரைந்து சென்றான். 13

அருட்டுணை யமைந்த தொண்ட ரகன்றுநா னெறியிற் சென்றார்
திருட்டுவே டத்தர் நால்வர் பொருளாசைத் திடரும் றேறி
மருட்டுறை கொண்டு கிட்டி மண்ணரிடி விழுந்தவ் வொல்லை
இருட்டடர் படுகர் வீழ்ந்தா ரென்னுற்றா ரென்ப தோரேன். 14

அவாவிலார்க் கில்லை தாகுந் துன்பமற் றஃதுண் டாயிற்
றவாதுமேன் மேலுந் துன்பஞ் சாருமென் றுரைத்த நீதி
உவாமதி யுதித்த லோடு முள்ளிரு ளிரிந்து சிந்தத்
திவாவெனத் தெருண்டு பாதை சென்றுவே தியரைக் கண்டேன். 15

உத்தம ரிருவ ருஞ்சென் றுன்னத ராஜ வீதி
வித்தக நெறிசெல் வோர்க்கு விழிக்கறி குறியாய் நட்ட
சித்திரச் சிலையைக் கண்டு தீட்டிய வெழுத்தை வாசித்
தத்தகு பொருளை யுள்ளி யாய்ந்துரை யாட லுற்றார். 16

விப்பிரன் றெருண்டு நம்பி விழிக்கெதிர் தோன்றிக் காட்சி
இப்புறந் திரும்பி நோக்கா தேகெனத் திரும்பி நோக்கி
உப்புத்தூ ணான லோத்தின் மனைவியை யுள்ளு கென்னுச்
செப்பிய தெமையாட் கொண்ட திருவருண் மாட்சி யென்றான். 17

திருவரு ளெனக்குத் தந்த தேசிக வென்னை யானே
அருவருக் கின்றே னிம்மட் டறிவிலா துளம யங்கிப்
பொருவருங் கேட்டுக் கோடிப் புகாவகை தெருட்டா யென்னில்
ஒருவரும் லோத்தில் லாள்போ லுப்புத்தூ ணாதல் திண்ணம். 18

ஆண்டகை யருளே நின்வாக் குருவமா யடிய னேனை
ஈண்டிய நாச மோச விருட்சுரங் கத்தி னின்று
மீண்டினி துய்யு மாறு விலக்கியா தரித்த தெந்தாய்
தூண்டியென் ஜீவ சாக்ஷி துடிக்கின்ற தின்னுங் காண்டி. 19

கற்பனை கடந்த லோத்தின் காதலி யொருத்தி யேயோ
தற்பரற் கெதிரா யுள்ளந் தருக்கிய கோரக் காதி
அற்பரோ ரிருநூற் றைம்பா னழிம்பருங் குறிக ளாவார்
பொற்புறு மிவற்றை நோக்காப் புந்தியே புதுமைத் தன்றே. 20

ஏதமில் பரலோ சத்து யாத்திரி கரையே மாற்றிப்
பாதகம் புரியு மிந்தப் படுகுண தோஷி தேயா
சீதைலா முணரான் கொல்லோ வெச்சரிப் படையா தென்னே
மாதுயர்க் கடற்குள் வீழன் மதிகொலோ கண்ணை மூடி. 21

என்றிவை தெருண்டு தான்ற னேழைமை யுணர்ந்து மேனோர்
பொன்றிடு மடமை யுள்ளிப் பொருமியும் புகன்ற மாற்றம்
நன்றென விதயத் துள்ளி நம்பிக்கை வதன நோக்கி
ஒன்றுநீ கேட்டி யென்னு மறைவலா னுரைக்க லுற்றான். 22

ஆதிநந் தனவ னம்போ லமைவருஞ் சிறப்பில் வைத்த
கோதிலா வளங்கொள் சோதோங் குடிகணன் றெள்ளிச் செய்த
பாதக வினைக்கு நேர்ந்த படுகனன் மழையை யுள்ளி
மேதினி யுயுமா றுய்த்த வியனடை யாள மீதால். 23

தெய்வத்தை மதியா ராகித் தீவினை துணிந்து செய்யும்
மைவைத்த மனத்தா ரெல்லா மற்றுமித் தகைய வாய
மெய்வைத்த குறிகள் கண்டு விரைந்துளந் திரும்பா ராகிற்
கைவைத்து நீதித் தண்டங் கனற்சிறைக் கடற்கு ளுய்க்கும். 24

உத்தம தேவ சித்த முவப்பொடு தெரிந்து கொள்ளா
அத்திறத் தவரின் னூரென் றறிகில மாத லாலே
எத்திறத் தவர்க்கு முண்மை யிசைத்தனங் கடனு மென்றும்
புத்துயி ரளித்தீ டேற்றல் புண்ணியப் பகுதி யாமால். 25

கதிவழி விலகிச் சென்றக் கடுங்குழி கவிழா தெம்மை
மதிநல னளித்துக் காத்த மாதயா பரனே முற்றும்
விதிவழி திகழ்த்திக் காப்பர் வித்தக விரைதி யென்னுப்
பதிதிரு நாமம் போற்றித் துதியொடு பரவிச் செல்வார். 26

சுரங்கப் படலம் முற்றிற்று.

## விடாதகண்டப் படலம்.

ஞாலமீக் கதிவழி நசடி யேகுநற்
சிலவே தியரிரு வோருஞ் சில்பகல்
சாலவை திகநலந் தழைத்த தண்ணிய
வாலிய நறுநிழல் வழங்கச் செல்லுவார்.



வேறுசின் னுளொரு பாங்கர் வெவ்வினைத்
தூறடர் கானகந் துருவித் தீவிலங்
கூறுசெய் திடுமென வுளங்க லங்கியும்
ஆறியுந் தேறியு மருளி னேகுவார். 2

பருவபே தங்களாற் பலவ கைப்பிணி
மருவிநின் றுடற்றினும் வருந்திச் சில்பகல்
திருவரு ளாயசஞ் சீவி யத்தழை
பெருவலி யளித்தலிற் பெரிது செல்குவார். 3

கருத்தன்யாத் திரிகரைக் கருதி யாக்கிய
திருத்தகு சத்திரத் தணைந்து சிற்சிலர்
அருத்துமெய்ஞ் ஞானபோ னகமுண் டாவிநன்
மருத்துறழ் செவ்வழி மகிழ்ந்து நாடுவார். 4

பொருந்துவ ரருந்தவம் புரிவ ராதாம்
விருந்துவந் தாருண வளிப்பர் வெம்மையால்
வருந்துவ ருடன்மன மகிழ்வர் மெய்விடாய்த்
திருந்திளைப் பாறிப்பின் னேமுற் றேகுவார். 5

உறையுளே கதிவழி யுண்மை யேயுற
விறையருட் டுணையற மியற்று செய்வினை
மறைமொழி யுணவுமன் றூட்டு றக்கமாத்
துறையறி சூழ்ச்சியர் துருவி யேகுநாள். 6

உன்னதத் தநாதிதொட் டொழுக்க மேவிய
திந்நிலம் புரப்பதற் கீண்டு லாவிய
தந்நெறி யிரக்ஷணை யமைத்த நீரது
சென்னெறி யெங்குமெய் வளஞ்செ றிப்பது. 7

தூநலம் பயப்பது சுகிர்த முள்ளது
மானவ ருயிர்க்குயி ராய மாட்சிய
ஞானமில் லருண்மறை யொழுக்கின் மேலது
வானமும் பூமியு மிணைத்த மாண்பது. 8

சத்தியத் தருக்குலந் தழைய வார்ந்திவண்
நித்திய பலன்விளை விக்கு நீரது
மித்தையின் விடத்தரு வேரொ டுங்கெட
இத்தலத் தறவெறிந் தியங்க வல்லது. 9

கைத்ததீ வினைக்களை கட்டுக் காறுறும்
மெய்த்தரு மப்பயிர் விளைக்கும் பாலது
பித்களை யுயிர்களின் பிறவி நோய்கெடப்
புத்துயி ரளித்திடும் புதுமை சான்றது. 10

அண்ணலார் கருணையி னளவி னுயது
வண்ணவான் றாய்மையிற் றெளிந்த மாண்பது
நண்ணுமன் பினிற்சுவை நயம்ப யப்பது
புண்ணியம் பொலிந்தெனப் பொலியும் பொற்பது. 11

மூழ்குவார் தீவினை முருக்கு மாறுவந்
தாழ்முறை யலைபெறிந் தொழிக்க லான்றது
வாழ்வுள வம்மினென் றழைக்கு மாறுபோல்
கேழ்கிளர் திரையொலி கெழுமு நீரது. 12

அருந்துவார்க் கழல்வினை யவிக்கு நீரது
திருந்துநல் லுளக்களி செறிக்குந் தேனது
பொருந்துவெம் பசிக்கமு தாய பொற்பது
பெருந்துயர்ப் பிறவிவெம் பிணிம ருந்தது. 13

தாரகத் துருவமாய்த் தரணி மேயவிந்
நீரகத் துறுநர ஜீவர் நித்திய
ஏரகத் துறுகுண மியைந்தி லங்குவார்
பாரகத் தியற்குணம் படைத்தி டாரரோ. 14

உலகநீ ரொழுக்கெலா முயிரைக் காப்பினும்
விலகரு மிருத்துவை விலக்கற் பாலவோ
குலவுமிச் சீவநீர் கொள்ளு வாரெனின்
இலகுமெய் நித்திய ஜீவன் யார்க்குமே. 15

தாகமின் றும்பசி தணியுஞ் சஞ்சல
சோகமும் ரோகமுந் தொலையு நித்திய
போகபூ மியினலம் பொருந்தும் புல்லிய
தேகமும் புனிதமாம் ஜீவ நீரினே. 16

தாவரு மினையநற் றகைமை சான்றிடு
ஜீவமா நதியெனுந் தெய்வ மாணதி
மேவிய தீரத்தை யடுத்து விண்ணகர்க்
காவல னருள்வழி கதித்த தென்பவே. 17



நதியிரு மருங்குறு நறுந்தண் பூம்பொழில்
மதியுயர் சினைத்தலை மறிய வோங்குதல்
புதியநீர் பருகுபுண் ணியப லத்தினுற்
கதிபுகுந் திடவெழுங் காட்சித் தாமரோ. 18

பூவலர் கற்பகப் பொலன்பொ தும்பருந்
தாவரு நல்லறச் சாலிப் பண்ணையுங்
காவலன் விரும்புபூங் காவ னங்களும்
ஜீவநீர் பாய்தலிற் செழிப்புற் றோங்குமே. 19

ஞாலர க்ஷகன்றிரு வுருவை நாடிமெய்ச்
சீலர்கண் ணுடுமனந் தெருண்டு பற்றல்போல்
வாலிய தருக்களை வல்லி சாதகங்
கோலிநாண் மலரொடு கொளுவித் தோன்றுமால். 20

மேனனி நோக்கிய வியன்ற ருப்பயன்
மாநில நோக்கிய மாபின் காட்சிதான்
வானுற நோக்கிய வடியார் மாணடை
பூநல நோக்கிய புதுமை போலுமால். 21

துற்றிள நீர்க்குலை சுமந்து முற்றுமட்
டுற்றநெட் டிலையதெங் கொருங்கு தாங்குதல்
கொற்றவன் கடைவரை குறிக்கொண் டன்பரைப்
பற்றுகை நெகிழ்ந்திடாப் பான்மை காட்டுமால். 22

நறியமுக் கனிநறை நறுந்தண் பூநறை
சிறையளி முரன்றுமொய்த் தருந்தித் தேக்குறல்
மறையவர் குழீஇத்துதி பகர்ந்திம் மாநுவேல்
நிறையரு ளுகர்ந்திடு நீர்மை காட்டுமால். 23

தெள்ளுநீர் வாவியிற் றிகழ்ந்த தெண்ணறும்
வள்ளவாய்க் கமலங்கண் மலர்ந்து தோன்றுதல்
வி[illegible]ளருந் தி[illegible]ரு ணிறைந்த வித்தக
உள்ளமீக் கிளர்ந்தொளிர [illegible] 24

முதிர்சுவை முக்கனி முதல தீங்கனி
நதிவளம் படுத்தபன் னறுஞ்செ ழும்பயன்
கதிவழிப் போக்கரை யூட்டிக் காதலிற்
பொதுமையா நுகர்வரப் புனித தீரத்தர். 25

தருமமார் தருசெழுஞ் சாலி வண்பயன்
அருமறைச் சுரபிநின் றளிக்குந் தூயபால்
கருமவான் சுவைக்கரும் பீன்ற கட்டியோ
டிருமையு நுகர்ந்துதேக் கெறிவ ரெங்குமே. 26

பொன்னுல கத்துவாழ் புனிதர் சாயையே
இந்நதி தீரத்தி னிரும ருங்கினும்
மன்னுமா னிடங்களின் படிவம் வாய்ந்தெனத்
துன்னுவ ராற்றிரி கரண சுத்தராய். 27

கேவல நகர்புகக் கெழுமு பாதையிச்
சீவகங் கையையடுத் தினிய தேன்சொரி
காவகத் திடைசெலக் கருதி யாரியர்
பூவரு துறக்கமே போலு மீதெனா. 28

புண்ணிய நதியின்மான் மியமும் பொற்புறு
தண்ணிய நறும்பொழிற் சமைவுந் தம்மகத்
தெண்ணிமன் வியந்துரை யாடி யேம்பலோ
டண்ணலை யிறைஞ்சிமன் றுடிப் போயினார். 29

ஜீவநீர்க் கங்கையாந் திவ்ய தீர்த்தத்திற்
பாவநோ யொருங்கறப் படிவர் பத்தியோ
டாவியா ரோக்கிய மடைவர் சூடுவர்
பூவலர் நறுந்தொடை புசிப்பர் தீங்கனி. 30

தீர்த்தனா ரன்பினைச் சிந்தை செய்துசெய்
தார்த்தியிற் போற்றுவ ரவச மாகுவர்
சீர்த்தியைப் புனைந்துரை செய்வர் தெய்விக
கீர்த்தனை யகக்களி கிளைப்பப் பாடுவார். 31

பிறிதொரு புலன்விழை யாத பெற்றியர்
பொறிநுகர் வனவெலாம் புனித மாதலின்
அறிதுயி லமர்ந்திளைப் [illegible] யாவ[illegible]
செறிபர் மானந்தந் தேக்கு கிற்பால். 32

இத்திற நம்பிக்கை யிலகு வைதிக
வித்தகர் பல்பகல் விபத்து விக்கினஞ்
சித்தசஞ் சலமொரு சிறிது மின்றியே
முத்திமார்க் கத்திலே முன்னிட் டேகுநாள். 33



மன்றலாற் றணிகளா மருங்கு பல்வளம்
ஒன்றிய பூம்பொழி லொருவிச் செய்மையிற்
கன்றிய கடுஞ்சுரங் கனலுங் கானிடைச்
சென்றதக் கதிவழி யுளந்தி கைக்கவே. 34

வேறு.

கொடிதி னிற்கொடி தாயவிக் கொடுஞ்சுடு பாலை
கொடிதெ னப்படும் யாவினுங் கொடிதெனத் தேர்ந்து
கொடிதி னுக்கந்தங் குணித்தது மூதுரைக் கூற்றேற்
கொடிது மற்றிதிற் பிறிதெது குவலயப் பரப்பில். 35

கொள்ளி யாரழல் பரந்தன கொடுஞ்சுரங் குறுகில்
துள்ளி யாருயிர் துடிக்கும்வாய் நீரறச் சுவறும்
உள்ளம் வேமுத ராக்கினி மிகுத்தலி னோடிக்
கள்ள மார்க்கத்துப் புகவருங் காலடி கடுகி. 36

பசைய றப்புலர்ந் துலர்ந்திடு பாழ்ந்தரைப் பரப்பில்
மிசைக ரிந்துகு நலந்தரு தாவரம் வெந்து
வசைத ழைத்திளி வரவெனுங் கள்ளியே வளருந்
திசைந டுங்குமத் தீச்சுரக் கொடும்பெயர் செப்பின். 37

கண்டு கண்டுமூ வாசைப்பேய் பிடித்தலைக் கழிக்கும்
மண்டு கானனீர் வேட்டுவேட் டாருயிர் மறுகுங்
கொண்ட மானத்தீச் சுடச்சுட வுளங்கொதி கொதிக்கும்
விண்ட வாய்வரு பழிப்புகை மெய்யெலாங் கருக்கும். 38

பண்டு பன்மணித் திரள்செறி செந்தமிழ்ப் பாவை
மொண்டு கற்பனைக் கவிபொழி முகிற்குலஞ் சிதறி
எண்டி சாமுகந் திரிந்தன விக்கொடுஞ் சுரத்தின்
மண்டு வன்மிடிக் கொழுங்கனற் பிழம்பினை மறுகி. 39

உன்ன தாதிப னொருசுத னுலவிய மேனாள்
சென்னி சாய்க்கவு மிடமிலை யெனக்கெனத் தெருமந்
துன்ன ருங்கடுந் துயருழந் தனனெனி னுலகப்
புன்ன ரங்களுக் கென்னவா மிகத்திடர் புணரின். 40

மடியெ னுங்குப்பை மட்டிடர் மதில்புடை வளைப்பப்
படியின் மேயதுர்க் குணகிருத் தியங்களாற் படுத்த
குடியி லங்குபா ழுறையுளோன் றுளதவண் குணிக்கிற்
கொடிய நித்திய தரித்திரா தனிப்பெருங் கோட்டம். 41

ஆய வெஞ்சுரத் தூடுசெல் லருணெறி யடைந்தார்
தூய வேதிய ரிருவருந் திகைத்துளந் துடித்தார்
மேய செம்பொருட் செல்வத்தை விழுத்திவெவ் விடர்சால்
தீய நல்குர வுறிலெவர் திகைத்திடார் ஜெகத்தில். 42

வெயிலி டைப்பட்ட புழுவெனத் துடித்தனர் வெம்பி
அயிலெ யிற்றரா விடந்தலைக் கொண்டென வயர்ந்தார்
குயிலு றுத்திய மாயமோ வென்றுளங் கொதித்தார்
செயலி னிப்பிறி திலையெனச் சிந்தனை செய்வார். 43

ஆக்கை நீறுபட் டழியினு மருணெறி விடாதிங்
கூக்கி முன்னுறி னித்திய ஜீவநாட் டுறுவேந்
தீக்கொ டுஞ்சுர மஞ்சியாந் திகைத்துப்பின் னிடையில்
மீக்கி ளர்ந்தெரி பாதலக் கிடங்கரில் விழுவேம். 44

பின்னிட் டேகுதல் பிழைமுன்னிட் டேகுதல் பெருமான்
தன்னிட் டந்நல மாமெனச் சமைந்தனர் தக்கோர்
முன்னிட் டாருயிர் முடியினு முடிவரே யன்றி
வெந்நிட் டேகுவ ரோமுனை முகத்துற்ற வீரர். 45

வறிய பாலையி னூடுமா காதப னுய்த்த
குறிய ணுப்பிச காதுநேர் வழிநடை கூடி
மறியுங் கானனீர் வயங்கிய வளாகத்தை யுருவிப்
பொறிம யங்கியுள் ளுடைந்துமெய் யுணர்வொடு போனார். 46

தாகம் விஞ்சிநா வறண்டுத ராக்கினி தழைத்தும்
ஆக நொந்தல சித்துணை விழிகுழிந் தாழ்ந்தும்
ஏகக் காலுா மின்றிநின் றிளைத்தவ வித்துஞ் 47
சோக [illegible]

இன்ன ணந்தவித் திருவரை காண்கில ராகி
மன்னி நின்றுகா லடிபெயர்த் தேகவோர் மார்க்கம்
முன்னு றுங்கொலென் றோரவாச் சிந்தையுண் முதிரச்
செந்நெ றிக்கணே சென்றனர் தெருமா லுழந்து. 48

பரிப வச்சுழற் பட்டபஞ் செனநெடுந் தூரம்
பொரிப ரற்படு சுரத்திடைப் போயினர் போங்காற்
கரிபு லத்தினுக் கயலுறத் தோற்றுதல் கண்டார்
விரிப சும்பயிர் வளங்கெழு மருதநீர் விபுலம். 49



கதிவ ழிக்கரு கேகுமோர் சதிவழி கதித்துப்
பதிபு குத்தத ரோடுசேர் பாவனை தோற்றச்
சதிபு குத்துமென் றறிந்திடார் தரித்தவ ணின்றார்
மதிகெ டுத்திட வல்லது வறுமையே யன்றோ. 50

வாட்ட முற்றுயிர் வதங்கிய ஆரியன் மற்றிப்
பாட்டை நன்னெறி சார்ந்துசென் றிருவரை பரம
நாட்டின் பாதையை யடுப்பபோற் றோற்றுவ நலியுங்
காட்டை விட்டினிச் சேறுமிக் கவர்வழி யென்றான். 51

மாறில் வேதிய னுரைத்திட நம்பிக்கை மாபிற்
றேறு கையவித் தீச்சுரம் வெருவிநேர் திரிந்து
சேறு மாயினிக் கவர்வழி சிறிதுசென் றப்பால்
வேறு பட்டிடி னென்கொலாய் விளையுமோ வென்றான். 52

நம்பி காண்டியிங் நலங்கெழு நானிலப் பரப்பும்
அம்பு யத்தட வாவியு மகன்குளக் கரையும்
பைம்பு லார்ந்தமென் பாதையும் பாலையூ டுருவி
உம்பர் நாடியோர்க் குய்த்தபே ருதவியே போலும். 53

ஐய தீங்குள வாமெனக் காண்கில னடைந்த
வெய்ய தீவிடாய் தணிந்துமேல் விரைந்துசே றற்குச்
செய்ய தாமெனச் சீரிய மறைவலான் செப்ப
மைய கன்றநன் மனத்துநம் பிக்கையு மருண்டான். 54

வறுமை யான்மதி நலங்கெடு மறிவுபோம் வாளுள்
குறுமை யாங்குண சீலங்கள் குன்றுமெய் குடிபோஞ்
சிறுமை மல்குவெந் தீவினை குடிபுகும் ஜெகத்தில்
மறுமை யாக்கமுங் கெடுமெனின் மறம்பிறி தெவனோ. 55

இன்மை யிற்கொடி தியாதெனி னின்மையிற் கொடிய
தின்மை யெய்யனு மியற்றமிழ் [illegible]
இன்மை யென்னுமோர் பாவிமற் றிகபர நலத்தை 56
இன்மை யாக்குமென் றினிதுற விசைக்குமா லெடுத்து.

சாது மார்க்கத்த ரிருவரும் பாலையைத் தணந்தார்
மீது மார்க்கத்தி னருகுசென் றோர்வழி விரைந்தார்
தீது மார்க்கமென் றறிந்திலர் செவ்விதென் றுள்ளிப் 57
போது மார்க்கத்தி னலம்புனைந் துரைத்தனர் போனார்.

நனிக னற்றுதா பங்கெட நறும்புன லாடி
இனிய போனக பானமுண் டிருந்திளைப் பாறித்
துனித விர்ந்தவ ணோருழி முன்னுறத் துருவித்
தனிந டக்கும்வி ணம்பிக்கை தனைக்கண்டு சார்ந்தார். 58

உற்ற நம்பிக்கை யுரையகத் தூன்றிநின் றுறுத்த
நற்ற வன்வினைந் திவ்வழி யெவ்வயி னொடுஞ்
சொற்றி யென்னவி ணம்பிக்கை மற்றிது சுவர்க்கக்
கொற்ற வன்றிரு நகரத்துக் கூட்டுவ தென்றான். 59

கேட்டி யிங்கிவன் கிளந்தமை நம்பியாங் கேடில்
வீட்டு நூல்வழி யருகுளே மென்பதை விளங்கக்
காட்டு மாலினிக் கவல்கிலை யென்றனன் கடுகி
மீட்டும் வெஞ்சிறைப் படுவதைத் தெரிகிலா விருத்தன். 60

## வேறு.

மதிவ லானுநம் பிக்கையு மன்னர்கோன்
விதிவி லக்கைவி தந்துரை யாடியே
கதிவ ழிக்கரு காய்ச்சில காவதம்
புதிய பாதையிற் போயின ரென்பவே. 61

சுருதி மார்க்கந்தி கழ்த்திடு தூச்சுடர்
நிருத வைப்பின்ம றைந்திடு நீர்மைபோற்
பிருதி விக்கிருள் போக்கிய பெற்றிசால்
பரிதி யும்மறைந் தான்குட பால்வரை. 62

துங்கப் பாதைய ருகுறத் தோன்றிய
பங்கப் பாதைப கலொடு பாறிடச்
சங்கைக் கோட்டத்த குவன்ச திவழி
கங்குற் போதொடு வந்துக லந்தவே. 63

சேண கர்ப்பர தேசிக ளைப்பிடித்
[illegible] ருகனு றுத்திய
கோணி லைப்படு கொப்பத்துக் குப்புறீஇ
வீணம் பிக்கைமுன் சென்றுவி ழுந்தனன். 64

குத்தி ரப்படு கொப்பத்துக் குப்புறீஇ
மொத்துண் டேங்கிக்கை கான்முறி பட்டுயிர்
கைத்த ழுங்கிக்க தறிடு கூக்குரல்
வித்த கர்க்குவெ ருட்சிவி ளைத்ததால். 65



என்னை யென்னையென் றேங்கினர் வேதியர்
முன்ன ருற்றவன் மோசப்ப டுகுழி
தன்னுள் வீழ்ந்தத விப்புறு சத்தமென்
றுன்னி நின்றங்கு ரத்துவி ளித்தனர். 66

கத்து துன்பக்க டுங்குர லன்றியோர்
உத்த ரம்பிறி தில்லென வோர்ந்தனர்
அத்த வெங்குற்ற னமென வாரண
வித்த கன்னுரை யாடலன் விம்முவான். 67

மேக்கு யர்ந்துரும் வெள்ளிடி வீழ்ந்தெனக்
கூக்கு ரற்றொனி யுள்ளங்கு ளித்தலும்
ஆக்கை தம்பித்த லமர லெய்திமேற்
போக்கு முட்டிநின் றுள்ளம்பு ழுங்குவான். 68

எங்குற் றேனிஃ தெத்தனை துன்மதி
சிங்க வெங்குகை போலுந்தெ ரியினே
துங்க நூனெறிக் கும்மதி தூரமாம்
பொங்கு காரிருட் கங்குலும் போர்த்ததால். 69

அழிவி லாப்பர லோகம டுக்குநல்
வழிவி டுத்தனன் மன்மதி வாய்மையின்
மொழித டுத்தனன் பற்றினன் மோசமும்
பழியும் பாவமும் பற்றவிப் பாழ்வழி. 70

என்னை யுங்கெடுத் தென்னுயிர் வான்றுணை
தன்னை யுங்கெடுத் தேன்றயங் குஞ்சுடர்
மன்னு விட்டிலம் மாணொளி மாய்த்துத்தன்
இன்னு யிர்க்குமி றுதிவி ளைத்தல்போல். 71

இம்மட் டும்மெற்கி ரக்ஷண்ய பாதையில்
தம்மட் டில்கிரு பைத்துணை தந்தவர்க்
கெம்மட் டுந்நன்றி யின்றியிங் கெய்தினேன்
அம்மட் டுக்குமி தெத்தனை யக்ரமம். 72

தரித்தி ரச்சுரஞ் சார்ந்தமெய்ந் நூல்வழி
பிரித்து வந்திவண் பேதுற்று யங்குவேன்
பரித்த பாழுட லோம்பிப்ப ரசுகம்
இரித்து விட்டதிங் கெத்தனை புன்மதி. 73

ஜீவ ரக்ஷை நிருத்திய தேவர்கோன்
ஆவ லித்தனைக் குங்கைய கற்றியிக்
கூவ லிற்கவி ழுத்துணிந் தேன்கொடும்
பாவம் பாவம்ப ழிப்புறு பாவமால். 74

மரண பூமிம ரிந்தவக் கங்குலுட்
கரண மோய்ந்துடல் கட்டறு காலையில்
அரண மாகிய ளித்தவ ருட்பரி
புரண மீண்டுமேற் போர்த்திடு மேகொலாம். 75

இலகு நூனெறி யைப்பிடித் தேகிடில்
அலகி லாதவ ருட்டுணை வாய்த்திடும்
உலகொ ழுக்கையு வந்துபு றஞ்செலில்
விலகி நீங்குமெய் வித்தக மென்பரால். 76

ஆவ தேற்றரு மாபுரிக் காரதர்
மேவி வெந்துகு வேளையில் வேந்தருள்
கூவி யென்னைக்கு ரவனு ருக்கொடே
ஏவி நல்வழிக் கீட்டிய தெவ்வணம். 77

மேட்டி மைத்திட ரேறிவி ழுந்தழி
கேட்டி னைப்பல வீனத்தின் கேதத்தைக்
காட்டிக் கைவிடுக் காதுக ளடைவரா
வீட்டி லுய்ப்பதன் றேவித்த கவருள். 78

ஆத லாலினி மேலும ழிமதிப்
பாதை நின்றுப,தைக்கிலன் யானெனுப்
போத மேவித்தன் புன்மையைக் கைத்தருள்
நாதற் போற்றிந விற்றின னீதரோ. 79

கண்ணி னுக்கெங்க ருவிழி யாதியுன்
நிண்ண யச்சொலி னீர்மைநி னைந்திடா
தெண்ண மின்றியி யற்றின னிப்பிழை
புண்ணி யன்றொழும் பென்றுபொ றுத்தியால். 80

என்று கூறவெந் தாயுன்பி ழையென
ஒன்று மெண்ணல் னுள்ளுடை வாயலை
இன்று நேர்விக்கி னங்களை மக்கெலாம்
நன்று காட்டுமோல் நம்புதி நீயென்றான். 81



இத்த கும்பொறை யெய்திய சற்குண
வித்த கத்துணை தந்தவி மலனைச்
சித்த முள்ளுற வேத்தித்தெ ளிவுறீஇ
உத்த மந்திகழ் வேதிய ேனுதுவான். 82

சீல மல்குநி ருத்தகு செவ்வியோய்
மேலி னிச்செயல் வேறிலை மீண்டியாம்
பாலை மேவிநம் பாதையைக் கூடுதல்
சால நன்றெனக் கூறினன் றுபதன். 83

நன்றி தென்றுநம் பிக்கைதெ ருண்டனன்
சென்ற பாதையிற் சிந்தைவைத் தத்திரும்
பென்றோர் வாக்குமெ ழுந்தது விண்ணிடை
ஒன்றி யுள்ளூர முற்றன ரொள்ளியோர். 84

மோச நேரினு முன்னெனக் காகவென்
றேசி லாரிய னேகவு நம்பிக்கை
ஆசி லுள்ளம லகினை யாரிருள்
மூசு கானின்முற் செல்குவன் யானென்றான். 85

இன்ன வாகவி ருவரி னம்பிக்கை
முன்ன ரேகமு றையறி யாரியன்
பின்ன ரேகத்தி ருமிப்பி ரான்வழி
தன்னை யுள்ளித்த டவினர் கானெறி. 86

கொடிய மாதிகி லும்பல்கு ழப்பமும்
அடிய ருள்ளத்த மளியும் போன்மெனத்
தடியும் பேரிடி யுந்தலைக் கூடுகார்
படியை மூடிப்ப ரந்ததவ் வொல்லையே. 87

கருமு கிற்கண மீண்டிக்க கனமீ
தருமி டித்தொலி தாக்கலு முள்ளுடைந்
தரும றைக்கிழ வன்னிஃ தாழியான்
தரும கோபந்த லைவால் கானென்றான். 88

படிதி கழ்த்திப்ப கல்பட மின்னிடுங்
கடிய காரிருள் போர்க்குங்க ணத்திடை
இடியி டித்தரும் வீழ்த்தலி னின்றொடு
முடியுங் கொல்லுல கென்னமு ழங்குமால். 89

ஊதை மாருதம் பொங்கியு டற்றலிற்
பாத வங்கண்மு றிந்துப றிந்தன
ஓத நீரொருங் குண்டுடன் கான்றெனப்
பூத லத்துப்பொ ழிந்தபெ ருமழை. 90

வான டர்ந்துபு டவிவ ளைத்திழி
சோனை மாரிவி டாதுசொ ரிந்திடத்
தான மெங்கும்பு தைந்தத லைத்தலை
மேனி மிர்ந்துப ரந்தது வெள்ளமே. 91

பாரி டக்குழு வாமெனப் பம்பிய
காரி ருட்பிழம் புங்கரு மேகமும்
பேரி டிக்குர லும்பெரு மாரியும்
ஆரி யர்க்குயி ரச்சம்வி ளைத்தவே. 92

உய்யு மாறறி தென்றுள முட்கினர்
செய்யு மாறறி யாதுதி கைத்தனர்
ஐய கோவென்ற வமதி யுள்ளினர்
வைய கத்துநெ றியும ருண்டதால். 93

வெள்ள மல்கவெ ருண்டுயிர் மாழ்கினர்
கள்ள மாயப்பொ றிசெறி காரிருட்
பள்ள மெம்மைப்ப டுக்குங்கொ லோவெனத்
துள்ளி யாவிது டித்தனர் தூய்மையார். 94

நிலைபெ யர்ந்திடி னேரும பாயமென்
றலையு நெஞ்சினர் மின்னொளி யோங்கிருள்
வலைகி ழித்திட வல்லிதின் வந்தனர்
புலைநெ றிப்படு பாதியைப் போக்கியே. 95

ஆச கன்றவ ருந்தவ ராருயிர்
மோச நேருமென் றஞ்சிமுன் னிட்டிடார்
கேச ரிப்பகு வாயிற்கி டைத்தவோர்
பாச டைப்புழை யூடுறப் பற்றினார். 96

வீங்கு காரிருள் போர்த்துவெ ருட்டலில்
தாங்க ரும்பல துன்பஞ்ச மழ்த்தலில்
ஆங்க ணைந்துதம் மாக்கைவி டாய்த்தலில்
தூங்கி னாவர் துஞ்சின ராமென. 97



ஆண்டு வேதியர் சோகித்த யர்வுழி
ஈண்டு நல்வழி நீங்கலெ னிதனை
மீண்டு [illegible] க்கடி [illegible] 98
காண்டல் செய்தன னென்னுட்க வன்றரோ.

வேறு.

அந்தாபத ரோரிரு வோரும யர்ந்து தூங்குங்
கொந்தாரிரு டுற்றுபு ழைக்கரு காய குன்றிற்
சந்தேகது ருக்கமெ னுவொரு சார்பில் வாழ்வோன் 99
வெந்தாபவி டக்கடு வன்னவி டாத கண்டன்.

நெறிதப்பிவ ரும்பிர யாணரை நேர டர்த்து
மறியற்சிறை யிட்டுயிர் வாதைசெய் வன்க ணாளன்
பொறிபுக்குழ லப்படு தீமைபு ணர்க்கும் வம்பன் 100
உறவுற்றல கைக்கழி துன்மதி யூட்டு கிற்போன்.

நீசங்கையா யின்வளர்த் தூட்டுநி ருதி மோச
நாசங்கைவந் ததொழி லாணர ராவி யுண்ணப்
பாசங்கைவந் தபடை யாள்படு நீலி யாய 101
ஆசங்கையென் னுமழிம் பிக்கடி யாம ணாளன்.

இப்பாதக ரக்கத னூமெ ழுந்து லாவி
வெப்பாலையை யஞ்சிமெய்ந் நூனெறி விட்டு நீங்கி
அப்பாலுறு வாரையி ருஞ்சிறை யாக்கி யாக்கி 102
எப்போதும்வ தைத்துயி ரூட்டுவ னில்ல வட்கே.

நெறிநீத்திரு வேதிய ருற்றிடு நீர்மை தேரான்
பொறியாத்தவ ரையடித் தாருயிர் போக்கி யுண்டு
வெறியாட்டின்ம யங்கிநி சாசர வெம்ப சாசன் 103
பிறியாதபெ ருந்துயில் கூர்ந்தனன் பேய்ச்சி யோடும்.

அன்னோநெறி விட்டய லேகிய வாத்த ரானோர்க்
கென்னோபுரி வாமென நாடியீ டேற்ற மார்க்கம்
இன்னேநனி காட்டுவ லென்றெழுந் தீண்டு வான்போல் 104
துன்னுரொளி வீசியெ ழுந்தனன் ஜோதி வெய்யோன்.

விடிகாற்றுயில் வீசியெ ழுந்துவி டாத கண்டக்
கொடியோனுரி மைப்பழ னக்கொடு வேலி சூழ்ந்த
படிமீதுந டந்திரா தேர்வுழி யாங்கொர் பாங்கர் 105
அடியார்துயி லப்படு நீர்மைகண் டாங்க ணைந்தான்.

...னிரு வர்கதி மார்க்கங்க டைப்பி டித்த
... ென்னகை பயத்தனைர்ந் தானு ரப்பித்
துண்டோளி... த் ...ான்சின விக்ய... ...ப்புக
கொண்டானவ ரும்விழித் தார்த்து கூற லுற்றான். 106

அஞ்சாதென்னெல் லையடி வைத்திடற் கார்கொ லாநீர்
எஞ்சாதசுர ரத்தெரி யிற்கொடி தென்சி னத்தீ
பஞ்சாகநும் மைத்தகிக் கும்மது பற்றி யாவி
துஞ்சாதமுன் னஞ்சொலத் தக்கன சொற்றி ரென்றான். 107

தீயோனிலை கண்டற வோருளந் தீந்து மாயப்
பேயன்ரு தவ்வுருக் கொண்டுழல் பெற்றி யீதென்
றாயாநிலை நின்றசை யாதறி வாக்கை குன்றிச்
சீயோன்மலை நோக்குபு வந்தனஞ் செந்நெ றிக்கே. 108

செல்லாறிழுக் கிமருண் டிந்நெறி சேர்ந்து நேற்றை
அல்லார்பொழு திற்புயல் வானம டர்ந்து பெய்த
நில்லாமழைக் கொல்கிநன் ஞானெறி நேடி யேக
ஒல்லாதொதுங் கியிவ ணுற்றன முற்ற தென்றார். 109

என்றிங்ஙன மாரியர் கூறலு மேத டாநீர்
நன்றுற்றப சும்புன்மி தித்தந டந்து ழக்கிக்
குன்றுற்றவெ னைக்குணி யாதகு லாவி யிப்பால்
ஒன்றித்துயி லும்விளைத் தீரெதி ருத்த ரிப்பீர். 110

அருளைத்துணை யாக்கின மென்றெம தாணை யாய
இருளைப்பகைத் தீரொளிக் கோர்பக லென்ப தோரீர்
பொருளைக்கெடுத் தென்னையு நீவிர்பு றக்க ணித்த
தெருளைக்கெடுத் தும்முயி ரார்குவ றிண்ண மோர்மின். 111

மலைவாரண வாய்க்கரும் பும்புலி வாய்ப்புல் வாயுஞ்
சிலையாருரல் புக்குலக் கைக்கிடை சேர்ந்த வும்பின்
புலையீர்புறம் போந்திடு மோவுயிர் போக்கு காறும்
உலைவாய்க்கம டத்தின்ம கிழ்ந்துயி ரோம்பு மின்னே. 112

என்முன்னுற வேகுதி ரென்றெதி ரேந டாத்திப்
பின்முன்வில காதய லேகினன் பேய னுண்டு
மன்முன்னெறி தப்பிய மாதவர் வாய டங்கி
முன்முன்னுறச் சென்றன ராருண் மொய்ம்பு குன்றி. 113



வெஞ்சீயமி ரண்டிடை யேகிய வீர முங்கண்
டஞ்சாதழிம் பர்ப்பொரு தோட்டிய வாற்ற லும்பின்
எஞ்சாமா ணத்திருட் சூழல்புக் கிண்டு மொய்ம்பும்
விஞ்சாரண னைவில கித்தனி விட்ட மாதோ. 114

அந்தோவளி திவ்வற றானெறி யாக்க நீப்பின்
நந்தாவொரு செல்வமு நன்மையு நண்ணு மேயோ
முந்தாரிரு ளும்பல தீமையு மோச மும்பல்
சிந்தாகுல முந்நடுத் தீர்வையுஞ் சேர்வ தல்லால். 115

நல்லாறிகக் கும்மதி மோசமோர் நச்ச ராவின்
பொல்லாவிடத் திற்புகுந் துள்ளுறப் புத்தி மாழ்கி
எல்லாநல மும்பறி போயதென் றேங்கி யேங்கிச்
சொல்லாடலின் றிவறி தேகினன் சூழ்ச்சி மிக்கான். 116

பம்பிப்பா வும்படு நாசப்ப ரப்பி னின்றும்
இம்பர்க்கரை யேற்றியீ டேற்றமி சைப்ப ரல்லால்
உம்பர்க்கர சன்றொறுக் காரென வுள்ளி யுள்ளி
நம்பிக்கைநம் பிநடந் தான்மறை நண்ப னோடே. 117

இவ்வாறிரு வோரைந டாத்தியி கழ்ந்து பேசி
வெவ்வாயரக் கன்வழும் பூன்முடை மிக்கு நாறித்
தெவ்வாயிருள் துற்றுசி றைப்புறஞ் சேர்த்தவ் வொல்லை
அவ்வாயில டைத்தா னாக்கிய கன்று போனான். 118

போனான்புலைப் பேய்மனை யாட்டிபாற் போந்தென் னாவிக்
கானாவமு தேயனை யாயுன தாணை யெல்லை
வானாட்டர சன்றொழும் போரிரு மாந்த ளாக்கண்
டேனாவெண் ணிச்சிறை யுய்த்தன னுற்ற தென்றான். 119

நன்றிங்கிது நாயக நீநார் பக்க னாளைச்
சென்றங்கவர் நோகவ டித்திசி னந்து தாமே
பொன்றும்வகை யாயதுர்ப் போதனை போதி யென்னாத்
துன்றுங்கொலை பாதக வம்பிது ணிந்து சொன்னாள். 120

தங்காதலி சொற்றலை மேற்கொடி ராத்த ணந்து
வெங்காலதண் டிற்கொடுங் கோலைவி டாத கண்டன்
பொங்காலமென் னச்சின விச்சிறைச் சாலை போந்து
அங்காரண ணையடித் தான்கைய லுக்கு மட்டும். 121

தண்டித்துநின் றுகெடு வீரினிச் சாரு கில்லீர்
பண்டுற்றமார்க் கம்படர் வேமெனும் பாழ்நி னைப்பைத்
துண்டித்துவிட் டுத்துணிந் தாருயிர் சோரு மாறு
தெண்டிக்கொளி னன்றியிப் பாடணுத் தீர்வ தின்றால். 122

நஞ்சுண்டுசா மின்மன மின்றெணி ஞணி கொண்டு
துஞ்சுண்டுபோ மின்னல தாவிதொ லைக்கு மேதி
எஞ்சுண்டதில் லையுல கத்தினி யீறு காறும்
அஞ்சுண்டடி யுண்டுயி ரோம்பலி ஞவ தென்னே. 123

வெயிலுற்றபோ துபனி பற்றற வீயு மாப்போல்
அயிலுற்றனை யகடுந் துன்பம டர்ந்த காலை
செயிருற்றபத் திகடை பற்றறத் தீர்ந்து பின்னும்
உயிருற்றனிர் வெட்கமில் லீர்கதி யுள்ளு தற்கே. 124

என்றின்னன பன்னினன் வாய்செறித் தேகி ஞனவ்
வன்றிண்புய வல்லரக் கன்மனை மாடு நோக்கி
அன்றின்னல டைந்துயிர் கைத்தழு தாக்கை நொந்து
நின்றங்கினை யும்மிரு வேதியர் நீர்மை தேர்வாம். 125

## வேறு.

பற்றுவி டாத கண்டக னென்னும் படுபாவி
சற்றுமி ரக்க மின்றிவ தைக்கச் சமையோடும்
முற்றுமு ழுந்தா ராக்கைத ளர்ந்தார் முனிகில்லார்
சொற்றில ரேதுந் தம்பிழை யுள்ளித் துரிசில்லார். 126

துஞ்சிருள் சூழி நஞ்சுகு முண்ணி துருநாற்றம்
வெஞ்சிறை யின்ன சஞ்சல மாய விடமேறி
எஞ்சுவ தென்னீ ரஞ்சலி ரென்பா ரிலராகப்
பஞ்சா முற்ற கிள்ளையின் மாழ்கிப் பரிவுற்றார். 127

வேதனை யாற்றான் வேதிய னுள்ள மிகநொந்து
காதக னென்றோ ஜீவனை வாங்கக் கருதாது
நோதக விட்டுப் போயினன் யானிந் நுகர்துன்பஞ்
சாதலி னன்றித் தீருவ தேயோ தகவுள்ளில். 128

என்னே யென்னே மன்னருள் வேண்டி யெரிபாலை
பின்னே யாக முன்னடை கூடிப் பிழையாமே
கொன்னே சோரக் குக்கலின் வன்கோ லடியுண்டிங்
கின்னே சாவாக் குற்றுயி ரொடுநைந் திறுமோசம். 129



என்றோ டன்றித் தன்னுயி ரென்று வெனைநட்ட
இன்று னுக்குங் கேடுவி ளைத்தே னிவன்விண்ட
பொன்னே யன்ன நன்மதி தள்ளிப் பொறியற்றேன் 130
அன்றோ வின்னு நச்சுயி ரோம்பி யழிகின்றேன்.

சும்மைவி ழுத்திச் சிலுவைதி கழ்த்தித் துரிசில்லாச்
செம்முறை நல்கி யேகென வுய்த்த திரியேகர்
மும்மைய ருட்கா ளாயிது காறு முடுகுற்ற 131
இம்மையி ருட்டுத் தீச்சிறை யுட்பட் டிடவேயோ.

இத்தனை மீதினி லென்னிகர் பாவிய ரெவருள்ளார்
பித்துறு பேதைபெ யர்த்தடி வைத்த பெரும்பாவம்
எத்தனை யோகொடி தெத்தனை யோபெரி திதுதேரில் 132
நித்திய நாசம டுத்தது மேலினி னினைவென்னே.

நன்றிம றந்தே னல்லுணர் வற்றே னவையுற்றேன்
இன்றுணை வற்கொண் டின்னல ளக்க ரிடையுய்த்தேன்
கன்றிய ரக்கன் வல்லடி யுண்டு களைகின்றேன் 133
பொன்றலு மில்லே னென்செய வுள்ளேன் புலையேனே.

ஆன்மசு கத்துக் காயிக வாழ்வை யறவீசி
ஊன்மலி துன்பை யூடுரு விப்புக் குபர்சீயோன்
வான்மலை முன்றில் வந்தும்வி ழுந்தேன் மதியற்றிக் 134
கான்முழை யந்தோ நன்றிது நன்றென் கதிநாட்டம்.

பூதல மெள்ளிச் சீயென வையும் புலையேனை
மீதல முங்கொள் ளாதுவி டுக்கும் விசுவாச
காதக னீச னென்றினி யென்னே கடையாய 135
பாதல மொன்றே கொள்ளவி ருந்தேன் படுபாவி.

பேணு தாவி யூனுடல் பேணிப் பிழைபட்டேன்
வாணு ளல்கிற் றுரிருண் மூடி வதையுண்பேன்
சேணு டெட்டிப் போகவி டுத்தேன் திமிரார்வங் 136
காணு நின்றேன் புல்லுயிர் பொன்றுங் கடைகாணேன்.

என்னம னங்கைத் தின்னன பன்னி யிடருற்றான்
பொன்னக ரந்தோ போக்கினெ னென்னுப் பொருமுற்றான்
தன்னிக ரில்லாத் தற்பா ராஜன் சமுகத்துத் 137
துன்னவு நாணி மூர்ச்சைய டைந்தான் துரிசில்லான்.

ஆரிய னிவ்வா றுற்றல னாகி யயர்வெய்தக்
கூரிய வைவேல் புண்படு நெஞ்சு குளித்தென்னப்
பேரிடர் துற்றி யாவிய மூங்கிப் பெரிதேங்கிச்
சீரிய நம்பிக் கையுமுள முட்கித் தெருமந்தான். 138

பின்றையும் வெய்யோ னாற்றுயி ரோம்பும் பிணமன்னீர்
இன்றொரு காலு மீட்சிறு மக்கிங் கினிநீரே
கொன்றுகொ ளிற்றான் பொன்றுமி லென்புக் குவைகாண்மின்
முன்றிலி னென்னாப் போயினன் வைது முனிவோடும். 139

புந்திசி றைப்பட் டாரழல் தீண்டிப் புகர்புல்லி
முந்துச னிக்கண் மாலைய டைந்து முழுதுந்தாம்
வெந்துய ரன்றி வேறுண வேது மிசையாராய்
நந்துறு காலை வேதிய னின்ன நவிலுற்றான். 140

வேறு.

எம்பி நின்சொலி கந்துள வென்மதி கேடுந்
தம்பி ரானெறி விட்டசண் டாளமுஞ் சார்ந்து
வெம்பி யீண்டுவி டாதகண் டப்பெயர் மேவிக்
கும்பி வாதைகொ டுப்பதிங் கென்செயக் கூடும். 141

தேவ கோனகர் கிட்டிய தென்றுசெ ருக்கிப்
பாவ காரியிப் பாழ்ஞ்சிறைப் பட்டனெ னந்தோ
கோவி ளங்கும ரேசனைக் கூவிளிக் கொள்ள
நாவெ ழும்புகி லாதுள முட்கிடு நாணி. 142

வல்ல ரக்கனொ டேயம ராடிடும் வன்மை
நல்ல ருட்டுணை யோடுகை விட்டது நம்பி
கொல்ல வுங்கரு தான்புரி யுங்கொடு வாதைக்
கெல்லை யில்லையிப் பாட்டினுக் கெத்தனை வைகல். 143

பெருக்க வாதையோ டாத்தும ஜீவியம் பேணி
இருக்கை தன்னிலு மாவியை யெவ்வகை யேனும்
நெருக்கி யொல்லைவி டுத்திற வெய்தலும் நேரே
ஒருக்கு சாவுமு வப்பெனக் குண்மையி தோர்தி. 144

வள்ள லுய்த்தவ ருட்பய னொவறும் பாலைக்
கொள்ளை யிற்பறி போயின் வுள்ளக்கொ திப்பே
எள்ளி யென்னைய டர்த்தவி னென்னுயிர் மாய்ப்பான்
உள்ளம் வைத்தனெ னீதென துள்ளுறை யென்றான். 145



காவி லானுரை காதுறக் கேட்டுநம் பிக்கை
விரவு துன்பிற்கு வெந்நிட லோநம வீரம்
பரவை வைப்புக்கி யற்கைபன் மாறுதல் பாராய்
இரவு முண்டுப கலுமுண் டேனுனக் கின்னல். 146

சுருதி யுத்திய நுபவந் தூயசன் மார்க்கங்
கருது முத்தம பத்தியென் றாயக ணக்கில்
ஒருதி றத்துமொவ் வேனெட்டு ணையுனக் கேனுங்
தருதி யீண்டுவி டைசிறி யேன்சில சாற்ற. 147

புரவு நூனெறித் தத்துவ போதத்திற் போந்த
காவி லாமெய்ய நுபவக் காட்சியை காணும்
உரவு நீருல கத்தையு வர்த்துளை யுண்மைக்
குரவ னீயெனக் கென்றுமி தென்மனக் கொள்கை. 148

ஐய நம்மது தாபநி லைபர மாயில்
வெய்ய நிர்ப்பந்தம் வேறிலை யித்துயர் மேவி
நையுஞ் சீவனி லும்மர ணம்மிக நன்றாம்
மெய்ய தாயினும் விள்ளவொன் றுள்ளது மேலோய். 149

மாக மாநக ராதிபன் வன்கொலை செய்யாய்
ஆக வென்றத றிந்தும றிந்தில ரேபோற்
சோகம் விஞ்சியன் னேதற்கொ லைத்தொழில் சூழ்ந்து
சாக வெண்ணுத லோதரு மந்தனித் தக்கோய். 150

ஆக்கை யைத்தனி யாவியை யாக்கையு மாக்கிக்
காக்கை யும்முடை யாருளர் நாம்பகை காட்டிப்
போக்கை யுள்ளுவ தோபுல மைத்தன்று பொய்யா
வாக்கை யுள்ளுதி வாய்த்திடு மோநித்ய வாழ்வு. 151

எத்து ணைப்பெருந் துன்பமு னக்குள வேயோ
அத்து ணைப்பெருந் துன்பமு மெற்குள வாக
வித்த கத்திற லோய்சிறி யேனினும் வெம்பிச்
சித்த நொந்துயிர் தீர்வலென் பாயிதென் சீர்மை. 152

ஒன்றி யாயெதிர்த் தப்பொல்லி யோனையு மோட்டி
வென்றி கொண்டுக தித்தனை வெவ்விரு ளார்ந்த
பொன்று பௌவம்பு குந்துநெ றிக்கொடு போந்தாய்
குன்று குன்றென நோவுங் குன்றிலை கொற்றம். 153

வஞ்ச மாயக்க டைப்புர ளிக்கும்வம் புக்கும்
வெஞ்சி றைக்கும்வி லங்குக்கும் வெந்துய ருக்கும்
துஞ்ச லுக்குந்து ளக்கமில் லாமனத் தூயோய்
அஞ்சு கிற்றிகொ லாமிவ்வ ரக்கனுக் கைய. 154

கருதி னெம்மட்டுக் குங்கடுங் கோலதி காரம்
நிருத னுக்குச்செ லுந்திரு வுள்ளநி னைப்பின்
பிருது விக்கணின் றுஞ்செறுத் தெத்தனை பேரோ
பொருது மற்றிவன் கையகன் றுய்ந்தனர் பூர்வம். 155

எந்தை யென்னைம றந்திடர்ப் பட்டனெ னின்னே
முந்தை போலரக் கன்னிவண் முன்னிடில் யானே
புந்தி யோடெதி ரூன்றிப்பு றந்தந்து போகத்
தொந்த யுத்தத்த டர்க்குவ னீமதி சோரேல். 156

மருளி னெய்தின மாலிம்ம றக்கொடுஞ் சூழல்
இருளி னம்பல வினத்தி யற்கையை யீசன்
தெருளு றுத்தினர் நித்திய ஜீவசெல் வத்தை
அருளி னுக்கம ருளுமெ னற்கைய மின்றால். 157

அந்த ணர்க்கரு ளிட்டிகை யாமற வோய்நின்
சிந்தை மற்றிது சீரிதன் றுனுயிர் தீய
வெந்த ழற்கிரை யாயினு மிப்படு வெட்கம்
நந்த மைத்தொட ராவகை நாடுதி நல்லோய். 158

என்று கூறினன் வேதியற் கோர்விகற் பின்றி
நன்று வான்கதிப் பற்றுவி டாதநம் பிக்கை
மன்றல் வாசகங் கேட்டனு மாதவன் சிந்தை
யொன்றி நின்றங்கு ரத்தது மென்மெல வூக்கி. 159

திருந்து நம்பிக்கை செம்மொழித் தேனொடு சேர்ந்த
மருந்தெ னுநன்கு ணர்ந்துதன் வண்செவி வாயா:
அருந்தி னன்மறை வாணன கத்தருள் பூப்ப
வருந்து மாவித ளிர்த்தது மாண்டழை மல்கி. 160

குளிர்ந றும்பொழி லூடுகு லாயபைந் தென்றல்
வளிய கச்சிறை யூடும திந்திட வல்லே
தெளிவு தோன்றித்தி ருத்தகு வேதியன் சென்றான்
அளிப டர்ந்தவ ருட்கிரு பாசனத் தண்டை. 161



அண்டர் போற்றும ரசிளங் கோமகன் றாளில்
வண்ட மிழ்ச்சுவைத் தேன்மண மாலிகை சூட்டிக்
கண்டு ளித்திரு மஞ்சனங் காதலி னாட்டித்
தெண்ட னிட்டுவிண் ணப்பமின் னோரன செப்பும். 162

## தேவாரம், பிழைநினைந்திரங்கல். (நேரிசை.)

1. நின்னடிக் கன்பு செய்யா நீசனேன் ஈச னேயுன்
பொன்னடிக் கன்பு செய்யும் புண்ணியர் குழாத்துட் புக்கு
நன்னடை கற்று மில்லே னன்றெலா மொருவி நின்ற
என்னடை யிகந்து மில்லே னென்செய்வான் றோன்றி னேனே.

2. தன்னுயிர் போல வித்தத் தடங்கடற் புடவி மேய
மன்னுயிர்க் கிரங்கி மேனாள் மநுமக னாகத் தோன்றி
இன்னுயிர் கொடுத்தி ரக்ஷை யீட்டிய விறையை யேத்தி
என்னுயி ரோம்பு கில்லே னென்செய்வான் றோன்றி னேனே.

3. வன்கணன் படிறன் பொல்லா வஞ்சனென் றிகழ்ந்தி டாதென்
புன்கணுக் கிரங்கி யோர்பூம் பொழிலிடைப் புனித மூர்த்தி
நின்கணீர் சொரிந்து செந்நீர் நிலத்துக வியர்த்தல் கண்டும்
என்கணீர் சொரியக் காணே னென்செய்வான் றோன்றி னேனே.

4. கதிரொளி மறையப் பூமி கம்பிக்கச் சிமயங் கீறிப்
பிதிர்படச் சிலுவை மீது பெருந்தகை குருதி சிந்தி
வதைபடு திருக்கோ லத்தை மனக்கணாற் றரிசித் தேத்தி
இதயநெக் குருகு கில்லே னென்செய்வான் றோன்றி னேனே.

5. கன்றிய காம நெஞ்சக் கள்வனேன் காம நீத்த
நன்றிகொண் மாந்தர் போல நடித்திடு நடலை யுள்ளேன்
ஒன்றிய மனத்தோ டெந்தா யுன்னருட் டுணையை நாடி
என்றினி யுய்யப் போவே னென்செய்வான் றோன்றி னேனே.

6. தேசுற்ற மின்னார் மோகச் சிக்குளே சிக்கிச் சிந்தை
மாசுற்றே னுலக மாய வாழ்க்கையை மருண்டு நச்சி
வேசுற்றேன் கவலை யாலே மெலிவுற்றேன் விழைந ராலும்
ஏசுற்றேன் ஈச னேயா னென்செய்வான் றோன்றி னேனே.

7. அருளுடை முகிலை யன்ப ராருயிர்க் குயிராய் நின்ற
தெருளுடை யமுதை யுள்ளந் தித்திக்குஞ் செழுந்தேன் வைப்பை
மருளுடை யறிவிற் கெட்டா வாழ்வினை வழுத்தி வாழேன்
இருளுடை மனத்தேன் யானே யென்செய்வான் றோன்றி னேனே.

8. பொறிவழி யுள்ளம் போக்கிப் புலைநெறி யொழுகும் பொல்லேன்
அறிவிலி யாத லாலே யாத்துமக் கவலை கொள்ளேன்
செறியுடற் போக நச்சித் திரண்டபே ராசை யென்னும்
எறிகடற் குளித்து நின்றே னென்செய்வான் றோன்றி னேனே.

9. சுத்தனே வல்ல னன்மை சொல்லவெட் டுணையு மில்லேன்
பித்தனான் பெரிய பாவி பிழைக்குமா றுணர மாட்டேன்
நித்தநீ யருளு மீவை நினைகிலே னன்றி யீனம்
எத்தனை யிறைவ னேயா னென்செய்வான் றோன்றி னேனே.

10. மெய்த்திடப் பிறர்க்கு வேதம் விளம்புவன் விரித்தெ னுள்ளே
உய்த்ததை யுணர மாட்டே னொழுக்குடை யவர்போ னின்றுங்
கைத்திடேன் பாவப் பிச்சைக் கடுகிநாட் கழிய வாளா
எய்த்திளைத் தயர்ந்தே னெந்தா யென்செய்வான் றோன்றி னேனே.

11. அழுகிலேன் மனங்க சந்திட் டளியனேன் பிழையை யுன்னி
விழுகிலே னின்பா தார விந்தமே கதியென் றேத்தித்
தொழுகிலே னாவி யாலே தொடர்பவத் துயிலை நீத்திங்
கெழுகிலேன் ஈச னேயா னென்செய்வான் றோன்றி னேனே.

12. பன்முறை யிதய மென்னும் படுகளைப் பார்க்குந் தோறும்
நன்மையோ ரணுவுங் காணே னஞ்சினை யமுதா நச்சும்
புன்மையேன் போத மில்லேன் புவிப்பொறை யாய தன்றி
இன்மையேன் பயன்மற் றெந்தா யென்செய்வான் றோன்றி னேனே.

தேவாரம் முற்றிற்று.

## வேறு.

இன்னவா றகத்துத் தேம்பி யெழின்மறை வாணன் றேவ
சந்நிதி யடைந்து போற்றிச் சனியிரா விடிமட் டாக
மன்னிளங் குமரன் செய்ய மலரடி வலிந்து பற்றி
அந்நிலை விடாது நின்றா னருட்டுணை யணுகுங் காறும். 163

உலகிரு ளகற்றி வெய்யோ னுதயத்துத் திகழா முன்னம்
அலகிலாக் கருணைப் பௌவத் தருட்கதி ரலர்ந்து தோன்றி
இலகொளி பரப்பிச் சிந்தை யிகலற நூறிப் போர்ப்பப்
பலகலை ஞானி யுள்ளம் பத்தியாற் சொலித்த தன்றே. 164

அகத்தொளி மலித லாலே யாரிய னயதி நீங்கி
மகத்துவ தெய்வ வேந்தை மனமொழி யார வாழ்த்தி
மிகத்துதி பகர்ந்து போற்றி மெய்யெலாம் புளகம் போர்ப்ப
முகத்தெழில் குலவி நம்பி கேளென மொழிவ தானான். 165

பொங்குபே ரின்ப நாட்டுப் புரவல னருளே யீண்டு
மங்கொளி விளக்கைத் தூண்டி வளர்த்திய வண்ண நின்வாய்த்
துங்கவாக் குருவாய்த் தோன்றித் துயல்வரு மனச்சந் தேக
வெங்கொடு மயலி னின்று மீட்டெனைப் புரந்த தின்னே. 166

உஞ்சன முஞ்ச மென்னின் னுயிரனை யொல்லை யேயிவ்
வெஞ்சிறைக் கதவின் வன்றாள் திறந்தியாம் வெளிப்பட் டுய்வான்
சஞ்சல மிகுசந் தேக தருக்கத்தைத் தணந்து போக
எஞ்சலில் கருவி யாய திறவுகோ லுளதொன் றென்பால். 167



மற்றது பரம சியோன் மலைக்கதி பதியே நல்கப்
பெற்றனெ னெறிதி றம்பு பீழையான் மனக்க லக்கம்
உற்றியா னுணர்ந்தேனல்ல னொள்ளியோ யெழுக வென்னாத்
தெற்றெனக் கோலை யிட்டான் றிறந்தது சிறைக்க பாடம். 168

திறந்தது சிறைக்க பாடஞ் செவ்வியோ ரிருவர் சிந்தை
அறந்திகழ் ஜீவன் முத்தி யணிநக ரத்தின் வாயிற்
சிறந்தசெம் பொற்க பாடந் திறந்தென வுவகை பூப்ப
மறந்திகழ் சிறையொ ரீஇப்பின் மதிற்றலைக் கடையைக் கிட்டி. 169

மெய்த்தகு திறவு கோலின் வியன்கடைக் கதவு மேய
சித்தசஞ் சலமும் வீசிச் செவ்வனா னெறியைச் சேர்வான் [170
வித்தகர் விரைந்து சென்றார் கதவொலி விழிப்புக் கூட்டப்
பத்தர்கை யகன்றா ரென்னாப் பரிந்துளம் பதைத்தான் வெய்யோன்.

ஒல்லையி னெழுந்து பின்சென் றோடினா னாப்பி னானச்
கல்லைநா றிரவி யோங்கி யலர்தலிற் கையுங் காலும்
புல்லிய திமிரால் யாண்டும் போக்கற்று விழுந்தான் பொங்கி
எல்லையி லகங்கா ரத்தா லீடுபட் டழிந்தா னிப்பால். 171

மாதவர் ஜீவ பாதை மருவுமட் டாக வோடிப்
போதரீஇ விடாத கண்டப் புலைமக னெல்லை தாண்டி
வேதநா னெறியிற் புக்கு விட்புலத் தாசன் செய்த
மாதயை யுள்ளிப் போற்றி வணங்கினார் வழுத்திப் பல்கால். 172

வறுமையா னெறிதி றம்பி மானத்தீக் கொளுவி யாவி
குறுமையுற் றயருங் காலை கொளுநிதிக் குவைதொக் கார்போல்
தெறுமழற் பாலை யஞ்சிச் சிறைமறிந் தயருங் காலை
பொறுமைவேந் தருள்வந் துய்ப்பப் பூரித்தா ருள்ளந் தூயோர். 173

ஔவிய மவித்த சிந்தை யாரிய ராறித் தேறிச்
செவ்வழிப் போக்க ரீண்டு திகைத்துள மருண்டு நம்போற்
றெவ்வழி பிடித்துத் தீங்கு திளைப்பரா லென்னச் சிந்தித்
தவ்வழி விலக்கி யுய்ப்பா னாய்ந்தமம் றிதனைச் செய்தார். 174

அருஞ்சுர மஞ்சி செருக கயல்வழிப் படிற்சந் தேக
இருஞ்சிறைத் தருக்கம் புக்கான் டின்னல்செய் விடாத கண்டப்
பெருஞ்சழக் கனுக்காட் பட்டுப் பேதுற வருமற் றென்னாக்
கருஞ்சிலை பொறித்தாண் டூன்றிக் கதிவழி காட்டி யுய்த்தார். 175

விடாதகண்டப் படலம் முற்றிற்று.

## ஆனந்த சைலப் படலம்.

இனையன நிகழ்ந்த பின்ன ரெமக்கினி நிருதன் செய்யும்
வினையெது மின்றா மிந்த வித்தக ராஜ வீதி
தனையவ னணுகா னென்னாத் தம்மிலே யுவந்து பேசி
முனைவனைத் துதித்தார் பல்கான் முறையறி ஜீவன் முத்தர். 1

பானமு மின்றி நானாட் பசித்தலில் ஞான ஜீவ
போனகந் திருத்தி யுண்டு புத்துயி ரடைந்து தேவ
ஆனக முழக்கங் கேட்கு மானந்த சைல நாடி
வானெறி மருவிப் போனார் வானெறி மருவி வந்தார். 2

காவத மிரண்டு மூன்று கடந்துசென் றிடுது மாயில்
ஜீவவா னந்த மல்குஞ் செழுங்கிரி சேர்து மென்னா
ஆவலித் தறவோர் சிந்தித் தடுத்தடுத் தேக வேகத்
தாவரு வசந்த மென்கால் தவழ்ந்ததச் சார லின்றும். 3

குளிரிளந் தென்றன் மேனி குளித்தலுந் தளர்வு நீங்கி
இளிவரு ஜென்ம தோட மிரிந்துபே ரின்ப மல்க
நளினமொத் தலர்ந்து செவ்வி நகைமுகந் திகழத் தூயர்
களிமகிழ் சிறப்பச் சென்று கனகமால் வரைகண் ணுற்றார். 4

### வேறு. (சந்த விருத்தம்.)

புதுவிரை மதுமலர் பொதுளிய முதுசினை பொழிலுழை தழுவுவ புயல்
வதுவையினதிபதி பொருவொரு திருமையின் மலைகலை பொழிவன மழை
அதிரிடி முழவெழ வரிமுரல் சுருதியி னகவுவ மகளிரின் மயில்
மதுரிய நறைகுட மடிபடி யுகுபய னளவிய விளைவன வயல். 5

மாலுறு கொடுமுடி மணியணி யெனவிழு மருவிகள் பொருவன தடம்
வாலிய திருவருள் பொருபெரு வளநனி மருவிய பெருவர நதி
சோலிய ஜெபதப விரதரும் வாதருப் வான்முறை குடைவன துறை
பாலடை மலைமிலை பரிசென விரசுவ பருவா லொருவுறை பனி. 6

மழகளி றெழிலுளை யரிவரி யுழுவைக ளுழைவிழை வொடுதிரி வனம்
தழலென வொழுகொளி தழுவிய கொழுமுகை தழையொடு செழு [முவ தரு
கழுதுக ளுழுதுழு திதழவிழ் செழுமலர் களகள சொரிவன மது
பழுதறு கிரியையி னெழுதுணர் விரியலர் பலதிசை கமழுவ கடி. 7



அடிமுறை யிடுதவ மகளிரி னணிநடை பயிலுவ பிடிமட வனம்
கொடியிடை யவர்மொழி யிசைவழி பழகுவ குலவிய கிளியொடு [குயில்
வடிவழ கியவிரி சிகையுடை குடிகுண மாபியல் பழகுவ மயில்
நொடிகுவ தெவனவ ரமுதுகு கடைவிழி நுதியொடு பழகுவவருள். 8

### வேறு.

ஜகநெறி யொருவிய தவநெறி மகளிர்
முகமென வலருவ நறைகமழ் முளரி
தகவுடை யவர்நகை தவழ்தரு துவர்வாய்
நிகரென வலருவ நிலவுறு குமுதம். 9

ஏந்திழை யவரொளி திகழெயி றெனவே
தேந்தள வணிநறு முகையிணர் செறிவ
மாந்தளிர் புரைவடி வினர்கர மருளக்
காந்தள மலர்நனி கஞலுவ ககனம். 10

குணவணி தழுவுவர் குலமட மகளிர்
தணிவரு மறநெறி தழுவுவர் புருடர்
மணியொலி தழுவுவ சினகர மறையின்
திணிசுடர் தழுவுவ திகழ்தரு மிதயம். 11

மதிநல மருளுவ மறுவறு சுருதி
துதிநல மருளுவ வடியவர் தொகுதி
நிதிநல மருளுவ நிறைதரு சுகிர்தங்
கதிநல மருளுவ கடிகமழ் சைலம். 12

வடிவன மிடைவன மகளிரி னுலவிக்
கொடிவன மிடைவன துடியிடை குலவித்
தடிவன மிடைவன வெழிலொளி தழுவிக்
கடிவன மிடைவன சினைமலர் கஞலி. 13

மனைதொறுந் திகழுவ மறையொளி விளக்கம்
வினைதொறுந் திகழுவ விதிதரு புனிதஞ்
சினைதொறுந் திகழுவ கொழுங்கனித் திரள்கள்
நனைதொறுந் திகழுவ நறைநுக ரளிகள். 14

கொடியன மலையல திலைபுரி கொடிய
கடியன மலரல திலையுளா கடிய
இடியன முகிலல திலையர சிடியே
குடியன தவமல திலைகெடு குடியே. 15

குளிப்பர்புண் ணியம்பொலி குருதியர் தடத்தில்
களிப்பர்நற் சருணையைக் கனிவொடு பருகி
விளிப்பர்தம் முடன்மிசை குதிரென விருந்தை
அளிப்பர்தெள் ளமுதினை யகமுக மலர்ந்தே. 16

நாடக மிளிர்வன நனிமிகு தருமம்
நாடக மிளிர்வன நனியருள் பொழில்வாய்
நாடக மிளிர்வன நனிதொகு மயில்கள்
நாடக மிளிர்வன நளிரிள வனசம். 17

வேறு.

வான ரங்குதிக் குங்கலை மாமதி
வான ரங்குதிக் குந்தரு மாச்சினை
வான ரங்கம டுக்கும லர்கடி
வான ரங்கம டுக்கும டவனம். 18

மாத ருக்குல மல்கும லைக்குடி
மாத ருக்குல வாமனை மாட்சிமை
மாத ருக்குல காதிய வஞ்சமும்
மாத ருக்குவர் மாசறு மாடவர். 19

கோட்டு மாக்கிளை தூங்குங்கொ ழும்பொழில்
கோட்டு மாக்கிளை தூங்குங்கொ ழுங்கனி
கோட்டு மால்வரை தூங்குங்கு ளிர்புயல்
கோட்டு மால்வரை தூங்குங்கு ளிர்மதி. 20

மான்ம தப்படு மைவரை கோளரி
மான்ம தம்படு மைவரை வைப்பினம்
மான்ம தம்படு மைவரை மாதவர்
மான்ம தம்படு மைவரை வாட்டுவார். 21

ஓதி மக்குல நாண்மல ரோடையை
ஓதி மக்குல மோகையி னுடுவ
ஓதி மக்குகை யொண்டவர் மாமறை
ஓதி மக்குடி லூடுற நாடுவார். 22

ஆய மாதா ணிவரு மாடவர்
ஆய மாதா ணிநிதிப் பெட்டியும்
ஆய மாதா ணிகலப் பேழையும்
ஆய மாதா ணீதா ணுணையே. 23



சந்த னந்தந்தி கழுந்த டங்களில்
சந்த னந்தந்தி கழ்தடஞ் சாரலில்
வந்த னந்தந்தி மாலையுங் காலையும்
வந்த னந்தந்தி றைவனை வாழ்த்துவார். 24

வேறு.

மலையெலாம் புனிதஞ் செல்வு மருங்கெலா மகிழ்ச்சி தெண்ணீர்
நிலையெலாங் கருணை நீத்தம் நெறியெலா நீதி மார்க்கம்
கலையெலாஞ் சுருதி பேச்சுக் கனிவெலாந் தேவ பாஷை
தலையெலா மாசீர் வாதஞ் சார்பெலாம் பசும்பொற் கேணி. 25

மர்தவப் பள்ளி தோறும் வான்முறைத் தொழும்ப ரீட்டம்
பாதவப் புனைக டோறுஞ் சுருதிதேர் பனவ ரீட்டம்
மேதகு கழகந் தோறும் விழுக்கலை மழவ ரீட்டம்
போதலர் பொய்கை தோறும் புகாறு மகளி ரீட்டம். 26

கள்ளவிழ் முல்லை யீன்ற கடிமுகை யனைய மூரற்
பிள்ளைகள் விமல ஞானம் பிறங்குதீங் குரலி னோடு
வள்ளலெம் மிளங்கோ மான்செம் மலரடி வழுத்தி யேத்தும்
தெள்ளிய மதுர கீதஞ் செவிமடுத் திடுமெப் பாலும். 27

விருந்தெதிர் கொண்டு நாடி விழுத்தகு மரபி னோம்பிப்
பொருந்துமெய் யன்பிற் றூய போனக மளிப்பர் பல்லோர்
வருந்துவோர்க் குடைமைத் தாங்கும் வண்கையி னுதவி நேர்ந்து
திருந்துநன் மதிகள் சொல்லித் தெருட்டுவார் தம்மிற் பல்லோர். 28

பொருளெலாம் பொதுமை மேய புகழெலா மிறைமை நாடும்
அருளெலாஞ் செல்வ முள்ளத் தவாவெலா மறுமை யாக்கம்
தெருளெலா மான்ம போதஞ் செயலெலாந் திருத்தொண் டென்ப
மருளெலா மொழித்து நோற்கு மலைப்பிர தேசத் தோர்க்கே. 29

பெய்வது கருணை மாரி பெருகுவ தன்பி னீத்தஞ்
செய்வது தருமப் பைங்கூழ் திருந்துவ துயர்பே ரின்பம்
உய்வது ஜீவ கோடி யோங்குவ தமலன் சீர்த்தி
தைவிக பரமா னந்த சைலப்பிர தேசத் தென்றும். 30

வானந்தண் ணுமையா வண்டு பாண்செய மயில்க ளாடக்
கானந்தன் னவையாச் செய்ய கமலக்கண் களித்து நோக்கிப்
பூநந்து நறுந்தண் கொன்றைப் பொன்னணிப் பரிசு நல்கி
ஆனந்த சைல வேந்த னரசுவீற் றிருப்பன் மாதோ. 31

உணாநிலை கடந்து நின்ற வுன்னதா திபனே மேலை
குணாகடற் புவிகூட் டுண்ணக் குவித்தபே ரின்பக் கொள்ளை
வணாநிலை தெருண்டு துய்க்கு மாதவ ருணர்வா ரன்றித்
தணாயுளா ருணர்ந்திவ் வென்று சாற்றலாந் தகைமைத் தேயோ. 32

நித்திய சுகபே ரின்ப நிலவளங் கெழுமு ஞான
வித்தக கிரியின் மீது விசும்புற மிளிர்ந்த தூய
சத்திய நெறியை நாடித் தணப்பில்பே ருவகை யோடும்
முத்திநாட் டிறையைப் போற்றி முடுகினர் ஜீவன் முத்தர். 33

செம்மல்தம் முரிமை யாவும் ஜீவயாத் திரிக ராய
நும்மவாக் குறித்திங் குய்த்தார் நுகர்ந்துபின் சேறு மீண்டு
வம்மினோ வம்மி னென்னா மங்கலக் கொடிக்கை காட்டி
அம்மலை விளிப்ப தேபோன் றமைந்தன தெரியக் கண்டார். 34

மோனநாட் டரசனேவற் பணிவிடை முறையிற் செய்யும்
வானவர் தொகுதி யீண்டி வந்துவந் தேகக் கண்டார்
சேனைகா வலருக் கெல்லாச் சித்தமு மிணங்கிக் கீழ்ப்பட்
டானிக கரும மாற்று மந்தண ரொழுக்கங் கண்டார். 35

தண்ணளி கவிந்து வானந் தருமருண் மாரி கண்டார்
புண்ணிய ஜீவ கங்கை பொங்குநீர்ச் சுனையுங் கண்டார்
நண்ணிய திசைக டோறு நன்மையுந் திருவு நட்புங்
கண்ணிய தருமத் தோடு களிநடம் புரியக் கண்டார். 36

கொள்ளைவண் டிமிரின் னோசை கோகிலத் துவனி பூவை
கிள்ளைகள் கிளக்கு மென்றீங் கிளவிபுள் ளொலிமற் றெங்குந்
துள்ளிய மதுர கீதஞ் செவிப்புலந் தொகுப்ப யாவும்
வள்ளல்வண் புகழாக் கண்டு கேட்டுள மகிழ்வர் மன்னோ. 37

தீர்த்தனை யேத்திப் போற்றி ஜெபதபம் புரியுஞ் செவ்வி
ஆர்த்தியிற் குழுமித் தேவா ராதனை புரியுஞ் செவ்வி
கீர்த்தனை கிளக்குஞ் செவ்வி கேட்டதி சயித்துக் கிட்டிப்
பார்த்தருட் செயலை வாழ்த்திப் பரவச ராகி நிற்பார். 38

வாவிநீ ராடி வாடா மதுமலர் மாலைசூடி
ஓவிலா னந்த கீத முளங்கனிந் துருகிப் பாடிக்
காவெலாங் களித்து லாவிக் கனிந்தமுந் திரிகை யாதி
ஜீவபோ னகமுண் டுள்ளந் தெருண்டுறா னெறிசெல் காலை. 39



வித்தக ரிருவர் செல்லும் விழுத்தகு மரபை நாடி
அத்தலத் தறவோ ராய வண்டரோர் சிலர்வந் தீண்டி
வைத்தமா நிதிகண் டார்போல் வரன்முறை குழுமி மொய்த்தார்
உத்தம தொழும்ப ரன்றோ வுயிர்த்துணை யுலகுக் கம்மா. 40

குழுமிய வாய ருள்ளக் குறிப்பவர் வனச மன்ன
செழுமுக மலர்ச்சி காட்டத் தெரிந்துகோ ளூன்றி நின்று
விழுமிய குணத் தோனய வேதியன் விரும்பி நோக்கி
உழுவலன் போடு மற்றீ துசாவுவான் விநய மாக. 41

உன்னத பதவி யோமற் றுலகமோ வும்பர் மேய
பொன்னில வுலகந் தானோ வதனொடு புவியைச் சேர்த்து
நன்னிலை நிறுப்பா னுய்த்த நரதேவ விஞ்சை நாடோ
பன்னரு நித்திய செல்வக் களஞ்சியப் பகுதி தானோ. 42

யாதெனத் தேறு கில்லே மெம்மனோர் கருத்துக் கெட்டா
மேதகு பொருளுஞ் செல்வப் பெருக்கமும் விமல ஞான
போதகந் தரும்பல் காட்சிப் பொதும்பரும் பிறவு மெல்லாம்
ஆதரிப் பவரார் யார தறுபவ மறிய கில்லேம். 43

மற்றிது தான்கொல் முத்தி மாநகர் புகுத்து மார்க்கம்
கொற்றவ னகருக் கின்னுங் குறிப்பிடு தூரமெம்மட்
டுற்றுமே விடிற்றுன் பேயோ வுதவியோ நிகழ்வ தோர்பால்
இற்றைநா ளிரவு தங்கி யேகவீண் டமையுங் கொல்லோ. 44

ஆயவித் திறங்க ளெல்லா மறிவுறு மாறெம் பக்கல்
நேயம்வைத் துரைக்க வென்னா நிகழ்த்தலு மாண்டு தொக்க
தூயரி லொருவன் கிட்டித் தொல்லையே பகர்முன் னனபு 45
மெய்யாலம் பிஷேகமு மவனன விதந்துரை யாட லுற்றான்.

ஐயன்மீர் காணு மிந்த வானந்த சைல மென்னுந்
தெய்விக கிரியுஞ் சேர்ந்த சிமயமுஞ் செழுந்தண் காவும்
மையறு பொருளுந் தொக்க வளமுமன் னுயிரு மெல்லாம்
வையக முய்யக் கொண்ட மாநுவே லுரிமை தேர்மின். 46

இத்தகு புண்ணி யக்ஷேத் திரத்தினுக் காக வெம்மான்
மெய்த்திரு மேனி சிந்துங் குருதியின் விலைப்பா லீட்டி
வைத்துமுப் பகையை வென்று வளம்படுத் தமலன் செங்கோல்
உய்த்திள வரசா யென்று முவந்துவீற் றிருக்கின் றூரால். 47

பண்டுதொட் டின்று காறும் பணிவிடைக் கமைந்த வுண்மைத்
தொண்டரை நிறுவி ராஜ்ய துரைத்தன நடத்தா நிற்பர்
அண்டர்கோ னகரை நாடி யடுக்குநர் வேண்டு மெல்லாம்
உண்டொரு குறையு மில்லை யுத்தர மெமக்கு முண்டால். 48

மெய்வழி பிடித்து நின்றீர் விலகினீ ரல்லீர் விண்ணாட்
டுய்வழி யிதுவே யாகு மும்மையித் தலமீ ருகப்
பொய்வழிப் படாது காத்த புண்ணிய மூர்த்தி யார்செங்
கைவழி காட்டி யின்னுங் கடைவரை காக்கு மன்றே. 49

கொற்றவ னகர்க்கிம் மேலே குறிப்பிடு தூரங் கூறில்
பற்றுளார் தமக்குத் தூரம் பற்றிலார்க் கண்மை யென்றும்
உற்றுணர்ந் தூன்றி நோக்கி யூக்குவார்க் கிடரொன் றின்றாஞ்
சற்றுநா ணெறிவிட் டேகிற் சார்ந்திடு மோச நாசம். 50

சாதுமார்க் கத்தீர் நும்மைத் தலைப்பெய்த வைகல் வான
தூதரை யெதிர்ந்தா லன்ன சுபதின மாகக் கொண்டேம்
பேதமின் றெம்மி னும்மில் பிறங்குமித் தலத்தி லுள்ள
கோதறு நிதிகள் நம்மான் குருசுயர்த் தவர்க்கே யன்றே. 51

வழிநடந் திளைத்தீர் சின்னாள் வதிந்திளைப் பாறித் தேறி
விழிநலந் திகழு மிந்த வியன்கிரி மிசைதொக் குள்ள
கழிபெரும் புதுமை யாய காட்சிகண் டறவீர் பின்னர்
எழிறிகழ் முத்தி மார்க்கத் தெய்துமென் றேம்ப லோடு. 52

செங்கரங் கொளுவி நண்பீர் சேறுது நம்மில் வம்மின்
இங்கினி நிற்றல் வேண்டா வென்றக மலர்ந்து கூறிப்
பொங்குபே ரன்பி[illegible] புதுவிருந் தினரைக் கூட்டி
மங்கல கீத மல்க மனைபுகூஉ வரிசை செய்தார். 53

பல்வகை யொருபற் றில்லாப் பரதேசி களைக்கொண் டாடி
நல்வரை யாயர் காட்டு [illegible]ன்பெவா றூய தென்னிற்
செல்வழி யிகந்த தீய செறுநருக் காக ஜீவன்
நல்கிய வன்பின் வாரி படிந்துமெய்ந் நலத்த தாமால். 54

ஆயபோ டளவ ளாவி யாரிய ரிருவர் தாமும்
நாயகன் கருணை யுள்ளி நயந்தினி திருந்த காலை
மாயமார் பிரபஞ் சத்தை வரைந்துநூல் வழிப்பட் டுய்ந்த
தூய யாத்திரிகங் கேட்க விருப்புளேஞ் சொல்க வென்றார். 55



நன்றென வெழுந்து நின்று நலங்கிளர் மறையோன் தொக்கார்க்
கொன்றுமஞ் சலிசெய் தெம்மை யுவப்பொடு மினிதி னேற்றுக்
கன்றுகாண் கறவை போலக் கசிந்துபா ராட்டு மன்பை
யென்றுமுள் ளுதுங்கைம் மாறொன் றீட்டுதற் கருக ரல்லேம். 56

தேனந்து நறுந்தண் சோலை செறிதடங் காவு சூழ்ந்த
ஆனந்த சைல மீதென் றநுபவத் துணர்வு பெற்றேம்
ஞானந்தம் மேனி யாய நம்பிரான் றொழும்பர் நீவிர்
தானந்த வுணர்ச்சி யெம்முட் டந்தனிர் சான்றெம் முள்ளம். 57

செல்வழிக் கண்ணோர் நாளிற் காணினுஞ் செவ்வி யோர்தாந்
தொல்வழிக் கேண்மை யுள்ளந் தோன்றயாத் திடுவ ரென்ப
தொல்வதே யெனநுஞ் செய்கை யுண்மைவற் புறுத்திற் றின்னே
நல்வழி தெருட்டு நல்லீர் நஞ்செயல் கேண்மி னென்னா. 58

விளம்பரத் தொனிகேட் டொல்லை வெருண்டதுங் குரவன் வாய்மை
உளங்கொளத் தெருட்டி யுய்த்த வுண்மையுந் தவறி நேர்ந்த
பழங்கணு மோச நாசப் பரிபவச் சிறையு மெல்லாம்
வளம்படப் புகன்று காத்த கிருபையின் மாண்புஞ் செப்பி. 59

கும்பிக்கெ யிரையை நாடுங் கொடியமா யாபு ரிக்கண்
நம்பிக்கை தெருண்டு வந்து நல்வழி பிடித்த வாறுங்
கம்பிக்க வுடலு நெஞ்சுங் கரைந்திடக் கரைந்தீ ருக
நும்பிக்கை கொண்டே மென்றா னன்புரு வாய தக்கோன். 60

பனவன்வாய் மொழிந்த செஞ்சொற் பாகினைப் பருகி யாயர்
அனைவரு மவச ராகி யனல்மெழு காக வுள்ளங்
கனிவுறீஇ யுருகிற் றென்னக் கண்ணினீர் கவிழ நின்று
முனைவனை யுள்ளி யுள்ளி முறைமுறை துதித்தார் பல்கால். 61

ஈங்கிவை நிகழ்ந்த பின்ன ரிருவர்க்கு மிரவு தங்கப்
பாங்குறும் பள்ளி நல்கி யவரவர் பக்க லேக
ஓங்கிய வுவகை யோடு மொண்டவர் கிறிஸ் தியேசு
பூங்கழ றொழுது வாழ்த்திக் கண்டுயில் பொருந்தி னரால். 62

குறியுடை யிரவு நீங்கக் குணதிசை சுடர்வந் தூன்ற
முறையறி ஜீவன் முத்தர் முயங்கிய துயிலை வீசி
நிறைமொழி தெருண்டு செய்யு நித்திய கரும முற்றித்
துன்றதொறுந் தொழுது போற்று மந்திரத் தழனி கேட்டார். 63

ஆயிடை யறிஞன் மெய்ய னநுபவ ஞானி யன்பன்
தாயனுச் சாகன் றீரன் சுகிர்தனென் றிவர்வந் தீண்டி
ஏயவர் தனஞ்செய் தேற்றங் கிருவரை யழைத்தா னந்த
மீயுயர் சைலத் தும்பர் வளனெலாம் விதந்து போங்கால். 64

மெய்ப்பரி சுணர்வீ ரிந்த வெறுங்குவட் டினுக்கு நாமந்
தப்பறை யென்ப ரேறிச் சிலரிடை தவறி யப்பாற்
குப்புறீஇ விழுந்து மாண்டார் குறிக்கொண்டு காண்மி னென்னுச்
செப்பின ருற்று நோக்கித் திரும்பிவெய் துயிர்த்தார் செய்யோர். 65

ஆண்டொரு சாவ தான மெனுஞ்சிம யத்தை யண்மித்
தூண்டிநீர் செய்மைத் தாகத் துணைவிழி யிழந்து சில்லோர்
மாண்டவர் தலத்து லாவி மறிந்துவீழ்ந் தயருந் தன்மை
காண்டிரோ வெனவா மென்ன வவர்நிலை கழற லுற்றார். 66

நன்னெறி கடைப்பி டித்த நண்புளீர் நீவிர் வந்த
செந்நெறிக் கிடப்பா லாகச் சேருமோர் கடவைப் பாதை
அந்நெறி தழுவி யின்னோ ரசுரனும் விடாத கண்டத்
துன்னெறிப் பசாச னுய்த்த சிறையிடைத் துடித்தார் பன்னாள். 67

எண்ணருஞ் சிறைப்பட் டோரை யிரக்கமில் லாவன் னெஞ்சக்
கண்ணறைப் பாவி யந்தோ கண்ணிணை பிடுங்கி யிந்த
வண்ணமா மரித்தோர் சேறு மயானவெஞ் சிறையி னுய்த்தான்
புண்ணிய நெறிகை விட்ட புலையர்தங் கதியீ தன்றோ. 68

என்றெடுத் தியம்பு மெல்லை யேதமி லிருவர் தம்மில்
ஒன்றிய சிந்தை யாக வொருவரை யொருவர் பார்த்து
நின்றுளங் கலங்கி மாழ்கி நெட்டுயிர்ப் பெறிந்தவ் வாயர்
சென்றுழிச் சென்றா ரங்கோர் செழுமலர்க் காவின் பாங்கர். 69

அந்தணர் காணு மாறவ் வானந்த சைல வாணர்
பந்தித்த கதவ நீக்கி யுள்ளுறப் பார்மி னென்ன
விந்தையீ தென்னோ வென்று வேதியர் விரும்பிக் கிட்டி
முந்துறு படுகர். வாயின் முற்றியுண் ணோக்குங் காலை. 70

கொந்திருள் குழுமித் துற்றுங் கொழும்புகைப் படலங் கண்டார்
கந்தக நாற்றங் கொண்டார் கதழ்ந்தெரி கதுவிப் பொங்குஞ்
செந்தழற் கடலி னோசை செவிமடுத் திடுவ தோர்ந்தார்
அந்தாத் துருமு வீழ்ந்த தாமென வச்ச முற்றார். 71



எழுகொழுந் தழலில் வீழ்ந்து மிறுதிகாண் [illegible] யேங்கிக்
கழிபெருங் கூச்ச லிட்டுக் கதறியு மாக்கை நீ[illegible]
முழுகியு மாவி நைந்து முறையிட்டு மாற்ற [illegible]
தழுகுரா லோசை மல்கி யலறுபே ரொலியுங் கேட்டார். 72

அவ்வயி னின்று நீங்கி யாரிய ரறவோ ராய
செவ்வியீர் யாங்கள் கண்ட திறம்வகுத் துரைமி னென்னக்
கைவரு வஞ்ச நெஞ்சக் கள்ளஞா னியர்வி ரைந்து.
வெவ்வழ னிரைய மெய்த விதித்ததிக் குறுக்குப் பாதை. 73

பன்னெடு நாளா ஜீவ பாதையைப் பிடித்து வந்துந்
துன்னிய நாச மோசஞ் சோதனை யிடுக்கண் டுய்த்தும்
இந்நெடு வரைமட் டாக வெட்டியு மிகலுக் கொல்கிப்
பின்னிடை பவரே யிந்தப் பிலந்தலைப் படுவர் மாதோ. 74

இப்பிலத் துவாரத் தன்றே முத்தற்பிறப் பிகழ்ந்த வேழை
விப்பிர யஜமான் றன்னை விற்றசா மித்து ரோகி
துப்புறழ் சுவிசே ஷத்தைத் தூஷணஞ் செய்த பாவி
கைப்பொருள் வெஃகிப் பொய்த்த காதகர் கவிழ்ந்தார் முன்னம். 75

கனைகுரற் பிலத்து வாரங் கள்ளஞா னியர தென்னு
இனையன விளம்பக் கேட்ட மறைவலா னிறுமுன் கேட்டேன்
துனையிருட் பிழம்பு காட்டிச் சொற்றநும் முரைகொண் டின்னே
தினையள வைய மின்றித் தெளிந்தன மென்று செப்பும். 76

நெறியலா நெறியிற் செல்லு நீர்மையு மடமை யன்றாம்
அறிவன வறிய கில்லா வனந்தரு மடமை யன்றாம்
பிறிதெவன் கற்றுங் கேட்டும் பேரறி வுடைய ராகிப்
பொறிவழி யுள்ளம் போக்கும் புன்மையே மடமை யாமால். 77

மானிட வாக்கை பெற்றும் மறைநெறி புக்கும் நேர்ந்த
ஈனதை நிந்தை துன்ப மினையன சகித்துந் தேவ
கோனருள் பெற்றா னந்தக் குவடுகண் டடைந்து மந்தோ
மேனிலை வழுவி வீழின் மீட்புண்டோ பாவம் பாவம். 78

போக்குண்டு துன்புக் கெல்லாம் புகலுண்டு விபத்துக் கெம்மான்
வாக்குண்டு நமக்குக் கூட வருந்துணை யுண்டு கெஞ்ச
நாக்குண்டு வீடு கூடு நம்பிக்கை யுண்டு நல்லீர்
மீக்கொண்டு நுங்க ளாசி விடைகொண்டு சேறு மென்றார். 79

நெறியறிந் தவாவை நீக்கி நிருமல வேந்தைக் கிட்டி
முறையறிந் தருளை வேண்டி முன்னிட்டு முடுகல் வேண்டும்
இறைதிருக் கரமே நம்மை யிறுவரை காக்கு மென்றுங்
கறியமற் றொன்றுண் டின்னும் வம்மினென் றழைத்துப் போனார். 80

விண்ணுற மிளிர்ந்து தோன்றும் வித்தகத் தெளிவென் றோதும்
வண்ணவான் சிகரி யண்மி மறைவலீ ராடி யீது
புண்ணிய நகரைக் காட்டும் புதுமையைக் காண்மி னென்னாக்
கண்ணடி வாங்கி யுற்று நோக்கினர் கருத்துள் ளூன்றி. 81

விரிதரு பரமா காய வெளிதிகழ் பரம சீயோன்
கிரிமிசை யனந்த கோடி சூரியர் கிளர்ந்தா லென்னப்
பரவிய மகிமை யோங்கிப் பகிரண்டப் பரப்பை யெல்லாந்
தெரிதா விளக்கிக் காட்டுந் திவ்வியப் பிழம்பு கண்டார். 82

மேனிமிர்ந் தெழுந்த ஜோதி கற்பக விருக்கம் போலும்
வானஜோ திகளு மண்ட கோடியு மாத்திற் றொக்க
கானனை விரிபூங் கொத்துக் காய்கனி முதல போலும்
வானுற நிவந்து நிற்கு மாபினைத் தெரியக் கண்டார். 83

மொய்த்தெழு மகண்டா கார முழுச்சுடர்ப் பிழம்பின் மூந்து
பத்தியிற் றமக்கு நேரே பவித்திர பரமா காய.
வித்தக வெளியைக் கண்டார் விமலசந் நிதியி னுய்க்கும்
நித்திய ஜீவ வாயி லிதுவெனு நினைவுட் கொண்டார். 84

வானக்கண் கொள்ளா தோங்கு வளரொளித் திரளைத் தீர்ந்த
ஞானக்கண் ணடியி னாடிக் காணவு நடுங்கி யஞ்சி
ஊனக்கண் வழுக்கிக் கூசி யொல்லைத்தம் மிமையை மூடித்
தானக்கண் விழுந்தி றைஞ்சித் திசைநோக்கித் தாழ்ந்து சொன்னார். 85

வாக்கினுக் கதீத மெங்கள் மனத்துக்கு மதீதம் ஞான
நோக்கினுக் கதீதம் நம்பால் நுவலுதற் கதீத மாக
மேக்குயர் முகடு முட்ட விளங்கிய பிரபை கண்டேம்
பாக்கிய நகரத் துள்ள பகுப்பொன்றுங் காணு கில்லேம். 86

அண்ணலார் புனித மாய வக்கினிப் பிழம்பீ தென்கோ
எண்ணரு மகிமை ஜோதி யீதென்கோ விளங்கோ வீட்டும்
புண்ணியப் பொலிவே யென்கோ பொங்கிய பரமா னந்தங்
கண்ணிய நிலைய மென்கோ யாதெனக் கழறு கிற்பேம். 87



என்றுதம் மகத்தெ ழுந்த வுணர்ச்சியை யினிது கூறி
இன்றுநீர் செய்த நன்றிக் கெல்லையு மீறு மின்றால்
வென்றியங் கிரியி னேக விடையினித் தருக வென்றார் 88
நன்றென வொருவன் றீட்டு நல்வழிப் படமொன் றீந்தான்.

இச்சக மொழியை நம்பா திருமென வற்பு றுத்தி
எச்சரித் துரைத்தும் முன்னே யெதிர்ப்படுஞ் சோக பூமி
நச்சுறக் கத்தை நல்கு நனவொடு கடத்தி ரென்றும் 89
அச்சுதன் றுணையை நாடி யருணெறி பிடித்தி ரென்றும்.

ஏனைய பிறவுந் தத்த மநுபவத் தியைந்த கூறி
ஆனன மலர்ந்தன் போடு மாசியு மியம்பி வேண்டும்
போனக பான நல்கிப் பொருந்துநல் விடையு மீந்தார் 90
ஞானவா னந்த வோங்கல் நாடிய வண்டர் மாதோ.

ஆசியும் விடையும் பெற்றா ரஞ்சலி செய்தார் பல்கால்
மாசறு மனத்தார் செய்த வுதவியும் வருவ காட்டிப்
பேசிய மொழியு நெஞ்சிற் பிறங்கிடத் தீட்டி வைத்தார் 91
ஈசனை வழுத்தி யேத்தி யேகினார் வழியைக் கூடி.

வேறு.

வானுற் றிமிர்ந்து நிலனுற்ற மாபா மென்ன மலர்க்காவின்
தேனுற் றருவி குதிபாயுஞ் சிகரித் தலைநின் றிழிந்துகலை
மானுற் றுலவி விளையாடும் வயவெஞ் சீய வரைச்சாரல் 92
கானுற் றுலவி யுரையாடிக் கனிவுற் றறவோர் கடுகினார்.

பொழிதண் டேறன் மகரந்தப் பொடிநாண் மலரின் விரையளவிப்
பழகிப் பழகிப் பனிதுமித் தெண்ணீர்ச் சுனையிற் படிந்துவருங்
குழவித் தென்ற லுடலளைந்து குலவச் சிறைவண் டிசைகிள்ளை 93
மழலைக் கிளவி செவிமடுப்ப மகிழ்ந்து விரைந்து வழிச்செல்வார்.

மயலைத் தவிர்க்குந் திருவசனம் வளர்தீ வினையாங் கொந்தளித்த
புயலைத் தவிர்க்குங் குமரேசன் மேனா ளீட்டும் புண்ணியம்போல்
வெயிலைத் தவிர்க்குந் தண்டலையை விரித்தாங் காங்கு கடும்பசியின் 94
இயலைத் தவிர்க்கு நறுங்கனிகா யின்றே னுதவி யெதிர்சாரல்.

திருந்து கிரியின் புறமணைந்து திகழுந் தடங்கா யாத்திரைசெய்
விருந்தீர் வம்மி னெனக்கூவி விளித்துக் களித்து முகமலர்ந்தீ
தருந்தும் பருகு மிளைப்பாறி யகலு மெனக்கை யளிக்குமால் 95
வருந்தி னோருக் காசாஞ்செய் மாட்சி சானன் மனையேபோல்.

பொன்னாட் டரசனுரிமையெலாம் புனிதத் தொண்டர் பொருட்டுள்ள
தென்னாச் சுருதி முறையிடுவ தீண்டே யறிந்தாம் யாத்திரிகர்
உன்னு முன்ன முள்ளவெலாங் காவின் றுதவி யுபசரிக்குந்
தன்னு லென்னி லிதுவன்றோ சாத முலகு நிலைபெறற்கே. 96

வேறு.

மாக மீது லாவு மேக சால மூடு மாதவி
நாக மாதி தாரு நீழ லார்ந ரந்த நாறுபூஞ்
சாக மாரி றூல்கி ழிந்தொ ழுக்கு நீர்த்த டங்குலாம்
போக பூமி போலு நீடு பொங்க ரூடு போயினர். 97

துங்க வாவி நீர்ப டிந்து சுத்த வத்தி ரந்தரித்
தெங்கு மாய வீச னைத்து தித்தி றைஞ்சி யேத்தியே
பொங்கு ஜீவ போன கம்பு சித்தெ ழுந்து தோத்திர
மங்க லம்பு னைந்து பாடி நாடு வார்வ ழிக்கொடே. 98

இரவு கான கத்தோர் பக்க லிலைவி ரித்து றங்குவார்
விரவி ராவி டிந்தி டாத முன்னெ ழுந்து விமலனைப்
பரவி நின்று ஜீவ பாதை பற்றி நாடி யேகுவார்
குரவர் நல்கு நெறிவ ணாந்த குறிய றிந்து கொள்வரால். 99

தங்கு வானு டுக்க ணாந்த யங்கி யன்ன பொன்மலை
பொங்கர் மன்ம லர்க்கு லம்பொ லிந்தி லங்கு சூழல்முற்
றெங்கு மோரி டுக்க ணின்றி யேம்ப லோடவ் வேதியர்
திங்க ளோரி ரண்டு மூன்று செல்ல வங்கு செல்லுநாள். 100

ஆனந்த சைலப் படலம் முற்றிற்று.

## விசுவாச விளக்கப் படலம்.

எல்லை நூனெறிக் கயலிற்பின் வாங்கியென் றிசைக்கும்
புல்லிய ன்றனைப் பிணித்தெழு பேய்தொகூஉப் புடைத்தீர்த்
தல்லி யற்படு பாதலக் கிடங்கரு டமிழ்த்தச்
செல்லு மாறுகண் டஞ்சியுண் ணடுங்கினர் செய்யோர். 1

ஆய காலைமெய் யாரண னுருயிர்த் துணைவ
பேயி னற்பிடி பட்ட விப் பதிதனூர் பேசில்
மாய பாதித்தி யாபுரி நாமம்பின் வாங்கி
தூய நாட்டமற் றூலிருண் மூடிடுந் துணிபே. 2



தூய வாயுதம் பெற்றிலன் றோட்பல மில்லன்
நாய கன்றுணை யிழந்தன னுடுவ தினியென்
பேயர் கையகப் பட்டனன் பேதுறீஇ யந்தோ
ஆய சம்பவ மொன்றுள தையவென் றறைவான். 3

இத்த லத்துநிட் கபடமென் றிசைபெறு நகாம்
அத்த லத்தருட் டனதனு மற்பவிஸ் வாசி
வித்த கக்கலை யாதரு நாணய மிளிர்பூண்
பத்தி ரத்தொடு முத்திமார்க் கத்திடைப் படர்ந்தான். 4

அந்தி பட்டிர வாகவெங் கடுத்தவூ ரருகில்
வந்தி ருந்திளைப் பாறின னங்கது மரண
சந்தி யெனறறிந் தானிலன் றுயின்றனன் சாமம்
முந்தி னார்கள்வர் பாதகன் முதலிய மூவர். 5

வெய்ய பாதகர் வரவறிந் திருந்துயில் வீசிப்
பொய்யில் கேள்வியான் பொருக்கென வெழுந்துபோய்ப் புலையர்
[illegible]ன்றுய முடுகின னாயினுங் கடுகி
நொய்து பற்றிடைப் புடைத்தனர் பொருட்பறி நுதலி. 6

தீர்க்க மில்லனு யினும்பிடி விடுத்திலன் சினந்து
மூர்க்கர் கைத்தடி யாற்றலை மோதலு மயங்கிப்
பார்க்கண் வீழ்ந்தனன் கைப்பொருள் கவர்ந்தனர் பதறி
ஊர்க்கு ளோடினர் வேற்றொலி கேட்டலு முடைந்தே. 7

நாண யம்பறி போயது நல்லணி யெதையுங்
காணு கிற்றிலர் கள்வரென் றறிந்துபின் றன்னைப்
பேணி வைத்ததை யிழந்தமை நினைந்துபே துற்றுஞ்
சேணு றுங்கதி வழிபிடித் தேகினன் றெருண்டு. 8

நாண யங்கெடின் யாவர்க்கு முலகத்து நடப்புக்
கோணு மன்றியோர் குணமுமுற் றெனுமிக் குறிப்பைக்
காணு கையதன் கைப்பொரு ளிழத்தலிற் கடுகி
நாணு ழந்தைய மேற்றுண்டு நாள்பல கழித்தான். 9

அணிக லம்பல விருக்கவு மையமேற் றுண்ணத்
துணிவ தென்னெனச் சொற்றியென் மற்றவன் றொகுத்த
மணிய ணிக்குல கங்கொலோ விலைவாம் பறியுங்
குணிமற் றெங்ஙனங் கொடுப்பதவ் வணிபிறர் கொள்ள. 10

மெய்ய ணித்திரள் கள்வர்கைப் படாமையின் மேலாந்
துய்ய வோகையங் கவற்குள தாமெனத் துணியேல்
ஐய தற்குள வணிகலப் புதுமையுற் றறியா
நொய்ய விவ்விசு வாசிக்கஃ தொல்லுமோ நவலில். 11

பொருளி முப்பையே நினைந்துபுண் பட்டுளங் கவன்று
மருளி மானிட ரேக்குற்றுப் பலருயிர் மாண்டார்
தெருள் நற்பவிஸ் வாசிக்குத் திரித்துவ தேவ
அருளுற் றுய்ந்தநல் ஜீவனை யதிசய மாக. 12

வறுமை யெய்திய முணவின்றி வருந்தியும் பிறராற்
சிறுமை யெய்தியுந் துக்கசஞ் சலங்களாற் றிகைத்தும்
மறுமை யாக்கத்தைப் பேணின னற்பவிஸ் வாசி
வெறுமை யாக்குமோ விழுத்தகு நோன்புளம் விளையில். 13

என்று "வேதிய னிகழ்த்தலு மிறைஞ்சிநம் பிக்கை
ஒன்று வேண்டுவல் தெருட்டுகென் றுள்ளியோ யேசா
முன்ற னக்குள சுதந்தரம் விற்றுண்ட முறைபோல்
இன்று சொற்றமற் றிவன்செயி லென்பிழை மயன்றான். 14

அப்ப மெப்படிச் சுடப்பட்ட ததற்குட்டித் திப்பை
எப்ப டிப்புகச் செலுத்தின ரென்பபோ லெம்பி
தப்பு றக்கரு துற்றனை தகவுற விரித்துச்
செப்பு வேனென வாரியன் வகுத்திவை தெரிப்பான். 15

எம்பி கேட்டிநம் பொறிபுலன் களுக்கிலக் காகா
தம்ப ரத்துள ரகசியப் பொருளறி வுறுத்தும்
உம்பர் நாயகன் சுருதியவ் வுண்மையை நம்பி
இம்பர் நோற்றலே மெய்விசு வாசத்தி னியற்கை. 16

தெரிவ ருஞ்பர ரகசியம் யாதெனச் செப்பில்
புரவு நூல்வழி தெரித்தநம் புராதன சபையின்
குரவ ரேதிரு வசனத்தைத் தொகுத்தித குணித்தார்
காவி லாதவம் மொழியினைக் கழறுவல் கேணீ. 17

வானம் பூமியெல் லாவுல கங்களும் வகுத்த
மோன மாகிய சருவவல் லமையுள முதல்வன்
ஞான மேதிரு மேனியாக் கொண்டநந் தாதை
தூந லந்திகழ் வஸ்துவுண் டென்பதென் றுணிபு. 18



தந்தை யாகிய தற்பரற் கொருசுத னருளால்
மந்தி ரற்புத மாக்கன்னி மரிவயிற் றுதித்தோன்
இந்த மாநிலத் திரக்ஷணை புதுக்கிய வீசன்
பொந்தி யுப்பிலாத் துழையரும் பாடுகள் பொறுத்தோன். 19

மாசி லாவுயிர்ப் பலிசிலு வையிலுவந் தீந்தோன்
பூச மாதியுற் றுயிர்த்தெழுந் துன்னதம் புக்கோன்
ஈச னோர்வலப் பாகத்தி லினிதுவீற் றிருப்போன்
ஏசு வாங்கிறிஸ் திரக்ஷக னென்விசு வாசம். 20

மூன்றொன் றாகிய முழுமுதற் பொருளிலே முளைத்துத்
தோன்றி ஜீவனைத் தூய்மையாய்ப் பக்குவப் படுத்தும்
ஆன்ற பேரரு ளாவியி னநுக்கிர கத்தை
ஊன்றி யேகுவல் ஜீவனுக் கென்மனத் துண்மை. 21

தூய வோர்பொதுத் திருச்சபை தூயரி னைக்கியம்
ஆய பாவமன் னிப்புமீட் டாக்கைபெற் றெழுதல்
ஏயு நித்திய ஜீவனென் றிவையுள வென்றே
மாய மின்றியென் மனக்கொளக் கிடந்தவிஸ் வாசம். 22

என்று ளங்குவிந் தெவனிவண் பகர்முகத் திசைய
நன்ற றிக்கையிட் டிறுவரை நன்னெறி பிடித்தே
நின்றி டிற்பர கதிபுகூஉ நித்திய ஜீவன்
ஒன்றி வாழ்குவ னுன்னதத் தூழியோ டூழி. 23

இத்த கைப்படு மெய்ச்சுரு தித்தொட ரிதுவே
சுத்த சத்திய மெய்விசு வாசத்தின் றொகுதி
உத்த மந்திகழ் ஜீவனுக் குறுதுணை யுலவா
முத்தி வாயிலுட் புகுத்திடு முத்திரை யிகிதம். 24

மாண பாசத்தை மதுமண மாலிகை யாக்குந்
திரண மாக்கிடு மலகையை யுலகத்தைத் திரித்துட்
கரண சுத்தசற் கருமத்திற் கருத்தினைத் திருத்தும்
பூரண புண்ணியற் கன்புசெய் புனிதவிஸ் வாசம். 25

களங்க மற்றவிச் சிரத்தைநீர்க் கயங்கட மதிபோல்
உளங்கொ ளீஇச்சில ருழையுரங் கொண்டுநின் றோங்கி
விளங்கு மோர்சில ருள்ளத்து மறைபடூஉ மெலிந்து
துளங்கி நிற்குமா லிறுவரை யுயர்கதி தருவி. 26

ஒரும கப்பலி யூட்டிய வுரிமையு மரசின்
திருவை நீத்தினந் தழுவிய திரமுஞ் சினத்தீப்
பொரும முற்படு சூளையை முடங்குளைப் புழையை
வெருவு றுதெதிர் தருக்கிய வொள்ளிய விறலும். 27

உலகை யுள்ளுவர்த் தோட்டிய வுத்தம நிலையும்
அலகை யைப்புறங் கண்டுளா ராற்றலின் மாண்பும்
கலக மிட்டுயிர் கவிழ்த்தபோழ் தத்துமுட் கலங்கா
திலகு மெய்வயி ராக்கியத் தியற்கையு மினவும். 28

தேரி னெம்பிமற் றிவ்வெலாந் தீர்க்கவிஸ் வாசத்
தாருஞ் செய்கையென் றறியினி யற்பவிஸ் வாசச்
சீரு மீண்டெடுத் தியம்புவல் சிறியவோ ரிடுக்கண்
சாரு மாயினுந் தளர்ந்திடுங் குலைந்துளஞ் சாம்பி. 29

பண்டு மாநிலக் கிழமையைப் பத்தியிற் படைத்தும்
மண்டு சோதனைக் கிடைந்துபின் வழுக்கிவீழ் மாபும்
ஒண்டொ டிக்கெதி ரூன்றிடா துண்மையைப் புரட்டி
அண்டர் நாதனை மறுத்தபே ரவலத்தி னமைவும். 30

நீதி மான்றின மெழுமுறை விழுந்தெழு நீர்மை
பேதி யாதருண் மொழிமொழி பெற்றியும் பிறவும்
சாது மார்க்கஞ்செ லற்பவிஸ் வாசத்தின் சமைவாம்
ஈது நிற்கவே சாநிலை தெருளென விசைப்பான். 31

வேறு.

மாசி லாவிசு வாசத்தின் மாண்பெலாம்
பேசக் கேட்டனை சொற்றவிப் பெற்றியோர்
ஈசத் தேனுமுண் டென்னவெ சாவிசு
வாசச் செய்கைவ குத்ததுண் டோமறை. 32

சேட்ட பாகசு தந்தாச் செவ்விவிற்
றாட்டி னன்பசிக் கொல்கியின் னோர்துயர்
வாட்டுங் காலைத்தம் மாத்தும வாழ்வைவிற்
றீட்டு வார்புலை யின்பத்தைக் கூளிபால். 33

ஈச னீந்தவு ரிமையை யெட்டுணை
ஆசை யின்றிவ ணாந்தன னுதலில்
ஏச னுக்கிறை வன்வயி றேயலால்
பேசு தெய்வம்பி றிதுள தோசொலாய். 34



தம்பி மீனசு ணம்பதங் கஞ்சுரும்
பைம்பு லம்புசித் தாருயிர் மாய்தல்போல்
வெம்பி மாந்தரு மைம்பொறி வேட்கையுற்
றிம்ப ரேபுதை வார்கதி யெண்ணிலார். 35

சவியு லாம்பா லோகசம் பத்தகங்
குவிய நல்கூ வாருவர் கோதிலார்
புவிசு லாயழி போகம்பு சித்தலே
அவிசு வாசிக ளாக்கமென் றாக்குவார். 36

இன்ன ருக்குள்ளொ ருவனி லாவேன்
முன்ன வன்னென முன்னின்று காட்டுமால்
அன்ன வன்செய லற்பவிஸ் வாசியிற்
றுன்னு றுங்குண தோடத்தைத் தூக்குவாம். 37

கையு றும்பொருள் கட்டொடு நீங்கியும்
மெய்யு றும்பல வேதனைக் கொல்கியும்
ஐய மேற்றுண்ட வமதிப் பெய்தியும்
உய்யு நூல்வழி நீத்தடி யுய்த்திடான். 38

அரிய ஞானவ் ணிமணிப் பூஷணந்
தெரியி னித்திய ஜீவித நாட்டினுக்
குரிய வாமென வொன்றும்வி டுத்திலன்
பெரிது காத்தவை பேணின னென்பவே. 39

பீடு சாலும்பி றங்கணிப் பேழையை
ஈடு காட்டியி ழிசுகங் கொள்ளுதல்
நீடு பேரின்ப நித்திய வாழ்வொரீஇக்
கேடு நாடுங்கெ டுமதி காண்டியால். 40

பாவ தோடத்துக் கஞ்சிப்ப தறியுந்
தேவ தொண்டுக்குச் சிந்தைதி ருந்தியும்
ஆவன் மேலிட்ட ருட்பிர சாதமே
ஜீவ னுக்கமு தாயுண்டு தேக்கியும். 41

எழுத லேகுத லெய்த்தலி டறுதல்
விழுத லுள்ளுதல் விம்முதல் வெம்புதல்
அழுத லேங்குத லஞ்சுதல் கெஞ்சுதல்
தொழுத லாற்றிமெய்ச் சொன்னெறி பற்றியும். 42

வானெ றிக்கண்ம யங்கியுந் தன்பல
வீன மிக்குவ முக்கியி முக்கியும்
மான தத்தழு தேங்கிம லங்கியுந்
தீன ரக்ஷகன் சீர்கண்டு தேறியும். 43

தம்பி ரான்றிருப் பாதச ரோருகம்
நம்பி முன்னுற நாடின னன்றிமற்
றிம்ப ருற்றவி டுக்கணுக் கீடழிந்
தம்பு விப்படு கொப்பத்தி லாழ்ந்திலன். 44

வாய சங்கள்பி ணங்கினும் வண்டினந்
தூய நாண்மலர்த் தேத்துளி துய்த்திடும்
மாய வின்புறு கர்வர்ம தியிலார்
மேய பேரின்ப நாடுவர் வித்தகர். 45

நேரு மாளர வம்மென நீத்தகல்
சோர ளைப்புறங் கண்டுது ரந்திட
வீர மில்லனிவ் வேதவிஸ் வாசியென்
றேரு கின்றனை யோதுவல் கேட்டியால். 46

ஆண்ட கையணி கத்தரு ளப்பன்வந்
தீண்டு பேரொலி யென்றுமுக் கள்வரும்
மீண்ட தன்றிவி றலின்மை யாலெனக்
காண்டல் செய்கிலர் கைகலந் தேற்றவர். 47

பெரிதன் றூராம் பேசுதல் பேசல்போற்
புரித லேபெரி தாமிப்பு லையரை
இரித ரச்சம ராடுவை யேகொனீ
தெரித ருஞ்செரு நேரினச் செவ்விவாய். 48

காத கப்படு கள்வரோர் மூவரும்
பாத லத்ததி பன்படைச் சேவகர்
நீதி மார்க்கத்து நின்றுவ ழிப்பறி
ஏதஞ் செய்யுமி டும்பரெக் காலுமே. 49

காண்ட கும்படு பாதகக் கள்ளூநர்
சேண்ட லம்புகு மாக்கஞ்சி தைப்பவர்
தீண்டி டாதுஞ்சு டுங்கொடுந் தீயவர்
மாண்ட வப்பொருட் கூறைசெய் மாற்றலர். 50



நீச நெஞ்சர்நிட் டூரிக ணேர்விசு
வாச காதகர் வான்கதி மார்க்கனை
மோசம் போக்கிமு ழுக்குரு டாக்கிடும்
நாச காலர்ந ராந்தக ராமிவர். 51

வேண்டு மாயின்வி ளிப்பர்ப சாசினை
ஆண்ட டுத்தவ னுஞ்சம ராடுவன்
ஈண்டு வேறலெ வர்க்கும ரிதுகாண்
ஆண்ட கையரு ளப்பருக் கேயலால். 52

இனைய வஞ்சப்ப கைவர்வந் தீண்டிய
முனைமு கத்துமு றிந்துடைந் தோர்களைத்
தனைய ரென்றுணா யாடுவல் தக்கதன்
றனையர் தம்மைய வமதித் தெள்ளலே. 53

நேருங் கள்ளநி சாசர ளைத்தெறுந்
தீர ரென்றுசெம் மாந்துசெ ருக்கிவீண்
வீரி யம்புகல் வீம்பரின் ஞேரன
போரி லென்றும்பு றக்கொடை யீவர்காண். 54

வள்ள லூர்புகு மார்க்கத்தி டைக்கிடை
கள்ளர் தொக்கணி கைப்பொரு ளாதிய
கொள்ளை யாடுங்கு றியுடைத் தாதலிற்
றெள்ளி யோர்செய்தி றன்சொலக் கேட்டியால். 55

வெற்றி கொள்விசு வாசப்ப ரிசைகைப்
பற்றி யேனைப்ப டைக்கல முந்தரித்
தற்ற நோக்கிய ருட்டுணை யின்பலம்
முற்று நாடிமுற் செல்வரிம் மொய்ம்பொடே. 56

வாத னைப்படு மாரணச் சூழலைக்
காத கப்பகை யைப்படு கள்வனாச்
சோத னைத்திர ளைக்கொடுந் துர்ஜந
சாத கக்குழு வைச்சம பூமியை. 57

பண்டி ராஜப ரிஜந ராயமெய்த்
தொண்டர் வென்றுது ரந்துக டைப்பிடித்
தண்டர் கோனக ரத்தைய டைந்தனர்
விண்ட லத்துவி புதர்கொண் டாடவே. 58

மூண்ட வெம்பகை யாவுமு ருக்கிட
ஈண்டு காறுந்து ணைபுரிந் தெம்பிரான்
ஆண்டு வந்தவ ருட்செய லாய்தியேல்
வேண்டு மோவொரு சான்றிதின் வேறினி. 59

என்று மெய்விசு வாசத்தி யல்பெலாம்
நன்றெ டுத்துரை யாடிந லந்திகழ்
மன்றன் மாநக ரத்துவ ழிக்கொடு
நின்றி டாதுமுற் சென்றனர் நீர்மையார். 60

விசுவாச விளக்கப் படலம் முற்றிற்று.

## கார்வண்ணப் படலம்.

இவ்வா றாக வைதிக மார்க்கத் தியல்பேசிச்
செவ்வே சென்றார் சென்னிழ லேபோற் றிரிவின்றி
ஒவ்வா வேடத் தோரறி வீன னுடனேக
அவ்வா றோரா தேகினர் சின்னா ளறவோரே. 1

ஏகுழி முன்னிட் டாங்கொரு சாரே யிருகூறாய்
மாகத லத்துப் பாதைபி ரிந்த மரபுன்னிப்
போகுவ தெங்ஙன் மேலினி யென்னாப் புகல்முட்டி
ஆகுல முற்றே நின்றுதி கைத்தா ரதுபோழ்தில். 2

கோலிய பேயோ காரிரு ளேயோ கொதிகொள்ளும்
ஆலம தேயோ பாதக மோதீ யவையெல்லாஞ்
சாலவி ருந்தை போனுரு வாய்ந்தோர் தநுவாக
ஞாலமி சைக்குங் கார்வண னென்பா னவையுள்ளான். 3

நஞ்சுக லந்த பாலமிர் தேபோ னயவஞ்சம்
விஞ்சவி ளைக்கும் வாய்மொழி யாளன் வினைபொல்லான்
நெஞ்சினி ருண்ட மேனிபு தைப்பா னிலவீனுங்
கஞ்சுகி போர்த்த கள்வன டுத்துக் கரைவானால். 4

எங்குசெல் குற்றீ ரேனிவ ணிற்பீ ரெமர்போல்வீர்
சங்கட மென்கொல் சாற்றுதி ரொல்கல் தகவன்றால்
பங்கமி லீரென் றின்னுரை யாடிப் பகர்வான்போல்
வெங்கடு நெஞ்சன் வேதியர் தம்மை வினவுங்கால். 5



மாசறு சுத்த வைதிகர் தாமு மதிவல்லோய்
நாசம்வி ளைக்குந் தேசம்வி டுத்திந் நடைகூடி
ஈசன கர்க்குப் போதுமி வற்றி னெதுஞான
தேசிக மார்க்க மென்றுள நாடித் திகைக்கின்றேம். 6

என்றுதெ ரிக்க விச்சக னென்னு மிருள்வண்ணன்
ஒன்றிய நண்பீ ருன்னத வானத் துயரோங்கன்
மன்றன கர்க்கே செல்லுவல் யானும் வழியீது
நன்றுடன் வம்மின் வம்மினெ னாமுன் னடைகொண்டார். 7

பொன்னே யன்ன புங்கவர் வேதப் பொறிகுன்றி
என்னோ தோரா தின்னுரை நச்சி யிகல்வெய்யோன்
பின்னே சென்றா ரென்னிலி யாரே பிரபஞ்சத்
தொன்னா ளைத்தேர்ந் தொல்லையொ ரூஉமெய் யுரவோரே. 8

அப்புலை யன்பின் னாழ்படு கொப்ப மறியாமே
குப்புற நாடுங் கொல்சின வேழக் குலமேபோல்
செப்பரும் வேதச் செந்நெறி விட்டு ஜெகசாலத்
தப்புவ ழிப்பட் டாரணர் சென்றார் சதிதோரார். 9

போயினர் முன்னே காவதம் வஞ்சப் பொறிமல்கிச்
சேயொளி குன்றிக் காரிருள் துற்றிச் சிறைதோறும்
பேயுழல் பாபத் தூறடர் கானிற் பிரபஞ்ச
மாயவ லைக்குள் ளாகிவி ழுந்தார் மறையோரே. 10

அவ்வயின் முன்செல் லிச்சக வஞ்சன் னறவோர்தாந்
தெவ்வலை யிற்சிக் குண்டுதி யங்குஞ் செயல்கண்டான்
எவ்வம றைக்கும் போர்வையை வீசி யிருள்வண்ண
வெவ்விய மேனி தோன்றிட நின்றான் வெருளூற்றார். 11

அந்தோ வந்தோ விச்சக நச்சி யசுணம்போல்
முந்தோ ராதே மோசவ லைக்குண் முழுகுற்ற
சந்தா பத்துக் கென்செய்து மென்னாத் தழலன்ன
வெந்தா பத்தாற் சிந்தையி னைந்தே மிகையோர்வார். 12

நாயக னாலி னன்னெறி காண்பா னனியாய்வுற்
றாயர ளித்த தூயப டங்கொண் டறிகில்லேம்
நேயமொ டுய்த்த நல்லுரை யுள்ளே நெறிதப்பி
மாயவ லைப்பட் டாருயிர் மாய்வே மதியில்லேம். 13

கைப்படு தீபங் கொண்டுகி ணற்றிற் கவிழ்வார்போல்
மெய்ப்படு ஞான வித்தக முற்றும் விழிமூடிப்
பொய்ப்படு வஞ்சப் புன்னெறி புக்குப் புலைமேவி
இப்படு மோசத் தெய்தின மெவ்வா றினியுய்வேம். 14

பொற்புறழ் போர்வை கண்டும ருண்டேம் புலைவாயின்
சற்பனை யோரேம் பேசிய வின்சொற் சதுராலே
அற்புத மார்க்க விற்பன மும்போ யறிவும்போய்க்
கற்பனை யாலே கற்பிள வெய்தக் கரைகின்றேம். 15

மங்கள மல்கிய வாண்முகம் வாரிச மலரேனும்
இங்கித வாய்மொழி சந்தன சீதள மிணையேனுஞ்
சங்கைய றப்படு தூர்ச்சன ருக்கிரு தயமோரில்
வெங்கன லின்சிலை யாமெனன் மேலவர் விதியன்றே. 16

துன்றிருள் வண்ணன் கொன்றுழல் கூற்றின் றுணையுள்ளங்
கன்றிய மாயக் கள்வனி வன்கை விடுபட்டுப்
பொன்றிணி சீயோன் மன்றன கர்க்குட் புகுவேங்கொல்
என்றிவை பன்னி யாவித ளர்ந்தங் கிடைகாலை. 17

வேறு.

புண்ணி யத்தடம் பூத்தபொற் றாமரை வதனந்
தண்ண ளிக்கா சிருக்கையாச் சமைந்துள தடங்கண்
எண்ண ருஞ்சுவைத் தெள்ளமு தெழிற்றிரு வசனம்
உண்ணி லாவுமெய் யன்பொளி திவள்திரு வுருவம். 18

அஞ்ச லஞ்சலென் றருள்புரி தருமப யாஸ்தஞ்
சஞ்ச லங்களைந் திடவிரை தருதிருப் பாதம்
அஞ்சு காயத்தின் வடுத்திக ழவயவக் காட்சி
விஞ்ச வேதியர் விழிக்கெதிர் தோன்றினர் விமலன். 19

கண்டு கண்டிரு கைத்தலஞ் சென்னியிற் கவினத்
தெண்ட னிட்டுளங் கசிந்தழு தேங்கினர் திகைத்தார்
உண்டு கொல்லினி யுய்வெமக் கெனப்பிழை யுள்ளி
எண்ட போதனர் நாணின ருரையவிந் திருந்தார். 20

எந்த வூரெங்கு செல்குதி ரிருட்படு கானில்
வந்திம் மாயவெவ் வலையிடை மறிந்ததென் வருத்துச்
சிந்தை யுள்ளுறை தெரிபவர் தெரிக்கெனத் தெரித்தான்
முந்தை யுற்றவா றனைத்துஞ்சொன் முறையறி முதியோன். 21



வேத்தி ரக்கர வித்தகன் வேதியன் விதந்த
மாத்தி ரத்தினி யஞ்சன்மின் வஞ்சவிச் சகன்வாய்ச்
சூத்தி ரத்தினுந் தூதவே டத்தினுந் தூய
பாத்தி ரன்னென மருண்டனி ரிதுபர மார்த்தம். 22

நன்று நன்றென நாசபா சத்தினை நறுக்கி
ஒன்றி யென்னுடன் வம்மினென் றார்த்தநா னெறியைச்
சென்று கூட்டினர் தெருட்டினர் சென்முறை திகழ்த்தி
நின்று வேதியர்க் கடிந்திது புரிந்தனர் நிமலன். 23

மறிதி கழ்த்திய வானந்த மலைக்குலக் குரவர்
குறிதி கழ்த்திய படந்தந்து கொற்றவ னகர்க்கு
நெறிதி கழ்த்திய நீர்மையை மறந்துநீள் வஞ்சப்
பொறிதி கழ்த்திய கொடுவலைப் புக்குழன் றயர்ந்தீர். 24

மண்ட லத்தெம ராயெமை வழிபடு மகவாய்த்
தொண்டு பட்டவர் தம்மையாங் குறிக்கொண்டு தொடர்ந்து
விண்ட லம்புகுத் துவமிடை விதிவிலக் கிகப்பிற்
றண்ட னைப்படுத் துவநம ராஜ்ஜிய தருமம். 25

செப்பு மாறினி யென்னெனச் சினக்குறி மல்கிக்
குப்பு றுத்தியங் கவர்தமைக் குணப்படு மட்டாத்
துப்பு றழ்ந்ததந் திருக்கர வேத்திரந் துணிய
விப்பி ரர்க்குடல் சிவப்புற வடித்திது விளம்பும். 26

உளந்தி ரும்பிமெய்ப் பத்தியோ டேர்த்தநா னெறியில்
வளந்த ருந்திரு நகரையே குறிக்கொண்டு வாணாள்
அளந்த மட்டுநல் லறங்கடைப் பிடிமினென் றன்பிற்
கிளந்து செல்கென விடுத்துடன் கரந்தனர் கிரீசன். 27

உடையி ழந்துழி யுதவுதங் கையென வலைப்பட்
டிடையுங் காலையுய்த் தீட்டுபே ருதவியை யெண்ணி
நடைய றிந்தமெஞ் ஞானியர் நன்றியோ டேத்தி
விடையு கந்துபெற் றேகினர் மேதகு நெறியில். 28

ஆயர் செய்நன்றி யறிந்திடா விழிகுண வழிம்பும்
மாய விச்சக வாய்மொழி மதித்தபே தைமையுந்
தூய பாதையை விலகிய துணிகரச் செயலும்
பேயன் பின்றொடர்ந் தவனடி பிடித்தபொல் லாங்கும். 29

முற்று பேரிடர் மூடிய முறையறிந் தீசன்
உற்ற டுத்துவந் துயிரளித் துதவிய வுரித்துங்
குற்ற மின்மதி புகன்றுளந் தெருட்டிய குணமுஞ்
செற்ற மோடடித் தருள்புரி திருவுளக் குறிப்பும். 30

அகத்து மல்கிய ஜீவவித் தனைத்துநம் மீசன்
முகத்து மல்கிய வருட்டுளி தோய்தலின் முளைத்து
மிகத்தெ ருண்டமெய் யுணர்ச்சியின் விதந்துரை யாடி
மகத்து வம்புனைந் தேத்தினர் வழிக்கொடு போனார். 31

கார்வண்ணப் படலம் முற்றிற்று.

## சோக பூமிப் படலம்.

மாக நாயகன் றிருவருட் டுணைமையின் வலத்தான்
மோக விச்சக தேசத்தை முற்றும்விட் டொருவித்
தேக தத்துவத் தளர்வினை யசதியைச் செறிக்குஞ்
சோக பூமிசென் றடைந்தனர் சுருதிநூல் வலவர். 1

மன்னு யிர்க்கெலா முரிமையே மறுமையாத் திரிகம்
என்னி னுஞ்சில ரன்றிட்ற் றெவருமிங் கெய்தார்
பன்னு மாறுறு சோகபூ மியினலம் பருகா
முன்ன ரேமுடித் திடுவரங் கிடைக்கிடை முறிந்து. 2

இருந்தி ருந்திடைந் தேங்கலு மெழுந்துதள் ளாடி
வருந்த லும்பொறி மயங்கலுந் தியங்கலு மறுகிப்
பெருந்த கைக்குணம் பிறழ்ந்துபே துறுதலும் பேணி
அருந்த லுந்துயில் பொருந்தலு மந்நிலத் தியற்கை. 3

முதுமை யாகிய வாடைவந் துடலிடை முயங்க
மதிம யங்கிவை திகநடை தளர்ந்துகண் மருண்டு
விதிநி டேதத்து விழிப்புறு விதந்தனை மறந்து
புதுமை யாத்துயில் பொருந்தலே யந்நிலப் புதுமை. 4

இற்ற தாகிய படப்பையை வேதிய ரெய்தி
மற்றி தானந்த சைலத்து மாதவர் வகுத்துச்
சொற்ற சோகமா நிலமெனத் தம்முடற் சோக
முற்ற வாறுகண் டுணர்ந்தன ராண்டுற்ற வொல்லை. 5



துருவி யேகினர் தூரமோர் சிறிதுகண் டுஞ்சக்
கருவி யாயமென் காறவழ்ந் துடலிடைக் காப்ப
ஒருவ ருந்துயில் விழித்துணை பொதிதலு மூரவோய்
இருவ ருந்துயின் றெழுதுமோர் கடிகையென் றிசைத்தான். 6

தூய நம்பிக்கை சொற்றசொல் லயிலுளந் தொளைப்பக்
காய மிக்குற நடுங்கியுங் கலங்கியுங் கவன்றும்
ஆயர் சொற்றிற மறந்தனை யேகொலா மைய
மாய நச்சுறக் கத்தினை வரைதலே மரபாம். 7

அறங் குலாவுநன் மதிவலோ யாரணத் தெளழ்தம்
உறங்க வோவுண்டு தெவிட்டின மோட்டத்தை யொடுக்கேல்
திறங்கு லாவிய பந்தயப் பொருணிலை தெரிந்தீண்
டிறங்கு சென்னி[illegible] நிமிர்த்துமுன் னிடுதியா லெம்பி. 8

ஐய கேளறம் பொருளின்பம் வீடென லாய
மெய்ய வாம்புரு ஷார்த்தங்க ளொருங்குடன் விலகும்
மையல் கூர்துயில் விளைத்திடு மானிடப் புரையில்
பொய்ய ளைந்ததீ வினையெலாம் புதக்குடி பொருந்தும். 9

உறக்க [illegible] குட்பகை யாகும்
உறக்க மேசுய முயற்சியை யொருங்கறத் துடைக்கும்
உறக்க மேபகைக் கொருதுணை யாயுயி ரொழிக்கும்
உறக்க மேவறு மைக்கெ[illegible] மூலகில். 10

இனைய வாதலி னெம்பிநீ கண்முகிழ்த் துறங்க
நினையல் நித்திரை சத்துரு வெனும்புவி நீதி
முனைவ னல்கிய கலிக்கமொன் றுளதனை முடுகி
வனைவ லென்றிரு விழியினுந் தீட்டினான் மறையோன். 11

சிறக்கு நன்மருந் துதவலு நம்பிக்கை தெருண்டான்
உறக்கங் காதம்போ யொளித்ததங் கோரிரு வோருந்
துறக்கங் கிட்டிய தாமெனத் தூநெறி நடந்து
மறக்கொ ணாத்திரு வாக்கெடுத் துரைத்தனர் வருவார். 12

ஆய காலைமா யாபுரிச் சந்தையி லமர்ந்து
தீய கொண்டுவிற் றாதியந் திரட்டுநீ தெருண்டு
தூய யாத்திரை செயமனந் துணிந்தொருப் படற்கு
மேய காரணந் தெரிக்கென நம்பிக்கை விரிப்பான். 13

உய்வ ழித்திறந் தெருட்டியு முதவிசெய் தளித்துந்
தெய்வ பத்தியில் வளர்த்துநல் வழிவிடிற் சினந்தும்
மெய்வ ழித்துணை யாகியும் புரந்தனை மேலோய்
ஐவ கைப்பெருங் குரவனு நீயெனக் கத்த. 14

கண்டு யின்றிடாக் கலிங்கமிட் டருள்வழிக் காத்துக்
கொண்ட ணைந்தனை யின்னுநீ குறிக்கொண்டு கோமான்
விண்ட லம்புகு காறுமெற் காப்பதுன் வேலை
தொண்ட னேன்செய்கைம் மாறுனக் குண்டுகொல் துணியில். 15

ஈது நிற்கயா னிந்நெறி பிடித்தகா ரணமென்
ஓது கென்றனை யித்திற முணர்ந்துளா யாடிப்
போது வேமெனிற் றுயிலெமைத் தணந்துபின் போருஞ்
சாது மார்க்கத்துக் கடுத்ததாங் கேளெனச் சாற்றும். 16

சற்ப னைக்கெலா முறையுண்மா யாபுரிச் சந்தை
விற்ப னைப்பொருள் யாவையு மாயமாம் விரும்பிக்
கற்ப னைப்பொரு ளீட்டியோர் யாவருங் கவிழ்ந்தார்
நிற்ப தன்றிந்த வாழ்வெனு நிண்ணயந் தெரிந்தேன். 17

நின்னிற் றோன்றுசன் மார்க்கசத்தி னீதிநிண் ணயமும்
பொன்னிற் றோன்றிய மெய்விசு வாசநன் பொலிவும்
என்னிற் றோன்றிய வுணர்ச்சியிற் பதிந்தன வெந்தாய்
முன்னிற் றோன்றிய வாடியிற் றோன்றிய முகம்போல். 18

குத்தி ரக்குழு வீண்டிவெங் கொலைக்களப் படுத்திச்
சித்தி ரக்கொலை செயப்பட்ட தீர்க்கவிஸ் வாசி
பத்தி மெய்வயி ராகத்தைப் பவித்திரச் செயலை
வித்த கக்கலை ஞானத்தைக் கண்டுளம் வெருண்டேன். 19

உண்டெ னப்படு மெய்விசு வாசத்தி னுரத்தைக்
கண்டு கேட்டுளங் கவன்றதும் வெருண்டதுங் காண்டி
அண்டர் நாயகன் றொழும்பனு யவித்தையைப் போக்கிப்
பண்டு நன்னெறி பற்றியான் படர்தற்கு மூலம். 20

பாவி யென்றுளங் கவன்றனன் முடிவுன்னிப் பயங்கொண்
டாவி நைந்தன னுயிரு மகத்துளங் குரித்து
வீவி லாதெழு முணர்வினை மென்மெலப் புதைப்பான்
ஆவ லுற்றிராப் பகலெலா முயன்றன னறவோய். 21



நம்ப னாவிநின் றுளத்திடைப் பொருத்துநல் லொளியை
எம்பி நீயவித் திடமுயன் றதுவென்னென் றிசைத்தி
இம்ப ரேயெனை யாட்கொள வென்னுளத் திறுத்த 22
உம்பர் நாயகன் கிருபையென் றுணர்ந்திடா மடமை.

முற்றும் பாவத்தின் முயங்கிய முயக்கம்விட் டிடாமை
உற்ற டைந்ததீத் தோழமை யொருவுகில் லாமை
துற்று பாவத்தின் சுமையனுத் துணையுந்தோன் றாமை. 23
இற்றெ லாமதி யீனமுங் காரண மெந்தாய்.

ஜெகத்து மெய்ந்நிழல் புதைத்திட முயல்பவர் திறம்போல்
அகத்து மெய்யொளி யவிக்குமா றுமுயன் றிடினும்
மகத்து வச்செய லாலகத் துணர்ச்சிமா யாது
மிகத்தெ ருண்டெழு முறைமையை விள்ளுவல் கேட்டி. 24

சாது மார்க்கனைக் காண்டலுந் தகைப்படு சுருதி
ஓது கீதைவந் துறுசெவி மடுத்தலு மொடுங்கா
வாதை நோய்கண்டு கலங்கலு மலங்கலுங் கடுகி 25
ஏது வின்றிமூச் சொடுங்கல்கண் டஞ்சியேக் குறலும்.

மேலை நாணடுத் தீர்வையை நினைந்துளம் வெருண்டு
காலை மாலையுங் கவன்றுள நடுங்கலும் பிறவுஞ்
சால மெய்யுணர் வெழுப்பின நன்மனச் சான்றுங் 26
கோலி மெய்ம்மனஸ் தாபத்தை விளைத்தது குரவ.

மெய்யு ணர்ச்சியை யொருபுறத் தொதுக்கினும் வெருண்டு
துய்ய நன்மனச் சான்றெனைக் கடிந்திடுஞ் சுடுசொல்
ஐய தாங்கரி தாதலின் மெய்மனஸ் தாபம் 27
உய்யு மாறுளத் தூன்றிநின் றோங்கிய துரவோய்.

வைகல் சிற்சில கழியவு மிடைக்கிடை மரணங்
கைக லந்திடி லென்செய்வ லென்றுளங் கலங்கி
மைக லந்ததுன் மார்க்கசீ லத்தையும் வனைந்த 28
பொய்க லந்ததீ நட்பையும் போக்கினெ னொருங்கே.

வைதி கம்பெறு சமயசீ லங்களை வழுவில்
மெய்தி கழ்ந்தவான் விதிநிடே தங்களை விழைந்தென்
கைதி கழ்ந்தமெய்த் திருமொழி யகத்துளே கவின 29
உய்தி றங்களைப் பிடித்தன னல்லொழுக் குவந்து.

இனைய வாத்திரி காணமொத் தியற்றுநல் வினைகள்
எனைய வேனுந்தீ தொடுகலந் தலதிலை யென்று
நினைவு மூட்டிமேன் மேலுநெய் சொரிந்தென நிகழ்த்தி
எனைவ தைத்தெரி மடுத்ததிங் கென்மனோ சாக்ஷி. 30

உள்ளு ளேபுக லுளக்கரி யுறையெலா முண்மை
வள்ள லாருமென் பிழையெலாம் வரைந்துவைத் தனருட்
கள்ள மாயநற் கருமங்கள் கதிக்குறா யேறு
எள்ள னைத்துநீ தியுமிலை யுய்குவ தெங்ஙன். 31

புதிய சீலமு மொழுக்கமும் புனிதமு மருவி
விதிவி லக்கினி யனுட்டிப்ப னாயினும் மேலை
முதிய பாவத்துக் கென்செயக் கடவன்யான் முத்திக்
கதிப னாணையிற் றீச்சிறைப் படுத்துவ ரன்றோ. 32

அன்றன் றைக்கட னன்றன்றைக் கிறுப்பினும் வறியோர்
தொன்று பட்டவப் பெருங்கடன் றொலைக்குமா றெவன்கா
சொன்று மீதியின் றுய்க்கட னொருங்கிறுப் பளவுந்
துன்று வெஞ்சிறைப் படுத்தலே தொல்லுல கியற்கை. 33

தீது றுதநற் கருமமில் லேன்சிறி தெனினும்
நீதி யும்மிலன் பாவதண் டனைக்கெதிர் நேரே
போது கின்றனன் புகலிடம் பிறிதெங்கு மில்லேன்
ஏது செய்குவ னிரக்ஷணைக் கெனக்கவன் றிடுநாள். 34

வேறு.

உத்தமந் திகழு மேனி யொண்மதி நிதானி யென்னும்
வித்தகன் வாக்கண் டொல்லை விழுத்தகு மாபி னேற்றுச்
சித்தசஞ் சலமெற் குற்ற திறனெலாந் தெரியச் செப்பி
எத்திற மேனு நன்கோன் றியம்புகென் றிரந்து நின்றேன். 35

செய்முக வாட்டங் கண்டு சிந்தனை கசிந்து போற்றுந்
தாயரின் முகந்தை வந்து தணப்பில்பே ரன்புள் ளூறி
வாய்மலர்ந் தொழுகல் போலு மைந்தநீ கலங்க லென்னாத்
தூயர க்ஷணிய போதந் தொகுத்துரை யாட லுற்றான். 36

உன்னுளத் தெழுந்த பாவ வுணர்ச்சியு முள்ளச் சான்றும்
முன்னுறீஇக் கடிந்த வாக்கு முழுமனஸ் தாப மாய
இன்னலு நினையீ டேற்ற வெம்பிரான் குறிக்கொண் டுன்பால்
பன்னருங் கிருபை யுய்த்த பரிசென மனத்துட் கோடி. 37



ஞானநூ லனைத்துங் கற்று நற்கரு மங்க ளாற்றித்
தானடை பயின்ற போதும் ஜென்மத்தே தொடுத்து நின்ற
ஈனமாங் குணதோ ஷங்க ளியைதலால் யாவுத் தீதாங்
கானனீ ரருந்தித் தாகங் கழியுமோ கருதுங் காலை. 38

கருவிலே விடம்போற் பாவங் கலந்துபின் கதித்துப் பாழ்த்த
உருவினு மனாதி யந்தக் காணத்து மொருவா தாக
மருவிநின் றுடற்றி நாளு மரணபா தலத்தைக் காட்டித்
தெருவிலே விடுக்குஞ் செய்கை ஜெகங்கண்டு தெருளா தின்னும். 39

கற்பனை பத்து மோம்பிக் கைக்கொளல் கடமை யேயாம்
கற்பனை மீறிச் செய்யுங் கருமங்கள் பாவமாகும்
கற்பனை காத்து மேனற் கருமங்கள் புரிவ தன்றோ
கற்பனை களுக்கு மேலாக் கதித்தபுண் ணியமாந் தேரில். 40

கண்ணிய கடமைப் பாட்டைக் கருத்துறச் செய்ய கில்லா
மண்ணியன் மாந்த ரேயாம் மாசறு விதிக்கு மேலாப்
புண்ணியந் திரட்டி முத்திப் புரையில்பே ரின்பங் கூட
எண்ணிய வெண்ண மென்று மேழைமைப் பால தேயாம். 41

தருவிதி விலக்கே யிந்தத் தாணியை யொருங்கு கூட்டி
வெருவரும் பாவ தோட வெஞ்சிறைப் படுத்திற் றம்மான்
திருவுள மிரங்கித் தம்மோர் திருக்குமா ரனைவி டுத்துப்
பொருவரு மிரக்ஷை யீட்டி மீட்டனர் புவியை மேனாள். 42

ஜென்மநாட் டொடங்கி முற்றும் ஜீவநா ளளவும் பாவ
கன்மமாந் தீட்டு றுமுக் காணமும் புனித மேய
தன்மரு பன்செய் தாக்குந் தபோபலங் கிடைத்தா லன்றி
நன்மையாம் ஜீவ ரக்ஷை நாருக்கின் றாகு மன்றே. 43

பூதலப் பரப்பில் யாரிப் புண்ணிய மூர்த்தி யாய
மாதவ னென்னி லின்றும் வடுத்திகழ் மேனி யோடு
தாதைபாற் சருவ லோக சரணிய னாகத் தங்கி
மேதினிக் கிரக்ஷை நல்குங் கிறிஸ்துவாம் விமலன் மேனாள். 44

மனிதஜீ வருக்குந் தேவ மகத்துவத் தினுக்கு மூடே
நனிதிகழ் மத்தி யஸ்த நரதேவ மூர்த்தங் கொண்டு
வனிதைபாற் றோன்றித் தூய வான்முறை விதியை யோம்பிப்
புனிதஜீ வியத்தை யுய்த்த புதுமையே புதுமை யாமால். 45

உலகெலாஞ் சமழ்த்த பாவ மொருங்கொரு தனியே தாங்கி
விலகருஞ் சிலுவை மீது விண்ணின்று விழுத்த நீதி
அலகறு தண்ட மேற்றிங் குயிர்ப்பலி யமலற் காக்கி
நிலவுல கருக்கென் றுய்த்த நீதியே ஜீவ நீதி. 46

பொன்றிய புனித மேனி பூசமா தியினும் புக்கு
நின்றுமன் பதைகட் கெல்லா நித்திய ஜீவன் மல்க
வென்றியோ டுயிர்த்தெ ழுந்த விந்தையை விசுவ சித்துள்
ளொன்றுமெய் யடிய ரன்றோ வுன்னத பதம்பெற் றுய்வார். 47

இத்திறம் பரம ராஜ்யத் திளவர சாய வெம்மான்
உய்த்தர க்ஷணிய மார்க்கத் துண்மையை விசுவ சிக்கிற்
சித்தசஞ் சலம்போம் நீதி திகழ்ந்தொளி கிளைக்கு நின்னை
மொய்த்தபா பாந்த கார முற்றிலும் விடியு மன்றே. 48

ஆண்டகை நீதி யென்னை யடையுமா றெவன்கொ லென்னாத்
தேண்டுதி மெய்யன் போடு திகழ்விசு வாசமுன் னிற்
காண்டகக் கவினிற் றென்னில் கருணையாற் றொழுக்கீ தொன்றோ
வேண்டுநன் னிதியம் யாவும் வியனகப் புலந்தந் துய்க்கும். 49

நன்மைசால் தேவ மைந்தன் நடுநின்று நாருக் கேயாய்
வன்மைசான் மறுட தன்ம வாம்பறு தொழுகி நீதிப்
பொன்மலை குவித்துத் தம்மைப் புகல்புகுந் தவர்க்கு நல்குந்
தன்மையை நம்பிச் சேறி சான்றுமெய் யடியார் சங்கம். 50

கடைப்படு வன்க ணீசப் புலையனேன் கணிப்பில் பாவ
முடைத்தொழு நோயி னாக்கை மூயங்கியேன் றுணிந்து முன்சென்
றடைக்கல மெனலாங் கொல்லோ வருவருக் காதென் கண்ணீர்
துடைப்பரோ புனித ரென்னா வையுறீஇத் துளங்கல் கேண்மோ. 51

பொருந்துவெங் கொடிய பாவப் பொறைசுமந் திளைத்துச் சிந்தை
வருந்துவீர் வம்மின் வம்மின் வந்திளைப் பாறி யென்னோ
டிருந்துண வருந்து மின்னென் றெம்பிரான் விளிக்கு மின்சொற்
றெரிந்திலை போலு மெம்பி செவிகொடு செவிகொ டின்னே. 52

உரைசெயற் கரிதெம் மைய னுபதேச மொழுக்கஞ் சீலம்
விரைசெறி கிரியை துன்ப மிருத்துவே தனையிவ் வெல்லாம்
புரையற விளக்கு மிந்தப் புத்தகங் கொண்ணீ யென்றீந்
துரைநிலை பிசகா திந்த வுலகொழிந் திறினு மென்றான். 53



என்னுளங் குவிந்த தேனு மீசனோர் குமார வள்ளல்
சந்நிதி குறுகி யாங்கு சாற்றும்விண் ணப்ப மாவ
தென்னென வறிய கில்லே னியம்புகென் றிரந்தே னாகப் [னான். 54
பொன்னெனப் போற்று மன்றுட் டொன்றுளம் பொறித்துப் போ

வந்தனத் தோடு நன்றி வழுத்தியான் றிருமித் தக்கோய்
சிந்தையிற் பொறித்த செஞ்சொல் சிலையெழுத் தாக நிற்ப
நொந்துடைந் தூறு பட்டு நொறுங்குண்ட விதயத் தேனாய்
அந்தரங் கத்தை நாடி யடைந்தன னவலித் தேங்கி. 55

உன்னத பரம ராஜ னொருதிரு வோலக் கத்துச்
சந்நிதி நினைந்து கிட்டித் தாளிணை முடக்கி நின்று
பன்னருங் கருணை யுள்ளிப் பத்தியோ டிருகை கூப்பிச்
சென்னிதாழ்த் திறைஞ்சி யன்பிற் சிந்தனை கசிந்து போற்றி. 56

ஆதிமெய்த் திருவாக் காகி யவிரொளிப் பிழம்பு மாகிப்
பூதலம் புரக்க வந்த புண்ணியப் புனித மூர்த்தி
மாதயா நிதியே ஞான வரோதய கிரியே நின்சீர்
பாதபங் கயம்பல் லாண்டு பல்லாண்டு வாழி வாழி. 57

அறக்கொடும் பாவி கல்லா வசடர்க்குள் ளசட னஞ்சா
மறக்கொடும் புலைய னைய வஞ்சகப் புலைய னேன்யான்
துறக்கநாட் டரசன் சீற்றச் சுடுதழற் சுவாலைக் கஞ்சிச்
சிறக்குநின் சரண நீழ லடைக்கலஞ் சென்று சேர்ந்தேன். 58

என்னிகர் பாவி யில்ல ரெனினும்யா னேழைப் பாவி
இன்னலுற் றழுங்கும் பாவ ஜீவகோ டிகளுக் கென்றும்
நின்னிக ராய தஞ்சம் பிறிதிலை யென்ன நேடிப்
பொன்னடி நீழல் வந்து புகுந்தனன் போது கில்லேன். 59

இரங்குக பாவ பார விருஞ்சுமை யாற்ற கில்லேன்
இரங்குக வேழைப் பாவி யெனக்கொரு கதிவே றில்லை
இரங்குக தேவ கோப வெரிவிழுந் தழிக்கா முன்னம்
இரங்குக ஜீவ ரக்ஷைக் கென்றுரு வெடுத்த தேவே. 60

என்னுயிர்க் குயிரு நீயே யீடேற்று மீச னீயே
மன்னுசற் குருவு நீயே வழிதடுத் தெனையாட் கொண்ட
முன்னவன் றானு நீயே முற்றுநீ சுற்று நீயென்
னன்னைநன் கறிய நீயென் னுளத்தறி வுறுத்து கெந்தாய். 61

மைவிளை யிதய மாய வகலுளே மலினம் போக்கி
மெய்விசு வாச மென்னும் வியன்றிரி கொளுவி மாறாத்
தெய்விக வருளை யூற்றித் திவ்விய சுடரை யேற்றி
நெய்விளக் கலர்த்தி யென்னு ணிலவிவீற் றிருத்தி நீண்டோய். 62

உற்றமெய் விசுவா சத்தா லுரிமையாம் பரம் நீதி
மற்றது பெறுங்கால் ஜீவன் மல்குமென் றுரைக்கும் வாய்மை
அற்றமில் விசுவா சத்தை யாக்கிநீ தியைத்தந் தாக்கன்
முற்றுநின் னருளின் செய்கை முறையன்றோ கருணை மூர்த்தி. 63

ஆழியிற் பெரிதென் பேனின் னருட்பெருங் கிருபை தன்னை
வாழிநின் னன்புக் கெல்லை யாதென வழுத்து கிற்பேன்
பாழியம் புவியின் மிக்க பாவியேற் புரந்த வன்பென்
றாழிதோ றுலகமெங்கு முரைநிற்கு மென்ப தல்லால். 64

எச்சிலே விழையுங் குக்க லெனவிழி தொழில்செ யீனக்
குச்சித மான பாவி குவலயத் தென்னை யொப்பார்
நிச்சய மில்லை யில்லை நீசனேற் கிரங்கி யான்மப்
பிச்சையிட் டருளிப் பாவப் பிழையெலாம் பொறுத்தி யெந்தாய். 65

கிளருமெய்ஞ் ஞான போதங் கேடில்சன் மார்க்க சித்தி
வளர்விசு வாசக் காட்சி மாசறு புனித நீதி
உளமலி யன்பு மேவிட் டுன்றொழும் புவக்கு மாசை
விளையநின் னாவி நல்கி விடாதுகாத் தருள்வா யாமென். 66

என்றிவ்வா றாகப் பல்கா லிராப்பக லிதய நொந்து
நின்றுமன் றாடி வேண்டி நெட்டுயிர்ப் பெறிந்து சின்னாள்
குன்றிடாக் கருணை மல்குங் கோவிளங் குமார தேவன்
என்றெனக் கிரங்கு வார்கொல் லென்றுளங் கவலச் சென்ற. 67

ஆயிடை நெஞ்ச மாழ்கி யாவிசோர்ந் தயதி மல்கி
நாயகன் றிருமுன் செல்ல விடைந்துள நலிந்த தேனும்
ஓயகிற் கிலன்மன் றாட்டை யுத்தம வுரைக ளெல்லாம்
மாயமி லுண்மை யென்றென் மனக்கொளக் கிடந்த மாண்பால். 68

அன்றியுங் கிறிஸ்து நீதி யலதெனைப் புரக்கத் தக்க
தொன்றுமின் றுலகத் தென்னு முண்மையும் ஜெபமின் றாயின்
மன்றமன் னிப்பு மின்றென் வாய்மையு மன்றாட் டொன்றிப்
பொன்றினு நலமென் றோர்ந்த போதமுங் காத்த வெந்தாய். 69



இன்னுமொன் றறவோய் கேட்டி யெம்பிரா னருட்ச காயம்
உன்னிலே தாழ்க்கு மேனு முவந்துகாத் திருத்தி யாயின்
முன்னுற வருந்தப் பாது முற்றுநின் னையமற் றென்னைப்
பன்னிய சுருதி வாக்கொன் றுளத்துறப் பதிந்த தந்நாள். 70

இத்தகு முறைமை யாலென் னிதயம்பின் னிடையா தாக
முத்திநாட் டரசன் மைந்தன் முன்னிலை யாகு மட்டும்
நித்தமுந் திருமுன் கிட்டி நின்றுமன் றாடு மிந்த
வித்தகப் பழக்க மெற்கு விடாப்பிடி யாய தெந்தாய். 71

ஆங்கொரு வைகல் பாவ வருவருப் பெனக்குத் தோன்றி
நீங்கருந் துக்க மல்க நித்திய கேட்டை யுள்ளி
ஓங்கிய பிராண தாப முள்ளுறீஇத் தகிப்ப வாற்றா
தேங்கிநெட் டுயிர்த்துச் சோகித் தின்னலுற் றிடையுங்காலை. 72

இகபர மிரண்டி னுக்கு மிறைமைபூண் டெம்ம னோர்க்குப்
புகலிட மான ஜேசு புண்ணியப் படிவத் தோடு
முகவிழி கொளப்பொ றாத முதிரொளிப் பிழம்பி னூடென்
அகவிழி களிக்கத் தோன்று மற்புதக் காட்சி கண்டேன். 73

அஞ்சலை கலங்க வேண்டா மாநிதிநித் தியபி தாவை
மஞ்சனு மெனைநே சித்து வரன்முறை விசுவா சித்துச்
செஞ்செவே பற்றி நிற்றி திடங்கொளென் றமுதச் செவ்வாய்க்
கிஞ்சுக மனைய கோல விதழ்விண்டு கிளக்கக் கேட்டேன். 74

என்னுறு நித்திய ஜீவ னிருவிழி களிக்கத் தோன்றி
முன்னிலைப் பட்ட தென்னு மொழிதிற னறியே னாகிச்
சென்னிதாழ்த் திறைஞ்சி யாண்டோய் ஜெகப்பெரும் பாவி யேற்கும்
உன்னரும் பாவ மன்னிப் புறுவது கொல்லோ வென்றேன். 75

பாவஜீ வரைப்பு ரக்கப் பாருல குதித்த ஜேசு
தேவனோர் மைந்த னென்றுஞ் சிந்துசெங் குருதி யொன்றே
ஜீவனைப் புனித மாக்குந் திவ்விய வவிழ்த மென்றும்
மேவா வுயிர்த்தெ ழுந்த வெற்றியே யிரக்ஷை யென்றும். 76

உள்ளுணர் விசுவா சத்தா லூக்கிநோக் குடைந்தென் பக்கல்
நள்ளிவந் தடையிற் பொல்லா நராந்தகப் புலைய னென்னை
எள்ளுறு பாவி யெனு மிகழ்ந்தவ மதித்தோர் போதுந்
தள்ளிடே னினக்குப் போதுந் தந்தவென் கிருபை யென்றார். 77

இத்திற நிகழ்ந்த பின்றை யெம்பிரா னெனக்குள் ளுய்த்த
சத்திய வாக்கின் வண்ணந் தணப்பிலா விசுவா சத்தான்
முத்திநீ தியுமம் மான்மெய் முழுகுசோ ரியின்பி ராயச்
சித்தமும் லயிக்கு மென்னுத் தெள்ளிதி னுணர்ந்தேன் மேலும்.

நன்றியோ டுள்ளி நாளு நயந்தடித் தொழும்பு பற்றி
ஒன்றிய சிந்தை யாற்கே வுரியவாங் கிறிஸ்தி யேசு
நின்றுகீழ்ப் படிந்து பார்க்கு நிருமித்த தண்ட மேற்றுப்
பொன்றியு மீட்டி வைத்த புண்ணியப் பொலிவென் றோர்ந்தேன். 79

### வேறு.

இம்மெய் வாக்கொளி யென்னித யத்துற
மைம லிந்தம னத்துயர் மாய்ந்தது
மெய்ம கிழ்ச்சிநி றைந்துவி ழிவழி
கைமி குந்துகண் ணீரெனக் கான்றதால். 80

நந்த மேசுக்கி றிஸ்துவை நம்பிய
அந்த ஞான்றை யாங்கவர் சீலத்தைச்
சிந்தை யாரச்சி றக்குநண் பாற்றிட
இந்தி யங்கள்வி ழைந்தன வென்னுளே. 81

குருசு யர்த்தநங் கோக்கும ரேசனார்
தரிச னப்பலன் சாற்றுதி யென்றியேல்
பரிச ழித்தமுற் சீவிய பாவத்தைக்
கரிச றுத்ததுன் கண்கண்ட சாக்ஷியே. 82

மைந்தன் மாசறு நீதியின் மாண்பினுல்
தந்தை நீதித ரும்புவி ரக்ஷணை
சொந்த நீதிக றையுறத் தோய்தலின்
முந்து மாக்கினை முற்றுமென் றோர்ந்தனன். 83

உள்ள நாளள வும்முல கத்தினிக்
கள்ள மின்மனச் சான்றினைக் காத்துநான்
வள்ள லார்திரு நாமம கிமையை
நள்ளி நாள்விடு நாட்டம்வந் துற்றதால். 84

எத்தி றப்பகை நேரினு மென்னொரு
வித்த கன்கழல் விட்டிடு கிற்கிலன்
முத்தி கிட்டில வேனுமு றைமையிற்
செத்தி டற்குமோர் திரம்வந் துற்றதால். 85



எந்தை யித்தகு சிந்தனை யென்னுளே
முந்து வந்துமு ளைக்கும தோசொலாய்
விந்தை யாய்வினை யேற்றெழும் பாக்கிய 86
அந்த ணுவிய ருட்டிற மாண்டகாய்.

வன்பு லத்தும டிந்தொழிந் தோர்சிலர்
என்பி ருங்குவைக் கின்னுயி ரூட்டிய
அன்பி னுயவ ருட்டொனி யேயலாற் 87
பின்பொ ரேதுவு மின்றெனப் பேசினுன்.

உற்ற நம்பிக்கை யென்னுமு யிர்த்துணை
சொற்ற வாய்மைச்சு வைமது ரந்திகழ்
பொற்ற சும்பமு தஞ்செவி போந்துகுத் 88
தற்ற வாகவ ருந்தின னரியன்.

உண்டு தேக்கியு ளக்களி யுற்றுநீ
தொண்டு பட்டச ரித்திரந் தோமறக்
கண்டு கொண்டனன் யாவுங்க ருதுறில் 89
அண்டர் கோனரு ளாக்கத்தி னுயவால்.

ஆழி சூழுல கெங்குநம் மாண்டகை
வாழி யந்திரு நாமம கிமையே
ஊழி யும்முல வாதுநின் றோங்குக 90
வாழி வாழியென் றேகினர் மாதவர்.

சோக பூமிப் படலம் முற்றிற்று.

---

## அறிவீன வர்ச்சிதப் படலம்.

மாத வத்தர்ம கிழ்ச்சியோ டேமறைப்
போத முற்றுநற் புந்திதி மழ்ந்திட
மேத கக்கலை ஞானம்வி தந்துலாய்ப் 1
பாதை பற்றிநடந்தன ரென்பவே.

அரிய கேடுதொக் காரணர் மல்குதற்
பெரிய மென்னப்பெ யரிய நாட்டுளான்
உரிய மாதவ வேடத்தொ ளித்துளான் 2
தெரியுங் காலைதி ரிதரு சிந்தையான்.

கான கத்துறு கள்ளவ ழிக்கொடு
போன கத்தொழின் முற்றுறு புன்மையன்
கோன கத்துக்கு றிப்பறி யாமலிவ்
வான கத்துவ ழிநடைப் பட்டனன். 3

வீரி யந்திகழ் வேடத்த வத்தனை
ஆரி யன்னெறிக் கண்டற வோயுனக்
கூரி யாதிந்த வூர்த்தநெ றிவரக்
காரி யம்மெது கட்டுரை யாயென. 4

கேட்டி யையகி ளர்தற்பி ரியமாம்
நாட்டி னின்றுது றந்துந லந்தரு
வீட்டு லோகம்பு குதவி ரும்பியிப்
பாட்டை பற்றிப்ப டர்குவன் யானென்றான். 5

அண்டர் கோன்கடை காவலர்க் கவ்வயிற்
கண்டு கொள்கென வுட்புகக் காட்டுவான்
உண்டு கொல்லடை யாளமு னக்கது
கொண்ட ணைந்தனை யோவெனக் கூறினான். 6

பற்றி கந்தப வித்திர வேதியன்
சொற்ற தோர்ந்தறி வீனனுந் தூயவ
முற்ற றிந்தமு ழுமுதல் சித்தம்யான்
தெற்றெ னத்தெரி வன்னது தேர்தியால். 7

புந்தி யார்ப்புசிப் பன்சுக போகங்கள்
அந்த சந்திஜெ பிப்பன றஞ்செயப்
பிந்து கிற்கிலன் பேணிய வரவர்
தந்த மக்குக்கொ டுப்பல்த ரும்பொருள். 8

பத்தி லொன்றென்னு ரிமைப குத்ததை
முத்தி வேண்டிக்கொ டுப்பன்மு றைமுறை
சித்த சுத்திவி ரும்பிச்ச லதினம்
உத்த மத்துப வாசமு மோய்புவேன். 9

பிறந்த நாட்டையும் பெற்றுள வாழ்வையுந்
துறந்திம் மார்க்கம்பு கவுந்து ணிந்தனன்
அறந்தி றம்புகி லாதவெம் மாண்டவன்
மறந்து போவர்கொ லோவிந்த மாண்பெலாம். 10



இனைய சீலங்க ளெத்தனை யோவெனைப்
புனையும் பல்கலன் போலுள வாகவும்
நினைய கிற்றிலை நீமற்றந் நீர்மையை
எனைய வோவடை யாளமின் றென்றியால். 11

என்றெ டுத்தறி வீனனி சைத்தலும்
நன்ற றிந்தந லந்திகழ் வேதியன்
ஒன்றி யுன்னையு லகம கோத்தமன்
என்ற றிந்தனை யென்னினுங் கேட்டியால். 12

நனிதி கழ்ந்தொளி நல்கியி டுக்குறும்
புனித வாயில்பு குந்தரு நூல்வழி
இனிது நாடுமெ வர்க்கும ருள்வரால்
தனித மாரருண் மூர்த்தியோர் சாதனம். 13

முத்தி மாநகர் வாயிலின் முன்னுறீஇ
இத்தி ருத்தகு சாதன மேந்திடிற்
சித்தி ரப்பொற்க பாடந்தி றந்திடும்
உத்த மத்திருத் தொண்டரென் றெல்லையே. 14

வள்ள லுய்த்தம ணிக்கடை வாயிலை
எள்ளி வந்திங்கி டைக்கிடை சேர்பவர்
கள்ள ரென்றிறை வன்கடை காவலர்
தள்ளி யோச்சுவர் சாதன மின்மையால். 15

ஏழை நீகதி மார்க்கத்தி யைந்துமென்
வாழி சாதனம் பெற்றுய்ம தியிலை
பாழி னீரிறைத் துப்பய னென்னைகொல்
சூழு கென்றனன் நன்மதிச் சூழ்ச்சியான். 16

பொருட ரித்தபு லமையர் போற்றுறும்
அருட ரித்தமெய் யாரணன் வாய்மையை
இருட ரித்தம னத்தின னெண்ணிலன்
சூருட [illegible] 17

வலிய வந்துச ருவிவ ழிமறித்
தெலிய னேனையி ழுத்துவ ழக்கிடும்
புலிய னீர்துரை மக்களும் போன்றுளீர்
கலியின் காலக்க ணக்கிது வேகொலாம். 18

முற்று நீரெனக் கன்னியர் முன்பினீர்
பற்றென் றும்பிவிர் பார்த்து மிரீரொரு
சற்று நேரத்திற் சாடுதி ரீதுநீர்
பெற்ற சாதனத் திற்பெறும் பேறரோ. 19

செல்லு மின்விரைந் தும்வழி சேர்ந்தெமர்
நல்ல தேசமு றைப்படி நாடுவல்
புல்லு வேமிரு வேமுமப் பொன்னில
மல்லல் கூர்முத்தி மாநகர் வாயிலில். 20

பேத மென்கொல்முன் பின்னபின் முன்னவாம்
போது மோர்வழிப் போக்கர்பொ ருட்டிலே
கேத மில்கும ரிக்குங்கி முவிக்குங்
காத மேவழி பார்க்குங்க ணக்கிலே. 21

நெருக்க வாயில்பி டித்திந்நெ றிப்படப்
பெருக்க மாந்துன்ப நாளும்பி டிக்குமெந்
திருக்கு லாவிய தேசநின் றிவ்வழிச்
சுருக்க நாடிவந் தேனிதிற் றேடமென். 22

தேரில் நும்மவர் சேருறு மார்க்கமே
போ ருட்கதி மார்க்கம்பி றவெலாஞ்
சோர மார்க்கமெ னத்துணிந் தெள்ளுதிர்
சீரி தன்றுமக் கென்றனன் சீரிலான். 23

அன்ன வாசகங் கேட்டுட ஞரியன்
முன்னம் பிக்கையை நோக்கிமு றைமையோய்
தன்னை ஞானியென் றெண்ணுஞ்ச மூக்கனில்
நன்னர் மூடனை நம்புத னன்றெனு. 24

அமைவ தேயைய சொற்றனை யாயினுஞ்
சுமடன் கேட்டவை தன்னுளந் தூக்குறச்
சமய நல்கிப்பின் சார்பறிந் தொண்மதி
கமைய டன்சொல்க் காட்டு... 25

சொன்ம திக்கிணங் காப்படு தூர்ஜநர்
நன்மை யாவுமி ழப்பர்தந் நாளுகத்
துன்ம னத்திற்று ணிந்துமு றுக்கிய
கன்ம பாசக்கட் டுண்டுக விழ்வரால். 26



தன்னிட் டன்னவன் சாற்றுவ தோர்கிலன்
முன்னிட் டாலுமு றையுறி வானலன்
பின்னிட் டாவன பேசுது மாவினி
உன்னிட் டம்முரை யென்றன னொள்ளியோன். 27

நின்க ருத்திது வென்றுநி தானியாய்
நன்கு ரைத்தனை நம்பிக வின்றதே
தென்க ருத்தென வேகுதும் யாமெனாப்
பொன்கு லத்தல நோக்கினர் போயினர். 28

வேறு.

போயினர் சோகமார் பூமியோ டேகநித்
தேயுறா னெறிவிடா திடையிடைப் படுகருஞ்
சீயமார் தடமலைச் சிகரியு மடவியுந்
தாயினர் பிற்பட முற்படுந் தகையினர். 29

தாகசோ கங்களாற் றளருவார் சிலபகல்
வேகயாத் திரையினன் மெலிகுவார் சிலபகல்
தேகநோய் கண்டுளந் தேம்புவார் சிலபகல்
கோகுலத் தவரொடுங் குலவுவார் சிலபகல். 30

வேதசாத் திரமெடுத் தோதுவார் விரகொடே
கீதகா னந்தொடுத் தருகுவார் கிடைதொறும்
வேதமில் கருணைதாய்த் திறையிளங் கோமகன்
பாதபங் கயமலர் பாவுவார் பலமுறை. 31

என்றிம்மண் ணுலகைவிட் டிடுவமென் றெள்ளுவார்
என்றியாம் வீடடைந் திடுவமென் றேகுவார்
என்றிளங் கோமகற் காண்டுமென் றேங்குவார்
என்றுசே வடிநிழல் புகுவமென் றினைகுவார். 32

சோகபூ மியினெறித் தொடரின்முன் றுறவுறத்
தேகம்வன் பொறையுறத் தெருமர லுறுகினும்
மாகமா நகரணித் தறுமெனு மகிழ்வுகொண்
டேகினு ரேகமோ டேகில்வே தியரோ. 33

சென்றுழிச் சென்றுழிச் செல்லுமன் னிழலென
நின்றுழி நின்றுழி நின்றறி வீனனும்
பின்றொடர்ந் தணுகினன் பிரிவுறா னறிவுறான்
துன்றுநிக் காய்குவார் சூழ்ச்சியிற் றொடருவான். 34

கருமமே கண்ணெனக் கண்டுமுன் செனுமவர்
திருமிநோக் குழியறி வினனைச் சேய்மைகண்
டருமையீ தெமைவிடா தணுகுமா றறிதுமென்
றொருமனத் திருவர்நின் றெல்லைகூ விளிகொள. 35

வீரியத் தொடும்விரைந் தவணுறும் விரகிலாப்
பூரியன் றனைமுகப் பொலிவொடேற் றுபசரித்
தாரியன் சுகம்வின வயண்டர்நா யகனொடுன்
காரியத் திறமெவன் கழறுகென் றுரைசெய்தான். 36

தேசிகக் குரவகேள் ஜீவா க்ஷணையெனக்
காசையுண் டுண்டுநம் பிக்கையு மகிலலோ
கேசனைச் சிந்தைவைத் தீறில்முத் தியைவிழைந்
தாசலா துள்ளமு முண்டெனக் கென்றுமே. 37

சாற்றுமித் தகையசா தனமெனக் குண்மையின்
மாற்றருந் தகையமெய்ம் மகிழ்வுளத் தூடுலாய்
ஊற்றிருந் தொழுகலி னுலகசம் பத்தெலாம்
போற்றிடா திவ்வழிப் போந்தனன் றுறவியாய். 38

வேறு.

என்றறி வீனனீ தியம்பக் கேட்டலும்
வென்றியம் பகவனை விதேக முத்தியைக்
கன்றிய வலகையுங் கள்ள மார்க்கரும்
என்றுமுள் குவர்கதி யெய்தற் பாலரோ. 39

அரும்பெறன் மெய்விசு வாசத் தாட்சியின்
பெரும்பய னினைப்பினி லடையப் பெட்புறும்
இரும்பியன் மனத்தசோம் பேறி யாத்துமம்
விரும்பியும் பெறுதென வின்னும் வேதமே. 40

வெறுத்தன னுலகவாழ் வெனவோர் வீரியம்
இறுத்தனை சான்றெது வென்னி லெம்பிநீ
கறுத்திடு மிதயமே கரியென் பாயிது
மறுத்திடற் பாலதா மாபு கேட்டியால். 41

உற்பவ தோடருக் குலக வாவறல்
அற்பமோ வன்றென வறிகி லாமையிற்
பற்பலர் முயன்றுபாழ் பட்டுத் தாமுடைக்
கற்பித வெண்ணத்துக் கவிழ்கின் றாரரோ. 42



தன்னிரு தயத்தையே சார்ந்து நம்புவோன்
உன்னரும் பயித்தியோன் மத்த னென்றொரு
மன்னவ ஞானிசொன் மதித்துக் கொண்டவர் 43
பன்னருங் கொடுவிடப் பையென் றோர்வரால்.

கருதுகென் றூரியன் கழறக் கேட்டலுஞ்
சுருதிதேர் பனவபொல் லாத தூர்க்குணர்
இருதய நிலையெடுத் திசைத்த வாய்மையென் 44
ஒருதவ றிலாவித யத்துக் கொல்லுமோ.

நன்றுள விதயமு நன்ன டக்கையும்
ஒன்றினுக் கொன்றுசான் றாகி யொத்தலான்
மன்றல்சேர் முத்திவீட் டின்பம் வாய்த்திடும் 45
என்றநம் பிக்கையு மெனக்குண் டோர்தியால்.

வித்தக நவமணி விளைந்து மல்கிய
அத்தகு சுரங்கநல் லிதய மாகுமால்
பத்தெனும் விதிவிலக் கோம்பும் பண்புடைச் 46
சத்திய வொழுக்கமே சாற்று நன்னடை.

வேதிய மேலினி விளம்பப் பாலதென்
சாதக பாதகஞ் சாற்று வாயெனக்
கோதிலாக் குணத்தனீ குறித்த கூற்றினிற் 47
பாதக முளததை பகரக் கேட்டியால்.

ஒள்ளிய விதயத்தி னொழுங்கு முள்ளூறு
கள்ளவல் லிதயத்தின் கபடுங் காட்டுமால்
உள்ளதை யுள்ளவா றுரைக்கத் தக்கநம் 48
வள்ளலா ருரையெனு மாற்றுக் கோடுகல்.

வைதிக நூற்பிர மாண மாட்சிநூன்
மெய்திக ழவிரொளி விளக்கை யோம்பிடார்
பொய்திக ழிருதயப் புணர்ப்பை நம்பிவீண் 49
ஐதிக விருட்பிழம் படைந்து மாய்வரால்.

நன்றுசெய் பவனிலை நாசி ருட்டியில்
ஒன்றிய நீதிமா னொருவ னும்மிலை
என்றுமெ லாநர விருத யங்களுங் 50
கன்றிய தீவினைக் கழக மென்பவே.

சேணுறு நன்னெறிச் செலவு தீர்ந்தொரீஇக்
காணரு மாறுபா டாய கள்ளமுங்
கோணலுங் குலவிய குறுக்குத் தீவழி
நாணிலா தொழுகுத னாசு பாவமாம். 51

புரையறு புண்ணியப் புனிதத் தேமொழி
கரையறு கபட்டிரு தயத்தின் கள்ளத்தை
உரைபடு நடக்கையை யோர மின்றியே
வரையறைப் படுத்திய மரபு காண்டியால். 52

இந்நெறி யாய்மறை யியம்பு முண்மையைத்
தன்னகத் துணர்ந்தெலாஞ் சரியென் றொப்பிய
நன்னர்நெஞ் சேநலஞ் சுரக்கு நன்னடை
துன்னிநின் றாப்படுஞ் சூழ்ச்சி காணிது. 53

தன்னுறு கேட்டினை யுணரத் தக்கவந்
நன்னர்நெஞ் சுன்னத நாய கன்றனை
உன்னுறு விதஞ்சிறி துரைப்பல் கேளெனப்
பன்னுவான் றொடங்கினன் பார மார்த்திகன். 54

காமுறு நினைவையுட் கருத்தின் வஞ்சத்தைத்
தீமையை யிதயத்துட் டிணிந்த தோடத்தை
நாமுறு கேட்டினை நாடி நம்பினுங்
கோமக னறிவரென் றுளங்கொ திக்குமால். 55

உண்டென நினைக்குநம் முரிய நீதியை
மண்டுதுர்க் கந்தமாய் வரைவ ரல்லது
கண்டுளஞ் சகிப்பரோ கருத ரும்பர
மண்டலா திபரென மனம்ப தைக்குமால். 56

கறுப்புறு குட்டநோய் கழுமி யாக்கையின்
உறுப்பெலா மழுகிச்சீ யொழுகி லோகால்
வெறுப்புறு புலையனே னசுத்த வெவ்வினை
பொறுப்பரோ புனிதரென் றுள்ளம் பொங்குமால். 57

இத்திற மறிகிலை யெம்பி யுன்னிலே
உத்தம விருதய முண்டென் றுள்ளுதி
வித்தக வொழுக்குளை யெனவி யக்குதி
எத்தனை பிழையென வேழை யோர்கிலாய். 58



நீதிமா னெனவுனை நினைக்கு மட்டுநீ
கோதிலாக் கிறிஸ்துவின் குறைவி னீதிகொண்
டாதியான் றிருச்சர ணடைகு வாயலை 59
ஏதமின் மெய்விசு வாச மெங்குனை.

என்றுமெய் யுணர்வகத் தெழவி யம்பினான்
பொன்றிகழ்ந் தெனமினிர் புகரி னன்மதி
ஒன்றிவிக் குடமென வொருங்கு போக்கியே 60
நன்றெது மறிகிலா னவிற்று வானரோ.

பாவிகட் காநம பரம னோர்சுதன்
ஆவிவிட் டனரவற் கடங்கிக் கீழ்ப்படுந்
தாவரு நீதியாற் சாபம் போக்கியெங் 61
காவல ரெனையங்கி கரிப்ப ரென்பதும்.

புண்ணிய மூர்த்திதம் புண்ணி யத்திலெற்
கண்ணிய பத்தியின் கருமம் யாவுமோர்
அண்ணலுக் கர்ப்பண மாகு மென்பதுந் 62
திண்ணிய வென்விசு வாசச் செவ்விகாண்.

இவ்விசு வாசத்தி லியைந்த நீதியுஞ்
செவ்விய நீதியில் ஜீவ ரக்ஷையுங்
கவ்வையின் றுய்வரு கணக்கை யோர்கிலை 63
எவ்வகை திகைத்தனை யியம்பு கென்றனன்.

எள்ளரு நல்லவித் திட்டென் செய்யினும்
அள்ளலோங் குவர்நில யளிக்கு மோபயன்
ஒள்ளிய நறுவிரை யுண்ட போதினும் 64
உள்ளியின் குணஞ்சிறி தொருவற் பாலதோ.

எத்திற முடியினு மேழைக் கீண்டியான்
உத்தம மெய்விசு வாசத் துண்மையின்
வித்தக முறையினை விளக்க னன்றெனச் 65
சித்தமுற் றாரணன் செப்பன் மேயினான்.

உள்ளுறு முன்விசு வாசத் துண்மைதான்
வெள்ளென வெளுத்ததுன் னுரையின் மேயதுன்
பிள்ளைமை யிடையில்வந் தரித்த பேதைமை 66
கொள்ளும்வீண் பத்தியாய்க் குலவிற் றமரோ.

சொந்தநற் கிரியையாற் றொகுத்த புண்ணியச்
சிந்தையி னீதிமா னாகத் தேறினை
அந்தரத் தாமரை யலர்த்திக் காட்டிய
விந்தையே போலுமால் விகட வேடத்தோய். 67

நீசராம் பாவரை நீதி மான்களாய்
மாசறச் செயும்விசு வாசம் வல்விதி
வீசுதண் டனைக்கிடை விலக்கி ஜேசுவின்
ஆசறு புண்ணிய வடைக்க லத்திடும். 68

பாசமார் கிரியையிற் பழுத்த வுன்விசு
வாசவைக் கூளமோ தீர்வை வைகலில்
ஈசன்கோ பாக்கினிக் கெதிர்நின் றுய்ப்பது
பேசுமாக் கினையுனைப் பிடித்தி டாதுகொல். 69

நினதுகீழ்ப் படிதலை நீதி யாக்கவே
புனிதநீ தாதித்தன் போந்த தாமெனின்
மனிதா க்ஷணையெலா மாறு வேலருட்
டனிதத்தா லன்றுநந் தருமத் தாயவாம். 70

இப்பெரு மருள்பிடித் திழுக்க வேழைநீ
துப்புர வுளையெனத் துணிந்துன் னீதியாந்
தப்பறைக் கிடங்கரிற் றலைகி மூக்குறக்
குப்புறு கின்றனை கூறக் கேட்டியால். 71

இத்தரை மனுக்களுக் கிறுத்த தண்டனை
அத்தனை யுஞ்சுமந் தரிய பாடுகள்
உத்தரித் துயிர்ப்பலி யுதவிக் கற்பனை
பத்தையுந் தழுவினர் பரம னோர்சுதன். 72

ஈதுகாண் மெய்விசு வாச லக்ஷயம்
ஆதலி னிதையுளத் தாக்கி யாண்டகை
நீதியைப் புனைந்திவ ணிலவு வாயெனில்
ஜோதிநாட் டுயர்பதஞ் சொந்த மாமென்றான். 73

இச்சையாம் புரவியை யிழுத்திங் குப்பதற்
குச்சித கிரியையே கலின முண்மையிற்
குச்சித மாமெனிற் குவல யம்மெலாம்
நிச்சயங் கெடுமென நிறுவ வேண்டுமோ. 74



கிரியைநோக் காமலே கிறிஸ்தி ரக்ஷகர்
புரைதபு புண்ணியப் பொலிவின் மாட்சியால்
குரைகடற் புவிக்கெலா மிரக்ஷை கூடுமேல் 75
வரைவதென் பாவத்தை மதிவ லோயென்றான்.

ஆரியன் கேட்டறி வீன னுன்பெயர்
பேரியற் பொருளனுப் பிசகு றுமலுன்
பூரிய வாய்மொழி புலப்ப டுத்துமால் 76
நீரிய னிலத்திய லென்னு நீர்மைபோல்.

கோதியன் மாந்தரைக் கோதி லாரென
நீதிமா னாக்கிடு நீதி மாண்பையும்
வேதனார் நீதிக்கு விலக்கி நற்கதி 77
ஈதலின் மரபையு மின்னுந் தேர்கிலை.

இத்தகை யெனமுன மெடுத்தி யம்பிய
அத்தகு மெய்விசு வாச மாக்கிடும்
உத்தம பலன்களை யுசிதச் செய்கையை 78
எத்தகு வனவென யாதுந் தேர்கிலை.

என்னினுந் தெரிப்பலெம் மிருத யத்தினை
முன்னவன் கிறிஸ்துவின் மூல மாய்ப்பிரான்
சந்நிதிக் குய்த்திடுந் தயையன் பாதிய 79
பன்னருங் குணங்களைப் பாலித் தூட்டுமால்.

தனதுட லுயிர்பொருள் தனக்கின் றாமென
அனவர தாதிபற் காக்கி யன்பினன்
மனமொழி மெய்களின் வணங்கி வாழ்த்தியும் 80
தினபர வசமுறச் செய்யு மாலரோ.

சுருதியைச் சுருதியிற் றோன்று மார்க்கத்தைக்
கருதிமெய் யுணர்வொடு கலந்தம் மார்க்சத்து
வருதிருத் தொண்டரை மதித்துள் ளன்பினாற் 81
பருவரல் சகித்திடும் பான்மை நல்குமால்.

சொற்றவித் துணைகொலோ சுகிர்தம் யாவுக்கும்
உற்றவோர் மூலமா யுயிருற் றோங்கிய
அற்றமின் மெய்விசு வாச வாக்கத்தைப் 82
பெற்றவ ரேநித்ய ஜீவப் பேறுளார்.

கருத்தனுங் கிறிஸ்துவின் காட்சி யுற்றிடு
திருத்தகு மெய்விசு வாசச் செவ்வியிற்
பொருத்தமா மன்புறு கிரியை புண்ணியர்
அருத்துவர் கிருபையா ரமிர்த போனகம். 83

அன்புறு கிரியையோ டளவ ளாவிடும்
பொன்புனை மெய்விசு வாசம் பூத்திடின்
மன்பெருந் துரிச்சையின் வாயிற் பெய்வதோர்
கொன்பயில் கலினமாங் குறிக்கொள் வாயென்றான். 84

அவ்வயிற் கடவுள்வேந் தருட்கு மாரனை
எவ்வகை வெளிப்படுத் தினரி வற்கெனச்
செவ்வியோய் வினவுகென் றுரைப்பச் சீரிலா
அவ்விய னகங்கடுத் தறைகு வானரோ. 85

விண்ணுல காளியோர் விபுத மைந்தனைக்
கண்ணெதிர் மயலறக் காண வேகொலாம்
எண்ணிய வெண்ணறும் மிருவர் வாய்மையுந்
திண்ணறி வீனத்தைத் தெரிக்கு மாலரோ. 86

எத்தனை யாகவீ ணெண்ணங் கொள்ளுதிர்
எத்தனை நுணுக்கமா யெடுத்தி யம்புதிர்
எத்தனை நும்விசு வாச மென்னினும்
அத்தனைக் குங்குறை வல்லன் யானென்றான். 87

இத்தலத் தவரெலா மிறைவ னோர்திருச்
சித்தமுய்த் துணர்கிலர் ஜென்மத் தீட்டினால்
உத்தம கிறிஸ்துவை யெமக்கிங் குள்ளுற
அத்தனே வெளிப்படை யாக்க வேண்டுமால். 88

தெய்விக வெளிப்படைத் தேற்ற மின்றெனில்
உய்வருள் பவர்திருக் குமா னுற்றவர்
தைவிகர் தந்தையி னுளரெ னத்தகு
மெய்வெளி வருவகை யாது விள்ளென. 89

வேதிய னெல்லையே விநய மாய்விளித்
தாதர வோடுநம் மான்ம ரக்ஷணை
காதலாய் நுட்பமாய்க் கருது றுமல்யாம்
பேதமை யாலெமிற் பிணங்கற் பாலதோ. 90



சிருட்டிக ராகிய தேவ தந்தைதம்
அருட்டுணை மைந்தனை யறியு மாறிவண்
தெருட்டினா லன்றியார் தெருள வல்லவன்
பொருட்டிற னறிந்தவன் புகன்ற துண்மைகாண். 91

புன்னா ஜீவனைப் புரக்கப் போந்தவம்
மன்னொரு சுதனையா மனத்து ளுய்ப்பதற்
குன்னதத் தாசனே யுவந்து நம்பகத்
தின்னருட் கிரியையை யியற்ற வேண்டுமால். 92

மாயமின் மெய்விசு வாச மாட்சியை
நீயறிந் திலைசிறி தேனு நின்னிகல்
வாயுனை தெரித்தமேல் வருநிர்ப் பந்தத்தை
ஆயுதி யாயுணர்ந் தறிதி தாழ்த்திடேல். 93

ஜேசுவே யடைக்கலம் ஜெகத்தி னுக்கெலாம்
ஈசனு மவர்கும ரேசன் பக்கலில்
ஆசையோ டேவினாந் தடுப்பை யாயினும்
பாசவெவ் வினைகள்வேர் பறியுங் காண்டியால். 94

பாவநி வாரணப் பயனி தொன்றுகொல்
தேவகோ பாக்கினைத் திகிலு நீங்கிடும்
ஜீவர க்ஷணையுமெய் வாழ்வுஞ் சித்தியாம்
ஆவலித் தோடுதி யகங்கு விந்தரோ. 95

சொன்மதி யிவ்வெலாஞ் சுருதி கூறுமெய்
நன்மதி யாதலி னயந்துட் கொண்டுநீ
உன்மதி யீனத்தை யொருவி யொல்லையே
சென்மதி கிறிஸ்துவைச் சேவி யென்றனன். 96

ஒள்ளியீர் படபடத் துரைக்கு மாறுபோல்
துள்ளுதிர் நடையிலு மெனக்குத் தூரமால்
மெள்ளமெள் ளத்தனி வருவல் விட்டுமுற்
கொள்ளுதி ரென்றனன் ருணத்தைக் கொள்கிலான். 97

வாட்படை யனையசொல் வழங்கக் கேட்பினுங்
கோட்படா மனத்தினன் குறிக்கொண் டானலன்
கேட்பினுங் கேட்கிலாத் தகைய கேள்வியாற்
றோட்குறாச் செவியெனுஞ் சொற்பொய் யாவதோ. 98

ஆரியன் றோழனை நோக்கி யையவிண்
காரிய மினியிவண் காலம் போக்குதல்
சீரிய கதிவழி விரைந்து சேறலே
கூரிய மதியெமக் கென்று கூறினான். 99

ஆமிதே கருமமென் றவனு நேர்ந்தனன்
மீமகீ பதிதிரு வருளை வேண்டினார்
பாமான் றனையொரீஇப் பாதை பற்றினார்
கோமகன் றிருப்புகழ் குறிக்கொண் டென்பவே. 100

## வேறு.

ஜீவவழி செல்பொழுது தேசிகனு மேழைப்
பாவியறி வீனன்முடி விற்படரு ழக்கப்
போவதைநி னைந்தெனுளம் புண்படுவ தைய
ஆவதினி யாதுசெய லாவழிய வந்தோ. 101

என்றுபரி தாபமொடி யம்பலுநம் பிக்கை
ஒன்றுமதி யெத்தனையு ரைத்துமறி வீனன்
பொன்றும்வழி யூடுதனி போவதுது ணிந்தான்
நன்றறியு மெந்தையிதி னும்பரிவ தென்னே. 102

பித்துலக மாயவலை யூடுபிணி யுண்டு
மத்தமுறு மாயபுரி யின்மறுகு தோறும்
உய்த்துணர்வி லாதுபடு மோசமுறு கின்றார்
இத்தகைய ரெத்தனைய ரென்பனுனக் கென்றான். 103

தூயசுவி சேஷவொளி தோற்றரிய தாகப்
பேயலகை யாயபிர பஞ்சவதி காரி
மாயவிசு வாசிகண்ம னக்குருடு செய்தான்
ஆயதிவ கைத்தெனினு மையவிது கேண்மோ. 104

சோரவழி யூடுதிரி துர்ஜநர்த மக்கும்
பாரமிகு பாவவுணர் வுண்டுபய முண்டென்
றோரினுமி யற்கையறி வீனமுற லாலே
சீரடையு மார்க்கமில ராயுணர்வு தேய்வார். 105

முற்றுநல்லு ணர்ச்சியொடு மூளுமனஸ் தாபம்
உற்றவிடை யாத்துமநல் லூதியமி தென்னாத்
தெற்றவுண ராதநுசி தைக்கவகை செய்தே
துற்றுடலி னிச்சைவழி யிற்றுணிவு கொள்வார். 106



இன்னவகை யாயவுணர் வாதியித யத்தில்
துன்னிநிலை பெற்றிடுமெ னிற்சுருதி கூறும்
நன்னெறிபு குத்துமென நம்பிகரு துற்றாய்
அந்நெறிதெ ரிப்பலென வாரணன்வி ரிப்பான். 107

பாவபய முன்னதப யம்பகரி ரண்டில்
ஓவலுறு முன்னையதி டைக்கிடையு யிர்த்துத்
தேவபய முள்ளுறுமெ னிற்றிகழ்மெய்ஞ் ஞானம்
மேவுமது வேவிதிவி லக்கின்வழி யுய்க்கும். 108

தீத்தொழிலை விட்டொருவு கென்றுமதி செப்பும்
மாத்தகைய ரக்ஷகனை நாடிவழி பட்டுன்
ஆத்துமவி ரக்ஷைபெறு கென்றறிவு றுத்துந்
தோத்திரஜெ பங்களைய கத்திடைதொ குக்கும். 109

உத்தமநல் லாவியறி வூட்டுமுறை பற்றிச்
சுத்தமன ரம்மியசு சீலசுகிர் தங்கள்
வித்தகவி வேகமினை மேவியருள் வேத
சத்தியமு றைக்குநிலை தந்துதரிப் பிக்கும். 110

இப்பெருந லந்தருவ தேதுபய மதுவே
செப்பரிய தேவபய மற்றிதுதெ ளிந்தோர்
தப்பில்விசு வாசமுறை சார்ந்திறுதி காறும்
ஒப்பரிய வுத்தமவொ ழுக்கநெறி நிற்பார். 111

செவ்விதிக ழுத்தமப யத்தினுறு சீலம்
இவ்வகைய வென்றுதுணி யாதவறி வீனர்
வெவ்வியபி சாசுளம்வி ளைத்ததென வெண்ணி
அவ்வியல்கெ டுத்துளம டக்கியலை வாரால். 112

ஐயவிது காறுமறி வீனனியல் பேசி
மையலுறு சோகமனு காதவழி வந்தேம்
வையகவ ழிக்கடையின் மல்குபெரு வாழ்க்கை
கையுறவ டுத்தனமி தோகடிகை தூரம். 113

என்றகம கிழ்ச்சியொடி சைந்துவழி யேகி
வென்றிபுனை வேதியன்வி ளம்பிடவி யந்து
நன்றுமிக நன்றெனநம் பிக்கையுந டந்தான்
ஒன்றியிரு வோருநெறி யேகினரு வந்தே. 114

அறிவீன வர்ச்சிதப் படலம் முற்றிற்று.

## நிலைகேடனாதியர் விவரணப் படலம்.

ஊசிபுகு மாறுசெறு நூலினொரு வாமே
ஆசறுநம் பிக்கைவிசு வாசியைய டுத்துப்
பேசிநடை கூடினனோர் பேதமில ராக
ஈசனைவ ழுத்திநெறி யேகினர்வி ரைந்தே. 1

அங்கனொரு சூழலைய டுத்துமறை தேர்ந்த
புங்கவனம் பிக்கைமுக நோக்கிமதி பூத்தோய்
கங்குலித யத்துநிலை கேடனொரு கஞ்சன்
எங்குளன றிந்தனைகொ லோபுகறி யென்றான். 2

நன்றறிவ னானவனை நாணயபு ரத்துக்
கொன்றியவ மார்க்கபுர மென்பதவ னூராம்
முன்றனையு ணர்ந்துபய முற்றுமன முட்டி
மன்றனகர் யாத்திரைம தித்தனனொ ருக்கால். 3

மாயநக ரிக்கருக மார்க்கபுர வாயில்
ஆயதுகொ டென்வயின டுத்துநிலை கேடன்
மேயவுணர் வும்பயமும் விண்டுவிழி வழிநீர்
ஏயவுள ழுங்குவனி ரக்ஷையைவி னாவி. 4

பண்டுபல காலவன கத்தெழுப யத்தைக்
கொண்டுமிரு கண்களுழி கோத்திடுகு றிப்பைக்
கண்டுமிவ னுக்குயிரி ரக்ஷைபெறு கவலை
உண்டுமென நம்பிமன முருகியதெ னக்கும். 5

இப்பரிசி ருப்பினுநம் மீசனொரு சித்தம்
எப்பரிசெ னாவதைய றிந்தினிதி யற்ற
ஒப்பிநடை கொள்கிலர்கண் ணீர்நனியு குக்கும்
அப்பரிசி னென்பயனெ னாச்சிறிதை யுற்றேன். 6

எத்தனைய ரோபரம நாமமெடுத் தோதிக்
கத்துபவ ரல்லர்கதி காண்பவர்க ருத்தன்
சித்தமறி வுற்றதுசெ யற்குளம கிழ்ந்த
உத்தமர்க ளேயெனுமு ரைத்திறமு ணர்ந்தேன். 7



ஆங்கவன கத்தயல்தன் மீட்சியும றப்பின்
வாங்கியுமெ னப்பெயர்வ திந்தமதி கேடர்
நீங்கரிய நட்பினரி வற்கவர்நி கழ்த்துந்
தீங்குமொழி கொண்டெழுநற் சிந்தனைதொ லைத்தான். 8

ஐயநிலை கேடன்முத லாயவர்தி றத்தென்
னொய்யமதி யிற்படுக ருத்தைநுவல் வன்பின்
செய்யமதி யுள்ளுறைதெ ரித்தியினி தென்னா
மையறுநம் பிக்கைமுன்வ குத்திடுவ தானான். 9

இக்குறிப டைத்தவர்தம் மின்னலுறு பாவச்
சிக்குளமெ ழும்பநர கத்திகில டைந்து
புக்கரிய வான்கதிபு குந்திடவி ரும்பி
முக்கியவி ரக்ஷைவழி செல்லமுயல் கின்றார். 10

பின்னர்சில வைகலொரு பெற்றிகழி யப்பேய்
அன்னர்பிற விக்குணம கத்திடையெ ழும்பி
முன்னுறுமு ணர்ச்சியையொ ருங்கறமு ருக்க
நன்னெறியொ ரீஇமுனெறி நச்சிநுழை கின்றார். 11

மேதகுவை தீகநடை வித்தகவி வேகஞ்
சாதுகுண சீலமொடு தர்மநெறி யாவும்
ஓதுபிற விக்குணமு யர்ந்திடிலொ ழிக்கும்
ஏதுகுண மேலிடும தற்கடிமை யெல்லாம். 12

ஆண்டகைகி றிஸ்துவைய றிந்தவறி வாலே
தீண்டரும சுத்தவுல கத்துநெறி சீத்து
மீண்டவர்ம றுத்துமவ்வி டர்க்குள்விழு வாரேன்
மூண்டெழுபல் கேடுறுவர் முன்னையிலும் பின்னே. 13

நீதிநெறி நீர்மையைய றிந்துமதி னின்றும்
மாதகைய கட்டளையை வல்லிதின்வ ரைந்து
போதலினு முந்துறவப் போதமடை யாமே
மேதினியி னூடலைதன் மிக்கநல மன்றோ. 14

கக்கியத யின்றுகடை காத்துயிர்க ழிக்குங்
குக்கல்கழு வப்படினுங் கோதுபட வொல்லை
புக்குளைபு ரண்டலையுங் கோலமது போலிம்
மக்களும சுத்தநெறி யூடுமறி வாரால். 15

வேறு.

பிறவித் தீக்குணச் செயலிது பிரபஞ்ச மயக்கின்
உறவு மச்சமு மேவிட நாகச்ச மொடுங்கி
மறவி யாதலி னுலகின்ப நுகர்ந்துயிர் வாழ்தல்
அறவி யற்கையென் றகக்கரி மழுக்குகின் றாரால். 16

அலகி லாரண நூனெறி பிடித்தலி னவியா
துலக நிந்தைமேன் மேலுமு பாதிதொக் கோங்கும்
கலக மாமதாற் றந்திரோ பாயத்தாற் கழிப்பாம்
இலகு மாயுளென் றெண்ணியும் பின்னிடை கின்றார். 17

புலநு கர்ச்சியை விழைந்திறு மைந்துயிர் போலத்
தலம ருத்துபுன் போகத்துத் தலைதடு மாறிச்
சுலவு மாயவின் பங்களைத் துய்த்தகந் துலக்கிக்
குலவு நல்லுணர் வனைத்தையும் புதைப்பரிக் கொடியோர். 18

மேவு நன்னெறி யால்வரு வெட்கத்தி னிடறி
ஓவி லாணவத் தருக்கினு னல்லுணர் வொழிந்து
வீவின் றுய்வரும் வேதனைக் கிடங்கர்வீழ் கின்றார்
தேவ பத்தியி னலத்தையுற் றுய்கிலாச் சிதடர். 19

சுலவு பாவமும் பயங்கரத் தொகுதியுஞ் சூழ்ந்து
நிலவி மேல்வரு மாக்கினைத் தீர்ப்பையுண் ணினைந்து
விலவி லத்தக நடுங்கலில் விருப்பமின் றாகி
உலவு கின்றனர் பாவத்தி னூசலா டுளத்தர். 20

மூல மாயகத் தெழும்புநல் லுணர்ச்சியை முறையே
பால னஞ்செய்து காக்கின்ற பத்திமைக் குழுக்கள்
மேலை நிர்ப்பந்த விழலிலே வீழ்ந்தழி வதன்முன்
சால வேயடைக் கலம்புகுந் துய்குவர் சரதம். 21

தந்தை கேட்டிசன் மார்க்கத்து நடுநிலை தவறி
வெந்துன் மார்க்கத்துக் கவிழ்த்துமே துக்களை விதந்தேன்
எந்த வாறுபின் வாங்குகின் றாரென வெடுத்துச்
சிந்தை யாரநீ தெரிக்கென வேதியன் றெரிப்பான். 22

தெள்ளி யோய்நிலை கேடனு தியாகந் தெளிந்தங்
குள்ள கோதெலா நனிவடித் துளைத்தனை யுள்ளம்
விள்ளு நல்லுணர் வோடெழு மெய்மனஸ் தாபங்
கொள்ளு நீரரே நிலைபிச காநிற்குங் குணத்தர். 23



நின்ற நன்னிலை தவறிப்பின் வாங்கிடு நீசர்
சென்று சென்றுதன் மார்க்கத்துச் சிக்குணுஞ் சீர்கேள்
நன்று தெய்வத்தை மரணத்தை நாகவெஞ் சிறையை
ஒன்று முள்கிலா மறதியே மூலவுற் பாதம். 24

வேத வைதிக வொழுக்கெலா முறைமுறை விடுதல்
சாத கம்பெறு பாவத்தை யிச்சையைத் தழுவல்
பேத மைத்துணி காங்கொடு பிரபஞ்ச மயக்கம்
ஓது சற்கரு மங்களை யொழிதலே யுபயம். 25

இனைய தூர்க்குண சீலங்க ளிதயத்துக் கெழுமிக்
கனவு போன்றுசின் னாட்செலக் கருத்திடைக் கதித்து
நினைவி னேங்கிப்பின் வாக்கினுஞ் செயலினு நிலவி
வினையி னல்வர வாவெளிப் பட்டிடும் விரகாய். 26

மெய்க்கி றிஸ்தவர் கூட்டுற விழிவென விடுவர்
பொய்க்கு ருக்களென் றிகழுவ நூலவரைப் பொதிந்து
வைக்குந் தீமைக்குப் பகல்சொல மறையவ ருள்ளங்
கைக்குணோர்னா முளைத்ததென் றெள்ளுவர் கடுகி. 27

ஜெகந்த ழைத்திடு சிற்றின்பப் பிரியருல் லாசர்
முகந்து கொள்பொரு ளாசையர் முழுக்குடி வெறியர்
அகந்தை யாளர்பே ருண்டிய ராயமற் றிவரோ
டுகந்து நண்பாய்க் கூட்டுண்டு களிப்பரிங் குழன்றே. 28

வைகல் சிற்சில கழியவும் வரம்பிலாப் பாவச்
செய்க லந்தனு போகத்தை விளைப்பதே செயலாய்
உய்க லாநெறிக் கோடியா டித்திரிந் துலவிப்
பொய்க லந்தவா ணாளிறப் பொன்றுவர் முடிவில். 29

இத்தி றத்தருக் கிரங்கிநம் பிரக்ஷணை மூர்த்தி
அத்து டக்கினின் றகற்றியுய் வருளில ராயின்
தத்த மக்குவைப் பாக்கிய கெடுநிதிச் சலதிக்
குத்தி யோகம்பெற் றுழல்வரா லூழியோ டூழி. 30

என்றிவ் வாறுநாத் தழுநிலை கெட்டுப்பின் வாங்கித்
தன்று ணைப்பெரு மீட்பினி யுண்டெனத் தருக்கும்
பொன்று தீக்குண வியல்பெலாம் போகவிட் டிடுதுந்
துன்று சோகபூ மியினெடு மென்றனன் றூயோன். 31

சொற்ற வாய்மைகேட் டுளத்துண்மை ஞானத்தைத் தொகுத்துத்
துற்று சோகபூ மியிற்படு முயக்கெலாந் தொலைய
முற்று நீத்தன னெனுங்குது கலத்தொடு முடுகி
நற்ற வத்தனோ டேகின னம்பிக்கை யொருவான். 32

நிலைகேடனுதியர் விவரணப் படலம் முற்றிற்று.

ஆரணியபருவம் கவி, 739.

# இரக்ஷணிய யாத்திரிகம்.

## ஐந்தாவது: இரக்ஷணிய பருவம்.

### தர்மக்ஷேத்திரப் படலம்.

உடலுயிர் கண்ணிமை யொத்த மாட்சியர்
படருறு மனந்தரின் படுகர் வைப்பையும்
நடலையார் பிரபஞ்ச நச்சு வாழ்க்கையின்
கடையையுங் கடந்துமெய் வாழ்வைக் கண்ணுற்றார். 1

பல்வள மொருங்குழீஇப் பரம பாஷையின்
கல்வியுஞ் செல்வமுங் கவின்கொண் டோங்கிய
நல்வள நாட்டையூ டுருவி நம்பிரான்
மல்வள நகர்புகு மார்க்கஞ் சென்றதால். 2

புயனிரை பொதுளிய பொதும்ப ரும்பல
பயிர்வளஞ் செறிந்தெழில் படர்ந்த பாங்கரும்
வியனிலப் பாப்புநல் விரையுய் யானமும்
மயலறு காட்சியின் மயங்கு மாலது. 3

வானமும் பூமியு மிணைந்த மாண்பது
ஞானமும் நன்மையு நனிக நித்தது
தீனமு மீனமுஞ் சேர்வின் றாயதெவ்
வூனமும் பாவமு மொழிந்த நீரது. 4

ஆரிய ரேகுடி யமையத் தக்கது
பூரிய ரவ்வழி புகப்பெ றாதது
சூரியன் கதிரன வாதந் தன்னலால்
காரிரு ளெங்கணுங் காணொ ணாதது. 5

புனிதமே யெங்கணும் பொலியும் பொற்பது
தனிதமா ருண்மழை பொழியுஞ் சால்பது
மனிதர்வா னவரென மருளத் தக்கது
நனிதவ வொழுக்கத்தி னலங்கொண் மொய்ம்பது. 6

புண்ணிய நதிவளம் பொருந்து பொற்பது
தண்ணளித் தடங்களின் பெருக்கஞ் சான்றது
கண்ணிய பயிர்வளங் கவின்கொள் காட்சியின்
வண்ணமித் துணையென வகுக்கொ ணாதது. 7

சீலமு மொழுக்கமுந் திகழ்ந்த செவ்வியிற்
பாலொடு தேன்கலந் தோடும் பாலது
ஞாலமுற் றுந்தொகூஉ நன்க ருந்தினுஞ்
சாலவும் பயன்படுந் தகைமை சான்றது. 8

கருமபூ மியின்கடைக் கண்ண தாயது
திருமலைச் சாரலோ டிசைந்த சீரது
மருமலி தருமலர்ச் சோலை வாய்ந்தது
தருமசேத் திரமெனப் பெயர்த லைத்தது. 9

அத்தரு சேத்திரத் தணிகொண் மாட்சியைச்
சத்திய நிலைபெறு தகைக்கண் ணுடியின்
பத்தியின் விழிக்கொடு பார்ப்ப லலது
வித்தரிப் புரையிடல் விளக்கற் பாலதோ. 10

## வேறு.

இன்ன ணந்தரு பரமசா தனங்களோ டிசைந்து
மன்னு ஞானநல் வளந்தரு தருமசேத் திரத்தைத்
துன்னு மாத்திரத் தாரணக் கிழவராந் தூயோர்
பன்ன ரும்பர மானந்த பரவச ரானார். 11

பனிதி கழ்ந்தவண் புதுமலர்ப் பரிமளம் பரம்பித்
தனித மாமதுத் துளிபடு தண்டலைப் பாப்பில்
நனித வழ்ந்துலா நறுந்தென்றன் மெய்யுற நனுகப்
புனித ராயின ரிருவரும் பொன்னொளி மருவி. 12

மாய மார்பிர பஞ்சத்து மயக்கினி மருவாத்
தூய சேத்திர மடைந்தன மாலெனத் தொழுது
மேய தோத்திரம் புரிந்தனர் விண்ணுல காளும்
நாய கன்னருட் டுணைமையை நன்றியோ டுள்ளி. 13



இனைய சீலராய் நன்னெறி பிடித்திரு வோருந்
தினைய னைத்துநோ வின்றியுள் ளதிசயஞ் சிறப்பத்
துனைவி னேகுழி வரம்பறு காட்சியைத் தொகுத்துப் 14
புனையும் வேதியன் றேழற்குக் காட்டினன் புகல்வான்.

கூறுற் றோங்கிய மதிவலோய் கொற்றவன் மகிமைச்
சீறுற் றோங்கிய திருநக ரணித்தறுஞ் செயலால்
ஏறுற் றோங்குபைம் பொன்மய வெழிலுருப் படைத்திப் 15
பாருற் றோங்கிய சராசரப் பகுதிகள் பாராய்.

நிண்ண யந்திக ழுத்தம நிருமல வாசன்
தண்ண ளிப்பெருக் கார்வதித் தருமசேத் திரமென்
றெண்ண ரும்பல வளநிறைந் தெங்கணு மலிந்து 16
கண்ணெ திர்ப்படு காட்சியே தெரிப்பன காணாய்.

என்னு யிர்க்கருந் துணைவவித் தலத்தவ ரெல்லாம்
மன்னர் கோமகன் குருதிநீ ராடிய மாபாற்
செந்நி றத்தபொன் னுருவொளி திகழ்ந்தமே னியராய்ப் 17
பன்ன ரும்மெழில் படைத்துள் புதுமையைப் பாராய்.

துனித விர்த்தருந் துணைபுரி தோழவித் தேயப்
புனிதர் வாய்மலர் பொழிதரு புதுமொழித் தேன்போல்
நனிதி கழ்ந்தமுந் திரிகையி னறுங்கொழுங் குலைகள் 18
கனித ரும்புது நறைவிரி காட்சியைக் காணாய்.

உரவு நீர்நிலத் தருட்டிர வியம்பெற்ற வுரவோய்
இரவு மின்றுறு துயிலுமின் றுதலி னெங்கும்
புரவ லன்றிரு வடிக்கன்பு பொருந்திய புனிதர் 19
பரவ சத்துயில் விளைக்கின்ற புதுமையைப் பாராய்.

உரம லைந்தமெய் யுத்தம விந்நிலத் துரவோர்
கரவி லாதகம் புறமெங்கு முண்மையே கவினப்
புரவ லன்சித்தம் போற்புரி புனிதமாச் செயலாற் 20
பரம ராஜ்ஜியம் வந்துற்ற பரிசினைப் பாராய்.

அற்பு மல்கிய வாருயிர்த் தோழநம் மருமைத்
தற்ப ரன்சுதன் பிராட்டியோ டுலவுவான் சமைத்த
விற்ப முத்தபைம் பொன்மலர்ப் பரிமளம் வீசுங் 21
கற்ப கச்செழுங் காவனத் தெழினலங் காணாய்.

மீயு யர்ந்தவா னாட்டிள வாசன்வீற் றிருக்கத்
தூய பொன்னொடு மின்னையும் வெயிலையுந் தொகுத்து
மேய பன்மணி குயின்றுவிண் ணுறமிளிர்ந் தெங்கும்
பாயி ருஞ்சுடர் பரப்புமண் டபநிலை பாராய். 22

நம்பர் நாட்டிய நம்பிக்கை யுருக்கொண்ட நண்ப
இம்பர் நாட்டிய திருச்சபை யெனுமண வாட்டிக்
கும்பர் நாட்டிள வாசன்செய் யொப்புடன் படிக்கைக்
கம்ப நாட்டிய திருமணப் பந்தலைக் காணாய். 23

புரையின் மெய்விசு வாசவிப் புனிதசேத் திரத்தின்
தரையில் வந்தவந் தேகின்ற சாரண விபுதர்
விரைய லர்ந்தபொற் றாமரைத் திருமுக விளக்கங்
கரையில் பேரின்ப மகிழ்ச்சியைத் தெரிப்பன காணாய். 24

ஞான நண்பபொன் னகரணித் தெமக்கினி நவிற்றில்
வான கத்தா சன்றிரு வோலக்க மன்றில்
ஆன சத்தொனி யோடெழு மாரண கீத
கான கந்தரு வஞ்செவி மடுப்பன காணாய். 25

எம்பி யிந்நிலை யாடியி லிணையில்பே ரின்பச்
செம்பொன் மாளிகை திருக்கடை திருநெடு வீதி
உம்ப ரோங்குகோ புரமகி மைத்திர னுயர்ந்த
பைம்பொ னிஞ்சிமா நகருருக் காட்டுவ பாராய். 26

என்ம னக்கினி யாய்சரு வேசுர நேசம்
நன்மை நற்குண நன்னடை நன்மனச் சான்று
தன்ம யாலனந் தயையன்பு சாந்தமென் றினைய
பன்ம ணித்திரள் புரைகுண நிதிகளைப் பாராய். 27

தெள்ளி யோயிந்தத் திவ்விய சேத்திர மெங்கும்
உள்ளு றப்பளிங் கெனத்தெளிந் துறுமணங் கமழும்
வள்ள வாய்மலர்ந் திதழ்விண்ட மதுத்துளி மல்கிப்
பள்ள நீரகத் தலர்முக வனசங்கள் பாராய். 28

ஜீவ நன்மையைத் தெரிந்துளந் திரும்பிய செய்யோய்
தேவ மைந்தனோர் சீர்த்தியைச் சேத்திர மடந்தை
ஆவ லிற்புனைந் தேத்திசை யாமென வணிகொள்
காவ கத்தெழு புள்ளொலி காட்டுவ காணாய். 29



இனைய யாவையும் வயின்றொறுந் தோழனுக் கியம்பிச்
சினைய லர்ந்தபூங் காவகச் செழும்பொழி னடுவண்
வனையும் பொற்றிரு மாமணி மண்டப மடுத்தான்
நினைவி னீங்கலா நம்பிக்கை யோடுமந் நிவிர்த்தன். 30

திருக்கு லாவுமம் முன்றிலிற் றிவ்விய ஜோதி
விருக்க மல்குமோர் சூழலில் வேதிய ரிருவர்
மருக்கு லாவிய மலர்செறி யசோகத்தை மருவி
உருக்கு மண்டபப் பொலிவுகண் டுவப்புட னிருந்தார். 31

ஆய போழ்தத்து வனபரி பாலக ரடுத்துத்
தூய யாத்திரைக் குறியினா லவர்நிலை துணிந்து
நேய நன்மொழி நிகழ்த்திநுந் நெறிக்கிடை நிகழ்ந்த
சேய காரியந் தெரிக்கென வேதியன் றெரிப்ப. 32

நன்று கேட்டுளக் களிப்பொடு நாயகற் பாவி
நின்று செவ்வியீர் பிரபஞ்ச நிருவிசா ரத்து
மன்றி ருந்துமிவ் வளம்படு தருமசேத் திரத்து
முன்றில் வந்தனிர் திருவருண் மாட்சியே முற்றும். 33

ஐயன் மீரினித் துன்பமின் றுயினு மாண்டோர்
மையி ருட்படு மரணத்தை வான்முறை நீந்தித்
துய்ய வாயவக் கரைப்படிற் சுவர்க்கபே ரின்பங்
கைய தாகுமா லென்றுளங் கனிந்துரை யாடி. 34

வம்மி னீண்டென மலர்க்கரங் கொளுவியுய் யானத்
தெம்ம ருங்கினு மிசைந்துள புதுமையைக் காட்டி
அம்ம வீதிதென் றமைவெலா மகமுறத் தெருட்டி
மம்மர் நீங்கிய மதிவலீர் கேண்மென வகுப்பார். 35

மரும லிந்தவிச் செழுமலர்க் காவொடு மலிந்த
தரும சேத்திரப் பகுதியுஞ் சருவலோ கேசன்
திரும கற்குரித் தாமிவண் செறிபலன் யாவும்
ஒரும னத்தயாத் திரிகருக் குரிமையா முரைக்கில். 36

மறியுந் தண்புனன் மடுவுண்டு நதியுண்டு வனையக்
கறையி லாதவெண் டுகிலுண்டு கவினணி யுண்டு
நறிய முப்பழக் கனியுண்டு தீம்பழ நறையும்
நிறைய வுண்டுபோ னகமுண்டிந் நிலத்தினி லெங்கும். 37

தங்க மாளிகைத் தலமுண்டு தலைவனைப் பரவப்
பொங்கு மாதவப் புணையுண்டு புத்துணா திகழ்த்த
எங்கும் வேதியக் குழுக்களுண் டாதலி னெமரீர்
இங்கி ருந்துசின் னாட்கழி மின்னென விசைத்தார். 38

என்ற வின்னிசை வாசகஞ் செவிமடுத் திறும்பூ
தொன்றி வேதிய ரிருவரு முவப்பொடங் கவர்க்கு
நன்றி கூறிவந் தனஞ்சொலி நயந்தினி திருந்தார்
துன்று கற்பகச் சோலைவா யருந்தவச் சூழல். 39

ப்னித நீர்படிந் தாடுவர் பூந்துகில் வனைவர்
கனித னீர்மையிற் கடவுளைக் கைகுவித் திறைஞ்சி
இனிது போனக மருந்துவ ரின்னிசை பயில்வார்
துனித விர்ந்தன வாதமுந் தோத்திரம் புரிவார். 40

நந்த னத்தெழில் கண்டுகண் டுலவுவர் நாளுஞ்
சந்த னாடவிப் பொதும்பரிற் றடந்துயில் கொள்வர்
விந்தை யாய்ப்பல காட்சியை வியந்துளங் களிப்பர்
முந்தி ரிப்பழ நறையுண்டு தேக்குவர் முறையால். 41

துன்னு மாதவக் குழுவொடு தோழமை கொள்வார்
பன்னு வேதிய ரோடுசம் பாஷணை பயில்வார்
பொன்ன கர்த்தொனி செவிமடுத் துளக்களி பூப்பார்
இன்ன வாறவண் வைகலோர் சிலகழிந் திடுங்கால். 42

உம்பர் மேயசீ யோன்மலை யுன்னத கீதம்
பம்ப வேதிய னகத்துறை யாத்துமப் பன்னி
எம்பி ராணநே சனைத்தலைக் கூடுநா ளெதுவென்
றைம்பு லன்களு மயங்கிமெய் யவசமுற் றயர்ந்தாள். 43

தூந லந்திகழ் காதனோய் சுடச்சுடத் துய்க்கும்
பான லந்திக முணவெது மருந்திலள் பதைப்பாள்
கான வேடுவர் வலைப்படு மானெனக் கலங்கி
ஊன ளைந்ததன் னுயிர்துடித் துள்ளமுங் குலைவாள். 44

ஆசை நாயக னருளுரு வெளியினா லயர்வாள்
தேசு லாவிய திருமுகத் தொளியகந் திளைப்பாள்
சீசி யிவ்வுடற் சுமையென்று தீர்வலென் றினைவாள்
நேச மாற்றரி தாய்மிக நெட்டுயிர்ப் பெறிவாள். 45



உலக பாசங்க ளொழிந்துந்தம் முயிர்க்குயி ராகி
இலகு மாத்தும நேசர்பா லாசைமிக் கேங்கி
விலகி னேசபா சத்தினா லிறுகுற விசிப்புண்
டலகி லாத்துமத் துயரடைந் தாக்கையுந் தளர்வாள். 46

அருமை நாயகன் மூட்டிய வாசைநோய் தணியா
தெரிமு கத்துற்ற மெழுகென விளகியுள் ளுடைவாள்
திருமு கச்செவ்வி காண்குறுஞ் செவ்விநீ ளிதெனக்
கருமு கிற்றுளி காண்கிலாப் பயிரெனக் கரிவாள். 47

உத்த மந்திக முன்புமிக் குயிர்க்குயி ராய
வித்த கன்றிறந் தோங்கிய விரகதா பத்தாற்
சித்த சஞ்சலங் கதித்தலிற் றெருமர லுழந்து
பித்த ரிற்றிகைத் தலமரீஇ மருண்டுபே துறுவாள். 48

பண்டு பாரிடச் சூழலின் மாதவிப் பாங்கர்க்
கண்டு நெஞ்சையுங் கருத்தையுங் கவர்ந்துடன் மணந்து
கொண்டு வந்தொரு குறியிடத் துய்த்தருட் கனிவாய்
விண்ட மெய்த்திரு வாக்கெலா நினைந்துவெய் துயிர்ப்பாள். 49

ஏது செய்குதி ரென்னொரு நேசர்பா லெனக்காங்
காத னோய்க்கொரு மருந்துமுண் டோவவர் கனிவாய்ப்
போது மல்குபுத் தமுதலா லென்றகம் புலந்து
மீது மீதெரி தவழ்ந்தென வெந்துபுண் படுவாள். 50

அழுத னெட்டுயிர்த் தழுங்குதல் சோருத லவாவி
எழுதல் வீழுத லிரங்குத லிருகாங் கூப்பித்
தொழுத லாதிய றொழிலலாற் றொழிலின்றித் துயர்வாள்
உழுவ லன்பினிற் கொடிதியா துவரிரு முலகில். 51

மீக்கி ளர்ந்தெழு காதலால் வெவ்விடர் பழுத்த
தீக்கொ டுஞ்சிறை மீட்டுமென் னாயகன் செறுக்கும்
ஆக்கை வெஞ்சிறை மீட்டெனை யணைக்கில னென்னுக்
கூக்கு ரற்படுத் தழுங்கித்தன் னாருயிர் குறையும். 52

இருண்ட பாதலப் படுகர்நின் றெடுத்தபே ரன்பை
உருண்ட சிந்தையின் மறந்தன னாலென வுள்ளித்
தெருண்டென் னாயகன் வரவிடு தூதொன்று சேரின்
மருண்ட புன்மைபோய் மாறுமென் றொருநிலை மதிக்கும். 53

அன்பு லப்பிலா னடித்தொழும் பாற்றுதற் குதவாப்
புன்பு லானுடற் பொறைசுமந் தெத்தனை பொழுது
மன்பு விப்பொறை யாய்த்திரி வேனென மயங்குந்
தன்பு லப்பகை யவித்தயோ கியர்நிலை சாரும். 54

## வேறு.

பன்ன ரும்பா லோகப தவிநீத்
திந்நி லத்துவந் தெய்திய வீசனார்
மன்னு மன்புமெ யத்திரு மேனியை
உன்னி யுன்னித்தன் னுள்ளமு ருகுவாள். 55

துருவி வந்தெனைத் தொண்டுப டுத்தவும்
பொருவில் பேரின்ப போகத்தை யூட்டவும்
பருவ ரற்கட னீந்திய பான்மைநெஞ்
சுருவு கின்றதென் றுவியு யங்குவாள். 56

தீங்கு மல்கிய தீக்கடன் யாவையுந்
தாங்கி நின்றுத்த ரித்தெனைத் தாங்கியன்
போங்கு காதல ரூடினர் போலுமால்
நீங்கு மாறினி யென்னென நேடுவாள். 57

பாதி ரித்துவ வேந்தன்ப ணிப்படி
வாதன் வைதிக மாட்சிவ ரன்முறை
விரத நோன்புபி டித்திடும் வித்தக
சரத மெண்ணித்த விப்புறு நீர்மையாள். 58

ஒரும லைச்சிக ரத்தொரு மூவருக்
கிருநி லத்துச்சு டருமி ரவிபோல்
தரும ஜோதித ழைத்திடக் காட்டுமத்
திருமு கச்சுட ருள்ளித்தி யங்குவாள். 59

சுத்த மாக்கிவெண் சேணி நல்கித்தம்
முத்தி தந்தின்ப மூட்டிய காதலர்
வித்த கக்கனி வாயிதழ் விண்டசொற்
றித்திக் கின்றதென் சிந்தையு ணின்றென்பாள். 60

கள்ள மின்றவர் கட்டுரை யாயினும்
உள்ள முற்றுமு ருக்கிக்க வர்ந்துடன்
கொள்ளை கொள்ளுங்கு ணமுடைத் தென்றுகண்
வெள்ளந் தோய்ந்தும்வெ துப்புறு மேனியாள். 61



சேவ டித்துணை நோவத்தி சைதிசை
ஆவ லித்தெனைத் தேடிய வன்புளார்
கூவிக் கூவிவி ளிக்கக்கு றிக்கொளார்
பாவி யேன்பிழை யேயென்று பன்னுவாள். 62

விண்க லக்கும்வி ழுநெறி வீசியிம்
மண்க லந்தம யலளைந் தோங்கிய
எண்க லந்தவெ ருசலைக் காயிரு
கண்க லுழ்ந்தக ருணையை யுன்னுவாள். 63

பொற்பி னாருயிர் பொன்றுடல் கூடவும்
உற்ப வத்தினு டற்குறை நீங்கவும்
பற்பல் வெம்பிணி தீரவும் பாலித்த
அற்பு தச்செய லுன்னிய ழுங்குவாள். 64

வருதி னத்தும் ணத்தொழின் முற்றுவான்
குருதி வேர்த்துளி மேனியிற் கோத்துகத்
திருவு ளத்துத்தி ருந்தணி செய்தசீர்
கருதி யாவிக ளாந்துக லுழுவாள். 65

மெய்ச்சி ரத்தையிற் பாசம்வி சிக்கமெய்
பச்சி ரத்தஞ்சொ ரியப்ப தகர்முன்
நச்சு முண்முடி தைக்கந லிவுறும்
உச்சி தத்தனி நேசத்தை யுன்னுவாள். 66

கூறும னக்கொடி யார்செய்கு ரூரமுஞ்
சிறுமை யும்புகல் தீச்சொலுந் தாங்கியத்
தெறும கத்துவர் சிந்தைசி னந்திடாப்
பொறுமை யுள்ளிப்பு கைந்துபு லம்புவாள். 67

விருண மேனியில் வெவ்விருப் பாணிசெல்
தருண மற்றிவர் தம்பிழை யோர்கிலர்
அருண யந்துமன் னிக்கவத் தாவெனுங்
கருணை யுள்ளிக்க சிந்துக லுழுவாள். 68

ஞால மேவுந ராத்தும நாயகன்
ஓல மார்குரு சொண்மிட லூர்ந்தருட்
சீல மாகத்தி ருத்துதி ருமணக்
கோல முள்ளிக்கு ழைந்துளந் தேம்புவாள். 69

செயிர்த்த சிந்தையத் தெவ்வர்தி கைக்கவும்
அயிர்த்த தொண்டருக் காருயிர் மல்கவும்
பயிர்த்த பூம்பணைப் பள்ளிநின் றுண்டகை
உயிர்த்தெ ழுந்தமை யுள்ளியுள் ளூக்குவாள். 70

ஆழி யான்வலப் பாகத்த மர்ந்துளார்
வாழி வாழியென் றேத்தினும் வைகலோர்
ஊழி யாகத்தி னைத்துள்ளு டைந்தனள்
ஏழை யாத்துமப் பன்னியிங் கென்பவே. 71

ஈது காலத்துன் ஞன்மவி ரக்ஷகர்
காத வித்துன்ப லன்களுநங் கைக்கொடிங்
காத ரித்தடுக் கின்றன ராலெனக்
கோதில் சீயோன்கு மரிக்குக் கூறுமின். 72

எனவொர் சத்தமெ ழுந்தது விண்ணிடை
மன்றன் மங்கள மல்கிய பொன்னகர்
முன்றி னின்றுமு ழங்கிமு றைமுறை
துன்றெக் காளந்தொ னித்திடு மாறுபோல். 73

வானின் றுள்ளத்து வார்ந்தநல் வாக்கெனுந்
தேனுண் டார்ந்தன ளாத்துமச் செல்வியும்
ஊன வோந்தவு டற்றுயில் வீசினன்
ஞான மல்கிய மெய்ம்மறை நாவலன். 74

குருசு யர்த்தகு ரிசில்வ ருகையின்
பரிசு ணர்ந்துநம் பிக்கையும் பண்ணவ
தரிச னைக்கரு காயது தம்பிரான்
புரிசை மாநகர் போதுவம் யாமென்றான். 75

நன்றெ னவிரு வோருந ரும்பொழின்
மன்று ளார்விடை பெற்றுவர் தித்துடன்
சென்று கூடினர் செவ்விய நூனெறி
என்று மாறிலி றைவனை யேத்தியே. 76

இத்த கைப்படு சம்பவம் யாவுங்கை
உய்த்த நெல்லிக்க னீயினு ணர்ந்தியான்
வித்த கர்ப்பின்றொ டர்ந்துவி னாவினி
எத்தி றத்ததெ ரிவலென் றேகினேன். 77



மங்க ளஞ்செறி மாநகர் நோக்கிமன்
சிங்க வேறொரி ரண்டுடன் சென்றெனக்
கங்கு லின்றிக்க திர்படு கானகப்
பொங்க ரூடுந டந்தனர் போயினார். 78

சென்னெ றிக்கெதி ராயிரு சீரியோர்
பொன்னி னுயவு டையினர் பொற்புறு
மின்னொ ளிக்கதிர் வீசுமு கத்தினர்
முன்னர்த் தோன்றிமொ ழிவர்மு றைமையால். 79

எங்கு ளீரிங்நெ றிக்கிடை யெங்கெங்கு
தங்கி வந்தனிர் சார்ந்தவி பத்தெவை
அங்கங் குற்றவ ருட்செயல் யாவெலாம்
இங்கெ டுத்துரை மின்னென்றி யம்பவும். 80

திருவு ளத்தருட் செவ்வியி தாமென
இருவ ருந்தஞ்ச ரிதத்தி யல்பெலாந்
தருவி யாதிதொ டுத்தங்கி றுவரை
பரிவி னோடும்ப கர்ந்தனர் பண்பினே. 81

வந்தி றுத்தம ரபும றையவர்
சிந்தை யின்பரி பாகமுந் தெள்ளிதின்
அந்த ணாள ரிந்தரு ளாண்டகை
விந்தை யின்செய லேத்திவி ளம்புவார். 82

தொக்க பேரிடர்ச் சூழல கன்றிவண்
புக்கு வந்தனிர் தெய்வப்பு ணர்ப்பினால்
விக்கி னப்புத ருண்டினி மேற்கொளின்
மிக்க பேரின்ப வீட்டுல கெய்துவீர். 83

ஐயன் மீர்நும்ம வாவின்வ ழித்துணை
செய்ய வுத்தா மின்றுதி ருந்துநந்
துய்ய மெய்விசு வாசத்து ணிபினால்
வெய்ய துன்பினை மேற்கொள வேண்டுமால். 84

திரித்து வப்பரன் றிவ்விய வாக்கையுட்
கருத்தி ருத்திக்க லங்கலி ராய்வரும்
வருத்த மூடறுத் தேகவ ரம்பிலின்
பருத்த பாங்கா டை குதி ராலென்றார்.

அஞ்ச லித்துவ ரன்முறை யாரியர்
செஞ்செ வேவழி பற்றினர் திவ்விய
கஞ்சு கத்தரி ருவருங் காட்சிவிட்
டெஞ்சு ருதங்க வரொடு மேகினர். 86

தர்மக்ஷேத்திரப் படலம் முற்றிற்று.

## இகபரசந்திப் படலம்.

வித்தகர் திகழு மான்ம விசாரிகம் பிக்கை யென்ற
உத்தம ரிருவர் ஜீவ சரிதத்தை யொருவா றுக
இத்தகைத் தென்று சொற்று மினிவரு மாண நீந்தி
முத்திராஜ் ஜியத்தை யுற்ற முறைமையை மொழிது மன்றே. 1

பகலொளி சதாநின் றோங்கும் பவித்திர தேசாந் தத்தில்
இகபர சந்தி யென்னு மிடரிருட் பிழம்பு தொக்கங்
ககவயிற் கடுகிச் செல்லு மடுதிரை மரண வாற்றைக்
ககனயாத் திரிகர் தத்தங் கண்களிற் றெரியக் கண்டார். 2

கண்டுடன் மனமுங் கண்ணுங் கலங்கினர் கவன்று ரேனும்
உண்டெமக் குறுதி யென்று வுள்ளுளே யூக்கித் தொண்டர்
மண்டலம் புரந்த ஜேசு மலரடிப் புணையைப் பற்றி
எண்டகு தேவா ரங்கொண் டிசைத்தனர் பிணிப்பார் நெஞ்சில். 3

### தேவாரம், கடைக்கணி. (பண், இந்தளம்.)

1. பரனேபரம் பரனேபரப் பொருளேபரஞ் ஜோதீ
உரனுடிய விசுவாசிகட் குவந்தாதரம் புரியும்
பெருமானடி யேனேபெரும் பாவிபிழை பட்டேன்
சரணுடிவந் தடைந்தேனொரு தமியேன்கடைக் கணியே.

2. தூலத்தையு வந்துண்டுசு கித்துச்சுகம் பேணிக்
காலத்தையுங் கழித்தேனுயர் கதிகூட்டும்ர க்ஷணிய
மூலத்தனி முதலேகடை மூச்சோயுமுன் முடுகிச்
சீலத்திரு முகத்தாரொளி திகழக்கடைக் கணியே.

3. தொடுவீணையின் மணலைத்துளி துளியாக்கிமுன் னீரை
இடினுங்கணக் கென்றீவினைக் கின்றேகணக் கிகந்தாய்
படுபாவியென் றெள்ளாதெனைப் பரிவாய்மன்னிப் பருளி
நடுநாளென னடியாரொடு நணுகக்கடைக் கணியே.



4. அன்பார்கலி யருண்மாமழை யடியார்க்கன வரத
இன்பார்தரு கிருபாநிதி யிரக்ஷண்யபுண் ணியக்குன்
றுன்பாற்சரண் புகுந்தேனெனை யொறுக்காயகத் தொளிதந்
தென்பாற்பிழை பொறுத்தாதரித் தெந்தாய்கடைக் கணியே.

5. பெற்றாருடன் பிறந்தார்தமர் பெண்டீர்மக்கள் பெருநட்
புற்றாரினு முற்றார்சில ருலந்தாருயி ருலக்கப்
பெற்றேனல னென்றேதிரு வுள்ளம்பெரு மானே
நற்றாயினு மினியாயுனை நாடக்கடைக் கணியே.

6. மரணாந்தவல் லிருண்மூடிமெய் வசமற்றுயிர் மறுகிக்
கரணங்களும் பொறியாதியுங் கலங்கித்திகைத் தயருந்
தருணங்கிறிஸ் தரசேயெனை யஞ்சேலெனத் தாங்கும்
அரணம்பிறி திலையேயுனை யல்லாற்கடைக் கணியே.

7. அந்தக்கர ணத்துள்ளன வறிவாயடி யேனில்
எந்தக்குறை யுளவென்னினு மெந்தாய்பொறுத் திரங்கிச்
சிந்தைக்கவ லையுந்தீர்த்தெனைத் திருத்திக்குணப் படுத்தி
அந்தத்திரு சரணீழல்தந் தருளிக்கடைக் கணியே.

8. கோதார்குணக் கேடன்மிகக் கொடியன்கொடும் பாவி
ஏதாகிலு நன்றொன்றில னெனினும்புறக் கணியா
தாதாரசர் வேசாவன வரதாவரு ளுதா
பாதாரவிந் தஞ்சேர்த்தெனைப் பரிவாய்க்கடைக் கணியே.

9. ஓசைக்கடற் புவிக்குள்ளெனை யொப்பாரொரு பாவி
ஆசைக்குமி ராரென்பதென் னகங்கண்டறி யுண்மை
ஈசற்கொரு புதல்வாவெனக் கிரக்ஷண்யபுண் ணியனே
பாசத்தளை விடுத்தெற்கருள் பாவிகடைக் கணியே.

10. ஒன்றாயொரு மூன்றாயொரு மூன்றும்மொரு முதலாய்
நின்றாயிது பரமார்த்தநிஷ் கருஷமிந்த நெறியை
நன்றாய்ந்துளந் திரும்பியுனை நாடிற்கதி நாடும்
என்றாயுனை யடைந்தேனெனக் கிரங்கிக்கடைக் கணியே.

11. பேராதர முடையாய்பெரி யோனேபெரு மானே
பாராதரித் துயிரீந்திர க்ஷணையீட்டிய பரனே
ஓராதர முனையன்றிலை யுயிர்போம்பொழு துடன்வந்
தாராதரம் புரிவாரெனக் கையாகடைக் கணியே.

12. கிருபாகர கருணாகர கிளர்புண்ணியப் பொருப்பே
பெருமாவடி யேன்செய்பிழை பொறுத்தென்னுயிர் பிரிகால்
மருவார்தரு குருசிற்றிகழ் வதனம்புஜ மும்முன்
திருநாமமந் திரமும்மகந் திகழக்கடைக் கணியே.

பூதலம் புரிந்த பாவப் புயல்பரந் திருண்ட நித்ய
வேதனை யுததி மொண்டு விழுத்தநீர் வெள்ளம் பொங்கிப்
பேதைமா னிடத்தை யேனைப் பிராணியை மோதி யீர்த்துப்
பாதலப் படுக ருய்க்கும் பாதக மரண கங்கை. 4

ஏதெனென் றுரைக்க நின்ற வெழினறுந் துணர்ப்பூங் காவின்
ஆதியிற் றோன்றி யென்றும் மவனியைச் சூழ்ந்து லாவி
வேதனைப் பயிரை யோம்பி விநாசத்தை விளைத்து நித்ய
மாதுயர்க் கடலில் வீழ்ந்து மறிவது மரண கங்கை. 5

ஆசையிற் பெரிது வஞ்சத் தாழ்ந்தது துன்பந் துக்கம்
மூசிய விடரி வற்றின் முறிதிரை புரளு நீர்த்து
மாசடை யிதயம் போல மலிந்திருள் குழுமி மல்கு
பாசடை மலின மூடிக் கலங்கிய பான்மைத் தம்மா. 6

தாங்கரும் பிணிக ளாய சலசரம் பயில்வ தியாண்டும்
ஓங்குதீ வினைக ளாய படர்கொடி யுறழ்வ தூக்கிப்
பாங்கரிற் காளி கூளி பைசாச கணங்கள் புக்கு
நீங்கரி தாகி நின்று நெடுந்திகில் விளைக்கு நீர்த்து. 7

பள்ளநீ ருலக மெங்கும் பகைகொளக் கரந்து வைகிக்
கொள்ளுநன் மருந்தை யெல்லாங் கூட்டுண்டு குணங்கொ டாபே
உள்ளுறப் பரவி யொல்லை யுயிர்வதைத் தொருங்கு கொல்லுங்
கள்ளவெவ் விடவ ராவிற் கிடந்தது மரண கங்கை. 8

அடுத்துழி யழுகை மல்க வயலெலா நடுங்கி யஞ்சக்
கடுத்துறு மனம்போற் சற்றுங் கண்ணோட்ட மின்றி நாட்டைக்
கெடுத்தழித் தலைவு செய்து கெழுமிய வனைத்துந் தீவாய்
மடுத்திடுங் கொடுங்கோல் வேந்தை மானுமான் மரண வாரி. 9

நினைத்திரா வேளை வந்து நிலத்திடை யீட்டி வைத்த
அனைத்திரு நிதியும் வாரி யாருயிர்க் கழிவு செய்து
மனைத்தலை யிழவுண் டாக்கி மறைந்திடு மாபிற் கள்ள
வினைத்திறம் புரியும் வெய்யர் போல்வதம் மிருத்து நீத்தம். 10

நாளென வாம்பு காட்டி நாலைவா ரிதிசூழ் வைப்பிற்
கேளுறு முயிருக் கெல்லா நன்றிபோற் கேடு சூழ்ந்து
வாளெனப் பிளந்து தள்ளி மாயமாக் குறைக்கும் வாளுட்
[illegible]



காலத்தைக் கருதி நின்றுட் பகையாகிக் கலக்கங் காட்டிக்
கோலத்தைக் குலைத்துக் கோறிக் கூரிருட் சூழ வுய்த்து
ஞாலத்தைக் கெடுக்கும் பொல்லா நச்சுத்தீ யலகை யேபோற்
சாலத்தை விளைக்கு மிந்தச் சதிபுரி மரண கங்கை. 12

தேகதத் துவங்கள் குன்றுஞ் சீர்கெடு மையஞ் சேருஞ்
சோகமாம் பொறிபு லன்கள் சுழன்றறந் தக்கர ணமாயும்
ஆகமுங் கிடையா மேவிட் டாருயி ரொடுங்கு மந்தோ
மோகமா மரண கங்கை யூடுற முடுகுங் காலை. 13

பாபத்தை விளைத்தோர்க் குற்ற பயிரிடுங் கூலி தேவ
கோபத்தின் மிகுதி யிந்தக் குவலயத் தெவர்க்கு நீங்காச்
சாபத்தின் சமைவு மோசச் சற்பனைக் கிடங்கு மாய
ஆபத்தின் குகையா மிந்த வறக்கொடு மரணச் சூழல். 14

கெடுமதி வித்திற் றோன்றி யிச்சையிற் கிளம்பிப் பொல்லாக்
கடுமனத் தெழுமூ வாசைக் கவடுவிட் டனூராய்ப் பூத்துக்
கொடுவினைத் திரளைக் காய்த்துக் குலவிய பாவ தாருப்
படுபழங் கனிந்த சாறிப் பயங்கெழு மரண நீத்தம். 15

புரணபுண் ணியரே யார்க்கும் புகலிட மவர்பொற் பாத
அரணத்தைத் தேடித் தம்மை யடைக்கலப் படுத்தி யந்தக்
கரணவிந் தியங்க ளோடு காயத்தைப் புனித மாக்கி
மரணத்தை நினைத்து வாழா மாந்தரே மாந்த மாந்தர். 16

பழிபடு மரண வாற்றைப் பாரித்துப் பகர்வ தெங்ஙன்
சுழிபடு மலைவாய்ப் பட்ட துரும்பெனத் துறைக்குண் மூழ்கி
அழிபடு ஜீவ ரேயவ் வவஸ்தையை யறிவ ரன்றி
மொழிபடு வனவிப் பாங்க ருத்தேச முறைமைத் தாமால். 17

ஆயுளுக் கெல்லை யாயு மவனிக்கோ ரந்த மாயும்
மீயுயர் கதிவா யிற்கு மிகவணித் தாயு மூடே
பாயுமம் மரண வாற்றின் படுகரை யடுத்தங் குற்றார்
நாயகன் பதத்தை நாடு நலந்திகழ் மறைவ லாளர். 18

அவ்வயி னொளிகொ டேத ராரணர் தம்மை நோக்கி
இவ்வரை காண்மின் சொற்ற விகபர சந்தி யாய
பௌவமற் றிதனை நீந்தி யக்கரைப் படுகி லீரேல்

ஓலிடு மரண வாற்றிற் கொருபுணை யேனு மின்று
பாலமு மின்று நீந்தும் பரிசினாற் கடத்தல் வேண்டும்
ஏலியா வேனோக் கென்ற விருவர்செல் வழியிற் செல்ல
ஞாலமீ தெவர்க்கு மென்று நம்பனுத் தார மின்றால். 20

நதிநிலை வினவு வீரே னம்பிமீர் நவிலக் கேண்மோ
சதிபுரி யாழ முண்டு தரிகொளுந் திடரு முண்டெம்
அதிபதி யருண்மே லுய்த்த விசுவாச வளவி னுமால்
மதிநிலை கலங்கீ ராகி மரணத்தைக் கடத்தி ரென்றார். 21

வேறு.

ஆய தேபுரி வாமென வருமறைக் கிழவர்
மேய வந்நதிப் பெருக்கினைக் கண்டுளம் வெருண்டு
தூய வக்கரைப் படுதுமோ வெனநிலை துளங்கிக்
காய முஞ்சலித் தினிச்செய லென்னெனக் கவன்றார். 22

கலைநி ரம்பிய மதியினன் கவன்றன னெனினும்
நிலைவ ரங்கிறிஸ் தியேசுவென் னித்திய ஜீவன்
உலைவென் சாவுநல் லூதிய மெனக்கென வுரத்தான்
மலைது ளங்கினு மனந்துளங் காதமெய்ம் மறையோன். 23

நோக்கி னுன்விசு வாசியி னகநிலை நுதலி
மீக்கி ளர்ந்தெழு முவகைய னம்பிக்கை விறலோய்
பாக்கி யம்மணித் துளதுகாண் படுகரு டுருவி
ஊக்கி யக்கரைப் படுவதே கருமமென் றுரைத்தான். 24

ஏசி தாமென விருவருந் திருப்பெருங் கருணை
ஆர வுண்டகந் தேக்கின ரானந்த பதவிப்
பேர ருட்கரை பிடித்துமென் றுவலிற் றுணிந்து
மார ணத்துறை யிறங்கினர் வஞ்சமின் மறையோர். 25

இறங்கி டுந்துறை நீத்துள தாதலி னிறங்கி
அறங்கி ளர்ந்தமெய் யாரண னுழத்தி னமிழ்ந்திக்
கறங்கு போற்சுழன் றகநிலை கலங்கியுள் ளுடைந்து
பிறங்கு நன்மதி திகைத்தனன் கானிலை பிசகி. 26

ஆர ணத்துறை நீந்திய வருள்விசு வாசி
மார ணத்துறை முயங்கலும் வருந்தியுண் மறுகிக்
கார ணத்தனி முதல்வனைக் கருத்தினுற் றழுவிக்



உத்த மந்திக ழொண்மதி படைத்தநம் பிக்காய்
மெத்த வாழ்கயத் தமிழுகின் றனன்றலை மேலாய்த்
தத்து பேரலை புரண்டெனை மூடுமாற் றரிப்பின் 28
றெத்தி றம்மினிக் கடைப்பிடித் துய்வலென் றிசைப்ப.

என்னை யென்னைநீ கலங்குதி திடங்கொண்மற் றெந்தாய்
நன்ன ரென்னிரு கால்களு நனிதரிப் பனவால்
முன்ன ரேகிரு பாஸ்தமுண் டிங்ஙன முடுகிப் 29
பன்ன ருந்திரு வடித்துணை பற்றெனப் பகர்ந்தான்.

புந்தி யுற்றநம் பிக்கைசொற் கேட்டுமெய்ப் போத
அந்த ணன்னென தாருயிர்க் கருந்துணை யாய
மைந்த பாவியே னுயிர்க்குறு மரணபந் தங்கள்
தொந்த மாய்ப்புடை வளைந்துசூழ்ந் தனவிங்கு தூயோய். 30

ஊனு வட்டுபால் தேனொடு பெருக்கெடுத் தோடும்
மாண ரும்புது வளஞ்செறி மங்கல நாட்டைக்
காணி யாக்குவான் கருதினன் காணவுங் கிடையேன் 31
கோணி லாவுமிந் நதியிடைக் குப்புறீஇ யென்றான்.

முயங்கு காரிருட் படலமவ் வொல்லையின் முடுகப்
பயங்க ரங்களுந் துன்பமு மேக்கமும் பற்ற
இயங்கி டும்பொறி புலன்களு மிருண்டுணர் வினைய 32
மயங்கி னனந்தக் கரணமு மாரியன் மாழ்கி.

செய்த பாவங்க ளினைந்துளந் தேம்பின னெனவும்
வெய்து துன்பமே விடுதலின் விழுத்தகு முளத்தில்
எய்து மாறுத லெடுத்தினி தியம்பில னெனவும்
மெய்தி கழ்ந்தமுன் மொழிகளால் விளங்கிட வறிந்தேன். 33

ஆரி யன்றளர்ந் தயர்வுழி நம்பிக்கை யடுத்து
நீரி லேதலை நிமிர்த்துமூச் சியங்குற நிறுவிக்
கூரி யோய்கரை யணித்தெனப் பன்முறை கூவிச் 34
சீரி யோன்சிறி துணர்வுறத் தெருட்டுவா னுனன்.

வெய்ய வன்றனை மின்மினி யாக்கிவிண் மிளிருஞ்
செய்ய பொன்னக ரலங்கமுந் திருக்கடைச் சிறப்புந்
துய்ய ரோர்சிலர் நந்தமைக் கூட்டுவான் சுலவிக்

ஒல்லை யாரிய னுத்தம தோழநிற் கூட்ட
வல்ல தூதுவர் வந்தனை யின்றனர் வாய்மை.
நல்லை யென்றுநீ நம்பிக்கை நம்பிக்கை யேயிவ்
வல்ல லாற்றையு மாழமின் ருக்கிய தென்றான். 36

ஆரி யன்சொல வையநீ மெய்விசு வாசச்
சீரி யைந்தனை நின்னுழைத் தோன்றிய சிறியேன்
பேரி யைந்தன னாதலிற் பிறன்கொலோ பெறும்பே
ரோரி லந்தண பேதமென் னெம்மிலென் றுரைத்தான். 37

எம்பி தேர்தியா னுத்தம ஜீவிய னென்னில்
நம்பி ரானெனைக் கைவிடு வார்கொனட் டாற்றில்
இம்ப ரென்பெரும் பாவத்தி னிமித்தமே யென்னை
வெம்பு மிக்கொடு மாணத்துள் விடுத்தன ரென்றான். 38

உத்த மாரிய் வுணர்திநம் போலுல கருக்குச்
சத்து ருக்களின் பயமிலை சாவின்வே தனையும்
அத்த னைக்கிலை யெனுமறை யாதலி னடியார்க்
கெத்த னைக்கரும் பாடுக ளுள்ளன வெண்ணாய். 39

மெய்வி டுத்திடா வித்தக வெவ்விய மாணத்
தய்வ ளிக்குநின் மெய்விசு வாசத்தி னுரத்தைத்
தெய்வம் பாங்கர்நின் றறிதிற னல்லது தீரக்
கைவி டுத்தமை யன்றிது பரீக்ஷிக்குங் கணக்கால். 40

எந்தை நீதிடங் கொள்ளிதோ வெங்கிறிஸ் தியேசு
வந்த ணைந்தன ரெம்முறு நோயெலா மாய்த்து
விந்தை யாயசிற் சுகந்தா வென்றனன் விளித்தான்
அந்த ணாளனுந் தலையெடுத் தாருயி ரடைந்தான். 41

மண்டு நீர்க்கயத் தாழ்ந்துணர் வழிந்துயிர் மாயக்
கண்டு நம்பிரான் றிருப்பெயர்த் தொனியுளங் கவின
விண்டு நித்திய ஜீவனை யூட்டிய விதத்தில்
தொண்ட ருக்குயிர் கிறிஸ்துவே யெனுமுண்மை துணிந்தாம். 42

பாவ ஜீவரைப் பவித்திர மாக்கியீ டேற்றுந்
தேவ மைந்தனுங் கிறிஸ்துவின் றிருப்பெய ரொன்றே
ஆவி நீங்குவோர்க் கூட்டிடு மருமருந் தாய
ஜீவ தாரக மந்திர மென்பதுந் தெளிந்தாம். 43



திட்ப நூன்மதி யோயிங்கென் ஜீவநா யகனை
விட்பு லத்தர சன்றிரு மைந்தனை விளங்கக்
கட்பு லத்தெதிர் காணுகின் றனனெனக் கசிவுற் 44
றுட்பு லங்குவிந் தேத்தினன் கைதலை யுயர்த்தி.

அஞ்ச லஞ்சனீ யானுனை மீட்டன னன்றே
எஞ்சு ரூப்பெயர் தரித்தனன் யானுனக் கிதனாற்
செஞ்செ வேயெனக் குடையைநீ செல்வுழி யெங்குந் 45
தஞ்சம் யானுனக் குன்னுட னிருப்பதுஞ் சாதம்.

நதியிற் செல்லினு நடுங்கலை நடுக்கலை யமையுங்
கொதிய மூற்கிடை நடப்பினுங் கொளுத்திடா துன்னை
அதிப னாகிய வாண்டகைத் தெய்வமு நினக்குக் 46
கதிந லந்தரு மிரக்ஷணைக் கடவுளும் யானே.

என்று தம்பிரா னுரைத்தமெய் வாக்குளத் தெழ்லும்
நன்று ரங்கொடு நம்பிக்கைக் கிவ்வுரை நவிற்ற
அன்ற லர்ந்தவா ரிசமென வகமுகங் கவினி 47
நின்று ரத்தன ரிருவருந் திடங்கொண்டு நிமிர்ந்தார்.

இகலெ லாம்புற மிட்டன விருட்பிழம் பிரியப்
பகலொ ளிச்சுடர் திகழ்ந்தது பாரடிப் படுத்தி
ஜெகமி ருத்துவா நதியினைத் தீரமோ டுருவிப் 48
புகரின் முத்தியங் கரைபிடித் தேறினர் புலவர்.

வெங்கொ டும்பசி தாகம்வன் பிணியிடர் மேற்கொள்
அங்கி யென்றிவை யாவையு மாற்றொடு போக்கித்
தங்க மேனிபொன் னுடைபர மானந்தந் துதைய 49
மங்க ளக்கரை யேறினர் வழுவிலா மறையோர்.

பத்தி யோவிசு வாசமோ பகருமெய் யன்போ
சித்த சுத்தியோ சற்குரு மத்திரனோர் திறனோ
முத்தி யின்கரை பிடித்தது யாதெனின் மூலம் 50
அத்த னைக்குநம் மாண்டகை கிருபையே யாமால்.

பொருளும் பெண்டிரு மக்களும் பூதலத் துறவும்
மருளு றுத்துவெம் பிணிகளை யுடலொடு மறியும்
அருடந் துய்த்தநம் பிக்கையே யாருயிர்த் துணையாய்த் 51
தெருளு றுத்திநின் றன்னத பதவியிற் சேர்க்கும்.

ஆன்ற வேதிய னகத்துவிஸ் வாசத்தை யாக்கி
ஏன்று ஜீவபா தையிற்செல விடுத்தது மிடையே
ஊன்று நம்பிக்கை யுருப்புனைந் துருப்படுத் தியதும்
மூன்றொன் றாகிய தைவிக கிருபையே முற்றும். 52

ஜீவ முத்தியங் கரைபிடித் தேறிய செல்வர்
மேவு பேரின்ப தலம்புக்க விந்தையை யுள்ளித்
தேவ தேவப ராபர திரித்துவ தேவை
ஆவ லிற்றுதித் தன்பொடு போற்றுவா னமைந்தார். 53

## தேவாரம். (போற்றித் திருவிருத்தங்கள்.)

---

(பூர்வ சுருதி.)

1. ஆதிமத் யாந்த ரஹிதநிஷ் களங்க வநாதியங் கடவுளே போற்றி
ஜோதியா யகண்டா காரமாய் விளங்குந் தூயசை தந்யமே போற்றி
பேதியா நிலைநின் றுலகெலாந் தந்த பிரணவ தெய்வமே போற்றி
நீதியோ டிரக்க சமரச நெறியை நிறுவிய நிமலனே போற்றி.

2. முன்னமோர்நரனால்விளைந்ததீவினையைமுனிந்திடும்முதல்வனே போற்றி
பின்னரவ் வினைதீர்ந் துலகெலா முய்யப் பேரரு ளளித்தவா போற்றி
நன்னெறி யிகந்தோர் பிரளயத் தமிழ நயந்திடு நாதனே போற்றி
மன்னுநோவாவோ டெண்மரைப் புரந்த மாபெருங் கருணையாய் போற்றி.

3. குழுமியோர்குலையப்பாஷைவே றாக்கிக் குழப்பிடுங் கொற்றவா போற்றி
வழிவழி சுருதி முறைமுறை யாக வகுத்தவே தாந்தனே போற்றி
விழியருள் பரப்பி யாபிர காமை விளித்தருள் விமலனே போற்றி
கிழமுதிர் பருவத் தொருமக வளித்த கேடிலாக் கிருபையாய் போற்றி.

4. தொண்டனைவலிந்துநகர்ப்புறங்கொடுபோய்த்துரந்தபேரருளினாய்போற்றி
வண்டரு ரெரிவாய் மடுத்திட முனிந்த மாண்புறு நீதியாய் போற்றி
கொண்டொருமகவைப்பலியிடத் துணிந்தகொற்றவன்றெய்வமேபோற்றி
பண்டுபோன் மகவீந் தவற்குநல் லாசி பகர்ந்திடும் பகவனே போற்றி.

5. உத்தம தொழும்பற் குரைத்தவாக் கினைத்து முவந்துகாத் தளித்தவா போற்றி
பத்தனை யடர்க்கப் பலமிலா தொல்கிப் பரிவுறும் பரமனே போற்றி
சித்தம்வைத் தவனிற் பன்னிரு மரபு திகழ்ந்திடச் செய்தவா போற்றி
வித்தகன் யோசேப் பினைநனி யுயர்த்தும் விட்புல வேந்தனே போற்றி.

6. கருப்பினி லிஸ்ரேல் மக்களைக் காத்த கருணையங் கடவுளே போற்றி
விருப்பொடங் கவரைவாரிதி மணற்போல்மிகச்செய்யும்விந்தையாய்போற்றி
திருப்பரு மடிமைத் தனத்தினு லவரைத் திருத்திய தெய்வமே போற்றி
[illegible] போற்றி.



7. அருளினாற் செங்கோ லளித்துமோ சேயை யனுப்பிய வமலனே போற்றி
இருளுறு மனத்தா ரிடைப்பல புதுமை யியற்றிய வீசனே போற்றி
மருளுறு மிஸரேல் சிறைதவிர்ந் தேக வரந்தரும் வள்ளலே போற்றி
தெருளிலாப்பார்வோன்ஜனத்தொடுமடியச்செங்கடல்விடுத்தவா போற்றி.

8. மற்றவர் தமக்கு வழித்துணை யாகி வானமு தருளினாய் போற்றி
வெற்றியங் கிரிமீ துலகெலா நடுங்க விளங்கிடும் விபுதனே போற்றி
நற்றவன் வழியே விதிவிலக் கருளி நடத்திடு நம்பனே போற்றி
கொற்றமொ டிஸரேல் வளமிகு கானான் குடிபுக வருளினாய் போற்றி.

9. மன்னர சுரிமை முறைநிறீஇக் குடிமை வளந்தரு மகிபனே போற்றி
அன்னைபோற்கசிந்துந்தந்தைபோற்கடிந்துமாம்பரிசுணர்த்தினாய்போற்றி
நன்னெறி யிகந்த மன்னரைச் செருத்து நலம்புனை நம்பனே போற்றி
செந்நெறிச் சென்றார்க் குறுதுணை யாய் திரியேக தெய்வமே போற்றி.

10. கோலைநீத்தொருசெங்கோலிசாய் மகற்குக்கொடுத்தருள் கொற்றவாபோற்றி
சீலமா யவன்சொன் னயந்துசங் கீதஞ் செவிமடுத் துகந்தவா போற்றி
சாலமோன் தேவா லயமுவந் தருளித் தரித்திடுந் தற்பரா போற்றி
மேலைநாள் யூத ஜனஞ்சிறைப் படவும் மீளவு மருளினாய் போற்றி.

11. திருவுளக் குறிப்பைத் தீர்க்கரான் முன்னந் தெரித்திடுந் தீர்த்தனே போற்றி
வருவர்மே ஷியக்கென் றடியருக் கினிய வாக்கமு தூட்டினாய் போற்றி
பொருவரு மான்ம ரக்ஷைமார்க் கத்தைப் புதுக்கிய புராதனா போற்றி
சருவலோ கமுமீ டேறவோர் மகவைத் தந்தருள் தந்தையே போற்றி.

(உத்தர சுருதி.)

12. ஆதிமெய்த் திருவாக் காய வகிலகா ரணனே போற்றி
கோதிலாக் குணங்கள் பூத்த குவலயத் தொளியே போற்றி
மாதுவித் தாகி யிந்த மாநிலம் புரப்ப லென்று
தாதைபாற் பரிந்து நின்ற தற்பரா போற்றி போற்றி.

13. பன்னரு மஹிமை யோடு பண்ணவர் பரவி யேத்த
உன்னரும் பரமா காயத் துச்சிவீற் றிருந்தாய் போற்றி
புன்னரர் பொருட்டுப் பாவப் புலையுல கத்து மேவிக்
கன்னிபா லுதித்தாய் போற்றி கருணைவா ரிதியே போற்றி.

14. வறிதுபுல் லணையிற் கந்தை வனைந்தொரு குழவி யாகி
அறிதுயி லமர்ந்தாய் போற்றி யலகில்பல் லுயிரை யூட்டிச்
செறிதரு பசிக்காற் றாது தேம்பிநின் றழுதாய் போற்றி
நெறிதிக ழறவோ ராயர் நேர்ந்தநின் மலனே போற்றி.

15. ஈசனு ருவைகொண் டேகி யெகிப்துநா டடைந்து மீண்டு
நாசரேத் தூர்வந் துற்ற நசரேய நம்பி போற்றி
ஆசற வளர்ந்து பெற்றோர்க் கமைந்திடு மைய போற்றி

16. அம்முறை விரத மேற்கொண் டாரணி யத்து மேவிச்
செம்முறை திறம்பா வண்ணம் ஜெபதபம் புரிந்தாய் போற்றி
மும்முறை முனிந்து பேயை முடுக்கிய முனிவா போற்றி
எம்முறை பாட்டுக் குள்ள மிரங்கிடு மெந்தாய் போற்றி.

17. வந்தது பரம ராஜ்யம் மனந்திரும் புங்க ளென்று
முந்துப தேசஞ் செய்த முத்திவித் தகனே போற்றி
சிந்தனை கசிந்தீ ராறு சீஷரை யழைத்தாட் கொண்டு
விந்தையாய்ப் பரம ஞானம் விளம்பிய குருவே போற்றி.

18. நள்ளுந ரொடுகூ முற்ற நரசமூ ஹங்கட் கெல்லாம்
விள்ளருங் கருணை யாலோர் வெற்பிடை விளங்கித் தோன்றி
எள்ளருஞ் சுவிசே ஷத்தி னிருஞ்சுடர் விரித்தஞ் ஞான
நள்ளிருட் பிழம்பு சீத்த ஞானசூ ரியனே போற்றி.

19. மையுறு வஞ்ச நெஞ்ச மாயவல் லியற்கை முற்றுங்
கையுறு நெல்லி போலக் காண்டலாற் கதியைக் கூட்டும்
மெய்யுறு தருமம் யாவும் விழுத்தக விளம்பி யாங்கு
பொய்யறு சான்று நின்ற புண்ணிய மூர்த்தி போற்றி.

20. பாரிடம் வியக்கத் தீய பாரிடந் துரந்து சேர்ந்த
கோரவெம் பிணிகூன் மூகை குருடுவள் செவிடு பங்கு
தீரமெய்ந் நிமிரப் பேசத் தெரியக்கண் டிறக்கச் செல்ல
ஆரரு ளளித்த திவ்ய வற்புத மூர்த்தி போற்றி.

21. அன்றொரு சிறுமி யேழை யமங்கலை சிறுவன் சேமத்
தொன்றிய தொழும்ப னின்னோர்க் குருகிக்கண் கலுழி சிந்திப்
பொன்றிய வுயிர்வந் தெய்தப் புண்ணியம் புரிந்தாய் போற்றி
நன்றிலேன் சிறார்க்கும் ஜீவ னல்கிய நம்பா போற்றி.

22. பாழியங் கிரிமீ தோர்காற் பரிதிபோற் பொலிந்தன் பர்க்கு
வாழிய வதனச் சேவை வழங்கிய தேவே போற்றி
ஆழிமீ துலவி யாழி யலையினை யடக்கி யாங்கே
சூழிரும் புசலை நீத்த தொல்லையெம் பரனே போற்றி.

23. விஞ்சிய வகங்கா ரத்தால் வினவுவே தியருண் ணணி
அஞ்சிவா யடைபட் டேக வவிரித ழலர்ந்தாய் போற்றி
வஞ்சரான் மடியு மாறும் மறுத்துயிர்த் தெழும்பு மாறுஞ்
செஞ்செவே யுரைத்த ஞான தேசிக மூர்த்தி போற்றி.

24. தொண்டரைத் தெருட்டி யாங்கோர் துறுமலர்ச் சோலை நண்ணி
அண்டர்நா யகன்வெஞ் சீற்றத் தாரழல் குளித்தாய் போற்றி
கொண்டொரு முத்தத் தாலே குறிப்பிடக் கட்டுண் டேகிக்
கண்டார் முன்றி [illegible]



25. கைதவர் சினந்து தூய கமலவாண் முகத்து மிழ்ந்து
வைதுமுண் மௌலி வேய்ந்து வாரிறு லடிப்ப மாழ்கி
வெய்துயிர்த் திழிசெஞ் சோரி மெய்யெலாம் புதைப்ப யாங்கள்
உய்திற நாடி நின்ற வுபசாந்த மூர்த்தி போற்றி.

26. முழுதுநா னறியே னென்று மும்முறை மறுத்த சீடன்
அழுதுளங் கசக்கச் செய்யு மருணோக்க முடையாய் போற்றி
பழுதின்மை யறிந்தும் வேந்தன் படுகொலைத் தீர்ப்புக் கூற
இழுதைய ரிகழ நின்ற யேசுநா யகனே போற்றி.

27. எம்பவச் சும்மை தானோ ஹீனமாங் குருசுந் தாங்கி
அம்பதம் பெயர்ப்ப மாழ்கி யணிமறு கணைந்து நின்ற
வம்பவிழ் கோதை மாதர் வாய்திறந் தரற்ற வாண்டோர்
வெம்பரம் பிறுத்தாய் போற்றி வினைத்தொட றறுத்தாய் போற்றி.

28. வேதனை குணிக்கற் பாற்றோ வெங்குரு சறைந்து கொல்லும்
பாதகர்க் காய்மன் றுடிப் பரிந்துவாக் கருளிச் சோரற்
காதரம் புரிந்து ஜீவ வரும்பலி யமலற் காக்கிப்
பூதல முயச்ச மாதி பொருந்திய தேவே போற்றி.

29. பொங்குநீ ருலகுக் கெல்லாம் புண்ணியம் பொலியப் பாவ
சங்கடந் தொலைய நாளுந் தனியறந் தழைப்ப வேத
மங்கல வோசை மல்க வானவர் மகிழ மீட்டும்
இங்குயிர்த் தெழுந்தி ரக்ஷை யீட்டிய வெந்தாய் போற்றி.

30. மலங்கிய சீட ரோடு வைகலீ ரிருபான் வைகி
நலங்கிளர் வாக்குக் கூறி நயந்தொரு முகின்மீ தேகி
இலங்குமைங் காயங் காட்டி யெம்பிரான் றிருமு னென்றும்
வலங்கிள ரணைமீ துற்ற மாதுவே லரசே போற்றி.

31. மூதுல கருக்கு ஜீவ முக்திசா தனமுண் டாகக்
கோதறு புனித வாவிக் கொழுங்கதிர்ப் பிழம்பை நல்கிக்
காதலுற் றடைந்தோர் தம்மைக் காப்பது கருதி யென்றுந்
தாதைபாற் பரிந்து பேசுந் தயாபரா போற்றி போற்றி.

(பரிசுத்தாவியின் பரம்.)

32. திரித்துவ பராப ரத்திற் றிகழுறி பரிசுத் தாத்ம
ஒருத்துவ வநாதி நித்திய வுயர்மகத் துவமே போற்றி
விரித்தமுந் நீர்மு கத்து விந்தையாய் விளங்கி மேனாள்
திருத்தகு புவனம் பூத்த தெய்வமே போற்றி போற்றி.

33. மறைவழிப் படரா மாந்தர் வன்மனந் தனிற்பே ராடி
இறைவழிப் படுத்துந் தூய வெம்பெரு மானே போற்றி
சிறைவழிப் [illegible] பட்டோர்க் குள்ளந் தெளிந்தகோ வாலைக் கொண்டு
முறைவழிப் போத மாத முக்தய [illegible] னே போற்றி.

34. சுத்தமெய் விசுவா சத்தைத் துரிசற விளக்கித் தூய
பத்தனு மாபி ராமைப் பாதுகாத் தளித்தாய் போற்றி
நித்திய ஜீவ மார்க்க நெறிகடைப் பிடித்து நின்ற
உத்தமர்க் கியாண்டு நீங்கா வுறுதுணை யானாய் போற்றி.

35. வலிந்தெனை மருவு கென்று மருட்டிய வனிதைக் குள்ளம்
மெலிந்தழி யாது முன்னோர் விடலையைக் காத்தாய் போற்றி
மலிந்திடு ராஜ போகம் வரைந்தினத் தோடு மோசே
நலிந்துறு நிந்தை நச்ச நயந்தரு ளளித்தாய் போற்றி.

36. கோட்டமற் றுளந்தி ருத்திக் குலவுமெய்ப் பத்தி வித்தி
நாட்டம்வைத் தருணீர் பாய்ச்சி நலிவெலா மகற்றி யாதும்
வாட்டமின் றுக வோம்பி வரகதி விளைவித் தன்பர்
ஈட்டமார்ந் துயத்துய்ப் பிக்கு மிதயநா யகனே போற்றி.

தேவாரம் முற்றிற்று.

இவ்வண்ண மேகோ வாவை யிருதயங் கனிந்து போற்றிச்
செவ்விய ரிருவர் தாமுந் தெவிட்டிடாப் பரமா னந்தப்
பௌவவா ரிதியின் மூழ்கிப் பரவச ராகி நின்றார்
திவ்விய வாக்கச் சீர்மை ஜெகத்துளா தெரிப்ப தேயோ. 54

இகபரசந்திப் படலம் முற்றிற்று.

## சுவர்க்காரோகணப் படலம்.

மதிதிகழ் மறைவ லாளர் மரபினிற் சென்று சேர்ந்த
துதிபெறு பரமா காயச் சூழலில் விளங்கித் தோன்றும்
அதிபரி சுத்த மாய வாயிரத் தெட்டு மாற்று
மதிபெறு பசும்பொற் சோதி மயகிரி பரம சீயோன். 1

சத்தாகிச் சுத்த மாகித் தணப்பிலா னந்த மாகி
நித்தியந் திகழ்த்தி நிற்கு நிருமல திரியே கத்தின்
உத்தம கிருபை ஞான வொளியதி புனித மென்னும்
முத்தலைச் சிகர மோங்கித் திகழ்வதம் முதிய குன்றம். 2

தண்ணளிப் பெருக்கத் தாலே சருவலோ கேசன் மைந்தன்
அண்ணலார் புனித நீதிக் காருயிர் பலியாய் நல்கி
மண்ணுல கரையி டேற்ற வான்முறை



தற்பர னருளிற் றோன்றித் தயைமல்கித் தருமம் புட்பித்
தற்புத சுகிர்த முற்றி யளவில்புண் ணியம்ப ழுத்துப்
பொற்புறு நித்யா னந்த போகத்தைக் கனியும் ஜீவ
கற்பக விருக்ஷ மோங்கித் திகழ்வதக் கனகக் குன்றம். 4

மணவணி பொதுளி நித்ய மங்கள கீத மல்கிக்
குணநிதிக் குவைக ளோங்கிக் குலவுபே ரின்பம் பொங்கி
இணையொளி மகிமைக் கற்றை யெங்கணும் பரம்ப வீசி
உணர்வினுக் கதீத மாகி யோங்குவ துயர்பொன் மேரு. 5

அன்பினர் கவினீர் பொங்கி யருண்மடை திறந்தா லென்னப்
பொன்பொலி சிமய நின்றோர் புத்தமு தருவி போந்து
நன்பெரு மணிக ளாய நவநிதி வான்றிப் பாயும்
மன்பெரும் ஜீவ கங்கை மடுப்பதம் மகவே தண்டம். 6

புகலருங் கடவுள் வேந்தன் புகழ்மிகு புனித ஞானத்
தகவினி லுயர்வுற் றோங்கித் தண்ணளிப் பெருக்கிற் பல்கி
மகிமையில் ஜோதி வாய்ந்து வைகலின் விகற்பின் றாகிப்
பகலொளி திகழ்த்தி நிற்கும் பவித்திர பரம சீயோன். 7

தரிசன வேதி யாய சாதரூ பாச லத்திற்
பரிசன ராய தூய பவித்திர வான சேனை
துரிசற விமைக்குந் தாரா கணமெனச் சுலவித் தோன்றி
விரசுவர் திகாந்த மெங்கும் விமலவேந் தானை மேவி. 8

தணிவரும் ஜோதி பூத்த தடங்கிரிச் சார லெங்கும்
பணிவிடை புரியு மாவிப் பண்ணவர் தொகுதி மல்கி
அணியணி யாக நின்றங் கருட்டிரி யேக தேவைப்
பணிகுவர் பரமா னந்த பரவச ராகிப் போற்றி. 9

கற்பனை கடந்து நிற்குங் காரணா தீத மான
பொற்புறு புனித வேந்தன் பூரணா னந்த வாழ்வின்
அற்புதக் காட்சி சொல்ல வருகனோ வூழிப் போதைப்
புற்புதம் பொதிந்து காட்டப் பொருந்தினும் பொருந்தா தன்றே. 10

மிருத்தொடிவ் வுலக பந்தம் வீசிய மறையோ ரின்ன
திருத்தகு சீயோ னென்னுந் திருமலை யடிவா ரத்தை
அருத்தியோ டணைந்து முன்னிட் டாண்டகை திருப்பொற் பாதங்
கருத்தினோ டுள்ளிப் போற்றிக் கனிந்துவந் தேத்துங் காலை. 11

ஐயன்மீர் வம்மின் வம்மி னமலவேந் தடியீர் வம்மின்
வையகம் புரந்த ஜேசு மலரடித் தொழும்பீர் வம்மின்
துய்யநல் லாவிக் கென்றுந் துக்கமுட் டாதீர் வம்மின்
உய்யுநூ னெறிவி டாத வுத்தம தவத்தீர் வம்மின். 12

என்றுப சரித்துக் கிட்டி யிதயத்து முகத்து மன்பு
துன்றிமன் னுவகை வெள்ளஞ் சொரிந்தெனத் துரிசில் தூதர்
மன்றல்வா சகமி ழற்றி வந்துவே தியரை யேற்றார்
கன்றுகாண் கறவை யேபோற் கசிந்துளங் கரையு நீரார். 13

அன்பிற்கு முண்டோ யாண்டு மடைக்குந்தா ழார்வ மிக்கார்
புன்கணீர் பொசிந்து போந்து பூசலைத் தருமற் றென்னாத்
தென்புலந் திகழ்த்தி நிற்குஞ் செந்தமிழ் மொழிக்குச் சான்றுப்
பொன்புலத் துறுபுத் தேளிர் பூஜிதை புரிந்தா ரன்பில். 14

வேதியர் தாமுன் கண்ட வித்தக ரிவரே யென்னாக்
காதலோ டளவ ளாவிக் கடன்முறை பரிவிற் செய்து
மேதகு வியப்பி னோடு விட்புலத் தாசை வாழ்த்த
ஏதமில் வான தூத ரிருவரு மிதனைச் சொன்னார். 15

மண்ணுல கத்தி னின்று வான்முறை மாண நீந்திப்
புண்ணிய லோகத் தெல்லை புகுந்திர க்ஷணைபெற் றுய்ய
நண்ணிய நும்போல் வார்க்குப் பணிபுரி நலம்பெற் றுள்ளேம்
அண்ணல்வா னகத்து வேந்த னாணையி னடுத்தேம் நும்பால். 16

எண்ணருந் தவத்தீர் வம்மி னெம்மொடென் றழைத்துக் கூட்டித்
தண்ணளி யொடுகை கோத்துத் தடங்கிரி மீது செல்வார்
மண்ணர கீடங் கட்கு வானத்தை வணக்கி நின்ற
புண்ணியப் பெருக்கை யாரே புனைந்துரை செய்யற் பாலார். 17

வேறு.

ஞால தேகம் விட்ட டைந்த தூய ரூக்கு மத்தனுச்
சீல ராய வேத வாணர் சிந்தை யுட்க ளிப்பினால்
மேனு மேனு யர்ந்து செல்க திக்க ணேவி டாய்த்திடார்
சால வும்பர் தம்பி ரான்ற யோர்ச்சி தத்தை யுள்ளுவார். 18

துன்ப நாச தேச மார்தொ டர்ச்சி நின்றி ழுத்துமீ
நன்பு லத்து வழிந டத்தி நண்ணு விக்கி னம்மெலாம்
பின்ப டுத்தி மாண நீர்ப்பெ ருக்கை யுங்க டத்திய
அன்பின் வல்ல பத்தை யுன்னி யானந் தங்கொண் டாடுவார். 19



வந்து வந்து டற்று துன்பம் வறுமை துக்கம் வம்பவிழ்
நிந்தை மல்கு சாக ரத்தி னின்றெ டுத்து நித்திய
விந்தை யாய சிற்சு கத்து வீட்டு வாழ்வு காட்டிய 20
சுந்த ரக்கு மார னைத்து தித்தி றைஞ்சி வாழ்த்துவார்.

காய மோடு நாற்ற மிக்க கந்தை யைக்க ளைந்துநற்
றாய பைம்பொ னாடை நல்கி நேய மிக்க தூதரைச்
சேயு யர்ந்த கதிவ ழிச்ச காய ராச்செய் திவ்விய 21
நாய கக்கிரு பாந லத்தை நனிவி யந்து போற்றுவார்.

பண்டி லாத புனித மாய பொறிபு லன்ப டைத்தலில்
உண்டு பட்ட வதிச யத்தி னுள்ளெ ழுந்த வுவகையும்
அண்டர் வாழ்ப தந்த மக்கு மனுக வந்த வாக்கமும் 22
விண்டு விண்டு போற்றி செய்து விமல னைப்ப ராவுவார்.

பொருவி லாவ ருட்பு யல்பொ ழிந்த வன்பு மாரியால்
தரும மாய சாலி விண்ச தோத யம்வி ளைத்திடும்
அருமை யாய ஜீவ போன கானந் தத்தி னளவிலாத் 23
திரும லிந்த செவ்வி கண்டு செங்கை கூப்பி யேகுவார்.

புனித ராஜ சமுக நின்று போந்து லாவு மாதயைப்
பனித ருங்கு ளிர்ச்சி யோடு பாரி சுத்த வனல்வெதுப்
பினிது மல்கு மகிமை யாய விரவி யத்த மின்றியே 24
நனிதி கழ்த்து நீர்மை கண்டு நம்ப னைப்ப ழிச்சுவார்.

புதுமை யாய காட்சி கண்டு நின்று நின்று புகழுவார்
மதுர கீத கான மல்கு மாபு ணர்ந்து மகிழுவார்
குதுக லத்தோ டாச னாமம் வாழி யென்று கூறுவார் 25
கதுமெ னக்க தித்தெ ழுந்து ககன மூடு படர்குவார்.

முத்தி யின்பங் கருணை தர்மம் முற்று பாரி சுத்தமாண்
சத்தி யங்கு லாவி நிர்த்த னம்பு ரிந்து சந்ததம்
நித்தி யானந் தத்தை நல்கு நீர்மை கண்டிவ் வேதியர் 26
துத்தி யஞ்செய் துவகை யோடு தொழுது மீது துருவுவார்.

இனைய சீல ராக வுன்ன தத்தை நாடி யேகுமவ்
வினைய வேதி யர்க்கு வந்த விபுத தூத ரிருவரும்
முனைவ னைப்ப ராய்வி தேக முத்தி யுற்ற மொய்ம்புளீர் 27
நினைமி னீண்டி யாஞ்சொல் வாச கம்மெ னாநி கழ்த்துவார்.

வேறு.

மாய மின்மனத் திரிந்த மாதலந்
தூய ராகித்தொ ழும்புபட் டார்க்கெலாந்
தாய கம்புரை யத்தரும் பேறெலாஞ்
சீயொ னென்னுந்தி ருமலை காண்டிரால். 28

மாண்ட குந்திரு மாமலை யுச்சியில்
ஈண்டு ஜோதிப்ப ரமவெ ருசலேங்
காண்ட குந்திரு மாநகர்க் காட்சிதான்
சேண்ட யங்கித்தி கழ்வது காண்டிரால். 29

உத்த மத்திருத் தொண்டங்கு னாற்றிடு
வித்த கந்திகழ் மெய்ப்பரி சுத்தராம்
நித்ய சூரிகள் சங்கநி ரைநிரை
பத்தி யிற்றிகழ் கின்றன பார்த்திரால். 30

ஜீவ புத்தகத் துப்பெயர் தீட்டியும்
ஆவ லித்தமு தற்பல னாகியுந்
தேவ தொண்டுக்க மைந்ததி ருக்குழாம்
மேவு சங்கவி லாசமுங் காண்டிரால். 31

போத மல்குசம் பூரண மாய்ப்பலன்
மேத கப்பெற்ற மேம்படு வித்தக
நீதி மான்களி னாவிநி கழ்ந்திடும்
மாத லத்தின்ம கிமையும் பார்த்திரால். 32

உன்ன தத்திரி யேகரொ ருதிருச்
சந்நி தானம கிமைத ழைத்திடும்
பன்ன ரும்பர லோகப வித்திரப்
பொன்னி லத்துப்பு துமையும் பார்த்திரால். 33

இத்தி ருத்தகு வானவி ராஜ்ஜியத்
துத்த மக்குடி யாகவந் தூன்றினீர்
நித்ய ஜீவவி ருக்கநி லவுறுஞ்
சித்தி ரப்பர தீசினிச் சேருவீர். 34

ஜீவ மாநதி யாடியுந் திவ்விய
ஜீவ நாட்டுடை சீரணி தாங்கியும்
ஜீவ நாயகன் சேவடி போற்றியும்
ஜீவ மாக்களி யுண்டுக்கி ... 35



துஞ்சல் சோர்து யருற வின்றிநம்
நெஞ்சி ருக்குநி ருமல வேந்தனை
அஞ்ச லித்தங்க வரொடு மாரியீர்
சஞ்ச ரித்துச்ச தோதயந் தங்குவீர். 36

பெருந்த கைக்கன்பு செய்திடும் பெற்றியீர்
வருந்து மானிட தேகம டிந்ததால்
பொருந்து றுதும ரணமும் புன்கணுந்
திருந்து வீரினி நித்திய ஜீவியம். 37

முந்தை யாபிர காமுதன் மூவராந்
தந்தை யாரொடுந் தீர்க்கத ரிசன
அந்த னாளாக் கண்டங்க ளவளாய்ச்
சிந்தை யானந்தங் கொள்ளுவீர் சேர்ந்தினி. 38

வெஞ்சி னக்கன லுக்குவி லக்கியுந்
தஞ்ச மாக்கியி ரக்ஷணை தந்துமன்
செஞ்செ வேமுத்தி சேர்த்திடுந் தெய்விக
மஞ்ச னைக்கண்டு வாழ்த்திவ ணங்குவீர். 39

மாறி லாப்பர மானந்த வைப்பிலெம்
பேறி யாவெனிற் பிச்சுல கத்துநாள்
தோறு நீர்துய்த்த துன்பமுந் துக்கமும்
ஈறில் வேந்தன்ம றந்தில ரெண்ணுமின். 40

துன்பந் துக்கந்தொ டர்வதின் றுவினி
இன்ப முஞ்சுக வாழ்வுமி னைந்துநீர்
மன்பெ ரும்பர லோகம கத்துவற்
கன்ப ராகிய டிநிழல் வைகுவீர். 41

மனித ஜீவனை வானவ ராக்கிடுந்
தனித மாரருட் சந்நிதி நின்றுநீர்
புனித ஜீவகி ரீடம்பொ றுத்தென்றுங்
கனித னீர்மையிற் கண்டும கிழுவீர். 42

மானி டப்பல வீனம்வ ருத்தமற்
றூனு டம்பொடொ ழிவின வாலினிக்
கோனி டம்படு மூழியங் கோதற

விண்ண வர்க்கா சன்றிரு மேனியைக்
கண்ணிற் கண்டுக ளித்திடுங் கண்மலர்
அண்ண லார்திரு வாக்கைநும் மஞ்செவி
உண்ணு மாரமிர் தாகவு வக்குமால். 44

முன்னிங் கும்மின்மு யங்கிய நேசரைச்
சந்நி தானத்துக் கண்டுக ளிர்ப்பிரால்
இன்ன வாறிங்கி னிவரு தூயரை
நன்ன ரேற்றுந யந்தும கிழுவீர். 45

அகில லோகத்த ரசன்பு னிதமார்
ககன கோளத்து லவுமக் காலையில்
புகரி லாமணிப் பூணணி பூண்டுடன்
மகிமை யோடுமு லவிவ ருவிரால். 46

கிரக ளத்தொனி காட்டிக்க டவுளார்
மேக வாகன மீதுவி ளங்கியப்
போக பூமிந டுப்புரி போதுநீர்
ஓகை யோடங்க வரோடு றுவிரால். 47

ஈச னார்நடுத் தீர்வையி யம்பநீ
தாச னத்தின் மருமக் காலைநீர்
மாச னத்திர ளுக்குமுன் வந்தரு
காச னத்தினி தாகவ மருவீர். 48

பூத லத்தைக்கெ டுத்தபொல் லாங்குடைத்
தூத ருக்கும மார்க்கத்தொ குதிக்கும்
நாதன் றண்டனைத் தீர்ப்புந வில்கையில்
நீத சான்றுரை நீருநி கழ்த்துவீர். 49

புதிய வானும்பு வியும்ப டைத்துமேல்
விதிநி டேதம்வி தித்துநம் மாண்டகை
அதிப னுவா சானுமக் காலைநீர்
பதிதொ றும்பரி பாலக ராகுவீர். 50

இத்தி றத்தவி னியும்ம நுபவத்
துய்த்து ணர்ந்தறி வின்னுரை யாவிதை
வித்த ரித்துரைக் கப்பெறு வேமலேம்



திங்கள் வாண்முகச் செவ்வியர் செப்பிய
மங்க லத்திரு வாக்கின்ம கிழ்ச்சியுட்
பொங்கி யாரியர் பூரித ராகியுத்
துங்க வேந்தைத்தொ ழுதுட னேகுவார். 52

குற்ற வாளிக ளாங்கொடி யேமுக்கிங்
கற்ற மில்சிற்சு கானந்த வாக்கம்வந்
தெற்றென் றோர்துமி றையருட் பெற்றியின்
முற்றும் புண்ணியத் தாலென முந்துவார். 53

வேறு.

ஆதியான் றாதனை யடுத்திவ் வண்ணமா
வேதிய ரிருவரும் விசும்பி வர்ந்துபோய்
மேதகு நித்திய விமல முத்தியின்
ஜோதிமா நகர்ப்புறந் துன்னி னாரோ. 54

ஆயிடைத் திருநக ரணிகொள் சேனையின்
மேயவோர் பகுதியுள் வியந்து மேம்படு
தூயரை யெதிர்கொளச் சுலவி விண்ணிடை
ஏயெனு மாத்திரத் திறுத்த தென்பவே. 55

அவ்வயிற் பணிபுரி யறவ ரிவ்விரு
செவ்வியர் தேவனைச் சிநேகித் தாங்கவர்
திவ்விய நாமத்தி னிமித்தந் தீங்குறீஇ
எவ்வகை யுரிமையு மிகந்து ளாரிவர். 56

மருளுறு மாணநீர் நீந்தி வந்தவர்
திருவுளத் தருள்வழி யழைத்துச் சேறுவேந்
தெருளுறு சந்நிதி சேரு மட்டெனுப்
பொருளெலாம் புலப்படப் புகன்று காட்டினார். 57

ஆரியர் தவநிலை யறிந்தம் முன்னணி
பேருவ கையினொடு வாழ்த்திப் பெட்புறுஞ்
சீரிய திருமண விருந்திற் சேர்ந்துளார்
சேரிரும் பாக்கிய ரென்னச் செப்பினார். 58

இறையவன் சந்நிதி நின்று மின்னிசை
மறைதிகழ் மங்கல கீத வாத்தியர்
துறைதொறுந் துறைதொறுஞ் சூழ்ந்து தொக்கனர்

கின்னரந் தம்புரு வீணை கேழ்கிளர்
இன்னரம் புளரிசை யெழால்மி டற்றொலி
மன்னிய பெருஞ்சுர மண்ட லத்தொனி
பொன்னுல கெங்கணும் பொதுளிற் றென்பவே. 60

உத்தம கிறிஸ்தவர்க் கோகை பேசிநீர்
அத்தனை யுலகைவிட் டளவில் பேரின்பப்
புத்துல கடைந்ததே புதுமை யாமெனா
வித்தக வீணையை மீட்டிப் பாடுவார். 61

பன்னரு மகாத்துமர் பலரொ ருங்குதொக்
கந்நிலை யுவந்துப் சரித்தங் காத்துமப்
பன்னிய வாக்கொடு பரம நாயகன்
சந்நிதி மணவறை சாரு வேமெனா. 62

எல்லையில் வான்கண மெங்கு மீண்டியே
தொல்லையம் பரனடி தொழுது வாழ்த்தவும்
நல்லிசைக் கருவியி னூத மோங்கவும்
பல்லிய முழங்கவும் பாடி யேகுவார். 63

சாதுசங் கத்தவர் தம்மி லித்தகு
மாதவ ரிருவர்வந் தடைந்த மாட்சியும்
ஆதரித் தெதிர்கொளப் பெற்ற வாக்கமுங்
காதலித் துவகையிற் கனிந்து பேசுவார். 64

எங்கணுந் தண்ணில வெறிக்கும் பூரண
திங்களுக் களவிலை யெனினுஞ் சிந்தையிற்
பொங்குநீர் நிலையெலாம் பூத்த லர்ந்தன
செங்கம லங்களுஞ் செப்பற் பாலதென். 65

காட்சியின் புதுமையு மதுர கானத்தின்
ஆட்சியுங் கண்டுகேட் டறிந்த வாரணர்
மாட்சிசான் முத்தியுண் மருவி னுமெனச்
சூழ்ச்சிசெய் துவகையுட் டுதைந்து போயினர். 66

ஓதரு மித்தகு புனித வுத்தம
சாதுசங் கத்துடன் றரிக்கப் பெற்றனம்
மாதயை மாதயை யெனம கிழ்ச்சியாற்
போதமற் றனரெனப் பொருமி விம்மினர். 67



இலகுமோ க்ஷானந்த மோவி தென்கொலாம்
உலகசிற் றின்பெலா மொழியு மேயென்பர்
அலகிலவ் வானந்த வளவைக் காட்டிடற்
குலகில்வே றெதையெடுத் துவமை கூறுகேன். 68

உன்னதா னந்தமென் றுரைப்ப தன்றிமற்
றென்னதான் யாவர்தா மெண்ணி யெண்ணிமன்
சொன்னபோ தினுமனுத் துணைக்குப் போதுமோ
தன்னிகர் தம்பிரான் றருமப் பேற்றிற்கே. 69

இனைத்தென வாக்கினுக் கதீத மெண்ணவும்
மனத்தினுக் கதீதமவ் வரம்பி லானந்தம்
எனைத்துணை யளவைமற் றெடுத்துக் காட்டினுந்
தினைத்துணை யினுமலை பெரிதென் சீர்மையாம். 70

வேறு.

பன்ன ரும்பவித் திரக்குழாம் பல்லியந் துவைப்ப
மன்னர் மன்னனை யெதிர்கொளு மாண்பினு மாண
நன்னர் வேதியர் தமையெதிர் கொண்டுட னடத்தித்
துன்னி னார்முத்தி மாநகர்த் தோரண வாயில். 71

கோக்கு மாரன்செங் கோன்முறைக் குறையுளாய்க் குலவி
மேக்கு யர்ந்தமா மகிமையின் கோபுரம் விளங்கிப்
பாக்கி யம்பொதிந் தனவா னந்தம் பயிலும்
மோக்க வாயிலைக் கண்டனர் முதிர்கடைப் பிடியோர். 72

கண்டு காதலித் திறைஞ்சினர் கருணையங் கடற்குப்
பண்டுண் டாக்கிய வருண்மடை யாமெனப் பரிவில்
அண்டர் கோன்றிரு வடித்துணை யன்பொடு பரவி
விண்டு தோத்திரம் புரிந்தனர் விநயபூ ருவமாய். 73

மன்னு மித்திரு நகர்க்குளிவ் வாயிலின் வழியாய்த்
துன்னி நித்திய ஜீவதா ருவைச்சுதந் தரிக்கப்
பன்னு நன்னடை பற்றியோர் பாக்கிய ரென்னாப்
பொன்னெ ழுத்தறு புதுமைகண் டுளமகிழ் பூத்தார். 74

ஆங்க டுத்திரு தூதரு மையன்மீ ரணிகொண்
டோங்கு பொற்கடை வாயிலைத் திறக்கென வுரித்திற்
பாங்கொ டும்விளி யின்னெனப் பணித்தலும் பனவர்
வீங்கு மெய்யுணர் வொடுதட்டி விளித்தலுற் றனரால். 75

(கடைதிறப்பு.)

கேடு மல்கிய நாசதே சத்துளேங் கிருபை
நாடி வந்தெமைப் பிடித்துநன் னெறியிலே நடத்த
ஓடி வந்திளைத் துறுமா ணத்தையூ டுருவித்
தேடி வந்துகண் டடைந்துளேந் திருக்கடை திறமின். 76

நிருத வெஞ்சிறை மறிந்துளே நீசரே முக்காய்க்
குருதி யின்விலை கொடுத்தெமை யாட்கொண்ட கோமான்
சுருதி மார்க்கத்துத் தொழும்புபட் டுளமவர் துணைத்தாள்
கருதி வந்தனங் கருணையீர் கடைதிறந் தருண்மின். 77

ஜேசு வின்மதி வதனமுஞ் செங்கனி வாயும்
நேச முங்கரு ணையும்பொழி நேத்திரங் களுநற்
றேசு லாந்திரு மேனியுஞ் செம்மலர்ப் பதமும்
ஆசை யங்கனன் மூட்டுவ வருட்கடை திறமின். 78

பாவ தாருவின் பழநுகர் தீவினைப் பயனுஞ்
சாவு மெம்மைவிட் டகன்றன தற்பர னருளால்
வீவின் றாகிமே னாண்முளைத் தோங்கிவிண் படர்ந்த
ஜீவ தாருவைக் காணுமா றருட்கடை திறமின். 79

பாவ மாஞ்சுடு பாலையிற் பகலெலா முழன்று
தாவ ருங்கடுந் தாகவி டாய்கொண்டு தவித்திங்
காவி யேவழி காட்டவந் தடுத்தன மடியேம்
ஜீவ வூற்றுநீர் வேட்டனந் திருக்கடை திறமின். 80

இலகு மைந்துகா யங்கொண்ட வடைக்கலத் தெழிலும்
அலகை யின்றலை நசுக்கிய வாவிந்தச் சாணும்
உலகு ளேமுக்கென் றேங்கப யாஸ்தமு முளவெம்
அலகி லாண்டகைக் கடியரே மருட்கடை திறமின். 81

அம்பு ராசிசூ ழவனிக்கீ டேற்றத்தை யளிப்பான்
உம்பர் நின்றுதஞ் சுதனைத்தந் துன்னத வன்பால்
எம்பி ராணனுக் கிரக்ஷணை யருளகோ வாவாந்
தம்பி ரானடித் தொழும்பரேந் தலைக்கடை திறமின். 82

அருளி னாலெமை யறிந்தன மருள்வழிப் பட்டேம்
அருளி னாமு துண்டனா மருளுயி ரடைந்தேம்
அருளி னாற்புறங் கண்டன மடுபகை யனைத்தும்
அருளி னாற்கதி யடுத்தன மருட்கடை திறமின். 83



பாவ மல்குபூ வுலகுளே மறக்கொடும் பாவர்
தேவ மைந்தனார் சிலுவையி னுகுத்தசெஞ் சோரி
மேவு புண்ணிய வசத்திலிவ் வீட்டுல கடைந்தேம்
ஜீவ நாயகற் றொழும்பரேந் திருக்கடை திறமின். 84

முத்தி சாதன மாகிய சிலுவையின் மூர்த்தம்
மத்த கத்துளே மானுவே லுயிர்கொடுத் தீட்டி
வைத்த மாநிதிக் குரியராய் வகுத்தசா தனமெங்
கைத்த லத்துளேங் காட்டுகேங் கடைதிறந் தருண்மின். 85

வேறு.

இவ்வண்ணம் விதேக முத்த ரிருவரு மிரந்து கூவுஞ்
செவ்வண்ண மறிந்து மோசே யாதியர் சேர்ந்தாங் குய்த்த
கைவண்ணச் சாத்தை யேற்றுக் கருணைவேந் தருக்குக் காட்டி 86
அவ்வண்ண லழைமி னென்ற வருள்பெற்று மீண்ட வொல்லை.

என்மனோ ரதரா யென்று மிதயபீ டத்து மேய
தன்மாரங் கிறிஸ்து யேசு சாமிசா மீப மாக
நன்மைசால் மெய்விஸ் வாச நராத்தும ஜீவர்க் குய்த்த 87
ஜென்மசா பலிய முத்தித் திருக்கடை திறந்த தம்மா.

முத்திமா நகர வாயின் முகப்புவே தியருக் காக
வித்தகக் கபாடம் வல்லே திறவுண்ட விதத்தை யோரிற்
சித்தமுள் ளுவந்து ஜேசு திருவடிக் கன்பு செய்யும் 88
பத்திமை யல்லால் வேறு பரமசம் பத்தொன் றுண்டோ.

எண்ணரும் பரம சேனை யெதிர்கொண்டிங் கணைமி னென்னப்
பண்ணவர் குழுமி வாழ்த்தப் பராபரன் புதல்வ னீந்த
புண்ணியங் கைமா றில்லாப் புண்ணியம் புன்ய மென்னா 89
விண்ணவர்க் கரசை யேத்தி வேதிய ரகத்துட் புக்கார்.

ஆயிடை யடுத்தா னாக வறிவின னவனைப் பற்றித்
தூயசின் னங்கள் யாது மிலனெனத் துணிந்தவ் வொல்லை
சேயுயர் முகப்பி னின்றுஞ் சித்திருட் சிறையி லுய்த்தார் 90
வாயில்காப் பாள ரந்தோ மதியற்றார் கதியற் றாரே.

சொன்மதி தெருளான் றொல்லைத் துராசார மொருவ னாய
துன்மதி யந்த காரச் சூழலை யடையப் பெற்றான்
பொன்மதி புகட்டி யுய்க்கும் புங்கவர் வேத போத 91
நன்மதி படைத்தார் நித்ய நலந்தரு நகருட் புக்கார்.

அகம்புகும் பேறு பெற்ற வருமறை யவர்சீர் தேரில்
ஜெகம்படு செல்வ மாதி சிற்றின்ப நுகர்ச்சிக் கெல்லாம்
முகங்கோடா ராகித் தம்மான் மொழிவழி முறையிற் பற்றி
இகம்படு தொல்லை நீத்திங் கிறில்பே ரின்பத் துற்றார். 92

எத்தனை துன்பந் துக்க மெத்தனை புண்ணீர் கண்ணீர்
எத்தனை நிந்தை லஜ்ஜை யெத்தனை மோச நாசம்
எத்தனை சிறைய பாய மெத்தனை பயங்க ரங்கள்
அத்தனை யும்மின் றாக்கி வீடுய்த்த தருளி னாக்கம். 93

உய்த்தநிங் கொன்றோ மேன்மே லுவகைபே ரின்ப போகம்
நித்திய ஜீவ நன்மை நிறைபரி சுத்த நெஞ்சம்
வித்தக விமல நேசம் மேதக்க தத்து வங்கள்
இத்தனை நலமு நல்கிற் றிறையவ னருளி னாக்கம். 94

பொங்கிரும் ஜோதி பூத்த பொன்னகர்ப் பரப்பி லெங்கும்
மங்கல மதுர கீத மலிந்தவா னகமு முக்கம்
எங்கணும் பொதுளத் தாக்கி யிரட்டின வெதிர்கொண் டேற்ற
அங்கண்வா னகத்துச் சேனை யார்ப்பொலி கெழுமிற் றன்றே. 95

பொன்னக ரத்து வாணர் யாவரு மகிழ்ச்சி பூத்து
மன்னில வுலகி னின்றிம் மாந்தரை வழிந டாத்தி
உன்னத பரமா காயத் தாச்சியிற் றிகழ்த்திக் காட்டுந்
தன்னிக ராய வேந்தைத் தனித்தனி பரவி னாரால். 96

புக்கவ ரனந்த ரந்தம் புண்ணியப் பொருளைப் போற்றி
மிக்குறு பரமா னந்த விம்மித ராகி யேத்திப்
பக்குவப் படுநெஞ் சாரப் பல்லாண்டு கூறி வாழ்த்தித்
தொக்கவின் னவர்க்குஞ் செய்தா ரஞ்சலி முறையிற் றாயோர். 97

புரவுறா னெறியிற் சென்று புண்ணிய கதியிற் புக்க
உரவினா ருருவ மாறி யொளிதிகழ் மேனி வாய்ப்ப
இரவியிற் சுடருந் தூய விலங்கெழின் முகத்த ராகிப்
பரவிநின் றேத்தி யேத்திப் பண்ணவ ரோடு செல்வார். 98

அம்பர லோக ராஜ னருட்டிரு முன்பு நின்றிங்
கும்பரோர் சிலர்வந் தான்றி யுத்தம கிறிஸ்த வற்கும்
நம்பிக்கை யென்னு நாம நலந்திகழ் மொய்ம்பி னாற்கும்
பைம்பொனி னாடை சார்த்திப் பன்மணிக் கலன்கள் பூட்டி. 99



அதிபதி யாந்த்ரி யேக வாண்டகை சீரெம் மோடு
துதிபகர்ந் திசையி னென்னச் சுரமண்ட லங்க ளீந்து
கதிபெறு மாபி னாக்கங் கவினிமங் களமே மல்க
மதிகதி ரனைய ஜீவ மௌலியும் புனைந்தார் வாழி. 100

முடிபுனை காட்சி கண்டேன் முறைவழா தாசற் போற்றிப்
படியினுக் கீட்டி வைத்த பரமசந் தோஷந் துய்ப்பான்
கடிமணக் கோலத் தோடிக் ககனமண் டபத்துட் டேய
வடிவுடை யெமரீர் வம்மோ வம்மென்ற வாக்குங் கேட்டேன். 101

மங்கள கரமா யெங்கும் வானதுந் துமிக ளோடு
சங்கையில் புனித நாத மணியொலி தழைத்த தாவாப்
பொங்கிய பரமா னந்தப் புதுக்களி யாட்டு மல்கி
அங்கண்வா னகர மெங்கு மருங்கடி விழாக்கொண் டன்றே. 102

கதிமிகு சிறப்புப் பெற்ற காவலர் பலரெங் கர்த்தர்
அதிபரி சுத்தர் சுத்த ரதிபரி சுத்த ரென்னா
விதிமுறைப் படிசல் லாப மிழற்றிசை திகழ்த்திப் பாடிச்
சதிமுறை தழுவித் தூங்கத் தகைபெறு நடனஞ் செய்தார். 103

திருந்துவே தியருந் தேவ சங்கமுஞ் சிந்தை யாரப்
பெருந்தகை யாய தேவ பிதாவுக்குங் குமா னார்க்கும்
பொருந்திய தேவா விக்கும் புரையறு மகிமை யாற்றல்
அருந்துதி யென்று மல்க வாமெனென் றிசைத்தார் பல்கால். 104

ஒழுகொளி மௌலி சூடி யுத்தமாத் துமிகள் தம்மோர்
அழகிய மணவா ளன்பா லவாவொடு செல்லுங் காட்சி
விழிகளிப் புறநோக் குங்கால் விரிகதி ரனந்தந் தொக்குப்
பொழிகதி ருகுத்தா லென்னப் பொலிந்தது மகிமை ஜோதி. 105

ஜோதியின் பிழம்பு போர்ப்பத் துணுக்குறீஇத் துயிலா நின்ற
மீதுயர் கிரியின் சாரல் விழித்தனென் விமல ராஜன்
பாதபங் கயம்ப ராவிப் பவித்திர தரிச னத்தைக்
காதலா யகம்பொ றித்துக் காட்டினே னுலகுக் கம்மா. 106

சிந்தையாத் திரையி னோர்ந்த திவ்விய சரித மற்றிவ்
விந்தையைக் கருத்தி னுய்த்து விழுத்தகு நோன்பு பற்றி
அந்தண ராகி வேத வறநெறி வழுவார்க் கெல்லாஞ்
சந்தத மழிவில் பேறு தருவார்நம் பரம தந்தை. 107

### வேறு.

வாழி வாழியோர் திரித்தவ நாமத்தின் மகிமை
வாழி மன்னுயிர்க் கிரக்ஷணை வழங்கு வண்சுருதி
வாழி மெய்யடி யார்குழூஉந் திருச்சபை மரபு
வாழி மெய்க்குரு பரம்பரை யூழிய மாண்பே. 108

### வேறு.

மல்குக ஜீவர்க் கெல்லா மதிநலந் தருமெய்ஞ் ஞானம்
புல்குக வறங்க ளெங்கும் புரையிலாச் செங்கோ லோங்கி
வெல்குக மெய்மை யென்றும் விளங்குக கல்வி செல்வம்.
பல்குக வுலக மெங்கும் பரம்புக நன்மை மாதோ. 109

நன்றுல கனைத்துந் தந்து நலம்பெறு தந்தை யாக
வென்றிசேர் மைந்த னாக விமலாவி யாக வொன்றும்
மன்றல்சேர் திரியே கற்கு மகிமையுங் கனமு மாறு
தென்றுமுள் ளனபோ லின்று மென்றுமுண் டாக வாமென். 110

சுவர்க்காரோகணப் படலம் முற்றிற்று.

இரக்ஷணிய பருவம் கவி, 250.

## தேவாரம்.

### I. உண்மை வற்புறுத்தல். (பண், பழம்பஞ்சுரம்.)

1. தொக்கபாவமன் னிப்புநித்திய ஜீவநன்மையுஞ் சுகிர்தமும்
மிக்கபேரின்ப வீடுநங்கிறிஸ் தியேசுவைவிசு வாசிக்கிற்
கைக்குள்வந்ததிங் கையமொன்றிலை கண்டுகேட்டுணர்ந் துலகுளீர்
தக்கவாறுநன் றுய்மின்ரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

2. தேவதேவத்ரி யேகதெய்விக ஜேசுவின்றிரு நாமமே
ஜீவரக்ஷணை நல்குதிவ்விய சீலமார்திரு மந்திரம்
ஆவதன்றிமற் றில்லைவேறிதை யாயுமின்விரைந் துலகுளீர்
தாவரும்பர மார்த்தரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

3. இம்பர் மெய்ப்புரு ஷார்த்தமீட்டுதற் கேற்றநல்வழி யீசனை
நம்பியன்புசெய் வார்க்கெலாமழி யாதபேரின்ப நன்னிதி
உம்பர் நோக்குசன் மார்க்கமாதியு ணர்த்துசற்குரு வுலகுளீர்
தம்பிரான்கதி கூட்டுரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

4. எமையுயக்கொண்ட வீசனுதிதொட் டெழுதுவித்தது மிம்பரிற்
சிமையத்தேயலர் தீபம்போன்றுளி திருச்சபைக்குய்த்துத் தெருட்டலும்
உமையடுத்தடுத் துண்மைகூறிவற் புறுத்திநிற்பது முலகுளீர்
சமயபாஸ்கர னமிரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.



5. முத்துவத்தனி யேகவஸ்துவு மோக்ஷமுந்தரு மார்த்தமும்
நித்யஜீவனும் ஜீவமார்க்கமு நெறிதிரிந்துசெல் பாவமும்
சித்தசஞ்சலப் படுகரும்முள தீர்க்கசத்திய முலகுளீர்
சத்தியந்தவ றுதரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

6. ஆதிநித்திய மாத்துமாமற்ற வகிலம்யாவும நித்தியம்
பூதலத்திறந் தோருயிர்த்தெழுந் தெம்பிரானடுப் புரியுநாள்
நீதியாய்வரு பலனுநித்திய நீக்கமின்றுல கத்துளீர்
சாதுசங்கத்தைச் சார்மின்ரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

7. கனிதனீர்மையிற் கிறிஸ்துவின்றிருக் கடைக்கணுக்கிலக் காகிடில்
துனிதவிர்ந்திடும் பாவசங்கடந் தொலையுதுந்நடை சுகிர்தமாம்
புனிதநன்மனம் பொருந்துமன்புளம் பொங்கிமேலிடு முலகுளீர்
தனிதமாரருண் மல்கும்ரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

8. கிழக்கெழுஞ்சுடர் போலச்சத்தியங் கிளரக்கண்டினுங் கேதமார்
பழக்கமானதீ வினையைவேரறப் படுத்துநன்னெறி பற்றிடீர்
வழக்குரைத்துவா ணாளைப்போக்குதன் மதிகொலோவுல கத்துளீர்
சழக்கைவிட்டுளந் திரும்பும்ரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

9. சேயருந்தம ருஞ்சிநேகருந் தேடுபல்பொருட் செல்வமுங்
காயநீத்துயிர் பிரியுங்காலொரு கடிகைபின்வரக் காண்டுமோ
நாயகன்கிறிஸ் தியேசுவேமறு மைக்குநற்றுணை யுலகுளீர்
தாயகம்பிறி தில்லைரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

10. நம்மைநோக்கிய தண்டனைக்கொரு நடுவராய்நின்று தாங்கியுஞ்
செம்மையிற்றிறம் பாதுநித்திய ஜீவபுண்ணியந் திரட்டியும்
இம்மைக்கும்மறு மைக்குநன்மையுண் டாகவிங்குதித் துலகுளீர்
தம்மையுந்தந்த சாமிரக்ஷண்ய சமயநிர்ணயந் தானிதே.

உண்மை வற்புறுத்தல் முற்றிற்று.

### II. அந்திப்பலி. (பண், பழம்பஞ்சுரம்.)

1. தேவதேவத்ரி யேகதோத்திரம் ஜேசுநாயக தோத்திரம்
பாவகாரிசி ரஞ்சிதைத்தெழு பாதபங்கஜ தோத்திரம்
ஜீவபாதையில் வழிநடத்திடுந் திவ்யவாத்தும தோத்திரம்
ஆவலோடுனக் கனந்ததோத்திர மகிலலோகசர் வேசனே.

2. அலகிலாவருள் ஜோதியேபக லருணனுமொளி யத்தமித்
துலகெலாமிருட் படலமூடிய துணக்கந்திப்பலி யுதவுவான்
இலகுநின்கிரு பாசனத்தைவந் தெய்தினேனித யத்தொளி
அலரவைத்தெனக் காவிதந்தரு ளகிலலோகசர் வேசனே.

3. உடைப்பெரும்பொருள் கல்விநட்புற வுரிமையாவுமிவ் வுடலொடும்
இடைக்கணின்றிடு முதவுமோர்துணை யென்றுநீயடி யேற்கியான்
படைக்கநின்றழற் படுகருய்க்குமென் பாவமஞ்சியுன் பாதத்தே
அடைக்கலம்புகுந் தேன்கடைக்கணி யகிலலோகசர் வேசனே.

4. நஞ்சமல்கிய வஞ்சவல்வினை நச்சிநச்சியென் ஞளெலாங்
கிஞ்சித்தும்பய னின்றியோய்ந்தன கெஞ்சவந்துனைக் கிட்டினேன்
தஞ்சமுன்னிரு கஞ்சநாண்மலர்ச் சரணலாற்புக வரணிலேன்
அஞ்சலென்றெனை யாதரித்தரு ளகிலலோகசர் வேசனே.

5. பையுளேனுனைப் பற்றிலேன்பயன் பட்டிடேனொரு பாவியான்
கையதாகிய ஜீவபுஸ்தகக் கணக்கிலென்பெயர் காண்பதோ
துய்யவாவிபை யருளியென்குண தோடம்யாவையு நீக்கியாள்
ஐபதாரகம் யாதுமின்றெனக் ககிலலோகசர் வேசனே.

6. ஓரணுத்துணை மதியிலாதுசிற் றின்பமுண்டுலைக் கமடமாய்க்
காரணத்தைவிட் டலகையோடுகை கோத்தெனுயுள்க ழிந்ததே
மாரணத்துறை நேரினித்திய மங்களக்கரை வாய்க்குமோ
ஆரணத்துறை காட்டியெற்கரு ளகிலலோகசர் வேசனே.

7. துன்புறழ்ந்துறழ்ந் தலசிவைகலுஞ் சுவைமணம்பெறு கிற்கிலாப்
பொன்பொலிந்தசொன் மாலைகொண்டுனைப் போற்றினும்பய னென்னை
என்புநெக்குரு கிக்கணீர்சொரிந் தேத்துமெய்விசு வாசமோ [யாம்
டன்புறழ்ந்தசொற் பாவியென்கவிக் ககிலலோகசர் வேசனே.

8. பற்றெலாம்விடு பட்டபோதினும் பாழ்த்தவென்னகப் பற்றினும்
முற்றுநீங்கல வாகிநின்றெனை முரணிவைகலு மோசஞ்செய்
புற்றராவொடு நாட்கழிப்பது புண்ணியாதிரு வுள்ளமேல்
அற்றதாருக வெற்புரந்தரு ளகிலலோகசர் வேசனே.

9. உண்டுபட்டவென் மடமையும்பல வீனமுந்திரு வுள்ளத்தே
கொண்டருட்கும ரேசன்புண்ணிய மொன்றையேகுறிக் கொண்டெனிற்
கண்டகாண்கிற காணுமென்பிழை யாவையுங்கணக் கேற்றிடா
தண்டர்நாயக பொறுத்திரக்ஷைசெய் யகிலலோகசர் வேசனே.

10. திமிரநீங்குமுன் றேகநீங்கியென் ஜீவனம்மையிற் சேரினுங்
குமரநாயகன் றிருவடித்துணை கூட்டியுய்யருட் கொண்டலே
எமரொடுந்தடுத் தாண்டபேரரு ளென்றும்வாழிய வாழிய
அமரர்நாயக வாழிவாழிய வகிலலோகசர் வேசனே.

அந்திப்பலி முற்றிற்று.

இரக்ஷணிய யாத்திரிகம் முற்றிற்று.

**இரக்ஷணிய யாத்திரிகம் கவி, 3622.**

**இடைக்கிடை சேர்ந்துள்ள தேவாரம் கவி, 144.**

# இரக்ஷணிய யாத்திரிகம்.

## சிலேஷை, யமகம், திரிபு, மடக்கு முதலிய சில கவிகளுக்கு அர்த்தம்.

### பரமராஜ்யப் படலம்.

21. நித்திய ஜீவநீர்நிலை—சாவாத ஜீவனைச் சுரக்கின்ற வாவிகள். (ஈண்டு தேவாலயத்தைக் குறித்தது.)

முத்தி நாட்டெழில்—பரலோக ராஜ்யத்தின் அழகிய வைபவங்கள்.

முயங்கக் காட்டலில்—தத்தமிற் பிரதிபிம்பித்துக் காட்டுதலினாலே.

உத்தமக் குலத்து ஓதிமக்குழாம்—உத்தம வகுப்பிலுள்ள அன்னப் பக்ஷிகளின் கூட்டம்.

அகன்றிடா—(அந்த நீர்நிலையை) விட்டு நீங்காமற் சதா வசிக்கின்றன. (ஆதலால் அவைகள்,)

பத்திசெய் தவப்பள்ளி போலுமால்—பத்தியோடு திருத்தொண்டர் தவம் பயிலுகின்ற தேவாலயம்போலு முள்ளன என்றவாறு.

ஆல்—அசைநிலை.

விசேடவுரை.—பிரபஞ்ச வனாந்தரத்திலே நெறிதப்பி யலைந்து திரிந்து இளைத்து விடாய்த்த ஆத்மகோடிகளுக்கு அந்த விடாயைத் தணித்து ஆரோக்கியத்தையும், பரமசுகத்தையு மருளிக் காக்கவல்லது ஸ்ரீ கிறிஸ்து பெருமானது கருணைப்பெருக்க மாதலில் அதனை "நித்திய ஜீவநீர்நிலை" என்றும், அந்தக் கருணைப்பெருக்கே ஜீவருக்கு அதிரிஷியமாயிருந்த பரலோக பேரின்பவாழ்வைத் துலக்கமாய்க் காட்டிய தாதலில் "முத்திநாட்டெழின் முயங்கக் காட்டலில்" என்றும், இத்யாதி உசித சுகாநுபவங்களை ருசித்தறிந்து மேன்மேலு மவாவி அந்த நிலையை விடாதுபற்றி முயற்சிக்கின்ற சுவேதவர்ணத் தாரான மாதர் கூட்டத்தை "உத்தமக்குலத் தோதிமக்குழாம்" என்றும், ஆகவே இந்தக் கூட்டத்தார் பிரதிதினமும் அநுஷ்டித்து வரும் ஜெபதப விரதமுதலிய சத்கர்மாநுஷ்டானங்களும் மெய்த் திருத்தொண்டர் நியமனப்படி குழீஇ ஆண்டாண்டு முறையாய் நடத்திவரும் ஸ்துதி தோத்திர ஜெபமுதலிய தேவாராதனையோடு நிருவிகற்பமாய்த் தோன்றலில் அதனைப் "பத்திசெய் தவப்பள்ளிபோலும்" என்றும், கூறினும்.

22. மாக மீது நேர்—ஆகாயத்திற் கூடின.

கருணைமாரி பெய்மேகம்—அருள்மழை பொழிகின்ற மேகத்தை.

கண்டு கண்டு உவந்து—பார்த்துப் பார்த்து மகிழ்ந்து.

வித்தகத் தோகைமாமயில்—ஞானமுள்ள சிறந்த தோகையையுடைய மயில்கள். (சுதேச ஸ்திரீகள்.)

அகவுஞ் சூழல்வாய்—ஆனந்திக்கின்ற பொழில்கள்தோறும்.

நாகம் மாயுமே—தந்திரமுள்ள பசாசாகிய சர்ப்பந் தலை நீட்டாது ஒழிவான்.

நாகம் ஆயுமே—சுவர்க்கலோகவாசிகள் (இந்தக்காட்சியைக்) கூர்ந்து கவனிப்பார்கள். எ—று.

23. சீதவாவியின்—குளிர்ந்த தடாகங்களில்.

செய்ய பங்கயப்போது அலர்ந்திடும்போது—செந்தாமரைப்புஷ்பங்கள் விரிகின்ற பிராதகாலத்தில்.

ஆதபன் கதிர் அலருங்காலையில்—நீதியின் சூரியகிரணம் விளங்குகின்ற (காலை யாராதனைக்குக் கூடுகின்ற.)

மாதர் வாண்முக வாரிசங்களும் அலர்ந்திடும்—ஸ்திரீகளின் பக்தி விளங்குகின்ற வதனம்புயங்களும் விகசிதமாயலர்ந்து விளங்கும். எ—று.

24. இன்ன லுற்றவர்க் கிரங்கி—துன்பத்தை நுகருகின்ற வறியவருக்கு இரங்கி.

யாண்டுமெய் நன்னர் வாசக நவிற்றி—எப்பொழுதும் உண்மையான மாதுரியவசனங்களைக் கூறி.

ஆதரித்து—ஆதரவுசெய்து.

உன்னருங்குணத் துதவிசெய்திடும்—நினைத்தற்கரிய நற்குணத்தோடு உபகாரஞ் செய்கின்ற.

அந்நலாரெலாம்—அந்த நல்லவர்களெல்லாரும்.

அநலார்களே—அத்திருநாட்டில் வாசஞ்செய்யும் உத்தமகுணப் பெண்டிர்கள்தாம். எ—று.

25. மாசில் கள்ள மா தவத்தரும்—கள்ளமில்லாத மனஸோடு பக்திசெய்கின்ற திருத்தொண்டரும்.

நாரி சங்கமும்—மாதர் கூட்டமும்.

நண்ணி அந்த இருபாரிசங்களும்—(ஜீவவூற்றண்டை) அடுத்து இருகரை மருங்கும்.

படியுங்கால்—படியும்போது.

முகவாரிசம் துலாம்—(அவர்கள்) முகபத்மங்கள் விளங்கிய.

வாரிசங்கமே—ஜீவ நீர்நிலைகள் (அந்நாட்டில்) சங்கமென்று சொல்லத்தக்கனவாயிருக்கும். எ—று.

'படியுங்கால்' என்பதை நீர்நிலையில் நீராடுதலாகவும், தேவாலயத்தில் வணங்குதலாகவுங் கொள்க.



26. திருமலிந்த மங்கையர் சிறரோடும்—வைதீகலங் கதித்த பெண்டிரோடும் பிள்ளைகளோடும்.

மைந்தர்தாம்—புருஷரானவர்கள்.

மருமலிந்த பூம்பொழிலின்—புஷ்பவாசனை பரிமளிக்கின்ற சோலையினிடத்து (நற்கிரியை பரிமளிக்கின்ற சுக்கிராமங்களில் என்றபடி.)

திருமலாதிபன் பணிசெய் நித்திய கருமஞ் சாலும்—பரிசுத்த கடவுளரசனுக்குத் திருப்பணிவிடை புரிகின்ற பிரதிதின ஊழியங்கள் மிகுத்திருக்கும். (ஆதலால்,)

கரு மஞ்சு ஆலுமே—(அவ்விடத்துக் கிருபையாகிய) கருமேகம் வந்து படியும். எ—று.

ஏகாரமிரண்டும் ஈற்றசைகள்.

## சுவிசேஷமார்க்கப் படலம்.

35. கண்டகம் கடுப்புதர் அடர்ந்த கான்வழி—முட்செடிகளும் விஷப்பூண்டுகளும் நெருங்கிக் காடுபற்றி யிருக்கின்ற பூர்வ பாதையை.

கண்டு அகங் கடுப்புற—திருவுளத்திற் கண்டு வேகமாய்.

கண்டகம் கோடு—பட்டயத்தைக்கொண்டு.

வேரறக் களைந்து தடிந்தனர்—நிருமூலமாகும்படி வெட்டி யெறிந்தார். (யார்?)

வன் கண்டகன்—கொடிய பசாசின் கழுத்தோடுகூடத் தலையை.

சிதைத்த செங்கமல பாதனர்—சுசுக்கிய தாமரை மலர்போன்ற திருவடியையுடைய ஸ்ரீ கிறிஸ்து பெருமான். எ—று.

## ஜீவபுஷ்கரிணிப் படலம்.

12. வனம் அடங்கலும்—காடு முழுவதும்.

போது அகம்—புஷ்பங்களுக் குறைவிடமாம்.

வரி அளி மருவும்—ஆகவே ரீங்காரஞ்செய்யும் வண்டுகள் நீங்காது வசிக்கும்.

வன மடங்கலும்—அழகிய சிங்கங்களும்.

போதகக் குருளையும்—யானைக் கன்றுகளும்.

மயங்கும்—விரோதமின்றி யுறவுபூண்டு வாழ்ந்திருக்கும்.

கனம் மடங்கு அல்உம் போது—மேகம்வந்து கவியும்பொழுது.

**கன மடம் கலும் (கல்லும்)**—மிகுதியான அறியாமையைக் கல்வி யெறியத்தக்க.

**போதகம் தரும் பலகாட்சி**—அவ்விடத்துள்ள பலவாகிய காட்சிகள் நல்ல போதனையைக் கொடுக்கும். எ—று.

அல்-சாரியை, உம்-அசை.

## மாயாபுரிப் படலம்.

46. **அம் கம் ஆம் மதவாரணத் தொனிபடுமெல்லால்**—அழகிய கருமேகம் போன்ற மதயானைகளின் பிளிற்றொலி செவி மடுப்பனவேயன்றி.

**அங்கம் மாமத ஆரணத் தொனிபடாது ஆக**—மெய்மார்க்க சாஸ்திரங்களினுடையவும் வேத பாராயணத்தினுடையவுந் தொனிகள் யாண்டுங் கேட்கப்படுவன அல்ல. அப்படியே,

**எங்கும் இல் ஒழுக்கு இகந்தன என்பதை யல்லால்**—எங்குமுள்ள வீடுகள் தாம் ஒழுக்கற்றிருப்பன வென்பதேயல்லாமல்.

**எங்கும் இல்லொழுக்கு இகந்தன இலை யென்பதிலை**—எவ்விடத்தும் இல்லற வொழுக்கமுறைமை யொழிந்தன வில்லையென்று சொல்லப்படுவதில்லை. எ—று. ஒழிந்தன வென்பதே துணிபு.

78. **ஆரணங்கு ஆட்டம் நாடி**—பேய்மகளிரையொத்த விலைமாதர் நட்டம் பயில்வதையே கருதிப்பார்த்து.

**அகங்குழைந் திருப்பார் யாண்டும்**—எப்பொழுது மனங்களித்திருப்பார். (அல்லாமல்,)

**ஆரணம் காட்ட நாடி**—(தங்களுடைய மோசமான நிலைமையை) மெய்வேதமெடுத்து விளக்கிக்காட்ட அவற்றை யாராய்ந்து.

**அகங்குழைந் திருப்பாரில்லர்**—மனந்திரும்பிக் கனிவுற்றிருப்பவர் அவ்விடத்து யாருமில்லர்.

**யாண்டும் தார் அணி தந்து அஞ்ஞானச் சனியனைப் பணிவார்**—எவ்விடத்தும் மாலைகளைப்போட்டு அஞ்ஞானமுள்ள சனியனாகிய விக்கிரகத்தை வணங்குவாரேயன்றி.

**தாரணி தந்த ஞான தம்பிரானைப் பணிவாரில்லர்**—உலகத்தையும் எல்லாப் பொருள்களையுஞ் சிருஷ்டித்துத் தந்த சர்வ ஞானமுள்ள கடவுளை யாண்டும் வணங்குவோரில்லர். எ—று.

82. **அந்நீள் கடைவீதி**—அந்த நீண்ட மாயக்கடைவீதி.

**படம் விரித்துப் பழிக்கஞ்சிடாது**—பணமகுடத்தை விரித்துப் பாதகத்துக்கொல்காமல்.

**பேருடல் கிடத்தி**—பெரிய தன்னுடலை நீட்டிக் கிடக்கி.



**ஆருயிர்க் கொள்ளைகொள் நெடிய பாந்தள்**—அருமையான பிராணனைக் கொள்ளைகொள்ளும் நீண்ட பெரும்பாம்புபோலும். எ—று.

கடைவீதிக்குப் படத்தைத் திரையென்றும், பேருடல் என்பதை இரண்டு சிறகுள்ள பெரிய தெருவென்றும், கொடுவிடமென்பதை நித்திய கேடு என்றுங் கொள்க.

83. **என்றிலங்க விலங்கெழில்வாய் நெகூஉ**—அருணோதயமானவுடனே விளங்குகின்ற அழகிய இதழ்களை யலர்த்தி.

**மன்றலர்ந்து**—பரிமளத்தைப் பரப்பி.

**அளி மொய்த்து**—வண்டுகளால் மொய்க்கப்பட்டு.

**மதுச்சொரிந்து**—தேனைச் சொரிந்து.

**ஒன்றுறாக் களிகாட்டலில்**—பொருந்தியபடி மனசுக்கு மகிழ்ச்சியைத் தருதலினாலே.

**ஒண்மறுகு**—துலக்கமுள்ள அந்த மாயக்கடைவீதி.

**அன்றலர்ந்த அநங்கடிமாலையே**—புதிதான நல்ல வாசனையுள்ள பூமாலை போலுமுள்ளது. எ—று.

கடைவீதிக்கு 'வாய்நெகூஉ' என்பதைக் கபாடந் திறவுண்டு எனவும், 'அளிமொய்த்து' என்பதைப் பிரீதியினாலே ஜனங்கள் கூடப்பெற்று எனவும், 'மதுச்சொரிந்து' என்பதைக் கள்ளைவார்த்து எனவும், 'களி' என்பதை வெறி எனவுங் கொள்க.

84. **திசைமுகம் திகழப் பொருள் செய்தலில்**—நான்கு திசையிலும் நான்குமுகந் திகழ வீற்றிருந்து, எல்லாப் பொருள்களையும் படைக்கின்ற தொழிலைச் செய்தலினால், பிரமாவையும்.

**வசையில் மாயை வாம்பறு பான்மையில்**—வசை மொழிகளாலும் அளவில்லாத கபடநாடகத்தினாலும், விஷ்ணுவையும்.

**நசைபிறங்க மன்று ஆடி நடித்தலில்**—விருப்பமுண்டாக அம்பலத்தில் ஆடி நடிப்பதினால், சிவனையும்.

**இசையும் அம்மறுகிந்து முத்தேவரை**—அந்த மாயக்கடைவீதி இந்துக்கள் வணங்கும் பிரமாதி தேவர்களை யொத்துளது. எ—று.

(1) கடைவீதிக்கு நான்கு திசைகளிலும் வியாபித்து இகழத்தக்க விதமாய்ப் பொருள்கூட்டு முயற்சி செய்தலினாலும், (2) அளவில்லாத வசையும், மாயமும் பொருந்தியிருக்கிற தன்மையினாலும், (3) கொள்வோருக்குப் பிரியமுண்டாக நயந்துபேசி வஞ்சிக்கிற விதத்தினாலும், முத்தேவரை யொத்துளது எனக் கொள்க.

## ஆனந்தசைலப் படலம்.

17. **நனிமிகு தருமம் நாடு அகம் மிளிர்வன**—அநேகமாக விதக்கப்பட்ட தருமங்கள் யாவும் திருநாட்டின்கண் விளங்குவன.

**நனிதோது மயில்கள் பொழில்வாய் நாடகம் மிளிர்வன**—சோலைப் புறங்களில் அநேகமாகக் கூடுகின்ற மயில்களின் நிருத்தனம் விளங்குவன.

**நளிர் இளவனசம் நாள்தக மிளிர்வன**—குளிர்ச்சியுள்ள புதிய தாமரைமலர் பிராதகாலந் தகவுபெற விளங்குவன. எ—று.

18. **கலைமாமதி வான் அரங்கு உதிக்கும்**—பூரண கலையுள்ள சிறந்த சந்திரன் ஆகாய அரங்கத்தில் உதயமாகும்.

**வானரம் தருமாச்சினை குதிக்கும்**—குரங்கு விருக்ஷங்களின் பெரிய கொம்புகளில் தாவித்தாவிக் குதித்து விளையாடும்.

**மலர்க்கடி வானர் அங்கம் மடுக்கும்**—புட்பகந்தம் பரலோக யாத்திரிகர் அங்கத்தில் அளைந்து பரிமளிக்கும்.

**மடஅனம் வான் அரங்கம் அடுக்கும்**—இளமையான அன்னப்பக்ஷிகள் தூய்மையான ஆற்றிடைக் குறையான மணல் திடர்களை அடுத்து வசிக்கும். எ—று.

19. **மா தருக் குலம் மல்குமலை**—மலையிலும் மலைசார்ந்த இடங்களிலும் ஜாதிஜாதியான பெரிய விருக்ஷங்கள் நிறைந்துநிற்கும்.

**குடிமாதருக்கு உலவா மனைமாட்சிமை**—நற்குண நற்செய்கையாகிய குடித்தனவொழுக்கம் அவ்வவ் கிராமங்களிலுள்ள குலமாதரிடத்து ஒழியாது நிலைத்துநிற்கும்.

**மாசறும் ஆடவர்**—திரிகரண சுத்தரான புருடர்.

**மா தருக்கு உலகு மாது வஞ்சமும் ஆதிய**—பெரிய அகங்காரத்தையும், உலக மயக்கத்தையும், பெண்ணாசையையும், பசாசுக்கேயுரிய கபடத்தையும், இவை முதலான துராசாரங்களை.

**அருக்குவர்**—தங்களிடத்து நெருங்கவொட்டாது தேய்த்துவிடுவர். எ—று.

'வஞ்சமும்' என்றதின் 'உம்மை' ஏனையவற்றோடுங் கூட்டிப் பொருளுரைக்கப்பட்டது.

20. **கொழும்பொழில் கோட்டுமாக் கிளை தூங்கும்**—கொழுமையுள்ள மலைஞ்சோலையிற் கொம்புள்ள மிருகஜாதிகள் தம்மினத்தோடு துயிலும்.

**கொழுங்கனி கோட்டு மாக்கிளை தூங்கும்**—நறுங்கனி வர்க்கங்கள் கவடுகளுள்ள பெரிய விருக்ஷங்களின் கொம்புகளிற் குலைகுலையாகத் தொங்கிக்கொண்டிருக்கும்.

**குளிர்புயல் கோட்டு மால்வரை தூங்கும்**—குளிர்ச்சியுள்ள கருமேகசாலங்கள் பெரிய பர்வத சிகரங்களிற் படிந்து கவிந்துகொண்டிருக்கும்.

**துளிர்மது கோட்டு மால்வரை தூங்கும்**—குளிர்ந்த மது பிந்துக்கள்



21. **மரின்**—மான்ஜாதியும்.

**மதம்படு**—மதத்தைச் சொரிகின்ற.

**மைவரை**—கரிய மலைபோன்ற யானைக்கூட்டங்களும்.

**கோளரி**—சிங்கத்திரளும்.

**மான்மதம்**—கஸ்தூரிவர்க்கமும்.

**படு**—பொருந்தியுள்ள.

**மைவரை வைப்பில்**—மேகம் படியும் அந்த ஆனந்த சைலப்பிரதேசத்தில்.

**நம்மரன் மதம்படு**—நம்முடைய கிறிஸ்துவின் மார்க்கத் தமைந்துள்ள.

**மைவரை மாதவர்**—குற்றமற்ற மெய்த்தொண்டர்.

**மரல்**—மயக்கத்தையும்.

**மதம்**—அகங்காரத்தையும்.

**படும்**—விளைவிக்கிற.

**ஐவரை**—ஐம்பொறிகளாகிய பகைவரை.

**வாட்டுவார்**—கெடுப்பார்கள். எ—று.

22. **ஓது இமக்குல நாள்மலர் ஓடையை**—பொற்றாமரையென்று சொல்லத்தக்க செந்தாமரைப் புஷ்பங்கள் அலர்ந்திருக்கின்ற கான்யாற்றோடைகளை.

**ஓதிமக் குலம் ஓகையில் நாடுவ**—அம்ஸப்பக்ஷிகள் குதுகலத்தோடு நாடித் தங்கும்.

**ஓதிமத்தகை ஒண்டவர்**—மலை முழைஞ்சுகளிற் றங்கியிருந்து, ஒள்ளிய தபசைச்செய்யும் மெய்த்திருத்தொண்டர்கள்.

**மா மறை ஓது**—மெய்ச்சுருதியை வாசித்துப் பாராயணஞ் செய்கின்ற.

**இமக்குடில் ஊடுற நாடுவார்**—பனியால் மிகக் குளிர்ந்துள்ள குடிசைகளில் வசிக்கும் ஏனைய தொண்டர் குழாத்தைச் சந்திக்க வருவார். எ—று.

23. **ஆய**—மேற்சொல்லப்பட்ட வகையாய.

**மாது அரண் இவரும் ஆடவர்**—விரும்பத்தக்க மலைசூழ்ந்த அந்தப் பிரதேசஸ்தருக்கு.

**ஆய**—உண்டாகிய:

**மா தரணி நிதிப்பேட்டியும்**—பெரிய பூஸ்திதியும், திரவியம் பொதிந்துவைத்திருக்கிற கருவூலமும்.

**ஆயமாதர் அணிகலப் பேழையும்**—மெய்ப்பருடைய ஸ்திரீஜாதிகளுக்குரிய பலவகையாய ஆபரணங்கள் நிறைந்துள்ள பெட்டகங்க

மா தரணீதான் ஆணையே—மகத்துவ அரசன் அருளிச்செய்த விதி விலக்குகளடங்கிய வேதமே. எ—று.

24. சந்த நந்தம் திகழுந் தடங்களில்—அழகிய சங்குகள் குழுமி விளங்குகின்ற மடுக்களிலும்.

சந்து அனந்தம் திகழ்தடம் சாரலில்—சந்தன விருக்ஷங்கள் அனந்தமாக விளங்குகின்ற பெரிய மலைச்சாரிலும்.

வந்து அல்நந்து அந்திமாலையுங் காலையும்—அம்மலைவாசிகள் வந்து இரவை வருவிக்கும் அஸ்தமனத்துக்கு முந்திய மாலைநேரத்தும் பிராதகாலத்தும்.

வந்தனம் தந்து இறைவனை வாழ்த்துவார்—பரலோகத்தரசனை நமஸ்கரித்து ஸ்தோத்திரஞ் செய்வார்கள். எ—று.

அர்த்தம் முற்றிற்று.

# அரும்பத அகராதி.

அ

அக்லிடம், பூமி.
அகிலம், உலகம்.
அகைத்தல், வேதனை.
அக்கரப்படை, அட்சரக்கருவி. (Tract).
அங்கண், அவ்விடம்.
அங்கனை, பெண்.
அங்காடி, கடைவீதி.
அங்காத்தல், வாய்திறத்தல்.
அங்கி, அக்கினி.
அங்குரித்தல், முளைத்தல்.
அசலம், மலை.
அசனி, இடி.
அச்சுதம், அழிவின்மை.
அச்சுவத்தம், அரசமரம்.
அச்சுறுத்தல், பயப்படுத்தல்.
அச்சோவே, அய்யாவே.
அஞர், துன்பம், வேதனை.
அஞ்சலித்தல், நமஸ்காரம், கைகு [வித்தல்.
அஞ்சனம், கறுப்பு, மை.
அடர்த்தி, நெருக்கம், செறிவு.
அடவி, காடு.
அடுக்கல், மலை.
அடுதல், கொல்லுதல், சமைத்தல்.
அணங்கு, வருத்தம், துன்பம்.
அணவுதல், அடுத்தல்.
அணை, மெத்தை.
[illegible]
அதலம், கீழுலகம்.
அதீதம், கடந்தது, எட்டாதது.
அதோகதி, நரகம்.
அதோமுகம், முகங்குப்புற.
அத்தினி, ஏவாள்.
அநித்தம், நிலையின்மை.
அநுட்டித்தல், ஆசரித்தல்.
அந்தக்கரணம், மனமுதலிய தத்து [வங்கள்.
அந்தரியாமி, கடவுள்.
அந்தோ, அய்யோ.
அபயாஸ்தம், அஞ்சலென்று குறிப் [பிடுங் கை.
அபராதி, குற்றவாளி.
அபாவம், எவ்விடத்தும், எக்காலத்தும் இல்லாமை.
அமரார், பகைவர்.
அமார்க்கம், கேட்டின்வழி
அமைதி, சமாதானம்.
அமையம், சமயம்.
அமோகம், மிகுதி, அபரிமிதம்.
அம், அழகு.
அம்பி, நாவாய், மரக்கலம்.
அம்மான், கடவுள்.
அயர்வு, சோர்வு, தளர்ச்சி.
அயிர்த்தல், சந்தேகித்தல்.
அயில், கூர்மை, வேல்.
அரக்கி, இராக்ஷஸி.
அரங்கம், அறைவீடு.
அரதனதீபம், இரத்தின தீபம்.

அரவிந்தம், தாமரை.
அரவுரி, பாம்புச் சட்டை.
அரிமுழை, சிங்கக்குகை.
அரியேறு, ஆண் சிங்கம்.
அரிவை, பெண்.
அருங்கலம், அரிய ஆபரணம்.
அருத்தி, ஆசை, ஊட்டி.
அருப்பு, அரும்பு.
அரோகாடவி, ஆரோக்கியவனம்.
அர்ப்பணம், உயர்ந்தோர்க்குக் கொ[டுத்தல்.
அலகிலா, அளவில்லாத.
அலகை, பிசாசு.
அலக்கண், துன்பம், வருத்தம்.
அலங்கல், பூமாலை, இலங்குதல்.
அலசாமே, வருந்தாமல்.
அலமந்து, வருந்தி.
அலர்தல், விரிதல்.
அல், இருள், இராத்திரி.
அவசம், ஸ்மரணையின்மை.
அவஸ்தை, துன்பம்.
அவண், அவ்விடம்.
அவதி, துன்பம்.
அவலம், அதைரியம்.
அவனி, பூமி.
அவா, ஆசை.
அவிர்தல், பிரகாசித்தல்.
அவித்தை, அஞ்ஞானம்.
அழிம்பு, பொல்லாங்கு.
அளக்கர், சமுத்திரம்.
அளவளவிய, கலந்த.
அளறு, சேறு.
அளி, வண்டு, கிருபை.
அறுவராய், அற்றுப்போனவரா
அற்றம், சமயம், மறைவு.
அனகன், பாபரஹிதன்.
அனந்தர், மயக்கம், தூக்கம்.
அனர்த்தம், துன்பம், இடுக்கண்.
அனவரதம், எப்போதும்.
அனுசாரம், தன்மார்க்கம்.
அன்னே, தாயே.

## ஆ

ஆகம், தேகம், மார்பு.
ஆகுலம், வருத்தம், ஓசை.
ஆக்கம், பெருக்கம், செல்வம்.
ஆசாடபூதி, மாறுவேஷக்காரன்.
ஆசி, ஆசிர்வாதம்.
ஆசு, குற்றம்.
ஆச்சிரமத்தர், இலைக்குடில்வாசிகள்
ஆச்சிரமம், நிலைமை.
ஆடி, கண்ணாடி.
ஆணவம், அகங்காரம்.
ஆணை, ஆக்கினை.
ஆதபன், சூரியன்.
ஆதரம், ஆசை, அன்பு.
ஆதித்தன், சூரியன்.
ஆதிமத்யாந்தரஹிதர், கடவுள்.
ஆதுலர், ஏழைகள்.
ஆத்தர், சிநேகிதர்.
ஆந்நிகம், நித்தியகருமம்.
ஆமலகம் (ஆமலம்), நெல்லிக்கனி.
ஆம்பி, கடற் காளான்.
ஆரணம், வேதம்.
ஆரணி, வேதவதி.



ஆரோபம், பொய்த்தோற்றம்.
ஆர்த்தி, ஆசை.
ஆர்ந்த, நிறைந்த.
ஆர்வம், ஆசை, அன்பு.
ஆலம், விஷம்.
ஆலுதல், அசைதல்.
ஆவணம், சாஸனம், கைச்சாத்து.
ஆளரியேறு, சிங்கம்.
ஆழி, சமுத்திரம், சக்கரம்.
ஆறு, வழி.
ஆற்றல், வல்லமை, செயல்.
ஆனனம், முகம்.
ஆனாத, கெடாத.
ஆன்றோய், பெரியோய்.
ஆன்ற, மிகுத்த.

## இ

இகத்தல், கடத்தல், மீறுதல்.
இகபரசந்தி, மரண சமயம்.
இகம், இம்மை, இவ்வுலகம்.
இகலி, பகைத்து, போராடி.
இச்சகம், முகஸ்துதி.
இஞ்சை, வருத்துதல்.
இட்டிகை, கட்டளை, அச்சு.
இணர், பூங்கொத்து.
இதழ், பூவிதழ், உதடு.
இதிகாசம், கதை.
இந்தியங்கள், விடையங்களை யுட்கொள்ளும் பொறிகள்.
இந்து, சந்திரன்.
இப்பி, சிப்பி.
இமம், பனி.
இமிர்தல், ஒலித்தல்.
இயலறம், இயற்கைப்பிரமாணம்.
இரங்கல், இரங்குதல், ஒலித்தல், பி
இரட்டுதல், ஓசைப்படுத்தல்.
இரவி, சூரியன்.
இரிந்து, சிதறி, ஓடி.
இருமை, இம்மை - மறுமை, பெரு[மை.
இலக்கம், இலட்சம்.
இலக்கணை, போலி.
இவர்தல், மேற்கொள்ளுதல்.
இவ்வுழை, இவ்விடம்.
இழிதல், இறங்குதல்.
இழுக்கு, தவறு.
இறால், தேன்கூடு.
இறுதி, முடிவு.
இறுத்தல், சேர்தல்.
இறும்பு, சிறுமலை.
இறை, வரி, தீர்வை, கொஞ்சம்.
இற்றிது, இத்தன்மைத்து.
இனன், சூரியன்.
இன்னல், துன்பம்.
இன்னே, இப்பொழுதே.

## ஈ

ஈசோப்பு, ஓர் பூண்டு.
ஈடணை, உலகப்பற்று.
ஈட்டல், சம்பாதித்தல்.
ஈமம், இடுகாடு.
ஈர்த்தல், இழுத்தல்.
ஈறில், முடிவில்லாத.

## உ

உகாந்தம், உலகமுடிவு.
உகுதல், சிதறுதல்.
உகைத்தல், எழுதல்.
உசாவுதல், வினவுதல்.
உசுவாசம், சுவாசம் விடுதல்.

உஞற்றுதல், செய்தல்.
உஞ்சனன், பிழைத்தேன்.
உடற்றல், வருத்துதல்.
உணங்கி, உலர்ந்து, வாடி.
உதகம், ஜலம்.
உததி, சமுத்திரம்.
உந்துதல், தள்ளுதல்.
உபாதி, துன்பம், சஞ்சலம்.
உயங்கல், வாடல், மனந்தளரல்.
உய்த்துணர்ந்து, ஊகித்தறிந்து.
உய்யானம், பூந்தோட்டம்.
உருக்கு, மனஸை உருக்குகின்ற.
உருமு, இடி.
உலப்பில், முடிவில்லாத, சாவில்லாத.
உலம், தூண்.
உலர்தல், காய்தல், விடாய்த்தல்.
உலவை, காற்று.
உவகை, மகிழ்ச்சி.
உவரி, சமுத்திரம்.
உவர்த்தல், வெறுத்தல்.
உழத்தல், அநுபவித்தல்.
உழுவல், தொடர்புபற்றிய அன்பு.
உழையர், வேலையாட்கள்.
உளக்கரி, மனச்சாட்சி.
உளர்தல், தடவுதல், மீட்டுதல்.
உள்ளல், நினைத்தல்.
உறுகண், துன்பம்.
உறையுள், வீடு, வசிப்பிடம்.
உற்பவம், பிறப்பு.
உன்மத்தம், பைத்தியம்.

ஊ

ஊக்கல், மேற்கொள்ளல்.
ஊதியம், இலாபம்.
ஊழி, முடிவு.
ஊற்றம், பலம்.
ஊனம், குற்றம்.

எ

எஞ்சுதல், குறைவுபடுதல்.
எட்பகவு, எள்ளின்பிளவு.
எம்பி, தம்பி.
எம்மோய், என் தாய்.
எயிறு, பல்.
எல், பகல், சூரியன்.
எல்லோன், சூரியன்.
எல்லை, சமயம், வேளை.
எழால், யாழ்நரம்பின் ஓசை.
எழிலி, மேகம்.
எழில், அழகு.
எள்ளுதல், இகழுதல்.
எற்று, எத்தன்மைத்து.
என்கோ, என்கவோ.
என்று, சூரியன்.

ஏ

ஏதம், குற்றம்.
ஏதி, ஆயுதம்.
ஏம்பல், களிப்பு, மகிழ்ச்சி.
ஏமம், காவல்.
ஏய்தல், பொருந்தல்.
ஏர், அழகு.
ஏவம், குற்றம்.
ஏனவர், மற்றவர்.
ஏன்று, ஏற்பட்டு.

ஐ

ஐ, கபம், சிலேத்துமம்.



ஒ

ஒக்கல், சுற்றத்தார்.
ஒண்டவன், மெய்த்தபசி.
ஒண்ணெறி, விளக்கமான வழி.
ஒய், விரைவுக் குறிப்பு.
ஒருங்க, கெட.
ஒருங்கு, முழுக்கவும்.
ஒருசார், ஒருபக்கம்.
ஒருத்துவம், ஒருதத்துவம்.
ஒருப்படல், துணிதல், ஒருமனமாதல்.
ஒல்குதல், அஞ்சுதல், வெட்கல்.
ஒல்லுதல், கூடுதல்.
ஒல்லை, சீக்கிரம், உடனே.
ஒவ்வ, ஒப்ப.
ஒள்ளியோய், மெய்யறிவுடையோய்.
ஒறுத்தல், தண்டித்தல்.
ஒன்றுதல், பொருந்துதல்.
ஒன்னலார், பகைவர்.

ஓ

ஓகை, சந்தோஷம், மகிழ்ச்சி.
ஓதிமம், அன்னப்பக்ஷி.
ஓம்படை, அடைக்கலம்.
ஓம்பல், காப்பாற்றுதல்.
ஓரிவர், ஒப்பற்ற இவர்.
ஓரை, வேளை.
ஓலிடூஉ, முறையிட்டு.
ஓவில், இடைவிடாத.

ஔ

ஔவியம், பொறாமை.

க

ககனம், ஆகாயம்.
ககோளம், ஆகாயகோளம்.
கஞ்சம், தாமரை.
கடம், குடம்.
கடா, வினா.
கடாசலம், மதயானை.
கடி, காவல்-அரண்-வாசனை-பிசாசு.
கடிப்பு, பறையடிக்கும் கோல்.
கடு, விஷம்.
கடுத்தழை, வேப்பிலை.
கடுப்ப, ஒப்ப.
கட்கம், வாள்.
கணம், கூட்டம்.
கண்கலுழி, கண்ணீர்.
கண்டகன், பொல்லாதவன்.
கண்ணிய, தொடுத்த, சேர்ந்த, அரும்பிய.
கண்ணிலான், தாக்ஷிணிய மில்லாதவன்.
கண்ணுறல், காண்டல்.
கண்படை, தூக்கம்.
கதழ்வு, வேகம்.
கதுமென, விரைவாக.
கத்துருத்துவம், கருத்தத்துவம்.
கந்தை, பீறல் (ஸ்வயரீதி.)
கபாடம், கதவு.
கபாடபந்தனம், கதவடைத்தல்.
கப்படி, இருபிளவானகால்.
கமை, பொறுமை.
கயம், யானை.
கரகம், ஜலபாத்திரம்.
கரணம், தொழிற்படுகருவி.
கரத்தல், ஒளித்தல், மறைதல்.
கரந்து, மறைந்து.
கரு, உற்பத்திமூலம்.
கலித்தல், ஒலித்தல்.

கல்லளைச்சுனை, மலையிற் சுரக்கும் ஊற்று.
கல்லுதல், கிள்ளுதல்.
கவிகை, குடை.
கவின், அழகு.
கவ்வை, ஓசை.
கழகம், கூடுமிடம்.
கழங்கு, பந்து.
கழனி, வயல்.
கழிதுயர், மிகுத்த துன்பம்.
கழை, மூங்கில், கரும்பு.
களப்பறை, போர்ப்பறை.
களர்நிலம், உவர்நிலம்.
களைகண், ஆதாரம்
கள்ளுநர், கள்வர்.
கறங்கு, காற்றாடி, சுழற்சி.
கறவை, பாற்பசு.
கறித்தல், தின்னுதல்.
கறை, களங்கம்.
கற்பணி, கற்பாகிய அணி.
கற்பிதம், பொய்.
கனன்று, கோபித்து.
கன்னல், நாழிகை, சர்க்கரை, கரும்பு.

கா

காகளம், எக்காளம்.
காசில், குற்றமற்ற.
காசினி, உலகம்.
காதகன், கொலையாளி.
காதறை, காதறுபட்டவன்.
காமர், அழகிய.
காமித்து, விரும்பி.
காயம், தேகம்.
காய்தல், கோபித்தல்.
காலத்திரயம், மூன்றுகாலம்.
காலுதல், கக்குதல்.
காவணம், பந்தல்.
காவதம், காதம்.
காவனம், சோலைக்காடு.
காளரி, கறுத்தமேகம்.
கானம், காடு.
கானாடு (கான் + நாடு), வாசனை பொருந்திய

கி

கிருபாஸ்தம், கிருபைத்திருக்கரம்.
கிளக்கல், சொல்லுதல்.
கிளர்தல், விளங்குதல், எழுச்சி.
கிளவி, சொல்.
கிளை, கொம்பு.

கீ

கீண்டு, பிளந்து.

கு

குசோத்தியம், தந்திரம்.
குச்சிதன், அருவருக்கத்தக்கவன்.
குஞ்சரம், யானை.
குடைதல், நீராடுதல், மொள்ளுதல்.
குணக்கு, கிழக்கு.
குணித்தல், கணித்தல்.
குணுங்கர், பைசாசத்தலைவர்.
குதுகலம், மிகுமகிழ்ச்சி.
குத்திரை, வஞ்சகி.
கும்பி, நரகம்.
குயிலுதல், அழுத்துதல், ஆக்குதல்.
குரவர், குருமார்.
குரிசில், இராஜகுமாரன்.
குலீனர், கீழ்குலத்தார்.
குழுமி, கூடி.



குளிறுதல், முழங்குதல்.
குன்றுதல், குறைவுபடுதல்.

கூ

கூம்பு, பாய்மரம்.
கூர்த்திகை, ஆயுதம்.
கூவல், கிணறு.
கூவிளிக்கொளல், உரத்துக்கூப்பிடுதல்.
கூற்று, சொல்.

கே

கேகயம், மயில், அசுணப்புள்.
கேவலர், மோக்ஷபிரயாணிகள்.

கை

கைங்கரியம், செய்கை.
கைதவர், வஞ்சகர்.
கைபுனைதல், அலங்காரஞ் செய்தல்.
கைமாறு, பிரதியுபகாரம்.
கையடை, அடைக்கலம்.
கைவருதல், பலிதமாதல்.
கைவல்லியம், மோக்ஷம்.
கைவைத்து, பிடித்து.

கொ

கொங்கு, வாசனை, மணம்.
கொடுமுடி, மலையுச்சி.
கொண்டல், மேகம்.
கொண்மூ, மேகம்.
கொந்திருள், செறிந்து திரண்ட இருள்.
கொன்னே, வீணே.

கோ

கோகிலம், குயில்.
கோசரம், விடயம், தீக்ஷணம்.
கோடல், கோணுதல்.
கோட்டம், கோணுதல்.
கோட்டி, சபை.
கோட்டுதல், எழுதுதல், தீட்டுதல்.
கோமளம், இளமை.
கோரம், கொடுமை, அச்சம்.
கோலுதல், வளைதல்.
கோளரி, சிங்கம்.
கோறும்வகை, கொல்லும்வகை.

ச

சகஸ்திரம், ஆயிரம்.
சங்கல்பம், நினைவு, தீர்மானம்.
சச்சிதானந்தப்பொருள், கடவுள்.
சஞ்சிதம், வினைத்தொடர்பு.
சஞ்சீவிதம், மாண்டாரை யுயிர்ப்பிக்குமருந்து.
ஜடவியோகம், தேகத்தை விடுதல்.
சதம், நூறு.
சதா, எப்பொழுதும்.
சதி, மோசம்.
சதுரர், புத்திமான்கள்.
சத்து, மூன்றுகாலத்துமுள்ளது.
சத்திரம், ஆயுதப்பொது.
சந்ததம், எப்பொழுதும்.
சமாஹிதர், சமமில்லாதவர்.
சமர்ப்பணம், உயர்ந்தோர்க்குக் கொடுத்தல்.
சமழ்த்தல், வருத்தல்.
சமிக்கை, சைகை.
சமூகம், கூட்டம்.
சரம், இயங்கியற்பொருள்.
சரளம், ஒழுங்கு.
சரோருகம், தாமரை.
சவி, ஒளி.

சற்போதர், ஞானகுரு, மெய்யறிவு
டையோர்.

சா

சாகம், கிளை.
சாகரம், சமுத்திரம்.
சாகை, கிளை.
சாதகம், பயிற்சி—பிசாசு.
சாதன சதுஷ்கம், நாலுகாரணமுள்
சாபம், வில், சாபம். [ளவை.
சாபல்லியம், பலனடைதல்.
சாமியம், ஒப்பு, உபமானம்.
சாமீபம், சந்நிதியிலிருக்கப் பெறும்
முத்தி.
சாம்பிராஜ்ஜியம், சக்கரவர்த்தித்தன்
மை, மேலானபதவி.
சாயகம், அம்பு, பாணம்.
சாரல், மலைப்பக்கம்.
சாலி, நெற்பயிர்.
சாளரம், பலகணி.
சான்று, சாட்சி.

சி

சிச்சீ, இகழ்ச்சிக்குறிப்பு.
சிட்டர், உத்தமர்.
சிதடர், அறிவீனர், குருடர்.
சிதைத்தல், அழித்தல், கெடுத்தல்.
சித்து, விளங்கக்கூடிய பொருள்.
சிந்தை, எண்ணம், கவலை.
சிந்தாமணி, சிந்தித்ததைத்தரும் இரத்
சிமயம், மலையுச்சி. [தினம்.
சிலதியர், பணிவிடைப்பெண்கள்.
சிலீமுகம், பாணம்.
சிலை, வில், ஒலி.
ஜீவலயம், மரணம்.
ஜீவன் முக்தர், பரம ஞானிகள்.
சிவை, கொல்லன் உலைமூக்கு.
சிறை, இடம், மறியல்.
சிற்குணாலயர், சத்குண உறைவிட
மானவர்.
சிற்சுகம், பரமசுகம்.

சீ

சீத்து, தள்ளி, வெறுத்து.
சீயம், சிங்கம்.
சீலம், குணம், ஒழுக்கம்.

சு

சுகிர்தம், நற்கிரியை.
சுடருலகு, பரலோகம்.
சுண்ணம், நீறு.
சுதை, நீறு.
சுயம்பு, தானாயிருத்தல்.
சுரகணம், தேவகூட்டம்.
சுரிகை, வாள்.
சுருங்கை, நுழைவாயில்.
சுருதி, வேதம்.
சுரும்பு, வண்டு.
சுபாவேச்சை, தேகசுபாவ இச்சை.
சுப்பிரம், ஒளி. [பிரசங்கம்.
சுப்பிரசங்கம், வெண்சங்கு—நல்ல
சுமதி, விவேகி, நற்புத்தி.
சுலவுதல், சுழலுதல்.
சுவானை, தேகவுணர்ச்சி.
சுனை, நீரூற்று.

சூ

சூகரம், பன்றி. [சம்.



சூழல், இடம்.
சூழ்ச்சி, யோசனை.

செ

செகுத்தல், கொல்லுதல்.
செக்கர், அந்திவானம்.
செஞ்சுடர், சூரியன்.
செஞ்செவே, நேரே.
செண்டுவிடுதல், வட்டமிடுதல்.
செந்நெறி, நேர்வழி.
செம்மணி, மாணிக்கம்.
செம்மல், இராஜகுமாரன்.
செருக்கு, அகங்காரம்.
செருமி, நிறைந்து.
செவிலி, வளர்க்குந்தாய்.
செவ்வி, அழகு, சமயம்.
செவ்வே, நேரே.
செறிவு, அடக்கம், நெருக்கம்.
செறுத்து, தடுத்து.
செறுநர், பகைவர்.

சே

சேக்கை, படுக்கையிடம், படுக்கை.
சேண், ஆகாயம்.
சேதாம்பல், குமுதம், அரக்காம்பல்.
சேத்திரம், நிலம்.
சேப்ப, சிவக்க.
சேமித்தல், புதைத்தல்.
சேயொளி, சிவந்த ஒளி.
சேவை, தரிசனம், சேவித்தல்.
சேறி, போ.

சை

சைதந்யம், பரமஞானம், சேதனவ
[ஸ்து.

சோ

சோகம், தளர்ச்சி.
சோடசம், பதினாறு.

ஞா

ஞாயிறு, சூரியன்.

ஞே

ஞேயம், விஷயம்.

த

தசும்பு, பொற்குடம்.
தடம், வழி, பாதை.
தடக்கை, பெரியகை.
தடி, மின்னல்.
தடித்தல், உருவாதல், ரூபிகரித்தல்,
மின்னுதல்.
தணத்தல், தள்ளுதல்.
தணவாத, நீங்காத.
தண்டலை, விருட்சம், சோலை.
தண்ணளி, கிருபை.
தபுதல், கெடுதல்.
தபோதனர், திருத்தொண்டர்.
தமரம், ஓசை.
தமர், சுற்றத்தார்.
தமியேன், அகதியாகிய நான்.
தயங்குதல், விளங்குதல்.
தயோர்ச்சிதன், மிகுந்த கிருபையுள்
தரணி, சூரியன். [ளவன்.
தரணிபன், அரசன்.
தரளம், முத்து.
தராதலம், பூமி.
தராபதி, அரசன்.
தரியலர், பகைவர்.
தரு, விருட்சம்.
தருக்கு, அகங்காரம்.

தரும ஆழி, தரும சக்கரம்.
தவளம், வெண்மை.
தவா, கெடாத.
தழங்கல், ஒலித்தல்.
தளவு, முல்லை.
தளை, விலங்கு.
தறி, தூண்.
தறுகண், அஞ்சாமை.
தனதன், திரவியஸ்தன்.
தனக்கொடி, பணக்கொடி.
தனி, ஒப்பற்ற.
தனிதம், விடாப்பெய்ச்சல், சோனை.
தனு, தேகம், வில்.
தனையன், புதல்வன்.

தா

தாது, புஷ்பராகம்.
தாபம், அதி உஷ்ணம்.
தாபிதம், உஷ்ணம்.
தாரகாபதி, சந்திரன்.
தாரகை, நட்சத்திரம்.
தாரம், மனைவி.
தாரை, இடைவிடாத ஒழுக்கு.
தாலு, நாவு.
தாவில், கெடுதலில்லாத.
தாழ்த்தல், தாமதித்தல்.
தாறு, குலை.
தானம், பூமி.

தி

திகழ்தல், விளங்குதல்.
திகாந்தம், திசைகளின் முடிவு.
திகிரி, சக்கராயுதம்.
திக்குபந்தனம், திசைக்கட்டு.
திங்கள், சந்திரன்.
திட்பம், அசைவின்மை, பலம்.
திந்திருணி, புளியமரம்.
திமிராரி, சூரியன்.
திரிகரணம், மனம்-வாக்கு-காயம்.
திருகுதல், மாறுபடுதல்.
திருமுதல், திரும்புதல்.
திருவோலக்கம், திருச்சமுகம்.
திவள், ததும்புதல், துவளுதல்.
திறம்புதல், தவறுதல்.
தினகரன், சூரியன்.

தீ

தீக்கை, ஞானஸ்நானம்.
தீரம், கரை.
தீர்த்தன், கடவுள்.
தீர்த்திகை, தீர்த்தம்.
தீனதயாளர், பலவீனருக்கு இரக்கஞ் செய்கிறவர்.

து

துங்கம், உயர்ச்சி.
துஞ்சுதல், தூங்குதல், ஒய்தல்.
துணிக்கை, துண்டு.
துணிபு, நிச்சயம்.
துதைதல், நெருங்குதல், செறிதல்.
துமித்தல், கொல்லுதல்.
துப்பு, வலிமை-பரிசுத்தம்-பவளம்.
துயல்வரல், அசைதல்.
துய்த்தல், புசித்தல்.
துரிசு, குற்றம்.
துரியம், உயர்ச்சி.
துருக்கம், மலைமேற் கோட்டை.
துருவமீன், வடதுருவ நட்சத்திரம்.
துருவை, செம்மறியாடு.
[illegible]



துவர், பவழம்.
துவனி, சப்தம்.
துவன்றி, நெருங்கி.
துழனி, ஓசை.
துளங்கல், அசைதல்.
துற்றி, நெருங்கி.
துனி, வருத்தம், கோபம்.
துனை, நெருக்கம், விரைவு.
துஜம், கொடி.

தூ

தூணம், தூண்.
தூமம், புகை.
தூம்பு, ஜலதாரை.
தூர்த்தன், பொல்லாதவன்.

தெ

தெண்ணீர், தெளிந்தநீர்.
தெம், பகை.
தெருமரல், சுழலல், மயங்கல்.
தெருள்பு, தெளிவு.
தெவ்வர், பகைவர்.
தெளித்தனர், கூவினர்.
தெறுதல், சிதைத்தல், கொல்லுதல்.
தெற்றென, தெளிவாக, விரைவாக.

தே

தேக்குதல், நிறைக்குதல்.
தேசிகன், குரு.
தேசு, ஒளி.
தேம்படு, மதுரமான.
தேறல், தேன்.

தொ

தொகுதி, திரள், கூட்டம்.
தொடர், சங்கிலி.
தொடுகடல், இணைந்தகடல்.
தொடுதல், தோண்டுதல்.
தொடை, பூமாலை.
தொந்தம், தொடர்பு.
தொன்மை, தொல்லை, பழமை.
தொறுவர், இடையர்.

தோ

தோயம், ஜலம்.
தோன்றல், புத்திரன்.

ந

நசை, விருப்பம்.
நச்சுதல், விரும்புதல்.
நடம் நவின்று, நிர்த்தனஞ்செய்து.
நடலை, வஞ்சனை.
நடுநிலை, உண்மை, நியாயம்.
நந்தல், கேடு, ஆக்கம்.
நமராங்காள், நம்மவர்களே.
நரந்தம், கஸ்தூரி, நாரத்தை.
நராந்தகர், கூற்றுவர்.
நல்குரவு, தரித்திரம்.
நவை, குற்றம்.
நளி, குளிர்ச்சி.
நள்ளுநர், சிநேகிதர்.
நறு, நல்ல.
நறுவிரை, நல்வாசனை.
நனை, அரும்பு.

நா

நாகம், ஆகாயம்-பாம்பு-புன்னை-மரம்-மலை.
நாகதலம், சுவர்க்கலோகம்.
நாடல், நினைத்தல், தேடுதல், அடுத்

நாந்தகம், வாள்.
நாப்பண், நடு, மத்தி.
நாரி, பெண்.
நால்வாய், துதிக்கை.

நி

நிகிலம், எல்லாம்.
நிசுவாசம், சுவாசமடங்கல்.
நிச்சலும், நாள்தோறும்.
நிஷ்களம், களங்கமின்மை.
நிண்ணயம், உண்மை, தீர்மானம்.
நித்திலம், முத்து.
நியமனம், ஏற்பாடு.
நிரந்தரம், எப்பொழுதும்.
நிருமித்த, ஏற்படுத்திய.
நிருவிசாரம், ஓர் ஊர்.
நிரையம், நரகம்.
நிலவுதல், விளங்குதல்.
நிவிர்த்தன், துறவி.
நிறுவுதல், நிலைப்படுத்தல், நிறுத்தல்.

நீ

நீத்தம், பெருக்கம், வெள்ளம்.
நீத்தல், தள்ளுதல்.
நீர்மை, குணம்.

நெ

நெக்குவிட்டு, கட்டுவிட்டு.

நே

நேர்தல், ஒப்பாதல்.

நை

நைதல், துன்பமடைதல்.

நோ

நோதக, வருந்த.
நோன்மை, தவம், வலிமை.

ப

பகழி, அம்பு.
பகன்றை, மணமில்லாத ஓர் பூச்செ
பசுவாசனை, ஜீவப்பழக்கம். [டி.
பஞ்சரம், கூடு.
படப்பை, நாடு.
படர், துன்பம்.
படலம், பரப்பான திரட்சி.
படாம், போர்வைத்துகில்.
படி, பூமி, உலகம்.
படிந்த, கவிந்த.
படிவம், வடிவம்.
படுக்கும், கெடுக்கின்ற.
படைக்கலம், ஆயுதம்.
பணாமுடி, பாம்பின்படம்.
பணி, வேலை.
பண்ணவர், தேவர்.
பண்ணை, வயல்.
பதங்கம், விட்டில்.
பதங்கன், சூரியன்.
பதடி, பதர்.
பதம், பதவி.
பத்தி, வரிசை.
பந்தம், பாவக்கட்டு.
பம்புதல், நெருங்குதல்.
பயன், பால், பிரயோசனம்.
பரம், சுமை.
பரமார்த்தம், உண்மை.
பரல், சரற்கல்.



பரிசு, தன்மை.
பரிதி, சூரியன்.
பரித்தல், தாங்குதல்.
பரித்தியாகம், முழுவதும்கொடுத்து
விடல்.
பருகல், ஜலபானம் பண்ணல்.
பருவரல், துன்பம்.
பல்குக, பெரு...
பல்...ண்டு, பலவருஷங்கள்.
பல்லியம், பலவாச்சியங்கள்.
பவஞ்சம், பிரபஞ்சம்.
பவித்திரம், பரிசுத்தம்.
பழங்கண், துன்பம்.
பழநறை, பழரசம், தேன்.
பழிச்சல், துதித்தல்.
பழுவம், காடு.
பள்ளநீர், சமுத்திரம்.
பள்ளி, படுக்கையிடம், கோவில்.
பனவர், முனிவர், தேவர், குருமார்.
பனவன், வேதபாராயணன்.
பனித்தல், நடுக்குதல்.
பனுவல், நூல்.
பன்னகசாலை, இலையால் வேய்ந்த
பன்னுதல், சொல்லுதல். [சாலை.

பா

பாகு, சர்க்கரைப்பாகு.
பாங்கர், பக்கம்.
பாங்கு, பக்கம்.
பாசம், பாசி, தீவினை.
பாசறை, படைவீடு.
பாசுரம், பாட்டு, நூல்.
பாட்டளி, பாடுகின்ற வண்டு.
பாதவம், விருக்ஷம்.
பாந்தள், மலைம்பாம்பு.
பாமரன், மூடன்.
பாயல், மெத்தை.
பாயொளி, பரவிய பிரகாசம்.
பாரிசம், பக்கம்.
பாரிடம், பிசாசு.
பாரித்தல், அதிகமாகப் பேசுதல்.
பாலது, தன்மையது.
பாலனம், சமரக்ஷணை.
பாலித்தல், அருளுதல்.
பாலை, பாலைக்காடு.
பாழியம்புவி, பெரியவுலகம்.
பாறிட, பின்வாங்க.
பானு, சூரியன்.
பான்மை, தன்மை.

பி

பிச்சு, பித்து.
பிடர்ப்புறம், பிடரிப்பக்கம்.
பிணி, கட்டு.
பிதற்றுதல், உழறுதல்.
பித்தளை, மயக்கங்கொண்ட.
பித்தி, சுவர்.
பிரணவம், மூலம்.
பிரமை, பயித்தியம்.
பிராந்தி, மயக்கம்.
பிலம், பாதாளவழி.
பிழம்பு, செறிவு, திரள்.
பிறங்கல், மலை, விளங்கல்.

பு

புகல், அடைக்கலம்.
புங்கவன், அறிவிலுயர்ந்தோன்.
புஷ்கரிணி, தடாகம்.
புடவி, உலகம்.

புடைத்தல், அடித்தல்.
புட்டில், அம்புக் கூடு.
புணரி, சமுத்திரம்.
புணர்ப்பு, செய்கை.
புணை, மிதப்பு, மரக்கலம்.
புதர், செடி.
புதுமை, ஆச்சரியம்.
புத்தேளிர், தேவர்.
புநருலகம், மறுவுலகம்.
புந்தி, புத்தி, புதன்கிழமை.
புரத்தல், இரட்சித்தல்.
புரவலன், அரசன்.
புராதனம், பழமை.
புரிசை, கோட்டை.
புரை, குற்றம்.
புலக்கண், அறிவின்கண்.
புலங்கொள, அறிந்துகொள்ளும்படி.
புலம், வயல்-அறிவு-இடம்.
புலமைத்து, அறிவினையுடையது.
புலரி, சூரியன்.
புலர்தல், உலர்தல்.
புலவர், தேவர்.
புலன், சுவை-ஒளி-ஊறு-ஓசை-நாற்றம்.
புலை, நீசத்தனம்.
புல்லுக, பொருந்த.
புல்லல், தழுவல்.
புல்லிது, அற்பமானது.
புவனபோகம், உலக அநுபவங்கள்.
புள், பறவை.
புற்கணம், புலிக்கூட்டம்.
புற்புதசாலம், நீர்க்குமிழித்திரள்.
புனிதம், பரிசுத்தம்.

பூ

பூகம், கமுகமரம்.
பூதரம், மலை.
பூத்தல், உண்டாதல்.
பூராயம், இரகசியம்.
பூரியன், கீழ்மகன், அறிவீனன்.
பூவணம, ...ல்லநிறமுள்ள பூ.
பூவை, நாகணவாய்ப்புள்.
பூளை, கண்ணுப்பூளை, பஞ்சு.

பெ

பெட்பு, விருப்பம்.
பெம்மான், பெருமான்.
பெற்றி, தன்மை.

பே

பேதுறல், மயங்கல்.

பை

பைங்கழை, பசுமையான மூங்கில்.

பொ

பொங்கர், சோலை.
பொதும்பர், சோலை.
பொதுவில், சபையில்.
பொதுளல், நெருங்கல்.
பொருப்பு, மலை.
பொலங்கெழு, அழகுமிகுத்த.
பொறி, மெய்-வாய்-கண்-மூக்கு-செவி.
பொறித்து, எழுதி.
பொற்பு, அழகு.

போ

போதம், அறிவு.
போதர, போதலைச்செய்ய.



போழ்தல், பிளத்தல்.
போனகம், ஆகாரம்.

பௌ

பௌதிகம், பூதங்களாலாயசிருஷ்டி.
பௌமன், பூமியாளுவோன்.

ம

மகோததி, சமுத்திரம்.
மங்குல், மேகம்.
மஞ்ஞை, மயில்.
மஞ்சன், புத்திரன்.
மஞ்சு, மேகம், வலிமை.
மடங்கல், சிங்கம்.
மடம், அறியாமை, இளமை.
மடி, சோம்பல்.
மடு, குளம்.
மட்டு, தேன்.
மண்ணி, கழுவி.
மதிவிளக்கு, புத்தியாகியதீபம்.
மதுகை, வலிமை.
மம்மர், மயக்கம்.
மரபு, முறைமை.
மருங்கு, சுற்றம், பக்கம்.
மருட்டுதல், மயக்குதல்.
மருத்து, காற்று.
மருமலி, வாசனைமிகுத்த.
மருள், மயக்கம்.
மலினம், அழுக்கு.
மலோததி, நரகம்.
மல், வளம், வலி, அழகு.
மல்குக, நிறைய.
மல்லல், வளம்.
மறம், கொடுமை, பாபம்.
மறுகு, வீதி.
மனைக்கிழத்தி, மனைவி.
மனோக்கியம், மனமகிழ்ச்சி, மனதுக்கிசைந்த.
மன்பதை, ஜனங்கள்.
மன்பொதுத்தந்தை, கடவுள்.
மன்றல், வாசனை, மங்களம்.
மன்னுதல், நிலைபெறுதல்.

மா

மா, மிருகம், பெருமை.
மாசுணம், சர்ப்பம், மலைம்பாம்பு.
மாடகம், பிரடை, முறுக்காணி.
மாண், மாட்சிமையான.
மாதவப்பள்ளி, கோவில்.
மாதவி, குருக்கத்திமரம், தவப்பெண்.
மாதிரம், திக்கு, ஆகாயம்.
மாந்தி, புசித்து.
மாரிசம், கள்ளத்தனம்.
மாருதம், காற்று.
மால், மயக்கம், பெருமை.
மாழாத்தல், வருந்துதல்.
மாறு, பகை.
மாற்றோய், பகைவனே.
மானதவிழி, அகக்கண்.
மானும், போலும்.
மான்மியம், மகத்துவம்.

மி

மிகை, குற்றம்.
மிடறு, தொண்டை, குரல்வளை.
மிடுக்கு, பலம்.
மிடைதல், நெருங்குதல்.

மித்துருத்துவம், சிநேகம்.
மிருத்திகேயன், ஆதாம்.
மிருத்து, மரணம்.
மிளிர்தல், பிரகாசித்தல்.

### மீ

மீ, மேல்.
மீன், நட்சத்திரம், மீன்.

### மு

முகில், மேகம்.
முசலாக்கிரம், உலக்கைநுனி.
முடங்குதாள், முழங்கால், வளைந்த [வேர்.
முடங்குளை, சிங்கம்.
முட்புறக்கனி, பலாப்பழம்.
முதுசுருதி, பழமையான வேதம்.
முத்தமிழ், இயல்–இசை–நாடகம்.
முப்பகை, உலகம்-பசாசு-துரிச்சை.
மும்மலம், முக்குற்றம், அவை: காமம்-வெகுளி-மயக்கம்.
முயங்குதல், கூடுதல்.
முருகு, தேன்–இளமை–வாசனை.
முருந்து, மயில்தட்டை.
முறம், சுளகு.
முறை, நீதி, ஒழுங்கு, புத்தகம்.
முறைப்பாடு, ஜெபம்.
முனிவு, வெறுப்பு, கோபம்.
முனைவன், கடவுள்.
முன்றில், முற்றம்.

### மூ

மூசல், மொய்த்திடல்.
மூரல், பல்.
மூவாத, கெடாத.

### மெ

மெய், உண்மை, தேகம்.

### மே

மேக்குயர், மேலாக உயர்ந்த.
மேரு, மலை.
மேவர, பொருந்த.
மேவலார், பகைவர்.

### மை

மை, கறுப்பு, மேகம், இருள்.

### மொ

மொய்ம்பு, பலம்.

### மோ

மோனம், மௌனம்.

### மௌ

மௌட்டியம், மூடத்தனம்.
மௌவல், முல்லை.

### யா

யாண்டு, எவ்விடம், எப்பொழுது.
யாத்து, கட்டி.
யாமம், சாமம்.

### ர

ரபி, போதகர்.
ரமியம், சந்தோஷம்.

### வ

வசந்தமென்கால், மெதுவான தென்றல் காற்று.
வசுந்தரை, பூமி.
வச்சை, வசை.
வடித்தல், ஒழுக்குதல்.
வணக்குதல், வளைத்தல்.



வதனம், முகம்.
வயங்கல், விளங்குதல்.
வயம், பலம்.
வயின், இடம்.
வரமனோகரம், வேதம்.
வரிசை, நீதி.
வரை, பொழுது.
வரைந்து, நீக்கி.
வலம்புரி, சங்கு, பலஞ்செய்கின்ற.
வல்லி, சங்கிலி, கொடி.
வல்லியம், புலி.
வல்லுளி, பன்றி.
வழும்பு, நிணம்.
வள்ளல், இல்லையென்னது கொடுப் [பவன்.
வள்ளம், கிண்ணம்.
வறிது, பயனின்றி.
வறுநிலம், கரம்புநிலம்.
வனகராசலம், காட்டானை.
வனப்பு, அழகு.
வனவிழி, அழகியகண்.
வன்னம், வருணம், நிறம்.

### வா

வாகை, வெற்றி.
வார்ந்த, நீளமான, நெடிய.
வாரி, சமுத்திரம், தடாகம்.
வாரிசம், தாமரை.
வாரிதி, சமுத்திரம்.
வாலிய, பரிசுத்தமான.
வாலுகம், மணல்.

### வி

விகாசம், விளக்கம்.
விஞ்சை, மந்திரம்.
விடாய், தாகம்.
விடையங்கள், பொறிகளுக்குப் புலப்படும் பொருள்கள்.
விட்புலம், மேலுலகம்.
விதிக்கிழவன், பிரமாணிக்கன்.
விதிர்ப்பு, நடுக்கம்.
விதேகமுத்தர், தேகத்தைவிட்டு முத்தியடைந்தவர்.
வித்தகம், ஞானம்.
விப்பிரன், வேதியன், பரதேசி.
விபுதர், தேவர்.
விபுதாரயன், கடவுள்.
வியோமர், அரூபி.
விரசி, சஞ்சரித்து.
விரத்தி, துறவி.
விராய், கலந்து.
விருத்தி, முயற்சி.
விரோசனன், சூரியன்.
விலங்கல், மலை.
விலங்கு, மிருகம், தளை.
விலோசனம், கண்.
வில், ஒளி, வில்.
விவேசனம், விவேகம்.
விழல், ஓர்புல், பயன்படாநிலம்.
விழா, சிறப்பு.
விழாப்பறை, திருவிழாப்பறை.
விழுநிதி, சிறந்த திரவியம்.
விழுமம், துன்பம்.
விழுமிது, மேலானது.
விழைதல், விரும்புதல்.
விளிவு, சாவு.

விறல், வலிமை.
விற்பத்தி, அறிவு.
விற்பனம், ஞானம்.

வீ

வீட்டுதல், சேதப்படுத்தல், கெடுத்தல்.
வீரை, சமுத்திரம்.
வீறு, பெருமை.

வெ

வெஞ்சமர், கொடிய யுத்தம்.
வெந், முதுகு.
வெய்யவன், சூரியன்.
வெரீஇ, பயந்து.
வெரிந், முதுகு.
வெருட்சி, பயம்.
வெருளல், பயமடைதல்.
வெள்ளடை, வெற்றிலை.

வே

வேட்டல், விரும்புதல்.
வேதபாராயணம், வேதத்தை மனப்பாடஞ்செய்தல்.
வேதிகை, பலிப்பீடம்.

வை

வைகலும், நாள்தோறும்.
வைத்தமாநிதி, புதையற்பொருள்.
வைப்பு, பூமி.
வையம், உலகம்.


# பிழை திருத்தம்.

| பக்கம். | செய்யுள். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| [illegible] | 30 | 3 | வந்திடுங் கதியென் னெ | வசிப்பிடமெதுவென்றி |
| 10 | 38 | 3 | தீவ்ரித்தோடல் [ன்று | தீவிரித்தோடல். [ன்ன. |
| 13 | 9 | 1 | சுவிசேஷநீ | சுவிசேஷனீ. |
| 24 | 8 | 4 | கருமத்துணா | தருமத்துணா. |
| 25 | 11 | 2 | ஆர்ப்பரிக்க | ஆர்ப்பரிக்கத். |
| 27 | 16 | 1 | பொருத்தி | பொருத்தித். |
| 31 | 9 | 1 | திகழித்தரு | திகழித்தகு. |
| 32 | 20 | 3 | எண்டருங் | எண்டகுங். |
| 61 | 13 | 4 | யோர்க்கிலாய் | யோர்கிலாய். |
| 64 | 1 | 4 | கடைபிடித் | கடைப்பிடித். |
| 101 | 109 | 2 | பிழைமை | பிழையைப். |
| 106 | 153 | 4 | ருவலோடு | ருவலொடு. |
| 148 | 7 | 4 | அரசேவுன்னை | அரசேயுன்னை. |
| ,, | 8 | 4 | ஆயேவுன்னை | ஆயேயுன்னை. |
| ,, | 9 | 4 | அன்னேவுன்னை | அன்னேயுன்னை. |
| 151 | 118 | 1 | பொய்யுணாக்கொறு | பொய்யுணாக்கொரு. |
| 159 | 53 | 2 | எழுந்திலெருருசார் | எழுந்திலரொருசார். |
| 166 | 107 | 2 | னல்லால்லிக் | னல்லாலிக். |
| ,, | 109 | 2 | தகரும்தலை | தகருந்தலை. |
| 174 | 53 | 3 | மேசியாயிவை | மேசியாவிவை. |
| 176 | 66 | 4 | அனவரதயின்பம் | அனவரதவின்பம். |
| 194 | 208 | 2 | தராத்திரிக்கி | தராதலத்தி. |
| 233 | ,, | ,, | காட்சிப் படலம் | விசிராந்திப் படலம். |
| ,, | ,, | ,, | விசிராந்திப்படல முற்றிற்று | ,, ,, |
| ,, | ,, | ,, | காட்சிப் படலம் | ,, ,, |
| 235 | ,, | ,, | காட்சிப் படலம் | விசிராந்திப் படலம். |
| ,, | 10 | 4 | 10. | 21. |
| 236 | ,, | 14 | ——— | விசிராந்திப் படலம் முற்றிற்று. |
| | ——— | ——— | வேறு. | காட்சிப் படலம். |
| [illegible] | | 4 | 11. | 1. |
| ,, | ,, | | | |
| 239 | 35 | 4 | சீராயிவை | சீராவிவை. |
| | | | 96. | 86. |
| 246 | 96 | ,, | | |
| 255 | 45 | 3 | மதியுய் கும் | கதியுய்க்கும். |
| | | | | [illegible] |

| பக்கம். | செய்யுள். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|---|
| 261 | 99 | 3 | அமர்தொடுத்து | அமர்தொடுத்துத். |
| 264 | 12 | 2 | யொருமுவோருக் | யொருவுவோருக். |
| 265 | 18 | 2 | நெறியெலாம் | னெறியெலாம். |
| ,, | ,, | 4 | அசலுங் | அகலுங். |
| 267 | 36 | 1 | சார்ந்து | சார. |
| 292 | 57 | 2 | றுஞ்செயல் | நுஞ்செயல். |
| ,, | 58 | 1 | ஹுஞ்சுப்பிர | நுஞ்சுப்பிர. |
| ,, | 58 | 4 | கருத்தோடே | கருத்தொடே. |
| ,, | 59 | 4 | லகத்தோடே | லகத்தொடே. |
| 296 | 91 | 2 | கழித்தி | களித்தி. |
| ,, | ,, | 2 | னறனிலாப் | ளறனிலாப். |
| 297 | 95 | 4 | என்றனன்னன்னிதானி | என்றன னன்னிதானி. |
| 299 | 8 | 1 | வெதுப்புரீஇ | வெதுப்புறீஇ. |
| 310 | 64 | 1 | மகிமைப்பட்டம் | மகிமைபட்டம். |
| 381 | 102 | 1 | ரரக்கதன் | ராக்கதன். |
| 382 | 107 | 2 | சுராத்தெரியில் | சுரத்தெரியில். |
| 385 | 132 | 4 | னினைவென்னே | நினைவென்னே. |
| 390 | 165 | 1 | அயதி | அயர்தி. |
| 399 | 60 | 1 | கும்பிக்கெ | கும்பிக்கே. |
| 400 | 68 | 3 | சேறும் | சேரும். |
| 421 | 38 | 3 | யாவுத்தீதாம் | யாவுந்தீதாம். |
| 426 | 79 | 2 | வுரியவாங் | யுரியவாங். |
| 433 | 47 | 1 | விளம்பப்பாலது | விளம்பற்பாலது. |
| 457 | 85 | 3 | ஊடறுத்தேக | ஊடறுத்தேகி. |
| 458 | 3 | 2 | கணக்கிகந்தாய் | க்ணக்கெந்தாய். |
| 459 | 9 | 4 | பாவி | பாலி. |

16244